
கலைஞரின்
கடிதங்கள்



13

03.09.1983 - முதல்
24.07.1984 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 13

03.09-1983 - 24.07.1984

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-113
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

Gowra Puthaga Maiyam

9, Saint John Church Complex,
Rockins Road, Trichy - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

Available @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

Gowra Agencies

No : 1 Samy Street,
(Sai Baba Temple Back Side)
Triplicane, Chennai - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்


Kalaignarin Kadithangal

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

Author : **Kalaignar**
Editors:
K. Shanmuganathan M.com BGL
Dr K. Rajamanikam IAS
Subject : Epistle
© Rights :
Publisher :
S.Gowmareeswari M.A., M.L.I.S.,
Edition :
1st Edition - 2022
Published @ :
Seethai Pathippagam
6A/4, Parthasarathi Samy Street,
Triplicane,
Chennai-600 005.
Pages : 400
Typeset by : JaiJeena
Printed @ :
Classic Printers, Chennai - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பொக்கிஷம்
அண்ணா நூலகம்
சென்னை-98



அம்மாவுக்கு....

கௌரா பதிப்பகக் குழுமம்

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூலக நிலையம்
அண்ணா அறிவாலயம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

வாய்மையே வெல்லும்

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

"படமும் பாடமும்"
"மூலவர் மூவர் முரசொலி"

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?"
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! "யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!"

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது,

சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
1146. தடைக்கற்கள் உண்டென்றாலும்...!	03-09-1983	23
1147. சிறுகதை - சிந்திக்கவைக்கும் கதை!	07-09-1983	27
1148. ரோமாபுரி ராணிகள் என்றால்.....	08-09-1983	31
1149. பாம்பாட்டிச் சித்தர்கள்!	10-09-1983	35
1150. உன் நிழலாக அசைகின்றோம்!	15-09-1983	40
1151. பேரறிஞர் பெருந்தகை ? பேசுகிறார்!	22-09-1983	43
1152. நெஞ்சினிக்கும் நெல்லை!	23-09-1983	47
1153. சொன்னால் என்ன! சொல்லாவிட்டால் என்ன!	24-09-1983	51
1154. விரைவில் தேர்தல் வரலாம்!	25-09-1983	54
1155. இரண்டு துறவிகளின் கதை!	28-09-1983	57
1156. எஃகு உள்ளம் - இறுதி வெற்றி!	29-09-1983	62
1157. ஒரே ஒரு ஆணி கிடைக்காததால்...!	30-09-1983	65
1158. காலிபுட்டிகள்! கணக்கற்ற கோடிகள்!	06-10-1983	68
1159. இனியாவது திருந்துவார்களா?!	07-10-1983	73
1160. அக்டோபர் 11 - அணி திரள்வீர்!	09-10-1983	78

1161. புறநானூற்றுப் புலியே புறப்படு!	10-10-1983	82
1162. அடுத்த அழைப்பு தொடரும்!	13-10-1983	85
1163. அடுத்த பரிசு யாருக்கு?	14-10-1983	89
1164. அணி வகுத்திடுக! பணி முடித்திடுக!	19-10-1983	92
1165. இதோ ஒரு வரலாறு காணாத சாதனை!	24-10-1983	95
1166. அந்தோ! இதுதான் தமிழனின் தலையெழுத்து!	25-10-1983	98
1167. பின்வாங்கும் நிலையே கிடையாது!	26-10-1983	104
1168. வால் இல்லாத கன்று! கால் இல்லாத மனிதன்!	27-10-1983	108
1169. சவால் அல்ல! வெறும் சவடால்!	30-10-1983	113
1170. என் வாஞ்சைமிகு தம்பி!	15-11-1983	121
1171. விழாக்கள் எனும் தேன்குடங்கள்!	23-11-1983	123
1172. ஆயத்தமாகுக; அறப்போர் மறியலுக்கு!	24-11-1983	126
1173. மறியலுக்கு முன்னர் - மக்கள் மத்தியில்!	25-11-1983	131
1174. அதிகாரிகளின் அவசர வேலை!	27-11-1983	135
1175. மாதத் தொடக்கத்தில் ஒரு மடல்!	01-12-1983	138
1176. கடமையாற்ற - கண்மணியே! புறப்படு!	05-12-1983	142
1177. தமிழகம் கிளர்ந்தெழுகிறது!	07-12-1983	146

1178. சட்டம் பேசுமாம்! பேசட்டும் கேட்போம்!	09-12-1983	149
1179. நமது மறியல் அறப்போரின் நோக்கம்!	10-12-1983	154
1180. அன்று அந்த நீதிமன்றத்தில்!	11-12-1983	160
1181. கறுப்புக் கணக்கு எழுதுகிறார்கள்!	17-12-1983	164
1182. புரட்சிக் குயில் கூவிய பூமி!	22-12-1983	169
1183. பக்தவத்சலனார் விழாவில்!	23-12-1983	173
1184. பழைய குண்டுகளின் பட்டியலில்!	26-12-1983	179
1185. அவரையே அழைத்துச் சென்றவன்!	29-12-1983	183
1186. வரிப்புலியே வந்திடுக புதுவைக்கு!	30-12-1983	187
1187. களம் பல கண்ட கரூரில் சந்திப்போம்!	05-01-1984	191
1188. அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம்!	06-01-1984	195
1189. மாநில சுயாட்சியும் நமது மகிழ்ச்சியும்!	12-01-1984	199
1190. ஓர் இளைஞன்! ஒரு கோடி இளைஞர்கள்!	13-01-1984	203
1191. பொங்கற் புதுநாள் செய்தி!	15-01-1984	208
1192. வெற்றிச் செல்வனுக்கு வீரவணக்கம்!	18-01-1984	211
1193. திண்டுக்கல் அழைக்கிறது!	23-01-1984	214
1194. முடியும்! நல்லபொழுது விடியும்!	25-01-1984	217

1195. நினையாத நாள் எந்நாள்?	04-02-1984	220
1196. தொகுத்து எடுத்துத் தொடருக பயணத்தை!	10-02-1984	222
1197. ஆகா! என்ன புரட்சி! அவசரச் சட்டப் புரட்சி!	11-02-1984	227
1198. ஆண்ட்ரபோவ் மறையவில்லை!	12-02-1984	233
1199. அவைக்குக் கிடைக்குமா அந்த விளக்கம்?	20-02-1984	235
1200. உணராதார்க்கு உணர்த்த உடனே புறப்படு!	21-02-1984	239
1201. உனைப்பறித்த சாவு வீழ்க!	23-02-1984	244
1202. கொடுமையினுங் கொடுமை!	25-02-1984	245
1203. பக்கத்திலேயே கோயபல்சை வைத்துக்கொண்டு!	04-03-1984	247
1204. சகோதர உணர்வோடு செயல்படுக!	08-03-1984	251
1205. ஊருக்குப்புரிகிற உண்மை! ஒரு சிறுகதை!	09-03-1984	255
1206. முரசொலி - நான் பெற்ற முதல் குழந்தை!	11-03-1984	259
1207. பச்சையாறு திட்டமும் பச்சைப் பொய்யரும்!	12-03-1984	264
1208. வெற்றிச் செய்திகளை எனக்கு வழங்கிடுக!	15-03-1984	268
1209. குமுதம், விகடனுக்கு குத்தூசியின் வினாக்கணைகள்!	26-03-1984	271

1210. காஷ்மீர் கவர்னர் மாற்றம் ஏன்?	29-03-1984	280
1211. பஞ்சாப் - பற்றியெரிகிறது!	05-04-1984	284
1212. விண்வெளியில் விஞ்ஞானப் புதுமை!	06-04-1984	287
1213. ஒரு நிருபர் தாக்கப்படுகிறார்!	07-04-1984	290
1214. புறப்பட்டு வருக! புறப்பாட்டே வருக!	14-04-1984	293
1215. நட்சத்திர இரவுகளில் மறையுமா?	22-04-1984	295
1216. நிலையும் நினைப்பும்!	23-04-1984	299
1217. வாணிகப் பரிசிலன் அல்லேன்!	27-04-1984	303
1218. வெற்றிமலர் பறித்திட வாராய்!	28-04-1984	307
1219. கால்மலரில் - கண்மலர் பதித்து வணங்குகிறேன்!	23-05-1984	310
1220. பெரிய மனிதர்களின் சிறிய வார்த்தைகள்!	25-05-1984	313
1221. நிருபர்கள் பேட்டியில் நித்தம் ஓர் உளறல்!	28-05-1984	316
1222. என்னையே நான் ஒப்படைக்கிறேன்!	02-06-1984	321
1223. உன் காலணியை வாழ்த்துகிறாய்!	03-06-1984	325
1224. கண்ணீர் ஓயாதா? கவலை தீராதா?	11-06-1984	328
1225. நுழைவுத் தேர்வு - திட்டமிட்ட ஒரு நாடகம்!	13-06-1984	334
1226. ஓடி ஒளியும் கோழையல்ல நான்!	14-06-1984	339
1227. அந்த அமைச்சர்கள் எங்கே? எங்கே?	17-06-1984	344

1228. ஆணவங் காட்டாதீர்! ஆள் தேடி அலையாதீர்!!	21-06-1984	348
1229. நீ இருக்கும்போது எனக்கென்ன கவலை!	29-06-1984	352
1230. வழக்கறிஞர்களின் போர்க்கோலம்!	30-06-1984	356
1231. இதோபதேசிகள் திருந்துவார்களா?	02-07-1984	361
1232. இருள் கிழிக்கும் ஒளிக் கீற்றுகள்!	03-07-1984	366
1233. தமிழகத்துக்குத் துரோகம் செய்யாதீர்!	07-07-1984	371
1234. ஜூலை 10 - மூன்றாவதுகட்ட அறப்போர்!	09-07-1984	376
1235. வேலூர்க் கோட்டையும்! தஞ்சைக் கோயிலும்!	19-07-1984	379
1236. நம்பிக்கையுடன் ஒரு பயணம்!	20-07-1984	382
1237. ஆணவம் மட்டுமல்ல - அறியாமையுங் கூட!	21-07-1984	385
1238. தேர்தல் நேரத் திருவிளையாடல்கள்!	22-07-1984	389
1239. ஜூலை 25 - கண்ணீர் நாள்!	23-07-1984	393
1240. எல்லாமே ஜெய் - அலக்நிரஞ்சன் தானா?	24-07-1984	397

1146. தடைக்கற்கள் உண்டென்றாலும்...!

உடன்பிறப்பே,

தமிழ்ஈழ ஆதரவு தற்கொலைப் படை - தென்னாற்காடு மாவட்டம் - தலைமையகம் கடலூர் - அமைப்பாளர் : பாபு கோவிந்தராசன் எம்.எல்.ஏ. என்று தலைப்பிட்டு, ஒரு படை திரட்டுவதற்கான படிவத்தின் பிரதியொன்று எனக்கு அனுப்பப்பட்டிருந்தது! தூக்குமேடை எங்களுக்கு பஞ்சுமெத்தை என்ற வீரவாசகம் பொறிக்கப்பட்ட லெட்டர்பேட் ஒன்றில், பாபு கோவிந்தராசன் அவர்கள் பொறுப்பில் இயங்கும் அந்தப் படையின் தலைவர் சிவ. பிரபாகரன் பி.ஏ. அவர்கள், அந்தப் படையில் இருபத்து ஐயாயிரம் பேரைத் திரட்டுவதற்காகத் திட்டமிட்டிருப்பதாகவும் அதில் குறிப்பிட்டிருந்தார். ஆகஸ்டு 21-ஆம் நாள் எழுதப்பட்ட கடிதம் அது! தற்கொலைப் படை என அச்சடிக்கப்பட்ட படிவமும் அத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது. அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர் இவ்வளவு தமிழின உணர்வுடன் இருக்கிறாரே என எண்ணி வியப்படைந்தேன்.

ஓரிரு ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்கள் மட்டுமல்ல! ஓரிரு அமைச்சர்கள் கூடத் தமிழின உணர்வு கொண்டவர்களாகத் திகழ்வது பூரிப்பு தருகின்ற செய்தியாகும்!

அண்மையில் எம்.ஜி.ஆர். அரசு, ஒரு ஜெயவர்த்தனே பாணி சட்டத்தை அறிவித்து, அதனை நடைமுறைப்படுத்தவும் தொடங்கியிருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி, பயிற்சிகள் அளிப்பது தடுக்கப்படுகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் அந்தச் சட்டம், ஆயுதம் ஏதுமின்றி கட்சித் தொண்டர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளைக் கூடத் தடைப்படுத்த இப்போது பயன்படுத்தப்படுகிறது.

கழகக் கூட்டங்கள், ஊர்வலங்கள், மாநாடுகள் போன்ற நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தவும், கட்டுப்பாடு காக்கவும், கழகத்தில் தொண்டர் அணி நீண்ட காலமாக இருந்து வருகிறது.

அவர்கள் யாரும் ஆயுதமேந்திப் போரிடுகிற பயிற்சிகள் பெற்றவர்களல்லர்!

மாவட்டந்தோறும், கழக நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதற்காகத் தொண்டர் அணிகளைக் கட்டுப்பாட்டுடன் அமைக்க வேண்டுமென அண்மையில் நடந்த பொதுக் குழுவிலும் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

நெல்லை மாவட்டத்திலும், வேறு பல மாவட்டங்களிலும் - பாதுகாப்புப் பணிகளைக் கவனிக்க - கூட்டங்களை ஒழுங்குபடுத்த - தொண்டர் அணிகளை நாம் அமைப்பதாக இருக்கிறோம். அதைத்தான் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் காலையிலே கூட குறிப்பிட்டுப் பேசினார். ஆனால் மாலையில் வந்த ஒரு பத்திரிகையில், ஏதோ நாம், இலங்கைத் தீவிர விடுதலைப் புலிகளைப் போல இங்கே ஏற்படுத்த இருக்கிறோம் என்று பேராசிரியர் பேசியதாக ஒரு தவறான செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் அல்ல, நம்முடைய கூட்டங்களை ஒழுங்குபடுத்த - செம்மைப்படுத்த ஒரு தொண்டர் அணி, நெல்லை மாவட்டத்தில் அமைதியான முறையில் - அறவழியில் - அண்ணா காட்டிய நெறியில் பணியாற்ற அமைக்கப்படுகிறது. அதைப் போல ஒவ்வொரு மாவட்டத்திலும் தொண்டர் அணிகளை உருவாக்க வேண்டும்.

இது நான் பொதுக்குழுவில் பேசியதாகும். இந்தப் பேச்சு முரசொலியிலும் வெளிவந்துள்ளது.

தமிழ்நாட்டில் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து ஆயுதங்களுடன் பயிற்சி செய்வது தடை செய்யப்படுகிறது. எந்த ஒரு பிரிவினர் நடத்துகிற டிரில் அல்லது தேகப் பயிற்சி போன்றவை மக்களிடையே அச்ச உணர்வை உண்டாக்கக்கூடியது என்றோ அல்லது பொது அமைதியைக் கெடுக்கக்கூடியது என்றோ தெரிந்தால், அவற்றைத் தடை செய்ய போலீஸ் அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

இதுதான் அந்தச் சட்டத்தின் முக்கியப் பிரிவு!

நெல்லை மாவட்டத்தில் செப்டம்பர் 15 அன்று, அண்ணா பிறந்த நாளில் நான் கலந்து கொள்கிறேன். அதற்கான ஏற்பாடுகளை மாவட்டக் கழகமும், வை.கோபாலசாமி எம்.பி.யும் கவனித்து வருகின்றனர். செப்டம்பர் 15 அன்று தொண்டர் அணி வகுப்பு ஒன்று நடத்துவதற்கும், ஊர்வலம் நடத்துவதற்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொண்டர் அணிவகுப்பு சீராக நடைபெறுவதற்காக அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது! ஆயுதப் பயிற்சியுமல்ல! பொதுமக்களிடையே அமைதிக் குறைவையோ, அச்ச உணர்வையோ ஏற்படுத்துகிற பயிற்சியுமல்ல! கையில் ஒரு கம்போ, குச்சியோகூட இல்லாமல் நடத்தப்படும் ஒழுங்குமுறைப் பயிற்சி!

ஆனாலும் நெல்லை மாவட்ட அதிகாரிகள், திடீரென அந்தப் பயிற்சிக்குத் தடை விதித்து, இரண்டு மூன்று நாட்கள் அமைதியாக நெல்லையில் ஒரு திருமண மண்டபத்தில் நடந்து கொண்டிருந்த அந்த பயிற்சி முகாமுக்குள் நுழைந்து மாநிலங்களவை உறுப்பினர் வை. கோபாலசாமி அவர்களையும், மாவட்டச் செயலாளர் மஸ்தான், பொருளாளர் இலக்குமணன் ஆகிய மாவட்டக் கழக நிர்வாகிகளையும், சுமார் முந்நூறு தொண்டர்களையும் கைது செய்துள்ளதாகச் செய்தி வந்துள்ளது.

இன்று இப்படியொரு அடக்குமுறையை அவிழ்த்துவிடுகிற எம்.ஜி.ஆர். ஆட்சியின் அனுமதியோடு - வாழ்த்துகளோடு - கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சென்னை கோபாலபுரம் மாநகராட்சி விளையாட்டுத் திடலில், நாள்தோறும் காலையில், ஐநூறுக்கு மேற்பட்ட அ.தி.மு.க. தொண்டர்கள், வெண்ணிறப் படை என்ற பெயரால் பயிற்சி பெற்ற காட்சியை யாரும் மறந்திருக்க முடியாது!

கழகத்தின் நிகழ்ச்சிகளில் கட்டுப்பாடு காத்திட அமைக்கப்படும் தொண்டர் அணிகளை அடக்குமுறைக்கு ஆளாக்கவே, இப்படியொரு அவசர சட்டத்தை இங்குள்ள சின்ன ஜெயவர்த்தனே எம்.ஜி.ஆர். அவர்கள், கொண்டு வந்திருக்கிறார் என்பது இப்போது வெட்டவெளிச்சமாகி விட்டது!

இனி இது மற்ற கட்சித் தொண்டர்களின் மீதும் பாயும்!
ஒன்றை மட்டும் நண்பர் எம்.ஜி.ஆருக்கு
நினைவூட்டுகிறேன்!
தடைக் கற்கள் உண்டென்றாலும்
தடந்தோள் உண்டெனச் சிரிப்போம்
இது புரட்சிக் கவிஞரின் கவிதை!

அன்புள்ள,

மு. க.

03-09-1983

1147. சிறுகதை - சிந்திக்கவைக்கும் கதை!

உடன்பிறப்பே,

சுதந்திரமாகச் சிந்திக்கும் ஒரு கட்சியின் ஏகத் தலைவர் - ராஜரிஷியென்று அவரைப் பெருமையாகக் குறிப்பிடுவார்கள். இப்பொழுது இல்லை. மறைந்து விட்டார். இந்தத் துணைக் கண்டத்தில் அவர் வகிக்காத பதவியில்லை. உலக மூதறிஞர்களில் ஒருவர் என்று சிலாகிக்கப்பட்டவர். அவருக்குப் பிறகு அவர் நிறுவிய கட்சி சிதறிவிட்டது என்றாலும், அவரது சீடர்கள் பலர், அவரது புகழ் பாடிக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் சீடர்களில் ஒருவர் பெயர் ஆண்டி! ஆண்டியைப் போலவே அற்புதமாகப் புனிதக் கருத்துகளைப் பேசுவார்! ராஜரிஷியான மூதறிஞரின் சீடரல்லவா! அதனால் ஆண்டியை ஒரு அரிய மனிதர் என்றும் - நாணயவான் என்றும், பரிசுத்தமான பிறவி என்றும் அவரைச் சுற்றியிருந்தோர் கூறிவந்தனர். மன்றங்களில் அவர், பொறுப்பில் உள்ளவர்களைக் குற்றம் சாட்டிப் பேசும்போது பொறி பறக்கும்! கனல் தெறிக்கும்! அனல் கக்கும்!

ஆண்டி என்று அவரை அழைப்பது மரியாதைக் குறைவாக இருக்கிறதே என்று எல்லோரும், அவரை ஆண்டை என்று அழைக்கத் தலைப்பட்டார்கள்.

ஆண்டியை ஆண்டை எனப் பெயர் மாற்றி அழைத்தபோது, அவர் உண்மையிலேயே ஆண்டை ஆகிவிடுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

சுதந்திரமான கட்சியில் ஆரம்பத்தில் இருந்த காரணத்தால் சுதந்திரமாகப் பல கட்சிகளுக்கு அவர் தாவினார்! கீழே விழாமல் அவர் சாமர்த்தியமாகத் தாவுகிற திறமையைப் பார்த்து சர்க்கஸ் அரங்கில் கையொலி செய்வதுபோல, அவரது ரசிகர்கள் கையொலி செய்து ஆரவாரித்தனர்.

கடைசியாக அவரது தாவலின் பலன் தவப்பயன் போல கிடைத்தது! ஆம்! அரசாங்கத்தின் மதியூக மந்திரிகளில் ஒருவராகவே ஆகிவிட்டார்.

அவரை அப்படி நியமித்துக்கொண்ட மூலவரோ கறைபடாத கரங்களுக்குச் சொந்தக்காரர்! அதாவது காசு பணம் எதையும், லஞ்சமாகத் தன் கைகளால் பெறமாட்டார்! பெட்டிகளில் கொண்டு வந்து அடுக்கி விட்டுப் போக வேண்டும்! ஒருவேளை, கையால் வாங்க வேண்டியிருந்தால் - கறை பட்டுவிடாமல் இருக்க கிளவுஸ் போட்டுக் கொண்டுதான் வாங்குவார். அப்படிக்கொத்த உத்தமரான ? மூலவரின் கீழே, நமது ஆண்டைக்கு மந்திரி பதவி கிடைத்தது பெரும் பாக்கியமே!

அதுவும் ஆரோக்கிய மந்திரி! முன்னொரு காலத்தில் இருந்த மந்திரிகளையெல்லாம் அயோக்கிய மந்திரி என்று குறைகூறி ஆகாயத்திற்கும், பூமிக்குமாகக் குதித்தவர், இப்போது ஆரோக்கிய மந்திரியாகிவிட்டார்! நேர்மை ஊஞ்சலாடும், நெறிமுறைகள் உயிராக மதிக்கப்படும், நாணயம் நர்த்தனம் செய்யும் எங்கள் ஆண்டையின் இலாக்காவிலே! என்று அவரது இஷ்டமித்திர பத்திராதிபர்கள் எல்லாம் எழுதித் தீர்த்தனர்.

மூலவரின் நடவடிக்கைகள் ஆண்டையின் மூளையைக் குழப்பின!

கலவைத் தொழிற்சாலையில் கோடி கோடியாக!
பஸ் முதலாளிகள் ஆண்டுதோறும் செலுத்தும் கப்பமோ
லட்சோபலட்சமாக!
கப்பல் பேரக் கொள்ளையோ கொள்ளை!
சிமெண்டு பேர ஊழலோ ஊழல்!
ஆஸ்தான மண்டபத்தின் அடிமுதல் நுனி வரையில்
லஞ்சமோ லஞ்சம்!
கல்விக்கூட வாசல்களில் கள்ளுக் கடைகள்!
ஆலயங்கள், மசூதிகளுக்கு எதிரிலே அராக் ஷாப்புகள்!
நட்டநடுவீதிகளில் - அன்னிய மதுக்கடைகள்!
அனைத்துக்கும் லஞ்சம்!

என்.எம்.ஆர். வேலையிலேயிருந்து எம்.பி.பி.எஸ். வரையில் மட்டுமல்ல, சட்டக் கல்லூரி அட்மிஷன் வரையில் சர்வமும் லஞ்சம்!

இந்தப் பயங்கர மோசடிகளைப் பார்த்தார் ஆண்டி! இல்லை! இல்லை - ஆண்டை! வெகுண்டார்! துடித்தார்! விழித்தார்!

உடனே ஒரு முடிவுக்கு வந்தார்! இந்தக் கூட்டத்திலிருந்து இக்கணமே வெளியேற வேண்டுமென்று தீர்மானித்தார் என்று கருதுகிறாயா? அதுதான் இல்லை!

நாமும் இந்தக் கூட்டத்தோடு சேர்ந்து கோவிந்தா போட வேண்டும்! என்ற தீட்சண்யமான முடிவுக்கு வந்தார்.

வாங்கினார், வாங்கினார் - வழங்கியதையெல்லாம் வாங்கினார்! வைரங்கள், நெக்லசுகள், அணிமணிகள் என்று வாங்கிக் கொண்டேயிருந்தார்!

மூலவருக்கு முட்டிக்கொண்டு வந்தது கோபம்! தனது பிரதானியர் அனைவருக்கும் உத்தரவு பிறப்பித்தார்! அவரவர்கள் வாங்கிக் கொள்வதில் ஆட்சேபணையில்லை! ஆனால் அதில் முக்கால் பங்கு தனக்குச் சேர வேண்டும்!

இந்த உத்தரவு நடைமுறைக்கு வந்தது! முக்கால் பங்கு மூலவருக்குப் போக மீதமுள்ள கால்பங்கில் - தியேட்டர்கள் என்ன - பங்களாக்கள் என்ன - தொழில்கள் என்ன - எல்லாம் பினாமி! பினாமி!

ஒருநாள் நடந்த சம்பவத்தை மட்டும் குறிப்பிட வேண்டும்! மிக முக்கியமான சம்பவம்!

கோவைக்காரர் ஒருவர், ஆரோக்கிய மேல் படிப்புக்காக விண்ணப்பித்தவர்! அதற்காக ஆண்டையிடம் சென்றார்! ஆண்டை, ஐம்பதாயிரம் கேட்டார். கோவைக்காரர் கொடுத்து விட்டார்.

இது சமாச்சாரம் மூலவருக்குத் தெரிந்தது!
ஆண்டை அரண்மனையில் தொலைபேசி மணி
அடித்தது!
ஆண்டை எடுத்துப் பேசினார்.
அலோ! அலோ! நான் ஆண்டை பேசுறேன்!
நான்தான் மூலவர் பேசுறேன்.
என்னங்க? வணக்கங்க!

வணக்கம் அப்பறம் இருக்கட்டும்! இப்ப வாங்கினது எங்கே?

என்ன வாங்கினேன்? ஒன்னும் வாங்கலியே!

மிஸ்டர் ஆண்டி! எல்லாம் தெரியும்! கோவைக்காரரிடம் ஐம்பதாயிரம் வாங்கி, உமது மேஜையின் இடதுபக்கம் டிராயரில் வைத்திருப்பதும் எனக்குத் தெரியும்.

இந்தப் பக்கம் தொலைபேசியில் மௌனம்

என்னய்யா ஊமை ஆகிவிட்டீர்! இது ஒன்றுமட்டுமல்ல, இந்த விவகாரத்தில் மட்டும் மொத்தம், ஏழு லட்சம் வாங்கி யிருக்கிறீர்! மொத்தத்தையும் எடுத்துக் கொண்டு உடனே வரவும்! இல்லாவிட்டால்...

மன்னிக்கணும்! மன்னிக்கணும்!
மன்னிப்பு பிறகு! முதலில் அந்த ஏழு லட்சத்தோடு
வாரும்!

என்னுடைய கால்பங்கு?

அதெல்லாம் கிடையாது! என்னிடம் சொல்லாமல் வாங்கியதற்காக அபராதம்! மொத்தமும் உடனடியாக வந்து சேர வேண்டும்!

அப்படியே ஆகட்டும்!

தொலைபேசிகள் வைக்கப்படுகின்றன.

ஆண்டியாக இருந்து ஆண்டையானவர் ஏழு லட்சத்தை எடுத்துக்கொண்டு புறப்படுகிறார். அப்போது சுவரில் தொங்கிய மூதறிஞர் படம் அவரைப் பார்த்து சிரித்தது! உடனே அவசரமாக ஆண்டியென்ற ஆண்டை, அந்தப் படத்தைக் கழற்றித் திருப்பி மாட்டிவிட்டு, மூலவர் இருப்பிடம் நோக்கி வேகமாக கிளம்பினார்!

இந்தச் சிறுகதை - சிந்திக்க வைக்கும் கதை - இன்று இத்துடன் முற்றும்!

அன்புள்ள,

மு. க.

07-09-1983

1148. ரோமாபுரி ராணிகள் என்றால்.....

உடன்பிறப்பே,

பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது என்று பெரியார் அவர்கள், அடிக்கடி தனது பேச்சில் குறிப்பிடுவார்கள்!

அதாவது ஒரு மனிதர், தன்னை நடுநிலையாளர் என்றும் - அவர் சொன்ன கருத்து எதுவுமோ - அல்லது அவரது செயல்பாடோ - உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது என்ற வகைப்பட்டது அல்ல என்றும் வாதித்துக் கொண்டேயிருப்பார்! ஆனால் அவரையும் அறியாமல், அவரது மனதில் இருப்பதைக் திடீரென்று வெளியே கொட்டி விடுவார்! அப்படிப்பட்ட நிலையில் வேஷம் கலையும் படலத்தைத்தான், பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது என்று பெரியார் குறிப்பிடுவார்!

அண்மையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, ஏடுகளில் ஒரு பக்க விளம்பர மூலம் வெளியிட்டிருந்த ஒரு அகராதியைப் படித்தேன்! நீயும் படித்திருக்கிறாய்! அதில் கவலை என்றாலே கண்டனம் என்றுதான் அர்த்தம் என விளக்கப்பட்டிருந்தது! இலங்கைச் சம்பவங்களைக் கண்டு பிரதமர் இந்திரா காந்தி அம்மையார், கவலை தெரிவித்தது கண்டனம் தெரிவித்ததாகத்தான் பொருள் என விளக்கியிருந்தார்கள் விளம்பரம் செய்தவர்கள்! மத்தியிலே உள்ள ஆளும்கட்சிக்குக் கவலை என்பதும், கண்டனம் என்பதும் ஒன்றாகப்படுகிற அதே நேரத்தில், மாநிலத்தில் உள்ள ஆளும் கட்சியோ கமிஷன் என்பது வேறு - லஞ்சம் என்பது வேறு என்று வியாக்கியானம் செய்ய ஆரம்பித்திருக்கிறது! வெட்கக்கேடு இதைவிட வேறில்லை!

ஒரு வீடோ நிலமோ வாங்கும்போது, இடையிலே தரகராக இருந்து விற்பனையை முடித்துக் கொடுப்பவருக்குத் தரப்படுவதற்குக் கமிஷன் என்று பெயர் கூறுவதுண்டு! அதைக் குறிப்பிட்டு லஞ்சம் என்று யாரும் சொல்ல மாட்டார்கள்!

ஆனால் ஒரு அரசாங்கத்தில் - அல்லது ஒரு நிறுவனத்தில் - ஒரு காரியத்தை முடித்துக் கொடுக்கத் தனது செல்வாக்கைப் பயன்படுத்திச் சிபாரிசு செய்வதாகக் கூறி முன்கூட்டியே லட்சக்கணக்கில் - அல்லது ஆயிரக்கணக்கில் கமிஷன் என்ற பெயரால் பணம் வாங்கி மோசடி செய்கிறவர்கள், நிச்சயமாக கமிஷன் தரகர்களாக இருக்க முடியாது! லஞ்சாவதாரங்களாகத்தான் இருக்க முடியும்! மோசடி செய்யாமலே கூட காரியத்தை முடித்துக் கொடுத்துவிட்டுப் பணம் வாங்கினால் கூட, அதற்கு வாங்கியவர் வழங்கும் பெயரும், கொடுப்பவர் வழங்கும் பெயரும் கமிஷன் என்று இருந்தாலும், அறிவுத் தெளிவு படைத்தவர்கள் அதனை லஞ்சம் என்றுதான் திட்டவட்டமாகத் தெரிவிப்பார்கள்.

அதிலும் நாட்டை ஆளுகிறவரின் சகோதரர், அவரது பிள்ளைகள் - கமிஷன் பெறுகிற இடைத் தரகர்களாக இருக்கலாமா?

அவர்களுக்கும், எனக்கும் தொடர்பு இல்லை என்று ஆளுகிறவர் அறிவித்திருப்பது உண்மையானால், இடைத்தரகர்களாக இருந்து கமிஷன் என்ற பெயரால் லஞ்சம் பெற்ற அந்த நபர்கள் மீது, இதுவரையில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன? வாங்கிய லஞ்சத்தைத் திருப்பிக் கொடுப்பதாகக் கூறி செல்லாத செக்குகளைத் தந்தார்களே - அதுகூட ஆளவந்த அதிஉத்தமருக்கு மோசடியாகத் தெரியவில்லையா?

பொல்லாத ஆட்கள், பொய்கூறி எங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்று மூலவரிடமே முறையீடு செய்யப்பட்டதே! ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்! என்ற பாட்டு சினிமாவில் மட்டும்தானா? சின்னச் சின்னப் பொடி விஷயங்களுக்கெல்லாம் மோசடி வழக்கு, கொலை வழக்கு, கொலை முயற்சி வழக்கு தொடர்ந்து, தனக்கு வேண்டாதவர்களைப் பழி வாங்குகிற மூலவர், பல லட்ச ரூபாய் மோசடி செய்தவர்கள் தன் குடும்பத்தினர் என்பதற்காக வாயை மூடிக்கொண்டு இருந்ததுமல்லாமல், அவர்களைக் குற்றமற்றவர்கள் என்று உலகத்தின்முன் காட்டுவதற்காக எத்தகைய பகீரத முயற்சிகளில் எல்லாம் ஈடுபடுகிறார் என்பதை உற்றுக் கவனித்தால், மூலவருக்கும் அதில் சம்பந்தமுண்டு

என்பது சாதாரண அறிவு படைத்த மனிதனுக்கும் உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்குமே!

கொடுக்கப்பட்ட சாராயக் கலவைத் தொழிற்சாலைகளில் மிகப் பெரும்பாலானவை, பினாமிகளின் பெயரால் கொடுக்கப் பட்டிருக்கின்றன - முறைகேடாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன - வருமான வரி இலாக்காவின் சோதனையின் மூலம் வெளிவந்த ஊழல்கள் இவை!

இந்த ஊழல் பட்டியல் சட்டமன்றத்திலேயே ஆதாரத்துடன் எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது!

அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? குற்றம் சாட்டப்பட்டவரே முன்வர வேண்டும்!

இதோ நான் நிரபராதி என்பதற்கு, நானே கூண்டில் ஏறி சாட்சியம் அளிக்கிறேன்! குறுக்கு விசாரணையில் குற்றச்சாட்டுகளை நொறுக்குகிறேன்! வருமான வரிச் சோதனை ரிக்கார்டுகளா? லைசென்சுகள் எப்படி வழங்கப்பட்டன என்பதற்கான ரிக்கார்டுகளா? அதற்கு உத்தரவுகள் இட்ட அதிகாரிகளின் சாட்சியங்களா? அவர்களை எல்லாம் விசாரிக்க வேண்டுமா? ரிக்கார்டுகளைப் பரிசீலிக்க வேண்டுமா? இதோ தயார்!

என்று மார் தட்டி முன்வருவாரானால், அவரது துணிவைப் பாராட்டலாம்! தூய்மையாளராகத்தான் இருப்பாரோ என்று மனதைத் தேற்றிக் கொள்ளலாம்!

ஏ, அப்பா! எங்களில் யாரையும் விசாரிக்கக்கூடாது! பணம் கொடுத்ததாகச் சொல்பவர்களைத்தான் விசாரிக்கலாம்! வாங்கியதாகச் சொல்லப்படுபவர்களை விசாரிக்கக்கூடாது! முறைகேடு நடந்ததாகச் சொல்பவர்களைத்தான் விசாரிக்கலாம்; முறைகேடு நடக்க உடந்தையாக இருந்த அமைச்சர்களையோ - அல்லது அதிகாரிகளையோ விசாரிக்கக் கூடாது!

என்பதற்காக எவ்வளவு விலை உயர்ந்த ? வாதங்கள் நடத்தப்படுகின்றன!

கமிஷன் என்பது வேறு! லஞ்சம் என்பது வேறுதான்!

ஆனால் இப்போது பெரிய இடங்களில், லஞ்சம் என்ற வார்த்தை அவ்வளவு நளினமாக இல்லாததால், கமிஷன் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள்!

இப்படிப்பட்ட விவகாரங்களில் கமிஷன் என்று வாங்கினாலும் அது லஞ்சம்தான்! பச்சை லஞ்சம்தான் என்று பாமர மக்கள் கூடப் புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

ரோமாபுரி ராணிகள் சிலர், மாற்றார் மடியில் உருண்டு புரண்டது லீலாவிநோதம்!

அதே காரியத்தை இரவு ராணிகள் செய்தால் விபச்சாரம்!

அதேபோல அரசாங்கத் தொடர்புடைய பெரிய மனிதர்கள் வாங்குவது கமிஷன்.

சின்ன மனிதர்கள் வாங்குவது லஞ்சம்!

அரண்மனையிலே அரசிகள் செய்தாலும் - தெருவிலே சரசிகள் செய்தாலும் இரண்டும் விபச்சாரமே!

பெரிய மனிதர் வாங்கினும், சிறிய மனிதர் வாங்கினும் இரண்டும் லஞ்சமே!

இதனை மறுப்போர்க்கு அறிவின் செறிவு மிகப் பஞ்சமே!

அன்புள்ள,

மு. க.

08-09-1983

1149. பாம்பாட்டிச் சித்தர்கள்!

உடன்பிறப்பே,

பழையகாலத் தெருக்கூத்துக் காட்சி ஒன்றையும், புதிய புரட்சிகரமான திட்டத்தின் அறிவிப்பு ஒன்றையும் இணைந்து வழங்குவதே இன்றைய கடிதம்!

இரு வேடதாரிகள், கையில் தீவட்டி ஏந்திக் கொண்டு ஒரு வண்ணத் துணியைப் பிடித்துக்கொண்டு கூத்து மேடைக்கு வருகின்றனர்! துணிக்கு மேலே கண்ணாடிக் கற்களும் ஜிகினாக்களும் மின்னுகிற கிரீடம் ஒன்று, தலையை விட மூன்று மடங்கு பெரிதாகத் தெரிகிறது!

வந்தேனே மகராஜன் நானே!
மக்களை வாழ வைக்கும் மவராசன்தானே!
ஏழுலகம் நடுங்கவே –
எட்டுத் திக்கும் அலறவே –
தாய்குலப் பேரைச் சொல்லி
தந்திரமாய் தர்பார் நடத்தும்
ததீங்கிணத்தோம்! தோம்! தோம்!
தன்னலமுடனே பொன்மனப் பெயரால்
தரணியை ஆளும் தகுதியும் உடைய

தங்கத் தங்கராஜா! வந்தேனே!

தீவட்டிக்காரர்கள் துணியை அகற்றுகிறார்கள்! உய்! உய்! என்று விசில் சப்தம்! அட்டைக் கத்தியுடனே மகாராஜன் ஒரு ஆட்டம் ஆடி ஓய்ந்து மிருதங்கக்காரரைப் பார்த்து;

அகோ! வாரும் மந்திரியாரே!

என அழைத்தவுடனே மந்திரி வேஷத்திலிருக்கும் மிருதங்கக்காரர், மிருதங்கத்தைக் கீழே வைத்துவிட்டு, சரணம்! சரணம்! சக்கரவர்த்தியாரே! அடியேனை அழைத்த காரணம்தான்

என்னவோ? எனக் கும்பிட்டு கூனிக் குறுகி நிற்கிறார்! மகாராஜா, ஒரு பெருங்கனைப்புக் கனைத்துவிட்டு - மீசையை முறுக்கி மேலே ஏற்றிக் கொண்டு,

மந்திரியாரே! நீர்வளம், நிலவளம் நிறைந்த நமது ராஜ்யத்தில், பாம்புத் தொல்லை அதிகம் ஏற்பட்டு, அதனால் பல பேர் செத்துக் கொண்டிருப்பதாகப் பல பெட்டிஷன்கள் வந்ததே! அதைக் கவனிக்கலானீரோ என உசாவுவதற்கே உம்மை அழைத்தேன்!

மகாகனம் பொருந்திய ராஜாதி ராஜரே! பாம்புத் தொல்லையை ஒழிக்க ஒரு வழி கண்டுபிடித்து விட்டேன்.

என்ன வழி? என்ன வழி? இப்போதே மொழி!

கேட்டால் விரியும் மன்னரின் விழி!

சட்டெனச் சொல்லும்! பட்டெனச் சொல்லும்!

ஒவ்வொரு ஊரிலும், பாம்புகளைப் பிடித்து அரசாங்கத்தில் ஒப்படைப்பவருக்குத் தகுந்த ஊதியம் தரப்படும்! அந்தப் பாம்பின் தோல்களைப் பக்குவப்படுத்தி நவீனமான பொருள்களைச் செய்து ஏற்றுமதி செய்வதன் மூலம், நமது ராஜ்யத்தின் பொக்கிஷத்தையும் வளமாக்கலாம்! எப்படி மகாராஜா என் திட்டம்?

மகாமட்டம்! மட்டம்! ஓய் மந்திரியாரே! பாம்புகளை பிடித்து விட்டால் பிறகு பாம்பு இனமே குறைந்துவிடும்! பாம்பு இனம் ஊருக்கு ஊர் குறைந்து விட்டால், எந்த ஊரிலும், யாரும் பாம்பு கடித்து, அதனால் ஆபத்துக்கு ஆளாகாமலே தப்பித்துக் கொள்வார்கள்! பிறகு எனது திட்டம் என்ன ஆவது?

பிரபோ! தங்களின் தீட்சண்யமான மூளையில் திருஅவதாரம் செய்துள்ள அந்தத் திட்டம்தான் என்னவோ? இந்த அமைச்சன் அறியலாகுமோ?

கேளும் மந்திரியாரே! கேளும்! சபையோரே! நீங்களும் கேட்டு எல்லோரும் கை தட்டுங்கள்!

சபையோர் உடனே பலக்கக் கை தட்டி, விசில் அடிக்கிறார்கள்.

மகாராஜன் கலகலவெனச் சிரித்தவாறு சபையோரைப் பார்த்து,

இன்னும நான் திட்டத்தையே சொல்லவில்லை, அதற்குள் ஆரவாரமா? படேல்! படேல்! அவசரப் படேல்! மந்திரியாரே! இப்போது தான் அந்த அற்புதமான திட்டம் என் வாய் வழியாகப் பிரசவிக்கப் போகிறது!

பிரசவமாகட்டும் பிரபு!

இதோ! குவா குவா என்று கத்திக்கொண்டு குதிக்கிறது திட்டம்!

குதிக்கட்டும்! குதிக்கட்டும்!

ஃ அதாவது பாம்புகள் ஊருக்கு ஊர், சந்துக்குச் சந்து, பொந்துக்குப் பொந்து பெருகிக் கொண்டேயிருக்க வேண்டும்! அவை மனிதர்களை ஒவ்வொரு நாளும் பரவலாகப் பல ஊர்களில் கடிக்க வேண்டும். அப்படிக் கடிபட்டவர்களுக்கு வைத்தியம் செய்ய, நமது தேசம் முழுதும் சுமார் ஆயிரம் பேரை நியமிக்க வேண்டும். அவர்களுக்கு, மாதாந்திர ஊதியம் நமது கஜானாவில் இருந்து நூறு வெண் பொற்காசுகள் தர வேண்டும். அதோடு பாம்புகடி மருந்தும் தயாரித்து, அதையும் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் நமது ராஜ்யத்தில், குடும்பத்துக்கு ஒருவருக்கு வேலை என்ற நமது புரட்சிகரமானத் திட்டம் நிறைவேறும்!

உன்னதமான திட்டம் மகாராஜா! ஒவ்வொரு நாளும் பாம்புகள் கடிக்கட்டும்! மக்கள் துடிக்கட்டும்! நமது பாம்பு வைத்தியர்கள் பறக்கட்டும்! ஆனால் ஒரு சந்தேகம் மகாராஜா!

என்ன தேகம்? சந்தேகம்? சொல்லும்! சொல்லும்!

நமது ராஜ்யத்தில் ஆயிரம் குடும்பங்கள் தானா இருக்கின்றன? லட்சக்கணக்கான குடும்பங்கள் இருக்கின்றனவே...!

ஆயிரம் பாம்புகள் தான் இருக்கின்றன என்பது நமது அரசாங்கப் புள்ளிவிவரம் - அதனால் ஒரு பாம்புக்கு ஒருவர் வீதம் ஆயிரம் பேருக்கு வேலை! மேலும் பாம்புகளின் எண்ணிக்கை பெருகுமானால், ஆட்களின் எண்ணிக்கையும் பெருக்குவோம்!

அப்படியே ஆகட்டும் மகாராஜா! தங்கள் சித்தம் - மக்கள் பாக்கியம்! அந்தப் பாம்புகள் மட்டும் அந்த நூறு ரூபாய்

சம்பளக்காரர்கள் மீது இரக்கப்பட்டு, அடிக்கடி மக்களைக் கடித்துக் கொண்டிருக்க வேண்டும்! இல்லையேல், கொலை, களவு இல்லாத ஊரில் போலீஸ் ஸ்டேஷன் தேவையில்லை என்பது போல, பாம்புக்கடி இல்லாத காரணத்தால் அந்த ஆயிரம் பேரும் பதவி இழக்க நேரிடும்!

மந்திரியாரே! பாம்புக்கடி பெருகிட நாம் அனைவரும் பரமனைப் பிரார்த்தனை செய்வோம்!

மகாராஜா, மந்திரி, தீவட்டிக்காரர்கள் இணைந்து பாடுகிறார்கள்.

பாட்டு

நாதர் முடி மேலிருக்கும் நல்ல பாம்பே! நீ
நாட்டுக்குள்ளே இறங்கி வந்து தீண்டு பாம்பே!
ஃபாதர், டாட்டர், சன்கள் என்று பார்க்காமலே
காததூரம் ஓடிவந்து கடிப்பாய் பாம்பே!
வீட்டுக் கொருவர் வேலைத் திட்டம் - விரிவடைய
விஷப் பல்லை நீட்டி நீட்டிப் போடு பாம்பே!

★

பாட்டு முடிகிறது! கூத்தும் முடிகிறது!

உடன்பிறப்பே! 24-1-1983 கவர்னர் குரானா அவர்கள், சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

இம்மாநிலத்தில் கடந்த சில ஆண்டுகளாக, வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கையில், புதிதாக வேலை வாய்ப்பு ஏற்படுத்த, குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்க மாபெரும் திட்டமொன்றைத் தொடங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்க மசோதாவின் மீது சட்டமன்றத்தில் 22-4-83-இல் பேசிய நிதி அமைச்சர் நாவலர் அவர்கள், பின்வருமாறு குறிப்பிட்டார் :-

குடும்பத்தில் ஒருவருக்கு வேலை அளிக்கும் திட்டத்திற்காக, பட்ஜெட்டில் பதினைந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதோடு பாங்குகளில் இருந்து அறுபது கோடி ரூபாய் கடன் பெற்று வேலை வாய்ப்பை அதிகரிக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கூட்டங்களில் என்ன பேசினார் தெரியுமா?

படித்துவிட்டு வேலையில்லாமல் பலர் இருக்கிறார்கள். அடுத்த ஆண்டு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தை அமல்படுத்தப் போகிறோம்.

இவ்வளவு அறிவிப்புக்குப் பிறகு, இப்போது வெளியிடப்பட்டுள்ள திட்டம், ஆண்டு ஒன்றுக்கு பதினைந்து லட்ச ரூபாய் பதினைந்து கோடி அல்ல செலவிலே பாம்புக் கடிக்கு மருந்து போடுபவர்கள் ஆயிரத்து இருநூறு பேரை நியமிக்கிறார்களாம்! மாதம் நூறு ரூபாய் ஊதியமாம்! மகத்தான திட்டம் என்று கவர்னர் அறிவித்தாரே! அந்தத் திட்டம்!

அந்தப் பணியாளர்களுக்குக் கூட பாம்பாட்டிச் சித்தர்கள் என்று பழைய நாமகரணத்தையே சூட்டலாம்!

அன்புள்ள,

மு. க.

10-09-1983

1150. உன் நிழலாக அசைகின்றோம்!

அண்ணனே!
எங்கள் உயிரே!
உணர்வே!

இனமானக் கோவே!
எழுச்சியின் வடிவே!

எண்ணங்கள் மலரும்
எழிலார் சோலையே!

எஃகுக் கம்பிகளாம்
இனிய தம்பிகளின் இதயத் துடிப்பே!

எழுபத்து ஐந்து பிறக்கிறது உனக்கு – ஆனால்
அறுபத்து வயதில் முடிந்ததேன் கணக்கு?
அண்ணனே!
அழகுதமிழ்ப் பேச்சில்
அருவிகளை வென்றவன் நீ!

ஆங்கிலச் சொல்மழையோ – உன்
ஆற்றலுக்கு ஆலவட்டம்!

எழுத்துக் கற்கண்டுகளை மலையெனக் குவித்தாய்!
எறும்பென மாறி நாங்கள் அவற்றைச் சுவைத்தோம்!

எழுபத்துஐந்து பிறக்கிறது உனக்கு – ஆனால்
அறுபத்து வயதில் முடிந்ததேன் கணக்கு?
அண்ணனே!
காந்தம் உன் விழியில்!
சாந்தம் உன் மொழியில்!

வீரம் உன் செயலில்!
விவேகம் உன் முறையில்!

பாசம் உன் உடன்பிறப்பு!
பரிவு அதன் மறுபதிப்பு!

இதயமோ எதையும் தாங்கும்!
புதையலாய்த் தமிழர்க்குக் கிடைத்த திருவே!

எழுபத்து ஐந்து பிறக்கிறது உனக்கு – ஆனால்
அறுபத்து வயதில் முடிந்ததேன் கணக்கு?
அண்ணனே!
நீ வருவதற்கு முன்பே
வரலாறு இருந்தது தமிழர்க்கு! ஆனால்
நீ வந்ததற்குப் பின்தான்
வகையாகத் தமிழன் வரலாற்றை உணர்ந்தான்!

இலக்கியம் இருந்தது தமிழருக்கு!
இருப்பினும் நீ வந்த பின்தான்
இயக்கினாய் அதனை
இப்புவி அறிந்திட!

தனிப் பண்பாடு கொண்ட இனம்தான் தமிழினம்!
தமிழினமே அதனை அறியாதிருந்த நேரம்;
தலைவா! நீ உதித்ததால்தான்
தமிழன் தமிழனானான்!

எழுபத்து ஐந்து பிறக்கிறது உனக்கு – ஆனால்
அறுபத்து வயதில் முடிந்ததேன் கணக்கு?
அண்ணனே!
தந்தை பெரியாரின் தளபதி நீ!

விந்தை மனிதர்களால்
விதவிதமாய் விளைந்திட்டக் கேடுகளை,
மொந்தை விஷமென்று மொழிந்தவன் நீ!

அறிஞன் நீ!
அறிவாசான் நீ!
வறிஞன் செல்வன் என்று
வரையறுக்கும் வர்க்கபேதம்
வளர்த்தல் தீதென்று சமதர்ம
வழிநின்று உரைத்தவன் நீ!

எழுபத்து ஐந்து பிறக்கிறது உனக்கு - ஆனால்
அறுபத்து வயதில் முடிந்ததேன் கணக்கு?
எழும் இக்கேள்விக்கு விடை மட்டும் கிடைக்கவில்லை!
எம்முள்ளத்துயர் இந்நாளிலும் அடங்கவில்லை -
எனினும் நீ அகலாமல் இருக்கின்றாய்
எனும் நினைவில் உன் நிழலாக அசைகின்றோம்!
வாழ்க அண்ணா அண்ணா! நீ
வாழ்க! வாழ்க!

அன்புள்ள,

மு. க.

15-09-1983

1151. பேரறிஞர் பெருந்தகை ? பேசுகிறார்!

உடன்பிறப்பே,

இலங்கைக்குப் படை அனுப்பச் சொல்வது முட்டாள்தனமானது. தம்மைச் சந்தித்த அமிர்தலிங்கமோ, இந்திய வம்சாவளித் தமிழர்களோ அல்லது தனி ஈழநாடு கோரும் தலைவர்களோ அவ்வாறு கேட்கவில்லை. ஆனால், தி.மு.க. தலைவர் கருணாநிதி கேட்கிறார்.

என்று சென்னையில் காமராஜர் சிலையைத் திறந்து வைத்த வெங்கட்ராமன் அவர்கள், பேசியுள்ளதாகத் தினமணி, செய்தி வெளியிட்டுள்ளது.

முட்டாள்தனம் என்ற சொல்லைப் பொறுக்கியெடுத்துத் தனது பேச்சில் பொருத்தியிருக்கிறார் திரு. வெங்கட்ராமன்!

வெங்கட்ராமன் என்றதும், யாரோ வீதியிலே போகிற ஒரு மனிதர் என்று கருதி, அவர் இப்படிப்பட்ட தடித்த வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார் போலும் - என்று அலட்சியப் படுத்தி விட முடியுமா என்ன?

தென்சென்னை நாடாளுமன்றத் தேர்தலில் அவர் வெற்றி பெற்றிருக்காவிட்டால், அவருக்குள்ள அபாரமான அறிவுத் தெளிவின் காரணமாக, குறைந்தபட்சம் ஒரு கவர்னர் வேலையாவது பெற்றுக்கொண்டு பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கக் கூடிய பாக்கியசாலியல்லவா அவர்!

எத்தனையோ முறை அவருக்கு கொள்கைத் தடுமாற்றங்கள்! அதன் காரணமாக சுயராஜ்யா ஏட்டில் அவர் எழுதிய கட்டுரைகள்! பிறகு இந்திரா அலை வீசுவதற்கான அறிகுறிகள் தெரிந்ததும், ஒரே தாவாகத் தாவி இந்திரா காந்திக்கு ஜே கோஷம் போட்ட அதிதீவிர அறிவாளி அவர் என்பதில், இரண்டு கருத்துக்கே இடமில்லையல்லவா?

அதனால்தான் அவரைப் போலவே கொள்கைக் குழப்பமுற்று இடம் மாறுவதில் கைகாரரான ஸ்டீபனுடன் இணைந்து ஒரே விழாவில் உரையாற்றியிருக்கிறார்.

இலங்கைக்குப் படை அனுப்பச் சொல்வது முட்டாள்தன மானது! யாரும் கேட்கவில்லை! ஆனால், தி.மு.க. தலைவர் கருணாநிதி கேட்கிறார்

இது வெங்கட்ராமனாரின் சூடான பேச்ச! பாதுகாப்பு அமைச்சர் அல்லவா? பாதுகாப்பான இடத்தில் இருப்பவர் அல்லவா? அதனால் பாதுகாப்பாகப் பேசியிருக்கிறார்!

இலங்கைக்குப் படை அனுப்பச் சொல்வது முட்டாள்தனம் என்றால், அந்த முட்டாள்தனத்தை நான் மட்டும் செய்யவில்லை - அ.தி.மு.க. அமைச்சர்கள் சிலரும், அ.தி.மு.க. முன்னணித் தலைவர்கள் சிலரும் கூட செய்திருக்கிறார்கள்! ஆனால் அ.தி.மு.க. என்றால், அது எம்.ஜி.ஆர். அவர்களை மட்டுமே குறிக்கும் என்ற காரணத்தினால், திரு. வெங்கட்ராமன் அவர்கள், மற்றவர்கள் பேச்சை அவ்வளவு பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை போலும்!

திருச்சியில் திரு. அமிர்தலிங்கம் அவர்களை நிருபர்கள் சந்தித்தபோது, நானும் அருகில்தான் இருந்தேன். இந்தியா, ராணுவத்தை அனுப்பத் தேவையில்லை! என்று நீங்கள் சொன்னதாக அ.தி.மு.க. சுவரொட்டி போட்டிருக்கிறதே! என்று நிருபர்கள் கேட்டார்கள்! அதற்கு அமிர்தலிங்கம் அவர்கள், சொன்ன பதில் என்ன தெரியுமா? இனிமேல் அனுப்பிப் பயனில்லை என்ற கருத்தில்தான் சொன்னேன்! என்பதாகும்! இதற்கு என்ன பொருள்?

தமிழர்களின் பிணங்கள் ஆயிரக்கணக்கில் விழுந்தபோது, தமிழச்சிகளின் கற்பு சூறையாடப்பட்டபோது, இந்தியா, இராணுவத்தை அனுப்பியிருந்தால் இனப் படுகொலை தடுக்கப்பட்டு, தமிழ் ஈழம் உருவாகியிருக்க முடியும் என்பது அமிர்தலிங்கம் மட்டுமல்ல, ஈழ விடுதலைக்குப் போராடுகிற அத்தனை தலைவர்களின் கருத்தாகும்!

முட்டாள்தனம் என்று நாக்கில் முரட்டுத்தனத்தை மட்டும் மத்திய அமைச்சர் காட்டிப் பயனில்லை! முழு உண்மையை

அவரால் மறைத்துவிட முடிகிறது, பெரிய இடத்தில் இருப்பதால்! பாவம்! அந்தப் பெரிய இடத்தில் அவரை உட்கார வைக்கப் படாத பாடு பட்டவர்களை எளிதில் மறந்துவிட முடிகிறது! இது அவருக்கு மட்டுமல்ல! பதவிவெறியர்களின் பண்பே அதுதான்!

பிற நாட்டின் மீது படையெடுப்பது முட்டாள்தனமானது எனச் சொன்னவருக்கு உடனே, பங்களாதேஷ் பிரச்சினைக்காக பாகிஸ்தான் மீது இந்தியா, படையெடுத்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்து விடுகிறது! அதைச் சமாளிக்கத் தனது மேதாவிலாசத்தைப் பயன்படுத்துகிறார்!

பாகிஸ்தான் முதலில் படையெடுத்ததால்தான், இந்தியா, படையெடுத்து வங்கதேசத்தை உருவாக்கியது என்று வெங்கட்ராமன் விளக்கமளித்துள்ளார் அதே விழாவில்!

வங்கதேசத்திற்குள் ஆரம்பத்தில் அனுப்பப்பட்ட முக்திவாகினி வீரர்களைப் பற்றிய விபரங்களைக் குறித்து விவாதிக்க, பாதுகாப்பு அமைச்சர் வெங்கட்ராமன் என்ற மூதறிஞர் தயாராக இருக்கிறாரா?

பாகிஸ்தானில் நடைபெற்றது மட்டும் உள்நாட்டு விவகாரமல்ல! இலங்கைப் பிரச்சினை மட்டும் உள்நாட்டு விவகாரமா?

சாஸ்திரி - ஸ்ரீமாவோ ஒப்பந்தப்படி, இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு ஏற்றுக் கொண்டவர்கள் போக மீதமுள்ள பத்து லட்சத்துக்கு மேற்பட்ட இந்திய வம்சாவளியினர் என்ற மலைத்தோட்டத் தமிழர்கள் பிரச்சினைகளையும், இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை யென்று இந்தியா தட்டிக் கழிப்பதுதான் ராஜதந்திரமோ? அடடா! இந்த அப்பட்டமான துரோகத்திற்கு ராஜதந்திரம் என்ற பெயர் எப்படித்தான் பொருந்துகிறதோ?

இலங்கையில் அல்லற்படும் தமிழ் இன மக்கள் அனைவருக்குமாக இங்குள்ளோர் குரல் எழுப்புகிறோம், தமிழர்கள் என்பதால்! இன உணர்வு குன்றாமல் இருப்பதால்!

இந்திய அரசியலில் இருப்போர் - மனிதர்கள் என்ற நினைவோடு இலங்கைத் தமிழர் பிரச்சினையை, மனிதாபிமானக் கண்கொண்டு பார்த்திடக்கூடாதா?

பங்களாதேஷ் பிரச்சினையில், பாராளுமன்றத்தில் தீர்மானமே நிறைவேற்றினார்களே! பரிதாபத்திற்குரிய ஈழத்தமிழன் பிரச்சினையில், அந்த இரக்க உணர்வையே காணோமே!

இதையெல்லாம் கேட்டால் முட்டாள் என்கிறார்! பேரறிஞர் பெருந்தகையான ? மத்திய அமைச்சர் மாண்புமிகு வெங்கட்ராமன்!

ஒருவர் ஒருபொருளைக் கொடுத்து, அதை நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அந்தப் பொருள் கொடுத்தவரிடமே தங்கிவிடும்!

வெங்கட்ராமன் முட்டாள் பட்டத்தை வழங்குகிறார்! அதை நாம் ஏற்றுக்கொள்ள வில்லை! எனவே, அது வழங்கியவரிடமே தங்குமாக!

அன்புள்ள,

மு. க.

22-09-1983

1152. நெஞ்சினிக்கும் நெல்லை!

உடன்பிறப்பே,

இந்த மடலுடன் இணைத்துள்ள நிழற்படங்கள் நெல்லை மாவட்டத் தொண்டர் அணி உடன்பிறப்புகள் என்னுடன் எடுத்துக் கொண்டவைகளாகும். இருநூறு தொண்டர்களையும் ஒரே படத்தில் எடுப்பதென்றால் சிரமமாக இருக்குமென்று, ஐந்தாறு குழுக்களாகப் பிரிந்து நிழற்படம் எடுத்துக் கொண்டார்கள். நிழற்படத்திற்காக மட்டுமே குழுக்கள்! நெஞ்சில் நிறைந்த பாச உணர்வும், கட்டுப்பாடும் அவர்கள், இருநூறு பேரையும் ஒற்றுமையுடன் இயங்கச் செய்ததை இரண்டு நாட்கள் அவர்களுடனிருந்து என்னால் உணர முடிந்தது! அத்தனை பேருடைய படங்களையும் மடலில் இணைத்திட முடியாமைக்கு, அந்த அன்பு உடன்பிறப்புகள் பொருத்தருள வேண்டிக் கொண்டு, தொண்டர் அணி குறித்து சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மடலுடன் இந்தப் படம் இணைக்கப்பட்டுள்ளதற்குக் காரணமே, மற்ற மாவட்டங்களில் தொடங்கப்படும் அணிகளிலும், இதே போன்ற கறுப்பு சிவப்புச் சீருடை அணிய வேண்டுமென்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான்!

பயிற்சி காலத்திலே ஒரு சீருடையும், கழகப் பணியாற்றும் காலத்திலே மற்றொரு சீருடையும் நெல்லை மாவட்டத் தொண்டர் அணிக்கு, மாவட்டக் கழகச் செலவிலேயே தயாரித்துத் தரப்பட்டுள்ளன.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் கூறியதைப்போல, எந்தவிதமான ஆயுதப் பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை! குறைந்தபட்சம் ஒரு குச்சியோ, கம்போ கூட அவர்கள் கைகளில் தாங்கி பயிற்சி பெறவில்லை! ஓய்வு பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற இராணுவ வீரர் ஒருவர், பயிற்சிகளை வழங்கியதாலேயே கழகத் தொண்டர்

அணிக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதாகக் கூறுவது சத்தற்ற வாதம்! கலப்பற்றக் கற்பனை!

இளைஞர்கள், உடற்பயிற்சி செய்து நல்ல திடகாத்திரமாக விளங்க வேண்டுமென்று முதலமைச்சர், அடிக்கடி கூறி வருகிறார். ஆனால் அந்த உடற்பயிற்சியை ஒரு கட்டுப்பாட்டுடனும் - கழக நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துகிற நல்ல நோக்கத்துடனும் கூட்டாகப் பெறுகிற கழகத்தினரைச் சிறையில் அடைத்து வழக்கும் தொடுக்கிறார். ஆனால், அதே முதலமைச்சர் திடீரென்று, நேற்று ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களை வைத்து அரசாங்கச் சார்பில் ஒரு அமைதிப் படை ஏற்படுத்தப் போவதாக அறிவித்துமிருக்கிறார்.

தொண்டர்கள், கம்பு போன்றவைகளை வைத்துக்கொண்டு கூட பயிற்சி பெறக்கூடாது என்பதிலே, எனக்கு எந்தவித மறுப்பும் இல்லை!

ஆனால் அதே கொள்கை, திரைப்படத் தணிக்கைகளிலும் பின்பற்றப்பட வேண்டுமென்று எம்.ஜி.ஆர். அரசு, தணிக்கைத் துறையை வற்புறுத்துமானால் - இளைஞர்களுக்கு வன்முறையில் ஒரு கவர்ச்சி ஏற்படாமல் இருக்க - படங்களில் காட்டப்படும் சண்டைக் காட்சிகளையெல்லாம் தணிக்கை அதிகாரிகள், புதிய படம், பழைய படம் எல்லாவற்றிலும் வெட்டி எறிந்துவிட நேரிடலாம்!

வீட்டில் உள்ள சிறு குழந்தைகள் கூட ஆளுக்கு ஒரு குச்சியை எடுத்துக்கொண்டு, ட்விஷ், ட்விஷ் என்று சண்டை போடுவது, நமது முதலமைச்சர் உள்ளிட்ட பலரும் நடித்துள்ள ஸ்டண்ட் படக்காட்சிகளைப் பார்த்து விட்டுத்தான் என்கிறபோது - அதனை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்த வேண்டிய இடம் எதுவென்று தெரிகிறதல்லவா?

நான் இந்த வாதத்தை வைக்கிற காரணத்தால், நமது கழகத் தொண்டர்கள் ஆயுதப்பயிற்சி பெறுவதில் தவறில்லையென்று கூறமாட்டேன்! அதனால்தான் ஆயுதம் ஏதுவுமின்றி உடற்பயிற்சியும் மற்றும் ஒழுங்குமுறைப் பயிற்சியும் பெற்றுப் பணியாற்றக்கூடிய கழகத் தொண்டர் அணிகள், மாவட்டந்தோறும் அமைக்கப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது.

ஏற்கெனவே ஆங்காங்கு கழகத் தொண்டர்கள் இருக்கின்றனர்; அவர்கள் சீருடை அணிந்து மாநாடு போன்ற நிகழ்ச்சிகளில் தொண்டர் படை என்ற பெயரால் அண்ணா காலத்திலிருந்து பணியாற்றுகின்றனர். அந்தத் தொண்டர்களை ஒரு அணியின் வாயிலாக ஒருங்கிணைக்கவும் - அவர்களுக்கு நல்லொழுக்கக் கட்டுப்பாடுகளை அறிவுறுத்தவும் - கொள்கை விளக்கப் பயிற்சி வகுப்புகளை நடத்தவும் - உடல் வலிவுடன் திகழ அவர்கட்கு உடற்பயிற்சி அளிக்கவும் - கழக நிகழ்ச்சிகள் நடைபெறும்போது அவற்றைச் செம்மைப்படுத்தி, அமைதி காக்கத் தக்க முறைகளைக் கற்றுத் தரவும் மாவட்டந்தோறும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தலைமைக் கழகம் அறிவித்தது!

அதில் முந்திக்கொண்டு செயலாற்றிய பெருமை, நெல்லை மாவட்டத்துக்குக் கிடைத்துள்ளது. அதற்கு மேலும் சிறப்பு சேர்க்கிற அளவுக்கு நல்லதோர் எழுச்சியை, அந்தத் தொண்டர்களைக் கைது செய்த நிகழ்ச்சியின் வாயிலாக எம்.ஜி.ஆர். ஏற்படுத்திக் கொடுத்து விட்டார்.

நெல்லை மாவட்டச் செயலாளர் நண்பர் மஸ்தான், எத்தனை தொல்லைகள் வரினும், அவற்றைத் தாங்கிக்கொண்டு ஆற்றல்மிகு பணியினை ஆற்றி வருகிறார்! தொண்டர் அணியைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் முகிழ்ந்தது முதல் தொய்வு சிறிதுமின்றி ஓடியாடி உழைத்து, அண்ணா பிறந்த நாளன்று அற்புதமான அணிவகுப்பு நெல்லையில் நடைபெறுவதற்குக் காரணமாக இருந்து, அதனைக் கண்டுகளித்த பூரிப்பில் இன்னமும் திளைத்திருப்பவர் தம்பி கோபால்சாமி!

மாவட்டக் கழகத்தில் உள்ள செயல்திறன் படைத்த நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் ஏற்றுக்கொண்ட உழைப்பு வீண் போகவில்லை!

கழகக் கொடிகளாலும், தோரணங்களாலும், பதாகைகளாலும் நெல்லை நகரத்தையே முழுமையாக அலங்கரித்து, ஒரு மாநில மாநாட்டின் தோற்றத்தையே உருவாக்கிக் காட்டிய அந்த உடன்பிறப்புகளின் உழைப்புக்குத் தலைவணங்காமல் இருக்க முடியாது!

அண்ணா சிலைக்கு எதிரே கழகக் கண்மணிகளாம் தொண்டர்கள், நடத்திக் காட்டிய அந்த அணிவகுப்பு, இன்னமும்

என் கண் முன்னால் நிற்கிறது! பயிற்சியளித்தோர்க்கு என் பாராட்டு!

வாலிப மிடுக்கு - வாட்டசாட்டமான உருவம் - கம்பீரத் தோற்றம் - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காக்கும் கழக நெஞ்சம் - அப்படிப்பட்ட நன்முத்துக்களைத் தேர்ந்தெடுத்து, அதனை அணியென்னும் ஆரம் ஆக்கி, அண்ணா பிறந்த நாளன்று அணிவித்த அன்பு உடன்பிறப்புகளை வாழ்த்துகிறேன்! நெஞ்சினிக்கும் நெல்லை எனப் போற்றுகிறேன்.

எல்லா மாவட்டங்களிலும் அண்ணா வழியில் இந்த அறநெறி அணி - ஆர்வமிகு அணி - ஆற்றல் வீரர் அணி - உருவாகிட ஆவன செய்திட முனைந்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

23-09-1983

1153. சொன்னால் என்ன! சொல்லாவிட்டால் என்ன!

உடன்பிறப்பே,

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என நீட்டி முழக்கித் தேர்தலில் வாக்குகளைப் பெற்ற எம்.ஜி.ஆர். அவர்கள், இதோ அந்த வேலையென பாம்புக் கடி வைத்தியர்கள் ஆயிரம் பேரை நியமிப்பதாகவும், அவர்களுக்கு மாதச் சம்பளமாக நூறு ரூபாய் என்றும் அறிவித்துக் கடலிலே பெருங்காயம் கரைத்த கதையைக் கண்டு, நாடு சிரித்துக் கொண்டிருக்கிறது!

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து விட்டதே என்று கேட்டால், நாங்கள் என்ன செய்வது? முன்பிருந்த ஆட்சியாளர்கள் வேலையில்லாதோர் எண்ணிக்கையைப் பெருக்கி விட்டார்கள் என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், பழியைத் தூக்கி பழைய ஆட்சியின் மீது போட்டு விட்டுத் தப்பிக்க முயற்சி செய்கிறார்.

ஆனால் புள்ளி விபரங்கள் என்ன சொல்லுகின்றன?

எம்.ஜி.ஆரின் பொய்யுரையைப் புரட்டித் தள்ளுகிற இந்தப் புள்ளிவிபரத்தை வேறு யாரும் தயாரித்து விடவில்லை.

இந்திய அரசின் தொழிலாளர் அமைச்சகத்தைச் சேர்ந்த தொழிலாளர் பீரோ தயாரித்துள்ள இந்தப் புள்ளிவிபரத்தை, இந்தியன் லேபர் ஜர்னல் என்ற மாதாந்திர வெளியீடு, பிரசுரித்துள்ளது. அதில் தமிழ்நாட்டின் வேலை வாய்ப்புப் பணி குறித்த புள்ளிவிபரங்கள் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன.

1969-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரையில், வேலை வாய்ப்புக் கோரி பதிவில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 3,22,318 அதாவது சுமார் மூன்றேகால் லட்சம் பேர் இந்த எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து 1975-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில், 7,32,000 ஏழு லட்சத்து முப்பத்து இரண்டாயிரம் என ஆகியிருக்கிறது. அந்த ஆண்டின் இறுதியில்தான் கழக

ஆட்சி கலைக்கப்பட்டது என்பதை நினைவுபடுத்திடத் தேவையில்லை!

பிறகு தமிழகத்தில் கவர்னர் ஆட்சி நடைபெற்ற 1976-ஆம் ஆண்டில், அந்த எண்ணிக்கை 8,33,000 எட்டு லட்சத்து முப்பத்து மூவாயிரம் என வளர்ந்திருக்கிறது.

அதன் பின்னர், 1977-இல் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்து 1983 ஏப்ரல் மாதம் வரையில், அந்த எட்டு லட்சத்து முப்பத்து மூவாயிரம் என்பது பதினான்கு லட்சம் பேர் என்ற எண்ணிக்கையாக உயர்ந்திருக்கிறது. அதாவது சுமார், ஆறு லட்சம் பேர் வேலை வாய்ப்பு கேட்டு மேலும் அதிகமாக விண்ணப்பித்திருக்கிறார்கள்.

கழக ஆட்சியில் ஆறாண்டு காலத்தில் 69 முதல் 75 வரையில் வேலை வாய்ப்புத் தேடிப் பதிவு செய்தவர்களின் புதிய எண்ணிக்கை நாலு லட்சமாக இருக்கும்போது, எம்.ஜி.ஆர். ஆட்சியில் அந்த எண்ணிக்கை 77 முதல் 83 வரையில் ஆறாண்டு காலத்தில் சுமார் ஆறு லட்சமாக உயர்ந்திருக்கிறது.

இப்படியொரு புள்ளி விபரத்தை, இந்திய அரசின் தொழிலாளர் துறை அமைச்சகத்தின் தொழிலாளர் துறை பிரிவே வெளியிட்டு - அதில் தமிழ்நாட்டைப் பற்றிய விபரத்தையும் அளித்திருக்கும் போது, அவற்றை மூடி மறைத்துவிட்டு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், மறைமுகமாகக் கழக ஆட்சியின் மீது பழி போடுவதால், வேலையற்று அலைபவருக்கு வேலை வாய்ப்பு கிடைத்து விடுமா?

கழக ஆட்சியின்போது வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்தோர் எண்ணிக்கை நான்கு லட்சம் உயர்ந்து மொத்தத்தில் சுமார் ஏழு லட்சம் பேராக இருந்ததையும், அந்த எண்ணிக்கை இப்போது எம்.ஜி.ஆர். ஆட்சியில், பதினான்கு லட்சமாக ஆகியிருப்பதையும் நினைத்துப் பார்த்து இனிமேல் எம்.ஜி.ஆர். பேசுவது நல்லது!

மத்திய அளவிலும், மாநில அளவிலும் தீட்டப்படும் நல்ல திட்டங்களின் மூலம்தான், வேலை வாய்ப்புப் பிரச்சினைக்கு ஒரு இறுதியான முடிவைக் காண முடியும்.

மாநிலத்தின் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றியே சரியாகத் தெரிந்து கொள்ளாத ஒரு முதலமைச்சரிடம், நாம் இதையெல்லாம் எதிர்பார்ப்பது நியாயமில்லைதான்!

அண்ணா ஆட்சிக் காலத்தில் மாநில ஆண்டு வருவாய் ஆயிரம் கோடியென்றும், இந்த ஆண்டு மூவாயிரம் கோடி ரூபாய் என்றும் ஒரு முதலமைச்சரே கூறுகிறார்! அதைப்பற்றி விளக்கம் கேட்டால் நிதியமைச்சர் நாவலர், யாருக்கும் தெரியாமல் தலையில் அடித்துக்கொண்டு பொதுக்கூட்டத்தில் நின்று முதலமைச்சர், ஒரு தோராயக் கணக்குதான் சொன்னார் என்கிறார்! மறுத்தால் நாவலரின் பதவிக்கு ஆபத்து!

அண்ணா ஆட்சிக் காலத்தில், மாநிலத்தின் ஆண்டு வருவாய் முந்நூறு கோடி ரூபாய்! இந்த ஆண்டு சுமார் ஆயிரத்து எழுநூறு கோடி ரூபாய்! இந்த விபரங்கள்தான் சட்டசபையில் நிதியமைச்சர் படித்தவை!

ஆனால், முதலமைச்சர் கணக்கோ பெருங்கணக்கு!

இப்படிப்பட்ட ஒரு முதலமைச்சரிடம் போய் இந்தப் புள்ளி விபரங்களைச் சொன்னால் என்ன! சொல்லாவிட்டால்தான் என்ன!

அன்புள்ள,

மு. க.

24-09-1983

1154. விரைவில் தேர்தல் வரலாம்!

உடன்பிறப்பே,

முன்னதாகவே தேர்தல் வந்துவிடும் என்றுதான் தோன்றுகிறது!

இலங்கையில் தமிழர்களின் பிணங்கள் விழுந்தபோதும் - தமிழச்சிகள் சூர்ப்பநகைகளாக ஆக்கப்பட்டபோதும் - யாழ்ப்பாணத் தமிழர், மலைத்தோட்டத் தமிழர் இந்திய வம்சாவளித் தமிழர் என்றெல்லாம் வித்தியாசம் பார்க்காமல், தமிழ் இனம் என்றாலே அடித்துக் கொன்ற இனப்படுகொலை, நாள் தவறாமல் நடைபெற்ற போதும் - சிறைச்சாலையில் தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் போன்ற இலங்கையின் பகத்சிங்குகளும், ஐம்பதுக்கு மேற்பட்ட விடுதலை வீரர்களும் திட்டமிட்டுத் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டபோதும் - குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்த இந்திய அரசின் ஆளுங்கட்சியான இந்திரா காங்கிரஸ் தலைவர்கள், இழவு விழுந்த மூன்று மாதம் கழித்துத் துக்கம் விசாரிக்க வந்து கிளிசரின் கண்ணீர் வடிப்பதைப் போல், தமிழ் நாடெங்கும் மின்னல் வேகச் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டுச் சுழன்றோடுகின்றனர்.

இந்த அவசர வேகத்தைப் பார்க்கும்போது, விரைவில் தேர்தல் வந்துவிடும் போலத்தான் தெரிகிறது.

இலங்கைக்குப் படையை அனுப்பச் சொல்வது முட்டாள்தனம் என்று பல்லவியைத் தொடங்குகிறார்கள். அந்த முட்டாள்தனத்தைக் கருணாநிதிதான் செய்கிறான் என்று அனுபல்லவியைத் தொடருகிறார்கள். இறுதியாக, எம்.ஜி.ஆரே சரணம்! சரணம்! என்று சரணத்தை முடிக்கிறார்கள்.

ஐ.நா. சபையில் முறையீடு செய்வதே தவறு என்று ஒரு பக்கத்தில் இந்திரா காங்கிரஸ் தலைவர்கள், மத்திய மந்திரிகள் வியாக்கியானம்! இன்னொரு பக்கத்தில், இலங்கைப் பிரச்சினைக்காக இந்திரா காந்தி, உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டுகிறார் என்ற கொட்டை எழுத்துச் செய்தி!

இலங்கையில் இந்திய வம்சாவளியினர்தான் தாக்கப்படுகிறார்கள் என்று மத்திய மந்திரியார் பிரகடனம்!

இருந்தாலும்கூட இலங்கையின், உள்நாட்டுப் பிரச்சினை அது! அதில் இந்தியா, தலையிடாது என பிறிதொரு அறிவிப்பு!

இந்த முரண்பாடுகளைப் பற்றித் தமிழ்நாட்டு மக்கள், சிந்தித்துப் பார்க்க மாட்டார்கள் என்கின்ற குருட்டுத் தைரியத்தில் இந்திரா காங்கிரஸ் தலைவர்களும் கொட்டோகொட்டென்று கொட்டுகிறார்கள்!

இடையிடையே இலங்கையிலிருந்து வந்துள்ள தமிழ்த் தலைவர்களின் சந்திப்பு!

அவர்கள், இந்தியா இதுவரை எடுத்த நடவடிக்கையே போதும்! என்று நன்றி தெரிவித்ததாக ஏடுகளில் அறிவிப்பு!

இலங்கையிலிருந்து வரும் தலைவர்களும், விடுதலை வீரர்களும்கூட, சற்று எச்சரிக்கையாக இருப்பது நல்லது!

அவர்களைக் காப்பாற்றுவதற்கும், துணை நிற்பதற்குமென்றே உண்மையான தமிழர்கள் பலர் இருக்கிறார்கள் எனினும், எரிகிற வீட்டில் பிடுங்கியவரையில் ஆதாயம் என எண்ணிச் செயல்படுகின்ற, சில அடையாளம் தெரிந்த ஆட்களும், அவர்களை ஆட்டிப் படைக்கிறார்கள்! அவர்களின் கடந்த கால வரலாற்றை மறந்துவிடாமல், அவர்களைத் தொலைவில் வைத்தே பழகுவது பாதுகாப்பானது!

அந்த ஆசாமிகள், ஆள்வோரிடம் அந்தரங்க விசுவாசிகளாகவும் - இலங்கையிலிருந்து வருவோரின் பணப்பைகளில் அளவற்ற பாசமுடையோராகவும் திகழ்ந்து, இலங்கை நெருப்பில் நன்றாகக் குளிர்காய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த ஆதாயம் தேடிகளை விட்டுவிட்டு - கழகம்; அரசியல் ஆதாயம் தேடுகிறது என்று கதைக்கிறார்கள், அரசியல் ஆதாயத்திற்காகவே திடீரென்று, தமிழ்நாட்டு மக்களின் மீது அக்கறை கொண்டு சுற்றுப்பயணம் செய்வோர்!

இந்தச் சுற்றுப் பயணங்கள் சுட்டிக்காட்டும் உண்மையொன்று இப்போது தெரிகிறது! அதுதான் விரைவில் தேர்தல் வரப்போகிறது என்பது!

இலங்கைக்குப் படையை அனுப்பும் பேச்சுக்கே இடமில்லை! இந்திய படையை மட்டுமல்ல! ஐ.நா.வின் அமைதிப் படையைக்கூட அனுப்பச் சொல்லிக் கேட்க மாட்டோம்! படைகள் அனுப்புவது என்பதெல்லாம் முட்டாள்தனம்!

இவ்வாறு இந்தியப் பாதுகாப்பு அமைச்சரே, தமிழ்நாட்டில் திடீரென்று முற்றுகையிட்டு முழங்குகிறார் என்றால் - இதுவரையில் யோசனையிலும், குழப்பத்திலுமிருந்த விரைவுத் தேர்தல் குறித்த முடிவு, இப்போது அரங்கேறிவிட்டதோ என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது!

தேர்தல் விரைவில் வந்தாலும் சரி! உரிய காலத்தில் வந்தாலும் சரி! அதனைத் சந்திக்க வேண்டிய பெருங்கடமையை நாம் ஏற்றிட இப்போதே தயாராகிக் கொள்வோம்!

இலங்கைக் கொடுமையை அடக்கிட, இந்தியப் படையோ - அல்லது அமைதியை நிலைநாட்ட ஐ.நா.வின் படையோ - அனுப்புவது முட்டாள்தனம் என்று கூறிவிட்டார் பாதுகாப்பு அமைச்சர்!

விளக்கமளிக்கலாம் அவர் படையை அனுப்பக் கூடாது என்பதற்கு!

வாதம் செய்யலாம் அவர், படையை அனுப்பினால் பயன் ஏதும் விளையாது என்ற அவரது கருத்தை நிலைநாட்ட!

ஆனால் அதற்கு மாறாக, அவர் நமக்கு முட்டாள் பட்டம் கட்டுகிறார்!

தென்னிலங்கைப் பிரச்சினைக்காக, நாம் அந்த முட்டாள்பட்டத்தை ஏற்கத் தேவையில்லை!

தென்சென்னையில் அவரை ஆதரித்ததற்காக அந்தப் பட்டம் நமக்கு இப்போது பொருந்தக்கூடியதுதான்!

பரவாயில்லை! அவர்களே பறைசாற்றிக் கொண்டு புறப்பட்டு விட்டார்களே - தேர்தல் வருமென்று! அதற்காக நடைபெறுவதுதானே இந்தத் திடீர் திக்விஜயங்கள்! அதையும் சந்திப்போம்.

அன்புள்ள,

மு. க.

25-09-1983

1155. இரண்டு துறவிகளின் கதை!

உடன்பிறப்பே,

அருமை நண்பர் கே.டி. கோசல்ராம் எம்.பி. அவர்கள், மிகவும் கோபமாக இருக்கிறார், என் மீது எப்போதுமே அவர் கோபப்பட மாட்டார். அதற்கு மாறாக, இப்போது மிகவும் கோபமாக இருக்கிறார். அவரது மேடைப் பேச்சுகளைப் பார்க்கும்போது, அப்படித் தான் தோன்றுகிறது. கோபமாகப் பேசுவதற்கும், கோபத்தை வரவழைத்துக் கொண்டு பேசுவதற்குமுள்ள வித்தியாசத்தை விரைவில் கண்டுபிடித்து விடலாம். அவரது பேச்சு குறித்து, பத்திரிகைகளில் தலைப்புதான் கடுமையாக வெளியிடப்படுகின்றனவே தவிர, பேச்சு முழுமையும் படித்தால் அதில் காணப்படும் முன்னுக்குப்பின் முரணான வாதங்கள், அவர் உள்ளபடியே மனமாரக் கோபமாக இல்லை என்பதை உணர்த்துகின்றன! உண்மையிலேயே அவர் கொண்டுள்ள கருத்தில் அழுத்தம் திருத்தமாக இருப்பாரேயானால், அந்தக் கருத்துக்கு எதிரான கருத்தை அவர் தாக்கும்போது எப்போதுமே ஆவேசமாக இருக்கக்கூடியவர்!

ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்த வரையில், அவருடைய உளமார்ந்த கருத்து ஒன்றாகவும் - மேடையில் பேசுவது வேறொன்றாகவும் இருப்பதால், எப்போதும் போல அவருக்கு இயற்கையான கோபம் வரவில்லையென்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது!

இலங்கைப் பிரச்சினையில் கருணாநிதி, ஆழம் தெரியாமல் காலை விடுகிறார் என்பது அவரது பேச்சுக்குச் சில ஏடுகள் கொடுத்துள்ள தலைப்பு!

இலங்கைக்குப் படை எடு என்று கருணாநிதி சொல்கிறார்! உங்களிடம் கேட்டுக் கொண்டா வெங்கட்ராமன் படை எடுப்பார்? எப்போது, எப்படிப் படை எடுப்பது என்பது இந்திரா காந்திக்கும், வெங்கட்ராமனுக்கும் தெரியும்!

அருமை நண்பர் கோசல்ராம் அவர்கள், இப்படியும் பேசியிருக்கிறார்.

இந்திரா காந்தி அம்மையாரோ, வெங்கட்ராமன் அவர்களோ என்னிடம் கேட்டுக் கொண்டு படையெடுக்க வேண்டும் என்று நான் எதிர்பார்க்க முடியுமா? அவ்வளவு ஆணவம் கொண்டவனா நான்? வலிவற்றவன் - சாதாரணமானவன் - சாமான்யன் - அப்படிப்பட்ட என்னிடம் ஒப்புதல் கேட்டு ஒரு யுத்தப் பிரகடனம் செய்ய வேண்டிய அளவுக்கு, இந்திய சாம்ராஜ்யத்தின் தலைவியாரையும், தளநாயகர் வெங்கட்ராமன் அவர்களையும் நான் குறைத்து மதிப்பிடவே மாட்டேன்!

ஆனால், எனக்குள்ள சந்தேகமெல்லாம் ஒன்றே ஒன்றுதான்!

அண்மையில் தமிழகத்தில், பல இடங்களில் உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள், இலங்கையின் மீது படையெடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை! படையெடுக்குமாறு கருணாநிதி கூறுவது முட்டாள்தனம்! என்று திட்டவட்டமாகப் பேசி, இலங்கைத் தமிழர்களைப் காப்பாற்ற படையே அனுப்பப்படமாட்டாது என்று தெளிவாகக் கூறியிருக்கும்போது - இப்போது திடீரென்று கோசல்ராம் அவர்கள், எப்போது படையெடுப்பது என்பது இந்திரா காந்திக்கும், வெங்கட்ராமனுக்கும் தெரியும் என்று பேசியிருப்பதிலிருந்து படை அனுப்ப உரிய நேரத்திற்காகக் காத்திருக்கிறார்களோ என்ற சந்தேகம் வருவது இயற்கைதானே!

எப்படியோ உரிய நேரத்தில் படையெடுத்து, எனக்கு வழங்க முன்வந்த முட்டாள் பட்டத்தை அவர்களாகவே, அவர்களிடமே தக்க வைத்துக் கொண்டால் சரி!

படையெடுப்பது முட்டாள்தனம் என்கிறார் பாதுகாப்பு மந்திரி! அவருடைய பாசமிகு நண்பர் கோசல்ராம் அவர்களோ; அதற்கெல்லாம் நேரம், காலம், பாதுகாப்பு மந்திரிக்குத் தெரியும்! அப்போது படையெடுக்கப்படுமென்று சூசகமாகத் தெரிவிக்கிறார்.

இலங்கையின் மீது படையெடுக்கச் சொல்வதே முட்டாள்தனம் என்பது பாதுகாப்பு அமைச்சரின் வாதம்! ஆனால், அதில் சற்று நெளிவு சுளிவோடு கோசல்ராம் அவர்கள், ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்! அது என்ன?

இலங்கையில் வசிக்கும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் பதினைந்து லட்சம் பேரைக் காப்பாற்ற இலங்கை மீது படை எடு

என்று கருணாநிதி சொன்னால், நான், கருணாநிதியின் பக்கமே இருந்து இருப்பேன்.

இது, திரு. கோசல்ராம் அவர்களின் பேச்சில் ஒரு பகுதியாகும்!

இந்திய வம்சாவளித் தமிழரைக் காப்பாற்றவும், இலங்கையின் மீதுதான் படையெடுக்க வேண்டும்!

இலங்கையின் மீது படையெடுக்கச் சொல்வதே முட்டாள்தனம் என்று பாதுகாப்பு அமைச்சர், பகிரங்கமாக அறிவித்து விட்ட பிறகு, படையெடுப்புக்கான காரணம் எதுவானால் என்ன?

நமது கோரிக்கை, தமிழ் ஈழம் கிடைத்தால்தான் எதிர்காலத்தில் நிம்மதியாக வாழ முடியும் என்ற ஈழத் தமிழர்களுக்காக மட்டுமல்ல! இலங்கையில் அவதியுறும் இந்திய வம்சாவளித் தமிழருக்கும் சேர்த்துத்தான் என்பதைக் கோசல்ராம் போன்றவர்கள் அறிந்திருந்தும்கூட அரசியல் காரணங்களுக்காக அதனை மறைத்துப் பேச வேண்டிய அவசியத்திற்கு ஆளாகிறார்கள் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

தனித் தமிழ் ஈழம் கேட்கும் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களைத்தான், ஒருமுறைக்கு இருமுறை இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார், அழைத்துப் பேசியிருக்கிறார் என்பதிலேகூட கோசல்ராம் அவர்களுக்குக் கருத்து மாறுபாடு இருக்கக்கூடும். ஏனெனில் கோசல்ராம் அவர்கள், முழுக்க முழுக்க இந்திய வம்சாவளித் தமிழர்களைப் பற்றி மட்டுமேதான் கவலைப்படச் சொல்கிறார்!

நாமோ, இலங்கையில் கொடுமைக்கு ஆளாகும் தமிழர்கள் அனைவருக்குமே பாதுகாப்பு தேவையென்று வலியுறுத்துகிறோம்!

இன்னொரு வாதத்தையும் அவர் எழுப்பியிருக்கிறார்!

தமிழ் ஈழத்தைப் பிரித்துக் கொடு என்கிறீர்களே! தமிழ்நாட்டைத் தனியாகப் பிரித்துக்கொடு என்று கேட்டுப் பாருங்களேன்!

இதுதான் கோசல்ராம் அவர்களின் ஆணித்தரமான கேள்வி!

அரசியலில் தொடர்ந்து நீண்ட காலமாக இருந்து வருகிறவர் கோசல்ராம்! 1962-ஆம் ஆண்டு அண்ணா அவர்கள்

காலத்திலேயே, இந்திய ஒருமைப்பாட்டின் அவசியத்தையும், இந்திய நாட்டுப் பாதுகாப்பையும் மனதிற்கொண்டு, பிரிவினைக் கொள்கையைக் கழகம் கைவிட்டுவிட்டது!

இப்போது இந்தியாவில் தனித் தமிழ்நாடு கேட்டுப் பாருங்களேன் என்று கழகத்திற்கு அவர் அறைகூவல் விடுக்கிறார்! அந்த அறைகூவல் எந்த அடிப்படையில் எழுகிறது?

இலங்கையில் சிங்களவரும், தமிழரும் இனி இணைந்து வாழ முடியாது என்ற காரணத்தால், தனித் தமிழ் ஈழக் கோரிக்கை அங்கே வலுப்பெற்றிருக்கிறது!

இலங்கையைப் பொறுத்து அந்தக் கோரிக்கையை நாம் ஆதரிப்பதால், இந்தியாவிலும் தனித் தமிழ்நாடு கேட்கச் சொல்கிறார் கோசல்ராம்!

பாகிஸ்தானத்தைப் பிரித்து அங்கே ஒரு பங்களாதேஷ் உருவாகிட இந்தியா போர் தொடுத்தபோது - இந்தியாவிலும் அதுபோல ஒரு பிரிவினை கேட்போம் என்று அன்றைக்கு யாரும் குரல் எழுப்பவில்லையே!

வங்கதேச மக்களை வாழ்விக்க அன்றைக்கு, பாகிஸ்தானில் ஒரு தனி நாடு தேவையென்று இந்தியா கருதவில்லையா?

அதைப்போல, இலங்கையில் இனப்படுகொலைக்கு ஆளாகும் தமிழர்களை வாழ்விக்க, இலங்கையில், அவர்களுக்கு ஒரு தனிநாடு தேவையென்ற கோரிக்கையை ஆதரிக்கக்கூடாதா?

நாம் பிரிவினையைக் கைவிட்டுவிட்டோம்! அதற்காக இலங்கைத் தமிழர்களின் எதிர்கால நிம்மதிக்கு தமிழ் ஈழப் பிரிவினைதான் சரியான முடிவு என்று கூறுவது தவறா? அதை ஆதரிப்பதால், நீயும் பிரிவினை கேளேன் என்று வாதிடுவதா?

ஒருவன் துறவியாகி விடுகிறான்! அந்தத் துறவி, அந்த ஊரில் உள்ள ஒரு கட்டிளங்காளைக்கும் ஒரு அழகிய பெண்ணுக்குமுள்ள காதலையறிந்து அதைப் பெற்றோர் தடுக்காமல் இருவருக்கும் மணம் முடித்திடுக; என்று அறிவுரை கூறுகிறான்!

அவர்களை மாத்திரம் திருமணம் செய்து கொள்ளச் சொல்கிறாயே! நீயும் ஒரு திருமணம் செய்து கொள்ளேன்! என்று யாரோ ஒருவர், அந்தத் துறவியைப் பார்த்து கேலி செய்கிறார்!

இப்படிப்பட்ட கதையாகத்தான் இருக்கிறது, கோசல்ராமின் கேலியும் கிண்டலும்!

இது நான் சொல்லும் சாமியார் கதை!

அறிஞர் அண்ணா சொன்ன சாமியார் கதை வேறொன்றிருக்கிறது!

ஒரு பூக்காரி ஒரு சாமியாரைப் பார்த்து அடிக்கடி கேட்டாளாம்! துறவியாரே! உமக்கு எப்போது திருமணம்? எப்போது திருமணம்? என்று!

அவளது கேள்விக்குப் பதில் கூறாமல் பல நாள் பொறுத்துப் பொறுத்துப் பார்த்த சாமியார் - ஒரு நாள் பொறுமையிழந்து இதோ! இப்போதே திருமணம்! நீதான் மணமகள்! மாலையைக் கட்டு! இப்போதே மாலை மாற்றிக் கொள்வோம் என்றாராம்!

இந்த இரண்டாவது துறவியின் கதை, அண்ணா சொன்னது!

இரண்டு துறவிகளில் முதல் துறவியாக இருக்கவே தி.மு.கழகம் விரும்புகிறது!

இரண்டாவது துறவிபோல் ஆக வேண்டும் என்று யாராவது வலியுறுத்துவார்களேயானால், இதோ! இப்போதே! எங்கே! கழுத்தை நீட்டு! என்ற கதை, நடந்தாலும் நடந்துவிடும்!

எனவே கதையில் வரும் பூக்காரி போல - பொறுப்புள்ள அரசியல்வாதி கோசல்ராம் போன்றவர்கள் பேசுவது அவர்களுக்கே நல்லதல்ல!

அன்புள்ள,

மு. க.

28-09-1983

1156. எஃகு உள்ளம் - இறுதி வெற்றி!

உடன்பிறப்பே,

"Two hundred yards separate us from the forest across the glade.

Just one bound – and we are there-the distance is really not too great"

அக்காட்டுக்கும், நமக்குமிடையே இருப்பது இருநூறு கெஜ தூரம்தான்! அப்படியொன்றும் மிக நீண்ட தூரமில்லை! ஒரே தாவலில் நாம் அங்கு செல்ல முடியும்.

இப்படித் தொடங்கும் போர்ப் பரணிக் கவிதையொன்றை இரஷ்யக் கவிஞன் பொசுத்கோவ் என்பான், சிங்கத்தைப்போல் சிலிர்த்தெழுந்து பாடினான்!

எதிரியின் படைகள் சோவியத் இரஷ்யாவுக்குள் நுழைந்து கொண்டிருந்தபோது - வெற்றிமாலை, பாசிச வெறியர்களின் கழுத்தில் விழுந்துவிடுமோ என உலகம் அதிர்ந்து கொண்டிருந்தபோது - அந்தக் கவிஞன் இந்தக் கவிதைப் போர்வாளை தனது நாட்டு வீரர்களின் கையில் தந்தான்!

அக்காட்டுக்கும் நமக்கு மிடையே
இருப்பது இருநூறு கெஜ தூரம்தான்!
அப்படியொன்றும் மிக நீண்ட தூரமில்லை!
ஒரே தாவலில் நாம் அங்கு செல்ல முடியும்.
எனினும் அதைச் செய்து முடிப்பது எளிதன்று,
என்பது நமது போரணி மறவர்க்குப்புரியும்.
காட்டு மரங்களின் பின்னே எதிரி நிற்கிறான்
கடும் பாசிசச் சர்வாதிகாரத்தின் பீரங்கி
வெடிகள், தரையெலாம் உலர்ந்தும் உருவெலாம்

மாற்றி நீரெல்லாம் மறைந்தும் நிறைந்து
கிடக்கின்றன!
அவர்தம் இயந்திரத் துப்பாக்கிகளின்
அனலேறிய நீலவண்ணக் குழல்கள்
தீக்கண்களுடன் நம்மைக் குறிபார்க்கின்றன.
அவர்தம் இயந்திரக் கருவிகளில்
ஈயக் குண்டுகள் நிரம்பியுள்ளன.
அச்சம் புதைந்த எதிரியின் இராணுவம்
நம்மிடம் பறித்த மண்ணைக் காவல் காக்கிறது.
நான் ஒரு இரஷ்யனாய் என் எதிரியைப் பார்க்கிறேன்!
என் வெஞ்சினத்தை அடக்கவே முடியவில்லை.
என் துப்பாக்கியை இயக்கிவிட
என் கை விரல்களோ அழுந்துகின்றன!
என் எதிரே,
மக்கள் வெளியேறிய நகரங்களும்,
விளைவிக்காத நன்செய் நிலங்களும்!
அந்த இடைவெளிக்கு அப்பாலிருக்கும்
என் இரஷ்யா எனதாக இல்லாமற் போனதே!
எண்ணி எண்ணி வெதும்புகிறேன்.
மீண்டும் மீண்டும் சபதம் செய்வோம்!
நமது தாய் மண்ணை மீட்போம்.
வெங்கொடுமைப் போர் செய்து
வென்றெடுப்போம்!
போர்வீரர் நாமறிவோம்;
நாங்கள் எதிர்நோக்கிக் காத்திருக்கும்
முன்னேறு! என்ற கட்டளை பிறந்ததுமே
உராய்ந்து பறக்கும் வெடிகுண்டும்,
பீரங்கி உமிழும் நெருப்பும்
எங்களைத் தடுத்து விட முடியாது!

உடன்பிறப்பே, இரஷ்யக் கவிஞன் எழுதிய இந்தக் கவிதை, ஒவ்வொரு இரஷ்ய வீரனின் இதயத்திலும் போர் முரசமாக ஒலித்தது!

எதிரியிருக்குமிடத்திற்கும், நமக்கும் இடைவெளி குறைவுதான்! இருப்பினும் அவன், நமது தாய்மண்ணை கையகப்படுத்திக் கொண்டு பயங்கர ஆயுதங்களுடன் இருக்கிறானே! அவனை நெருங்கி வெல்வது எளிதான காரியமா என முதலில் பெருமூச்சு விடும் வீரர்படை, முன்னேறுக! எனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டால், எந்த முரட்டு ஆயுதங்களும் எங்களைத் தடுத்திட முடியாது எனத் தோள் தட்டுகிறது!

ஆம்! அந்தக் கவிஞனின் எண்ணம் இறுதியாக ஈடேறுகிறது! எதிரியின் கரத்தில் இருந்த தற்காலிக வெற்றிக்கொடி கைப்பற்றப்படுகிறது!

உடன்பிறப்பே, என்றைக்கோ நடந்த யுத்தத்தையும் - இழந்த மண்ணை மீட்டிட இரஷ்யா வெகுண்டெழுந்ததையும் - இப்போது நினைவூட்டுவானேன் என்று கேட்கத் தோன்றுகிறதா?

கவிஞன் பொசுத்கோவின் அந்த வீரம் செறிந்த பாடலைப் படிக்கும் வாய்ப்பு கிட்டியது!

எவ்வளவுதான் இழப்பை ஏற்க நேரிட்டாலும், எஃகு உள்ளம் மட்டும் கொண்டிருந்தால் இறுதியில், வெற்றியை ஈட்ட முடியும் என்ற உறுதியை வழங்கும் கவிதையாக அது இருந்த காரணத்தால், நீயும் படித்திட வேண்டும் என்ற ஆவலில் - நான் பெற்ற உணர்வு நீயும் பெறுவாய் என்ற நம்பிக்கையில் - எடுத்தளித்துள்ளேன். அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு. க.

29-09-1983

1157. ஒரே ஒரு ஆணி கிடைக்காததால்...!

உடன்பிறப்பே,

ஒரே ஒரு ஆணி கிடைக்காததால் குதிரைக்கு, லாடம் அடிக்க முடியவில்லை. லாடம் அடிக்காததால் போர்வீரன், குதிரையின் மீது ஏறிச் சவாரி செய்ய முடியவில்லை. குதிரை வீரன் போகாததால் போரில், வெற்றி அடையமுடியவில்லை. போரில் வெற்றி அடையாததால் நாட்டை இழக்க நேரிட்டது... என்று ஒரு ஆங்கிலக் கவிதை கூறுகிறது. இப்படித்தான் இந்த அரசாங்க உத்தரவு ஆகிவிட்டது.

இவ்வாறு உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு மோகன் அவர்கள், ஒரு வழக்கில் தீர்ப்பு அளிக்கும்பொழுது குறிப்பிட்டிருக்கிறார்.

தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலத்திற்கருகே சின்னப்பரூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு ஆதி திராவிடமக்கள் இறந்துவிட்டால், சவத்தைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்ல பாதை சரிவர இல்லை.

அதற்குப் பாதை அமைப்பதற்காக அரசாங்கம், சில நிலங்களைக் கையகப்படுத்த முன்னறிவிப்பு கொடுத்து, அதன் தொடர்பான இதர நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. நிலங்களைக் கையகப்படுத்தும் சட்டத்தில் சில விதிவிலக்குகள் அளிக்கப் பட்டிருக்கின்றன.

அவற்றைக் கவனித்து உத்தரவு பிறப்பிக்கபட்டிருக்கு மேயானால், ஆதி திராவிடர்களுக்கென நில ஆர்ஜிதம் செய்ய அவசர நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அதில் ஏற்பட்ட ஒரு தவறின் காரணமாக, அந்த நில ஆர்ஜித உத்தரவே செல்லாது என்று நீதிபதி தீர்ப்பு அளித்துள்ளார்.

அரசின் நில ஆர்ஜித அறிவிப்பினால் பாதிக்கப்பட்டவர் எனப்படும் ஒருவர், அரசாங்க நடவடிக்கையை எதிர்த்து

உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார். அவசர விதிகளின்படி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதாக அரசாங்க உத்தரவில் எங்கும் கூறப்படவில்லை என்று அவர் வாதிட்டார்.

அந்த உத்தரவில் ஆதி திராவிட மக்களுக்காக நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறது என்ற வாசகம் எங்கும் காணப்படவில்லை. இதில் வேதனையான வேடிக்கை என்னவென்றால், அந்த உத்தரவு சம்பந்தமான கோப்பு பல அதிகாரிகளின் பார்வைக்குச் சென்று, அமைச்சர்கள் பார்வைக்கும் சென்று ஒரு சுற்றுப் பயணமே நடத்தியிருக்கிறது.

ஆனால் அந்தக் கோப்புகள் எதிலும், ஆதி திராவிடர் என்ற ஒரு வார்த்தையே இல்லை, எனவே அவசர முக்கியத்துவம் வாய்ந்த நில ஆர்ஜித உத்தரவு என்று கருதுவதற்கு மாறாக,ஒரு சாதாரண நில ஆர்ஜித உத்தரவு என்று கருத வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

ஆதி திராவிடர் என்ற அந்த ஒரு வார்த்தை மட்டும் உத்தரவில் இருந்திருந்தால், விதிவிலக்கைப் பயன்படுத்தி அரசின் உத்தரவின்படி, நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலத்தைக் கையகப்படுத்தும் காரியத்தைச் சுலபமாக முடித்திருக்க முடியும்.

எந்த அதிகாரியும், இதனைக் கவனித்து அந்த வார்த்தையைச் சேர்ப்பதற்கு முன்வரவில்லை. கோப்பில் கையெழுத்திட்ட அமைச்சரும், ஆதி திராவிடர் என்ற வார்த்தைக்கு முக்கியத்துவம் தராத காரணத்தால், நில ஆர்ஜித உத்தரவு முழுமையும் செல்லுபடியாகாது என்றாகிவிட்டது.

இந்த அடிப்படையில்தான் நீதிபதி அவர்கள் தீர்ப்பளித்து அந்த வார்த்தையை சேர்க்கத் தவறி விட்டதற்காக கடிந்து கொண்டும் இருக்கிறார் என்று பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது.

உடன்பிறப்பே,

அமைச்சர்கள் கோப்பு பார்க்கும் அழகும், அதிகாரிகள், இதுபோன்ற பிரச்சினைகளில் கவனம் செலுத்தும் அழகும் எப்படி இருக்கிறது பார்த்தாயா?

வேலைகளை பகிர்ந்து கொண்டு பணியாற்றுவதற்காகத்தான் இருபத்து நாலு மந்திரிகள் என்று முதலமைச்சர் விளக்கம்

கூறுகிறார்; வித்தாரம் பேசுகிறார்! கோப்புகளைப் படித்துப் பார்த்து கையெழுத்துப் போட அமைச்சர்களுக்கு நேரமும் இல்லை, நினைப்பும் இல்லை. பாவம், அவர்களுக்கு அவர்களது உள்கட்சிப் பிரச்சினைகளைப் பற்றி சிந்திப்பதற்கே நேரம் போதவில்லை.

அதனால்தான், ஒரே ஒரு ஆணி கிடைக்காததால் குதிரைக்கு, லாடம் அடிக்க முடியவில்லை. லாடம் அடிக்காததால் போர்வீரன், குதிரையின் மீது ஏறி சவாரி செய்ய முடியவில்லை. குதிரை வீரன் போகாததால் போரில், வெற்றி அடையமுடியவில்லை. போரில் வெற்றி அடையாததால் நாட்டை இழக்க நேரிட்டது.

நீதிபதி தீர்ப்பில் குறிப்பிட்ட இந்த வாசகம், நமது கண்ணோட்டத்தில் இந்த ஆட்சியாளரின் எதிர்காலத்தைப் பற்றிய கணிப்பாகவும் அமைந்திருக்கிறது.

அன்புள்ள,

மு. க.

30-09-1983

1158. காலிபுட்டிகள்! கணக்கற்ற கோடிகள்!

உடன்பிறப்பே,

பத்தேமுக்கால் இலட்சம் ரூபாய் சாராய லஞ்ச ஊழலை மூடி மறைப்பதற்காக, தனக்குத்தானே நியமித்துக்கொண்ட விசாரணைக் கமிஷனில் கலந்து கொண்ட வழக்கறிஞர்களுக்கு அரசாங்க செலவு மட்டும், ஐம்பது லட்சத்தை எட்டிப் பிடிப்பதாகத் தினகரன் ஏடு, செய்தி வெளியிட்டிருக்கிறது. அதில் தொகை சற்று ஏறத்தாழ இருக்கலாம். ஆனால் அரசாங்க சார்பிலும், அதைப்போலவே தனியார் சார்பிலும் பல லட்சங்கள் அந்தக் கமிஷன் விசாரணைக்கு அள்ளி இறைக்கப்பட்டிருக்கின்றது என்பதை, எத்தனையெத்தனை வழக்கறிஞர்கள் - எவ்வளவு பிரபலமான வழக்கறிஞர்கள் வாதிட்டார்கள் என்பதிலேயிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களோ ஏராளம்! பெரும்பாலான சாராயக் கலவைத் தொழிற்சாலைகள், பினாமிகள் பெயரால் உரிமம் பெற்றிருக்கின்றன என்ற ஆதாரங்கள், வருமான வரி இலாகா நடத்திய சோதனை குறித்த விவரங்களிலிருந்து, சட்டப் பேரவையிலேயே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து பலருக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதற்கும், சட்டப் பேரவையில் ஆதாரங்களைத் தொகுத்துக் காட்டினோம்.

இதுபோன்ற குற்றச்சாட்டுகளை எல்லாம் விசாரித்து உலகிற்கு உண்மையை அறிவிப்பதாகக் கூறித்தான் முன்னாள் நீதிபதி ராமமூர்த்தி அவர்களைக் கொண்டு கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டது. திடீரென்று ஒருநாள் நீதிபதி ராமமூர்த்தி அவர்களுக்கு உடல் நலமில்லை, அதனால் அந்த விசாரணைக் கமிஷனிலிருந்து, அவரை விடுவித்து விட்டோம் என்று அரசு அறிவித்தது.

தனக்கு உடல் நலமில்லை எனக் கூறி, ராமமூர்த்தியே விலகினாரா அல்லது அரசாங்கத்தால் விலக்கப்பட்டாரா என்று சட்டப் பேரவையில் எழுப்பிய கேள்விக்கு, அமைச்சர்கள், எந்தப் பதிலும் அளிக்கவில்லை.

ராமமூர்த்திக்குப் பதில் முன்னாள் நீதிபதி ராமபிரசாத் ராவ் அவர்களைக் கொண்டு அதே கமிஷன் தொடரத் தொடங்கியது. அந்தக் கமிஷனில் சட்டப் பேரவையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்துக்கும் விசாரணை நடைபெறும் என்றும், அமைச்சர்கள், அதிகாரிகள், சாராய வியாபாரிகள் அனைவருமே சாட்சிகளாக விசாரிக்கப்படுவார்கள் என்றும் நாடே எதிர்பார்த்தது. ஆனால், முன்னாள் ஐ.ஜி. மாணிக்கம் அவர்களின் உறவினர்கள் இருவரிடம், ஒரு சாராயக் கலவைத் தொழிற்சாலையைப் பெறுவதற்கு, பத்தேமுக்கால் லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கிய ஒரேயொரு குற்றச்சாட்டைப் பற்றித்தான் மேற்கண்ட மூவரும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டார்கள்.

அதே பத்தேமுக்கால் லட்சம் ரூபாயை வாங்கி வாயில் போட்டுக் கொண்டவர்களோ அல்லது அதற்கு மறைமுகமாக உதவி புரிந்த அமைச்சர்களோ கமிஷன் முன்னால் விசாரிக்கப்படவில்லை. பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டிருந்தும், பத்தேமுக்கால் லட்சம் ரூபாய் லஞ்ச ஊழல் பற்றிய இந்த ஒரேயொரு குற்றச்சாட்டைப் பற்றி மட்டும்தான் கமிஷனில் விசாரணை நடைபெற்றது. அதிலும் அரைக் கிணறுதான் தாண்டப்பட்டது. குற்றச்சாட்டுக்குத் தொடர்புடைய அனைவரும் விசாரிக்கப்படவில்லை.

சட்டப் பேரவையில் ஆதாரங்களோடு எடுத்து வைத்த மற்றொரு குற்றச் சாட்டையும், நான் நினைவூட்ட விரும்புகிறேன். 1983-ஆம் ஆண்டு தொடக்கத்தில் மாதம் ஒன்றுக்கு எண்பத்து நாலு லட்சம் லிட்டர் சாராயம் விற்பனை ஆவதாக முதலமைச்சரே சட்டப் பேரவையில் தெரிவித்தார். எண்பத்துநாலு லட்சம் லிட்டர் சாராயத்தை அடைப்பதற்கு ஒரு கோடியே பன்னிரண்டு லட்சம் பாட்டில்கள் தேவை என்றும், கலவை ஆலை நடத்துகின்றவர்களுக்கு மொத்தத்தில் பாட்டில் ஒன்றுக்கு ஒன்றரைரூபாய் வீதம் மாதம் ஒன்றுக்கு ஒரு கோடியே அறுபத்து எட்டு லட்சம் ரூபாய் லாபம் கிடைக்கும் என்றும், அதிலே பாதித் தொகையான எண்பத்து நான்கு லட்சம் ரூபாய் மாதந்தோறும் மூலவருக்குப் போய்ச் சேருகிறது என்றும் குற்றம் சாட்டியிருந்தேன்.

அதைத் தொடர்ந்து நான் பேசும்பொழுது, பாட்டில் விலை இரண்டு ரூபாய் என்று கலவை ஆலை அதிபர்களுக்கு அரசாங்கம் விலை நிர்ணயித்திருக்கிறது; அந்த அளவிற்கு அவர்களுக்கு பாட்டில் அடக்கம் ஆகாது என்றும், ஒருமுறை சில்லறை வியாபாரிகளிடம் விற்ற பாட்டிலை குறைந்த விலைக்கு வாங்கி அதிலேதான் மீண்டும் மீண்டும் ஆலை அதிபர்கள், சாராயத்தை நிரப்பி விற்பதால் இரண்டு ரூபாய் என்று அரசாங்கம் அவர்களுக்கு அனுமதி அளித்திருப்பதன் பின்னால் எந்த அளவிற்கு ஊழல் இருக்கிறது என்றும், அந்த பாட்டிலுக்காக அனுமதித்திருக்கும் இரண்டு ரூபாயில் மட்டும் பாட்டில் ஒன்றுக்கு அரை ரூபாய் வீதம் மாதந்தோறும் பட்டுவாடா நடைபெற வேண்டுமென்று பேரம் நடைபெற்றிருக்கிறது என்றும், நான் பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன். அது குறித்தெல்லாம் இதுவரை, அரசுத் தரப்பிலிருந்து எந்தவிதமான விளக்கமும் வெளியிடப் படவில்லை.

சில நாட்களுக்கு முன்பு சாராய சில்லறை வியாபாரிகள் ஒன்றுகூடி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானம் வருமாறு :-

சாராயம் நிரப்பி வரும்போது பாட்டிலுக்கு மட்டும் ஒரு ரூபாய் தொண்ணூறு காசு என்று நிர்ணயித்துவிட்டு, காலி சாராய பாட்டிலை ஒரு ரூபாய்க்கு ஆலை அதிபர்கள் திருப்பியெடுக் கிறார்கள். அதிலே தொண்ணூறு காசு நஷ்டம் ஏற்படுகிறது. மேலும், அதை எழுபத்தைந்து பைசாவாகக் குறைப்பதாகக் கலவைத் தொழில் அதிபர்கள் முடிவெடுத்தால், சில்லறை வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஒருமுறை சாராயம் அடைக்கப்பட்ட பாட்டில்கள்தான் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுவதால், இந்த விலை குறைப்பு தேவையற்றது.

உடன்பிறப்பே,

இந்தத் தீர்மான வாசகத்தின் மூலம் தெரிவதென்ன?

அரசாங்கம், ஒரு பாட்டிலுக்கு இரண்டு ரூபாய் என்று விலையை நிர்ணயித்திருந்தாலும், ஒரு ரூபாய் தொண்ணூறு காசு என்றுதான் சில்லறை வியாபாரிகளுக்கு பாட்டில்கள் விற்கப்படுகின்றன. இந்த விலை பாட்டில்களுக்கு மட்டுமே. சாராயம் அடைக்கப்பட்டால் தனி விலை. இப்படி ஒரு ரூபாய்

தொண்ணூறு காசுக்குக் கொடுத்ததை சாராயக் கலவை அதிபர்கள் திரும்பப் பெறும்போது, அதே ஒரு ரூபாய் தொண்ணூறு காசு கொடுத்துச் சில்லறை வியாபாரிகளிடம் அந்தப் பாட்டில்களை வாங்குவதில்லை. தொண்ணூறு பைசா குறைத்துக் கொண்டு இதுவரை ஒரு ரூபாய் வீதம்தான் அந்த பாட்டில்களை வாங்கி வந்தார்கள். முதல்நாள் கொடுத்த அதே பாட்டிலை அதிபர்கள், ஒரு ரூபாய்க்கு திரும்ப வாங்குவதின் மூலம் மட்டும் தொண்ணூறு காசு இலாபம் அடைகிறார்கள். இந்தத் தொகையும் அதிபர்களுக்கும், மூலவருக்கும் இடையே பங்கு பிரிக்கப்படுகின்ற தொகையாகும்.

இப்போது அந்த ஒரு ரூபாயையும் எழுபத்தைந்து பைசாவாக குறைந்துவிட்டால், ஒரு பாட்டிலுக்கு அதிபர்களுக்குக் கிடைக்கின்ற இலாபம் ஒரு ரூபாய் பதினைந்து காசு.

கடந்த ஆண்டைவிட இப்போது அதிகமாக சாராயம் விற்பனை ஆகிறது. மதுவிலக்குத் துறை ஆணையாளர் அலுவலக வாசலில் கடந்த மாதம் கலவை ஆலைகளிலிருந்து விற்பனை செய்யப்பட்ட சாராயத்தின் அளவு ஒருகோடியே எட்டு லட்சம் லிட்டர் என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சாராயத்தை 750 எம்.எல். கொண்ட பாட்டில்களாக அடைக்கும்போது மாதம் ஒன்றுக்கு விற்பனையாகும் சாராய பாட்டில்களின் எண்ணிக்கை ஒருகோடியே நாற்பத்து நான்கு லட்சமாகும்.

இந்தக் கணக்கின்படி, சாராய பாட்டில்கள் மூலமாக மாதந்தோறும் கலவை ஆலை அதிபர்களுக்கு மொத்தமாகக் கிடைக்கக்கூடிய இலாபம், இரண்டு கோடியே ஐம்பத்து இரண்டு லட்சம் ரூபாய். இதில் ஏற்கெனவே நடந்து முடிந்த பேரத்தின்படி மூலவருக்கு, ஒரு கோடியே இருபத்து ஆறு இலட்சம் ரூபாய் மாதந்தோறும் போய்ச் சேருகிறது.

இந்தக் கூட்டுக் கொள்ளை பற்றி சட்டசபையிலே பேசப்பட்டது மாத்திரமல்ல, நீதி விசாரணைக் கமிஷன் முன்பும் வழக்கறிஞர்கள் சுட்டிக்காட்டியிருப்பதோடு அதுகுறித்தும் விசாரணை நடைபெற வேண்டுமென்றும், அதற்குரிய சாட்சிகளை விசாரிக்க வேண்டுமென்றும் கோரியிருக்கிறார்கள். ஆனால் அந்தக் கோரிக்கைகளுக்கும், குற்றச்சாட்டுகளுக்கும் சட்டமன்றத்திலும் பதிலளிக்கப்படவில்லை. விசாரணைக் கமிஷனும் அதுகுறித்து எதுவும் பேசாமல் மௌனமாக இருந்து விட்டது.

உடன்பிறப்பே,

காலி பாட்டில்கள் மூலம் இப்படிக் கோடிக்கணக்கான ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது என்பதைச் சட்டப் பேரவையில் நான், முதலில் சுட்டிக்காட்டியபோது, ஏ, அப்பா, அப்படியும் இருக்குமா? அவ்வளவு தொகை இருக்குமா? என்று பலர் வியப்பு தெரிவித்திருக்கக்கூடும். இப்போது சாராய சில்லறை வியாபாரிகள் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைப் படித்துப் பார்த்தால், ஒவ்வொரு பாட்டிலுக்கும் சாராயக் கலவை அதிபர்களுக்கும், மூலவருக்கும் எவ்வளவு ரூபாய் மறைமுகமாக இலாபம் போய்ச் சேருகிறது என்கின்ற உண்மை தெளிவாகும் என்று நம்புகிறேன்.

பாட்டில்களில் மட்டுமே இந்த கொள்ளை! இதில் அடைக்கப்படுகின்ற சாராயத்திற்குத் தரப்பட்டுள்ள பினாமி தொழிற்சாலை உரிமங்களில் இன்னும் எத்தனை கோடியோ கொள்ளை! கொள்ளை!

அன்புள்ள,

மு. க.

06-10-1983

1159. இனியாவது திருந்துவார்களா?!

உடன்பிறப்பே,

பெரிய பதவியில் இருந்து விட்டால் எதை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் மாற்றிப் பேசலாம் என்பதற்கு நமது முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., உதாரண புருஷராக விளங்கிக் கொண்டிருக்கிறார். 1963-இல் மறைந்துவிட்ட கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அண்ணன் ஜீவா அவர்கள், 1964-இல் எம்.ஜி.ஆர். தனது எம்.எல்.சி. பதவியை ராஜினாமா செய்தபோது, அவரைச் சந்தித்து ராஜினாமா செய்திருக்க வேண்டாம் என்று அறிவுரை கூறினார் என்பதிலேயிருந்து - அண்மையில் பட்டாபிராமன் படத் திறப்புவிழா நிகழ்ச்சி வரையிலே இப்படி எத்தனையோ கதைகள்!

இப்பொழுது ஒரு புதுக்கதை! நேருவே, முட்டாள்தனம் என்று அடிக்கடி கூறவில்லையா? அதைப் போலத்தான் வெங்கட்ராமனும், வாய் தவறிச் சொல்லி விட்டார் என்று வக்காலத்து வாங்கிப் பேசியிருக்கிறார் எம்.ஜி.ஆர்.

நான் வாய் தவறி பேசிவிட்டேன் எனக் கூறி இதுவரையில் வெங்கட்ராமன் கூட வருத்தம் தெரிவிக்க முன்வரவில்லை. ஆனால், அவருக்காக பரிந்து கொண்டு முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., நீண்டதோர் விளக்கத்தை அளித்திருக்கிறார். அந்த விளக்கத்திலேயே பண்டித நேரு அவர்கள், முட்டாள்தனம் என்று கூறியதற்காக அப்போது கறுப்புக்கொடி காட்டப்பட்டது என்பதையும் முதலமைச்சர் நினைவூட்டியிருக்கிறார்.

வாய் தவறிப் பேசிய நேருவுக்கே கறுப்புக்கொடி காட்டிய தமிழகத்தில், இப்போது வாய் நீளம் காட்டிய வெங்கட்ராமன் அவர்களுக்கும், கறுப்புக்கொடி காட்ட வேண்டியதுதானே முறை!

இதைத்தானே முதலமைச்சருடைய விளக்கம் தமிழக மக்களுக்குச் சுட்டிக் காட்டுகிறது.

ஆனால் விளக்கத்தை விரிவாகத் தந்த எம்.ஜி.ஆர்., பாதுகாப்பு அமைச்சர் பேசிய இவற்றையெல்லாம், தவறான

கருத்துகளோடு வெறுப்பினால் யாரையோ தாக்க வேண்டுமென்று வெளியிடுவதாகக் கருதுவது, இப்போதுள்ள சூழ்நிலைக்குச் சரியல்ல. ஏனென்றால் இலங்கைத் தமிழர் பிரச்சினையில், எல்லோரும் ஒரே கருத்துடன்தான் இருக்கிறோம். இப்படிக் கருத்துக்கள் வருவதாக தெரிந்தால் நாம் பல பிரிவினர்களாக இருப்பதாகச் சொல்லி விடுவார்கள். இலங்கையில் உள்ள தமிழர்களுக்குப் பாதுகாப்பும், உத்திரவாதமும், உரிமைப் பொறுப்பும் கிடைக்க வேண்டுமென்று நாமனைவரும் கருதுகிறோம். இந்நிலையில் மாறுபாடான கருத்துகளைச் சொல்லி, நம்மை நாமே பலவீனப்படுத்திக் கொள்ளக்கூடாது என விரும்புகிறேன் என்றும் கூறி, பாதுகாப்பு அமைச்சருக்கு, ஒரு பாதுகாப்பு கேடயமாகத் தன்னையாக்கிக் கொண்டிருக்கிறார்.

அதாவது வெங்கட்ராமன், முட்டாள்தனம் என்று சொன்னதைப் பொருட்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். அதற்கெல்லாம் பதில் சொல்லி, இலங்கையில் உள்ள சிங்களவர்களுக்கு நேராக நம்மை நாமே பலவீனப்படுத்திக் கொள்ளக்கூடாது என்றும் உபதேசம் புரிந்திருக்கிறார்.

நாம் நமக்கிடையே கருத்து வேறுபாடு கொண்டு, அதன் காரணமாக இலங்கைச் சிங்களவர்களுக்கு முன்னால் நம்மை நாமே பலவீனப்படுத்திக் கொள்ளக்கூடாது என்று எம்.ஜி.ஆர். கூறியுள்ள அறிவுரை, நமக்கும் உடன்பாடான ஒன்றுதான். ஆனால், முதலமைச்சருக்கு இன்று திடீரென்று வந்துள்ள ஞானோதயம், இதற்கு முன்பு எப்படியெல்லாம் கோணல்மாணலாகத் திசைகெட்டு நின்றது என்பதை மறந்து விடுவதற்கில்லை.

ஆகஸ்ட் மாதம் 4-ஆம் தேதி தி.மு.கழகத்தின் சார்பில், இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைக்காக மத்திய அரசு அலுவலகங்களின் முன்னால் சென்னையிலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் அமைதியான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கையில் இனப்படுகொலைக்கு ஆளாகிறபோது மத்திய அரசு, காட்டுகின்ற மெத்தனத்தைக் கண்டித்து அந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதுமட்டுமல்லாமல் இலங்கையில் தமிழர்களுக்கெதிராகக் கொண்டு வரப்பட்ட ஒரு கொடுமையான சட்டத்தை எதிர்த்து தி.மு.கழகத்தின் சார்பில் தமிழகமெங்கும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டன. தமிழகமெங்கும் லட்சக்கணக்கானோர் கலந்து

கொள்ளக்கூடிய அளவுக்கு கழகம் நடத்திய அந்த ஆர்ப்பாட்டம் குறித்து, எம்.ஜி.ஆருடைய கட்சி ஏடான அண்ணா என்ற பத்திரிகையில், எப்படிச் செய்தி வெளியிடப்பட்டது தெரியுமா?

தி.மு.க. நடத்திய ஆர்ப்பாட்டம் புஸ்வாணமானது. மக்களும் இல்லை; தொண்டர்களும் இல்லை; சென்னையில் நான்கு இடங்களிலும் பங்கேற்ற தி.மு.க. தொண்டர்கள் ஆயிரம் பேரைக் கூட எட்டாத அவல நிலை இருந்தது. பொதுமக்கள் தி.மு.க. ஆர்ப்பாட்டத்தைச் சட்டை செய்யவில்லை. வேடிக்கை கூடப் பார்க்காமல் புறக்கணித்தார்கள்.

இவ்வாறு எம்.ஜி.ஆரின் பத்திரிகையில், கொட்டை எழுத்தில் தலைப்புகளும், செய்திகளும் வெளியிடப்பட்டன.

இந்தச் செயல், இலங்கை சிங்களவர்களுக்கு முன்னால் நம்மை நாமே பலவீனப்படுத்திக் கொள்கிற ஒன்றா? இல்லையா? என்பதை எம்.ஜி.ஆர்.தான் சொல்ல வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக, தமிழக மக்களின் எதிர்ப்பைக் காட்டுவதற்கு அடையாளமாக நானும், பொதுச்செயலாளர் பேராசியர் அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும், சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியையும் ராஜினாமா செய்தோம். அப்போது எம்.ஜி.ஆர். கட்சியினுடைய அமைச்சர்கள் அந்தப் பதவி விலகலைப் பற்றி எவ்வளவு தரக்குறைவாகப் பேசினார்கள்? இன்னமும் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எம்.ஜி.ஆருக்குத் தெரியாதா? பதவி விலகிய ஒரு நிகழ்ச்சியைப் பரிகசித்து பேசுவது நம்மை நாமே பலவீனப்படுத்திக்கொள்ளக்கூடிய செயலா? அல்லவா? என்பதை முதலமைச்சர் எம்.ஜி.ஆர். விளக்குவாரா?

இலங்கைத் தமிழரைப் பாதுகாக்கத் தவறிவிட்ட மத்திய அரசைக் கண்டித்து, ஆகஸ்ட் 5-ஆம் நாள் தி.மு.கழகம் நடத்தவிருந்த ரயில் நிறுத்தப் போராட்டத்தைப் பற்றி, சேலத்தில் நடைபெற்ற ஒரு திருமணத்தில் எம்.ஜி.ஆர். என்ன பேசினார்?

ரயில் நிறுத்தப் போராட்டத்தின் மூலம் கலவரம் ஏற்படுத்தக் கருணாநிதி திட்டமிட்டார் என்று அவர் பேசி, அது அவருடைய கட்சிப் பத்திரிகையில் அப்போதே வெளி வந்திருக்கிறதே! இந்தப் பேச்சு நம்மை நாமே பலவீனப்படுத்திக் கொள்கிற நிலையை ஏற்படுத்தாதா?

இலங்கைத் தமிழர்களுக்குத் தனி ஈழம் அமைத்து கொடுக்க மத்திய அரசு உடனடியாக படையெடுத்துச் செல்லுமானால், இன்னும் பத்தாண்டு காலத்திற்கு தி.மு.கழகம் ஆட்சிக்கு வருகின்ற முயற்சியில் ஈடுபடாது என நான் கடற்கரை கூட்டத்தில் ஆகஸ்ட் 28-ஆம் நாள் பேசினேன். அதுகுறித்து நிருபர்களிடம் பேசிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., கேலியும், கிண்டலும் செய்தாரே! அப்போது நம்மை நாமே பலவீனப்படுத்திக் கொள்ளக்கூடாது என்ற எண்ணம் எம்.ஜி.ஆருக்கு ஏன் வரவில்லை?

இலங்கை இனப் படுகொலையைக் கண்டித்து, விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐ.நா. மன்றத்தைக் கோரி தாய்த் தமிழகத்திலே உள்ள தமிழர்களின் ஒரு கோடி கையெழுத்துகளைப் பெற தி.மு.கழகம் முயற்சிகளை மேற்கொண்டிருந்த போது, முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., திருச்சியில் நடைபெற்ற முத்தரையர் மாநாட்டில் அந்தக் கையெழுத்து இயக்கத்தைக் கேலி செய்யும் வகையில், ஒரே நபர் பத்து கையெழுத்துகளைப் போடுகிறார்கள் என்று சிறிதளவுகூட நாகரிகமில்லாமல் பேசினாரே! அந்தப் பேச்சு நம்மை நாமே பலவீனப்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதற்கு அடையாளமா?

இவற்றுக்கெல்லாம் எம்.ஜி.ஆர். பதில் கூறுவாரா?

உடன்பிறப்பே,

இதுபோல் பலமுறை எம்.ஜி.ஆர். பேசி அதற்கு உடனடியாக நாமும் பதிலளித்து, அதன் தொடர்பாக நாம் எழுப்பியுள்ள எந்த கேள்விகளுக்கும் இதுவரையில் எம்.ஜி.ஆர். பதில் கூறியதில்லை.

பரவாயில்லை. இனிமேலாவது நமக்கு நாமே பலவீனப்படுத்திக் கொண்டு, சிங்களவர்களுக்குத் தமிழர்களைக் காட்டிக் கொடுக்கும் காரியத்தில் யாரும் இறங்காமல் இருந்தால் நமக்கு மகிழ்ச்சிதான்!

இலங்கையில் தனித் தமிழ் ஈழம் உருவாக வேண்டும் என்பதை, இதற்குப் பிறகாவது எம்.ஜி.ஆர். ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறேன். இலங்கைக்குப் படை அனுப்ப வேண்டும் என்று ஒரு அமைச்சர் வீராவேசமாகப் பேசுகிறார்! அதே அமைச்சரவையில் உள்ள இன்னொரு அமைச்சர், இலங்கைக்குப் படை அனுப்பினால், அவன் திரும்ப நம்மீது குண்டு போடமாட்டானா என்று ஆவேசமாகக் கேட்கிறார். இந்த இரண்டு வகையான

அமைச்சர்களும், எம்.ஜி.ஆர். அவர்களுடைய அமைச்சரவையில் தான் இருக்கிறார்கள்.

இப்படி அமைச்சர்கள் தங்களுக்குத் தானே மாறுபாடான கருத்துகளைக் கூறிக்கொண்டு, பலவீனத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் இருக்க எம்.ஜி.ஆர்., ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பார் என்று எதிர்பார்க்கலாமா? அமைச்சர்கள் அனைவரும் ஒரே குரலில்தான் பேச வேண்டும். மாறுபட்ட குரலில் பேசி நமக்கு நாமே நம்முடைய பலவீனத்தை வெளிப்படுத்திக் கொள்ளக்கூடாது என்று அமைச்சர்களுக்கு எம்.ஜி.ஆர்., அறிவுரைகூறி அனைவரும் இணைந்து, இந்திய அரசே, இலங்கைக்குப் படைகளை அனுப்பு! என்று ஒரே குரலில் ஒலியெழுப்புவார்களா?

தமிழ் ஈழம் வேண்டுமென்று ஒரு அமைச்சரும், வேண்டாமென்று இன்னொரு அமைச்சரும் பொது நிகழ்ச்சிகளில் பேசுவதை இனியாவது நிறுத்திக் கொண்டு தமிழ் ஈழம் தேவை என்பதை, எம்.ஜி.ஆர். உள்ளிட்ட எல்லா அமைச்சர்களும் வலியுறுத்துவார்களா?

நான் எழுப்பும் இந்த ஐயப்பாடுகளுக்கு எந்தப் பதிலுமே அளிக்காமலே, தொடர்ந்து நமக்கு நாமே நம்முடைய பலவீனத்தைக் காட்டிக் கொள்ளும் செயலில் எம்.ஜி.ஆரும், அவரது கட்சியினரும் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்களா?

உடன்பிறப்பே,

இவைகளை உன்னுடைய சிந்தனைக்கு வைக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

07-10-1983

1160. அக்டோபர் 11 - அணி திரள்வீர்!

உடன்பிறப்பே,

இலங்கையில் தமிழர்கள் படும் இன்னல்களைக் கேட்டுத் தாய்த்தமிழகம் கொந்தளிப்பதில் உள்ள உணர்வுகளை, இந்தியப் பிரதமர், அறவே புறக்கணித்து விட முடியவில்லை. அதனால்தான் காலங்கடந்தாவது, அங்கொன்றும் இங்கொன்றுமாக இலங்கைப் பிரச்சினை குறித்து இரண்டொரு வார்த்தைகளை உதிர்க்கிறார்கள். ஐக்கியநாடுகள் சபையில் நமது பிரதமர், இலங்கை இனப்படுகொலை குறித்துக் கடுமையான கண்டனத்தைத் தெரிவிப்பார் என்று எதிர்பார்த்தோம். ஒரு சொல்கூட அவரது பேச்சில் இடம் பெறவில்லை. அதுமட்டுமல்ல, இலங்கையிலிருந்து வந்த அமைச்சர், ஐ.நா. மன்றத்தில் இலங்கைப் பிரச்சினையை எழுப்பித் தமிழ் இனப் படுகொலையை நியாயப்படுத்திய பிறகும் இந்தியாவின் சார்பில் ஐ.நா. மன்றத்தில் யாரும் வாய் திறக்கவில்லை. இந்தியப் பாராளுமன்றத்திலேயே தீர்மானம் நிறைவேற்ற முன்வராதவர்கள், ஐ.நா. மன்றத்தில் கண்டனக் குரல் எழுப்புவார்கள் என எண்ணியது நமது தவறாகக்கூட இருக்கலாம்!

இன்னமும் நாம் சொல்லுகிற குற்றச்சாட்டு - இலங்கையில் கடந்த ஜூலை மாதம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டு, தமிழச்சிகள் கற்பழிக்கப்பட்டு, தமிழர்களின் உடைமைகள் சூறையாடப்பட்டபோதே, இந்திய ராணுவம், இலங்கையை நோக்கிப் புறப்பட்டிருந்தால் இலங்கைத் தமிழர்களுக்கு விமோசனம், ஒரு நொடியில் கிடைத்திருக்கும்.

பேச்சுவார்த்தைகள் என்ற பெயரால் பிரச்சினையை ஆறப்போட்டு - இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே, அந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ளக்கூடிய வசதியான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ள இந்திய அரசே காரணமாகி விட்டது.

தனது ஆதிக்கக்கொடியை இந்தியாவுக்கு மிக அருகாமையிலேயே பறக்க விடுவதன் மூலம், கிழக்கு ஆசிய நாடுகளை மிரட்டிக் கொண்டிருக்கலாம் என அமெரிக்க ஏகாதிபத்தியம் கருதுகிறது.

அதற்குத்தான் அதன் கழுகுக்கண்கள் திரிகோணமலையை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கின்றன! திரிகோண மலை, இலங்கையில் இருக்கிறது! அதாவது அங்குள்ள தமிழர்கள் கோரும் தமிழ்ஈழப் பகுதியில் இருக்கிறது! தமிழ்ஈழம் விடுதலை பெற்றால் திரிகோணமலையை அமெரிக்கா, தனது தளமாக ஆக்கிக்கொள்ள இயலாது!

இந்த நிலையை, சுட்டிக்காட்டித்தான் இலங்கை அரசு, அமெரிக்காவின் துணையை நாடுகிறது. திரிகோணமலையை உனது தளமாக்கிக் கொள்ள எனக்குத் தடையில்லை! இங்குள்ள தமிழர்களுக்குச் சாதகமாக இந்தியா நடவடிக்கை எடுத்தால், அதைச் சமாளித்திட வேண்டியது உனது பொறுப்பு என்று இலங்கை, அமெரிக்காவிடம் மண்டியிட்டு நட்புப் பிச்சை கேட்கிறது!

பழம் நழுவிப் பாலில் விழுந்தது மட்டுமல்லாமல், இரண்டும் சேர்ந்து வாயிலும் விழுந்தது போன்ற மகிழ்ச்சி அமெரிக்காவுக்கு!

அமெரிக்கத் தளமாகத் திரிகோணமலை அமைவதால், அதற்குக் கைமாறாக, ஆயுதத் தளவாடங்களை இலங்கைக்குத் தருவதற்கு அமெரிக்காவுக்குக் கசக்குமா என்ன?

இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத் தமிழர்களை, மலைத்தோட்டத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக மட்டுமல்ல! இந்தியாவுக்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்தையும் தவிர்த்துக் கொள்ள வேண்டிய முன்எச்சரிக்கை நடவடிக்கை இந்தியாவுக்குத் தேவை! அந்த எச்சரிக்கையான நடவடிக்கை, திரிகோணமலையை அமெரிக்காவின் கைக்குப்போகாமல் தடுப்பதில்தான் இருக்கிறது!

அதற்கு ஒரே வழி, திரிகோணமலை, தமிழ்ஈழத்துக்குச் சொந்தமானதால் - தமிழ்ஈழ விடுதலைக்கு, உரிய நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்வதுதான்!

தமிழ்ஈழம் இங்கிருந்து யாரோ எழுப்புகிற குரல் அல்ல! பல்லாண்டுகளாகக் கொடுமைப் பள்ளத்தில் ஆழ்த்தப்பட்டு,

விடுதலை தவிர வேறு மார்க்கமில்லை! எனக் கிளர்ந்தெழுந்துள்ள இலங்கைத் தமிழர் தலைவர்களும், விடுதலை வேங்கைகளும் ஆர்த்திடும் முரசமாகும்!

இவ்வளவு பெரிய - பயங்கரமான இனப் படுகொலை நடைபெற்ற பிறகு, இனியும் எப்போது, எப்படி வெடிக்குமோ என்று எதிர்பார்க்கப்படுகிறபோது - இலங்கைத் தமிழர் கோரும் தமிழ்ஈழத்தை நாமும் ஆதரிக்கிறோம்! ஆம்! அதைத் தவிர, அங்குள்ள தமிழர்க்கு இனி வாழ்வில்லை!

இதோ, சிங்கள அமைச்சர்கள் வெளிப்படையாகவே அறிவித்துத் தமிழர் வாழும் பகுதிகளில், சிங்களவர் குடியேற்றம் மின்னல் வேகத்தில் நடைபெறுகிறது! நாற்பதாயிரம் சிங்களவர்களை அரசாங்க லாரிகளில் ஏற்றிக்கொண்டு, மட்டக்களப்புக்குச் சென்று, அங்கு தமிழர்களுக்காக இருந்த அகதி முகாம்களில் குடியேற்றியுள்ளனர் என்ற செய்தியை, இலங்கைத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் திரு. சிவசிதம்பரம், கூறும்போது நமது நெஞ்சு நெருப்பாகிறது!

தமிழர்களின் வீடுகளில் சிங்களவர் குடியேற்றம்! அவர்களது நிலங்களை சிங்களவர் ஆக்கிரமித்துக் கொள்கின்றனர்!

தமிழர் பெரும்பாலோர் வாழ்கின்ற இடம் என ஒன்றில்லை என்று ஆக்கிடவே, இந்தக் குடியேற்றங்கள் இலங்கை அரசினால் தூண்டப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றன!

எனவே, தமிழர்களைப் பூண்டோடு அழிக்க - இலங்கை அரசு, தீவிரமாகத் திட்டம் தீட்டிவிட்டது!

ஒன்று, தமிழ்ஈழத்துக்குச் சொந்தமான திரிகோணமலையை அமெரிக்காவுக்குத் தாரை வார்த்து அதன் உதவியைப் பெறுவது!

இரண்டு, தமிழர் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றி சிங்கள ஆதிக்கத்தைப் பலப்படுத்தி - தமிழ்ஈழம் என்ற பிரச்சினையே எழாமல் செய்வது!

இலங்கை அரசின் இந்த இரண்டு நடவடிக்கைகளையும் கண்டிக்க, சென்னை மாவட்ட தி.மு.கழகம், போர்க்கோலம் கொள்கிறது!

சென்னை மாவட்ட செயலாளர் தம்பி டி.ஆர். பாலு, தலைமைக் கழக அனுமதியுடன் போர் முரசு கொட்டியிருக்கிறார்!

அக்டோபர் 11-ஆம் நாள், செவ்வாய்க்கிழமை காலை முதல், பல அணிகளாகச் சென்று சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதுவர் அலுவலகத்தின் முன்னே, கழக உடன்பிறப்புகள், அறப்போர் மறியலில் ஈடுபடுவர்!

தமிழ்ஈழத்துக்குச் சொந்தமான திரிகோணமலையை - அமெரிக்காவுக்குத் தாரை வார்க்காதே!

இலங்கையில் தமிழர் பகுதிகளில் - சிங்களவரைக் குடியேற்றாதே!

இந்த இரண்டு முழக்கங்களும், இலங்கை அரசின் செவிப்பறைகளைக் கிழிக்கட்டும்!

இந்திய அரசின் தூக்கத்தைக் கலைக்கட்டும்!

ஏகாதிபத்திய அமெரிக்காவுக்கு ஓர் எச்சரிக்கையாக அமையட்டும்!

அன்புள்ள,

மு. க.

09-10-1983

1161. புறநானூற்றுப் புலியே புறப்படு!

உடன்பிறப்பே,

இலங்கை மந்திரி அமீது என்பார், ஐ.நா. மன்றப் பொதுச்செயலாளரிடம் இலங்கைப் பிரச்சினை குறித்துத் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பையும், குமுறலையும் பற்றிப் புகார் செய்துள்ளாராம்!

இது எப்படியிருக்கிறது பார்த்தாயா? நாள்தோறும் தமிழர்களைக் கொன்று குவித்த பாதகர்கள் - தமிழ்ப் பெண்ணின் கற்பைச் சூறையாடிய கயவர்கள் - சிறைக் கொட்டடிகளில் பூட்டப்பட்டிருந்த தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் போன்ற ஐம்பதுக்கு மேற்பட்ட விடுதலை வீரர்களைக் கண்டதுண்டமாக்கி, கண்களைத் தோண்டி, நாக்கையறுத்துக் குருதி குடித்துக் கும்மாளம் போட்ட கொடியவர்கள் - கர்ப்பவதியின் வயிற்றைக் கிழித்து கருவில் இருந்த சிசுவை எடுத்து, சிதறுகாய் போலத் தெருவிலே நொறுக்கிய சண்டாளர்கள் - ஐ.நா. மன்றத்துச் செயலாளரிடம் அழுது புலம்புகிறார்களாம்!

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து, உடனடியாக இராணுவத்தை அனுப்புமாறு இந்திய அரசை வலியுறுத்திய இயக்கத் தலைவர்கள் மீதெல்லாம் ஒரு தாக்குதல்!

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசாங்கத்துக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து வருகிறார் என்று ஒரு பாராட்டு!

இந்த இரண்டு காரியங்களையும் இலங்கை அமைச்சர் அமீது, ஐ.நா. சபைக்கு அளித்துள்ள அறிக்கையில் திறம்படச் செய்துள்ளார்.

என் தமிழன் பிணம், கடலில் மிதக்கும் - அதைக் கண்டும் காணாமல் நான் இருக்க வேண்டுமா?

பொட்டிழந்து, பூவிழந்து, மஞ்சளிழந்து, மாங்கல்யமிழந்து - என் தமிழ்ச் சகோதரி இலங்கை மண்ணில் நின்று கதறுவாள்! அந்த ஓலத்தைக் காதில் போட்டுக் கொள்ளாமல், நான், இங்கே நடமாட வேண்டுமா?

தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரின் உள்ளத்திலும், உணர்ச்சி வெளிப்பாடாக இந்தக் கேள்வி எழுகின்ற காரணத்தினால்தான், தமிழகம் புயல் பூமியாகக் காட்சி தருகிறது!

இலங்கைக்குப் படையைப் அனுப்பச் சொல்லி நாடாளுமன்றத்திலே பேசுகிறார்கள்! இந்திய அரசு படையை அனுப்ப வேண்டுமென்று மக்களிடத்திலே பிரச்சாரம் செய்கிறார்கள்! இதுவும் இலங்கை அமைச்சர் அமீது அவர்கள், ஐ.நா.வுக்கு அனுப்பியுள்ள புகார்தான்!

ஆமாம்! படையை அனுப்பச் சொல்லிக் கேட்டோம்! இப்போதும் கேட்கிறோம்! அப்போதே படை அனுப்பப்பட்டிருந்தால் தமிழ் ஈழம் உருவாகியிருக்கும்! தமிழர்கள் இலங்கையில் நித்தநித்தம் செத்துக் கொண்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்காது!

ஐ.நா. மன்றத்துக்குப் புகார் அனுப்புகிற இலங்கை அரசு, இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் நாள்தோறும் சிங்களவர்களைக் குடியேற்றுகிற மர்மம் என்ன? தமிழன் என்கிற உணர்வையே தரை மட்டமாக்கிவிடத்தானே!

சிங்கள வெறியர்களால் சுடப்பட்டு விழுகிற தமிழர்களின் பிணங்களைப் பரிசோதனைக்குக் கூட அனுப்பாமல், அவர்களின் உறவினர்களிடம் கூட ஒப்படைக்காமல் - சுட்டுச் சாம்பலாக்கி விடலாமென்று சட்டமே போட்டுக் கொண்டு செயல்படுத்தி வருகிறார்களே! இந்தக் காட்டுமிராண்டித்தனத்திற்கு அரசாங்கம் என்று பெயரா?

அமெரிக்காவுக்குத் திரிகோணமலையைக் கேந்திரத் தளமாகத் தாரை வார்த்துவிட்டு, அமெரிக்காவின் நண்பனாக நின்று தமிழ் இனத்தை, வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்திவிடலாமென்ற நச்சுநினைப்பு கொண்ட இலங்கை அரசு, வேங்கை, வேதாந்தம் பேசும் வேடிக்கையைச் செய்யலாமா?

தாய்த் தமிழகத்தில் இலங்கை அரசின் கொடுமைக்கு எதிராக ஓங்கி ஒலிக்கும் குரலை - இலங்கை அமைச்சர்களின் கேலிப் பேச்சுகள் மூலம் ஒடுக்கிவிட முடியாது!

உடன்பிறப்பே, அந்த உன்மத்தர்களின் கபட நாடகங்களை அம்பலப்படுத்திட இதோ மற்றொரு வாய்ப்பு உனக்கு!

அக்டோபர் 11-ஆம் நாள் காலை முதல் மாலை வரையில், அணிஅணியாகச் சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதுவர் அலுவலகத்தின் முன்னால் மறியல்!

அண்ணா வழியில்,

அறநெறி பிறழாமல்,

அமைதி காத்து,

மாவீரர் பட்டாளம் நாமென உரைத்திட - இலங்கை அரசின் மதோன்மத்தர்களின் மண்டைக்கனத்தைக் குறைத்திட - தமிழ் மகனே! புறப்படு! தமிழ் மகளே! புறப்படு! புறநானூற்றுப் புலியே! புறப்படு!

அன்புள்ள,

மு. க.

10-10-1983

1162. அடுத்த அழைப்பு தொடரும்!

உடன்பிறப்பே,

தமிழன்னை பெற்றெடுத்த தங்கமே! தன்மானம் காத்திட எழுந்திட்ட சிங்கமே! தடந்தோள் உயர்த்தி, நீ தடைதனை உடைத்திட்ட பேராண்மை கண்டு பெருமையடைகிறேன். இலங்கைத் தமிழ் இனத்துக்காக இன்று மட்டுமல்ல, இரண்டாண்டுகட்கு முன்பே ஒருமுறை, சென்னையில் உள்ள சிங்கள அரசுத் தூதுவர் அலுவலகத்துக்கு முன்பு நீ அணி அணியாக மறியல் நடத்தினாய்! அப்போது அந்த அலுவலகத்துக்கு அருகிலேயும் கைது செய்யப்பட்டாய்! அண்ணா சிலைக்கருகிலேயும் கைது செய்யப்பட்டாய்! நானோ, வீட்டை விட்டுப் புறப்படும் போதே கைது செய்யப்பட்டேன்! பல்வேறு பிரிவுகளில் வழக்குகள் தொடரப்பட்டன! சிறையில் அடைக்கப்பட்டிருந்தோம்! விடுதலை கோரி வெளியில் இருந்த தமிழ் வேங்கைகள் பதினாறு பேர் தீக்குளித்தனர்; அவர்களில் ஏழு பேர் உயிரையே தத்தம் செய்தனர்.

அதே அறப்போர் மறியல்தான் இப்போது! இலங்கைத் தூதுவர் அலுவலகத்தின் முன்பு! சென்னை மாவட்டக் கழகம் அழைப்பு விடுத்தது! ஒரேநாளில் இரண்டாயிரம்பேர் களம் புகுந்தனர் என்ற செய்தி கேட்டுத் தமிழர் வாழும் இடமெல்லாம் உணர்ச்சிக் களமாகியிருக்கும்.

காலை பத்து மணியிலிருந்து மாலை ஐந்தரை மணி வரையில், குறிப்பிட்ட நேரத்திற்கு நீ அணி அணியாகப் புறப்பட்ட அந்த அழகுகண்டு களித்தேன்! எழுச்சி கண்டு உடம்பெல்லாம் புல்லரித்தது! மாலையிலே விடுதலை செய்து விட்டார்கள்!

ஆனால் நீ! எத்தனை காலம் சிறைச்சாலை? அதைப் பற்றிக் கவலைப்படாமல் களம் புகுந்தாய் என் கண்மணியே! என்ன தண்டனை தரப்படும்? அந்தச் சிந்தனைக்கே நீ இடம் தரவில்லை; செருமுனை நோக்கிப் புறப்பட்டு விட்டாய்!

பதினைந்து அணிகள்! அரை மணி நேரத்திற்கொரு முறை அண்ணா சாலையில் - அண்ணா சிலைக்கு எதிரே நீ கைதானாய் எனக் கேள்விப்பட்டபோதெல்லாம் - உன் தியாக உணர்வைத் தொழுதேன். உன் தமிழ் உணர்வுக்கு வாழ்த்துக் கூறினேன்.

என் அன்பழைப்பு கண்டு என்றைக்கு நீ தயக்கம் காட்டியிருக்கிறாய்! இல்லை! ஒருபோதும் இல்லை! கடந்த ஜூலை 26-ஆம் நாள் காலையில்தான் இலங்கைப் படுகொலைச் செய்திகள் விரிவாக ஏடுகளில் வெளிவந்தன! ஏழெட்டு மணி நேர அறிவிப்பில் சென்னை, செங்கற்பட்டு இரு மாவட்ட அமைப்புகள் மட்டுமே ஆற்றிய பணியின் வெற்றிச்சின்னமாக 27-ஆம் நாள் மாலை ஏழு லட்சம் பேர் கொண்ட கண்டனப் பேரணியை நடத்திக் காட்டிய உடன்பிறப்பல்லவா நீ! வெட்டி வா என்றுரைத்தால் கட்டி வரும் வீரமன்றோ நின் வீரம்!

உயர்ந்து எழுந்து மோதிடும் புயல் நேரத்து அலையைப் போலச் சோதனைகள், வேதனைகள் என்னையும், கழகத்தையும் தாக்கிய போதெல்லாம், உறுதிபடைத்த உன் நெஞ்சமன்றோ உற்ற துணையாக இருந்தது!

இப்போதும் அந்த நெஞ்சத்துக்கு நீ சொந்தக்காரனாக இருப்பதால் - எப்போதும் இருப்பாய் என்று நம்புவதால் - ஏசல், இழிமொழி, நாராசச் சொல்வீச்சு - இவை எந்தப் பக்கமிருந்து வந்தாலும், எவ்வளவு உயர்ந்த இடத்திலிருந்து வந்தாலும் - நீ அந்தத் திசையை நோக்கி உற்றுப் பார்க்கிறாய் - நரகல் நடையாளர்கள் நடுங்குகின்றனர்! ஓகோ! திடீரென்று வேகமாக அடித்த காற்றில் பறந்து போய்க் கோபுரக் கலசத்தில் ஒட்டிக் கொண்ட சரக்கா? அதுவே தன்னைக் கலசமென எண்ணிக் கொண்டிருக்கிறதா? தானாகவே பறந்து கீழே விழும்! எனச் சிரித்தவாறு நீ, அந்தச் சந்துமுனைச் சிந்துபாடிகளைக் குறித்து உரைத்திடும்போது நான் புது வலிவு பெறுகிறேன்!

தமிழ் ஈழத்துக்குச் சொந்தம் திரிகோணமலை என வலியுறுத்துகிறோம்! அதை அமெரிக்காவுக்குத் தாரை வார்க்காதேயென்று எச்சரிக்கிறோம் இலங்கை அரசை! இதன் மூலம் தமிழ் ஈழம் அமைவதற்கான நமது ஆதரவை, மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துகிறோம்! நம்மிடையே இதில் குழப்பமில்லை! ஒரே குரலில் தமிழ் ஈழ விடுதலை முழக்கத்தை எழுப்புகிறோம்!

ஒருவருக்கொருவர் முரண்பாடில்லை! மோதல் இல்லை! தெளிந்த பிறகு சந்தேகம் வரத் தேவையில்லை! தென்னிலங்கைத் தமிழர்களின் எதிர்கால நல்லமைதிக்குத் தனித் தமிழ்ஈழம் ஒன்றே இறுதியான முடிவாக இருக்க முடியும் என்பது தெளிவாகிவிட்ட உண்மை!

திரிகோணமலை சம்பந்தமாக அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் இடையே நடக்கும் இரகசிய பேரம், ஆபத்தானது!

ஏற்கெனவே டிகோகார்ஷியா எனும் தீவை, அமெரிக்கா, தனது ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டு தென்கிழக்கு ஆசிய நாடுகளை மிரட்டிக் கொண்டிருக்கிறது.

டிகோகார்ஷியா, குமரி முனையில் இருந்து 1400 மைல் தொலைவிலும், மொரிஷீயஸ் தீவில் இருந்து 1200 மைல் தொலைவிலும் உள்ள ஒரு தளம்! ஐநூறு மக்களைக் கொண்டதும் 125 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ளதுமான இந்தத் தீவு, அமெரிக்காவின் கப்பல், விமான தளமாக இன்றைக்கு விளங்குகிறது.

இரண்டாம் உலகப் போர் நடைபெற்றபோது, பிரிட்டிஸ் கப்பல் படைகள் எரிபொருளை நிரப்பிக் கொள்ளும் தளமாக டிகோகார்ஷியா இருந்தது. மொரிஷியசிடமிருந்து மூன்று மிலியன் பவுனுக்கு பிரிட்டனால் வாங்கப்பட்ட அந்தத் தீவை 1966-ஆம் ஆண்டு பிரிட்டனிடமிருந்து அமெரிக்கா வாங்கிக் கொண்டது.

அதை ஒரு ராணுவ தளமாக்குவதில்லையென்று தொடக்கத்தில் அளிக்கப்பட்ட உறுதிமொழி காற்றிலே பறந்தது!

1969-இல் அமெரிக்கக் கப்பல் படைத் தளபதி, சில கருத்துகளை வெளியிட்டார். அவையாவன :-

ஃ இந்தியக் கடல் பகுதியில் கப்பல் படை மட்டும் போதாது! இராணுவத் தளங்களும் வேண்டும்.

ஃ டிகோகார்ஷியா, சரியான இராணுவத் தளங்களில் ஒன்றாக இருக்க முடியும்.

அந்தத் தளபதியின் கருத்துகள் செயல் வடிவு கொண்டன.

இந்தியாவின் குமரிமுனையிலிருந்து 1400 மைல் தொலைவில், டிகோகார்ஷியாவில், ஒரு இராணுவத் தளத்தை

அமெரிக்கா வைத்திருப்பதையே விரும்பாத இந்தியா, மற்றொரு இராணுவத் தளத்தை மிக அருகாமையில் திரிகோணமலையில் அமெரிக்கா அமைத்துக்கொள்ள அனுமதிக்க முடியுமா?

இன்று சிறுபொறியை அணைக்காமல் விட்டால், நாளை பெருந்தீயினால் மிகுநாசம் விளையுமன்றோ!

அதனால்தான் அமெரிக்காவுக்குத் திரிகோணமலையைத் தாரை வார்க்காதே! அது தமிழ்ஈழத்துக்குச் சொந்தமென்று உணர்த்திடப் போராடப் பொருத்தமான இடம் இலங்கை அரசின் தூதுவரகம் என முடிவெடுத்துக் களம் அமைத்தோம்!

அமெரிக்காவுக்கு டிகோகார்ஷியா, திரிகோணமலை போல எத்தனை தளங்கள் கிடைத்தாலும் மகிழ்சிதான்! திரிகோணமலையை வாங்கிக் கொள்வோரைக் காட்டிலும், கொடுப்போரைத்தானே முதலில் தடுக்க வேண்டும்! அதற்குத் தமிழ்ஈழம் அமைவதுதானே சரியான முடிவு! அந்த முடிவை வலியுறுத்திட, அதற்குத் தொடர்புடையோருக்கு அறிவிப்பதுதான் நமது அறப்போரின் நோக்கம்!

தமிழர் வாழும் பகுதிகளில் சிங்களவரைக் குடியேற்றுவது - இனஅழிப்புச் செயலில் மற்றொரு கட்டம்! இந்தக் கொடுமையை இலங்கை அரசே முன்னின்று நடத்துவது பெரும் மோசடி!

அதையும் எதிர்க்கவே அணிவகுத்தோம்! அறப்போர் நடத்தினோம்! தொடர்ந்து நடத்துவோம்!

உடன்பிறப்பே, உன் போர்க்குண நெஞ்சத்துக்கு ஓராயிரம் வாழ்த்துகள்!

அடுத்த அழைப்பு தொடரும்! நான் சொல்லத் தேவையில்லை - நீ காத்திருப்பாய் என்பது எனக்குத் தெரியும்!

அன்புள்ள,

மு. க.

13-10-1983

1163. அடுத்த பரிசு யாருக்கு?

உடன்பிறப்பே,

நெல்லைக்கு அடுத்து சேலமென எம்.ஜி.ஆர். அரசின் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது!

திருமண மண்டபமொன்றில் சுமார் இருநூறு பேர் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கழகத் தொண்டர்கள் ஆயுதம் எதுவுமின்றி உடற்பயிற்சி பெற்றனர்! அது குற்றமாம்! அந்தப் பயிற்சியை சேலம் மாவட்டச் செயலாளர் தம்பி வீரபாண்டி ஆறுமுகமும், நாடாளுமன்ற உறுப்பினர் நண்பர் அர்ச்சுனனும், நகரக் கழகச் செயலாளர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள் முன்னின்று நடத்தியதற்காக அவர்களும் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.

ஆயிரம்முறை சொல்லி விட்டோம்! கழகக் கூட்டங்களையும், நிகழ்ச்சிகளையும் ஒழுங்குபடுத்தி, அமைதியும், பாதுகாப்பும் உருவாக்குவதற்காகத்தான் தொண்டர் அணியினர்க்கு ஆயுதம் எதுவுமில்லாத உடற்பயிற்சி வழங்கப்படுகிறது என்ற விளக்கத்தை!

கழகம் மட்டுமல்ல, அனைத்துக் கட்சித் தலைவர்களும் நடத்திய கூட்டத்திலும், இதுபோன்ற தொண்டர் அணிகளை இந்த அரசு தடுத்திடுவதை வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது!

வருகிற 20-ஆம் நாள் தமிழக முழுதும் - மத்திய, மாநில அரசு அலுவலகங்களின் முன்னால், அனைத்துக் கட்சியினரும் வட்டத் தலைநகர்களில், மாவட்டத் தலைநகர்களில் நடத்த இருக்கிற ஆர்ப்பாட்டங்களில் ஏழு அம்சக் கோரிக்கைகளுடன் இணைந்து, அந்தத் தீர்மானத்தையும் அரசுக்கு நினைவூட்ட இருக்கிறோம்.

ஆயுதம் ஏதுமின்றி, ஒரு கம்போ குச்சியோ, கூட இல்லாமல் உடற்பயிற்சி மட்டுமே பெறுகிற தொண்டர்கள் கைது செய்யப்படுகிறார்கள்! அதுவும் ஒரு மண்டபத்திற்குள் பயிற்சி பெறும்போது கைது செய்யப்படுகிறார்கள்!

கேட்டால், வன்முறையைத் தடுப்போம் என்று வக்கணை பேசுகிறார் முதலமைச்சர்!

ஆயுதமேந்தாமல் உடற்பயிற்சி நடத்துவதே வன்முறை யென்றால் - வெறும் சாதாரண டிரில் செய்வதே வன்முறையென்றால், அந்த வன்முறை ஊக்கப்படுத்தப்படக் கூடாது என்றால் - இன்று தமிழகத் திரையரங்குகளில் ஓடிக் கொண்டிருக்கிற படங்களில் நூற்றுக்குத் தொண்ணூறு படங்களை உடனடியாக இந்த அரசு தடை செய்தாக வேண்டும்!

ஏனெனில், இன்றைய முதலமைச்சர் உள்ளிட்ட பல நடிகர்கள், கைகளில் கம்பு பிடித்தும், கத்தியேந்தியும், சிலம்பம் சுற்றியும், சுருவாள் வீசியும், சூலம் தூக்கியும், சுக்குமாந்தடி சுழற்றியும் - அடியோஅடி என்று அடிக்கிற காட்சிகள்! குத்தோ குத்து என்று குத்துகின்ற காட்சிகள்! ஜீப்பை விட்டு மோதுதல்! காரை விட்டு நொறுக்குதல்! ஆற்றில் தூக்கிப் போடுதல்! அருவியில் மிதக்க விடுதல்! மலையில் உருட்டுதல்! மடுவில் அமுக்குதல்! இப்படிக் குலை நடுக்கமெடுக்கும் காட்சிகளைப் படத்தில் பார்த்து விட்டு மறுநாள் வீட்டுக்குள்ளேயும், வீதிகளிலேயும் சிறுவர்கள், தங்கள் கைகளில் குச்சிகளை எடுத்துக்கொண்டு ட்விஷ்! ட்விஷ்! என்று ஒருவருக்கொருவர் சண்டை போட ஆரம்பித்து விடுகிறார்கள்!

இவ்வாறு பிஞ்சுப் பருவத்திலேயே, இளைஞர்களை வன்முறைக்குப் பயிற்றுவிக்கிற ஸ்டண்ட் படங்கள், தடை செய்யப்பட வேண்டுமல்லவா?

நமக்கு அப்படியொரு எண்ணமில்லை! ஆனால் எம்.ஜி.ஆரின் இன்றைய அடக்குமுறை நடவடிக்கைகளின்படி, ஆயுதமில்லாமல் உடற்பயிற்சி செய்வதே குற்றம் என்றால் - கைது செய்து வழக்குப் போட வேண்டுமென்றால் - தமிழ்நாட்டில் எந்தத் திரையரங்கும் தப்ப முடியாதல்லவா? ஆயுதம்! ரத்தம்! கொலை! வன்முறை! இந்தக் காட்சிகள் உள்ள படங்களைத் திரையிட அரசு அனுமதிக்கக்கூடாதல்லவா?

அப்படியே அந்தப் படங்கள் அனுமதிக்கப்பட்டாலும் - மக்கள் கேட்பார்களே! என்னய்யா நியாயம் இது? ஆயுதமில்லாமல் உடற்பயிற்சி செய்தால் குற்றமாம் - வழக்காம் - வன்முறையை அனுமதிக்கமாட்டார்களாம்! ஆயுதமேந்திக் குழந்தைகளைக்

கூடச் சண்டை செய்யத் தூண்டுகிற சினிமாப் படங்களை மட்டும் அனுமதிப்பார்களாம்! அது வன்முறையைத் தூண்டுகிறதென்று இந்த அரசினர் ஒப்பமாட்டார்களாம்! ஆயுதமேந்தாமல் உடற்பயிற்சி செய்தால்தான் வன்முறையாம்! கடைந்தெடுத்த கோமாளித்தனமாக இருக்கிறதே! என்று மக்கள் கேட்பார்களே!

என்ன செய்வது? அங்கீகாரம் பெற்ற கோமாளித்தனம், கோட்டையில் அமர்ந்து அரசோச்சும்போது எல்லாமே நடக்கும்! அந்தக்கோணல் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று!

உடன்பிறப்பே, ஒன்றை மட்டும் எம்.ஜி.ஆர். புரிந்துகொள்வது நல்லது!

சேலம் நடத்தி விட்டோம்! என்று அவர் சிரித்து மகிழலாம்!

நெல்லை கண்டு நெஞ்சுரம் குலையாத நாம்தான், சேலத்தில் மட்டுமல்ல; எல்லா மாவட்டங்களிலும் தொண்டர் அணிப் பயிற்சி முகாம்களை நடத்த இருக்கிறோம்.

இனி ஒவ்வொரு மாவட்டத்திலும், தயக்கமின்றி அந்தப் பணி தொடரத்தான் போகிறது!

ஃ நெல்லை

ஃ சேலம்

இரண்டு மாவட்டங்களிலும் எம்.ஜி.ஆரின் அடக்குமுறையை எதிர்கொண்டு, தடையைத் தூளாக்கி விட்டோம்!

மூன்றாவதாக இடம் பெறப்போகும் மாவட்டம் எது?

அடுத்த பரிசு, யாருக்கு?

இதுதான் இன்றுள்ள கேள்வியே தவிர, அய்யோ அடக்குமுறையா? என்று நடுங்குவோர் யாரும் கழகத்தில் இல்லை!

அன்புள்ள,

மு. க.

14-10-1983

1164. அணி வகுத்திடுக! பணி முடித்திடுக!

உடன்பிறப்பே,

இடையிலே ஒருநாள்தான்! அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, அக்டோபர் 20-ஆம் நாள் மாவட்டத் தலைநகர்களில், வட்டத் தலைநகர்களில் - மத்திய மாநில அரசுகளின் அலுவலகங்களின் முன்னால், அனைத்துக் கட்சிகளின் சார்பில் அறவழி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற இருக்கின்றன! ஒவ்வொரு மாவட்டத்திலும் அனைத்துக் கட்சி அமைப்புகளின் நிர்வாகிகள் கூடி, அக்டோபர் 20 ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் அமைந்திடவும் - மக்கள் பிரச்சினைகளைப் புறக்கணித்து விட்டு மனம்போன போக்கில் ஆட்சி நடத்தும் மத்திய, மாநில அரசுகளின் அக்கறையற்ற தன்மையை அம்பலப்படுத்திடும் வகையில், மக்கள் சக்தியைத் திரட்டிடவும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

எந்த வட்டத் தலைநகர் - அல்லது மாவட்டத் தலைநகரில், எந்த அலுவலகங்களின் முன்னால், எந்த நேரத்தில் ஆர்ப்பாட்டம் தொடங்கும் என்பதையும், எப்போது நிறைவுறும் என்பதையும் முன்கூட்டியே தெரிவித்து - ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வோர் எந்த இடத்திலிருந்து, எந்த அலுவலகத்திற்கு ஊர்வலமாகப் புறப்பட்டு வருவர் என்பதையும் அறிவித்து, ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட அனைத்துக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழுக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவ்வாறு நடைபெறும் ஆர்ப்பாட்டங்களில் உடன்பிறப்பே! நீ நமது கழக அமைப்புரீதியாகக் கலந்துகொண்டு ஒத்துழைப்பு நல்கிட வேண்டுகிறேன்.

ஆட்சிக்கு வந்தால் விலைவாசியை அதல பாதாளத்திற்கு இறக்கி விடுவோம் என்று தேர்தல் வாக்குறுதி தந்த மத்திய, மாநில ஆளுங்கட்சிகளான இந்திரா காங்கிரசும், எம்.ஜி.ஆர். கட்சியும் - அண்ணாந்து பார்த்து அப்பல்லோவில் விரைந்தாலும்,

எட்ட முடியாத அளவுக்கு விலைவாசி உயர்வதற்குக் காரணகர்த்தாக்களாகத் திகழ்கிறார்கள்.

உணவுப்பண்ட விநியோகமோ, ஊருக்கு ஊர் முறைகேடு! இருபது கிலோ அரிசி தருவதாகத் தம்பட்டம் கொட்டினார்கள்! பல இடங்களில் மாதம் இரண்டு கிலோ அரிசி கூட ஒரு குடும்பக் கார்டுக்கு வழங்கப்படவில்லை! அப்படி வழங்கினாலும் புழுத்த அரிசி!

மின்சாரத்திற்காகத் தவமிருக்கும் விவசாயிக்கு, எந்த நேரத்திற்கு மின் இணைப்பு கிடைக்கும் என்று தெரியாத நிலை! திகைப்பு! ஆறு மணி நேரம் என அறிவிப்பு! அது வெறும் ஏட்டுச் சுரைக்காயே தவிர, காயும் பயிரைப் பார்த்து, வாயும், வயிறும் எரிய கழனிகளின் ஓரத்தில் கண்ணீர் வடிக்கிறான் விவசாயி! இந்த அவதியில் மின்இணைப்புத் துண்டிப்பு!

தொழிலாளர் துயரமோ சொல்லத் தரமன்று! தொழிலாளர் களின் உரிமைக்காக வாதாடும் முறையான அமைப்புகளைப் புறக்கணித்துவிட்டு, தொழிலாளர் இயக்கங்களைப் பிளக்கப் பொம்மை யூனியன்கள்! அவற்றோடு பேச்சுவார்த்தை! அந்தக் கருங்காலிகளின் துணையோடு பாட்டாளி வயிற்றில் அடிக்கும் பரிதாபம்!

ஆளுங்கட்சி குண்டர்களால் அடிபட்டவன் - வெட்டுண்டவன் - காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தால், புகார் தந்தவன் மீதே பொய் வழக்கு! கொலை முயற்சி வழக்கு! கொடுமை! கொடுமை!

அரசு விழாக்களில் அமைச்சர்களின் தடித்த நாக்குகளுக்கு எதிர்க்கட்சிகளைத் தாக்குவதே வேலை! மக்கள் தரும் வரிப்பணத்தில் விழா! அங்கே கட்சி விமர்சனம்! ஜனநாயகத்திற்கே பொருந்தாத போக்கு!

சந்து, பொந்து, இண்டு இடுக்கு எல்லாம், அங்கிங்கெனாதபடி எங்கெங்கும், இந்த அரசில் அடிமுதல் நுனிவரையில் லஞ்சம், ஊழல்! கொள்ளையோ கொள்ளை! மது விற்பனையிலேயிருந்து மருத்துவக் கல்லூரி விவகாரம் வரையில், கோடிக்கணக்கான ரூபாய் லஞ்சம்! பேருந்து உடமையாளர்களிடம் ஒரு கோடிக்குமேல் கப்பப் பணம்! இஃதன்னியில் கப்பல் பேரப் பணம் வேறு!

இத்தனை அவலட்சணமிகுந்த ஆட்சியை அடையாளம் காட்டி மக்களின் சக்தியைத் திரட்டிட, அக்டோபர் 20 - ஒரு ஆரம்பக் கட்டம்!

அனைத்துக் கட்சிகளின் இந்த அறவழிக் கிளர்ச்சி வென்றிட, அன்பு உடன்பிறப்பே, அணிவகுத்துச் சென்றிடுக! பணிமுடித்துத் திரும்பிடுக!

அன்புள்ள,

மு. க.

19-10-1983

1165. இதோ ஒரு வரலாறு காணாத சாதனை!

உடன்பிறப்பே,

வரலாறு காணாத சாதனைகள் எம்.ஜி.ஆர். ஆட்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன! மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, சட்டக் கல்லூரி மாணவர் தேர்வுப் பட்டியல்கள், மூன்று மாத காலம் நாலு மாத காலம் தாமதமாக வெளியிடப்படுவதொன்றே எல்லா சாதனைகளுக்கும் மகுடம் வைக்கும் சாதனையாகும் என்று சரித்திர ஆசிரியர்கள் புகழ்ந்துரைக்கின்றனர்.

மருத்துவத்துறை மேல்படிப்பு எம்.டி - எம்.எஸ். தேர்வுக்கான பேரங்கள், பல லட்சக்கணக்கில் நடைபெற்று முடிந்த பிறகு, திடீரென இருபது இடங்கள், முதலமைச்சரின் இஷ்டத்துக்கு விநியோகிக்கப்பட்டன! அந்தப் புதிய இடங்களின் ஒதுக்கீட்டில் முதல்வருக்கு மிகவும் வேண்டியவர்கள் வீட்டுப் பிள்ளைகள், அல்லது அதிகம் கப்பம் கட்டியவர்கள் வாய்ப்பு கிடைக்கப் பெற்றிருக்கிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல ஒளிவிடும் உண்மைத் தகவலாகும்! இதுவும் வரலாறு காணாத சாதனையென்றுதானே எழுதப்பட வேண்டும்.

இதோ மருத்துவக் கல்லூரி எம்.பி.பி.எஸ். தேர்வில் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறதென்றும், அதிக மதிப்பெண்கள் எடுத்திருந்தும்கூட தாங்கள் தேர்வு செய்யப்படாமல், குறைவான மதிப்பெண்கள் பெற்றவர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் இதுவரை நாற்பது பேர் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து, ரிட் மனுக்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள்.

நமது நண்பர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் செல்வி, எண்பத்துஏழு சதவிகிதம் மதிப்பெண்களைப் பெற்றிருந்தும், தேர்வு செய்யப்படவில்லையென்றும், மற்றொரு மாணவர் தொண்ணூற்று இரண்டு சதவிகித மதிப்பெண்களைப் பெற்றிருந்தும் தேர்வு செய்யப்படவில்லையென்றும், எண்பத்து

எட்டு சதவிகிதம் மதிப்பெண்களைப் பெற்றிருந்தும், பத்தாவது வகுப்பில் மாவட்டத்திலேயே முதல் மாணவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தும், விளையாட்டுப் போட்டிகளில் பல விருதுகளைப் பெற்றிருந்தும், கிறிஸ்துவ நாடார் வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தும்கூடத் தன்னைத் தேர்வு செய்யவில்லையெனக் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு மாணவர் உட்பட மொத்தம் நாற்பது பேருடைய ரிட் மனுக்களை உயர்நீதி மன்றம் ஏற்றுக்கொண்டு, அரசாங்கத் தரப்புப் பதில்களை இம்மாதம் 26-ஆம் தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டுமென உத்திரவு பிறப்பித்துள்ளது.

மருத்துவப் படிப்பு, பொறியியற் படிப்பு, சட்டப் படிப்பு - இவைகளுக்கான தேர்வுப் பட்டியல் அவற்றுக்கென அமைக்கப்படுகிற குழுக்களின் மூலமாக வெளியிடப்படுகின்றன என்ற போதிலும், இப்போது அது ஒரு போலி நாடகமாக நடிக்கப்படுகிறதேயல்லாமல் - முடிவுகள் அந்தக் குழுக்களின் மனச்சாட்சிக்கு உகந்தவைகளாக இல்லை என்பது நாடறிந்த உண்மையாகிவிட்டது!

குழுவினர்களின் முடிவுக்கு மாறாக - அல்லது குழுவினர்களைக் கொண்டே, அவர்களது கருத்துக்கு மாறாகத் திணிக்கப்படுகிற முடிவுகளாகத்தான் தேர்வுப் பட்டியல்கள் வெளியிடப்படுகின்றன, இந்த ஆட்சியில்! இதுவும் ஒரு வரலாற்றுச் சாதனைதானே! அல்ல! அல்ல! வரலாறு கண்டிராத சாதனைதானே!

பொறியியல் கல்லூரியில் சேர்வதற்குத் தேர்வு செய்யப்பட்ட கோவையைச் சேர்ந்த இருவர், தலா - ஐம்பதாயிரரூபாய் ஒருவருக்குக் காணிக்கை செலுத்தியிருக்கிறார்கள்! அந்த இலட்சத்தை வாங்கிக் கொண்ட பிறகுதான், ஆட்டிப் படைப்பவர் அவர்களைத் தேர்வு செய்யுமாறு ஆணையிட்டிருக்கிறார்!

சட்டக் கல்லூரித் தேர்வுப் பட்டியலும் ஆட்டிப் படைப்பவர் கையில்தான் அகப்பட்டிருப்பதாகக் கடந்த வாரம் வரையில் அந்த வட்டாரத்துத் தகவல்களாக வந்து கொண்டிருந்தன!

சட்டக் கல்லூரி, பொறியியல் கல்லூரித் தேர்வுப் பட்டியலில் இடம் பெறவே லட்சக்கணக்கில் கப்பம் என்றால், மருத்துவக்

கல்லூரித் தேர்வுக்கு மொத்தத்தில் லஞ்சப் பணம் கோடிகளை எட்டிவிட்டது என்பதில் ஆச்சரியம் இருக்க முடியுமா?

நேர் காணல் என்ற இன்ட்டர் வியூ interview அழைப்புக்குக்கூடத் தகுதியில்லாத மாணவர்கள், பெரும் பணக்காரர்களாக இருந்தால் - அல்லது இந்த அரசுக்கு மிக வேண்டிய குடும்பங்களாக இருந்தால் - இனிமேல் கவலைப்படத் தேவையில்லை! எம்.ஜி.ஆர். அவர்களின் கடாட்சம் அவர்களுக்கு எப்படியும் கிட்டியே தீரும்!

இந்த ஆட்சி தொடங்கிய காலத்திலிருந்து இதுபோன்ற லஞ்ச லாவண்ய ஊழல்களை, சட்டமன்றத்தில் அசைக்க முடியாத ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டித்தான் வந்திருக்கிறோம்!

ஆனால் எதற்கும் அஞ்சாமல் - எதன் மீதோ மழை பொழிவதைப்போல - இந்த ஆட்சியாளர்கள் அசைந்து கொடுக்காமல் லஞ்சலாவண்யக் குட்டையில் விழுந்து கிடக்கிறார்கள்!

அதற்கு மற்றொரு உதாரணம்தான், மருத்துவக் கல்லூரித் தேர்வு ஊழலை எதிர்த்து, நாற்பது பேர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருப்பது!

இது வரலாறு காணாத சாதனையல்லவா?

அன்புள்ள,

மு. க.

24-10-1983

1166. அந்தோ! இதுதான் தமிழனின் தலையெழுத்து!

உடன்பிறப்பே,

ஐ.நா. சபையின் அரசியல் கமிட்டிக் கூட்டம் ஒன்றில் தமிழக மின்துறை அமைச்சர் நண்பர் ராமச்சந்திரன் அவர்கள், இலங்கைப் பிரதிநிதிக்குக் காட்டமான பதில் அளித்தார் என்றும் - கடுமையாக விடை பகர்ந்து முரசுகொட்டி முழங்கினார் என்றும் இங்குள்ள ஆளும்கட்சி ஆதரவு ஏடுகளில் கொட்டையெழுத்துத் தலைப்புகள் வெளியாகியுள்ளன. நானும் பெருமிதத்துடனும், பேருவகையுடனும் அந்த ஏடுகளின் தலைப்புகளை மட்டும் படித்துவிட்டு முடித்து விடாமல், அவர் பேசியுள்ள விபரங்களையும் விரிவாகப் படித்தேன்.

எங்கள் வீட்டில் அமளி நடந்தது உண்மைதான்! வீட்டு வாடகை கேட்க வந்த வீட்டுச் சொந்தக்காரனை அடித்து நொறுக்கியது உண்மைதான்! இனியும் அவன் வீட்டு வாடகை கேட்டால், இப்படித்தான் உதைப்போம்! முடியுமானால் கொல்வோம்! இதையெல்லாம் தட்டிக் கேட்க உன் மகனுக்கு என்ன உரிமையிருக்கிறது? உன் வீடும், என் வீடும் பக்கத்து வீடு என்பதால் என் வீட்டு விவகாரத்தில் உன் மகன் வந்து தலையிடலாமா? நான் குடியிருக்கும் வீட்டையே வீட்டுச் சொந்தக்காரரிடம் ஒப்படைக்கச் சொல்ல உன் மகனுக்கு என்ன உரிமை? இந்தாம்மா! உன் மகன் செய்வது நியாயமில்லை! வாடகை கொடுப்பதும், கொடுக்காததும் என் இஷ்டம்! வாடகை கேட்க வந்தால் வீட்டுக்காரனை அடிப்பதும், அவன் அடி வாங்குவதும் எங்கள் வீட்டு விவகாரம்! அதை விடுத்து உன் மகன் எங்கள் விவகாரத்தில் தலையிடுவது பெரும் தப்பு! உன் மகன் தூண்டுதலால்தான், வீட்டுச் சொந்தக்காரனுக்கு இவ்வளவு தைரியம்!

பல ஆண்டுகளாய் வாடகையும் கொடுக்காமல், வீட்டுச் சொந்தக்காரன் அவன் விருப்பம் போல் வசிப்பதற்கு அவனது

வீட்டையும் அவனுக்குத் திருப்பித் தராமல் - சொந்தக்காரனையே மண்டையை உடைக்கும் ஒருவன், ஒரு தாயிடம் மேற்கண்டவாறு புகார் செய்தான் கோபமாக!

அந்தத் தாய் என்ன பதில் சொல்லியிருப்பாள் என்று எதிர்பார்ப்போம்!

ஏனய்யா! நீ பல வருஷமாய் வாடகையும் கொடுக்கமாட்டாய்! இனிமேலும் கொடுக்கப்போவதில்லையென முடிவு கட்டி விட்டாய்! வீட்டுக்குரியவனிடம் வீட்டையும் ஒப்படைக்காமல், அவனையும் அடித்துச் சித்திரவதை செய்வாய் - அந்த அக்ரமத்தை நியாய உணர்வு கொண்ட என் மகன் கண்டித்தால் அது தவறா? அப்படித்தான் என் மகன் செய்வான்! நியாயத்தின் பக்கம் நின்று உனது அநீதியை எதிர்த்து நிற்கும் என் மகன் மீது நீ கூறும் புகாரை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை! நானும் என் மகனுடன் சேர்ந்து சொல்கிறேன்! நீ செய்வது கொடுமை! அநாகரிகம்! நாணயமற்ற செயல்! உடனே உரியவனிடம் வீட்டைக் கொடுத்து விடு!

இப்படிப் பதில் கூறியிருந்தால் அந்தத் தாயை, வீரத் தாய் என்போம்!

இதற்கு மாறாக அந்தத் தாய், அந்தக் கொடியவனைப் பார்த்து,

-

என் மகன் செயலைப் பெரிதுபடுத்தாதே! உங்கள் வீட்டு விவகாரத்தில் நாங்கள் தலையிடவே மாட்டோம்! அது உங்கள் பிரச்சினை! அதைப்போலவே நீ வாடகை கொடுக்காமல் பல ஆண்டுகளாக ஏமாற்றி வருகிறாயே! அந்த வீட்டையும் வீட்டுச் சொந்தக்காரனிடம் நீ ஒப்படைக்க வேண்டுமென்றும் கூறமாட்டேன்! உரியவனுக்கே அந்த வீடு என்பதையும் சொல்ல மாட்டேன்! எனக்குள்ள ஒரே பிரச்சினை, உன்னிடம் உதைபட்டு மிதிபட்டு அந்த வீட்டுக்காரன், எங்கள் வீட்டுப்பக்கம் வந்து அழுகிறான்! அவ்வளவுதான்!

இப்படி அந்தத் தாய் பதில் கூறினால், அவளது வார்த்தைகளுக்கு வீர வடிவம் கொடுக்க யாராவது முன்வருவார்களா?

உடன்பிறப்பே! நான் குறிப்பிடும் இந்த இரண்டு வகைத் தாய்களில், இரண்டாவது வகைத் தாயாகத்தான் இந்திய அரசு,

இன்றைக்கு இருக்கிறது! இந்த இரண்டாம் வகைத் தாயின் குரலைத்தான் நமது மின்துறை அமைச்சர் நண்பர் ராமச்சந்திரன்; ஐ.நா.வின் அரசியல் கமிட்டியொன்றில் எதிரொலித்திருக்கிறார்.

"We confined ourselves only to the extent of flow of refugees from Sri Lanka. We neither criticised the policies of Sri Lanka nor criticised the actions of the Government of Sri Lanka. In fact even in my intervention I had made it clear that we do not propose and we do not intended to interfere in the internal affairs of Sri Lanka" Mr. Ramachandran said

நாங்கள் அகதிகள் விஷயம் வரைக்கும் நிறுத்தி கொண்டோம். நாங்கள் இலங்கை அரசின் கொள்கைளையோ, அல்லது இலங்கை அரசின் நடவடிக்கைகளையோ விமர்சிக்கவில்லை. உண்மையிலேயே நான் தெளிவுபடுத்த விரும்புவது, இலங்கையின் உள்விவகாரத்தில் நாங்கள் தலையிடுமாறு சொல்லவோ - அல்லது தலையிடவோ விரும்பவில்லை என்பதுதான்! இது ஐ.நா. மன்ற அரசியல் கமிட்டியில் நண்பர் பண்ருட்டி பேசியது! இது மட்டுமல்ல, இன்னும் இருக்கிறது -

"India does not support any separatist movement"

இலங்கையில் உள்ள பிரிவினை இயக்கத்தையும், இந்தியா ஆதரிக்கவில்லை.

இதுவும் ஐ.நா. சபை அரசியல் கமிட்டியில், இலங்கை பற்றிய குறிப்பில் நமது மின்துறை அமைச்சர் பேசியதுதான்!

உடன்பிறப்பே! வாடகையும் கொடுக்காமல் - உரியவனிடம் வீட்டையும் ஒப்படைக்காமல் - உரியவனையே உதைத்துக் கொண்டிருக்கும் வஞ்சகனிடம், முதல்வகைத் தாய் முழங்குவதைப் போல முழங்க வேண்டிய நிலையிலேயிருந்து மாறி - இரண்டாவது வகைத் தாயின் நிலையிலிருந்து முணகியிருக்கிறார் நமது மின்துறை அமைச்சர் என்பது மிகத் தெளிவாகப் புரிகிறதல்லவா?

இனிச் சிங்கள வெறியர்களோடு சேர்ந்து வாழ முடியாது - அந்த அளவுக்கு கடந்த காலங்களில் எப்போதும் நடக்காத அளவுக்கு இப்போது இனப் படுகொலை நடந்திருக்கிறது! இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது!

இலங்கையில் தமிழர்களைப் பூண்டோடு அழிப்பதுதான் இலங்கை அரசின் கொள்கை! இதை உலகின் பிரபல ஆங்கில

க 894.8116 தலை.18

ஏடுகள், பிரபலப் புகழ்பெற்ற நிருபர்கள் தயக்கமின்றி வெளியிட்டிருக்கிறார்கள்! ஆனால் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள், அந்தக் கொள்கை குறித்து எந்த விமர்சனமும் செய்யவில்லையென்று ஐ.நா. அரசியல் கமிட்டியில் இலங்கைப் பிரதிநிதியிடம் கெஞ்சும் குரலில் வாக்குமூலம் தருகிறார்! இலங்கைத் தமிழரைப் பூண்டோடு அழிக்கும் இலங்கை அரசின் கொள்கையை விமர்சிக்க மாட்டேன் என்பது மட்டுமல்ல - இலங்கை அரசின் நடவடிக்கைகளையும் விமர்சிக்க மாட்டேன் என்று மண்டியிட்டிருப்பது மிகமிக மானக்கேடான காரியம்!

எந்தத் தமிழனையும் கொல்லலாம் - பிரேத விசாரணை கூடக் கிடையாது! பிணங்களை அவர்களது உறவினர்களிடம் கூட ஒப்படைக்கத் தேவையில்லை! இப்படியொரு சட்டம் - திட்டம் - அதுவே இலங்கையில் இன்றைய நடைமுறை! தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர் குடியேற்றம்! அதற்கு இலங்கை அரசு ஆதரவு! அதுவே அங்கு இன்றைய நடவடிக்கை! சிறைக் கைதிகளைக் கொல்ல அதிகாரிகள் ராணுவம் ஒத்துழைப்பு! இத்தகைய இலங்கை அரசின் நடவடிக்கைகளையும் விமர்சிக்கவில்லை - விமர்சிக்காதது மட்டுமல்ல, விமர்சிக்கமாட்டேன் என்று ஐ.நா. சபை அரசியல் கமிட்டியில் இலங்கைப் பிரதிநிதிக்கு, இவர், உறுதிமொழியும் கூறுகிறார்.

இலங்கை அரசின் கொள்கைகளையும் விமர்சிக்கமாட்டோம் - இலங்கை அரசின் நடவடிக்கைகளையும் விமர்சிக்கமாட்டோம் - இலங்கையில் தனித் தமிழ்ஈழம் என்பதையும் ஆதரிக்கமாட்டோம் இவ்வாறு மிகத் தெளிவாக மின்துறை அமைச்சர் நியூயார்க் நகரத்தில் - ஐ.நா. அரசியல் கமிட்டியில் பிரகடனப்படுத்தி விட்டார்!

தமிழா! தமிழா! இலங்கைத் தமிழா! உன் கதியைப் பார்! நீ எப்படியெல்லாம் ஏமாற்றப்படுகிறாய் பார்!

இந்தப் பேச்சுக்குப் பெயர்தான் வீர முழக்கமாம்! காட்டமாம்! கடுமையாம்! நீ வதைக்கப்பட, உன் உரிமைகள் பறிக்கப்பட இலங்கை அரசு, கொள்கைகளை வகுக்கிறது! நடவடிக்கைகளை மேற்கொள்கிறது! அதற்கு மறுப்பு தெரிவிக்கமாட்டாராம்; மாண்புமிகு அமைச்சர்! அதுதான் ராஜதந்திரமாம்! நீ கேட்கும் ஈழத்தையே ஆதரிக்கமாட்டாராம் - அதை ஐ.நா.வில் சென்று பறைசாற்றுகிறார்! அடடாவோ! என்னே தமிழ் இனப்பற்று?

இந்த லட்சணத்தில், சென்னையில் உள்ள அவரது பெரும் பின்னணி கொண்ட பத்திரிகையொன்று, என் மீது சீறிப் பாய்ந்து சினத்தைக் கொட்டுகிறது!

ஐ.நா. சபை அரசியல் கமிட்டியில் பேசிய இலங்கைப் பிரதிநிதி பொன்சேகா என்பவர், நான் முரசொலியில் இலங்கைப் பிரச்சினை குறித்து எழுதிய கடிதங்கள், ஆற்றிய சொற்பொழிவுகள், ஐ.நா. மன்றத்துக்குச் சுமார் ஒரு கோடி கையெழுத்துகளுடன் அனுப்பிய முறையீடு - ஆகியவற்றிலிருந்து பல கருத்துகளையெடுத்து ஆறுபக்க அளவில் தொகுத்துப் படித்து - என்னால்தான் தமிழ் வன்முறைக் கிளர்ச்சியாளர்கள், தமிழ்நாட்டில் தளம் அமைத்துச் செயல்படுகிறார்கள் என்று வாதிட்டாராம்! அதனால் நான் குற்றவாளியாம்!

பாலஸ்தீனத்திலும், லெபனானிலும் நிலவி வரும் பயங்கர சூழ்நிலையில், வன்முறை இயக்கம் என்றாலே அனைத்து நாடுகளும் ஒன்றுபட்டு எதிர்ப்புக் குரல் கொடுக்கும் இன்றைய உலகில், கருணாநிதியின் பேச்சும், எழுத்தும் எந்த அளவுக்குப் பாதகத்தை ஏற்படுத்திவிட்டது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று அந்த அ.தி.மு.க. ஆதரவுப் பத்திரிகை, நீண்ட கட்டுரையே தீட்டியிருக்கிறது!

பாவம்! பாலஸ்தீனக் கிளர்ச்சித் தலைவன் அராபத்துக்கு இந்தியா ஆதரவு தருவதையும், அந்த அராபத்தை வரவேற்க பிரதமர் இந்திரா விமான நிலையம் சென்றதையும், டெல்லியில் நடந்த கூட்டுச் சேரா மாநாட்டில், அந்த அராபத்துக்கு முக்கிய இடம் தரப்பட்டதையும் அதற்குள் தமிழ் மக்கள் மறந்துவிட்டார்கள் என்ற எண்ணம் அந்தப் பத்திரிகையாளருக்கு!

தன் கண்ணுக்கெதிரே, தாய், தங்கை, அக்காள், தாரம் ஆகியோரின் கற்பு பறிக்கப்படுவதைச் சகித்துக்கொண்டு, இலங்கைத் தமிழ் இளைஞன் எத்தனை நாள் இருப்பான்? அதனால் அவன் ஆயுதம் ஏந்துவது தவிர வேறு வழியில்லை!

என, நான் எழுதியதும், பேசியதும் வன்முறைக்குத் தூண்டுதல் என்று பொல்லா இலங்கை அரசின் பிரதிநிதி பொன்சேகா குற்றம் சாட்டலாம் - தாய்த் தமிழகத்திலே உள்ளவர்களே அதுபோலக் குற்றம் சாட்டினால் - அதற்குப் பொருள் என்ன?

நான் எழுதியவைகளை - பேசியவைகளை ஆறு பக்கம் தொகுத்து வைத்துக்கொண்டு இலங்கைப் பிரதிநிதி பொன்சேகா ஐ.நா. அரசியல் கமிட்டியில் பேசிவிட்டாராம் -

ஆமாம்! அப்படித்தான் பேசுவோம்! எழுதுவோம்! நாங்கள் தமிழர்கள்! ஓரின மக்கள்! எங்கள் தமிழர் இலங்கையில் மாளுவதை, மானம் இழப்பதைப் பொறுத்துக் கொள்ளமாட்டோம்!

என்று பதில் அளிக்க வேண்டிய நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன், எப்படியோ மிகத் தந்திரமாக இலங்கைப் பிரதிநிதியின் வாதங்களைச் சமாளித்தாராம்!

அந்தச் சமாளிப்பை, சண்டமாருதம் என வர்ணித்துச் சப்பைக்கட்டு கட்டுகிறார்கள் பாவம்!

இனப் படுகொலையைத் தடுக்க இலங்கைக்குப் படையை அனுப்புக!

தமிழ் ஈழமொன்றே இனித் தமிழர்கள் வாழ வழி!

இவற்றை நான் மட்டுமா சொன்னேன் - சொன்னவர்கள், இன்னமும் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் யார் - யார் என்ற நீண்ட பட்டியலை நாட்டு மக்கள் உணர மாட்டார்களா?

உண்மைகளை மறைத்துவிட்டு - உணர்வுகளை அலட்சியப்படுத்திவிட்டு - உங்கள் பிரச்சினையில் நாங்கள் தலையிடமாட்டோம் என்று தலைக்குமேல் வெள்ளம் வந்த பிறகும் உறுதிமொழிகளை அளித்து - இலங்கைத் தமிழனின் உயிரை, உரிமையை, உடைமைகளை, சிங்களவரின் காலடியில் அடமானம் வைக்கும் செயலைத்தான் ஐ.நா. அரசியல் கமிட்டியில் பேசிய அமைச்சர் ராமச்சந்திரன் செய்து முடித்திருக்கிறார்.

என்செய்வது! இதுதான் தமிழனின் தலையெழுத்து!

அன்புள்ள,

மு. க.

25-10-1983

1167. பின்வாங்கும் நிலையே கிடையாது!

உடன்பிறப்பே,

இன்றைய உலகச் சூழ்நிலையில் தமிழ்ஈழ விடுதலைப் புலிகளுக்குக் கருணாநிதி அளிக்கும் ஊக்கம், ஈழத் தமிழர்களின் உரிமைக்காக நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது!

நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்களின் பெரும்பின்னணியுடன் நடைபெறும் அ.தி.மு.க. ஆதரவு ஏடு, மீண்டும் பெருந்தலைப்பிட்டு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நாம், எடுத்துள்ள நிலையைக் கண்டித்திருக்கிறது.

இந்திய அரசின் ஊதுகுழலாகச் செயல்பட்டு, சில வழவழாக் கருத்துகளை ஐ.நா.வின் அரசியல் கமிட்டியென்ற ஒரு வட்டத்திற்குள் நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் எடுத்துரைத்ததை, வீரஉரை - சூரஉரை - தீரஉரை - என்று எப்படி வேண்டுமானாலும் அந்த ஏடு எழுதித் தீர்க்கட்டும் - அதை விடுத்து நம் மீது பாய்ந்து - நமது கழகத்தின் செயல்முறைகளால்தான் இவர்கள் இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதே கெட்டுப் போய்விட்டது என்று வாதிடுவதுதான் நமக்குப் புரியவில்லை!

ஐ.நா. அரசியல் கமிட்டியில் பேசிய இலங்கைப் பிரதிநிதி, பொன்சேகா, எனது கருத்துகளை, பேச்சுகளை, கழகம் நடத்திய போராட்டங்களைச் சுட்டிக்காட்டி, என்னால்தான் இலங்கைத் தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் ஊக்கம் பெறுகிறார்கள் என்று சொல்லி விட்டாராம் - அப்படி அந்தப் பொன்சேகா பேசியது நமது மின்துறை அமைச்சருக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்திவிட்டதாம்!

என்ன செய்வார் பாவம்! அவரது அன்புக்குரிய ஏடு - அதனையும் எழுதிக் காட்டுகிறது!

ஒரு பக்கம் பண்ருட்டி ராமச்சந்திரன், இந்திராவின் கருத்தை - இந்திய அரசின் கருத்தை - எம்.ஜி.ஆரின் கருத்தை எடுத்துரைத்துக் கொண்டிருந்தார். மற்றொருபுறம் இலங்கைப் பிரதிநிதி பொன்சேகா, கருணாநிதியின் குரலை ஒலித்துக் கொண்டிருந்தார்.

இதுவும் அந்த ஏட்டில் காணப்படும் வாசகமேதான்!

இலங்கைக்குப் படை அனுப்பச் சொல்வது முட்டாள்தனம்! இலங்கைப் பிரச்சினையை ஐ.நா.வில் எழுப்பத் தேவையில்லை! இலங்கையில் தமிழ் ஈழப் பிரிவினையை இந்தியா ஆதரிக்கவில்லை. இலங்கை தமிழர் பிரச்சினையும் இப்போது நடைபெற்றுள்ள மிகப்பெரும் இனப்படுகொலையும் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை! இலங்கை உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிடாது!

இவைகள்தான் இந்திராவின் கருத்து - இந்திய அரசின் கருத்து - எம்.ஜி.ஆரின் கருத்து! இவற்றைத்தான் பண்ருட்டி ராமச்சந்திரன் அங்கே ஒலித்திருக்கிறார். நூற்றுக்கு நூறு உண்மையான செய்தி! தெரிந்தோ தெரியாமலோ அந்த ஏடு, இந்த உண்மையை வெளிப்படுத்தியதற்கு நன்றி!

ஆனால் பொன்சேகா அவர்கள், கருணாநிதியின் குரலை அங்கே ஒலித்துக் கொண்டிருந்தார் என்கிறதே! அது என்ன?

உடன்பிறப்பே, நீயும், நானும் ஈழத் தமிழ் விடுதலைக்கு ஆதரவாகப் பேசியதை, எழுதியதை, சிங்கள வெறியர் நடத்திய கொடுமைகளை விவரித்ததை, இங்குள்ள மத்திய, மாநில அரசுகளின் மெத்தனத்தைக் கண்டித்துக் குரல் எழுப்பியதை - அறப் போராட்டங்கள் நடத்தியதை - இன்னமும் தொடர்ந்து உணர்வுபூர்வமாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஆதரவாகச் செயல்படுவதை அந்தச் சிங்கள அரசின் பிரதிநிதி கடுமையாகக் கண்டித்துப் பேசி, நமது நடவடிக்கைகளையும் ஆறு பக்கங்களில் தொகுத்து ஆதாரபூர்வமாகப் படித்துக் காட்டினாராம் - அதைத்தான் கருணாநிதியின் குரல் என்று கேலி செய்கிறது அந்த ஏடு!

இந்திராவுக்கு நன்றி - எம்.ஜி.ஆருக்குப் பாராட்டு! என்று ஒரே பல்லவியைத் தினமும் பாடிக் கொண்டிருக்கிற ஆட்களைப் பிடித்து, மக்கள் மத்தியில், நிருபர்கள் மத்தியில் விட்டு - இலங்கைத்

தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்று திட்டம் தீட்டிச் செயல்படுகிறவர்களுக்கு, நமது உணர்ச்சிபூர்வமான எழுச்சி, ஏகடியத்திற்குரியதாகத்தான் தோன்றும்!

இலங்கைப் பிரதிநிதி பொன்சேகா, என் குரலை மட்டுமல்ல - தமிழக அ.தி.மு.க. அமைச்சர்கள் சிலரின் குரலைக்கூட எதிரொலித்திருக்க முடியும். இதோ அந்தக் குரல்கள்:-

இலங்கை அரசோடு பேச்சுவார்த்தைக்கே இடமில்லை! தமிழர்களைக் கொன்ற சிங்களவர்களின் பிணத்தின் மீது நின்றுகொண்டுதான் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். பீரங்கிகளும், துப்பாக்கிகளும்தான் பேச வேண்டும். அதுதான் ரத்த வெறி பிடித்த ஜெயவர்த்தனேக்குப் புரியும். இலங்கை அதிபர் ஜெயவர்த்தனேவையும், பிரதமர் பிரேமதாசாவையும் விசாரணை நடத்தித் தூக்கிலே போட வேண்டும்.

இது அமைச்சர் தம்பி காளிமுத்துவின் குரல்! இதுமட்டுமா?

மத்திய அரசு போற்றத்தக்க முறையில் நடந்து கொள்கிறது எனப் பாராட்டு வேறு கிடைக்கிறது. இது பாராட்டல்ல! மத்திய அரசுக்கு ஏற்பட்ட பயங்கரமான களங்கம்.

இதுவும் தம்பியின் குரல்தான்! இன்னும் கேள்! இனிய தம்பியின் எழுச்சிக் குரலை!

இனிமேல் அங்கே தமிழர்களுக்குத் தனிநாடு கிடைப்பதுதான் ஒரே வழி! தமிழ் ஈழம் தவிர வேறு வழியில்லை. வங்கதேசத்துக்கு எது நியாயமோ, அதுதான் இலங்கைக்கும் நியாயம்!

மேலும் கேள் முரசு முழக்கத்தை!

இந்திய அரசு, நடவடிக்கை எடுத்தால் மதிக்கப்படும். இல்லையேல் மிதிக்கப்படும்.

இதோ இன்னொரு அமைச்சர் நண்பர் எஸ்.டி.எஸ்.!

ஐக்கியநாடுகள் சபையில் இலங்கை மந்திரி அமீது இலங்கைப் பிரச்சினை பற்றி பேசினார். ஆனால் நமது பிரதமர் இந்திரா, எல்லாப் பிரச்சினை பற்றியும் பேசினார்; இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி மட்டும் பேசவில்லை. இது வருந்தத்தக்கது.

என்று குரல் கொடுத்திருக்கிறார்!

பயணிகள் ஏற்றும் கப்பலை அனுப்பிப் பயனில்லை - படைக் கப்பல்களை அனுப்ப வேண்டும்.

இதுவும் எஸ்.டி.எஸ். அவர்களின் முழக்கம்தான்!

ஆனால் - பண்ருட்டியின் பத்திரிகையில், இலங்கைப் பொன்சேகா, இந்த அமைச்சர்களின் குரலையெல்லாம் ஒலிக்காமல் எனது குரலை மட்டும் ஐ.நா. அரசியல் கமிட்டியில் ஒலித்ததாகக் கூறுவதற்குக் காரணம் என்ன?

ஒருவேளை நமது குரல் ஒருமித்த குரல் என்பதும் - அமைச்சர்களின் குரல் வெவ்வேறு விதமானது என்பதும்தான் காரணமாக இருக்குமோ!

தம்பி காளிமுத்தும், நண்பர் எஸ்.டி.எஸ்ஸும் மற்றும் நண்பர் மதுரை முத்து, புலவர் புலமைப்பித்தன் ஆகியோர் இலங்கைத் தமிழர்க்காகக் கொடுத்த குரலுக்கு எதிர்க்குரல் - எகத்தாளக் குரல் - மற்ற அமைச்சர்களிடமிருந்து புறப்பட்ட வண்ணம் இருந்ததல்லவா? அதிலும் எம்.ஜி.ஆர். அவர்களின் மிக அந்தரங்கமான மந்திரி, வீரப்பன் அவர்கள், இலங்கைக்குப் படை அனுப்புவதைக் கேலி செய்தும், தமிழ்ஈழத்தை மறுத்தும் பேசிய பேச்சுகள் கொஞ்சநஞ்சமா? எனவே இந்தக் குரல்களில் எந்தக் குரலை எதிரொலிப்பது என்று தெரியாமல் இலங்கைப் பொன்சேகா, இருக்கவே இருக்கிறான், ஊருக்கு இளைத்த பிள்ளையார்கோயில் ஆண்டி! என்று என் குரலை மட்டும் ஐ.நா. அரசியல் கமிட்டியில் எதிரொலித்திருக்கிறார் போலும்!

உடன்பிறப்பே, ஒன்றுமட்டும் உனக்குச் சொல்வேன்! யார் என்ன எழுதினாலும் - எப்படித் தாக்கினாலும் நான் கவலைப்படப் போவதில்லை! சிங்கள அரசின் சார்பில் நான் கண்டிக்கப்படுகிறேன் என்பதையும், தமிழ்ஈழ விடுதலை வீரர்களுக்கு நான் ஆதரவு காட்டுகிறேன் என்று குற்றம் சாட்டப்படுவதையும் எனக்குள்ள பெருமையாகவே கருதி - அதற்கு எந்தப் பரிசு எனக்கு அளிக்கப்பட்டாலும், ஒருவேளை அது மரணப் பரிசாகவே இருந்தாலும் மகிழ்வுடனேயே ஏற்றுக்கொள்வேன்! இதில் பின்வாங்கும் நிலையே கிடையாது.

அன்புள்ள,

மு. க.

26-10-1983

1168. வால் இல்லாத கன்று! கால் இல்லாத மனிதன்!

உடன்பிறப்பே,

தமிழகச் சட்டமன்றத்தில் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், இலங்கைப் பிரச்சினை குறித்து ஒரு நீண்ட தீர்மானம் கொண்டு வந்துள்ளார். சுருக்கமாக இலங்கை அரசின் கொடிய போக்கைக் கண்டித்தும், அங்கு நடைபெறும் தமிழ் இனப் படுகொலையைக் கண்டித்தும், உலக நாடுகளும், குறிப்பாக இந்திய அரசும், எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகளை வலியுறுத்தியும் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருந்தால் - அந்தத் தீர்மானமே கூட சட்டமன்றத்தில் உள்ள அனைத்துக்கட்சித் தலைவர்களை முன்கூட்டியே 24-10-83 காலை நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து கொண்டு கொண்டுவரப்பட்டிருந்தால் - விவாத சர்ச்சைகளுக்கு இடமில்லாமல் அவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கக் கூடும்.

ஆனால் பிரதமருக்கு நன்றி தெரிவிக்கிற வாசகங்களும், முதல்வருக்கு முதல்வரே நன்றியும், பாராட்டும் தெரிவித்துக் கொள்கிற வாசகங்களும் அமைந்த ஒரு பகுதி தீர்மானத்தில் இடம் பெற்றிருக்கிறது!

இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை - அதில் இந்தியா தலையிடாது - ஈழத் தமிழகத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை என்று ஐ.நா. அரசியல் கமிட்டியில் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள், இங்குள்ள தமிழர் எழுச்சிக்கு மாறாகக் கருத்துரை வழங்கியுள்ளதை வரவேற்கிற முறையில் மற்றொரு பகுதியும் தீர்மானத்தில் பிரதான இடம் வகிக்கிறது!

இலங்கைக் கொடுமையை எதிர்த்து நடைபெற்ற கண்டன ஊர்வலம், பொதுவேலை நிறுத்தம், கடையடைப்பு, அமைதி

ஆர்ப்பாட்டம் நடத்திய அரசியல் கட்சிகளுக்குப் பாராட்டு தெரிவிக்கும் பகுதியொன்றும் தீர்மானத்தில் வருகிறது!

இவ்வளவு விரிவாகத் தீர்மானம் பதினைந்து துணைப் பிரிவுகளைக் கொண்டதாக எழுதப்பட்டு முதலமைச்சர் கையெழுத்திட்டுக் கொண்டு வரப்படும்பொழுது, அதில் சில முக்கியமான குறிப்புகள் விடப்பட்டுவிட்டன என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் பொறுப்புள்ள அரசியல் கட்சிகளுக்கு ஏற்படுவது இயல்பேயாகும்!

தமிழ்நாட்டு மக்கள் இலங்கைக் கொடுமையைக் கண்டித்தும், இலங்கைக் கொடுமைகளுக்கு விசாரணை நடத்தித் தண்டிக்குமாறு வலியுறுத்தியும் சுமார் ஒரு கோடி கையெழுத்துக் கொண்ட முறையீட்டை ஐ.நா. மன்றத்தில் சேர்த்திருப்பது குறித்து, அந்தத் தீர்மானத்தில் ஒரு வரி கூடக் காணப்படவில்லையே! என்ன காரணம்? ஏன் இந்த இருட்டடிப்பு? என்று அவையில் உறுப்பினர்கள் கேட்டால் அதில் தவறு இருக்க முடியுமா?

ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் அணிவகுத்திட நண்பர் நெடுமாறன் அவர்கள், மதுரையில் இருந்து எட்டு நாட்கள் நடந்தே செல்லும் தியாகப் பயணத்தை மேற்கொண்டாரே! அது ஏன் அந்த நீண்ட தீர்மானத்தில் ஒரு எழுத்தாகக் கூடத் தலைகாட்டவில்லையென்று கேள்வியெழுப்பித் திருத்தத் தீர்மானங்கள் தி.மு.கழகச் சார்பில் தரப்பட்டிருக்கின்றன என்றால், அதனையும் தீர்மானத்தில் இணைத்துக்கொள்ள வேண்டியதுதானே முறை!

கழகத்தைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், டில்லிப் பட்டணத்தில் பாராளுமன்றத்திற்கருகே ஐந்து நாட்களுக்கு மேலாக உண்ணா நோன்பிருந்து உலகின் கவனத்தை இலங்கைப் பிரச்சினையின் பக்கம் கவர்ந்தார்களே! அதனை முதல்வரின் தீர்மானத்தில் இடம் பெறச் செய்திருக்க வேண்டுமல்லவா?

பங்களாதேஷ் பிரச்சினைக்காகப் பரபரப்புடன் பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய இன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், இலங்கைப் பிரச்சினைக்காக ஒரு தீர்மானம் நிறைவேற்றாமை கண்டு வருந்துகிறோம் என்ற ஒரு பகுதி, முதல்வரின் தீர்மானத்தில் இடம் பெற்றிருக்க வேண்டாமா?

பொதுப்படையாக ஒரே பகுதியாகச் சுருக்கமாக ஒரு தீர்மானத்தை, அனைவரையும் கலந்து பேசி கொண்டு வந்திருந்தால் இத்தனை பிரச்சினைகளும் எழுந்திருக்காது!

மிக மிக விரிவாகப் பதினைந்து பகுதிகளாகத் தீர்மானம் வரும்போது - அதுவும் முரண்பாடு மலிந்ததாகத் தீர்மானம் வரும்போது - பிரதமருக்கும், முதலமைச்சருக்கும், மின்துறை அமைச்சருக்கும் நன்றியும், பாராட்டும் தெரிவிப்பது ஒன்றே பெருநோக்கமாகக் கொண்டு தீர்மானம் வரும்போது - அவைமுன்னவர் நாவலர் கேட்டுக் கொண்டிருப்பது போல எப்படி ஒருமித்த கருத்துகளை வழங்கித் தீர்மானத்திற்கு ஆதரவு தர இயலும் என்பதை, நாவலர்தான் தனக்குத்தானே கேட்டுக் கொண்டு - வெளியே தெரியாமல் விடையும் அளித்துக் கொள்ளவேண்டும்!

உலக நாடுகளின் முக்கிய பிரதிநிதிகள், அதிபர்கள், பிரதமர்கள், அமர்ந்திருந்த ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பல்வேறு நாடுகளின் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் பேசிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், இலங்கைப் பிரச்சினை குறித்து மூச்சே விடவில்லை! அவரது செயலைக் கண்டித்தோ அல்லது வருத்தம் தெரிவித்தோ தீர்மானம் நிறைவேற்ற வேண்டியதற்குப் பதிலாகப் பாராட்டியும், நன்றி தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றுவதன் மர்மம்தான் என்ன?

ஐ.நா. அவையின் ஒருதுணைக் குழுவான அரசியல் கமிட்டியில் நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் பேசிக் கெடுத்ததைவிட, இந்திரா அம்மையார் பேசாமல் இருந்ததே நலம்போலும்! ஏனெனில் இந்திரா காந்தி அவர்களின் குரலைத்தான் - எம்.ஜி.ஆரின் குரலைத்தான் ஐ.நா. அரசியல் கமிட்டியில் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் ஒலித்திருக்கிறார் என ஆளுங்கட்சியினர் முழங்குகிறார்கள்.

இலங்கையில் தமிழ்ஈழம் பிரிவினையை நாங்கள் ஆதரிக்கவில்லை! இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிடாது!

இந்தத் தமிழ்இன விரோதக் குரலைத்தான் பண்ருட்டி ராமச்சந்திரன், அங்கே ஒலித்திருக்கிறார். அதைப் பாராட்டுவது என்பது இலங்கைத் தமிழர்களுக்குச் செய்யும் துரோகம்!

மூவாயிரம் தமிழர் படுகொலை! ஆயிரம் கோடி ரூபாய் சொத்து நாசம்! நூற்றுக்கணக்கில் கற்பழிப்பு! கொள்ளை! வெறியாட்டம்! இன்னமும் இந்தக் கொடுமைகள் தொடர்கதை!

இப்போதும் சொல்வதா? அது உள்நாட்டுப் பிரச்சினை என்று?

இதோ அண்மையில் டைம்ஸ் ஆப் இந்தியா எனும் பிரபல ஏடு - ஒரு வாரத்திற்கு முன்பு எழுதியுள்ள தலையங்கத்தில் என்ன குறிப்பிடுகிறது தெரியுமா?

While it is understandable that foreigners wanting to confuse issues and immobilise New Delhi on a matter of the deepest concern to it should talk of interference by this Country in Sri Lanka's "Internal affairs", it is shocking that some of us should also fall victims to this kind of interested propaganda Compaign. The future of Tamils in Sri Lanka is not just that Island's "Internal Problem" and cannot be created as such by this Country because its own vital interests are involved.

ஆழமாக அக்கறை செலுத்தப்பட வேண்டிய பிரச்சினையை, இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதாக வெளிநாடுகள் குழப்பி, டெல்லியைச் செயலாற்றவிடாமல் தடுப்பது புரிந்துகொள்ளக்கூடியதென்றாலும், நம்மவர்களில் சிலரும் அதுபோன்ற பிரச்சாரத்திற்கு இரையாகி விட்டது அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. இலங்கையிலே உள்ள தமிழர்களின் எதிர்காலம் அந்தத் தீவின் உள்நாட்டுப் பிரச்சினையல்ல. இந்தியாவின் நலன்கள் அதில் பின்னிப் பிணைந்திருப்பதால், இந்தியா அதனை உள்நாட்டுப் பிரச்சினை என்று கருதக்கூடாது.

இப்படி இந்த ஒரு ஏடு மட்டுமல்ல, உலகில் புகழ்பெற்றவையும், செல்வாக்கு மிக்கவையுமான பல ஏடுகள், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவுக்குள்ள பொறுப்பை உணர்த்தியும் - இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையெனக் கூறி, இந்தியா தட்டிக் கழிப்பது தவறு என சுட்டிக்காட்டியும், கடந்த மூன்று மாத காலமாக எழுதி வருகின்றன!

ஆனால் இன்னமும் இந்தியப் பிரதமர், உள்நாட்டுப் பிரச்சினை என்ற அந்தப் பல்லவியைப் பாடத் தவறவில்லை!

உள்நாட்டுப் பிரச்சினை என்ற காலகட்டமெல்லாம் தாண்டிப் பல நாளாயிற்றே - அதை உணர்ந்தும்கூட, செயல்படத் தயங்குகிற இந்திய அரசுக்கு எதற்காகப் பாராட்டோ? யாமறியோம் பராபரமே!

ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர், ஆக நாலு மாதங்கள் கடந்து, இப்போது தங்களுக்கும் இலங்கைப் பிரச்சினையில் வீரம் வந்து விட்டது என்று அ.தி.மு.க.வில் உள்ள எம்.ஜி.ஆர். குழுவினர், மார்தட்டிக்கொள்ள மட்டுமே இந்தத் தீர்மானம் பயன்படுமேயல்லாமல் - உண்மையில் பார்த்தால் இது ஒரு கண்துடைப்புக் காரியமேயாகும்!

தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்க ஓடுகிற கதை எனப் பழமொழியொன்று கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லவா? அதிலும் இது - வாலில்லாத கன்று! துரத்தி ஓட முனைவதோ காலில்லாத மனிதன்!

அன்புள்ள,

மு. க.

27-10-1983

1169. சவால் அல்ல! வெறும் சவடால்!

உடன்பிறப்பே,

சட்டமன்றத்தில் எம்.ஜி.ஆர். சவால்! அ.தி.மு.க. தின ஏடுகளில் முதல் பக்கத்தில் கொட்டையெழுத்தில் எட்டு காலம் தலைப்பு! என்ன சவால் தெரியுமா?

ஜனதா ஆட்சியிலும் சரி! இந்திரா ஆட்சியிலும் சரி! என்னுடைய வருமான வரிக்காகவோ, என் மீது போடப்பட்ட கமிஷனுக்காகவோ; அந்தப் பிரதமர்களிடமோ, மத்திய அமைச்சர்களிடமோ இந்த எம்.ஜி. ராமச்சந்திரனாகிய நான், ஏதாவது சலுகை கேட்டேன் என்று யாராவது நிரூபித்தால் பதவியை ராஜினாமா செய்யத் தயார்!

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், இந்தச் சவாலை, சட்டமன்றத்தில் விட்ட அதே நேரத்தில், என்னை ஒரு பிடிபிடித்திருக்கிறார். முதலில் அதற்கு விளக்கமளித்துவிட்டு அதன் பிறகு, அவரது சவாலைப் பற்றிக் கவனிப்போம்!

கருணாநிதி, தன் மீது நெருக்கடி காலத்தில் தொடரப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்குமாறு மத்திய அரசை - மொரார்ஜியைக் கோரினார்! ஜெயப்பிரகாஷ் நாராயண்கூட, வழக்கை வாபஸ் வாங்குமாறு குறிப்பிட்டு மொரார்ஜி தேசாய்க்குக் கடிதம் எழுதினார். ஆனால் மொரார்ஜி, அந்த வழக்குகளை வாபஸ் வாங்கவில்லை.

இதுதான் எம்.ஜி.ஆர். அவர்கள், சட்டசபையில் என் மீது கூறிய குற்றச்சாட்டு! சபையில் இல்லாதவர்கள் மீது குற்றம் சாட்டுகிற போது - அவர் சார்பில் உள்ள கட்சி உறுப்பினர்கள், குறுக்கிட்டு விளக்கமளிக்க அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். சின்ன ஜெயவர்த்தனேயின் ஆட்சியில் அந்த ஜனநாயகம் - வெங்காயம் எல்லாம் செல்லுபடியாகாது! தராசு, தலைகீழாகத் தொங்கும்போது மரபாவது, மண்ணாங்கட்டியாவது! பதவி பிட்சாந்தேகி! அதனால்

எம்.ஜி.ஆரின் பேச்சுக்குக் குறுக்கிட்டு விளக்கமளிக்க, சட்டசபைத் தி.மு.க. கட்சித் தலைவருக்கோ, துணைத் தலைவருக்கோ, அல்லது கழக உறுப்பினர்களுக்கோ அனுமதியளிக்கப் படவில்லை!

சிங்கங்களைக் கூண்டில் அடைத்து வைத்து விட்டால், சிறு நரிகள் எவ்வளவு வேண்டுமானாலும் ஊளையிடலாம் அல்லவா?

இதோ! எம்.ஜி.ஆர்., என் மீது சாட்டிய குற்றச்சாட்டுக்கு விளக்கம்!

1972-ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆர். அவர்கள், என் மீதும், நாவலர் மீதும், ப.உ.ச. மீதும், மாதவன் மீதும், சத்தியவாணி முத்துவின் மீதும், ஆதித்தனார் மீதும், அன்பில் மீதும் மற்றும் ராஜாராம் போன்ற அமைச்சர்கள் மீதும் குற்றச்சாட்டுகளைக் கூறி, ஒரு புகார்ப் பட்டியலை ஜனாதிபதியிடமும், பிரதமர் இந்திரா காந்தியிடமும் கொடுத்தார். அந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்பதற்கான விளக்கமான பதிலை மத்திய அரசுக்கு அனுப்பியதோடு, குற்றச்சாட்டுகளையும், பதிலையும் புத்தகமாக அச்சிட்டுச் சட்டசபையிலேயே வைத்தோம். 1975-ஆம் ஆண்டு வரையில், மத்திய அரசு, அந்தப் புகார்ப் பட்டியலின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அதனைத் தூக்கிப் போட்டு விட்டது.

1975-இல் இந்திரா காந்தி அவர்கள், பிரகடனப்படுத்திய எமர்ஜென்சி நெருக்கடி நிலையைத் தி.மு.கழகம் எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றி, கூட்டங்களில் குரல் கொடுத்து, ஜே.பி., மொரார்ஜி போன்ற தலைவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியது மட்டுமல்லாமல் - நெருக்கடி காலச் சட்டத்தால் வேட்டையாடப்பட்ட பல தலைவர்களுக்குத் தமிழ்நாட்டில் தி.மு.கழக அரசு, பாதுகாப்புக் கொடுத்தது என்ற ஆத்திரத்தில், கழக அரசைக் கலைக்கவும் இந்திரா காந்தி அம்மையார், முன் வந்தார்.

1976 ஜனவரி இறுதியில் கவர்னர் கே.கே. ஷா அவர்கள், கிண்டியில் நடத்திய காந்தியடிகள் விழாவில், என்னையும் மேடையில் வைத்துக் கொண்டு, காந்திய வழியில் கழக அரசு செயல்படுகிறது எனப் பாராட்டினார். ஆனால் அவரே, மறுநாள்

கழக அரசு, ஊழல் அரசு! எனக் கூற வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகி மத்திய அரசின் கட்டளைப்படி, டெல்லியில் முன்பே தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கையில் கையெழுத்திட வேண்டிய நிலைபெற்று, அந்த வகையில் கழக அரசு கலைக்கப்பட்டது. அப்போதுதான் இந்திரா காந்தி அம்மையாருக்கு 1972-இல் எம்.ஜி.ஆர். கொடுத்து, மூலையிலே போடப்பட்டிருந்த அந்தப் புகார்ப் பட்டியல் நினைவுக்கு வந்தது. அதைத் தேடி எடுத்துத் தூசி தட்டச் சொன்னார்கள். அந்தப் புகாருக்குப் புத்துயிர் கொடுக்க - அ.தி.மு.க. எம்.பி.க்கள் இருவரை விட்டு அது காலாவதியாகாமல் இருப்பதற்காக மேலும் ஒரு புகாரைக் கொடுக்கச் சொல்லி அந்தப் பட்டியலில் இணைத்து, 1972-இல் எம்.ஜி.ஆர். கொடுத்த புகாருக்கு சர்க்காரியா கமிஷன் நியமித்தார்கள். அந்தச் சர்க்காரியா கமிஷனுக்கு எம்.ஜி.ஆர். அளித்த வாக்குமூலத்தில் அந்தக் குற்றச்சாட்டுகளைப் பற்றித் தனக்கு நேரடியாக எதுவும் தெரியாதென்றும், யாரோ சேலத்தில் உள்ள ஒரு வக்கீல் சொன்னதை வைத்துப் புகார் கொடுத்ததாகவும் கூறி, விசாரணையிலிருந்து நழுவிக் கொண்டார்! பிறகு சர்க்காரியா கமிஷன் எப்படி நடைபெற்றது - எப்படிச் சாட்சிகளும், அதிகாரிகளும் மிரட்டப்பட்டு, உண்மைக்கு மாறானவைகளைச் சொல்லித் தங்களைக் காப்பாற்றிக் கொண்டார்கள் என்பது நாடறிந்த ரகசியம்! எம்.ஜி.ஆரின் புகார்ப் பட்டியலில் இடம்பெற்றோரில் முக்கால்வாசிப்பேர் இன்று எம்.ஜி.ஆருக்கு அருகே - அவரது பக்கத்திலே அமர்ந்திருக்கிறார்கள் என்பதும் மக்களுக்குத் தெரியாத விபரமல்ல!

எங்கள் மீது போடப்பட்ட கமிஷன், தொடரப்பட்ட வழக்கு எல்லாமே அரசியல் நோக்கம் கொண்டவையென்று, 1977-ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின்போது மொரார்ஜி தேசாய், சந்திரசேகர், அசோக்மேத்தா, ஜெகஜீவன்ராம், ஜார்ஜ் பெர்னாண்டஸ், சாந்திபூஷண் போன்ற தலைவர்கள் அனைவரும் பொதுக்கூட்டங்களில் பேசினர். நிருபர்கள் பேட்டியில் கூறினர்.

பிறகு, ஜனதா ஆட்சி அமைந்தது. தேர்தல் நேரத்தில் ஜனதா தலைவர்கள் எங்களைப் பற்றியும், எங்கள் மீது இந்திரா காந்தி அவர்களால் போடப்பட்ட வழக்குகள் பற்றியும், சர்க்காரியா கமிஷன் பற்றியும் பேசியவைகளை நினைவூட்டினோம்! அதில் என்ன

தவறு? அந்தக் கருத்தையேதான் ஜெயப்பிரகாஷ் அவர்களும் ஜனதா ஆட்சியாளரிடம் எடுத்துக் கூறி வாதிட்டார்!

1977-இல் மொரார்ஜி தலைமையில் ஜனதா ஆட்சிக்கு வந்தவுடன், ஏற்கெனவே பாதல் அவர்கள் மீது கீழ்க் கோர்ட்டில் தண்டிக்கப்பட்டு, மேல் கோர்ட்டில் அப்பீல் இருந்த ஊழல் வழக்கு ஒன்றை ஜனதா ஆட்சி, திரும்பப் பெற்றுக்கொண்டு பாதலை மத்திய அமைச்சராக்கவில்லையா? ஜார்ஜ் பெர்னாண்டஸ் மீது இந்திரா அரசு போட்டிருந்த பரோடா பயங்கர சதி வழக்கு, ஜனதா ஆட்சியில் வாபஸ் பெறப்பட்டு, ஜார்ஜ் பெர்னாண்டஸ் மத்திய அமைச்சராக்கப்படவில்லையா? பிரபுதாஸ் பட்வாரி மீது இருந்த பரோடா சதி வழக்கு வாபஸ் பெறப்பட்டு, அவர் தமிழக கவர்னராக ஆக்கப்படவில்லையா? இவையெல்லாம் எப்படி அரசியல் நோக்கத்தோடு போடப்பட்ட வழக்குகள் என்பதற்காகத் திரும்பப் பெறப்பட்டதோ அப்படித்தான், எங்கள் மீது ஜனதா தலைவர்களின் கூற்றுப்படி, அரசியல் நோக்கத்துடன் போடப்பட்ட வழக்குகளை, திரும்பப் பெற வேண்டுமென்று ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள், மொரார்ஜி தேசாயைக் கேட்டுக் கொண்டார். மொரார்ஜிக்குக் கடிதமும் எழுதினார் - வழக்குகள் திரும்பப் பெறப்படவில்லை. அதற்காகத் தி.மு.க. கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை.

சிக்மகளூரில் நடைபெற்ற இடைத்தேர்தலில் இந்திரா காந்தி போட்டியிட்டபோதும், தி.மு.கழகம் ஜனதா வேட்பாளரைத்தான் ஆதரித்தது. நானே தேர்தல் பிரச்சாரத்துக்குச் சென்றிருந்தேன். அப்போதும் என் மீது வழக்குகள் நடைபெற்றுக் கொண்டுதானிருந்தன. கடைசியாக ஜனதா ஆட்சியாளர்கள், தங்களைத் தாங்களே கவிழ்த்துக்கொண்டு இந்தியாவில், மத்திய ஆட்சியில் ஒரு நிலையற்ற தன்மை வந்த பிறகுதான் - நெருக்கடி நிலைப் பிரகடனத்திற்கும் - அதில் தனக்குத் தெரியாமல் அதிகாரிகள் பலர், நடந்து கொண்ட போக்கிற்கும் இந்திரா காந்தி அம்மையார், வெளிப்படையாக வருத்தம் தெரிவித்துக் கொண்ட பிறகுதான், இந்திரா காந்தியின் வேண்டுகோளையேற்றுக் கழகம், இந்திரா காங்கிரசுடன் 1980 பாராளுமன்றத் தேர்தலில் உடன்பாடு கொண்டது. அந்தத் தேர்தலுக்குப் பிறகும், பின்னர் சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகும் எங்கள் மீது வழக்கு நடந்து

கொண்டுதானிருந்தது. மிசா காலத்தில் எங்களுக்கெதிராகச் சாட்சியம் அளித்தவர்கள், அப்போதிருந்த சூழ்நிலையில் அவ்வாறு உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்க நேர்ந்தது என்று வாக்குமூலங்களைத் தாக்கல் செய்த காரணத்தால், மேற்கொண்டு வழக்குகள் நடைபெறாமல் திரும்பப் பெறப்பட்டது என்பதும் யாருக்கும் தெரியாத விஷயமல்ல!

இதில் சலுகை வேண்டி சரணடையவோ - மண்டியிடவோ என்ன இருக்கிறது என்பதை மகாவீரரான ? எம்.ஜி.ஆர்.தான் விளக்க வேண்டும்! முழுக்க முழுக்க அரசியல் நோக்கோடு Politically Motivated தொடரப்பட்ட வழக்குகள் என்பதும் - அமைக்கப்பட்ட சர்க்காரியா கமிஷன் என்பதும் - ஜனதா தலைவர்களால் மட்டுமல்ல, இன்று எம்.ஜி.ஆருக்கருகே அமர்ந்திருக்கும் நாவலர் நெடுஞ்செழியன், நண்பர்கள் ப.உ.ச., மாதவன், ராஜாராம் எல்லோராலுமே பொதுக்கூட்டங்களில், மன்றங்களில் திட்டவட்டமாகக் கூறப்பட்டதுதானே!

உடன்பிறப்பே, இனி, எம்.ஜி.ஆர். விடுத்துள்ள சவாலுக்கு வருவோம்!

பதவியை ராஜினாமா செய்வேன் என்று சவால் விடுவதும் - பிறகு அந்தச் சவாலை மிகவும் கெட்டிக்காரத்தனமாக மறந்து விடுவதும் எம்.ஜி.ஆருக்கு சகஜம்!

1980-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதி, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஒரு சவால் விட்டார்! இப்போது இவரது சட்டசபைச் சவால், எந்தப் பத்திரிகையில் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் வெளி வந்திருக்கிறதோ, அதேபோல அதே அ.தி.மு.க. ஆதரவுப் பத்திரிகையில் தினத்தந்தி அன்றைக்கும் வெளி வந்தது.

நான் நடிக்கத்தான் போகிறேன். இந்த ஆண்டு தீபாவளிக்கு என் படம் வெளிவரும். சொந்தத்தில், இமயத்தின் உச்சியிலே என்ற படத்தை எடுக்கப் போகிறேன். சட்டம் அனுமதித்தால் முதலமைச்சராக இருந்துகொண்டே இந்தப் பணியில் ஈடுபடுவேன். சட்டம் அனுமதிக்காவிட்டால் நண்பர்களை அந்தப் பதவியில் உட்கார வைத்துவிட்டு, இந்தப் பணியை முடித்துவிட்டு, வேண்டுமானால் மீண்டும் அங்கே போவேன்.

இவ்வாறு சினிமா எக்ஸ்பிரஸ் பத்திரிகை வெளியீட்டு விழாவில், எம்.ஜி.ஆர். சவால் விட்டு எல்லா ஏடுகளிலும் செய்தி வெளிவந்தது. அனுமதி கிடைக்காவிட்டால் முதல்வர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு சினிமாவில் நடிப்பேன். எனது நண்பர்களில் ஒருவரை முதலமைச்சராக ஆக்கிவிட்டுப் பதவியைத் துறப்பேன் என்றார். அந்தச் சவால் சவடாலாயிற்றே தவிர; சாகாவரம் பெற்று நிற்கவில்லை!

மத்திய அரசிடம் மண்டியிடாத இந்த மாவீரர் எம்.ஜி.ஆர்., அந்நிய செலாவணி வழக்கிற்குப் பயந்து கொண்டுதானே 1972-இல் கழகத்தையே இரண்டாகப் பிளக்கும் காரியத்திற்கு, மத்திய அரசுடன் பேரம் பேசி முடித்தார்!

இந்த உண்மையை நான் கூட அல்ல, இன்று அவர் அருகே இருக்கும் நாவலரும், மற்றவர்களும் எத்தனை கூட்டங்களில், எத்தனை மாநாடுகளில், எவ்வளவு கடுமையான வார்த்தைகளைக் கொண்டு பேசியிருக்கிறார்கள் என்பதற்கு ஆயிரம் ஆதாரங்கள் உண்டே!

ரே கமிஷனுக்கு, மத்திய அரசிலே யாரிடமும் சென்று சலுகை கேட்கவில்லை என்கிறாரே! கமிஷன் போடப்படும் எனத் தெரிந்ததும் - அதைப் போடாமல் தடுக்க, தோட்டத்திற்கு யார் யாரை அழைத்து விருந்து வைத்தார் என்பது நாட்டுக்குத் தெரியாதா? டெல்லியிலே மிகப் பெரும் பொறுப்பில் அன்றைக்கு அமர்ந்திருந்த ஒருவரிடம் - சென்னையில் உள்ள ஒரு பெரும்புள்ளியைத் தூது அனுப்பி, அந்தப் புள்ளி லட்சக்கணக்கில் பணத்தை மூட்டை கட்டிக்கொண்டு போய் அந்த டெல்லிக்காரரிடம் ''ரே கமிஷன் போட வேண்டாம்'' என சிபாரிசு செய்தபோது, ''சீ! பணத்தை எடுத்துக் கொண்டு போ!'' எனத் தாடியை உருவியவாறு அவர் தாண்டிக்குதித்து விரட்டியடிக்கவில்லையா? இந்த உண்மையெல்லாம் ஊருக்கு முன்னே வராது என்று எம்.ஜி.ஆர். எண்ணுகிறாரா?

1977 தேர்தலில் இந்திரா அம்மையார் வெற்றி பெற்று, மீண்டும் பிரதமர் ஆவார் என்ற நம்பிக்கையில், தமிழ்நாட்டில் நடைபெற்ற தேர்தல் கூட்டங்களில், மொரார்ஜி தேசாய் அரசியலுக்கு வருவதற்கு முன்பு, ஆர்.டி.ஓ.வாக இருந்து லஞ்சம் பெற்ற காரணத்தால் டிஸ்மிஸ் ஆனவர்! அவர் இந்தியப் பிரதமராக

வரலாமா? அவருக்கா உங்கள் ஓட்டு? எனக் கேட்டவர் எம்.ஜி.ஆர்.! ஒரு கூட்டமல்ல, இரு கூட்டமல்ல - எல்லாக் கூட்டங்களிலும் கேட்டார்!

1977-இல் மொரார்ஜி தேசாய் பிரதமராகி விட்டார்! எம்.ஜி.ஆர். தமிழகத்தில் முதலமைச்சராகி விட்டார்! எம்.ஜி.ஆர். அவர்கள், மொரார்ஜியைப் பற்றிப் பேசிய அவதூறு குறித்து வழக்கு போடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டவுடன், டெல்லிக்கு ஓடி, பிரதமர் மொரார்ஜியிடம் மன்னிப்புக் கேட்டது மட்டுமல்ல! எல்லாப் பத்திரிகைகளிலும், எம்.ஜி.ஆர். பெயரால் அறிக்கைகள் விட்டு தவறுதலாகச் சொல்லி விட்டேன் - மன்னிக்க வேண்டுகிறேன் என இந்த மாவீரர் மண்டியிட்ட வரலாற்றை மறந்தாவிட்டோம்!

எம்.ஜி.ஆர்., 1977-இல் ஆட்சிக்கு வந்தவுடன், ஒரு இந்திரா காங்கிரஸ் தொழிலதிபர் மீது வழக்கு போட்டு, கைது செய்து சிறையில் அடைத்தார். அது பயங்கரமான மோசடி வழக்கு - போர்ஜரி வழக்கு என்று சபையிலேயே எம்.ஜி.ஆர். அறிவித்தார். 1980-இல் எம்.ஜி.ஆர். பாராளுமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைந்ததும், ஆட்சியைக் கலைக்க வேண்டாமென்று இந்திரா காந்தியிடம் சிபாரிசு செய்யவும், அப்படியே கலைத்தாலும் அ.தி.மு.க.வும், இந்திரா காங்கிரசும் உடன்பாடு கொள்ள வேண்டுமென்றும், இந்திரா காங்கிரசுக்கு 120க்கு மேற்பட்ட சட்டசபை இடங்களைத் தருவதாகவும், அதற்கு இந்திரா காந்தி ஒத்துக் கொள்ளுமாறு செய்யவும், அந்தத் தொழிலதிபரையே டெல்லிக்குப் போகுமாறு வேண்டினார். அதற்காக - அந்தத் தொழிலதிபரின் மீது எம்.ஜி.ஆர். போட்டிருந்த வழக்கையும் திடீரென்று திரும்பப் பெற்றார். இப்படி மண்டியிட்ட கதையெல்லாம் யாருக்கும் தெரியாத அலிபாபா குகை ரகசியம் என்று எம்.ஜி.ஆர். நினைத்துக்கொண்டு, சட்டசபையில், சவால் விடுகிறார் போலும்!

உடன்பிறப்பே, இவர்களின் சவால் எல்லாம் வெறும் சவடாலாகப்போன கதை நீண்ட நெடுந் தொடர்கதை!

தேனி-முத்துதேவன் பட்டியில் கருணாநிதியின் மகன் அழகிரிக்கு நூறு ஏக்கர் தோட்டம் இருக்கிறது என்று கூறி, அதை நிரூபிக்கிறேன் இல்லையேல், ராஜினாமா செய்கிறேன் என்று சவால்விட்டு, பொய் ரிக்கார்டுகள் தயாரித்து, போர்ஜரி செய்து, சபாநாயகராலேயே காப்பாற்ற முடியாமல், சட்டசபையில்,

பேந்தப் பேந்த விழித்து நின்றாரே, ஒரு மந்திரி - ஆம்! மகாவீரர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தம் - அந்த ராஜினாமாச் சவால் என்ன ஆயிற்று?

அந்தச் சவாலை நிறைவேற்று என அந்த மந்திரிக்குக் கட்டளையிட எம்.ஜி.ஆருக்குத் துணிவு உண்டா? இவர் கட்டளையிட்டால் அவர் பணிவாரா? என்னையா ராஜினாமா செய்யச் சொல்கிறாய்? நாம் இருவரும் சேர்ந்து அடித்துள்ள கொள்ளையை அம்பலப்படுத்தவா? என்று அவர் திருப்பிக் கேட்டால் எம்.ஜி.ஆரின் கட்டளை என்ன ஆகும்?

இந்திரா காந்தி அவர்களை தஞ்சைத் தொகுதி இடைத் தேர்தலில் நிற்பதற்கு அழைத்து விட்டு, தேர்தலில் ஆதரவு தருவதாகக் கூறிவிட்டு, அந்த அம்மையாரும், விடியற்காலை விமானப் பயணத்திற்குத் தயாராகிவிட்ட நிலையில், இரவு பத்து மணி அளவில் பிரதமர் மொராஜி தேசாயைச் சந்தித்த பிறகு, எம்.ஜி.ஆர். என்ன ஆனார்? எப்படித் திடீர் பல்டி அடித்தார்? ஏன்? என்ன காரணம்? இந்த மர்மக் கோப்பு விவகாரமெல்லாம் ஊர் சிரித்த கதைகள் அல்லவா?

இவரா சவால் விடுவது - சல்லடம் கட்டுவது - சண்டமாருதமென முழங்குவது?

அதுவும் சட்டசபையில்! எதிரேயுள்ளவர்களின் வாயையெல்லாம் சபாநாயகர் மூலமாகக் கட்டிப் போட்டு விட்டு!

உடன்பிறப்பே, எம்.ஜி.ஆர். அவர்களின் சவால்கள் எப்போதுமே குறைமாதப் பிரசவங்கள்! வெறும் சவடால்களே தவிர வேறல்ல!

அன்புள்ள,

மு. க.

30-10-1983

1170. என் வாஞ்சைமிகு தம்பி!

நீ தோட்டத்து ரோஜாவாக இருந்தாய்! உன் இலட்சிய இதழ்களைப் பிய்த்துப் போட்டு விட்டு, முள்ளால் என்னைக் குத்தச் செய்தனர்.

முதல் நாள் கூட ஒரு கூட்டத்தில்
நீ என்னைக் குத்தியிருக்கிறாய் - ஆனால்
அது எனக்கு வலிக்கவில்லை தம்பி!

நிரந்தரப் பிரிவு என்னும் முள்ளால்
நீ என்னைக் குத்தியது தான்
ஈட்டி முனையை விடக் கூராக
என் இதயத்தைக் கிழித்து விட்டது
வலி தாங்க முடியவில்லையடா
என் வாஞ்சை மிகு தம்பீ!

நீ சென்னையிலே மாண்டபோது
நேர் வந்து காண்பதற்கும் இதயமிலார்
நினைவுப் பெயர் சூட்டுகின்றார்
பழிவாங்கும் பாதகர்க்கு
பாசமெல்லாம் வெறும் வேஷம் தம்பி!

அலை முழக்கும் கடல் போல ஆழமான உன்னை
சிலை வழக்குப் போட்டன்றோ தூர்த்து விட்டார்
தீயோர்!
பொய் வழக்குப் போட்டவர்கள் புலம்புகின்றார் இன்று
பொல பொலவெனக் கண்ணீரும் வடிக்கின்றார் நன்று!

போலிகளை அடையாளம் கண்டு கொள்ள
பொழுது விடியுமடா தம்பி!
பொறுத்திருப்போம் அதுவரையில்
புத்தி வரும் தமிழர்க்கு என நம்பி!

மு.க.

15-11-1983

1171. விழாக்கள் எனும் தேன்குடங்கள்!

உடன்பிறப்பே,

தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் காவிரி டெல்டா பகுதியில், பன்னிரண்டு லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றனர். பாசனத்துக்கு நீர் இல்லை. மேட்டூர் அணையிலும் போதிய நீர் இல்லை. தஞ்சை டெல்டாவைப் பொறுத்தவரையில், ஜனவரி மாத மத்தி வரையில் பாசனத்துக்கு நீர் தேவை. மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுவது டிசம்பர் 31-ஆம் தேதியுடன் நிறுத்தப்படுமென்று தமிழக அரசு அறிவித்து விட்டது. இதனால், விவசாயிகள் பாடு திண்டாட்டமாகிவிட்டது. கர்நாடக அரசு உதவி செய்து மேட்டூருக்குத் தண்ணீர் விடாவிட்டால், பயிர்களைப் பிழைக்க வைப்பது பெரும் கவலைக்குரிய பிரச்சினையாகி விடும்.

இப்படிச் செய்திகள் சோழமண்டலத்திலிருந்து வந்து கொண்டிருக்கின்றன. காவிரி டெல்டா பகுதி விவசாயிகளின் கவலை என்று பெருந்தலைப்பிட்டு தினமணி ஏடு இவ்வாறு விரிவான செய்தியே வெளியிட்டிருக்கிறது.

உடன்பிறப்பே, நீ என்னைப் பார்த்து முகத்தைக் கொஞ்சம் கடுகடுப்பாக்கிக் கொண்டு, காவிரியில் தண்ணீர் வந்தால் என்ன - வராவிட்டால் என்ன - விவசாயிகள் கைபிசைந்து நின்றால் என்ன - நிற்காவிட்டால் என்ன - உனக்கென்ன வந்தது? அதெல்லாம் ஆட்சியிலே இருப்போர் கவனிக்க வேண்டிய பிரச்சினை! நீ வாயை மூடிக்கொண்டு இரேன்! என்று கூறுவது என் காதில் விழாமல் இல்லை!

உன் கோபத்திற்குக் காரணமும் எனக்குப் புரிகிறது! ஆட்சியாளர்களுக்கு எவ்வளவோ வேலை - அதில் இந்தப் பிரச்சினை அவர்களுக்கு, அற்ப சங்கதியாக இருக்கலாம்! யாரும் அவர்கள் காதில் போடாமல் கூட இருக்கலாம்! தஞ்சை, திருச்சி விவசாயிகள் கூச்சல் போட்டாலும், ஆட்சியாளர்களின் செவிகளை

எட்டாத அளவுக்கு, தகத்தகாய விழாக்களில் எழுப்பப்படும் ஒலிகள் தடுத்துவிட நேரிடலாம்!

ஜொலிக்கும் நட்சத்திரங்கள் - இளிக்கும் சில இயக்குநர்கள் - இவர்களுக்கு மத்தியிலே சந்தோஷம், சல்லாபம், உல்லாசம், சர்க்கார் செலவிலே கலையுலகப் பெயரால் விழாக்கள் - வேடிக்கைகள் - அதில் மெய்மறந்து கிடக்கும் ஆட்சியாளர்களை,

அதோ கொஞ்சம் பாருங்களய்யா! தஞ்சை, திருச்சி விவசாயி கைபிசைந்து நிற்கிறான்! தஞ்சையும், திருச்சியும் குவிக்கும் நெல்மணிகள்தான் தமிழகத்தையே வாழ வைக்கக்கூடியவை! உங்கள் விழாச் செய்திகளை வெளியிட்ட ஏடுகளிலேயே இந்தச் செய்தியும் இன்னொரு பக்கத்தில் வந்திருக்கிறது! அவன் துயர் துடைக்கப் போகிறீர்களா, இல்லையா?

என்று கேட்க இதயம் துடிக்கிறதே உடன்பிறப்பே! அதைத் தடுக்க முடியுமா?

வாக்காளர்கள் மீது உனக்கும், உன்னைப்போல சிலருக்கும் கோபம் கூட இருக்கலாம்! அதற்காக எந்த நிலையிலும், என்றும்போல் தமிழ்மக்களுக்கு ஆற்றிடும் பணியைப் பிணியெனக் கருதிட முடியுமா?

எதிர்க்கட்சிகள் வாயை மூடிக்கொண்டு போர்க்கொடி உயர்த்தாமல் இருந்திருந்தால், நுழைவு வரியை நுழைய விடாமல் ஆக்கியிருக்க முடியுமா?

பிற்படுத்தப்பட்டோருக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற வரப்பிரசாதத்தின் மீது கைவைத்து - உச்சவரம்பு என்ற பெயரால் பொருளாதார அளவுகோல் கொண்டு, பெரியார், அண்ணா கொள்கைக்குக் கல்லறை எழுப்பிட, 1979-இல் எம்.ஜி.ஆர். ஆட்சி ஆணை பிறப்பித்த போது - அதை நாமும், திராவிடர் கழகமும் வன்மையாக எதிர்த்துப் போராடாமல் இருந்திருந்தால் பின்தங்கிய மக்கள் எதிர்காலம் என்ன ஆகியிருக்கும்?

மத்திய அரசின் தயவில்லாமல் மாநில அரசே விலைவாசிகளைக் குறைக்குமெனக் கூறி வாக்குப் பெற்றவர்கள், இன்று விலைவாசி உயர்ந்து கொண்டே போவதைப் பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டா இருக்கிறார்கள்? விலையைப் பற்றி என்ன கவலை? போலீசாருக்கு அண்ணா பதக்கம் கூட

கொடுக்காமல், அந்த விழாவை நிறுத்திவிட்டு, கலையைப் பற்றிக் கவலை கொண்டு நடிகைகளுக்கு விருது வழங்கியவர்களாயிற்றே!

அவர்களுக்கு மாங்கொல்லை விழா! நேரு ஸ்டேடிய விழா! சேலத்து விழா! இப்படி எத்தனையோ விழாக்கள்! படம் வேண்டுவோர் - பதவி வேண்டுவோர் எடுக்கும் பாராட்டு விழாக்களின் சத்தத்திலே, பரிதாபத்திற்குரிய மக்களின் ஈனக் குரலா கேட்கப் போகிறது!

சத்துணவு சாப்பிட்டு இளம்பிள்ளைவாதமே நீங்கிற்று - பாரீர்! பாரீர்!

என்று பாட்டுப் பாட சில ஆட்கள்! பக்க மேளம் கொட்ட சில ஆட்கள்!

அடடா! பால், பழம், வெண்ணெய், நெய், மீன், முட்டை, இறைச்சி, ரொட்டி இத்தனையும் கலந்து தரும் சத்துணவல்லவா? அதனால் இளம்வாதம் நீங்கிற்றாம்! டாக்டர்கள் சொல்லவில்லை! சில டைரக்டர்கள் சொல்கிறார்கள்! பராசக்தி படத்து கா! கா! பாட்டு, ஞாபகத்திற்கு வர வேண்டியவர்களுக்கு வந்தால் சரி! பாவம் - அவர்களும்! சாமீ சரணம் அய்யப்பா!

விழாக்களில் இளம்பிள்ளைவாதங்களும் ஒரு காட்சி! இதுவே இன்றைய தமிழகத்தின் மாட்சி! இப்படி நடக்கிறது ஆட்சி!

இதில் சோழவளநாட்டு விவசாயி, சோர்ந்து கிடக்கிறான் என்பதை எடுத்துக் காட்டுவதையோ - நாளும், தேளின் விஷமென ஏறும் விலைவாசியைக் கட்டுப்படுத்திட வேண்டுமெனப் போராடுவதையோ - நம்மைப் போன்ற எதிர்க்கட்சிகள் தட்டிக் கழித்துவிட்டால், ஜனநாயகக் கடமையை ஆற்றிடாத தவறுக்கு ஆளாகிவிட மாட்டோமா?

எனவே, விழாக்கள் எனும் தேன்குடங்களில் மயங்கிக் கிடக்கும் ஆட்சியாளர்களுக்கு, நிலையை விளக்கப் போர்க்குரல் கொடுப்போம்!

அலட்சியப்படுத்தினால், அதன் விளைவுகளை அவர்களே அனுபவிக்கட்டும்!

அன்புள்ள,

மு. க.

23-11-1983

1172. ஆயத்தமாகுக; அறப்போர் மறியலுக்கு!

உடன்பிறப்பே,

டிசம்பர் 15-ஆம் நாள்! அனைத்துக் கட்சிகளின் சார்பில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்கள் - மற்றும் மத்திய அரசுகளின் அலுவலகங்கள் முன்னால் மறியல்! அங்கிங்கெனாதபடி தமிழக முழுவதும் இந்த அறப்போராட்டம் நடைபெறுகிறது! இதற்கு முதற்கட்டமாக அரசு அலுவலகங்களின் முன்னால் ஆர்ப்பாட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டன! இப்போது மறியல் போராட்டமே நடத்திட முடிவு எடுத்து, அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது! தி.மு.கழகம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், ஜனதா கட்சி, தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ், உழவர் உழைப்பாளர் கட்சி, விவசாயிகள் தொழிலாளர் கட்சி, தமிழ்நாடு குடியரசு கட்சி, காங்கிரஸ் எஸ், காங்கிரஸ் ஜே, ஜனநாயக சோஷலிஸ்ட் கட்சி, தமிழ்நாடு பார்வார்டு பிளாக் ஆகியவற்றின் தலைவர்களும், பிரதிநிதிகளும் கலந்து கொண்ட கூட்டத்தில் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், பஸ்களை தேசியமயமாக்கிட 1973-இல் கழக அரசு, கொண்டு வந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தத் தடையேதுமில்லையென அண்மையில் சுப்ரீம்கோர்ட் வழங்கியுள்ள தீர்ப்பின் அடிப்படையில், உடனடியாக எம்.ஜி.ஆர். அரசு, அந்தச் சட்டத்தை இயக்கச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது!

இந்தச் சமதர்ம முற்போக்குத் திட்டத்தை, அண்ணா வழியில் நின்று எம்.ஜி.ஆர். அரசு, நிறைவேற்றப் போகிறதா - அல்லது கேப்டலிசம், கம்யூனிசம், சோஷலிசம் மூன்றும் கலந்ததே அண்ணாயிசம் என்று எம்.ஜி.ஆர். வெளியிட்டுள்ள அபத்தமான தத்துவத்திற்கு மேலும், வியாக்கியானங்கள் செய்து கொண்டு

பஸ் முதலாளிகளிடம் அடுத்த பேரத்தை நடத்தப் போகிறதா என்பதைச் சற்றுப் பொறுத்திருந்து பார்ப்போம்!

நீதி மன்றத்துத் தீர்ப்புகளைக் கிடப்பில் போடுவதும் - அலட்சியப்படுத்துவதும் இந்த அரசுக்கு வாடிக்கையாகி விட்ட விவகாரங்கள்!

ஸ்டீல் ரீ ரோலிங் மில்கள் செலுத்த வேண்டிய வரி குறித்து சுப்ரீம் கோர்ட், அரசாங்கத்திற்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கியது! தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கோர்ட்டுக்குப் போன வழக்கு! இரண்டு ஆண்டுக்கு முன்பு அரசுக்குச் சாதகமாக தீர்ப்பு வந்துங் கூட - அந்த மில்களின் வரியைத் தள்ளுபடி செய்து, முப்பது கோடி ரூபாய்க்கு மேல் அரசு இழந்து - மில் அதிபர்களிடம் ஒரு கோடி ரூபாய் வரையில் லஞ்சம் வாங்கிக் கொண்டார்கள்.

அதைப்போலவேதான் இப்போதும், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பஸ் முதலாளிகளை மிரட்டி, அவர்களிடம் பெற வேண்டியதைப் பெறுவார்கள் என்று நம்பகமாகச் செய்திகள் வருகின்றன. அப்படியானால், அதற்கொரு தனிப் போராட்டம் நடைபெற்றே தீரும்!

அதற்கிடையே இந்த மறியல் அறப்போர், மாநிலந்தழுவிய அளவில் மிக்க எழுச்சியுடன் நடைபெற வேண்டும்!

ஒழுங்குமுறையுடன் - ஆங்காங்கு ஆயிரக்கணக்கான தொண்டர்கள், முன்னணியினர், மறியலில் கலந்துகொள்ள மாநில ஒருங்கிணைப்புக் குழு, தனது பணிகளை மேற்கொண்டுள்ளது. மாவட்டந்தோறுமுள்ள அனைத்துக் கட்சி ஒருங்கிணைப்புக் குழுக்கள், உடனடியாகக் கூடிக் கலந்துரையாடி ஒவ்வொரு மாவட்டத்திலும், மறியல் அறப்போர் வெற்றிகரமாக அமைந்திட - மக்கள் சக்தி திரண்டிட - ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மாநில ஒருங்கிணைப்புக் குழு, தாக்கீதுகளை அனுப்பியுள்ளது.

1 உயர்ந்து கொண்டே போகும் விலைவாசிகளைக் கட்டுப் படுத்தாததைக் கண்டித்தும்,

2 உணவு தானிய அத்தியாவசியப் பண்டங்களின், பொது விநியோகத்தில் நடைபெறும் பெருத்த மோசடிகளைக் கண்டித்தும்,

3 குடும்பக் கார்டுகளுக்குக் குறிப்பிட்ட அளவு அரிசி தராமலும், மிகப் பெரும்பாலான இடங்களில் அறவே அரிசி வழங்காமலும் உள்ள அலட்சியப் போக்கைக் கண்டித்தும்,

4 மின் இணைப்புமுறையாக வழங்கப்படாமல், மின்இணைப்புத் துண்டிப்பின் காரணமாக விவசாயிகளைத் தொடர்ந்து வேதனையில் ஆழ்த்தி வருவதைக் கண்டித்தும்,

5 பலவகையிலும் தொழிலாளர்களின் உரிமைகளை முடக்குவதைக் கண்டித்தும்,

6 எதிர்க்கட்சிகளை ஒடுக்கப் பொய் வழக்கு ஜோடனைகள் - போலீஸ் அத்துமீறல், பாரபட்சம் ஆகியவற்றைக் கண்டித்தும்,

7 எங்கெங்கும், எல்லாத் துறைகளிலும் லஞ்சமும், ஊழலும் அரசின் அடிமட்டம் முதல் மேல் மட்டம் வரையில் பெருகி வருவதைக் கண்டித்தும்,

இந்த மாபெரும் மறியல் அறப்போர் நடைபெற இருக்கிறது! மேற்கண்ட ஏழு பிரச்சினைகளையும், மக்களிடம் விரிவாகவும், தெளிவாகவும், ஆதாரபூர்வமாகவும் விளக்கிட வேண்டும்! கூட்டங்கள், துண்டு அறிக்கைகள் வாயிலாக, ஆங்காங்கு மக்கள் படும் அவதிகளை எடுத்துச் சொல்ல வேண்டும்! மக்களின் சக்தியை ஒருமுனைப்படுத்தி, மறியல் அறப்போரை மகத்தான எழுச்சியை உருவாக்கிடத் தக்கவண்ணம், எல்லா ஊர்களிலும் அமைத்திட வேண்டும்!

மறியல் என்றால் கைது செய்யத்தான் செய்வார்கள்! அண்ணா காலத்திலிருந்து நமது கழகம், எத்தனையோ மறியல் போராட்டங்களில் கலந்து கொண்டிருந்திருக்கிறது!

விலைவாசி உயர்வை எதிர்த்து அரசு அலுவலகங்களில், 1962-ஆம் ஆண்டு, கழகம் நடத்திய மறியல் போராட்டத்தில் அண்ணா அவர்கள், வேலூரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மறியல் செய்து கைதாகி, வேலூர் சிறையில் இருந்தார்கள். நானும், நமது பேராசிரியரும் திருச்சி சிறையில் இருந்தோம். இன்றைய உணவு அமைச்சர் நாவலருங்கூட, அப்போது விலைவாசி உயர்வை எதிர்த்து மறியல் செய்து,

சென்னையில் சிறைப்பட்டவர்தான்! அதேபோல இப்போது மறியல் அறப்போரில் கலந்து கொள்கிற கட்சிகள் எதற்கும், மறியல் என்பது புதிதல்ல! பலமுறை சிறை சென்ற அனுபவமுள்ள கட்சிகள்தான், டிசம்பர் 15-ஆம் நாள் மறியல் போராட்டத்தை அறிவித்திருக்கின்றன!

எனவே, உடன்பிறப்பே! உன் பொறுப்பை உணர்ந்து, அனைத்துக் கட்சித் தோழர்களுடன் ஆங்காங்கு இணைந்து செயலாற்றி மறியல் அறப் போராட்டத்தை நடத்தி, இந்த ஆணவ ஆட்சியாளர்களின் மமதைப் பேச்சுகளுக்குப் பாடம் புகட்ட உடனே எழுக!

அரசுத்துறை அனைத்துமே ஆளும்கட்சியின் அடிமைத் துறைகளாக ஆக்கப்பட்டு விட்டன! ஆம்! ரசிகர் மன்றங்களாக மாற்றப்பட்டு விட்டன! அதிகாரிகள், காவல் துறையினர் - மிகப் பெரும்பாலோர் மக்கள் பிரச்சினைகளையோ, சட்டம் ஒழுங்கு பராமரிப்பையோ, சிந்திக்கவும் நேரமில்லாமல் யார் யார் கார்களுக்கோ கதவு திறந்து விட்டுக்கொண்டு - தலைதெறிக்கப் பின்னால் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்!

முகமூடி அணிந்த திருடர்கள் - அணியாத திருடர்கள் - மக்களின் பணத்தை, முறையே ஆயுதங்களைக் காட்டியும், அரசின் அதிகாரங்களைக் காட்டியும் கொள்ளை அடிக்கிறார்கள்!

வரலாறு காணாத அளவுக்கு மருத்துவக் கல்லூரி, தேர்வு ஊழலில் 140க்கு மேற்பட்ட வழக்குகள்! ஒரு சீட்டுக்கு ஒரு லட்சம் முதல் ஐந்து லட்சம் வரையில்!

வறட்சி நிவாரணப் பணிகளிலோ - ஆங்காங்கு அ.தி.மு.க. அமைப்பாளர்கள் மிக வளமாகி விட்டார்கள்!

தன்னிறைவுத் திட்டம், அமைச்சர்களுக்கும், ஆளுங்கட்சியினருக்கும் அமோக நிறைவை அளிக்கும் அமுதசுரபி ஆகிவிட்டது!

சாராயக் கடை திறப்பு விழாவுக்குப் பிறகு - சர்வமும் கொள்ளை! அதுவும் கோடிகோடியாக! சந்துபொந்துகள் எல்லாம் கிளைக் கடைகள்! மதுக்கடை திறக்க மாட்டேன் என்று மாதாவின் மீது ஆணையிட்டவர் அல்லவா? அவர் ஆட்சியிலே தான் மசூதிகள், கோயில்கள், பள்ளித்தலங்கள் இவற்றுக்கு எதிரேயெல்லாம் மதுக் கடைகள்!

நஞ்சை குலுங்கும் தஞ்சையென்போமே! அங்கேயே அரிசி விலை, கிலோ ஐந்து ரூபாயைத் தாண்டி விட்டது! மற்ற மாவட்டங்களைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை!

தேங்காய் எண்ணெய் கிலோ - முப்பத்திரண்டு ரூபாய்!

இப்படி எல்லாப் பண்டங்களும் ஏழையெளியோர் கைக்குக் கிட்டாத அளவுக்கு, எட்டாத தொலைவில் போய்க் கொண்டிருக்கின்றன!

இத்தனையும் மூடி மறைக்க, ஜொலிப்பு விழாக்கள் எனும் திரைகளைப்போடத் திட்டம் தீட்டிச் செயல்படுகிறார் திரையுலகத் திலகம்!

திசைமாறிக் காற்று அடிக்கத் தொடங்கிவிட்டது என்பதை அவர் தெரிந்து கொள்ள - அனைத்துக் கட்சித் தீரர்கள் நடத்தும் அறப்போர் மறியல் அவருக்கு உதவட்டும்!

அன்புள்ள,

மு. க.

24-11-1983

1173. மறியலுக்கு முன்னர் - மக்கள் மத்தியில்!

உடன்பிறப்பே,

குறைப்போம்! குறைப்போம்! என்று கொக்கரித்தார்கள்!
எதை? எதை? என்று கேட்டார்கள் மக்கள்!
இறக்குவோம்! இறக்குவோம்! என்று
எக்காளமிட்டார்கள்!
எதை? எதை? என்று கேட்டார்கள் மக்கள்!
கட்டுப்படுத்துவோம்! கட்டுப்படுத்துவோம்! என்று
கர்ச்சனை புரிந்தார்கள்!
எதை? எதை? என்று கேட்டார்கள் மக்கள்!

விலைவாசியைக் குறைப்போம்! அதை இறக்கியே தீருவோம்! குறைக்கவோ - இறக்கவோ முடியாவிட்டால் கட்டுப்படுத்துவோம்! இப்படிச் சொன்னவர்கள் - சூளுரை ஆற்றியவர்கள் - வேறு யாருமல்ல! நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், அவரது கட்சியினருந்தான்!

மத்திய அரசு தயவில்லாமலே, மாநில அரசின் சார்பில் விலைவாசிகளைக் குறைத்திடுவோம்! தாய்க்குலமே! என்னை வாழ வைக்கும் தாய்க் குலமே! மார்தட்டிச் சொல்லுகிறேன்! விலைவாசியைக் குறைத்து வீழ்த்திவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்!

இப்படி முழங்கினார் இன்றைய முதலமைச்சர்! அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக - மேடைகள் தோறும்! ஆதாரங்கள் அவரது கட்சிப் பத்திரிகைகளே!

உடன்பிறப்பே! அனைத்துக் கட்சித் தொண்டர்களுடன் சென்றோ - அல்லது தாய்மார்களையும், சகோதரிகளையும் சந்திக்கும் வாய்ப்பு கிட்டும் போதோ - எம்.ஜி.ஆர். அவர்கள், அன்றைக்கு அளித்த தேர்தல் வாக்குறுதியில் பிரதானமான

விலைவாசிகள் குறைப்பு வாக்குறுதி என்ன ஆயிற்று என்பதைக் கேள்! எப்படி ஏமாற்றப்பட்டார்கள் தாய்மார்கள் என்பதை எடுத்து விளக்கு!

இதோ - எம்.ஜி.ஆர். அவர்கள், விலைவாசியை எப்படிக் குறைத்திருக்கிறார் என்ற விபரங்களைத் தருகிறேன்! இவற்றை ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களாக அச்சிட்டு, ஊர்தோறும் - நகர்தோறும் வழங்கிடும் முயற்சியில் உடனே ஈடுபடுக! பெரிய தட்டிகளில் எழுதி வைத்திடுக! நோக்குமிடமெல்லாம் நீக்கமறத் தெரியுமளவுக்கு, இயன்ற வகையெல்லாம் எழுதி வைத்திடுக! சிற்றூர், பட்டிதொட்டியெல்லாம் சென்று பத்து பேர், இருபது பேர் மத்தியிலே - எம்.ஜி.ஆர். ஆட்சியிலே தமிழகம் சீரழிந்து விட்ட கதையை ஒன்று விடாமல் உரைத்திடுக!

இதோ! எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வருவதற்கு முன்பு - தி.மு.கழக ஆட்சி கலைக்கப்பட்ட நேரத்தில் இருந்த விலைவாசிக்கும், இன்று எம்.ஜி.ஆர். ஆட்சியில் உள்ள விலைவாசிக்குமுள்ள வேறுபாடு என்ன என்பதை விளக்கும் புள்ளிவிபரம்!

மங்கையர் முகத்திலிடும் மஞ்சள் - சமையலுக்குப் பயன்படுத்தும் மஞ்சள் - அன்றைக்கு 1976 தொடக்கத்தில் ஒரு கிலோ ஐந்து ரூபாய் இருபது காசு! இன்றைக்கு எம்.ஜி.ஆர். ஆட்சியில் - பதினைந்து ரூபாய்! சுமார் மூன்று மடங்கு விலை ஏறிவிட்டது!

கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது, கடுகு விலை - கிலோ இரண்டு ரூபாய் எண்பது காசு! இன்று, எம்.ஜி.ஆர். ஆட்சியிலே அந்தக் கடுகு கிலோ எட்டு ரூபாய்!

அன்று மிளகு, கிலோ பதினெட்டு ரூபாய் 1976 ஆரம்பத்தில்! இன்றோ - எம்.ஜி.ஆர். ஆட்சியில் இருபத்து எட்டு ரூபாய்!

சீரகம், 1976-இல் பதினாலு ரூபாய் ஒரு கிலோ! இன்று இந்தச் சீரழிந்த ஆட்சியிலே முப்பத்து இரண்டு ரூபாய்!

புளி - அன்றைக்கு மூன்று ரூபாய் முப்பது காசு! இன்றோ ஆறு ரூபாய் ஐம்பது காசு!

துவரம் பருப்பு - அன்றைக்கு 1976 ஆரம்பத்தில் இரண்டு ரூபாய் ஐம்பது காசு - ஒரு கிலோ! இன்றைக்கு இந்தத் தூயவர் ? ஆட்சியிலே எட்டு ரூபாய் ஐம்பது காசு!

உளுந்து விலை அன்றைக்கு கிலோவுக்கு மூன்று ரூபாய் பத்து காசு! இன்றைக்கு உத்தமர் ? ஆட்சியிலே, ஆறு ரூபாய் நாற்பது காசு!

கடலைப் பருப்பு - கழக ஆட்சியிலே, ஒரு கிலோ - இரண்டு ரூபாய்! இன்றைக்கு நாலு ரூபாய் ஐம்பது காசு!

பயத்தம் பருப்பு - அன்றைக்கு, ஒரு கிலோ இரண்டு ரூபாய் ஐம்பது காசு! இன்றைக்கு ஒரு கிலோ ஐந்து ரூபாய்!

கடலை எண்ணெய், கழக ஆட்சி கலைக்கப்பட்ட போது ஒரு கிலோ, நாலு ரூபாயும் தொண்ணூறு காசும்! இப்போது ஏழை பங்காளர் ? எம்.ஜி.ஆர். ஆட்சியிலே, பதினைந்து ரூபாய் அறுபது காசு!

நல்லெண்ணெய் நமது ஆட்சியிலே, 1976ல் ஒரு கிலோ, ஒன்பது ரூபாய் ஐம்பது காசு! இன்று இந்த நடிகர் ஆட்சியிலே, கிலோ பதினேழு ரூபாய் எண்பது காசு!

அன்று 1976-இல், ஏழு ரூபாய் விற்ற ஒரு கிலோ ரேடியோ எண்ணெய் இன்று பத்தொன்பது ரூபாய் ஐம்பது காசு!

சீயக்காய் அன்றைக்கு ஒரு கிலோ, இரண்டு ரூபாய் எழுபது காசு! இன்றைக்கு ஆறு ரூபாய் ஐம்பது காசு! 1976க்கும் 1983க்கும் உள்ள வேறுபாட்டைக் கவனித்தாயா?

1976-இல் ஒரு கிலோ புழுங்கல் அரிசி பொன்னி உயர்ந்த ரகம் - இரண்டு ரூபாய் இருபது காசு! புனிதர் எம்.ஜி.ஆர். ? அவர்களின் ஆட்சியிலோ அந்த அரிசி, ஒரு கிலோ ஆறு ரூபாய்!

அதே பொன்னி மட்டரகம் அன்றைக்கு ஒரு கிலோ, ஒரு ரூபாய் தொண்ணூறு காசு! இன்றைக்கு நாலு ரூபாய் நாற்பது காசு!

தனியா கொத்தமல்லி அன்றைக்கு 1976 தொடக்கத்திலே கிலோ ஐந்து ரூபாய்! இன்றைக்குப் பதினோரு ரூபாய்!

தேங்காய் எண்ணெய் அன்றைக்கு, கிலோ பதினோரு ரூபாய் இருபது காசுக்கு விற்றது! இன்று அதன் விலை என்ன தெரியுமா? கிலோ முப்பத்து நான்கு ரூபாய்!

மலைப்பூண்டு, அன்றைக்கு, கிலோ இரண்டு ரூபாய் முப்பது காசு! இன்றைக்கு இந்த மகராஜன் ? ஆட்சியிலே, கிலோ இருபத்திரெண்டு ரூபாய்!

தரைப் பூண்டு, அன்றைக்கு ஒரு கிலோ - ஒரு ரூபாய் தொண்ணூறு காசு! இன்று தர்மவான் ? எம்.ஜி.ஆர். ஆட்சியிலே பதின்மூன்று ரூபாய்!

ஒரு தேங்காய் விலை 1976ல் ஒரு ரூபாய்! இன்றைக்கு ஒரு தேங்காய் விலை, மூன்று ரூபாய் எழுபது காசு!

உடன்பிறப்பே! ஏழாண்டுக் காலத்தில் எம்.ஜி.ஆர்., எப்படி விலைவாசிகளை இறக்கியிருக்கிறார் பார்த்தாயா?

குறைப்பேன்! குறைப்பேன்! என்று கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்கவிட்டு விட்ட மத்திய ஆட்சியாளர்களாம் இந்திரா காங்கிரசாரையும், இந்த மாநில ஆட்சியாளர்களாம் எம்.ஜி.ஆர். கட்சியினரையும் - மக்கள் முன்னால் அடையாளம் காட்டத்தான் டிசம்பர் 15-ஆம் நாள் அறப்போர் மறியல்!

அதற்கு முன்பு, விலைவாசியைக் குறைத்திடவோ - கட்டுப்படுத்திடவோ முனையாமல், விழாக் கூத்துகளில் மிதந்து கொண்டிருக்கும் ஆட்சியாளர்களின் அநாகரிகச் சேட்டைகளை மக்களுக்கு எடுத்துக் கூறிட கிளம்பிடுக எழுஞாயிறுபோல்!

இன்றே தொடங்குக அப்பணியை! அணி அணியாகச் செயல்வீரர் குவியட்டும்! ஆயிரமாயிரம் பேர் ஒவ்வொரு ஒன்றியத்திலும் மறியல் களம் நோக்கிச் செல்லத் தயாராகட்டும்!

அனைத்துக் கட்சிகளின் கூட்டுக் குழுக்கள், நடைமுறைத் திட்டங்களை உடனடியாக வகுக்கட்டும்!

வரிந்து கட்டிச் செயலாற்றப் புறப்படுக!

வலியோர் சிலர், எளியோர் தமை வதையேபுரியும் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க ஆர்த்தெழுக!

அன்புள்ள,

மு. க.

25-11-1983

1174. அதிகாரிகளின் அவசர வேலை!

உடன்பிறப்பே,

தந்திகள் வருகின்றன! கடிதங்கள் வருகின்றன! பெருவணிகர்கள், சிறுவணிகர்கள், பொதுமக்கள் அனைவரிடமும் கிட்டிகட்டி வசூல் நடைபெறுகிறதாம்! மாவட்ட ஆட்சித் தலைவரிலேயிருந்து ஊராட்சி ஒன்றியத்து அதிகாரிகள் வரையிலே, வசூல் நோட்டுகளுடன் சூறாவளிச் சுற்றுப்பயணம் நடத்துகிறார்களாம்! அவர்களுக்கு, மக்களுக்கு அரிசி கிடைக்காததைப் பற்றிக் கவலையில்லை! பொது விநியோக முறையில் நடைபெறும் மோசடிகளைப் பற்றிக் கவலையில்லை! மழையில்லை! பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்குமா என்ற சந்தேகம் - அதற்கான முயற்சிகளில் அதிகாரிகள் முடுக்கிவிடப் படுகிறார்களா? இல்லை! இல்லவே இல்லை!

அதிகாரிகளுக்கு இப்போது இடப்பட்டுள்ள வேலையெல்லாம், மாவட்டந்தோறும், முதலமைச்சர் நிவாரண நிதி திரட்ட வேண்டும் என்பதுதான்!

அதற்காக சினிமா நட்சத்திரங்களின் கலை நிகழ்ச்சிகளாம்! அந்த நட்சத்திர நிகழ்ச்சிகளில் நுழைவுக் கட்டண மூலம் லட்சக்கணக்கில் வசூல் குவிவதைப் போல ஒரு விளம்பரம்! ஆனால் உண்மை என்ன?

அதிகாரிகள், பொதுமக்களையும், வணிகர்களையும் ஆலையிட்ட கரும்பாக்கி, வசூல் எனும் சாறு பிழிந்து, அதனைக் கலைநிகழ்ச்சி மூலம் கிடைத்த நிதியென்று விளம்பரப்படுத்தப் போகிறார்கள்!

ஒரே நபரிடம் தனித்தனியாக எல்லா அதிகாரிகளும் சென்று, அவரவர்கள் ஆற்றலையும், அதட்டலையும், அச்சுறுத்தல்களையும் காட்டி, அவரவர்கள் பங்கிற்கு வசூல் நடத்தும் கொடுமையைத்

தாங்க முடியவில்லையென்று எல்லாப் பக்கமிருந்தும் கூச்சல் கிளம்பிக் கொண்டிருக்கிறது!

முதலமைச்சர் நிவாரண நிதி வசூல் கலைநிகழ்ச்சி குறித்துக் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரும், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரும் அறிவிப்புகள் கொடுத்து விட்டார்கள் ஏடுகளில்!

இனி நாடு முழுதும் - மாவட்டம் தோறும் நட்சத்திர இரவுகள் நடைபெறுமாம்! அதிகாரிகள் அறிவிக்கிறார்கள்!

கலையுலகத்தைச் சேர்ந்தோர் - மிக முக்கியமான கட்டங்களில், அரசுக்கு நிதி சேர்த்து வழங்குவது புதிதல்ல! அந்தப் பாராட்டுக்குரிய கடமையை அவர்கள், பல நேரங்களில் செயல்படுத்தியிருக்கிறார்கள்! புயல் வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்படும்போது - போர், ஆக்கிரமிப்பு போன்ற சமயங்களில் பாதுகாப்பு நிதி தேவைப்படும்போது - சிறப்பாகக் கூற வேண்டுமானால், உலகத் தமிழ் மாநாடு போன்ற குறிப்பிட்ட ஒரு பெரிய நிகழ்ச்சியின்போது, திரையுலகத்தினர் தங்களது அரும்பணியின் வாயிலாகவும் துணைநின்று பொருளுதவி புரிந்திருக்கிறார்கள்!

ஆனால் - இப்போது அதுபோல எதுவுமில்லாத நிலையில் - ஒவ்வொரு மாவட்டத்திலும் நட்சத்திர இரவு என்றும், அதற்காக முதலமைச்சர் நிவாரண நிதி என்றும், மாவட்டத்திற்கு இருபது லட்ச ரூபாய், முப்பது லட்ச ரூபாய் எனக் கோட்டாத் தொகை ஒதுக்கப்பட்டு, அதிகாரிகள் அதே வேலையாகத் திரிந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் - அதைத் தட்டிக் கேட்பது தவறா?

சில அதிகாரிகள், இது சத்துணவு நிதி என்று கூறுகிறார்களாம்!

சத்துணவுத் திட்டத்திற்கு வரவு செலவுத் திட்டத்தில் பட்ஜெட் ஒதுக்கீடு உண்டா? இல்லையா? உண்டு என்றால் எவ்வளவு?

சத்துணவுத் திட்ட விவகாரம், பஸ் கார்ப்பரேஷன்களைப்போல, மின்சார வாரியம் போலத் தனியாக செயல்படுகிற அமைப்பின்கீழ் வருவதாகச் சொல்லப்படுகிறதே! அது உண்மையா? அல்லது தவறான தகவலா?

போக்குவரத்துக் கழகங்களுக்கோ - மின்சார வாரியத்திற்கோ - யாரும் நன்கொடைகள் தருவதில்லை! அதனால் அவற்றின் கணக்கு வழக்குகள் பற்றிய பட்ஜெட் குறித்து, சட்டசபையின் அனுமதி பெறத் தேவையில்லாமல் இருக்கலாம்!

சத்துணவுத் திட்டத்திற்கு சுமார் 120 கோடிக்கு மேல் செலவு என கூறப்படுகிறது - அஃதன்னியில் கோடிக்கணக்கில் நிதியும் திரட்டப்படுகிறது!

அந்த விபரங்கள் பட்ஜெட்டில் இடம் பெற்று, சட்டசபையின் அனுமதி பெறப்படுகிறதா?

இதற்கெல்லாம் நிதியமைச்சர் விளக்கமளித்தால் நல்லது!

ஒருவேளை, அவர் தரும் விளக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தாலும் - இப்படி மாவட்டந்தோறும் - மக்களை, விரட்டி விரட்டி வேட்டையாடி, முதலமைச்சர் நிவாரண நிதி வசூல் என்ற பெயரால், அவர்களின் முதுகெலும்பை முறிப்பது முறையல்ல என்பதை இப்போதே முடிவாகக் கூறி, நிதியமைச்சர் விளக்கத்தை ஆவலோடு எதிர்பார்ப்போமாக!

அன்புள்ள,

மு. க.

27-11-1983

1175. மாதத் தொடக்கத்தில் ஒரு மடல்!

உடன்பிறப்பே,

கடந்த ஒரு திங்களுக்கு மேலாக கழகத் தேர்தல் நிதி வழங்கும் எழுச்சிமிகு நிகழ்ச்சிகளை ஆங்காங்குள்ள மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்புகள், மனம் மகிழத்தக்க வகையில் நடத்தி வருகின்றன!

புதுக்கோட்டை மாவட்டத்தில் செலட்டூர், அரிமழம் போன்ற ஊர்களில், தேர்தல் நிதியளிப்புப் பொதுக்கூட்டங்களை மாநாடுகள் போலவே நடத்திக் காட்டினர் என்று நான், அந்தக் கூட்டங்களிலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

இதோ சேலம் மாவட்டத்தில் - சேலம் நகரில் மாதிரி மாநில மாநாட்டையே நடத்தியதுபோலவும், பாண்டமங்கலம், மேட்டூர், திருச்செங்கோடு ஆகிய இடங்களில் மாவட்ட மாநாடுகளை நடத்தியது போலவும் - அத்துணை எழுச்சியை என்னால் உணர முடிந்தது!

லாரிகளோ - பஸ்களோ ஏற்பாடு செய்து அவற்றில் வலியுறுத்தி ஏற்றி வரப்பட்ட சம்பளப் பட்டுவாடா கூட்டமல்ல!

சேலம் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களிலும் வரவேற்பு நிகழ்ச்சிகள்! கொடியேற்று விழா நிகழ்ச்சிகள்! அந்த நிகழ்ச்சிகளில்கூட, ஆயிர ரூபாய் - இரண்டாயிர ரூபாய் என்று கழக அமைப்புகளின் உடன்பிறப்புகள், எறும்புபோல் பணியாற்றி வசூலித்துத் தேர்தல் நிதி வழங்கியுள்ளனர்.

பெரியார் மாவட்டத்தில் அந்தியூர், ஈரோடு நிகழ்ச்சிகளில், முப்பதாயிர ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை வழங்கினர். ஈரோடு நகரை வென்று காட்டுகிறேன் என்று தஞ்சை நகரம், அதற்குமேல் சில நூறு ரூபாய்களை அதிகமாகத் தந்தது! புதுக்கோட்டையில் செலட்டூர் நிகழ்ச்சியிலோ இருபத்தையாயிரத்தை வழங்கினர்!

சேலத்தில் இரண்டு நாள் நிகழ்ச்சிகள் - கூட்டங்கள், வரவேற்புகள் அனைத்திலும் மொத்தமாக அறுபத்து ஆறாயிரம் ரூபாய் தேர்தல் நிதியாகத் திரண்டுள்ளது.

1960-இல் கழகத்தின் பொருளாளராக நான் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு முன்பேகூட, கழகம் திரட்டுகிற எல்லா நிதிகளுக்கும் தேவையான பணியாற்றிட நானேதான் பொறுப்பேற்க வேண்டுமென, அண்ணா அவர்களால் ஆணையிடப்பட்டு, அதனை அவர் விருப்பம்போல் நிறைவேற்றியிருக்கிறேன் உன்னைப் போன்ற உடன்பிறப்புகளின் துணையுடன்!

அன்று தொட்டு இன்று வரையில், கழகப் பணிகளுக்கு நிதி வேண்டுமென நான் கேட்டு, நீ என்றைக்குமே தரத் தயங்கியதில்லை!

நெருப்புமிழும் நெருக்கடி காலத்து மிரட்டல்களுக் கிடையிலேகூட - நீயாகப் பேருந்துகளில் ஏறிக்கொண்டு என் இல்லம் வந்து, என் கரங்களில் ஒப்படைத்த கழக நிதி ஆறு லட்ச ரூபாய்க்குமேல் இருக்குமே!

எங்கெங்கே இருந்து? நெல்லை, குமரி போன்ற நெடுந்தூரங்களில் இருந்து! எத்தனை எத்தனை பேருந்துகளில் - உன் செலவில் - நெடிய பயணம் நடத்தி - நாள்தோறும் என் வீட்டு வாசலில் கூட்டம் கூட்டமாக, ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று கழக நிதி வாரி வழங்கினாய்! அந்த நேரத்து மிசாவையும், அடக்குமுறைகளையும் பற்றிக் கவலைப்படாமல், நீயாக நேராக வந்து நித்தநித்தம் என் நெஞ்சுக்கு இதமாகத் தெம்பு வழங்கியதோடு, கழகத்திற்குக் காணிக்கையும் அளித்த உன் தொண்டுள்ளத்தை மறக்க முடியுமா?

கறுப்புக்கொடி வழக்கில் சிறையில் இருந்தோம்! அதாவது இந்திரா காந்தி அம்மையாரைக் கொல்ல முயற்சித்தோம் என்று குற்றம் சாட்டி, எம்.ஜி.ஆர். அரசு, வழக்குத் தொடர்ந்து அதன் காரணமாக சிறையில் அடைக்கப்பட்டோம்! அந்த வழக்கு ஐந்தாண்டு காலமாக இன்னமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! அது வேறு விவகாரம்! அப்படிச் சிறையில் இருந்தபோது தமிழகத்தில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியனுப்புமாறு, சிறையில் இருந்தவாறே வேண்டுகோள் விடுத்தேன். பணவிடைத்தாள் வாயிலாக நீ அனுப்பி வைத்த

நிதி, நாள்தோறும் முரசொலியில் வெளியிடப்பட்டு சுமார் நாலு லட்ச ரூபாயை எட்டியது என்பதும், அதைக்கூட பெற்றுக்கொள்ள எம்.ஜி.ஆர். அரசின் தலைமைச் செயலாளர் தயக்கம் காட்டியதும், அதனைப் பிறகு கவர்னர் பட்வாரி அவர்களிடம், நாம் ஒப்படைத்ததும் நாடறிந்த செய்திகளாகும்!

இவ்வளவு பீடிகையும் ஏன் என்று கேட்கிறாயா? கேட்கமாட்டாய், உனக்கே தெரியும்!

கூட்டங்களில், நிகழ்ச்சிகளில், அமைப்புகளின் வாயிலாக நீ, நிதி திரட்டி வழங்குவதற்கு எனது வாழ்த்துகள்! பாராட்டுகள்!

அதற்கிடையே ஆளுக்குப் பத்து ரூபாய்க்குக் குறையாமல் தலைமைக்கழக முகவரிக்கு தேர்தல் நிதியை மணியார்டர் வாயிலாக அனுப்பச் சொல்லி வேண்டுகோள் விடுத்தேனே! அதனை இன்னும் நிறைவேற்ற நீ முன்வரவில்லையே!

கூட்ட நிகழ்ச்சிகளில் கொடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ள நிதிகளில், உன்னைப் போன்றோர் ஐந்து, பத்து என்று என் கைகளில் தந்துள்ள தொகையும் சேருகிறது என்றாலுங்கூட, தனித்தனியாக உன் போன்ற உடன்பிறப்புகள் ஆளுக்குப் பத்து ரூபாய்க்குக் குறையாமல் அனுப்புகிற தேர்தல் நிதி - முரசொலியில் பெயர்ப் பட்டியலாக வெளியிடப்படுமல்லவா? மேடையில் நெருக்கியடித்துக் கொண்டு கொடுக்கும்போது - யார் கொடுத்தது? எவ்வளவு? என்பதுகூட விவரமில்லாமல் போய் விடுகிறது!

எனவே கூட்ட நிகழ்ச்சிகளில், கழக அமைப்புகளின் சார்பில் தரப்படுகிற நிதியல்லாமல், நீ அளிக்க விரும்புகிற தேர்தல் நிதியை, பொருளாளர் - தி.மு.க தலைமைக் கழகம், அறிவகம், இராயபுரம், சென்னை என்ற முகவரிக்கு மணியார்டர் செய்திடுக!

பத்து ரூபாய்க்குக் குறையாமல் - எவ்வளவு அனுப்பிட முடியுமோ அதனை, உடனடியாக அனுப்பிடுக!

உன் சிரமம் எனக்குத் தெரிகிறது! வருகிற டிசம்பர், ஜனவரி மாதங்களில் மட்டும் புதுவை, திருச்சி, மதுரை என்ற மூன்று மாநாடுகள்! அதற்கிடையே, டிசம்பர் 15-ஆம் நாள் அறப்போர் மறியல்!

என் செய்வது! இவற்றினூடே நமது கழகம், ஜனநாயகக் கடமையையும் ஆற்ற வேண்டியிருக்கிறதே!

அதற்குத்தானே உன்னிடம் உரிமையுடன் தேர்தல் நிதி கேட்கிறேன்!

பத்து ரூபாய்தானே கேட்கிறாய்? பதினைந்தோ, இருபத்தைந்தோ அனுப்பினால் கோபிக்கவா போகிறாய்? என நீ என்னைப் பார்த்து குறும்புப் புன்னகையுடன் கேட்பது புரிகிறது! அதனால்தான் பத்துக்குக் குறையாமல் என்று குறிப்பிடுகிறேன்!

நிதியனுப்பும் பணியை உடனே தொடங்கிடுக!

அதனால்தான் மாதத் தொடக்கத்தில் இந்த மடல்!

அன்புள்ள,

மு. க.

01-12-1983

1176. கடமையாற்ற - கண்மணியே! புறப்படு!

உடன்பிறப்பே,

இடையில் இன்னும் பத்தே நாட்கள்தான்! மறியல் அறப்போர் மறவர் படையில், உன் பெயரையும் இந்நேரம் இணைத்துக் கொண்டிருப்பாய்!

அனைத்துக்கட்சிகளின் சார்பில், மக்கள் முன்னால் நாம் எடுத்து வைக்கும் பிரச்சினைகள் எதையும் தீர்த்து வைக்க, மத்திய - மாநில அரசுகள் முன் வராமல் அவை செய்யும் தவறுகளுக்கு வியாக்கியானங்கள் புரிந்து கொண்டிருக்கின்றன.

விலைவாசிகளைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி குறிப்பிட்டு, பொறுப்பை பொதுமக்கள் தலையில் கட்டிவிட்டார்!

நியாய விலைக் கடைகளில் குடும்பக் கார்டுகளுக்கு சில இடங்களில் ஆறு கிலோ அரிசியும், பல இடங்களில் இரண்டு கிலோ அரிசியும் போடப்படுகிறதே! அந்த அளவை உயர்த்த முடியாதென்றும் - அத்துடன் அரிசியின் விலையும் உயர்த்தப்படுமென்றும் தமிழக நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள், நிருபர்களிடம் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

மத்திய அரசை எதிர்பார்க்காமலே மாநில அரசின் சார்பில், விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவோம் என்ற தேர்தல் வாக்குறுதியளித்து ஓட்டுப்பெற்ற எம்.ஜி.ஆரின் ஆட்சியிலே - ஏழாண்டுகளுக்கு முன்பு இருந்த விலையை விட, மூன்று மடங்கு நான்கு மடங்கு விலை ஒவ்வொரு பொருளுக்கும் அதிகமாகி விட்டது இன்று!

சில நாட்களுக்கு முன்பு நான் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விலைகள் - இந்தச் சில நாட்கள் இடை வெளியிலேயே மேலும் ஏறிவிட்டன!

உதாரணமாக, 1976 தொடக்கத்தில் ஒரு ரூபாய் என்றிருந்த ஒரு தேங்காயின் விலை இப்போது மூன்று ரூபாய் எழுபது காசு என்று குறிப்பிட்டிருந்தேன்.

அதற்குப் பிறகு மதுரைக்குச் சென்றேன்! அங்கே ஒரு தேங்காய் ஐந்து ரூபாய்க்கு விற்பதாகச் சொல்கிறார்கள்! இன்று பத்திரிகைகளில் வந்துள்ள செய்தியின்படி, தஞ்சை மாவட்டத்திலேயே ஒரு தேங்காயின் விலை நாலு ரூபாய் ஐம்பது காசு என்ற விற்பனையாகிறதாம்!

இதைப்போலவே எல்லா அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் ஏறிக் கொண்டேயிருக்கின்றன!

இதுகுறித்து எள்முனையளவும் கவலைப்படாத ஆட்சியாளர்கள், முதலமைச்சர் நிதி வசூல் ஏறிக் கொண்டேயிருக்கிறதா என்பதிலே மட்டும் ஆழ்ந்த அக்கறை செலுத்தி வருகிறார்கள்!

முதலமைச்சர் நிவாரண நிதி வசூல் செய்வதைக் கண்டிப்பவர்கள், அந்த நிதிக்குப் பணம் கொடுக்காதவர்கள்தான்!

என்று நிதியமைச்சர் டாக்டர் நாவலர், மிக ஆத்திரமாகப் பதில் அளித்திருக்கிறார்!

ஒரே நபரிடம், எத்தனை விதமான அதிகாரிகள் சென்று, எத்தனைவிதமான தொகைகளைக் கட்டாயப்படுத்தி வசூலிக்கிறார்கள் என்பதை ஆங்காங்கே உள்ளவர்கள் அறிந்து தான் இருக்கிறார்கள்!

நிதி கொடுக்காதவர்களுக்கு அதைக் கண்டிக்க உரிமையில்லையென்று நாவலர் அவர்கள், பேசுகிற புதிய தத்துவத்தை, என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. கோயிலுக்குப் போகாதவர்கள் கோயிலில் நடக்கும் அநியாயங்களைப் பற்றிக் கூறலாமா? என்று கேட்டவர்களுக்கு, அந்தக் காலத்து நாவலர் என்ன பதில் சொன்னார் என்பதை, அவரே நினைத்துப் பார்ப்பது நல்லது!

நிதி கொடுக்கிறவர்கள் வலியவந்து முதலமைச்சர் நிவாரண நிதி கொடுத்தால் அதைப் பற்றி யாரும் குறை கூறப்போவதில்லை!

அதிகார வர்க்கத்தினர் ஆங்காங்கு முடுக்கிவிடப்பட்டு, கெடுபிடி வசூல் நடைபெறுகிறது என்பதும் - அதனால் வரும் பழிபாவங்கள் அனைத்தும் நட்சத்திர இரவுகளில் கலந்து

கொள்ளும் நடிகர், நடிகைகள், இசைவாணர்கள் மீதுதான் விழுகிறது என்பதும் - ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுமக்களால் பேசிக் கொள்ளப்படுகிற வெளிப்படையான உண்மைகளாகும்!

அய்யோ! குடிசைகள் எல்லாம் கொளுத்தப்பட்டு எரிந்து கொண்டிருக்கின்றனவே! என்று பக்கத்திலேயுள்ள ஓட்டுவில்லை வீட்டுக்காரர்கள் ஓடி வந்து கதறினால் - உன் வீடு எரியவில்லையல்லவா? நீ போய் உன் வேலையைப் பார்! என்று தீயணைக்கும் நிலையத்து அதிகாரி சொன்னால் - அவருக்கும் கடமையாற்றும் பண்புக்கும் எவ்வளவு தூரமோ - அவ்வளவுதூரம் நமது தமிழக நிதியமைச்சருக்கும்! என் செய்வது! கொளுத்தி விடுபவர்களே இந்தக் கோலேந்திகளாயிருக்கும் போது!

தி.மு.கழகம் தேர்தல் நிதி வசூலிக்கவில்லையா?

என்றும் நாவலர் அவர்கள், திருவாய் மலர்ந்தருளியுள்ளார்!

ஆமாம், வசூலிக்கிறோம்! ஒவ்வொரு கட்சியும் அந்தக் கட்சிப் பணிகளுக்காக நிதி வசூலிக்கிறது! அந்தக் கட்சியின் தொண்டர்கள், கட்சியின் முன்னணியினர் சென்று வசூலிக்கிறார்கள்!

அதற்கும், ஒரு ஆட்சியின் அதிகாரிகளே சென்று, பல வகையிலும் மிரட்டி உருட்டிக் கட்டாய வசூல் செய்வதற்கும் வித்தியாசமில்லையா?

மாதாவின் மீது ஆணையிடப்பட்ட மதுவிலக்குக் கொள்கையைத் தூக்கி எறிந்துவிட்டு - மதுக்கடைகளைத் திறந்துவிட்டதால் ஆண்டுதோறும் சுமார் நூற்று ஐம்பது கோடி ரூபாய் அரசுக்கு அதிக வருமானம் வருகிறது! இதில் அமைச்சர்கள் தனி வருமானம் சேர்க்கப்படவில்லை.

அரசின் மொத்த ஆண்டு வருமானம், ஒவ்வொரு பட்ஜெட்டின் போதும் பெருகிக் கொண்டேயிருக்கிறது!

இந்த நிலையில் முதலமைச்சர் நிவாரண நிதி என்ற பெயரால், மாவட்டந்தோறும் பெருந்தொகை திரட்டி, நட்சத்திர இரவுகள் நடத்த வேண்டிய அவசியம் என்ன?

மின் துண்டிப்பால் அவதியுறும் விவசாயிகளின் கண்ணீர் ஒருபுறம்!

பொது விநியோகத்தில் நடைபெறும் மோசடிகளால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் திண்டாட்டம் ஒருபுறம்!

தாக்கியவன் மீது நடவடிக்கை எடுக்காமல், தாக்கப்பட்டவன் மீது நடவடிக்கை எடுக்கும் போலீஸ் அட்டூழியம் ஒருபுறம்!

அரிசியைப் பொங்கிச் சாப்பிட்ட காலம் போய் - இப்போது பொறுக்கிச் சாப்பிடும் நிலை வந்ததேயென்று குமுறும் குடும்பங்களின் பரிதாபம் ஒருபுறம்!

என்.எம்.ஆர். வேலையிலேயிருந்து எம்.பி.பி.எஸ். படிப்புக்கான தேர்வு வரையில், ஆயிரத்தில் தொடங்கி லட்ச ரூபாய் வரையில், தாராளமாகப் புழங்கும் லஞ்ச லாவண்ய ஊழல் ஒருபுறம்!

இத்தனையும் எம்மை என்ன செய்யும் என்ற ஆணவமுடன் - எடுத்தேன், கவிழ்த்தேன் என்று பேசிக் கொண்டிருக்கும் - செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்களின் கொட்டமடக்கத்தான்,

டிசம்பர் 15 -
மறியல் போர்!

மமதை கொண்ட ஆட்சியாளர்கள் மீது மக்கள் காட்டும் வெறுப்பை அறிவிக்கும் அறப்போர்!

இந்த அறப்போரில் - உடன்பிறப்பே! அனைத்துக் கட்சிச் செயல்வீரர்களுடன் இணைந்து நின்று சிறை செல்ல இன்றே தயாராகிக் கொள்!

ஒவ்வொரு மாவட்டத்தையும், ஒவ்வொரு ஒன்றியத்தையும், ஒவ்வொரு நகரத்தையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டேயிருப்பேன்!

மறியல் நடத்துவோர் பட்டியலில் யார் யாருடைய பெயர்கள் இடம் பெறுகின்றன என்பதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பேன்!

நாடு வாழ - நலிவு தீர - நமது கடமையாற்ற கண்மணியே! புறப்படுக!

அன்புள்ள,

மு. க.

05-12-1983

1177. தமிழகம் கிளர்ந்தெழுகிறது!

உடன்பிறப்பே,

தமிழகம் கிளர்ந்தெழுகிறது! டிசம்பர் 15-ஆம் நாள் மறியல் அறப்போருக்கு, ஒன்றியங்கள்தோறும் ஓராயிரம், ஈராயிரம் என்றும், மாவட்டந்தோறும் பல்லாயிரவர் என்றும் மறியலில் கலந்து கொள்ள அனைத்துக் கட்சிகளின் செயல்வீரர்கள், நான் முந்தி - நீ முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு போர்க்கொடி ஏந்திப் புறப்படுகின்றனர் என்ற செய்தி, நாள்தோறும் வந்துகொண்டேயிருக்கிறது,!

குக்கிராமங்களில் இருந்தெல்லாம் குரல் கேட்கிறது! கொடுங்கோலாட்சிக்கு முடிவு கட்ட, குமுறும் எரிமலைக் குரலாகக் கேட்கிறது!

ஆம்! கிராமங்களை ஆளுகின்ற ஊராட்சி ஒன்றியங்கள்தான் இன்றைக்கு ஊழலின் தொட்டில்களாக விளங்குகின்றன!

எனவே அங்கு நடைபெறும் கொள்ளை கண்டு, கொந்தளிக்கும் உள்ளத்துடன், கிராமப்புறத்திலிருக்கும் விவசாயிகளும், பாட்டாளிகளும் இந்த வேதனைக்கு முடிவே கிடையாதா என்று விழிநீர் பெருக்கி வினாக்குறி எழுப்புகின்றனர்!

வினாக்களுக்கு அவர்களே விடையும் கண்டு - மறியல் அறப்போருக்கு மார்தட்டிக் கிளம்புகின்றனர்!

மிதிக்க மிதிக்கப் புழுவும் புலியாகுமென்பர்! அப்படியானால், புலி என்ன ஆகும்? அந்த நிலைதான் இன்றைக்கு விவசாயிகளின் மத்தியில்!

பாசனத்துக்குத் தண்ணீர் இல்லை! விளைவித்த பயிருக்கும் உரிய பயன் கையில் கிட்டவில்லை! நெல்லுக்கு விலை கூட்டப்படுகிறதெனினும், இடையில் புல்லுக்கு நீர் போய்ப் பாய்வது போல இடைத் தரகர்க்கு ஆதாயம் - இளித்தவாயனாகிறான் எலும்பொடியப் பாடுபடும் விவசாயி!

தானியம் விளைவித்தோன் தரித்திரனாய் நிற்கிறான் - தந்திடுக மின்கட்டணம் என்ற வாரியம், வரிந்து கட்டிக் கொண்டு தர்பார் நடத்துகிறது! ஏற்கெனவே மின்வெட்டால் பாதிக்கப்பட்டு, ஒன்றுக்குப் பாதி உற்பத்தி செய்தவன் - இடைத்தரகனிடம் ஏமாந்து தவிக்கும்போது - இனி இல்லை உனக்கு மின்சாரம் என்று துண்டிப்பு வேலையைத் துணிந்து நடத்துகிறது இந்தத் துரைத்தனம்! உழவன், தன் தலையே துண்டிக்கப்பட்டது போல் துடிக்கிறான்!

கட்டணம் கொடுக்கக்கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டவனல்ல அந்த விவசாயி! எங்கள் கஷ்டத்தைக் கொஞ்சம் கண் திறந்து பாருங்கள் என்றுதான் கதறுகிறான்!

நட்சத்திர இரவுகளில் நாட்டம் செலுத்திடும் ஆட்சியாளருக்கு, சமுதாயத்தின் ஆணி வேராம் அந்த விவசாயிகளின் குலம் அழுகிக்கொண்டிருப்பதும் தெரியவில்லை! அவர்தம் அழுகுரலும் காதில் விழவில்லை!

மின்வெட்டு ஒரு தொடர் கதை! சோகத் தொடர்கதை! இந்த ஆட்சியில் மட்டுமல்ல! எந்த ஆட்சியிலும் அதன் தாக்குதல் உண்டு! அந்தக் கதை தொடராமல் செய்ய மத்திய அரசு, மாநிலத்தில் பெருந்திட்டங்களை விரிவுபடுத்தியிருக்க வேண்டும் - விரைவுபடுத்தியிருக்க வேண்டும்!

மத்திய அரசின் மந்தப் போக்கையும் தாங்கிக் கொண்டு - மின்வெட்டு எனும் சங்கடத்தையும் சமாளித்து - முறை வைத்தும், எத்தனை மணி நேரம் என்று காலம் கணித்தும், எந்த நேரம் முதல் எந்த நேரம் வரையில், மின்சாரம் கிடைக்குமென்று உறுதியளித்தும், அதில் சில இடங்களில் ஏற்படும் இடையூறுகளை விவசாயிகளின் பிரதிநிதிகள் எடுத்துச் சொன்னபோது, அந்த இன்னல்களைக் களைந்தும் - தவிர்க்க முடியாத மின்வெட்டுத் தொல்லையிலும் விவசாயிகளைத் தாங்கி நின்றது கழக அரசு!

ஆனால் இன்று? முதுகொடிந்து கிடக்கும் விவசாயிகளின் முனகலைக் கேட்க முடிதாங்கிகளுக்கு நினைவில்லை! முதலமைச்சர் நிவாரண நிதியினைத் திரட்ட அதிகாரிகளை மூலைக்கு மூலை முடுக்கி விட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

நட்சத்திர இரவுகள்! அரிச்சந்திரன் கதையில் நட்சத்திரய்யன் கிட்டிகட்டி வசூலித்தான் என்பார்களே! அதைப்போல நாடு முழுதும் வசூலோ - வசூல்!

இந்தக் கொடுமைக்கு எதிர்ப்புக் குரல் கொடுக்கத்தான் தமிழகம் கிளர்ந்தெழுகிறது!

விலைவாசி குறையாதாம்!
விவசாயி வேதனை தீராதாம்!

தேவைக்கு அரிசி கிடையாதாம்! அரசின் திருவிழா மட்டும் நிற்காதாம்!

போலீஸ் ராஜ்யம் நடக்குமாம்!
பொய் வழக்குகள் குவியுமாம்!
ஊழல் லஞ்சம் உலவுமாம் - அது
ஊராள்வோரோடு குலவுமாம்!

பொறுத்தது போதும்! இனிப் பொறுமையில்லை என்றே பொங்கியெழுகிறது தமிழகம்!

அமைதி வழி - அறவழி - அவ்வழியில் அணுவளவும் சிதையாமல், மறியல் களம் புக வேண்டிய நாள் நெருங்குகிறது!

அணிஅணியாய் அடலேறுகள் நடத்துகின்ற அறப்போரில் ஆயிரம், பதினாயிரம், லட்சம் என்ற தூய தொண்டர்களின் தொகை பெருகுகிறது!

தமிழகம், கிளர்ந்தெழுகிறது! தர்பாரில் இருப்போர் கேலி பேசுகின்றனர்!

உடன்பிறப்பே! ஒதியமிலார்க் கேலிகள், தேக்குமர வலிமையின் முன்னால் தூள்! தூள்! தூளேதான்!

தடைக் கற்கள் உண்டெனினும்
தடந்தோள் உண்டெனச் சிரித்துத்
தகர்த்தெறியத்
தமிழகம் கிளர்ந்தெழுகிறது!

ஓ! நீயும்தான் அந்த அறப்போர் அணியில் போர்க்கொடி உயர்த்திப் பீடுநடை போடுகின்றாய்! வாழ்க நீ! வெல்க நீ!

அன்புள்ள,

மு. க.

07-12-1983

1178. சட்டம் பேசுமாம்! பேசட்டும் கேட்போம்!

உடன்பிறப்பே,

மறியல் செய்தால் சட்டம் பேசும் என்று மதிப்பிற்குரிய உணவு, நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள், எச்சரிக்கை செய்துள்ளார்.

பாவம்! நாவலர் அவர்கள், தனது தலைவராக ஏற்றுக் கொண்டுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியிலே மறியல் நேரத்திலாவது சட்டம் பேசும் என்று ஒரு நல்ல செய்தியைக் கூறியிருப்பதற்காக நன்றி தெரிவிக்கத்தான் வேண்டும்! ஏனென்றால் இந்த ஆட்சியிலே, பெரும்பகுதி நேரம் சட்டம், ஊமையாகத்தான் கிடக்கிறது!

புட்லூர் தண்டபாணி கொலை செய்யப்பட்டு, ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.வினால் குளத்தில் மிதக்க விடப்பட்ட கொடுமையை ஆதாரங்களுடன் சட்டமன்றத்தில் எடுத்துக்காட்டியபோது, பேச முடியாமல் கிடந்த சட்டம்!

இளங்கொழுந்து இளஞ்செழியன் ஆளுங்கட்சியினரால் மண்டை பிளக்கப்பட்டு கொல்லப்பட்ட போது, பேச முன் வராத சட்டம்!

திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் அதிகாரி சுப்பிரமணிய பிள்ளையைக் கொன்றவர்களும் - உண்டியலை உடைத்துத் திருடியவர்களும் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. உள்ளிட்ட ஆளுங்கட்சிக் காரர்கள்தான் என்ற நீதிபதி பால் கமிஷன், சுட்டிக்காட்டிய பிறகும், பேச நா எழாமல் சும்மாவே சுருண்டு கிடந்த சட்டம்!

திருத்தணி கோயில் விடுதியில், ஆளுங்கட்சியினரால் கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டாளே லட்சுமி என்ற பெண் - அப்போது வாயைப் பொத்திக்கொண்டு பேசாமடந்தையாக இருந்த சட்டம்!

திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதியில், ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.வினால், பலாத்காரமாக துன்புறுத்தப்பட்டு - அதன் காரணமாகத் தற்கொலை செய்து கொண்டு உயிர்விட்டாளே ராஜகாந்தம் என்ற பெண்மணி - அப்போது அடங்கி ஒடுங்கி ஆமைபோலக் கிடந்த சட்டம்!

ஆட்டி வைத்தபடி ஆடாத காரணத்திற்காக, திண்டுக்கல் மாலா என்ற இளம் பெண்ணை உயிரோடு கொளுத்திச் சாம்பலாக்கி விட்டு, அவளின் உறவினர்கள் வந்து சேர்வதற்குள் கொலையை மறைத்து விட்டார்கள் ஆளுங்கட்சிப் பெண் பேச்சாளர் குடும்பத்தார், என்பதைச் சட்டசபையில் பல ஆதாரங்களுடன் எடுத்துக்கூறியபோது, இறுக வாயைப் பொத்திக்கொண்டு பேசாமல் கிடந்த சட்டம்!

இந்திரா நகர் பிரேமாவின் கொலையினைப் பற்றி, இன்றுவரையில் மூச்சடக்கிப் பேச்சடக்கிக் கிடக்கும் சட்டம்!

படாபட் ஜெயலட்சுமி, ஷோபா, இன்னும் சில நடிகைகள் அண்மைக் காலம் வரையில், மர்மமான முறையில் மரணமடைந்துள்ளனர் என்று மக்கள் மன்றம் அறிந்திருந்தும்கூட, அது குறித்துக் கவலைப்படாமல் மௌனம் சாதிக்கும் சட்டம்!

திரிசூலம் என்னுமிடத்தில் கல்உடைப்பதில் பெரும் ஊழல் செய்து, மாவட்டக் கலெக்டரே மனமுடைந்து முப்பதாயிர ரூபாய் அபராதம் செலுத்த உத்தரவு போட்டும்கூட - அந்த உத்தரவை உதாசீனப்படுத்தி விட்டுத் தொடர்ந்து ஊழல்புரிந்த ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. குறித்துச் சட்டமன்றத்தில் ஆதாரங்களை எடுத்து வைத்த பிறகும், பேசத் திராணியற்றுப் போன சட்டம்!

நெகமம் காவல் நிலையத்தில் கைது செய்து வைக்கப்பட்டிருந்த தனது மகனைப் பலாத்காரமாக விடுதலை செய்து, அங்கிருந்த போலீஸ் அதிகாரியையும் தாக்கிவிட்டு வெளியேறிய ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.யின் மீது, கைவைக்க அஞ்சி கைகொண்டு வாய் புதைத்துக் கிடக்கின்ற சட்டம்!

திருச்செங்கோடு வட்ட அலுவலகத்தில் துணைத் தாசில்தார் சரவணனை, சங்ககிரி ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. அலுவலகத்திற்குள்ளேயே நையப் புடைத்த நிகழ்ச்சி கண்டும், நாவசைக்க முயன்றிடாத சட்டம்!

திருப்பாதிரிப்புலியூரில் மதுவிலக்குக் குற்றத்தில் கைது செய்யப்பட்ட அ.தி.மு.க. அமைப்பாளரைப் போலீஸ் நிலையம் புகுந்து அதிகாரியைத் தாக்கி, சாவியைப் பிடுங்கி, ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. ஒருவர் விடுவித்துக் கொண்டு போனாரே! அப்போது பேச முடியாமல் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்த சட்டம்!

திருவொற்றியூர், ஈரோடு போன்ற இடங்களில் கோர்ட் வாரண்டுடன் தேடப்பட்ட ஆளுங்கட்சி நபர்கள், முதலமைச்சரும், அமைச்சர்களும் பங்கு கொண்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாற்றியதைக் கண்டும் காணாமல் நடந்து கொண்டு - ஓடிஒளிந்து கொண்ட சட்டம்!

பரமக்குடித் தாசில்தாரை அலுவலகத்திலேயே தனது ஆட்கள் புடைசூழ ஒரு ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. தாக்கியபோது, பேசமுடியாமல் தடுமாறித் தத்தளித்த சட்டம்!

போளூர் தொகுதியில் பேருந்து ஒன்றை சற்றுத் தள்ளி நிறுத்தினார் என்பதற்காக - ஓட்டுநரை அடித்துத் தாக்கிய ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. விடம், வளைந்து கொடுத்து வாய் பேசாமல் போன சட்டம்!

மதுரை சுந்தரம் போக்குவரத்துக் கம்பெனியில், இராமனாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்கள் நுழைந்து - இராமன் என்பவரைக் கடத்திக் கொண்டு சென்றனரே! அப்போது நெளிந்து கொடுத்துப் பேச வக்கின்றி வகையின்றிப் போன சட்டம்!

திருவில்லிபுத்தூர் காவல்நிலையத்தில், மதுவிலக்குக் குற்றவாளிகளை விடுவிக்க மறுத்த போலீஸ் அதிகாரியை, ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.வும், அவரது ஆட்களும் தாக்கியபோது, எழுந்து நடமாட முடியாமல் ஏக்கப்பெருமூச்சு மட்டுமே விட்டுக் கொண்டிருந்த சட்டம்!

ஆளுங்கட்சிக்குள்ளேயே மூண்ட குழப்பத்தில் கொலையுண்ட நாகர்கோயில் டார்வின், ஆற்காடு அ.தி.மு.க. தொண்டர் ஒருவர் - இந்த இரண்டு கொலை வழக்குகளிலும் பேசாமல் கிடந்த சட்டம்!

இப்படி ஏடு கொள்ளாத எண்ணற்ற கொலை, கொள்ளை, கற்பழிப்பு விவகாரங்களில் ஆளுங்கட்சியினரைக் கண்டு அடங்கிவிட்ட சட்டம்!

இப்போது எதிர்க்கட்சிகள் நடத்தும் மறியல் அறப்போரின்போது பேசப் போகிறதாம்!

பேசட்டும்! தாராளமாகப் பேசட்டும்! காங்கிரஸ் ஆட்சியின்போது விலைவாசி உயர்வைக் கண்டித்து, அண்ணாவும், நானும், பேராசிரியரும், நாவலரும், நண்பர் ப.உ.ச.வும் மறியல் போராட்டம் நடத்தி சிறைக் கைதிகளாக இருந்திருக்கிறோம்! ஆம்! சட்டம் அப்போதும் பேசியது!

அவ்வளவு ஏன்? தேங்காய் ஒன்று ஒரு ரூபாயும் - அல்லது அதற்குக் குறைவாகவும் விற்றபோது - தேங்காய் எண்ணெய் ஒரு கிலோ பதினோரு ரூபாய் விற்றபோது - அதாவது கழக ஆட்சியில் - நாவலரின் இன்றைய தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், மதுரையிலும் - அவரது கட்சியினர் தமிழக முழுதும் ஒருநாள் உண்ணாவிரதமிருந்தார்களே - இப்போது ஒரு தேங்காய் ஐந்து ரூபாயும் - தேங்காய் எண்ணெய் முப்பத்துநாலு ரூபாயும் விற்கும்போது, அனைத்துக் கட்சிகள் அறப்போரில் ஈடுபட்டால் - சட்டம் பேசும்! என்கிறாரே! நாவலர் அவர்கள், மனச்சாட்சியுடன்தான் பேசுகிறாரா?

போராட்டம் நடத்தும் கட்சிகளின் தலைவர்களுக்கு வீரமில்லை - தீரமில்லை என்றும், அறுபது வயதைக் கடந்துவிட்டவர்கள் என்றும், மணிவிழாக் கொண்டாடி மூன்றாண்டுகளை முடித்து விட்ட நாவலர் அவர்கள், கேலி பேசியிருக்கிறார்!

தொண்ணூற்று ஐந்து வயது வரையில், போர்க்குணம் மாறாது வீரதீரத்துடன் களம்புகுந்த பெரியாரின் தலைமையை, ஒரு காலத்தில் ஏற்றுக் கொண்டிருந்த பட்டாளத்துச் சிப்பாய்களில் ஒருவரான நாவலரா, இப்படிக் கட்சித் தலைவர்களின் வயது குறித்து ஏளனம் புரிவது?

என்செய்வது! வயதை மறைத்துக் கொள்ளத் தெரியாமல் நாங்களும், கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களும் உண்மை வயதைச் சொன்னதால், நாவலர், இவ்வாறு ஏகடியம் செய்கிறார்!

வயதில் அறிவில் முதியார் - நாட்டின்

வாய்மைப் போருக்கு என்றும் இளையார்

என்ற புரட்சிக்கவிஞரின் பாடலை மேடைதோறும் முழங்கிய நாவலரின் நாவிலா, இந்த நையாண்டி நர்த்தனம்?

உடன்பிறப்பே, ஆளுங்கட்சியினர் கெக்கலிப்பு கொட்டக் கொட்ட - கேலிகளை வீச வீச - நீயும், நமது அன்புக்குரிய அனைத்துக் கட்சித் தொண்டர்களும் மேலும், பலமடங்கு உற்சாகத்துடன் - உத்வேகத்துடன் - அறப்போர் மறியலில் கலந்து கொள்ளும் சூழலே உருவாகும் என்பதை நானறிவேன்!

முதியோர்

இளையோர்

ஆடவர்

பெண்டிர்

அனைவரும் அணிவகுத்திட - ஆணவம் நொறுங்கிட - அறப்போர் மறியல் டிசம்பர் 15-ஆம் நாள்!

சட்டம் பேசுமாம்! பேசட்டும் கேட்போம்!

அன்புள்ள,

மு. க.

09-12-1983

1179. நமது மறியல் அறப்போரின் நோக்கம்!

உடன்பிறப்பே,

அனைத்துக் கட்சியினர் நடத்த இருக்கும் மறியல் அறப்போர் குறித்து முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகளைக் கொண்ட கூட்டம் ஒன்றை நடத்தியிருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. அந்தக் கூட்டம் அல்லது மாநாடு முடிந்த பிறகு அவர், செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

அரசாங்கப் பணியைச் செய்வதற்காக அலுவலகம் செல்லும் அலுவலர்களைக் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தப் போகிறார்களா? அல்லது தடுத்து நிறுத்தப் போகிறார்களா? குறுக்கே படுத்து மறிக்கப் போகிறார்களா? என்பதையெல்லாம் பொறுத்துத்தான் நடவடிக்கை இருக்கும்.

இந்த வாசகங்கள் அவரது பேட்டியின் போது உதிர்க்கப்பட்டுள்ளன.

தி.மு.க. நடத்திய எந்தவொரு மறியல் அறப்போராட்டத்திலும் கலந்து கொண்ட அனுபவம் இல்லாத காரணத்தினால், முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கு, இப்படிப்பட்ட ஒரு கற்பனைக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

தி.மு.க.வும் சரி, மற்ற கட்சிகளும் சரி, மறியல் அறப்போராட்டங்களை எப்படி நடத்தியிருக்கின்றன என்பது நாடறிந்த உண்மையாக இருக்கும் போது - திடீரென்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு, இப்படியொரு கற்பனைக் குழப்பம் உதயமானதுதான் ஆச்சரியமாயிருக்கிறது!

மறியல் அறப்போர் நடத்துவதற்கென அறிவிக்கப்பட்டுள்ள அலுவலகங்களின் முன்னால், வாயிற்புறத்தின் குறுக்கே போய்

மறியல் செய்யும் அணியினர் நிற்பார்கள். அலுவலகம் செல்லும் அலுவலர்க்கு வேண்டுகோள் விடுப்பார்கள். அதற்குள்ளாகக் காவல்துறையினர் சென்று நுழைவாயிலின் குறுக்கே நிற்கும் மறியல் வீரர்களைக் கைது செய்து அழைத்துச் செல்வார்கள்! அடுத்தடுத்து வருகிற அணிகளையும் அவ்வாறே கைது செய்து அழைத்துச் செல்வார்கள்!

முதல் அணியினர் கைது செய்யப்பட்ட பிறகு, அடுத்தடுத்து வருகிற அணியினரை அவர்கள், அலுவலகங்களின் நுழைவாயிலை நெருங்கு முன்னரே கைது செய்து விடுவதும் உண்டு!

முதல் அணியினரேகூட, குறிப்பிட்ட இடத்திலிருந்து புறப்படும்போது - அவர்கள் புறப்பட்ட சிறிது தொலைவிலேயே கைது செய்யப்பட்ட நிகழ்ச்சிகளும் உண்டு!

1981-ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக சென்னை இலங்கைத் தூதுவர் அலுவலகத்தின் முன்னால் நாள்தோறும், மறியல் அறப்போரில் தி.மு.கழகம் ஈடுபட்டது!

சென்னை மாவட்டக் கழக சார்பில் நடைபெற்ற அந்த மறியல் அறப் போராட்டத்தில் - மறியல் அணியினரை, அண்ணா சாலையில் சிறிது தூரம் நடக்கவிட்டுப் பிறகு கைது செய்தனர். ஒருநாள் அப்படி நடந்தது! இன்னொரு நாள் அந்த அணி, புறப்பட்ட அண்ணா சிலைக்கு அருகிலேயே கைது செய்தனர்! அந்த மறியலில் நான் ஈடுபடுவதாக அறிவித்தபோது - காலையில் வீட்டிலிருந்து புறப்படும் போதே எங்களைக் கைது செய்தனர்!

விலைவாசி உயர்வுக் கண்டன மறியல் அறப்போரில் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு, வேலூர் கலெக்டர் அலுவலகத்தின் முன்னால் மறியல் செய்தார்கள். நாவலர் அவர்கள், சென்னைக் கலெக்டர் அலுவலகத்தின் முன்னாலும், பேராசிரியர் மதுரையிலும், நான் தஞ்சையிலும் அந்த மறியல் அறப்போரில் ஈடுபட்டுக் கைது செய்யப்பட்டோம். அந்த மறியல் போராட்டத்தில் இருபதாயிரத்திற்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்ட போதிலும் - அரசாங்கம் கொடுத்த கணக்கு, குறைவாகத்தான் இருந்தது!

மறியல் அறப்போர் வரலாறுகள் இப்படியிருக்கும்போது - முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், வீணாகத் தன்னை ஒரு கற்பனைக் குழப்பத்தில் ஆழ்த்திக் கொண்டு - ஏதோ, அலுவலுக்கு வருகின்றவர்களிடம் மறியல் அணியினர்

வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதற்குத் தயாராகிக் கொண்டிருப்பதுபோல, செய்தியாளர்களிடம் பேசியிருப்பது வெறும் குதர்க்கவாதமேயாகும்!

எந்த எம்.ஜி.ஆர். தெரியுமா? 1980-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட போது, அதைக் கண்டித்து அண்ணாசாலையில் பேரணியொன்றை நடத்தினாரே - அப்போது அந்தப் பேரணியில் வந்தவர்கள் இருநூறு பேர் போலீஸ் நிலையத்தில் புகுந்து, துப்பாக்கிகளைக் கைப்பற்றினர் என்று, அவரே மீண்டும் முதலமைச்சராக வந்த பிறகு சட்டசபையில் அறிக்கை வைத்தாரே! அந்த எம்.ஜி.ஆர். அவர்கள்தான் இப்போது நிருபர்களிடம் இப்படியொரு கற்பனைக் குழப்பத்தை வெளியிட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல! அந்தப் பேரணியில் அப்படியொரு அராஜக அமளியை விளைவித்தவர்கள் சமூக விரோத சக்திகள் என்றும் அவரே அறிவித்துவிட்டு - அதற்கு பிறகு அவர்கள் மீதுள்ள வழக்குகளையும் திரும்பப் பெற்றவர்தான் இந்த எம்.ஜி.ஆர்.!

ஒரு துளி வன்முறையும் தலைகாட்டாமல், அமைதியான முறையில் மறியல் அறப்போரை நடத்த வேண்டுமென்றுதான் அனைத்துக் கட்சிகளும் இணைந்து முடிவெடுத்திருக்கிறோம். ஆனால் எம்.ஜி.ஆர். அவர்கள், அனைத்துக் கட்சியினரும் அரசின் முன்னால் எடுத்து வைக்கும் மக்கள் பிரச்சினையைத் திசை திருப்பும் வகையில், ஏதேதோ செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார்.

எப்படியும் அலுவலகங்கள் நடந்தே தீரவேண்டும். தபால் தந்தி ஆபீசை நடத்தவிடாமல் செய்தால், எத்தனையோ துன்பச் செய்திகள், ஆபத்தான செய்திகள், மங்களகரமான செய்திகள் அனுப்ப முடியாமல் போய் விடும். அலுவலகங்களுக்கு அலுவலர் சென்று வேலை செய்தாக வேண்டும். ஆபீஸ்களில் வேலை நடக்காவிட்டால் மேலும் விலை உயரத்தான் செய்யும்.

இதுவும் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் செய்தியாளர்களிடம் கூறிய பொன்னுரைகள்தான்! சென்னைப் பல்கலைக் கழகம் அவருக்கு, டாக்டர் ஆப் லாஸ் LAWS என்று பட்டமே கொடுத்திருக்கிறது! அண்ணாவுக்கு, எனக்கு, நாவலருக்கு அளிக்கப்பட்ட டாக்டர் பட்டங்கள் எல்லாம் டாக்டர்

ஆப் லிட்ரேச்சர் டி.லிட் - அதாவது இலக்கியப் புலமையாளர்கள் என்பதற்காக! ஆனால், இவருக்கு, டாக்டர் ஆப் லாஸ் என்றல்லவா பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது!

பட்டம் பெற்றமைக்கு மீண்டும் எனது பாராட்டுகள்! ஆனால், அதற்காகச் சட்டத்தையும் போட்டுக் குழப்பி விடக்கூடாது என்று பணிவன்புடன் அவரைக் கேட்டுக் கொள்கிறேன்!

மறியல் அறப்போரில் ஈடுபடுகிறவர்களுக்கு - எந்தவொரு அரசு அலுவலகமும் டிசம்பர் 15-ஆம் நாளன்று இயங்கவே கூடாது என்பது நோக்கமல்ல!

அப்படி அலுவலகங்கள் இயங்கக்கூடாது - ஆலைகள் ஓடக்கூடாது - போக்குவரத்துகள் கூடாது - என்று அறிவிக்கும் போராட்டத்திற்கு பந்த் என்றும், முழு அடைப்பு என்றும் பெயர்!

மறியல் வேறு - பந்த் அல்லது முழு அடைப்பு என்பது வேறு! இரண்டையும் ஒன்றாகக் கருதிக் கொண்டு ஒரு முதலமைச்சர் பேசுவது முறையல்ல! அதுவும் டாக்டர் ஆப் லாஸ் என்ற பட்டம் பெற்றவருக்கு அழகல்ல!

ஒருநாள் தபாலாபீஸ் வேலை செய்யாவிட்டால், மங்கலச் செய்தி, துன்பச் செய்தி, ஆபத்தான செய்தி எதுவுமே அனுப்ப முடியாது என்றும், ஒருநாள் அரசு அலுவலகங்கள் இயங்காவிட்டால் விலைவாசிகள் உயரும் என்றும் - நிருபர்களிடம் கூறியுள்ள முதலமைச்சர் அவர்கள், அதனைத் தொடர்ந்து மற்றொன்றையும் மறவாமல் சொல்லியிருக்கிறார்.

இலங்கைத் தமிழர்களுக்காக எல்லாக் கட்சிகளும் இணைந்து, ஒருநாள் நாடு தழுவிய கடையடைப்பும், வேலை நிறுத்தமும் செய்தோம். மத்திய அரசும் அந்த பந்த்தில் நம்மோடு கலந்து கொண்டது.

இதுதான் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த நிருபர்கள் பேட்டியில் சுட்டிக்காட்டிய சுவையான தகவல்!

அந்த ஒருநாள் - தபால் தந்தி ஆபீசுகள் மூடிக் கிடந்தபோது, மங்கலச் செய்தி, அமங்கலச் செய்தி, ஆபத்தான செய்திகள் எல்லாம் என்னவாயின? அரசு அலுவலகங்கள் மூடிக் கிடந்தனவே! அப்போது விலைவாசியின் நிலைமை என்ன ஆயிற்று?

ஆகஸ்டு இரண்டாம் நாள் பந்த் என்று இந்த அரசாங்கம் அறிவித்துவிட்டுத்தானே பிறகு, அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தையே கூட்டியது! அப்போது இந்த மாதிரியான, மங்கல - அமங்கல - ஆபத்தான செய்திகளைப் பற்றியோ, ஒருநாள் அலுவலகங்கள் இயங்காவிட்டால் விலைவாசிகள் உயருமே என்பது பற்றியோ முதலமைச்சர் ஆலோசிக்கவே இல்லையா?

இப்போது அனைத்துக் கட்சிகள் நடத்தும் மறியல் அறப்போரில் மத்திய, மாநில, ஒன்றிய அலுவலகங்கள் இயங்கக்கூடாது என்பது நோக்கமும் அல்ல! திட்டமும் அல்ல!

அந்த அலுவலக வாயில்களில் நின்று, அறவழியில் மறியல் செய்வதின் மூலமாக - விலைவாசி ஏற்றத்தால், விவசாயத் தொழிலுக்கு விளைந்துள்ள கேடுபாடுகளால், உணவு தானிய விநியோகத்தில் நடைபெறும் மோசடிகளால், போலீஸ் அராஜகப் பொய் வழக்குகளால், சகல துறைகளிலும் சல்லாபம் செய்யும் லஞ்சலாவண்ய ஊழல்களால், மக்களுக்கு ஏற்படும் வேதனைகளை விளக்கிச் சொல்லுகிறோம்!

கட்சித் தொண்டர்களைப் பார்த்து, வீரர்களே! தீரர்களே! என்று அழைத்தாலே அது வன்முறையாம்!

புரட்சி என்பதைத் தனது அடைமொழியாகக் கொண்டுள்ள முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இப்படிக் கூறுகிறார், நிருபர்களிடம்!

எதையும் திரித்துக் கூறுவது - திசை திருப்ப முயற்சி எடுப்பது - இதுவே அவரது இயல்பாகி விட்ட பிறகு, அதனை மாற்ற முடியுமா என்ன?

லட்சம் பேர் சிறைபுகத் தயார்! என்று சொன்னதைக் கூடக் கேலி பேசினாராம்!

அந்தக் கேலிமொழி கேட்டு சில நிருபர்கள், பலமாக விழுந்து விழுந்து சிரித்தார்களாம்!

லட்சம் பேரை இந்தியா முழுவதுமுள்ள சிறைகளுக்குத்தான் அனுப்ப வேண்டும்!

என்று கெக்கலி கொட்டினாராம் முதலமைச்சர்!

தமிழ்நாட்டில் உள்ள சிறைகளில் பதினைந்தாயிரம் பேருக்கு மேல் இடமில்லை!

என்று ஏகடியம் செய்தாராம்!

அண்ணா தலைமையில், விலைவாசிப் பேராட்டம் நடைபெற்று இருபதாயிரம் பேர் சிறை சென்றபோது, இப்படித்தான் அன்றிருந்த ஆட்சியாளர் கிண்டல் செய்தனர்!

உடன்பிறப்பே,

மக்களை வாட்டி வதைக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்காக அனைத்துக் கட்சியினர் ஈடுபடும் மறியல் அறப்போர், அமைதி குலையாமல், அறவழியில் வெற்றிகரமாக நடைபெறவும் - விஷமிகள் யாரேனும் வன்முறை விதைகளைத் தூவிட இடம் தராமலும் அமைந்திட ஆக்கபூர்வமான முறைகளைக் கடைப்பிடித்து அணிவகுத்திடுக!

அன்புள்ள,

மு. க.

10-12-1983

1180. அன்று அந்த நீதிமன்றத்தில்!

உடன்பிறப்பே,

ஒரு நீதிமன்றத்துக் காட்சியைக் காண உன்னை அழைக்கின்றேன்!

நாடகத்திலோ - திரைப்படத்திலோ அல்ல!

நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சி! சிலருக்கு மறந்து போயிருக்கலாம் - பலருக்கு மறக்க முடியாத நிகழ்ச்சி!

1962 ஆகஸ்டு 2-ஆம் நாள்! வேலூர் நீதிமன்றம் - ஒளிபொருந்திய கண்களுடனும், உயரம் அதிகமில்லாத உடற்கட்டுடனும், வெற்றிலையால் சிவந்த புன்னகை மிளிரும் உதடுகளுடனும், அறிவின் முதிர்ச்சியைக் காட்டும் அகன்ற நெற்றியுடனும், எளிமை நிறைந்த உடையுடனும், ஒரு உருவம் நீதிபதியின் முன்னால் வந்து நிற்கிறது! அவர்தான் அறிஞர் அண்ணா! அவருடன் பதினொரு கழக உடன்பிறப்புகள் வரிசையாக வந்து நிற்கிறார்கள்.

நீதிபதி அவர்களைப் பார்த்துக் கேட்கிறார்:-

இ.பி.கோ. 143, 341 கிரிமினல் திருத்தச் சட்டம் 7 1 ஏ செக்ஷன் கீழ், சட்ட விரோதமாகக் கூடியதாகவும் - அரசாங்கச் சிப்பந்திகளைத் தடுத்ததாகவும், பலாத்காரத்தைப் பயன்படுத்தியதாகவும் உங்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. நீங்கள் என்ன கூறுகிறீர்கள்.

அண்ணா அதற்குப் பதில் கூறுகிறார் :-

நான் குற்றவாளி அல்ல! ஜூலை 19-ஆம் நாள் நடைபெற இருந்த அறவழி மறியலைப் பற்றி முன்கூட்டியே அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி சென்று, அன்று காலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், ஆறு பேர் முதல் வாயிலிலும், மற்றவர்கள் அடுத்த வாயிலிலும் மறியலில் ஈடுபட்டோம். அப்போது மாவட்டக் கலெக்டர் ஜீப்பில் வந்து

இறங்கி, நான் உள்ளே போக வேண்டும், வழிவிடுங்கள் எனக் கேட்டார். நாங்கள் மறியல் செய்வதால், இன்று வெளி வேலைகளைச் செய்து கொள்ளுங்கள் என்றோம். அவர் உள்ளே போக வேண்டுமென வற்புறுத்தினார். அப்படியானால் நீங்கள், எங்களை அப்புறப்படுத்திவிட்டு உள்ளே செல்லுங்கள்! என்றோம். எனவே நாங்கள், பலவந்தமாக மறியலில் ஈடுபடவில்லை. அமைதியான முறையில் மறியல் செய்வது எங்கள் நோக்கமே தவிர, பலவந்தப்படுத்தித் தடுப்பது எங்கள் விருப்பமல்ல! எனவே மேற்கூறிய சட்டப் பிரிவுகளின்படி நாங்கள் குற்றவாளிகள் அல்ல!

அதன் பிறகு சாட்சியங்கள் விசாரிக்கப்படுகிறார்கள். குறுக்கு விசாரணை நடைபெறுகின்றன.

இறுதியாக அண்ணா அவர்கள், குற்றச்சாட்டுகளை மறுத்து வாதம் செய்கிறார். இதோ அண்ணாவின் மொழியிலேயே அதையும் கேட்போம்.

கனம் நீதிபதி அவர்களே! நாங்கள் திடீரென்று, முன்னறிவிப்புச் செய்யாமல் 19-ஆம் தேதியன்று மறியல் செய்யவில்லை. முன்பே தீர்மானங்கள் மூலம் பகிரங்கமாக எங்கள் நோக்கத்தை அறிவித்து விட்டு, நாங்கள், ஒருநாள் அடையாள மறியல் நடத்தினோம். நாங்கள் செய்ததன் நோக்கம், கலெக்டருக்கோ அல்லது பணிமனைகளுக்கோ எதிரானது அல்ல! எல்லா தரப்பு மக்கள் சமுதாயத்தையும் பாதித்திருக்கும், உயரும் விலைவாசியை இதன் மூலம் அரசாங்கத்திற்கு, நுணுக்கமாகச் சுட்டிக் காட்ட முடியும் என்று கருதினோம். அந்த மாதிரியான முழக்கங்களைத்தான் நாங்கள் முழங்கினோம்.

எங்கள் மீது குற்றம் சுமத்தியவர்கள், ஏன்? அப்படிப்பட்ட குற்றம் சுமத்தத் தூண்டப்பட்டார்கள்? அதன் பின்னால் உள்ள நோக்கம் என்ன? என்பதையும் சிந்திக்க வேண்டும்.

மக்கள் குரலே மகேசன் குரல் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். விலைவாசி உயர்வைப் பற்றி மக்களிடம் எழுந்துள்ள உணர்வுகள்தான், பொதுத் தொண்டில் ஈடுபட்டிருக்கும் எங்களை, அரசாங்கத்திற்கு அதை உணர்த்தும் வண்ணம் அடையாளமாக

மறியல் செய்யத் தூண்டியது. எங்கள் மனச்சாட்சி எதைச் சரியென்று சொன்னதோ அதையே நாங்கள் செய்திருக்கிறோம். தர்மநியாயப்படி, நாங்கள் செய்தது சரியானதே என்று கருதுகிறோம். மக்கள் விருப்பத்தின்படிதான் நாங்கள் நடந்திருக்கிறோம். எனவே, குறிப்பிடப்பட்ட சட்டப்பிரிவுகள் எங்களுக்குக் குறுக்கே நிற்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதிமன்ற நிகழ்ச்சி அன்றைய தினம் இத்துடன் நிறைவு பெறுகிறது

1962-ஆம் ஆண்டு 16-ஆம் நாள், நீதிமன்றத்திற்கு அண்ணா அவர்களும், அவருடன் பதினொரு பேரும் அழைத்து வரப்படுகிறார்கள்.

நீதிபதி, தீர்ப்பைப் படிக்கிறார்.

இந்த மறியலில் வன்முறை இல்லை என்பது மட்டுமல்லாமல், கலெக்டரையோ, கலெக்டர் அலுவலகத்தையோ எதிர்த்துக் கோஷங்கள் எதுவுமில்லையென்று பிராசிகியூஷன் தரப்புச் சாட்சிகளே கூறியுள்ளனர். எனினும் குற்றச்சாட்டின்படி, மறியல் அன்று நடை பெற்றிருக்கிறது. கலெக்டர் உள்ளே செல்லத் தடை ஏற்பட்டது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே திரு. அண்ணாதுரை அவர்களுக்கும் மற்றும் முல்லை வடிவேலு எம்.எல்.ஏ., தர்மலிங்கம் எம்.பி., சம்பங்கி எம்.எல்.ஏ., சாரதி எம்.சி., சி.வி. ராசகோபால் எம்.சி., தேவராசன் எம்.சி., டி.கே. பொன்னுவேலு, வெங்கடாசலம், பாலசுந்தரம், இளஞ்செழியன், வடிவாம்பாள் ஆகியோருக்கும் இந்தியன் பீனல்கோடு 143, 341 - கிரிமினல் லா அமெண்ட்மெண்ட் 7 1 ஏ ஆகிய பிரிவுகளின்படி குற்றம் செய்திருப்பதால், பத்து வாரக் கடுங்காவல் தண்டனை ஒவ்வொரு குற்றத்துக்கும் விதிக்கப்படுகிறது. மூன்று பிரிவுகளின்படி தண்டனை விதிக்கப்பட்டாலும் தண்டனையை ஒரேகாலத்தில் அனுபவிக்கலாம்.

தீர்ப்பினை முகமலர்ச்சியுடன் ஏற்று அண்ணாவும், அவரது உடன்பிறப்புகளும் வேலூர் சிறைச்சாலைக்கு செல்கின்றனர். நீதிமன்றத்துக்கு வெளியே, வாழ்த்து முழக்கம் வானைப் பிளக்கிறது!

உடன்பிறப்பே! நினைவுபடுத்திய நீதிமன்றக் காட்சி கண்டாயா?

டிசம்பர் 15-ஆம் நாள் அனைத்துக் கட்சிகள் நடத்த இருக்கும் மறியல் அறப்போர் குறித்து - அரசியல் தமாஷ்! என்று ஏகடியம் பேசுகிறார் ஒரு அமைச்சர்!

சட்டம் பேசும்! என எச்சரிக்கிறார் இன்னொரு அமைச்சர்!

தமிழ்நாட்டுச் சிறைகளில் இடம் இருக்காது!

என்று கேலி புரிகிறார் முதலமைச்சர்!

அண்ணா பெயரால் கட்சி நடத்துகிறவர்கள், 1962-இல் அண்ணா; வேலூர் நீதிமன்றத்தில் நிகழ்த்திய வாதத்தின் உட்பொருளைப் புரிந்து கொள்ள வேண்டாமா?

அதற்காகவே இந்தப் பழைய நிகழ்ச்சி! அவர்கள் படிப்பதற்காக மட்டுமல்ல - நீயும் பயன்படுத்திக் கொள்வதற்காக!

அன்புள்ள,

மு. க.

11-12-1983

1181. கறுப்புக் கணக்கு எழுதுகிறார்கள்!

உடன்பிறப்பே,

நீயும், அனைத்துக் கட்சிகளின் செயல்வீரர்களும் ஓரணியில் திரண்டு ஒப்பற்ற அறப்போராட்ட வரலாறு படைத்தது கண்டு நாடே வியக்கிறது! நான் நன்றி கூறுகிறேன்! மகிழ்கிறேன்! பாராட்டுகிறேன்!

அனைத்துக் கட்சிகளின் பட்டாளத்துச் சிப்பாய்கள், படை நடத்திய பாங்கு கண்டு உள்ளமெல்லாம் பூரிக்கிறது! உவகை பொங்குகிறது!

மக்களின் பிரச்சினைகளை முன்வைத்துப் போராடும் மறியல் அறப்போர் வீரர்களைச் சமூகவிரோதிகள் போலச் சித்தரித்தும் - பெருங்கலவரம் ஏற்படுமென்று பூதாகரமான கற்பனைப் பொய்யுரைகளை நாள்தோறும் மேடைகள் மூலமும், அறிக்கைகள் மூலமும் வெளிப்படுத்தியும் - அறப்போர் மறியலைத் தடுத்து நிறுத்தத் தானே கோதாவில் இறங்குவேன் என்று முண்டா தட்டியும் - முன்கூட்டியே பல்லாயிரக்கணக்கானவர்களைக் கைது செய்து மிரட்டியும் - தன் தயவுக்குத் தவம் கிடக்கும் ஒரு சில தினசரிப் பத்திரிகைகளில் திசை திருப்பும் செய்திகளை வெளியிட ஆணையிட்டும் - முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள், தன்னாலியன்ற அகடவிகட சாமர்த்தியங்கள் அனைத்தையும், கையாண்டு பார்த்தும் முடியாமல் - சிறைச்சாலைகள் போதாமல் - காவல் நிலையங்களில் இடம் கொள்ளாமல் - ஸ்டேடியங்கள், கோயில்கள், திருமண மண்டபங்கள் நிரம்பி வழிகிற அளவுக்கு ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் ஒரே நாளில் கைதாகியிருக்கின்றனர் என்பது அலட்சியப்படுத்தக் கூடிய நிகழ்ச்சியல்ல!

ஆனால், இதையும் அலட்சியப்படுத்தக்கூடிய ஆணவப்போக்குத்தான் இங்குள்ள அரசுக்கு இருக்கிறது என்பது

அரசின் சார்பாக அதிகாரிகள் விடுத்துள்ள அறிக்கைகளிலேயிருந்து தெரிகிறது.

அலுவலகங்கள் இயங்கின! மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு எந்தக் குந்தகமும் இல்லை! போக்குவரத்துகள் சீராக இருந்தன! ரயில்கள், பஸ்கள் ஓடின! இவ்வாறு அதிகாரிகள் அறிக்கைகள் தருகின்றனர்.

முழு அடைப்பு எனப்படும் அர்த்தாலோ அல்லது பந்த்தோ நடைபெற்றால்தான் கடைகள் மூடப்பட்டனவா? அலுவலகங்கள் இயங்கினவா? தொழிற்சாலைகள் நடந்தனவா? ரயில்கள், பேருந்துகள் ஓடியதா? என்றெல்லாம் விபரம் சேகரித்து அறிவிப்பது வழக்கம்!

மறியல் என்பது குறிப்பிட்ட அலுவலகங்களின் முன்னால் போய் நின்று நடத்துவது! உடனடியாக மறியல் செய்வோர் கைது செய்யப்படுவதும் - அல்லது மறியல் நடத்த ஊர்வலமாக வரும் போதே கைது செய்யப்படுவதும்தான் கடந்த காலத்தில் நடைபெற்ற பல்வேறு மறியல் போராட்டங்களின் சரித்திரங்களாகும்! அதே மறியல் அறப் போராட்டத்தைத்தான் இப்போதும் நடத்தினோம்! மறியலுக்குப் பொருள் புரியாமலே, பந்த் எனக் கருதிக் கொண்டு, மக்களின் மாமூல் வாழ்க்கை பாதிக்கப்படுமென்று அறிக்கை விடுப்பவர்களின் அதிமேதா விலாசத்தை எப்படித்தான் விமர்சிப்பதென்றே புரியவில்லை!

ஆனால் ஒன்று, உடன்பிறப்பே! அவர்கள் போட்ட கணக்கெல்லாம் தவறாகிவிட்டது!

சென்னையில் ஒரு போலீஸ் அதிகாரியின் அராஜகப் போக்கினால் விளைந்த ஒரேயொரு அசம்பாவிதத்தைத் தவிர, மாநில முழுதும் எந்தவிதமான அமைதிக்கேடான நிகழ்ச்சிகளும் நடைபெறவில்லை! அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த செயல்வீரர்களாம் - கடமையுணர்வும், கட்டுப்பாட்டு உணர்வும் கொண்ட கண்மணிகளுக்கு ஆயிரம் ஆயிரம் வாழ்த்துகள்!

அனைத்துக் கட்சிகளின் மறியல் வீரர்களை, மிரட்டினால் மிரண்டு விடுவர் என்று கருதிக் கொண்டு, சென்னையில் ஆர்ப்பாட்டம் மட்டுமே செய்ய முயன்ற இந்திரா காங்கிரஸ் இளைஞர்களைக் கைது செய்து, அவர்களைப் பதினைந்து நாள் ரிமாண்டில் வைத்தது இந்த அரசு!

எப்போதுமே Demonstrator ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுவதில்லை! ஆனால் இப்போது மட்டும் ஒரு வாரத்திற்கு முன்பு அவர்களைக் கைது செய்து ரிமாண்ட்டில் வைத்ததன் மூலம், டிசம்பர் 15-ஆம் நாள் மறியல் போராட்டத்தில் கலந்து கொள்ள அனைத்துக்கட்சித் தொண்டர்கள் அஞ்சி நடுங்கி வராமல் இருந்து விடுவார்கள் என்று கணக்குப் போட்டார்கள் - அய்யோ பாவம்! அந்தக் கணக்கும் தவறாகி விட்டது!

எல்லா மிரட்டல் கணக்குகளும் தவறாகி விடவே - இப்போது ஒரு லட்சம் பேர் சிறைபுகுந்த உண்மைக் கணக்கை மறைத்திட கறுப்புக் கணக்கு எழுதிப் பார்க்கிறார்கள்!

கறுப்புப் பணம் - கறுப்புக் கணக்கு - இவையெல்லாம் தவறில்லை என்ற கருத்துப்பட இரண்டொரு நாட்களுக்கு முன்பு, முதலமைச்சர் ராமச்சந்திரன் அவர்கள், திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார் அல்லவா! அதனால் மறியல் போரில் கைதானவர்களின் எண்ணிக்கையையும் குறைத்துக் கறுப்புக் கணக்கு காட்டுமாறு, தனது அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டுவிட்டார்!

அரசுத் தலைமைச் செயலாளர் திருவாளர் சொக்கலிங்கனார் அவர்கள்! இந்த மறியல் போராட்டத்தில் தமிழக முழுவதும் கைதானவர்களின் எண்ணிக்கை பதினெட்டாயிரத்து முன்னூற்று நாற்பத்தியொன்று எனக் கூறியுள்ளார்!

முன்னூற்று நாற்பத்தியொன்று எனக் கறாராகச் சொன்னால்தானே, முழுப் பூசணியை சோற்றில் மறைக்க முடியும்?

எந்த மாவட்டத்திலும் ஐயாயிரம் பேருக்குக் குறைந்து கைதாகவில்லை! அஃதன்னியில் தஞ்சை, நெல்லை, கோவை, மதுரை போன்ற மாவட்டங்களில் கைதானோர் எண்ணிக்கை பத்தாயிரத்தைக் கடந்திருக்கிறது! இருபதாயிரத்தைத் தாண்டியிருக்கிறது! தஞ்சை மாவட்டத்தில் முப்பதாயிரத்தை எட்டியிருக்கிறது!

ஆனால், லட்சம் பேர் கைதாயினர் என்று சொல்லக் கூச்சப்பட்டுக் கறுப்புக் கணக்கு எழுதிக் காட்டுகிறது அரசாங்கம்!

இதோ, ஒரே ஒரு உதாரணம்! சென்னை பதிப்பு டிசம்பர் 16 இந்து ஏட்டில், அரசின் தலைமைச் செயலாளர் கொடுத்த அதிகாரப்பூர்வமான கணக்கில் - தஞ்சை மாவட்டத்தில் கிழக்குப் பகுதியும், மேற்குப் பகுதியும் சேர்ந்து மூவாயிரத்து முன்னூற்றி ஐம்பத்தி ஒன்பது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது! கோவை மாவட்டத்தில் ஆயிரத்து இருநூற்றி நாற்பத்தேழு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது! ஆகவே திருவாளர் சொக்கலிங்கனாரின் கணக்குப்படி, தஞ்சை மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும் மொத்தம் கைதானோர் நாலாயிரத்து அறுநூற்றி ஆறு பேர்!

ஆனால் இந்து ஏடு, அதே நாளில் பனிரெண்டாம் பக்கத்தில் தனது நிருபர் மூலம் பெற்ற செய்தியில்,

"About 3,600 Workers belonging to the DMK and 13 other opposition parties were taken into custody in about a dozen centres of Coimbatore Dt."

எனக் குறிப்பிடுகிறது! அத்துடன்;

"In Thanjavur Dt. over 13,000 persons were taken into Custody"

எனவும் குறிப்பிடுகிறது!

தஞ்சை மாவட்டத்தில் பதின்மூன்றாயிரம் பேர் - கோவை மாவட்டத்தில் 12 இடங்களில் மட்டும் மூவாயிரத்து அறுநூறு பேர் - ஆக, இந்த இரண்டு மாவட்டத்தின் கணக்கே இந்து ஏட்டில் வெளிவந்தபடி, பதினாறாயிரத்தைத் தாண்டியுள்ளது!

மாநில முழுதும் பதினெட்டாயிரம் பேர் என்பது அரசுச் செயலாளர் கணக்கு! கோவை, தஞ்சை இரண்டு மாவட்டங்களில் மட்டும் பதினாறாயிரம் பேர் என்பது இந்து நிருபரின் கணக்கு!

கோவையில் மூவாயிரத்து அறுநூறு பேர் கைது செய்யப்பட்டவர்கள் போக, ஆயிரத்து எழுநூற்றி பத்து பேரை போலீசார் அப்புறப்படுத்தியதாகவும் இந்து ஏடு, செய்தி வெளியிட்டுள்ளது!

எனவே இதனையும் சேர்த்தால், தஞ்சை, கோவை இரண்டு மாவட்டங்களில் மட்டும் பதினெட்டாயிரத்து முன்னூற்றி பத்துப் பேர்!

திருவாளர் சொக்கலிங்கனார் அவர்கள், இந்த இரண்டு மாவட்டங்களின் கணக்கையே - மாநில முழுமைக்குமான கணக்காக எழுதி வெளியிட்டிருப்பது, சேர்க்கை தோஷத்தால் வந்த வினை போலும்!

குறைத்தே காட்ட வேண்டுமென்று கறுப்புக் கணக்கு எழுதிய அரசையும் மீறி - எப்பொழுதுமே அடக்கி வாசிக்கக் கூடிய இயல்புடைய இந்து ஏட்டின் கணக்கையும் மீறி - ஒரு லட்சம் பேருக்கு மேல் கைது என்பது, நாட்டு மக்கள் நேரடியாக அறிந்துகொண்ட உண்மைக் கணக்காகும்!

உடன்பிறப்பே, சுட்டிக்காட்டப்பட்ட மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்திட மத்திய, மாநில அரசுகள் முன்வருவதுதான் பொறுப்புள்ளோர் கடமையாகும்! அதனை விடுத்து ஆத்திரத்தில் செயல்பட்டால், கள்ளுண்ட குரங்கு தேளையும் பிடித்துக் காதிலே விட்டுக் கொண்ட கதையாகி விடும்!

கறுப்புக் கணக்கு எழுதி மக்கள் உணர்வுகளைக் குறைத்து மதிப்பிடுவதற்குப் பதிலாக, இனியேனும் நாவடக்கம் கொண்டு நடந்து கொள்வதே நல்லது என எச்சரித்துள்ளது இந்த அறப்போராட்டம்!

அறப்போர் அந்த வகையிலே வெற்றி என அகமகிழும்போது, சிறைச்சாலையிலே முன்கூட்டிக் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்ட அரியலூர் ஜெயராமன் என்ற கழக உடன்பிறப்பு, உடனடி சிகிச்சையில்லாத காரணத்தால் உயிரிழந்தார் என்ற செய்தி உள்ளத்தைத் துளைத்திடுகிறது!

அந்தத் தீரருக்கு வீரவணக்கம் செலுத்துவதோடு - உனக்கும், அனைத்துக் கட்சி செயல் மறவர்களுக்கும் - அறப்போரில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான சகோதரிகளுக்கும் என் வாழ்த்துகளைக் குவித்திடுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

17-12-1983

1182. புரட்சிக் குயில் கூவிய பூமி!

உடன்பிறப்பே,

நிமிர்ந்த நோக்கு
நெரித்த புருவம்
நீர்வீழ்ச்சி ஓசை
நெற் கதிர்க்கட்டு மீசை
புரிகிறதா யாரென்று?
சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கிய நல்வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்விளைக்கும்
நிறைபுழைப்புத் தோள்களிலாம் எவரின் தோள்கள்?

எனப் புரட்சி எரிமலையாய் வெடித்தானே, அந்தப் பாவேந்தன் பாரதிதாசன்!

அந்தச் சிங்கநெஞ்சன் பிறந்து, வளர்ந்து, பெருமித நோக்குடன் பீடுநடை போட்டு, தமிழ் இயக்கம் வளர்த்து, அது தழைத்திடக் கண்டு மகிழ்ந்து -

கிளம்பிற்றுக்காண் தமிழ்ச் சிங்கக்கூட்டம்!

என முழங்கி முரசொலித்து - இன்று எந்த மண்ணுக்குள் பொன்னாகப் புதைந்து கிடக்கிறானோ, அந்த மண் மீது நடைபெறும் நமது கழக மாநாட்டுக்கு உன்னை அழைக்கும் போது, எத்தனை உத்வேகம் ஏற்படுகிறது தெரியுமா?

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை

மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!

எனக் கவி பாடிக் களம் புகுந்து, தமிழகத்துக் காவல்துறையையும் - ஆணவ அரசையும் திணற வைத்துத் திரும்பிய வேகத்தில், புதுவைக்கு வருக என உனை அழைக்கிறேன்!

நிலையான ஆட்சி தருக! என அழைத்தோம், நேருவின் திருமகளை! ஆனால் அவர்களோ, தன்னாட்சி மட்டும் நிலைத்தால் போதுமென்று, தமிழராட்சி நடைபெற்ற புதுவை மாநிலத்தில் ஜனநாயகத்தின் கழுத்தைத் திருகினார்கள்!

அந்தப் புதுவை மண்ணில் மீண்டும் ஜனநாயக மலர் விரிய - மக்களாட்சி மணம் பரவ - எதேச்சாதிகார சக்திகளுக்கு இடம் கொடோம் என சூளுரை மேற்கொள்ளவே மாநாடு கூட்டப்பெறுகிறது.

காலையில் ஒரு அமைச்சரவை - மாலையில் ஒரு அமைச்சரவை என்றிருந்த புதுவையிலே, காங்கிரசின் பதவி வேட்டையே முக்கிய காட்சியாக இருந்தது!

எம்.ஜி.ஆர். கட்சியின் ஆட்சிகளோ, நாட்கணக்கில் தங்கள் ஆயுளை முடித்துக் கொண்டன!

புதுவையின் தனித்தன்மையைக் குலைத்திடவும் இணைப்பு என்னும் பாம்பு படமெடுத்தாடத் தொடங்கியது! அதற்கு அ.தி.மு.க. மகுடி வாசித்து மகிழ்ந்தது!

வந்த பாம்பின் வாலைப் பிடித்துச் சுழற்றியடித்துத் தலையை மிதித்த கட்சிகளில் ஒன்றாம் நமது கழகம் - அதே உறுதியுடன் இன்று மாநில மாநாட்டைக் கூட்டுகிறது புதுவையில்!

நிலையான ஆட்சியைத் தரவல்லது கழகக் கூட்டணியே என்பதைப் புதுவையில் முதல் தடவையாக நிரூபித்துக் காட்டிய நமக்கு, இழுக்கு விளைவிக்கத் துரோகங்கள் துளிர்ந்தன! அவற்றையெல்லாம் இடறிவிட்டு சுடர்முகம் தூக்கி நிற்கின்றான் கழக உடன்பிறப்பு!

இப்போதும், தமிழகத்துடன் புதுவையை இணைத்திடும் முயற்சி தேவையென்று இந்திரா காங்கிரஸ் முன்னோடியொருவர், வரவேற்றுக் கட்டுரையொன்று தீட்டியுள்ளார் - படித்துத் திடுக்கிட்டேன்! பழைய பூதம் மீண்டும் புறப்படுகிறதோ?

அதனைத் தடுத்து நிறுத்த, இப்போதே தயாராவதுதான் அறிவுடைமை!

அந்த எச்சரிக்கை வழங்கவும் இந்த மாநாடு, அனைவரையும் அழைக்கிறது!

இணைப்புஎதிர்ப்புப்போராட்டத்தில், துப்பாக்கிக்குண்டுகளால் துளைக்கப்பட்டு உயிர் துறந்த பாண்டுரங்கன் - சுகுமாரன் என்ற இரு வீரர்கள் பெயர் அன்றோ மாநாட்டுத் திடலுக்கு சூட்டப்பட்டிருக்கிறது!

கடந்த கால நிகழ்ச்சிகளுக்கு வருந்தி - எதிர்காலத்தில் ஒளிப்பிழம்பாக தமிழகம் காணவும் - இன்றுள்ள தருக்கர் ஆட்சியினை மாற்றவும் பாடுபடுவேன் என உறுதி கூறி எக்காளமிட்ட கழக மாமணி மதியழகன் பந்தல் - மூச்செல்லாம் கழகம் என்றே ஓய்வின்றி உழைத்து மறைந்த என்.வி. இராமலிங்கம் அரங்கம் - இவையெல்லாம் அமைக்கப்படப் பம்பரமெனச் சுழன்று பணியாற்றும் செயல்வீரர்களைக் கடந்த பதினேழாம் நாள் மாலை கண்டு களித்தேன்!

எழில்! எழுச்சி! எளிமை! கொண்டதாக இருக்கட்டும் ஏற்பாடுகள்! எனப் புதுவை மாநில மாநாட்டு நிர்வாகிகளிடம் வலியுறுத்திச் சொன்னேன்!

அடுத்து கரூரிலும் - திண்டுக்கல்லிலும் நடைபெற இருக்கும் மாவட்ட மாநாடுகளுக்குப் புதுவை மாநாடு எடுத்துக்காட்டாக அமைய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன்.

உழைப்பைக் கொட்டுகின்றனர்! ஓடியாடிப் பணியாற்று கின்றனர்! ஒற்றுமை உணர்வும் கொடி கட்டிப் பறக்கிறது!

புதுவை மாநிலமே புத்துணர்ச்சி பெற்றுத் திகழ்கிறது!

எமை நத்துவாயென எதிரிகள்

கோடி இட்டழைத்தாலும் தொடேன்!

என்ற புரட்சிக்கவிஞரின் கவிதை வரிக்கு மாறாகத் தங்களை மாற்றிக்கொண்டு மதிப்பிழந்து போனவர்கள் புதுவையிலும் உண்டு! தமிழகத்திலும் உண்டு!

ஆனால் அவர்களைப் பார்த்துச் சிரித்துவிட்டு, கொள்கைப் பாசறையாம் அண்ணாவின் கழகம் காத்திடும் சிறுத்தைப் புலிகளாம் செயல்வீரர்கள், இலட்சோப லட்சமென இந்த இயக்கத்தில் உண்டு!

அவர்தம் ஒளிமிகு திருவிழிகளைக் காணும் போது - சோர்வு அகலும்! களைப்பு விடைபெறும்! களிப்பு பன்மடங்காகும்!

கடமை அழைக்கிறது! அதற்காகக் கழகக் கண்மணியே! உடன்பிறப்பே! உன்னை அழைக்கின்றேன்!

டிசம்பர் 24, 25 சனி, ஞாயிறு கிழமைகளில்!

புதுவை மாநில மாநாடு! புரட்சிக் குயில் கூவிய பூமிக்கு ஓடிவா! தென்திசைக் கீதம் கேட்க!

அன்புள்ள,

மு. க.

22-12-1983

1183. பக்தவத்சலனார் விழாவில்!

உடன்பிறப்பே,

முன்னாள் முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களின், 87-வது பிறந்த நாள் விழா மலர் வெளியிடும் நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றிருக்கிறது. பெரியவர் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து, தனது அறிவாற்றல், அனுபவம் இவற்றின் காரணமாகத் தமிழ்நாட்டுக்குத் துணையாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறவர்களில் நானும் ஒருவன்!

அவரது ஆட்சிக்காலத்தில், நமது கழகம், அடக்குமுறைகளுக்கு ஆளாகியது என்ற போதிலும் - அவருக்கும், நமக்குமிடையே தனிப்பட்ட காழ்ப்பு உணர்ச்சிகள் என்றைக்கும் இருந்ததில்லை! அரசியல் கருத்து மாறுபாடுகளை இருதரப்பிலும் கடுமையாக விமர்சித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒருவருக்கொருவர் மரியாதை காட்டுவதில் - ஒருவரையொருவர் மதிப்பதில் என்றைக்கும் தயக்கம் காட்டியதில்லை.

அண்ணா அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்பு பெரியார், ராஜாஜி, காமராஜர், காயிதேமில்லத் ஆகியோர் இல்லம் சென்று வாழ்த்துப் பெற்றது போலவே, பக்தவத்சலனார் இல்லத்திற்கும் சென்று வாழ்த்துப் பெற்றார்.

அதேபோல் அண்ணாவுக்குப் பிறகு, முதல்வர் பொறுப்பு என் தோளில் சுமத்தப்பட்ட போதும் - பெரியார், ராஜாஜி, காமராஜர், காயிதேமில்லத் ஆகியோர் இல்லங்களுக்குச் சென்று நான் வாழ்த்துப் பெற்றது போலவே, பக்தவத்சலனார் இல்லத்திற்கும் சென்று வாழ்த்துப் பெற்றேன்.

அதுமட்டுமல்ல, இந்த மாநிலத்தின் உயிர்ப் பிரச்சினைகளில் ஒன்றான காவிரிப் பிரச்சினை குறித்து, டெல்லியிலே

பேச்சுவார்த்தைக்குச் சென்றாலும் சரி - சென்று திரும்பிய பிறகும் சரி - முன்னாள் முதல்வர்கள் என்ற முறையிலும், அனுபவமிக்கப் பெரியவர்கள் என்ற முறையிலும் காமராஜர் அவர்களிடத்திலும், பக்தவத்சலனார் அவர்களிடத்திலும் சென்று விபரங்களை அறிவித்து, அவர்களின் அறிவுரைகளையும் பெற்றிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

எனவே, அவரது பிறந்தநாள் விழா மலர் வெளியிடும் நிகழ்ச்சியொன்று, சென்னையில் நடைபெற்றது கண்டு, எனக்கு மெத்த மகிழ்ச்சிதான்!

அந்த நிகழ்ச்சியில் பெரியவர் பக்தவத்சலம் அவர்களும், கலந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் பழனியாண்டி அவர்களும், முன்னாள் அமைச்சர் ராஜாராம் நாயுடு அவர்களும் மற்றும் நண்பர் உமாபதி, திருமதி மரகதம் சந்திரசேகர் அம்மையார், நண்பர் மணிவர்மா, திருமதி யசோதா, திரு.எம்.பி. சுப்பிரமணியம், திரு. அப்பன்ராஜ், திரு. கத்திப்பாரா ஜனார்த்தனம் ஆகிய இந்திரா காங்கிரஸ் கட்சியின் பிரதானியர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த விழாவில் பக்தவத்சலனார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டுரை வழங்கியவர் முதலமைச்சர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களாவார்கள்!

வழக்கம் போல், அவரது பேச்சின் பெரும் பகுதி என்னையும், எதிர்க்கட்சிகளையும் தாக்குவதாக அமைந்துள்ளது!

எதிர்க்கட்சிகள் மறியல் நடத்தினால், மக்களைச் சேர்த்துக் கொண்டு நானே, தலைமை வகித்து எதிர் மறியல் நடத்திச் சந்திப்பேன்.

என்று சில நாட்களுக்கு முன்பு முதலமைச்சர் பேசியிருந்தார் அல்லவா? அதற்கு நான் பதில் அளித்ததில் அவருக்குக் கோபம் வந்துவிட்டது!

மக்களை அழைத்துக்கொண்டு வந்து மறியலைச் சந்திப்பேன் என்று முதலமைச்சர் சொல்கிறார். முதலமைச்சரைப் பார்த்து எனக்குப் பதிலளிக்கத் தெரியும். முதலமைச்சர் அவர்களே, நீங்கள்

உங்களுடைய மக்களை அழைத்துக் கொண்டு வாருங்கள். நாங்களும், எங்களுடைய மக்களை அழைத்துக்கொண்டு வருகிறோம். இடையில் போலீஸ் என்கின்ற ஒன்று மாத்திரம் இருக்கக்கூடாது என்று இப்படி பதிலளிக்க அதிக நேரம் ஆகாது. ஆனால், அத்தகைய அமளிக்காடாக தமிழகத்தை ஆக்கிட இந்த அனைத்துக் கட்சி அணியிலே இருக்கின்ற யாருக்கும் கிஞ்சிற்றும் எண்ணம் கிடையாது என்பதை மாத்திரம் நான், தமிழக முதலமைச்சருக்கு மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

என்று நான் ஒரு கூட்டத்தில் அறிவித்தேன். அவர் பொறுப்பையும், பதவியையும் மறந்து, சட்டவிரோதமாகவும், அமைதியைக் குலைக்கும் விதத்திலும் பேசியதற்கு நான் பதில் சொன்னதை, இப்போது திசை திருப்பி எனக்குச் சட்டம் ஒழுங்கு கற்றுத் தர முனைகிறார்!

ஆயுதமில்லாமல் பயிற்சி பெற்று கட்சி நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்த அமைக்கப்படும் தொண்டர் அணிகளைத் தடை செய்து, சிறைப்படுத்தும் போக்கினைக் கண்டிக்கும் எதிர்க்கட்சிகளின் கருத்தையும் திரித்துக்கூறி, தனது அரசு கொண்டு வந்துள்ள சட்டத்தையும் நியாயப்படுத்திப் பேசியிருக்கிறார் அந்த விழாவில்! பாவம்! அண்மையில் நடைபெற்ற இந்திரா காங்கிரஸ் மாநாட்டுக்காக தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் பயிற்சி பெற்ற சேவாதளத் தொண்டர்களின் புகைப்படம் தினசரி ஏடுகளில் வெளி வந்ததை அவர் பார்க்கவில்லையோ - அல்லது பாராமுகமாக இருந்து விட்டாரோ தெரியவில்லை!

என்றும்போல், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் என் மீது ஒரு பாய்ச்சல்! இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நான் பேசுவது குறித்து அழுவதா? சிரிப்பதா? கோபிப்பதா? என்றே அவருக்குப் புரியவில்லையாம் - அந்த விழாவில்தான் பேசியிருக்கிறார்!

அவர் இப்போது அழவேண்டாம்! அவரால் பழி வாங்கப்படும் பல குடும்பங்களின் அழுகைக்கு, ஒரே தடவையாக மொத்தமாகச் சேர்த்துப் பிறகு அழ வேண்டிய நேரம் அவருக்கு வாய்க்கும்! அதனால் இப்போது அழ வேண்டாம்!

அதேபோல் சிரிக்கவும் வேண்டாம் - சிரிக்காமல் அவர்பேசும் பேச்சுகளே பலர் சிரிக்கத் தக்கப் பேச்சுகளாக இருக்கின்றன! அத்துடன் சிரித்துக் கொண்டும் அவர் பேசினால், என்னமோ ஏதோ என்று மக்கள் நினைத்துக்கொள்வார்கள்!

எனவே கோபமே மேல்! நன்றாகக் கோபிக்கட்டும் - குதிக்கட்டும் - இலங்கைத் தமிழருக்கு ஆதரவான நமது முயற்சிகளை, பேச்சுகளை, எழுத்துகளை, தடுக்கட்டும்! அடக்கட்டும்! கேலி பேசட்டும்! கிண்டல் செய்யட்டும்! அவரது கோபங்கண்டு குலைநடுங்குவோர் இங்கு யாருமில்லை என்பதைச் செயல்மூலம் உணர்த்துவோம்!

உடன்பிறப்பே, பக்தவத்சலனார் அவர்களுக்காக நடந்த விழாவில், எதிர்க்கட்சிகளை - குறிப்பாகக் கழகத்தை - என்னைத் தாக்கிப் பேசினார்! அதனை அந்த மேடையில் இருந்த காங்கிரஸ் தலைவர்கள் சிலர் வரவேற்றிருப்பார்கள்! சிலர் பொறுத்துக் கொண்டிருப்பார்கள்! அது சரி! ஆனால் காங்கிரஸ் தலைவர்களை வைத்துக்கொண்டே காங்கிரசையே தாக்கியிருக்கிறாரே! அதை எப்படி அந்தத் தலைவர்கள் வரவேற்றார்கள்? பொறுத்துக் கொண்டார்கள்?

ஆரம்ப காலத்தில் நான் ஒரு கம்யூனிஸ்டு! அதுவும் தேசிய காங்கிரஸ் கம்யூனிஸ்டு! நான் காந்தியவாதி மட்டுமல்ல! கொஞ்சம் தீவிரவாதி! காந்தியவாதியாக இருந்தால் தீவிரவாதியாக இருக்க முடியாது! காந்தியத்தை இப்போதும் கூட தெளிவாகச் சொன்னால் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

இது பக்தவத்சலனார் விழாவில் முதலமைச்சரின் பேச்சில் ஒரு பகுதி! காந்தியம் என்ன பாடுபட்டிருக்கிறது பார்த்தாயா உடன்பிறப்பே! காப்டலிசம், சோஷலிசம், கம்யூனிசம் மூன்றும் சேர்ந்ததே அண்ணாயிசம் என்று அண்ணாயிசமே அந்தப் பாடுபடவில்லையா? அதேபோல இப்போது காந்தியத்தின் மீதும் கைவைத்து விட்டார்!

காந்தியவாதி தீவிரவாதியாக இருக்க முடியாது.

நான் காந்தியவாதி மட்டுமல்ல! கொஞ்சம் தீவிரவாதி!

காந்தியத்தை தெளிவாகச் சொன்னால் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

இவருக்கு அப்போது காந்தியத்தை யாரும் தெளிவாகச் சொல்லவில்லை போலும்! அதனால் தீவிரவாதியாக இருந்திருக்கிறார்!

தீவிரவாதியாக இருந்து, எத்தனை போராட்டங்கள் நடத்தினார்? எத்தனை முறை சிறையில் இருந்தார்? அதெல்லாம் கேட்கக்கூடாது!

மேடையில் இருந்த காங்கிரஸ் தலைவர்களும் கேட்க முடியாது! என் செய்வது! பேசுவது முதலமைச்சரல்லவா?

காந்திய விமர்சனத்தோடு விட்டிருந்தால் பரவாயில்லையே!

கதராடை உடுப்பவர்கள் எல்லாம் தூய்மையான காங்கிரஸ்காரர் என்ற எண்ணம் முன்பு இருந்தது. இன்று அப்படி ஒருசிலரைத்தான் பார்க்க முடிகிறது.

அதே விழாவில், அதே காங்கிரஸ் தலைவர்கள் முன்னிலையில், இதே முதலமைச்சர் பேசுகிறார்!

பெரும்பாலான காங்கிரஸ்காரர்கள் கதராடை உடுத்தினாலும், அவர்கள் தூய்மையானவர்கள் இல்லை என்ற குற்றச்சாட்டைத் தானே முதலமைச்சர் ராமச்சந்திரன் அவர்கள், அங்கே கூறியிருக்கிறார்! சிலர்தான் தூய்மையானவர்கள் என்றால், பலர் தூய்மையற்றவர்கள் என்றுதானே பொருள்!

மேடையில் இருந்த காங்கிரசார், எம்.ஜி.ஆரின் பேச்சை மறுக்க முடியுமா? குட்டுவது மோதிரக்கை ஆயிற்றே! இதோ மேலும் குட்டுகிறார் பார்!

அன்று பணக்காரர்களாக இருந்தவர்கள் காங்கிரசுக்கு வந்தார்கள்! இன்று பணக்காரர் ஆவதற்காக காங்கிரசுக்கு வருகிறார்கள்! இதனால்தான் காங்கிரஸ் கெட்டுப் போகிறது

அதே மேடையில் - அதே காங்கிரஸ் தலைவர்கள் முன்னிலையில் - இதே முதலமைச்சர் பேசிய பேச்சுத்தான் இதுவும்!

என்ன செய்வது? அதையும் கேட்டுக்கொண்டுதான் விழா மேடையில் காங்கிரஸ் வீராதிவீரர்கள், மௌனமாக உட்கார்ந்திருக்க வேண்டிய நிலைமை!

உண்மையைத் தானே சொல்கிறார் என்று ஒத்துக்கொண்டு அமர்ந்திருந்தார்களா? அல்லது உறவு அறுந்து விடுமே என்ற அச்சமா? அல்லது தயவு தடைப்பட்டுவிடுமே என்ற தயக்கமா? அல்லது குட்டுவது மோதிரக்கை ஆயிற்றே என்று குனிந்து குனிந்து கொடுத்தார்களா?

உடன்பிறப்பே! இதெல்லாம் உண்மையான காங்கிரஸ் காரர்களுக்குத்தான் வெளிச்சம்!

அன்புள்ள,

மு. க.

23-12-1983

1184. பழைய குண்டுகளின் பட்டியலில்!

உடன்பிறப்பே,

நமது பத்திரிகைகளின் செய்தியாளர்கள் இருக்கிறார்களே! அவர்கள் பலே பேர்வழிகள்! திறமைசாலிகள்! முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களை ஒரு கோமாளியாக்கிப் பார்ப்பதில் அவர்களுக்குக் கொள்ளை ஆசை! அதனால் அவர்கள், நிருபர்கள் பேட்டியில் சில கேள்வி வலைகளைப் பின்னி, அதில் அவரைத் தந்திரமாக விழச் செய்துவிட்டு, வெளியே வந்த பிறகு விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள்.

ஒரு உதாரணம் சொல்லுகிறேன்! பாரேன்! மதுரையில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில், ஈழத் தமிழகம் விடுதலை பெற வேண்டியதை வலியுறுத்தி மதுரை ஆதீனகர்த்தர் தவத்திரு அருணகிரி அடிகளார், உரையாற்றியதைப் பொறுத்துக்கொள்ள முடியாத முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., திடீரென ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார்!

அதாவது எம்டன் குண்டு சென்னையில் போடப்பட்ட போது, 1914-ஆம் ஆண்டு தனக்கு ஏழு வயது என்றும், அப்போது சென்னையில் வெள்ளம் பெருக்கெடுத்ததைப் பார்த்தேன் என்றும், சட்டமன்ற மேலவையில் ஒரு வெடிகுண்டை வெடித்தார் அல்லவா? அதைவிடப் பெரிய குண்டு இது!

எம்.ஜி.ஆரின் பிறந்த ஆண்டு 1917 என்றுதான் சட்டமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் 1914-இல் எம்டன் குண்டு விழுந்தபோது அவருக்கு வயது ஏழு என்று அவரே சொன்னது எம்டன் குண்டை விடப் பெரிய குண்டுதானே!

1963-இல் இயற்கை எய்திவிட்ட கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் ஜீவா அவர்கள், 1964-இல் எம்.ஜி.ஆர். அவர்கள்

எம்.எல்.சி. பதவியை ராஜினாமா செய்தபோது, ஓடோடி வந்து எம்.ஜி.ஆரிடம் என்ன இப்படி செய்து விட்டீர்கள்? என்று கேட்டதாக எம்.ஜி.ஆரே பேசி, ஏடுகளில் வரவில்லையா? அப்படியொரு குண்டைத் தூக்கிப் போட்டார் அல்லவா? அதை விடப் பெரிய குண்டு இது!

1925-இல் காலமாகி விட்ட சர்.பி. தியாகராயர் அவர்கள், 1932-இல் கள்ளுக்கடை மறியலின் போது கதராடை வழங்கினார் என்று இதே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், மதியஉணவு தகராறையொட்டி ஒரு குண்டு போட்டாரே? அதைவிடப் பெரிய குண்டு இது!

டாக்டர் அம்பேத்கர் அவர்களை எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர் என நினைத்துக் கொண்டு, டாக்டர் அம்பேத்கர் மருத்துவத் துறைக்குச் சிறந்த தொண்டாற்றியவர் என்று கீழ்ப்பாக்கம் விழா ஒன்றில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பேசினாரே? அதை விடப் பெரிய குண்டு, மதுரை ஆதீனத்தைப் பற்றி இப்போது அவர் வீசிய இந்தக் குண்டு!

மதுரை ஆதீனத்தைப் பற்றி அதிர்ச்சி தரக் கூடிய செய்தியொன்று, இன்னும் பத்து நாட்களுக்குள் வரப்போகிறது.

இதுதான் முதலமைச்சர் ராமச்சந்திரன் அவர்கள், வீசிய குண்டு!

அவரது இந்த குண்டுவீச்சுச் செய்தி, ஏடுகளில் வந்த அதே நாளில், சென்னையில் நமது பேராசிரியர் பிறந்த நாள் விழாவில் நானும், நமது துணைப் பொதுச்செயலாளர் நாஞ்சிலாரும் கலந்து கொண்டு பேசினோம். அப்போது நான் பேசியது இதோ :-

தமிழன் என்கிற இனமான உணர்வுடன், ஒரு மடத்துத் துறவியும் தமிழினத்தைக் காத்திடக் கிளம்புகிறார் என்றால், அவரை அடக்குவேன், ஒடுக்குவேன், அதிர்ச்சி தரக்கூடிய செய்தியொன்றை வெளியிடுவேன் என்று எம்.ஜி.ஆர் சொல்வாரேயானால், மதுரை மடாதிபதியின் சார்பில், அந்தச் சவாலை ஏற்றுக்கொள்ளத் தி.மு.கழகம் தயாராக இருக்கிறது. இதே விளையாட்டா உமக்கு? இப்படியே மிரட்டுவதா வழக்கம்? எத்தனை நாளைக்கு இந்தக் கதை நடக்கும்?

இதுதான் எனது பேச்சில் உள்ள வாசகம்! ஆனால் கெட்டிக்காரச் சில பத்திரிகையாளர்கள், எம்.ஜி.ஆரின் வாயை எப்படிக் கிளறியிருக்கிறார்கள் என்பதைக் கவனி!

மதுரை ஆதீனத்தின் மீது கை வைத்தால்? என்று கருணாநிதி எச்சரிக்கைச் செய்திருக்கிறாரே?

இது பத்திரிகை நிருபர்களின் கேள்வி!

அவர் மீது கை வைத்தால் தி.மு.க. என்ன வருவது? நானே வருவேன். மனிதனுக்கு மனிதன் கை வைக்க யாருக்கு உரிமை இருக்கிறது? அதுவும் ஒரு மடாதிபதி மீது கை வைப்பார்களா?

இது முதலமைச்சரின் பதில்!

உடனே பலத்த சிரிப்பு! நல்ல ஜோக் என்று பாராட்டு மொழிகள்!

உடன்பிறப்பே, என் பேச்சில் மதுரை மடாதிபதி மீது கை வைத்தால்...? என்ற வாசகமே இல்லை! ஆனாலும் குறும்புக்கார நிருபர் ஒருவர் - ஒரு குபீர் சிரிப்புக்காக என்னை இணைத்து அப்படியொரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்!

கை வைத்தால் என்ன நடக்கும் தெரியுமா? என்று கூறுவது தவறில்லை! ஆனால் நான் கூறியது, அந்தச் சொற்றொடர் இல்லை! இருந்தாலும் நான் அப்படிப் பேசியதாக ஒரு கேள்வியை உருவாக்கிக் கொண்டு, நிருபர்கள் எம்.ஜி.ஆர். அவர்களை ஒரே மடக்காக மடக்கி, அவர் வாயாலேயே நானே மதுரை மடாதிபதிக்குத் துணையாக வருவேன் என்று சொல்ல வைத்து விட்டார்கள்!

பத்து நாளில் அதிர்ச்சி தரும் செய்தியொன்று மதுரை மடாதிபதியைப் பற்றி வருமென்று - காரசாரமாய், வீரதீரமாய்க் கர்ச்சனை செய்த முதலமைச்சர், கடைசியாகத் தனது மிரட்டல் அறிவிப்பை வெறும் ஜோக் என்கிற அளவில் முடித்துக் கொள்ளுமாறு நிருபர்கள், சாதனை புரிந்துவிட்டார்கள்! பலே நிருபர்கள்! அவர்களின் திறமையே திறமை!

நான் கூறாத ஒரு சொற்றொடரைச் சொல்லிக் கேள்வி கேட்டார்கள்! முதலமைச்சர் எம்.ஜி.ஆரும் நான் என்ன சொன்னேன் என்று ஆராய்ந்திடவில்லை! அடித்தார் உடனே ஒரு ஜோக்!

கை வைத்தால் நானே வந்து தடுத்து நிறுத்துவேன்!

மனிதனுக்கு மனிதன் கை வைக்க யாருக்கு உரிமை இருக்கிறது?

அதுவும் மடாதிபதி மீது கை வைப்பார்களா?

இதெல்லாம் முதலமைச்சரின் ஜோக்குகள்!

எப்படியோ இந்த ஜோக்கு வெடியில், அவர் முதலில் வெடித்த அதிர்ச்சிச் செய்தி வெடி, அவர் வெடித்த பழைய குண்டுகளின் பட்டியலில் சேர்ந்து கொண்டது என்பது மட்டும் புரிகிறது!

அன்புள்ள,

மு. க.

26-12-1983

1185. அவரையே அழைத்துச் சென்றவன்!

உடன்பிறப்பே,

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்வதும் - வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்வதும் - தீயினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்வதும் - ஆங்காங்கு துயருற்றுத் தொல்லைப்படும் மக்களுக்குத் தேவையான இன்னல் துடைப்புப் பணிகளை மேற்கொள்வதும் ஆளும் கட்சி அமைச்சர்களுக்கு மட்டுமல்லாது, அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள், முன்னோடிகள், தொண்டர்கள் அனைவருக்கும் பொதுவான பிரச்சினையாகும். பொதுமக்களின் முறையீடுகளை ஆட்சியாளர்கள் நேரிலே அறிந்து கொள்ள வாய்ப்பு இருப்பினும்கூட, அவர்கள் மெத்தனமாக இருந்து விடக்கூடாதே என்பதற்காக, பாதிக்கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகளை எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவது ஜனநாயகத்தில் ஏற்கப்பட்ட முறையே ஆகும்.

நிவாரணப் பணிகளில் காணப்படும் குறைபாடுகளை எடுத்துக் கூறினாலே, அப்படிக் கூறுகிற எதிர்க்கட்சிகளைக் கொலைகாரர்களுடன் ஒப்பிட்டும் - காமாந்தகார வெறியர்களுடன் ஒப்பிட்டும் - குடிகாரர்களுடன் ஒப்பிட்டும் நாகரிகமற்ற முறையில் விமர்சிக்கும் போக்கு, இன்றுள்ள ஆளுங்கட்சிப் பிரதானியர்களிடம் காணப்படுவது வேதனைக்குரிய விந்தையேயாகும்! ஆளும் கட்சியின் அதிகாரப்பூர்வமான ஏட்டில், அவ்வாறு அசிங்கமான உவமைகளால் எதிர்க்கட்சிகளை அர்ச்சித்து எழுதுவது அவர்களுக்கு ஏற்பட்டுள்ள உச்சகட்ட ஆத்திரத்தையே வெளிப்படுத்துகிறது!

தஞ்சையில் பெருமளவுக்கும், திருச்சியில் ஓரளவுக்கும் பெருமழையால் பாதிக்கப்பட்ட மக்கள், தெருவில் திண்டாடிக்

கொண்டிருக்கிறார்கள். பாடுபட்டு வளர்த்த பயிர் பாழாகி விட்டதே என்று விவசாயப் பாட்டாளி, கண்ணெல்லாம் புண்ணாகத் தவித்துக் கொண்டிருக்கிறான். ஏற்கெனவே ஐந்தாறு ஆண்டுகளாகப் பராமரிப்பு என்ற ஒன்றையே கண்டறியாத சாலைகள், மேலும் பழுதடைந்து, போக்குவரத்துக்கே பயனற்ற நிலைக்குள்ளாகி விட்டிருக்கின்றன. பல இடங்களில் உடைப்புகள் இன்னமும் அடைக்கப்படவில்லை. ஆறுகள், வாய்க்கால்கள், சாலைகள், வயல்கள் எல்லாமே வெள்ளப் பெருக்கால் பல பகுதிகளில் சமன் செய்யப்பட்டிருக்கின்றன.

சென்னையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்து நிருபர்கள் கேட்கிறார்கள், நீங்கள் அந்தப் பகுதிகளைக் காணச் செல்லவில்லையா? என்று!

சிறிது நாட்கள் கழித்தே செல்வதாக இருக்கிறேன்! இப்போது போனால் அதிகாரிகளும், போலீசாரும் என்னுடைய பாதுகாப்புக்கு வந்து விடுவார்கள். நிவாரணப் பணிகள் கெட்டு விடும்.

இவ்வாறு முதலமைச்சர் பதில் அளிக்கிறார்.

வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட உடனடியாக நான் செல்கிறேன் என்ற செய்தி வெளிவருகிறது! மறுநாளே முதலமைச்சர் எம்.ஜி.ஆரும், உடனே தனது பயணத்திற்குத் தயாராகிறார்.

உடனடியாகச் சென்றால் அதிகாரிகளும், போலீசாரும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவது தடைப்படும்

என்று முதல்நாள், அவர் நிருபர்களிடம் அளித்த விளக்கமெல்லாம் காற்றில் பறந்து விடுகிறது.

உடன்பிறப்பே, அனைத்துக் கட்சித்தலைவர்களையும் தன்னுடன் கருணாநிதி அழைத்துக்கொண்டு வெள்ளப் பகுதிகளைப் பார்வையிடச் செல்லவில்லையே! ஏன்? என்று முதலமைச்சர், திருச்சி நிருபர்களிடம் கேட்டிருக்கிறார்.

திருச்சியில் நிருபர்கள், என்னைச் சந்தித்த போது கேட்ட கேள்வியே, வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட நீங்கள் புறப்பட்டதும், முதலமைச்சரும் புறப்பட்டு விட்டாரே! என்பதுதான்!

எதிர்க்கட்சிகளின் பயனை இப்போதாவது புரிந்து கொண்டால் சரி!

என்று நான் அந்த நிருபர்களிடம் கூறினேன்.

நான், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த உமாநாத்தையும், செல்லமுத்துவையும் அழைத்துச் சென்றேன்.

என்று முதலமைச்சர் பெருமை பேசிக்கொண்டிருக்கிறார்.

நண்பர் உமாநாத், நண்பர் செல்லமுத்து இருவரும் அந்தப் பகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் - எனவே அவர்கள், அந்தப் பகுதிக்கு வந்து முதலமைச்சரைச் சந்தித்து, மக்களின் முறையீடுகளைத் தெரிவித்து நேரடியாகவும் உணர்த்தியிருக்கிறார்கள். இதுதான் நடந்தது.

ஆனால் முதலமைச்சர் கூறுகிறார்! அவர்கள் இருவரையும் தன்னுடன் அழைத்துப் போனதாக!

ஜனவரி நாலாம் தேதி அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம், ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்று!

வெள்ளப் பகுதிகளைப் பரவலாகப் பார்வையிடுகிற அனைத்துக் கட்சியினரின் கருத்துகளும், அவர்கள் தரும் விபரங்களும் அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு - அரசுக்குப் பரிந்துரைகள் செய்யப்படுமென்று நான், திருச்சி நிருபர்களிடம் கூறியதற்குத்தான் முதலமைச்சர் பதில் அளித்திருக்கிறார், கருணாநிதி வெள்ளப் பகுதிக்கு அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்துச் சென்றாரா? என்று!

உடன்பிறப்பே, இந்த முதலமைச்சரையே இப்போது வெள்ளப் பகுதிகளுக்கு அழைத்துச் சென்றது, அதாவது வருமாறு செய்தது, நான்தானே! இது நாடறிந்த உண்மை ஆயிற்றே!

உயிர்களை இழந்து, உடைமைகளை இழந்து, பயிர் பச்சைகளை இழந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் மக்களின் சார்பிலே, எதிர்க்கட்சிகள் எடுத்துக்காட்டும் குறைபாடுகளை விசாரித்து ஆவன செய்திட வேண்டிய பொறுப்பிலே உள்ள ஒருவர், அதுகுறித்துக் கவலைப்படாமல் இந்த நேரத்திலும் கேலியும், கிண்டலும் செய்து கொண்டிருப்பதா?

சென்னையில் இருந்தபடி வெள்ளத்தால் அதிகச் சேதமில்லை! என்று கூறியவர், இப்போது பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்து விட்டு, எதிர்பார்த்ததைவிட அதிகச் சேதம் என்று ஒப்புக் கொண்டிருக்கிறாரே! அதுவரையில் எதிர்க்கட்சிகளின் முயற்சிக்கு ஒரு வகையில் வெற்றிதானே!

அன்புள்ள,

மு. க.

29-12-1983

1186. வரிப்புலியே வந்திடுக புதுவைக்கு!

உடன்பிறப்பே,

நாளைக் காலையில் உன்னைப் புதுவையில் சந்திப்பேன்! கடந்த வாரமே நடந்திருக்க வேண்டிய புதுவை மாநில மாநாடு பெருமழையின் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டு, நாளையும், மறுநாளும் சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெற இருக்கிறது! இதனையொட்டிக் கரூர் மாநாடும் ஜனவரி ஏழு, எட்டு தேதிகளுக்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது! இந்த இடைக்காலத்தில் வெள்ளத்தால் உயிர்களையும் உடைமைகளையும் இழந்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்றிடவும், துயர் தணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள உடன்பிறப்புகளை ஊக்கப்படுத்திடவும் முடிந்தது!

ஆளும் பொறுப்பில் உள்ளவர்கள் என்னதான் விளம்பரத்தோடு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டாலும், பல இடங்களில் காணப்படும் பொறுப்பற்ற போக்குகளையும், குறைபாடுகளையும் அரசுக்கு எடுத்துக் காட்டுவதன் வாயிலாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்க்கட்சிகளால் உதவிட முடிகிறதல்லவா?

அதையே கூட ஒரு பெருங்குற்றமாகக் கருதி, ஆத்திரப்படுகிற அரசு இன்றைக்கு இருக்கின்றது!

அரசினர் இழித்துரைத்தாலும், பழித்துப் பேசினாலும் எம் கடன் பணி செய்து கிடப்பதே என்ற மனப்பக்குவத்துடன், தொண்டாற்றும் தூய உள்ளங் கொண்டோர் நமது கழகத்தினர், என்பதை நிலைநாட்டி வருகிறோம் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் உண்டு!

1977-ஆம் ஆண்டு தமிழகத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சி, தொடங்கிய கால கட்டம்! இந்திரா காந்தி அம்மையாருக்குக்

கறுப்புக்கொடி காட்டியதற்காகக் கொலை முயற்சி வழக்கு தொடர்ந்து, நம்மில் நூற்றுக்கணக்கானவர்களைச் சென்னை, மதுரை சிறைகளில் அடைத்து வைத்திருந்தார் எம்.ஜி.ஆர்.!

நான், பொதுச்செயலாளர் பேராசிரியர், பொருளாளர் சாதிக், துணைப் பொதுச் செயலாளர் ப.உ. சண்முகம், ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.பி., மற்றும் தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் கொலை வழக்கு, சதி வழக்கு, கொலை முயற்சி வழக்கு என்ற பல வழக்குகளுக்கான பிரிவுகளில் சிக்க வைக்கப்பட்டுச் சிறையில் இருந்தோம். இன்னமும் அந்த வழக்கு முடியவில்லை

அப்போது தமிழகத்தில் புயல் வெள்ளத்தால் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. சிறையில் இருந்தவாறே நிதி சேர்த்து அளித்தோம். அதைக் கூட அரசின் தலைமைச் செயலாளர் பெற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டியதால், அந்த நிதியை ஆளுநர் அவர்கள் வாயிலாக வழங்கினோம்.

நாற்பது நாள் சிறைவாசத்திற்குப் பிறகு விடுவிக்கப்பட்டவுடன் - முதல் காரியமாக நானும், பேராசிரியர் அவர்களும், ப.உ. சண்முகம் அவர்களும், ஆற்காடு வீராசாமி அவர்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்வதென்று தீர்மானித்து அவ்வாறே புறப்பட்டோம்! உடல் நலமின்மையால் நண்பர் ப.உ. சண்முகம், எங்களுடன் வர இயலவில்லை. திட்டமிட்டபடி நானும், பேராசிரியரும், வீராசாமியும் சென்று துயருற்றிருந்த மக்களுக்கு ஆறுதல் கூறித் திரும்பினோம்.

இப்போதும் வெள்ளத்தால் பெரும் பாதிப்பு என்ற செய்தியை இருபத்து ஐந்தாம் தேதி ஏடுகளில் கண்டவுடன், மறுநாளே நானும், வீராசாமியும், துரைமுருகனும் காரில் புறப்பட்டு விட்டோம்.

உடன்பிறப்பே, நீ மறந்திருக்க மாட்டாய்! 1977-இல் புயலாலும், வெள்ளத்தாலும் மக்கள் மடிந்து, கண்ணீரும் கம்பலையுமாக எஞ்சியிருந்த ஏழை எளியோர் அலறித் தவித்தபோது, தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், ஹெலிகாப்டர் விமானத்திலேயே சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பி விட்டார். அவரிடம் நிருபர்கள், தோராயமாகச் சேதம் எவ்வளவு

இருக்கும்? என்று கேட்டனர். நான் வானத்தில் பறந்து பார்த்தேன். தரையில் நடந்தது என்னவென்று எனக்கு எப்படித் தெரியும்? என்று திருப்பிக் கேட்டு நிருபர்களைத் திகைக்க வைத்தார்.

ஆனால் இப்போது, ஹெலிகாப்டர் பயணத்துடன் அவரால் திரும்ப முடியவில்லை! அப்போது நாம் சிறையில் இருந்தோம்! எனவே, அவருக்குக் கஷ்டமில்லாமல் இருந்தது!

இப்போது நாம், வெளியில் மட்டுமல்ல - பாதிக்கப்பட்ட இடங்களைக் காண உடனடியாக விரைந்து சென்று செயல் பட்டோம்! பாவம்! அவருக்கு வேறு வழியில்லை! மனத்துக்குள் நம்மைத் திட்டிக் கொண்டே கசப்பு மருந்து குடிப்பது போல, ஹெலிகாப்டரில் இருந்து இறங்கி, கார்ப் பயணங்களையும் மேற்கொள்ள நேரிட்டிருக்கிறது!

எப்படியோ அவர் நம்மோடு போட்டி போடுவதில், பொதுமக்களுக்குச் சிறிதளவாவது நன்மை கிடைத்தால் நமக்கு மகிழ்ச்சிதான்!

கழகம், ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணியிலிருந்து என்றைக்கும் ஒதுங்கி நின்றதில்லை!

தமிழக மக்களின் பாதுகாப்புக்காக மட்டுமல்ல; இந்திய நாட்டு மக்களின் பாதுகாப்புக்காகவும் - சிறப்பாக ஜனநாயகம் ஊனமடையாமல் இருப்பதற்காகவும், எதையும் தாங்கும் இதயத்துடன் போராடிய வரலாறு - போராடும் வரலாறு - கழகத்திற்கு உண்டு!

தாய்த் தமிழக மக்கள் மட்டுமன்றி, உலக நாடுகளில் பரவிக் கிடக்கும் தமிழர்களுக்காக - குறிப்பாக இலங்கையில், இனப் படுகொலைக்கு ஆளாகித் தவிக்கும் தமிழ் இனத்துக்காகக் குரல் கொடுப்பதில் கழகம் முன்னணியில் நிற்கிறது!

இந்தக் கழகம் - ஆம்! தமிழர்களின் பாதுகாப்பு அரண் - புதுவையிலே மாநில மாநாடு காணுகிறது!

பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்

சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!

என முழங்கிய புரட்சிக் கவிஞன் உலவிய பூமியிலே - உடன்பிறப்பே, மாநாட்டிலும் - ஊர்வலத்திலும் - செயற்குழுக் கூட்டத்திலும் உன்னைச் சந்திக்கக் காத்திருக்கிறேன்.

வா, வா! வகுத்திடுவோம் பல திட்டங்களை! வருங்காலம், தமிழர்க்கு ஒளிமயமாகத் திகழ வரிப்புலி நிகர் உடன்பிறப்பே! வந்திடுக புதுவைக்கு!

அன்புள்ள,

மு. க.

30-12-1983

1187. களம் பல கண்ட கரூரில் சந்திப்போம்!

உடன்பிறப்பே,

சுடர் முகம் தூக்கிச் சுயமரியாதையை உணர்த்தி - ஒளிவிழிப் பார்வையால் உள்ள உறுதியைக் காட்டி - உனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லையென்ற நிலையில் உயர்ந்து நின்றாய் புதுவை மாநாட்டில்! நீ தணல்பட்டுத் தகத்தகாயமென ஜொலிக்கும் தங்கம் - வெட்டுண்ட போதும் ஒளி கொட்டுகின்ற வைரம் - இதனை என்றும் போல் புதுவையிலே நிரூபித்தாய்! என்றென்றும் நிரூபிப்பாய் என்று நானறிவேன், இந்த நாடறியும்!

ஒரு மாவட்டத்தில் பாதிக்கும் குறைவாயுள்ள அளவும் - மக்கள் எண்ணிக்கையும் கொண்ட அந்த மாநிலத்திற்கெனச் சில தனித் தன்மைகள் இருப்பதைப்போல - நடந்தேறிய நமது மாநில மாநாட்டிலும் அந்தத் தனிச் சிறப்புகள் மிளிர்ந்தன! நம்மைப் பெருமகிழ்வில் ஆழ்த்தின!

போட்டி ஊர்வலம் நடாத்திக் கலகம் விளைவிக்க நினைத்தவர்களை நடுநடுங்க வைத்து அந்தப் பக்கம் வரவிடாமலே செய்துவிட்ட உன் வலிவுக்குப் பாராட்டும் - உறுதிக்கு வாழ்த்தும் கூறாமல் இருக்க முடியுமா?

இதோ மீண்டும் உன்னை அழைக்கிறேன்! தி.மு.கழகத்தின் வரலாற்று ஏட்டில் தனக்கென ஒரு தன்னேரில்லா அத்தியாயத்தை நீண்ட நெடுங்காலமாகப் பெற்றுக் கொண்டுள்ள திருச்சி மாவட்ட மாநாட்டுக்குத்தான் அழைக்கிறேன்! தியாக மறவர்கள் பூமி திருச்சி மாவட்டம் என்பதற்குச் சான்றுகளா தேவை? ஆயிரம் சான்றுகளை அடுக்கிக் கொண்டே போகலாமே! மற்றொரு சான்று, கரூரில் மாநாடு நடைபெறும் வெங்கமேடு எனும் இடத்தில் பந்தலிலேயே நமது பாசறைத் தளபதிகள் சிலரும் - இருநூறு தொண்டர் அணி உடன்பிறப்புகளும் மாநிலங்களவை உறுப்பினர் கழக மாவீரன்

தம்பி கோபால்சாமியும் இங்குள்ள மமதை கொண்ட அரசினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனரே!

ஆயுதமின்றி அமைதி வழியில் தொண்டர்களுக்குப் பயிற்சியும், கொள்கை விளக்கமும் தருவதுகூட இந்த அராஜக இடிஅமீன் அரசுக்கு ஆகாத ஒன்றாகும்!

அவ்வளவு ஆத்திரம் அவர்களுக்கு! அத்துணை எரிச்சல்! எனவே நிதானமிழந்த போக்கு! என்ன செய்கிறோம் என்று தெரியாமலே அடக்குமுறைகளை வாரி வீசுகிறார்கள்! அவற்றைத் தாங்கிப் பழக்கப்பட்ட பட்டாளம்தான் இது என்பதை அறியாத பரிதாபத்திற்குரியவர்களின் பரிபாலனம் இப்படித்தான் இருக்கும்!

பதவியின் கடைசிச் சொட்டுத் தேனையும் நக்கிச் சுவைத்துவிட்டு; கழகத்திற்குச் சோதனையென்றதும் கடையைக் கட்டிக் கொண்டு ஓட்டமெடுத்த பண்ருட்டிகள்; இன்றைக்கு மழைகூட இல்லாத அர்த்தராத்திரிகளில் குடை பிடித்துக் கொண்டு திரியலாம்! இலங்கைத் தூதுவர் பொன்சேகாவுடன் விருந்து அருந்தி மகிழ்ந்து கிடந்த போது அந்தத் தூதுவர் கருணாநிதியைக் கேலி பேசினார் என்று கூறி இருவருக்குமிடையே நியூயார்க்கில் இருந்த நெருக்கத்தைக் கூடத் தன்னையுமறியாமல் வெளிப்படுத்திவிடலாம்! கருணாநிதி மீது பழி சுமத்தி இலங்கை அரசு வெளியிட்ட அறிக்கைகளுக்கு வக்காலத்து வாங்கி, அந்த அரசுக்கும், இங்குள்ள அரசுக்குமுள்ள இரகசியத் தொடர்புகளைத் தங்களையறியாமலே மக்கள் மத்தியிலே போட்டு உடைத்துவிடலாம்!

பொன்சேகா என்ற இலங்கைத் தூதுவர் மட்டுமல்ல! இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே அவர்களேகூட அடிக்கடி கருணாநிதிக்கு அர்ச்சனை நடத்திட தவறவில்லை! எம்.ஜி.ஆர். அவர்களைப் போற்றிப் பாராட்ட மறப்பதுமில்லை!

உடன்பிறப்பே, இந்த உண்மைகளையெல்லாம் பதவிக்கும் பகட்டுக்கும் உன்னை விற்காத நீ மட்டுமல்ல! இலங்கைத் தமிழர் துயர் கண்டுத் துடித்தெழுந்த இந்தத் தமிழ்ச் சமுதாயம் முழுமையும் உணர்ந்ததேதான் இருக்கிறது.

‘‘இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இங்குள்ள அரசியல்வாதிகள் பேசுவது உலக அரங்கில் எதிரிகளுக்குத்

துணை புரிகிறது! இலங்கை அரசின் வாதத்துக்கு எருவாக அமைகிறது! இதை இங்குள்ள அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.''

இந்த இதோபதேசம் ஐ.நா. சென்று திரும்பிய அர்த்தராத்திரிக் குடைக்காரர் அவர்களால் அருளப்பட்டது! ஆம், ஏடுகளில் பிரகாசமாக வெளியிடப்பட்டுள்ளது!

தம்பி காளிமுத்துவையும், நண்பர்கள் மதுரை முத்து, எஸ்.டி. சோமசுந்தரம், புலமைப்பித்தன் ஆகியோரையும் மனத்தில் வைத்துக் கொண்டு நடத்தப்பட்ட மறைமுகமான தாக்குதல் இதுவென்று தள்ளிவிட முடியுமா? இங்குள்ள தமிழ் உணர்வு கொண்ட அனைவருக்குமல்லவா இந்த மகாப்பெரிய மாணிக்க மனிதர் உபதேசம் செய்துள்ளார்! இதை விடக் கடைந் தெடுத்த துரோகம், இலங்கைத் தமிழர்களுக்கு என்ன செய்ய முடியும்? செய்யக் கூடிய நபர் இவரை விட வேறு யார் இருக்க முடியும்?

தமிழீழப் பிரிவினை பற்றி நாம் பேசக்கூடாதாம்! அதற்கு உவமை வேறு, வெட்கக்கேடு!

கட்டிக்கொண்டவள்தான் விவாக ரத்துக் கேட்க வேண்டுமே தவிர கண்டவரெல்லாம் கேட்கக்கூடாது.

இதுவும் ஐ.நா. சென்றுவந்தவரின் அறிவுரை! தெளிவுரை!

கட்டிக் கொண்டவள் விவாக ரத்துக் கோரினால் அதற்கென வாதிட ஒரு வழக்கறிஞர் தேவை என்ற உண்மை கூடவா அர்த்தராத்திரிக் குடை விழாவில் மறந்து போய்விட்டது?

பாவம்! இலங்கைத் தூதர் பொன்சேகாவுடன் விருந்தருந்திய களிப்பில் அந்த விபரங்கள் எல்லாம் நினைவுக்கு வரவில்லைபோலும்!

ஒரு கோடி கையெழுத்து ஐ.நா.வில் தூங்குகிறதாம்!

அது தூங்கிய தமிழனைத் தட்டியெழுப்பிய கையெழுத்து என்பதைத் துரோகச் சிந்தனையாளர் அறிந்திட நியாயமில்லை!

அதனால் பொய்யுரைத்துப் புழுதி வாரித் தூற்றுகின்றனர்!

இத்தகு நரிகளின் ஊளைகளுக்கெல்லாம் அரிமா என நிமிர்ந்து நின்று நமது கழக அடலேறுகள் - அளித்திடப் போகும் வீரமுழக்க

விளக்கங்களைக் கேட்க, உன்னைப்போல நானும் துடியாய்த் துடித்து கரூர் மாநாடு காண முன்கூட்டியே புறப்படுகிறேன்!

உயிரனைய உடன்பிறப்பே! வரும் ஏழு, எட்டு நாட்கள் - சனி, ஞாயிறு கிழமைகள் - களம் பல கண்ட கரூர் நகரில் சந்திப்போம்!

அன்புள்ள,

மு. க.

05-01-1984

1188. அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம்!

உடன்பிறப்பே,

ஜனவரி நாலாம் தேதி காலை அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. சுமார் மூன்றரை மணி நேரம் கருத்துகள் பரிமாறப்பட்டு அதன் பின்னர் தீர்மான அறிக்கை தயாரிக்கப்பட்டது. கடந்த டிசம்பர் திங்கள் பதினைந்தாம் நாள் தமிழக முழுவதும் அனைத்துக் கட்சிகளின் சார்பில் நடைபெற்ற மறியல் போராட்டம் குறித்தும் - நீண்ட விவாதம் தேவைப்படவில்லை. ஏனெனில், அந்த ஏழு அம்சக் கோரிக்கைகள் குறித்து எம்.ஜி.ஆரின் அரசு காட்டி வருகிற அலட்சியப் போக்கு தொடர்ந்து நீடித்து வருவதால் மீண்டும் ஏழு அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி மக்கள் இயக்கத்தை நடத்துவதற்கான மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பது மட்டுமே குறித்து அனைத்துக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆலோசனைக்கு விடப்பட்டுள்ளது.

விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவது - உணவு தானியப் பொது விநியோகத்தில் நடைபெறும் மோசடிகளைத் தடுத்து நிறுத்துவது - மின் துண்டிப்புச் செய்து விவசாயிகளை வேதனையில் ஆழ்த்துவதில் இருந்து விடுவிப்பது - தொழிலாளர் உரிமைகளுக்கு விரோதமாகச் செயல்படும் அரசின் போக்கினைக் கைவிடுவது - போலீஸ் அராஜகத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பது - பொய் வழக்குகள் தொடர்ந்து எதிர்க்கட்சிகளை நசுக்க முனையும் நச்சு நினைப்பை அகற்றுவது - அரசுத் துறைகளின் எல்லாப் பிரிவுகளிலும் கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரையில் புரையோடிப் போயிருக்கும் ஊழல், லஞ்சம் எனும் பயங்கர நோயைக் களைவது - என்ற பொது நோக்கோடுதான் ஏழு அம்சக் கோரிக்கை எடுத்து வைக்கப்பட்டு, அது ஆளும்கட்சியினரின் ஏகடியத்திற்கு உள்ளான காரணத்தால் மறியல் அறப்போராட்டம் என்கிற அளவுக்கு மாநிலம் தழுவிய மக்கள் இயக்கமாக உருவெடுத்தது!

சட்டம் பேசும்! எனக் கொக்கரித்தனர்! அரசியல் தமாஷ்! என்று ஆணவம் பொழிந்தனர்! மறியலுக்கு எதிர் மறியல் செய்வேன் என்று சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பில் உள்ள முதலமைச்சரே தோள் தட்டி மிரட்டினார்!

எதற்கும் தயார்! என நெஞ்சுயர்த்தி ஒன்றரை லட்சம் தொண்டர்கள் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிறைக்கோட்டம் செல்ல மறியல் களம் புகுந்தனர்! அரசு, திணறியது! ஆணவம் பறந்தது! அடாவடிப் பேச்சுகள் சிறகொடிந்து வீழ்ந்தன! ஆலயங்களில், அரிசி ஆலைகளில், ஸ்டேடியங்களில், பள்ளிகளில், திரையரங்குகளில் - அனைத்துக் கட்சி முன்னணித் தலைவர்களையும், தொண்டர்களையும் சிறை வைக்க வேண்டிய நிலைமைக்கு ஆளான அரசினர், சிறைச்சாலைகளில் இடமின்றித் திகைத்துப் போயினர். மத்திய, மாநில அரசுகளின் அலுவலகங்களின் முன்னால் நடைபெற்ற மறியல் அறப்போருக்கு அடுத்து, மீண்டும் மீண்டும் தொடர்ந்து, ஏழு அம்சக் கோரிக்கையை முன்வைத்து எடுக்க இருக்கும் நடவடிக்கைகள் குறித்து ஓரிரு வரிகளில் தீர்மானத்தை நிறைவேற்றிய அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம், அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்தணிப்புக்காக விரிவான விவாதத்தில் ஈடுபட்டது! ஆம், அது தேவைப்பட்ட விவாதமும் கூட!

வறட்சி நிவாரணப் பணிகளால் சிறிது வளம் சேரும் என எதிர்பார்த்த மக்கள்; அந்த வளம், பெருவளமாக - அந்த வட்டாரத்தில் உள்ள ஆளுங்கட்சியினருக்குச் சேர்ந்துவிட்டதைக் கண்டு சோர்ந்து கிடக்கும் நேரத்தில் கடுமழையும், காற்றும், வெள்ளமும் மேலுமொரு சோதனைக்கு ஆளாக நேரிட்டு விட்டது!

மாநாடா? புதுவையிலா? தெரியாதே! என்று நிருபர்களிடம் கேட்ட அதே பாணியிலேதான் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., வெள்ளமா? தஞ்சை திருச்சியிலா? சேதமா? அதிகம் இருக்காதே! என்றும் கேட்டார்!

வெள்ளச் சேதம் பற்றி வந்து கொண்டிருந்த தகவல்களை அறிந்துகொள்ள அவருக்கும் அரசின் தலைமை அதிகாரிகளுக்கும் அப்போது நேரமில்லை! நினைப்பும் இல்லை!

அவர்களது நினைப்பெல்லாம் பஸ்கள் தேசிய மயச்சட்டம் சரியானதுதான் என்று உச்சநீதி மன்றம் அளித்துள்ள தீர்ப்புக்கு மாற்றாக ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்திடவும் - அந்த அவசரச் சட்டம் கருவாகி, உருவாகி, பிரசவம் நடைபெற்று பஸ் முதலாளிகள் களிப்படைய அந்த முதலாளிகள் கட்ட வேண்டிய கப்பப் பணம் ஒரு கோடி ரூபாய் குறித்த தகவல்களைச் சேகரிப்பதிலும் அதுபற்றிச் சிந்திப்பதிலேயும்தான் இருந்தது! இருக்கிறது!

எதிர்க்கட்சிகளின் கூட்டுக்குரல் மட்டும் எழுந்திருக் காவிட்டால் - அனைத்துக் கட்சித் தலைவர்கள், முன்னோடிகள் - ஆங்காங்கு பயணம் நடத்தி அல்லற்படும் மக்களின் நிலையை அவசர அவசரமாகப் பரபரப்புடன் அறிவித்திருக்காவிட்டால் முதலமைச்சர் சென்னையை விட்டு நகர்ந்திருக்கவே மாட்டார்.

அப்பாடா! ஒரு வழியாக சேதம் அதிகம்தான் என்பதை ஒப்புக்கொண்டார்! ஆனால் நிவாரணப் பணிகள் இன்னமும் மிகமிக நிதானமாகத்தான், நத்தை வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன!

எத்தகைய வேகம் தேவை - எத்தகைய நிவாரணங்கள் தேவை என்பதை யெல்லாம் தெளிவாக - விரிவாக - தீர்க்கமாக விவாதித்து அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள தீர்மான அறிக்கையை கட்சிகளின் அமைப்புகள் துண்டு அறிக்கைகளாக வெளியிட்டு அரசின் கவனத்தை மேலும் தீவிரமாகக் கவர ஆவன செய்திட வேண்டும்.

இப்போது நிவாரணப் பணிகள் விளம்பர வெளிச்சம் போட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வளவுதான்!

இதோ அதற்குச் சரியான எடுத்துக்காட்டு! தினகரனில் அல்ல - முரசொலியில் அல்ல - எதிரொலியில் அல்ல - தினமணி ஏட்டிலேயே வந்திருக்கிறது பார்!

ஜனவரி ஐந்தாம் தேதி தினமணி சென்னைப் பதிப்பில் வெளியாகியுள்ள செய்தி இது:-

தஞ்சை மாவட்டத்தில் முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி, தலைஞாயிறு பகுதிகளில் 12 தினங்களாகியும் வெள்ளம் இன்னும் வடியவில்லை.

அப்பகுதிகளில் 1 லட்சம் ஏக்கரில் நெற்பயிர்கள் இன்னமும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பல இடங்களில் வீடுகள் சேதமடைந்துள்ளன.

தஞ்சையில் உள்ள நமது நிருபர் செவ்வாயன்று கடற்படை ஹெலிகாப்டரில் சென்று வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டார். கடலோர பகுதிகளில் உள்ள வெள்ள நீர் கடலில் வடியாததே இந்த நிலைமைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. எனவே, அப்பகுதிகளில் பல கிராமங்கள் இன்னமும் வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளன.

இன்னமும் வெள்ளத்தினால் சூழப்பட்ட கிராமங்கள் மீது ஹெலிகாப்டர் பறந்தபோது அக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் உணவுப் பொட்டலங்களைப் போடும்படி கைகளை ஆட்டியது பரிதாபமாக இருந்தது.

சில இடங்களில் சிலர் மரங்கள் மீது அமர்ந்து தாங்கள் உள்ளதைத் தெரியப்படுத்தத் துணிகளை வீசிக்காட்டினர்.

வெள்ளத்தினால் சூழப்பட்ட கிராமங்களில் உணவுப் பொட்டலங்களைப் போடும் பணி செவ்வாய் மாலை முதல் நிறுத்தப்பட்டது. அக்கிராமங்களைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் வெளியேறி அருகில் உள்ள பத்திரமான இடங்களுக்குச் சென்று விட்டனர்.

இப்படியொரு அக்கறையற்ற அரசு அரியாசனத்தில் வீற்றிருக்கும் போது அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கண்டனங்களும், விடுக்கப்பட்டுள்ள அவசர அவசிய கோரிக்கைகளும் எத்துணை இன்றியமையாதவை என்பது புரிகிறதல்லவா!

அன்புள்ள,

மு. க.

06-01-1984

1189. மாநில சுயாட்சியும் நமது மகிழ்ச்சியும்!

உடன்பிறப்பே,

மாநில சுயாட்சி என்ற வார்த்தையையே பயன்படுத்தக்கூடாது. அதிக அதிகாரங்கள் என்று மட்டுமே சொல்ல வேண்டும் என்று சில மாதங்களுக்கு முன்பு கூட, சட்டப் பேரவையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். திட்டவட்டமாகக் கூறினார். நிதி நிலை அறிக்கையில் நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் மாநில சுயாட்சி என்று குறிப்பிட்டிருக்கிறாரே? நீங்கள் அந்த வார்த்தையை ஏற்க மறுக்கிறீர்களே! எனக் கேட்டபோது மாநில சுயாட்சி என்பது பிரிவினை கேட்பதுபோல் இருக்கிறது. அதனால்தான் அந்த வார்த்தையைப் பயன்படுத்த விரும்பவில்லை என்ற கருத்தையும் சட்டப் பேரவையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், திரும்பத் திரும்பச் சொன்னார்.

ஆனால் இரண்டொரு நாட்களுக்கு முன்பு ஒரு கருத்தரங்கில் அவர் பேசியதாகவும், பேசும் பொழுது பல குறிப்புக்களைப் படித்துக் காட்டியதாகவும் அவரது கட்சிப் பத்திரிகையிலேயே வெளிவந்திருக்கிறது.

முதல்வர், ஒரு குறிப்பை எடுத்து 13-12-1946-இல் பண்டித நேரு அரசியலமைப்பு சபையில் குறிக்கோள் தீர்மானத்தை முன்மொழிந்து பேசியதைப் படித்தார். பின் அபுல்கலாம் ஆசாத் 3-4-1946-இல் கூறியதைப் படித்தார். 1945-ஆம் ஆண்டு காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் மாநிலங்களுக்குச் சமஉரிமை பற்றிக் கூறியதை முதல்வர் படித்தார். 1942-ஆம் ஆண்டு மாநில சுயாட்சி பற்றிய காங்கிரஸ் தீர்மானத்தையும் முதல்வர் படித்தார். பின், மாநில சுயாட்சி பற்றி வழக்கறிஞர் ஆனந்தம் எழுதிய புத்தகத்தை எடுத்து அதற்கு அணிந்துரை வழங்கிய ம.பொ.சி.யின் கருத்தை முதல்வர் படித்தார். நாம் ஏதாவது பேசினால் மட்டும் பிரிவினைவாதிகள் என்று சொல்கிறார்கள் என்றும் முதல்வர் குறிப்பிட்டார்.

உடன்பிறப்பே, இது முதல்வருடைய அதிகாரபூர்வமான கட்சி ஏட்டிலேயே வெளியிடப்பட்டிருக்கிறது.

1974-ஆம் ஆண்டு கழக ஆட்சியில் சட்டப் பேரவையில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை அரசின் சார்பாக நான் முன்மொழிந்து விவாதம் நடைபெற்றபோது, இப்போது நடந்த கருத்தரங்கில் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் எடுத்து வைத்த அத்தனைக் குறிப்புகளும் மாநில சுயாட்சித் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியவர்களால் அன்று எடுத்து வைக்கப்பட்டன! ஆனால் அன்றைக்குச் சட்டப் பேரவையில் இருந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள், மாநில சுயாட்சி என்ற வார்த்தையை ஏற்றுக் கொள்ள மறுத்தனர்!

இருக்கின்ற அதிகாரத்தையே சரியாகப் பயன்படுத்தாத நீங்கள் - சாராயக் கடைகளைத் திறந்து வைத்துள்ள நீங்கள் - அதிக அதிகாரம் கேட்கலாமா?

- என்று அன்றைக்குச் சட்டப் பேரவையில் அ.தி.மு.க. கட்சியின் தலைவராகப் பணியாற்றிய நண்பர் எட்மண்ட் கேட்டார்.

மாநில சுயாட்சி என்று இருப்பதால் எப்படி இருந்தாலும் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

- என்று அவரே அவரது கட்சியின் கொள்கையை அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்.

1942 காங்கிரஸ் தீர்மானம் - நேருவின் உரைகள் - சிலம்புச் செல்வர் நடத்திய மாநில சுயாட்சி மாநாடு - இவைகளையெல்லாம் 1974-ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் கழகச் சார்பில் ஆதாரங்களாகக் காட்டியபொழுது - அ.தி.மு.க.வினரால் சிலம்புச் செல்வர் எவ்வளவு கேலிக்குரியவராகச் சித்தரிக்கப்பட்டார் என்பதையும், அதற்கு நான் அளித்த பதிலையும் சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகக் குறிப்புக்களில் இன்றைக்கும் காணலாம்!

நேரு சொன்னார் - அவர் சொன்னார் - இவர் சொன்னார் என்றெல்லாம் சொல்லுகிறீர்களே, மாநில சுயாட்சி என்று அண்ணா சொன்னாரா என்று அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஆவேசமாகக் கேட்ட போது - அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் அப்போதும் அமைச்சர்தான் உடனே எழுந்து, ஆட்சிக்கு வருவதற்கு முன்பே அண்ணா அவர்கள் இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி என்ற ஆங்கில இதழுக்கு அளித்த பேட்டியில் தி.மு.க.வின் குறிக்கோள்களில் மாநில சுயாட்சி State Autonomyயும் ஒன்று எனத் திட்டவட்டமாகக் கூறியிருப்பதைப் படித்துக் காட்டினார். ஆட்சிக்கு வந்த பிறகும், முதலமைச்சர் அண்ணா அவர்கள், மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தி மிகத் தெளிவாக ஆற்றியிருந்த உரையினை

அவையில் நான் படித்துக் காட்டினேன். அந்த உரை நூல் வடிவிலும் அச்சியற்றப்பட்டு, இலட்சக்கணக்கில் வழங்கப்பட்டது!

அதற்குப் பிறகும் அ.தி.மு.க.வினரும், அவர்களின் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் மாநில சுயாட்சிக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

அரசு கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்து வெளிநடப்பு செய்தனர் அன்றைக்கு அ.தி.மு.க. உறுப்பினர்கள்!

அதுமட்டுமா! இப்போது நடந்த கருத்தரங்கில் சட்டமேதை பல்கிவாலா அவர்கள் நமது கழக ஆட்சியில் அமைக்கப்பட்ட ராஜமன்னார் குழுவின் அறிக்கையை மேற்கோள் காட்டிப் பலபடப் புகழ்ந்திருக்கிறார் அல்லவா? அந்த ராஜமன்னார் குழுவின் அறிக்கை குறித்து 1974-ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் அ.தி.மு.க. கட்சித் தலைவர் கூறியது என்ன தெரியுமா?

மத்திய மாநில உறவுகள் குறித்து ராஜமன்னார் கமிட்டி அளித்துள்ள இந்த அறிக்கைப் புத்தகம், சட்டமன்ற உறுப்பினர்கள் படிப்பதற்குத் தகுதியுள்ளது அல்ல! பள்ளியில் படிக்கிற மாணவன் கூடப் பயன்படுத்த இதில் எந்தவிதமான கருத்தும் இல்லை! இது குப்பைக் கூடையில் தூக்கி எறியப்பட வேண்டிய அறிக்கை.

இவ்வாறு அ.தி.மு.க.வின் சட்டமன்றக் கட்சித் தலைவர் அன்றைக்கு ஆவேசமாக முழங்கினார்.

உடன்பிறப்பே! பெங்களூரில் நடைபெற்ற தென்மாநில முதல்வர்கள் மாநாட்டை வரவேற்றுச் சட்டப் பேரவையில் 29-7-1983-இல் நான் ஆற்றிய உரை, தொடங்கினோம் - தொடர்வோம்! என்ற சிறு நூலாக வெளி வந்துள்ளது. அதில் இதுகுறித்து விபரங்கள் மேலும் கிடைக்கும்.

இன்னொரு செய்தியையும் உனக்கு நினைவுபடுத்த வேண்டும்!

ஜனதா கட்சி ஆட்சியில் இருந்தபோது ராஜ்ய சபையில் கழக உறுப்பினர் முரசொலி மாறன் 356-வது பிரிவையே அரசியல் சட்டத்திலிருந்து எடுத்துவிட வேண்டுமென்றும், அந்தப் பிரிவு இருப்பதால்தான் மாநில ஆட்சிகளை இஷ்டப்படி கலைக்க முடிகிறதென்றும், எனவே அந்தப் பிரிவை நீக்க வேண்டுமென்றும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு சென்றபோது அதனை மார்க்சிஸ்ட்

கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் ஆதரித்துப் பேசியதோடு தி.மு.க.வுடன் சேர்ந்து வாக்களித்தனர். அ.தி.மு.க. உறுப்பினர்கள், குறைந்தபட்சம் நடுநிலை கூட வகிக்கவில்லை. தீர்மானத்தை எதிர்த்தே வாக்களித்தார்கள்.

ஆனால் இப்போது திடீர் என்று ஒரு மாற்றம்!

மாநில சுயாட்சிக்கான எடுத்துக்காட்டுகள், பண்டித நேருவிலே தொடங்கி, நமது வழக்கறிஞர் ஆனந்தம் எழுதியுள்ள மலர்க மாநில சுயாட்சி! என்ற நூல் வரையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களால் கருத்தரங்கில் படித்துக் காட்டப்படுகின்றன!

தனக்குத் தெரியாமல் நிதியமைச்சர் நாவலர் மாநில சுயாட்சி என்ற வார்த்தையை நிதிநிலை அறிக்கையில் சேர்த்து விட்டதைப் போல சட்டப் பேரவையில் முரண்பட்ட வாதத்தைச் செய்த முதல்வர் எம்.ஜி.ஆர்., இப்போது மாநில சுயாட்சி என்ற சொல்லுக்கு ஆதாரங்களையல்லவா அள்ளிக் கொடுத்திருக்கிறார்!

குப்பையிலே போட வேண்டுமென அ.தி.மு.க.வினரால் கூசாமல் விமர்சிக்கப்பட்ட ராஜமன்னார் குழு அறிக்கையிலே யிருந்துதான் பெங்களூர் மாநாட்டில் பல கருத்துகளை எடுத்துக் கொண்டோம் என்று இன்றைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் அண்மையில் சட்டப் பேரவையிலேயே ஒத்துக்கொண்டதும் - பெங்களூர் மாநாட்டுக்குப் பிறகுகூட, மாநில சுயாட்சி என்ற சொற்றொடர் கசக்கிறது எனக் கூறிக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். அவர்களுக்கு, இப்போது அந்தச் சொற்றொடர் இனிப்பதும் - மாநில சுயாட்சிக் கொள்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி - 1974-இல் இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றிய நமது கழகத்திற்குக் கிடைத்துள்ள வெற்றியென்று கருதி நாம் மகிழ்ச்சியடைய உரிமை உண்டல்லவா?

அன்புள்ள,

மு. க.

12-01-1984

1190. ஓர் இளைஞன்! ஒரு கோடி இளைஞர்கள்!

உடன்பிறப்பே,

காலை வெயில் என்றாலும் கடுமையாகக் கொளுத்திக் கொண்டிருக்கிறது!

நாங்கள் செல்லும் கார், திருச்சியிலிருந்து கரூரை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது!

வழியில் சாலையில் ஒரு இளைஞன் கரூர் நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறான்!

அவன் கையில் கொழுந்து விட்டெரியும் ஒரு தீச்சுடர்!

நெருப்பு, நிமிர்ந்து நின்றுதானே எரியும் உண்மையான சுயமரியாதைக்காரனைப் போல!

அப்படித்தான் அந்தச் சுடர் பொன்னொளி வீசி எரிந்து கொண்டிருக்கிறது!

அண்ணா ஜோதி - அதன் பெயர்! அந்த இளைஞனின் பனியனில் அப்படி எழுதியிருந்தது!

எங்கள் காரைக் கூடத் திரும்பிப் பார்க்காமல் அந்தக் காளை, கரூர் நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறான்.

வீராசாமி! துரைமுருகா! கண்டீர்களா! இந்தக் கழகக் கண்மணியை! என்று கேட்கிறேன்!

ஆமாம்! எப்படி வியர்க்க வியர்க்க ஓடிக் கொண்டிருக்கிறான் - என்கிறார்கள்!

வியர்வை அருவியெனக் கொட்டுகிறது! அந்த அருவியை பூமிக்கு அனுப்பும் மலைத்தோள்கள் அந்த மாவீரனுக்கு!

இவன்தான் கழகத்தின் உயிர்! இனமானத்தின் நாடித்துடிப்பு! இவனுக்கு முன்னால் நானும் நீங்களும் தூசு! என்று உணர்ச்சி பொங்கிடக் கூறுகிறேன்.

அவர்களும் அவனையே பார்க்கிறார்கள். நானும், காரை மெதுவாகப் போகச் சொல்லிவிட்டு அந்தத் தூய தொண்டனின் திருமுகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

அவன் பாதங்கள் புண்ணாவதைப் பற்றிக் கவலைப்படாமல் ஓடுகிறான். பதவி ஒன்றில் எப்படியாவது அமர வேண்டும் என்ற ஆசையால் அல்ல!

மண்டை பிளக்கும் வெயிலைப் பொருட்படுத்தாமல் ஓடிக் கொண்டிருக்கிறான். மந்திரி பீடத்தில் உட்காரலாம் என்ற ஆவலுடன் அல்ல! ஒரு நகராட்சி, ஊராட்சி உறுப்பினர் பதவி என்ற நப்பாசைகூட அவனை நாடியது இல்லை!

காருக்குள்ளிருந்தவாறே கண்கலங்கக் கூறுகிறேன். இவன்தான் கட்சியின் உயிர்! கட்சியின் ரத்தநாளம்! கட்சியின் இதயத் துடிப்பு! கட்சியின் மூச்சு! ஏன்? கட்சியே இவன்தான் என்று!

என்ன கண்டான் அவன்? சிறை கண்டான் - சித்ரவதை கண்டான் - சிங்கிள் டீக்கும் வழியில்லாமற் போன நேரத்திலும் செயலாற்றும் மனவலிமை கொண்டான்!

எம்.எல்.ஏ. ஆனானா? எம்.பி. ஆக ஆனானா? அமைச்சராக வேண்டுமென அணுப்பொழுதேனும் நினைத்தானா?

கட்சியினால் தனக்கு என்ன லாபம் என்று கேட்காமல் - தன்னால் கட்சிக்கு என்ன லாபம் என்று வினாடிக்கு வினாடி வினா எழுப்பி வினையாற்றும் வீரன் அவன்!

மேடையேறிப் பேசுகிறோம் நாம்! அவன் தனது அகன்ற முதுகையல்லவா வளைத்துக்கொண்டு நின்று, அதன் மீதேறிப் பேசுக என்கிறான்! அவன் முதுகுதானே நாம் முழங்கும் மேடை!

கொடியேற்றச் சொல்கிறான் அவன்! கொடிக் கயிறாக அவன் நரம்புகளையல்லவா திரித்தெடுத்து நம் கைகளில் திணிக்கிறான்!

அவன் கொட்டும் கண்ணீரும், செந்நீரும், வியர்வை மழையும்தான் இந்தக் கழகக் கழனியில் ஆயிரங்காலத்துப் பயிரை விளைவிக்கின்றன!

இத்தனைக்கும் குறைந்தபட்சம் அவன் ஒரு அமைப்பில் செயலாளனோ - தலைவனோ - பொருளாளனோ - எந்தவொரு

நிர்வாகஸ்தனாகவும் இல்லை! சாதாரண ஒரு உறுப்பினன் - ஆனால் சலியாது உழைக்கும் உடன்பிறப்பு!

இரவெல்லாம் பனியில் குளித்துக் கொண்டே தோரணம் கட்டியிருப்பான்! தெருவெல்லாம் கொடிக்கம்புகளை நட்டிருப்பான்! அதோ அந்த வரவேற்பு வளைவுகள் அவனது உறக்கமின்மையின் படைப்புகள்! அந்தப் பதாகைகள் அவன் பட்டினி கிடந்து ஆற்றிய பணிக்குக் கிடைத்த பயன்!

நானும் அவனைப்போல் தொண்டனாக இருந்து தோரணம் கட்டியிருக்கிறேன். விளம்பரச் சுவரொட்டிகளில் பசை தடவிச் சுவர்களில் ஒட்டியிருக்கிறேன். மேடை அமைத்திருக் கிறேன். அழைக்கப்பட்ட தலைவர்களின் வருகைக்காக ரயிலடியில் காத்திருந்து, அவர்கள் வந்தால் வாழ்த்து முழக்கமிட்டு - வராவிட்டால் மனமொடிந்து குமுறி - மறக்க முடியாத அனுபவத்தைப் பெற்றிருக்கிறேன். அதனால்தான் தொண்டனின் உணர்வுகளை என்னால் என்னை அறியாமலே பிரதிபலிக்க முடிகிறது. இன்னமும் தொண்டனாகவே இருக்க முடிகிறது!

அம்மவோ! இதோ ஓடிக் கொண்டிருக்கிறானே - இவன் கையில் உள்ள அண்ணா சுடர் இவனது தலைவனின் கரங்களில் கரூர் மாநாட்டு மேடையில் இவனால் தரப்பட வேண்டுமாம்! அதற்காக இப்படி ஓடுகிறான்! இவனது தலைவனும் ஒரு தொண்டன்தான் என்பதை இவன் ஏன் அறியவில்லை? ஒருவேளை அந்த உண்மையை அறிந்து கொண்டிருப்பதால்தான் இப்படித் தலைதெறிக்க ஓடுகிறானா?

இவனது தூய உள்ளத்தைப் புரிந்து கொண்டால் இவனுக்குத் துரோகம் செய்ய மனம் வருமா? எத்தனை பேரைத் தூக்கி விடும் ஏணியாக இருந்திருக்கிறான் - இவன் தோளில் கால் வைத்துப் பதவிப் பொறுப்புகளில் அமர்ந்தவர்கள் எத்தனை பேர்! அவற்றையெல்லாம் அவன் சிந்தித்துப் பார்த்து கைமாறு கேட்கிறானா?

உனக்காக ரத்தம் சிந்துகிறேன்! வியர்வை வடிக்கிறேன்! உயிரைத் தரவும் முன்வருகிறேன்! ஏன்? எதற்காக? பட்டாளத்துச் சிப்பாயாக நானும், படைத் தளபதியாக நீயும் இருந்து நமது கொள்கைக் கோட்டையைப் பாதுகாத்து எதிரியின் கொட்டத்தை

அடக்குவதற்காக! இப்படி அந்தத் தொண்டனின் இதயத்து உதடுகள் உச்சரிக்கின்றன!

அவன் விடும் மூச்சுத்தான் புயலாக மாறி, பகைவனின் கப்பற்படையையே கடலில் கவிழ்த்து விடுகிறது!

அவன் கந்தலாடையில் கசங்கி, கைவிரல்களில் நசுங்கி, அழுக்கேறிய நிலையில் நிதியெனும் பெயர் பெற்று, தரப்படுகிற ஒவ்வொரு ஒரு ரூபாய்க் கரன்சியும்தான் கழகத்தின் அரண்மனைப் பொக்கிஷம்!

அந்தக் கருவூலத்தின் ஒவ்வொரு காசையும் நியாயமாகச் செலவிடும் நேர்மையான நிர்வாகியைத்தான் அவன் நெஞ்சில் வைத்துப் போற்றுவான்! இல்லையேல் அவர்களை நஞ்சில் தோய்த்த பண்டமாகக் கருதி வீசி எறிவான்!

ஏனெனில், அவன் பீடி சுற்றியோ - மூட்டை தூக்கியோ - ரிக்ஷா ஓட்டியோ - வாய்க்கால் தோண்டியோ - வரப்பு வெட்டியோ சம்பாதித்த காசு! வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி, வாழையடி வாழையாக வாழ வேண்டிய தனது கட்சிக்காக அவன் செலுத்தும் காணிக்கை! அதில் சேதாரம் ஏற்பட்டால் சிந்தை குலையும் அவனுக்கு!

அவனது உழைப்பை உறிஞ்சியதால் உயர்ந்தோர், அவனை உதைத்தால்கூட அவன் கவலைப்படமாட்டான். அவன் கட்டிக்காக்கும் கட்சிக்குத் துரோகம் செய்துவிட்டுப் பதவிக்காக - பவிஷுக்காக - பணத்திற்காக வேலி தாண்டுபவர்களை அவனால் சகித்துக் கொள்ள முடியாது! குமுறிக் குமுறி அழுவான்! பலிக்குமோ, பலிக்காதோ அதுபற்றிக் கூடக் கவலைப்படாமல் சபிப்பான்! சாபம் கொடுப்பான்!

அந்த உத்தம உடன்பிறப்பு ஓட்டத்தை நிறுத்தாமல் கரூர் மாநாட்டு மேடையில் அண்ணா சுடரை என் கையில் அளித்தான்! கரத்தைக் குலுக்கினான்!

ஆனால் இப்பொழுதும் நினைத்துப் பார்க்கிறேன். தீபச்சுடருடன் அந்தத் தியாகசீலன் சாலையில் ஓடிக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது!

ஓர் இளைஞன்!
ஒரு நூறு இளைஞர்கள்!

ஓராயிரம் இளைஞர்கள்!
ஒரு லட்சம் இளைஞர்கள்!
ஒரு கோடி இளைஞர்கள்!

அனைவரின் கரங்களிலும் அண்ணா சுடர்! அணையாத அந்த தீபச் சுடர்! கழகத்தின் ஜோதி! களங்கமற்ற ஜோதி!

எங்கும் ஒளிவெள்ளம்! பொல்லா இருள்போக்கும் புத்தொளியின் வீச்சு!

இனிக் கவலையில்லை! இவர்களைப்போல் இதயசுத்தியும் - இலட்சிய உறுதியும் - தன்னல மறுப்பும் - தன்மான உணர்வும் கொண்டோர் இருந்திடும்போது, நிச்சயமாகச் சொல்லுகிறேன்! இனிக் கவலையே இல்லை!

அன்புள்ள,

மு. க.

13-01-1984

1191. பொங்கற் புதுநாள் செய்தி!

உடன்பிறப்பே,

எத்துணைத் துன்பதுயரங்கள் உள்ளத்தைக் காரிருள் எனக் கப்பியிருந்தபோதிலும், மின்னல் கீற்றென ஒரு மகிழ்ச்சி பொங்கல் வாழ்த்து வழங்கிடும்போது பாய்ந்திடத்தான் செய்கிறது! இலங்கைத் தமிழர்க்குற்ற வேதனைகளை எண்ணுகிறேன் - இங்குள்ள தமிழ்க்குலமும் மாய்க்கப்படுவதற்கான மறைமுகச் செயல்கள் நாள்தோறும் நடைபெறுவதைக் காணுகிறேன் - இவற்றுக்கிடையே உறுதிப்பாடு மிக்க நம்பிக்கையெனும் ஊன்றுகோல் கொண்டு வழுக்கு நிலத்தைக் கடக்கலாம் என்றும் துணிவு பெறுகிறேன்! உன் துணையுடன் நடக்கிறேன்!

சோழமண்டலத்து உழவர்குலம் வெள்ளப் பாதிப்பால் சோர்வுற்றுக் கிடக்கிறது - தமிழகத்துப் பிற மண்டலங்களோ உழவர்குடியினரின் விழிநீரைத்தான் அருவியென ஓடவிட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில்தான் உழவர் திருநாள்! தமிழர் பெருநாள்!

கவலைகள் சூழ்ந்து முற்றுகையிட்ட போதும், நமது கலாச்சார விழாவாம் பொங்கல் விழாவில் ஒரு துளி பூரிப்பு, அடிக்கரும்பின் சுவையாகத் தலைகாட்டத்தான் செய்கிறது! எனவே நான் வாழ்த்து குவிக்கின்றேன்! உனக்கும் உனைப்போன்ற என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளுக்கும்!

அண்மையில் கரூர் மாநாடு! அங்கே உன்னைச் சந்தித்தேன்! சங்கப் புலவர்கள் பதினொரு பேர் பிறந்து வளர்ந்து சங்கப் பாடல்கள் தந்த ஊர் கரூர்! மாநாட்டின் நிறைவுரையில் அந்தப் புலவர்களின் பாடல்களில் கொட்டும் தேனமுதை உனக்கு அள்ளித் தர இருந்தேன்! ஆனால் என் மனம் அன்றைக்கு நிலைகுலைந்திருந்ததை நீ அறிவாய்! பந்தலில் மட்டுமல்ல தீயோர் இட்ட தீ! என் நெஞ்சிலும் கூடத்தான் அந்த நெருப்புத் தணல் தகித்துக் கொண்டிருந்தது! அதனால் வளமான சொற்கள் வறண்டு போய் விட்டன! விரைவில் உன்னிடமிருந்து விடை பெற்றுக் கொண்டேன்! மன்னித்துக் கொள்!

கருவூர் கதப்பிள்ளை சாத்தனார் பாடியுள்ள நற்றிணைப் பாடல் ஒன்று!

படையுடன் வந்து என்னை வதைக்கும் இந்த மாலைப் பொழுது, என்னைப் பிரிந்து பொருள்தேடச் சென்றுள்ளாரே என் காதலர் - அவர் சென்றுள்ள நாட்டில் வருவது கிடையாதோ? எனத் தோழியிடம் கேட்கிறாள் பிரிவாற்றாத ஒரு காதலி!

படையொடு வந்த பையுள் மாலை
இல்லை கொல் வாழி தோழி நம் துறந்து
அரும்பொருள் கூட்டம் வேண்டிப்
பிரிந்துரை காதலர் சென்ற நாட்டே

காதலியை வாட்டும் மாலைப்பொழுது, காதலனையும் வாட்டுமல்லவா? அதனால்தான் அந்த மாலைப்பொழுது தன் காதலன் சென்ற ஊரில் இல்லையோ? என ஏங்குகிறாள்!

மாலைப்பொழுது, காதலன் - காதலி இருவரையும்தான் படையுடன் வந்து வாட்டுகிறது! மாலைப்பொழுது மகிழ்ச்சியூட்டவும் வல்லது - எப்போது? பிரியாமல் இருவர் இருந்திடும் போது! பிரிந்து விட்டாலோ அந்த மாலைப்பொழுது இன்பத்திற்குப் பதிலாக ஈட்டி வீசுகிறது நெஞ்சில்!

உடன்பிறப்பே, இன்பம் துன்பம் இரண்டையும் தரும் மாலைப் பொழுது போலவே பொங்கல் விழாவும் அமைந்திடுகிறது பார்த்தாயா? பொங்கல் நாளன்றும் உலையிலிட ஏதுமில்லார் எண்ணற்றோர் தமிழகத்தில்! அவர்களுக்கெல்லாம் படையொடு வந்த பையுள்மாலை போன்றதுதானே இந்தப் பொங்கல்!

கதப்பிள்ளை சாத்தனார் எனும் அந்தக் கருவூர் புலவரின் மற்றொரு பாடல், புறநானூற்றுப் பனுவலில் இடம் பெற்றுள்ளது.

தினை விளைத்துத் தின்று வாழும் குறவர் குடி மக்களின் வளம் எவ்வாறு இருந்தது என்பதையும் - அவர்கள் வாழ்ந்த பகுதியின் செழிப்பு எத்தன்மை வாய்ந்தது என்பதையும் அந்தப் புறப்பாடல் குறிக்கிறது!

பிட்டங் கொற்றன் என்னும் சேரர் தளபதியைப் புகழ்ந்து பாடுமிடத்து அவன் உலவும் குதிரை மலையைச் சிறப்பித்துப் பாராட்டுகிறார் புலவர்!

பாடலின் பொருளை மட்டும் விளக்குகிறேன்! கரூர் மாநாட்டிலேயே விளக்கிட இருந்தேன்! கரூர்ப் புலவர்கள் புகழை அங்கேயே விவரிக்கத் துடித்தேன்! நெஞ்சடைத்துப் போனதால் - நாக்கும் முடங்கி விட்டது! அதனால் இப்போது தருகிறேன் பழைய நாள் பாட்டு வளத்தை மட்டுமல்ல! நாட்டு வளத்தையும் கூட!

அருவிகள் சிந்து பாடும் பரந்த இடத்தில் மிளகுக் கொடிகள் வளரும் மலைச்சாரல்! அதனையடுத்து, கேழல் உழுத புழுதியிலே விதைக்கப்பட்டு விளைந்து கதிர் விட்டுக் குலுங்கும் தினைப்புனம்! அந்தப் புத்தம் புதிய தினையை உண்பதற்காக விரும்பி நாள் குறித்த குறவர் குடிமக்கள் உலை வைக்கப் பானை தேடுகின்றனர். மான்கறி சமைத்து கழுவாமல் புலால் நாறுகிற ஒரு பானை! அந்தப் பானையில் ஆவின் பாலை உலை நீருக்குப் பதிலாக ஊற்றித் தினையை இட்டு அந்த அடுப்பைச் சந்தன விறகுகளால் எரித்துச் சமையலை முடிக்கின்றனர். பின்னர் அகன்ற வாழையிலையில் இட்டுப் பலரோடும் பகிர்ந்துண்ணுகின்றனர்.

உடன்பிறப்பே, குறவர் குடிமக்கள்தான்! தினை விதைக்கின்றனர்! மான்கறி சமைத்து உண்ணுகின்றனர்! பானையில் வெறும் நீருக்குப் பதிலாக ஆவின் பாலையே ஊற்றி அந்த உலைநீரில் தினையை வேக வைக்கின்றனர்! அடுப்போ சந்தன விறகினால் மூட்டப்படுகிறது!

அந்தநாள் தமிழக வளத்தையும் இந்தநாள் தமிழக நிலையையும் ஒப்பிடத் தோன்றுகிறதல்லவா? அன்று அடுப்பெரிக்கவே சந்தன விறகாம்? இன்று அடுப்பு எரிந்தால் அதுவே ஆண்டவன் செயல் என உருகிடும் காலம்!

அந்நாளை நினைந்திடும்போது பொங்கல் நாள் மகிழ்ச்சியூட்டுகிறது! இந்நாளை எண்ணினாலோ கண்ணீர்தான் இமைக் கதவோரம் எட்டிப் பார்க்கிறது!

நம் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, நலிவுற்றோர் கண்ணீரைத் துடைப்பதற்கு இந்தப் பொங்கல் நாளில் நம்பிக்கையுடன் புறப்படுவோம்!

இதுவே என் பொங்கற் புதுநாள் செய்தி!

அன்புள்ள,

மு. க.

15-01-1984

1192. வெற்றிச் செல்வனுக்கு வீரவணக்கம்!

உடன்பிறப்பே,

அந்தத் தம்பி வெற்றிச்செல்வன் மரணத்தின் வாயில் விழுந்து விட்டான்! குற்றுயிரும் குலைஉயிருமாக அவனை ஆக்கிப் போட்ட கொலை வெறியர்கள், இன்றைக்குக் கும்மாளம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்! தாங்கள் நடத்திய கொலை முயற்சி வெற்றி பெறாமல் போய் விட்டதே என பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த கொடுமையாளர்களின் மனம் குளிர அந்தத் தம்பி தனது உயிர்மூச்சை நிறுத்திக் கொண்டான்!

நான்கு மாதங்கள் மதுரை மருத்துவமனையில் உயிருக்குப் போராடிய அந்த வாலிப ஜீவரத்தினம் - வாழ்க கழகம் என்றே வாழ்ந்திருந்த நாளெல்லாம் முழங்கிக் கொண்டிருந்த அந்தக் கொள்கை முரசம் - கொலைகாரப் படுபாவிகளின் ஆசையை இறுதியாக நிறைவேற்றி வைத்து விட்டான்!

பலமுறை அவன் பகைமுகத்துப் பாதகர்களால் குறி வைக்கப்பட்டதுண்டு! அவனது ஒலி பெருக்கிக் கடை உடைத்து நொறுக்கப்பட்டதுண்டு! அதனால் இருபதாயிரம் - முப்பதாயிரம் ரூபாய் இழப்பு ஏற்பட்டதும் உண்டு! அத்தனை முறையும் தப்பி விட்ட அவன், கடந்த செப்டம்பர் - அண்ணா பிறந்த நாள் விழாவில் அண்ணாவின் சிலையருகிலேயே வெட்டுண்டு குருதி வெள்ளத்தில் மூழ்கினான்.

இடுப்புக்கு மேலே ஒரு பிரதான நரம்பில் வெட்டும் குத்தும் பாதித்து விட்டதால் இடுப்புக்குக் கீழேயுள்ள அவயவங்கள் இயங்க முடியாத நிலையில் - மருத்துவமனையில் நான்கு மாதங்கள் கிடத்தப்பட்டிருந்தான். அந்த மாவீரனைக் காணும்பேறு மருத்துவமனையில் எனக்குக் கிட்டிய போது, மெல்லப் பேச முடிந்தது அவனால்! ஆனால் கால்களை அசைக்க முடியவில்லை! உயிர் மட்டும் இருந்தால் போதும்! அவன் வீரமுகத்தைப்

பார்த்துக் கொண்டே வீட்டார் ஆறுதல் பெறுவர் - கழக உடன்பிறப்புகள் அவன் துணையுடன் கட்சிப் பணியாற்றுவர் என்று அருகிலிருந்தோர் அழுதுகொண்டே கூறினர்.

திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில் பம்பரமெனச் சுழன்று பணியாற்றக்கூடிய தம்பியைத்தான் இன்றைக்கு இழந்து விட்டோம்!

தி.மு.கழகம் வைத்த அண்ணா சிலை! அந்தச் சிலைக்கு மாலை போடத் தி.மு.கழகத்துக்காரனுக்கு உரிமை கிடையாதாம்! ஆளும் கட்சியினர் அந்தச் சிலைக்கு விழா நடத்தி முடித்த பிறகு இரண்டு நாள் கழித்துத்தான் தி.மு.கழகத்தினர், சிலைக்கு விழா எடுக்கலாமெனக் காவல்துறை கூறியது! அவ்வாறே கட்டுப்பட்டு விழா எடுக்கச் சென்றனர்.

கொடியோர் தலைமையில் குண்டர்கள் சூழ்ந்தனர்! அமளி விளைத்தனர்! காவல்துறை கை கட்டி வாய் புதைத்து வேடிக்கை பார்த்தது! வெற்றிச்செல்வன் வீழ்த்தப்பட்டான்! மாஜிஸ்டிரேட் ஒருவரே அவனது மரண வாக்குமூலத்தைப் பதிவு செய்தாராம் - தன்னைக் கொல்லத் தூண்டிய சண்டாளர்கள் யார் என்பதையும், வெட்டுண்ட போது அவர்கள் அருகிலேயே நின்று ஆணை கொடுத்தனர் என்பதையும், மரண வாக்குமூலத்தில் வெற்றிச்செல்வன் சொல்லியிருக்கிறான்.

கடமையாற்ற முடியாமல் காவல்துறை தத்தளித்தது! தத்தளித்தது!

ஆம்! காவல்துறை, ஆளுங்கட்சிக் குண்டர்களின் ஏவல் துறையாகிவிட்ட பிறகு நீதி எங்கே? நேர்மை எங்கே? சட்டம் எங்கே? கரூர் மாநாட்டுப் பந்தலுக்குத் தீ வைத்தவர்களை விட்டுவிட்டு, மாநாட்டுக்கு வந்து திரும்பிய கழகத்தினரைப் பேருந்து நிலையங்களில் கைது செய்து கொலை முயற்சி வழக்குப் போட்டிருக்கும் அநியாயத் துறையாகவன்றோ அந்தத் துறை மாறிவிட்டிருக்கிறது! கடமையைச் செய்ய முடியவில்லையே எனக் கண்கலங்கி, கைபிசைந்து நிற்கும் பலர் அந்தத் துறையில் இன்னும் எஞ்சியிருக்கின்றனர் எனினும், ஆளுங்கட்சியின் பொம்மலாட்டப் பதுமைகளாகவன்றோ செயல்பட வேண்டியிருக்கிறது!

திருச்செந்தூர் நடந்தது! இதோ திருவரங்கமும் நடைபெற்று விட்டது! யார் என்ன கூச்சல் போட்டாலும் நீதிக்குத்

தலைவணங்கத் தயாராக இல்லாதவர்களிடம் எதை எதிர்பார்க்க முடியும்?

ஒன்றா? இரண்டா? எத்தனையோ கொலைகள் மறைக்கப்பட்டு விட்டன? புட்லூர் தண்டபாணி, மதுராந்தகம் ஞானசௌந்தரி! இப்படிப் பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம் -

ஆனால் ஆளும் கட்சிக்காரர் ஒருவரை எறும்பு கடித்து விட்டது என்றாலும், எதிர்க்கட்சிக்காரர்கள் மீது கொலை வழக்கு! கொலை முயற்சி வழக்கு!

இதுதான் இன்றைய ஆட்சியின் இலக்கணம் என்று ஆகிவிட்ட பிறகு, வெற்றிச்செல்வனின் கொலைக்குக் காரணமான கயவர்களைக் கூண்டிலேற்றவா போகிறார்கள்?

எனக்கு நம்பிக்கையில்லை உடன்பிறப்பே! எனவே, இந்த ஆட்சியாளர்களைக் குற்றவாளிக் கூண்டிலேற்றி மக்கள் மன்றம் தண்டனை கொடுப்பதைத் தவிர, இருண்டு போன தமிழகத்திற்கு வேறு விடிவு காலமே இல்லை!

வீரன் வெற்றிச்செல்வனின் கல்லறையின் முன்நின்று சூளுரை மேற்கொள்வோம்! சூதர்கள் செயல் பொடிப் பொடியாக - சுடர் முகம் தூக்கிச் செயல்படுவோம்!

பாசமுள்ள குடும்பத்தையும் - பரிவுமிக்க துணைவியையும் தவிக்கவிட்டுத் தியாகத் தங்கமாகி விட்ட வெற்றிச்செல்வனுக்கு வீரவணக்கம் செலுத்துவோம்! அந்தக் குடும்பத்திற்கு அரணாகத் திகழுவோம்! வாழ்க வெற்றிச்செல்வனின் புகழ்!

அன்புள்ள,

மு. க.

18-01-1984

1193. திண்டுக்கல் அழைக்கிறது!

உடன்பிறப்பே,

திண்டுக்கல் அழைக்கிறது!
திண்தோள் வீரனே!
தியாகத் திருவிளக்கே!
கண்மணியே! கழக மாமணியே!
கதிரொளி பரப்பும் குலமணியே!
உன்னைத்தான் அழைக்கிறது திண்டுக்கல்!

மிக முக்கியமான கட்டத்தில் கூடுகிறோம் - புதுவைக்குப் பிறகு, கரூருக்குப் பிறகு கூடுகிறோம். ஜனநாயக நெறியை எரித்தனர் புதுவையில் - அந்தக் கொடுமையை மக்களுக்கு விளக்கினோம்! ஜனநாயகப் பாதுகாப்பு அரணாம் கழகத்தின் மாநாட்டுப் பந்தலையே எரிக்க முனைந்தனர் எட்டப்பன் கூட்டத்தார், கரூர் நகரில்! அந்த இரண்டு எழுச்சி மிகு மாநாடுகளுக்குப் பிறகு, திண்டுக்கல்லில் கூடுகிறோம்!

இவற்றுக்கிடையிலே கல்கத்தா மாநாடு நடைபெற்று முடிந்திருக்கிறது! நாடு தழுவிய மக்கள் இயக்கமொன்றை நடத்திடத் தீர்மானித்திருக்கிறது! அந்த அனைத்திந்திய எதிர்க்கட்சித் தலைவர்களின் மாநாடு விரைவில் சென்னையில் நடைபெற இருக்கிறது! வரும் 25-ஆம் நாள் தமிழ்நாடு அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டமும் நடைபெறுகிறது! கல்கத்தா தீர்மானங்களையும், தமிழக அனைத்துக் கட்சிக்கூட்டம் எடுக்கும் முடிவுகளையும் விளக்கிடும் வாய்ப்பாகத் திண்டுக்கல் அமைகிறது என்பதில் ஐயமில்லை!

இந்திய நாட்டு அரசியல் அரங்கம், ஒரு கட்சியின் ஏகபோகமாக இருக்க வேண்டுமென்ற முனைப்போடு ஆங்காங்கு நடைபெறுகிற அநாகரிகச் செயல்கள், ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைப்பவைகளாகத் தோற்றமளிக்கின்றன!

நமது மாநிலமோ, நாடாள்வோரின் நாச நடவடிக்கைகளின் களமாகத் திகழ்கிறது!

நிர்வாகச் சீரழிவு - அடிமுதல் நுனி வரையில் லஞ்சம், ஊழல் - வறுமைக் கோட்டுக்குக் கீழே வதைபடும் மக்கள் - வேலையின்மையால் வேதனையில் துடிக்கும் இளைஞர் - விலைவாசி உயர்வால் தவிக்கும் தாய்க்குலம் - வறட்சித் துயர் - வெள்ளப் பாதிப்பு - அதற்கான நிவாரணப் பணிகளிலும் ஆளும் கட்சி வேட்டை - விவசாயி கதறல் - தொழிலாளி அவதி - இவை எது குறித்தும் அலட்டிக் கொள்ளாமல் ஆணவ மொழி, ஆடம்பர வழி, அலட்சிய விழி கொண்டு நட்சத்திரக் குவியலில் நாட்டியமாடும் அரசு!

ஏமாற்றப்பட்ட மக்களுக்கும் - இன்னும் ஏமாறக்கூடிய மக்களுக்கும் - இங்கு நடைபெறும் எத்தர் ஆட்சியின் கோணல்களை எடுத்துரைக்கும் பணியும் - செயல்படுத் திறனும் எத்தகையது என்பதை வடித்தெடுக்க வேண்டிய வேளை வந்து விட்டது!

இனியும் உறக்கம் கூடாது! ஊக்கம் பிறக்க வேண்டும்! ஊரையடித்து உலையில் போடும் உன்மத்தர் கொட்டம் அடக்க உதவாதினி ஒரு தாமதமென உடனே எழுந்திட வேண்டும்!

நீதியை வளைத்து முறித்துப் போடும் கோர நிகழ்ச்சிகள் ஒன்றா? இரண்டா?

திருச்செந்தூர் - திருவரங்கம் என்று தேவாலய கொலைகள், கொள்ளைகள் தொடருகின்றன!

ஊர் பேசுகிறது! உலகம் பேசுகிறது! ஆனால் ஊராள வந்தவரோ ஒன்றுமறியா உத்தமர்களைப் போல் நடமாடுகின்றனர் - சாதாரணமாகிவிட்டன! ஆளுங்கட்சியினர் அந்தக் காரியத்தை நித்தநித்தம் நடத்துகின்றனர்! ஆனால், சட்டம் கொட்டாவி விட்டுக்கொண்டு கிடக்கிறது!

செய்யாத குற்றத்திற்கு எதிர்க்கட்சிகளின் மேல் அந்தச் சட்டம் சிறுத்தைப் புலிபோல் பாய்கிறது!

இந்த அநியாயத்திற்கும், பழிவாங்கும் போக்கிற்கும் முடிவே கிடையாதா?

இதுபோன்ற கேள்விகளுக்கு விடைகாணத்தான் திண்டுக்கல்!

மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை முதற்கொண்டு, அரசியலரங்கில் நடைபெறும் நிகழ்ச்சிகள் வரையில் விமர்சிக்க மட்டுமல்ல! அவற்றுக்கெல்லாம் ஒரு நல்ல முடிவு காண, என்ன செய்யலாம்? என்ற அழுத்தமான சிந்தனையுடன் நீ வர வேண்டுமென திண்டுக்கல்லுக்கு உன்னை அழைக்கிறேன்!

எதிலும் போட்டி - எதற்கும் போட்டி - என எரிச்சல் அரசியல் நடத்தும் எம்.ஜி.ஆர். அவர்கள், நமது திண்டுக்கல் மாநாட்டை யொட்டியும் போட்டி நடத்திப் பார்க்கிறார்!

சட்டம், அமைதி காக்க வேண்டிய பொறுப்பிலே இருப்பவர், சலசலப்பு ஏதேனும் ஏற்படாதா எனக் கொட்டமடிக்கிறார்!

பாண்டி மண்டிலத்து மக்கள், வீரம் மிக்கவர்கள்! வீரத்தை விழியசைவுகள் வெற்றி கண்டதாக வரலாறு இருக்கலாம்! அந்த வரலாற்றை மாற்றக் கூடிய உறுதி கொண்ட உள்ளத்தினர் இன்றைக்குத் தென்பாண்டி மண்ணிலே திரண்டு கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாகத்தான் திண்டுக்கல் மாநாடு நடைபெற இருக்கிறது!

திண்டுக்கல் அழைக்கிறது!
திண்தோள் வீரனே!
தியாகத் திருவிளக்கே!

பயணத்திற்குத் தயாராகிடு!

அன்புள்ள,

மு. க.

23-01-1984

1194. முடியும்! நல்லபொழுது விடியும்!

உடன்பிறப்பே,

சேலம் மாவட்டத்தில் இரண்டு நாள் நிகழ்ச்சிகள்! முதல்நாள் நிகழ்ச்சிகளின் தொடக்கமே களைகட்டிவிட்டது! களிப்பு வழங்கிடும் வண்ணம் அமைந்துவிட்டது! ஆரம்பமே ஆட்டையாம்பட்டியெனும் பேரூரில்! வீரபாண்டி ஒன்றியத்தில்! பதிமூன்றாயிரம் ரூபாய் - கழகத் தேர்தல் நிதிக்காக அள்ளித் தந்தனர்! அள்ளித் தந்தனரா? இல்லை! இல்லை! கழக உடன்பிறப்புகளை ஆலையிட்ட கரும்பாக்கி தேர்தல் நிதியென்னும் சாறு பிழிந்தேன் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்! வெண்ணந்தூர், உடுப்பம், செல்லம்பட்டி, மோகனூர், இராசிபுரம், இப்படிப் பல பொதுக்கூட்டங்கள் - இறுதியாக முதல்நாள் இரவு நிகழ்ச்சி சூரமங்கலத்தில் நிறைவு பெறும்போது மணி ஒன்று! மதியம் உணவே இரண்டரை மணிக்குப் பிறகுதான் என்பதால், இரவு உணவை ஒன்றரை மணிக்கு அருந்தியதில் பெரிய இடைவெளியொன்றும் ஏற்பட்டு விடவில்லை. கொளுத்துகின்ற வெயிலில் வழியெல்லாம் பல நிகழ்ச்சிகளில் என்னை வாட்டியெடுத்தனர் என்றாலும், வழங்கிய நிதி நாற்பத்து ஐயாயிரம் என்பதால் முதல்நாளைப் பற்றிய இனிய நினைவுகளுடன், மறுநாளைப் பற்றிய உற்சாக எதிர்பார்ப்புடன் உறக்கத்தின் தழுவலுக்கு மெல்ல மெல்ல என்னை ஒப்படைத்தேன்.

நான் எண்ணியவாறே மறுநாள் நிகழ்ச்சிகளைச் சேலத்துச் செயல்வீரர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். தாதம்பட்டி, பள்ளிபட்டி, ஆச்சாங்குட்டப்பட்டி, சுக்கம்பட்டி ஆகிய ஊர்களில் கொடியேற்று விழாக்கள் - அவற்றையொட்டி ஐந்தாறு நிமிடப் பேச்சு! அதற்கே ஒவ்வொரு ஊரிலும் ஆயிரம் ரூபாய் கிட்டிகட்டி வாங்கி விட்டேன்! பாவம்! என்ன செய்வார்கள் அந்த இளம் உடன்பிறப்புகள் - பாசமிகு அண்ணன் கேட்கிறானே என்கிற போது பம்பரமாகச் சுழன்றுதான் அந்த நிதியினை வசூலித்து வழங்கினர்! அதைத் தொடர்ந்து உச்சிச் சூரியன் கொளுத்திக்

கொண்டிருந்த வேளையில் உதயசூரியன் அமைந்த மேடையில் இருந்தவாறு ஒரு மணி நேர நிகழ்ச்சி! ஆம், அயோத்தியா பட்டினத்தில்! அங்கு கிடைத்த ஆறாயிரத்துடன் மறுநாள் மதியம் வரையில் பத்தாயிரத்தை எட்டிப் பிடித்தது! முதல்நாள் திருச்சி மாவட்டச் செயலாளரும், மறுநாள் தஞ்சை மாவட்டச் செயலாளரும் கூட வந்திருந்தனர் - சேலம் நிகழ்ச்சிகள் கண்டு மெய்சிலிர்த்துப் போயினர்! மாலை முதல், இரவு பன்னிரண்டு மணி வரையில் மல்லிக்கரை, மங்களபுரம், கங்கவல்லி, ஆத்தூர் ஆகிய இடங்களில் நிகழ்ச்சிகள்! மேலும் இருபத்து ஐயாயிரம் சேர்ந்தது! ஆத்தூரில் மட்டும் பதினைந்தாயிரம் அளித்து என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தினர்! மிகப் பிரம்மாண்டமான கூட்டம் நடத்திய கங்கவல்லியில் ஐயாயிரம் மட்டுமே கொடுத்து என்னைக் கோபத்துக்கு ஆளாக்கினர்! வேண்டாமென்று திருப்பிக் கொடுத்தேன் - ஆத்தூர் கூட்டம் வரையிலே என் பின்னாலேயே வந்து அந்த ஐயாயிரத்தை என்னிடம் திணித்து விட்டுப் போயினர்!

எங்கே அவர்களும் கோபமாக அதை அவர்கள் ஊர் கழக நிதியிலேயே சேர்த்து விடுவார்களோ, என்ற பயத்தில் பின்னால் வருகிறார்களா என்று நானும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு வந்தது, எனக்கல்லவா தெரியும்!

வெறுப்பில் எழும் சினமல்லவே அது! உரிமையுடன் என் உடன்பிறப்புகளுடன் நான் கொண்டுள்ள உறவின் அடையாளமல்லவோ அது! எதற்குக் கேட்கிறான்? இயக்கத்தின் வளர்ச்சிக்குத்தானே! என எண்ணுகிற அந்தச் சகோதர உள்ளங்கள் சில விநாடிகளிலேயே சாந்தமடைந்து என் உள்ளத்துடன் சங்கமமாகிற சம்பவங்கள் வாடிக்கை தானே!

எண்பதாயிரத்துக்கும் சற்று மேற்பட்ட தொகையைத் தேர்தல் நிதியாகச் சேலம் அளித்துள்ளது! இதற்கு முன்பு இரண்டு மாதங்கள் கூட இருக்காது. சேலம் மாவட்டத்தில் இரண்டு நாள் நிகழ்ச்சிகளில் அறுபத்து ஆறாயிர ரூபாய் தேர்தல் நிதியை வழங்கினர்!

எனவே, கழகத்தின் தேர்தல் நிதி ஒரு லட்சத்து நாற்பத்தி ஆறாயிர ரூபாயை வழங்கி, தற்சமயம் முதலிடத்தில் இருப்பது சேலம் மாவட்டம்தான் என்பதை மற்ற மாவட்டக்கழக உடன்பிறப்புகளுக்கு நான் நினைவுபடுத்தாவிட்டால் என் கடமையிலிருந்து தவறியவனாகி விடுவேனல்லவா?

தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தின் செயல்திறனும், அவருக்கு உறுதுணையாக மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், நகரக் கழக, பேரூர்க் கழக, கிளைக் கழகச் செயலாளர்கள், இளைஞர் அணியினர், சார்பு மன்றங்களின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அளித்த ஒத்துழைப்பும் இந்தச் சுற்றுப் பயணத்தை எல்லா வகையிலும் வெற்றிகரமாகச் செய்திட உதவியிருக்கின்றன!

என்னுடன் இந்தச் சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்ட கொள்கை பரப்புச் செயலாளர் நண்பர் கந்தப்பன் எல்லா நிகழ்ச்சிகளிலுமே இளைஞர் அணியினர் காட்டிய ஆர்வப்பெருக்கைப் புகழ்ந்துரைத்தார்! நானும் அந்த இளங்காளைகளின் இலட்சிய வேட்கை கண்டு புளகாங்கிதமுற்றேன்!

தேர்தல் நிதி மட்டுமல்ல! திரும்பிய திசையெல்லாம் எழுச்சி வெள்ளம் காண முடிந்தது! மதோன்மத்த அரசுக்கு எதிராக மக்கள் சக்தி திரளுவதை உணர முடிந்தது! ஒலிபெருக்கி சில ஊர்களில் ஒத்துழைக்க மறுத்ததுதான் ஒரு பெருங்குறை!

சேலம் - செயலாற்றும் காலம் என ஒருமுறை அண்ணா அவர்கள் எழுதினார்!

அங்கே நம் உடன்பிறப்புகள் ஒற்றுமையுடன் செயலாற்றினால் அந்த ஒப்பற்ற காலத்தை நிச்சயமாக உருவாக்கலாம்! முடியும் என்ற நம்பிக்கையிருக்கிறது! அந்த நிலை எங்கணும் யாராலும் குலைக்க இயலாதவாறு அமைந்திடின், நல்லபொழுது விடியும் தமிழகத்திற்கு!

அன்புள்ள,

மு. க.

25-01-1984

1195. நினையாத நாள் எந்நாள்?

அண்ணனே!
அலைபாடும் தாலாட்டில்
அயர்ந்துறங்கும் உனை எழுப்ப
என்றும் போல்
இன்றும் வந்தோம்!
எழுஞாயிறாய் அன்றைக்கே
எழுந்துவிட்டேன்!
இனிய தம்பீ!
இன்னுமேன் எழுப்புகின்றாய்?
இவ்வாறு நீ கேட்டுப் புன்னகையைச்
செவ்வானாய் காட்டி நின்றாய்!

இலங்கைத் தமிழர் துயர்
சுமந்த நெஞ்சம்
இனமானத் தமிழர் நலம்பேணத்
துடிக்கும் தோள்கள்
நாடு காடாகும் நலிவு போக்கப்
பீடு நடை போடும் கால்கள்

இப்படி வந்தவர்கள் நாங்கள் – உன்
கைபிடித்து வளர்ந்தவர்கள்!
சந்திரோதயம் தந்தாய் – அது
சமுதாய சீர்திருத்த உதயம்!
சந்திரமோகன் கண்டோம் – அதில்
சதிகாரக் கூட்டத்தின் முன்னே
சாம்ராஜ்ய முலபலம்
சரணடையக் கண்டோம்!
வீரர் கோட்டம் ரோமாபுரியும்
விழிவீச்சுக்காரிகளால் வீழ்ந்த கதை

விதவிதமாய் வர்ணித்து நீதான் சொன்னாய்!
கம்பன் தமிழ் இனிமை புகழ்ந்தாய் - அவன்
வம்புக்காய் இராவணனை இழித்த செயல்இகழ்ந்தாய்!
பிள்ளையாரை உடை! என்றார் பெரியார்!
சிலையை உடைக்கவும் மாட்டேன் - அதற்குச்
சிலரைப்போல் தேங்காய் உடைக்கவும் மாட்டேன்
இப்படித்தான் கொள்கை வகுத்தாயே தவிர
செப்படி வித்தைகள் செய்து
பெரியார்க்கும் தொண்டன்
பிள்ளையார்க்கும் பக்தன் என்று
புரியாமல் பேசுகின்ற
போலிகள் என் தம்பியல்லர் எனப்
புவியறிய முழங்கி நின்றாய்!

தமிழர்மொழி தமிழர் இனம்
தமிழர் கலை தமிழர் வாழ்வு
தரணியிலே சிறந்தோங்கப்
பரணி யாத்தவன் நீ
பயணம் தொடர்வோர் நாங்கள்!

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண
ஏற்றமிகு திட்டங்கள் வகுத்தவன் நீ
வாழையடி வாழையென வந்த
உன் திருக்கூட்டம் நாங்கள்!
உழுவோர் உழைப்போர் கூட்டம்
அழுவோர் கோட்டமாய் ஆதல் தீதென நவின்றாய்!
தொழுதே அவர்க்குத் தொண்டாற்ற - ஆவின்
விழுதாய் உனக்கு ஆனோம் அண்ணா!

அண்ணனே!
உன் நினைவு நாள் இந்நாள்
உனை நினையாத நாள் எதற்காக?

மு. கருணாநிதி

04-02-1984

1196. தொகுத்து எடுத்துத் தொடருக பயணத்தை!

உடன்பிறப்பே,

பிப்ரவரி 13-ஆம் நாள் மக்கள் இயக்க நடைப்பயணம்! நகரங்கள், மாநகரங்களில் வார்டுகள், டிவிஷன்கள் வாரியாகவும், ஒன்றியங்களில் கிராமங்கள் பட்டி தொட்டிகள் வாரியாகவும் செல்லாத இடம் எதுவுமில்லை என்கிற அளவில் - கருத்துகளை சொல்லாமல் விட்ட பகுதி ஏதுமில்லை என்கிற அளவில் - அனைத்துக்கட்சியினர் கலந்து கொள்ளும் நடைப்பயணம் வெற்றிகரமாக அமைந்திடல் வேண்டும்.

எல்லாப் பகுதிகளுக்கும் நடந்து சென்று மக்கள் சக்தியைத் திரட்டிட ஏற்ற வகையில் நகரமாயினும், ஒன்றியமாயினும் அவற்றைப் பல பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு பகுதிக்கும் அனைத்துக்கட்சிகளைச் சேர்ந்த ஒவ்வொரு குழுவினர் நடைப்பயணம் மேற்கொண்டு, ஆங்காங்கு மக்களைச் சந்தித்து இறுதியாக, அந்தந்தப் பகுதியில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் வந்து இணைந்து மாலையில் ஒரு ஊர்வலம் எடுத்தோ அல்லது பொதுக்கூட்டம் நடத்தியோ அதன் பின்னர் நடைப்பயணத்தை நிறைவு செய்திடல் வேண்டும்.

நடைப் பயணத்தில் கலந்து கொள்ளும் கட்சியினர் அவரவர்கள் கொடிகளை ஏந்திச் செல்லலாம்! மக்களின் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தியே முழக்கங்கள் எழுப்பப்பட வேண்டும்!

சிறிய அளவில் உள்ள ஒன்றியங்களை மூன்றாக அல்லது நாலாகப் பிரித்துக் கொண்டு, தனித் தனிக் குழுக்களாகச் செல்லலாம். பெரிய ஒன்றியமாக இருந்தால் அதற்கேற்ப ஆங்காங்குள்ள ஒன்றிய அமைப்புகள் முடிவெடுத்து ஐந்தாகவோ, ஆறாகவோ வசதிப்படி பிரித்துக்கொண்டு நடைப்பயணப் பணியை சிறப்படையச் செய்யலாம். நகரங்கள் மாநகரங்களுக்கும் இதுவே பொருந்தும்.

ஒவ்வொரு இடத்திலும் கட்சிகளின் தலைவர்கள், முக்கிய நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சிகளின் முன்னோடிகள் நடைப் பயணத்தைத் தொடங்கி வைக்கலாம். கூடுமான வரையில், அவர்களும் நடைப் பயணத்தில் ஈடுபடலாம்.

ஒரு ஊரில் இருந்து இன்னொரு ஊருக்கு இடையில் தொலைவு அதிகமாக இருந்திடுமேயானால், அந்தத் தொலைவைக் கடக்க மட்டும் சைக்கிள்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஊருக்குள்ளிருக்கிற தெருக்களைக் கடக்கவும் - மக்களைச் சந்தித்து உரையாடவும் - விளக்கமளிக்கவும், கண்டிப்பாக நடைப் பயணமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இந்த நடைப் பயணத்தில் கடுகளவும் சிதறாமல் ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே கண்காணித்துக் கொள்ள வேண்டும்.

எதற்காக இந்த நடைப் பயணம்?
மக்கள் சக்தியைத் திரட்டுவதற்காக!
ஏன் மக்கள் சக்தி திரட்டப்பட வேண்டும்?

அவர்கள் மீது தாக்குதல் நடத்தும் வறுமை, விலைவாசிக் கொடுமை, பொருளாதார ஏற்றத் தாழ்வு, சமுதாய ஆதிக்கம், அதிகார அந்தஸ்து போன்ற பயங்கரக் காண்டா மிருகங்களை எதிர்த்து நின்று முறியடிக்கத்தான் மக்கள் சக்தி திரட்டப் படவேண்டுமென்று கூறுகிறோம்.

புண்ணுக்குப் புணுகு பூசுவது போல மத்திய அரசிலும் மாநில அரசிலும் பல காரியங்கள் நடைபெறுகின்றன. வேடிக்கை விழாக்கள், கேளிக்கைக் கூத்துக்கள் இவற்றைக் காட்டியே மக்களைத் தொடர்ந்து ஏமாற்றலாமென்று ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்போர் எண்ணுகின்றனர்.

செயல்படும் அரசாங்கத்தை அமைப்போம். அத்தியாவசியப் பண்டங்களின் விலையைக் குறைப்போம். மக்களின் பொருளாதார நிலையை வளர்த்திடுவோம். சாதிய வகுப்பு வாதங்களை எதிர்த்துப் போராடுவோம் என்றெல்லாம் உறுதியளித்து மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்திரா காங்கிரஸ் அந்த உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறியது மட்டுமல்ல - மக்களின் பிரச்சினைகள் மேலும் மோசமாகிற அளவுக்குக் காரணமாகவும் விளங்கிடுவதை

காண முடிகிறது. இந்த அடிப்படையில்தான் கல்கத்தா மாநாட்டில் புதிய சிந்தனைகள் உருப்பெற்றன. அவை தீர்மான வடிவம் பெற்றன.

வானத்தை வில்லாக வளைப்பேன்! மணலைக் கயிறாகத் திரிப்பேன்! என்ற இரண்டு வாக்குறுதிகளைத் தவிர மற்ற எல்லா வாக்குறுதிகளையும் தேர்தல் நேரத்தில் அள்ளி வீசிவிட்டு இங்கே ஆட்சியில் அமர்ந்துள்ள எம்.ஜி.ஆர். கட்சியோ, அந்த வாக்குறுதிகளைப் பற்றியே மக்கள் நினைக்காமல் இருந்திட வேண்டுமென்று திட்டமிட்டு மக்களைத் திசை திருப்பும் மாயா வினோத செயல்களிலே ஈடுபட்டு வருகிறது!

வேலையில்லாத் திண்டாட்டம்
விலைவாசி நாள்தோறும் உயர்வு
விவசாயிகள் கடன் தொல்லையால் படும் அவதி
அவர்கள் வீட்டுப்பொருள்களை ஜப்தி செய்யும்
கொடுமை

மின்சார விநியோகத்தில் முறைகேடு
மின் துண்டிப்பு
தொழிலாளர்க்கு விரோதமான அரசின்
நடவடிக்கைகள்

மாணவர்கள் மீது அராஜகம்
நீதிமன்றத் தீர்ப்புகள் புறக்கணிப்பு
பஸ் முதலாளிகளிடம் லஞ்சம்
சாராய சாம்ராஜ்யாதிபதிகளிடம் லஞ்சம்
அடி முதல் நுனி வரையில் சர்வம் ஊழல் மயம்.
ஊராட்சி நகராட்சிகளில் ஊதாரித்தனம்
தன்னிறைவுத் திட்டத்தில் கொள்ளை
வறட்சி நிவாரணப் பணியில் ஆளும் கட்சி வேட்டை!
வெள்ள நிவாரணத்திலும் பல கோடி மூட்டை!

ஆலயத்து நகைகள், சொத்துக்கள், ஏன் - சிலைகளுக்கே கூட ஆபத்து!

தட்டிக் கேட்கும் அதிகாரிகளோ கொலையுண்டு - தற்கொலைப் பட்டியலில் சேர்க்கப்படுகின்றனர்!

அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் ஆளுங்கட்சியினர் அடாவடித்தனம்!

தாக்கியவன் தப்புகிறான் -
தாக்கப்பட்டவன் மீது பொய் வழக்கு!
கொலைகள் மறைக்கப்படுகின்றன -
கொள்ளைகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

இது போன்று மாநில முழுதும் பரவலாகப் பிரச்சினைகள்! இஃதன்னியில் ஆங்காங்கு உள்ளூர்ப் பிரச்சினைகள்! இவற்றையெல்லாம் மக்களுக்கு விளக்கிட வேண்டும்! அவர்களின் முறையீடுகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இங்குள்ள மாநில அரசு வீண் ஆடம்பரச் செலவுகள் - விழாச் செலவுகள் - விளம்பரச் செலவுகள் - நடத்துவது போலவே மத்திய அரசும் வெற்றுச் செலவுகளைச் செய்து பதினைந்தாயிரம் கோடி ரூபாய் நிதிப் பற்றாக்குறையில் நின்றுகொண்டிருக்கிறது. இந்திய நாட்டின் அன்னியக் கடனோ, இருபத்துஐயாயிரம் கோடி ரூபாயையும் தாண்டி விட்டிருக்கிறது.

அரசியல் சட்டத்திலேயே வேலை வாய்ப்புக்கு உத்தரவாதமளிக்கும் அடிப்படை உரிமை இடம் பெறச் செய்ய வேண்டும் - வேலைக்கு உணவுத் திட்டத்தை மீண்டும் துவக்கி, அதனை விரிவுபடுத்த வேண்டும். அரசாங்கம் விவசாயிகளின் உற்பத்திப் பொருளைக் கட்டுப்படியான விலை கொடுத்துக் கொள்முதல் செய்ய வேண்டும் - விவசாயத் தொழிலாளர்க்குக் குறைந்தபட்ச கூலிச் சட்டத்தைக் கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும் - மொத்த வர்த்தகர்களின் லாபத்தைக் கடுமையாகக் கட்டுப்படுத்தி நாடு முழுதும் விரிவான அளவில் பொது விநியோக முறையை ஏற்படுத்தி அத்தியாவசியப் பொருள்கள் நியாயமான விலையில் கிடைக்க வழிகாண வேண்டும் - என்பன போன்ற கல்கத்தா மாநாட்டுப் பதினான்கு அம்ச கோரிக்கைகளையும், தமிழக அனைத்துக் கட்சி எழுப்பியுள்ள ஏழு அம்சக் கோரிக்கைகளையும் மக்களிடம் விளக்குகிற பணியும், அந்த மக்கள் சக்தியைத் திரட்டுகிற பணியும்தான் பிப்ரவரி 13-இல் அமைதியான முறையில் - ஆனால் ஆர்வம் பொங்கிட அக்கறையுடன் நடைபெற்றிட வேண்டும்!

அனைத்துக் கட்சிச் செயல்வீரர்களுடன் இணைந்து என் இனிய உடன்பிறப்பே! அந்த நாள் எழுச்சியுடன் அமைந்திடக் கடமையாற்றிட வேண்டுகிறேன்.

கல்கத்தா மாநாட்டு நிகழ்ச்சிகள், தீர்மானங்கள், அதுகுறித்த விளக்கங்கள், உரைகள், ஏடுகளில் வெளிவந்துள்ளன.

தமிழ்நாட்டு நிலவரங்கள் குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், அறிக்கைகள், உரைகள் - அவையனைத்தும் ஏடுகளில் வந்துள்ளன.

அவற்றைத் தொகுத்து எடுத்துக் கொள்க! தொடருக பயணத்தை!

அன்புள்ள,

மு. க.

10-02-1984

1197. ஆகா! என்ன புரட்சி! அவசரச் சட்டப் புரட்சி!

உடன்பிறப்பே,

டி.வி.எஸ்., ஏ.பி.டி., ராமன் அண்டு ராமன், எஸ்.ஆர்.வி.எஸ். போன்ற பெரிய பஸ் கம்பெனிகளைக் கழக அரசு எடுத்துப் போக்குவரத்துக் கழகங்களுடன் இணைத்ததைத் தொடர்ந்து 1973-ஆம் ஆண்டு பஸ்களை நாட்டுடைமையாக்கும் சட்டத்தையும் கொண்டு வந்து நிறைவேற்றியது. முதற்கட்டமாக நீலகிரி மாவட்டத்து பஸ்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன. உடனே பஸ் முதலாளிகள் நீதிமன்றத்துக்குச் சென்று நாட்டுடைமைச் சட்டத்திற்குத் தடை கோரினர். உயர்நீதி மன்றத்தில் சட்டம் செல்லும் என தீர்ப்பு வழங்கப்பட்டது. உடனே பஸ் முதலாளிகள் உச்சநீதி மன்றம் சென்று அந்தச் சட்டத்துக்கு இடைக்காலத் தடையுத்தரவு பெற்றனர். சுமார் பத்து ஆண்டுகள் அந்த இடைக்காலத் தடையில் பஸ் முதலாளிகள் குளிர் காய்ந்தார்கள். எம்.ஜி.ஆர். அரசைக் கையிலே போட்டுக் கொண்டு வழங்க வேண்டியதை கோடிக்கணக்கில் வழங்கி, பல சலுகைகளையும் பெற்றுக் கொண்டார்கள். ஏன், சில அமைச்சர்களேகூட பினாமி பஸ் முதலாளிகளாக மாறிக் கொண்டு, அரசாங்க பஸ்களுக்குக் கிடைக்காத சலுகைகளையும், வசதிகளையும் அண்மைக் காலமாக பெற்றும் வருகின்றனர்.

உச்சநீதி மன்றத்தில் கழக அரசின் சட்டம் கண்மூடித் தூங்கியே கிடக்க வேண்டும் என்று தவமாய்த் தவமிருந்து அதற்கான முயற்சிகளிலே தொடர்ந்து ஈடுபட்ட பஸ் முதலாளிகளுக்கும், அவர்களுக்கு ஆதரவான எம்.ஜி.ஆர். அரசுக்கும் முகத்தில் கரி பூசியது போல பத்தாண்டு காலத்து இடைக்காலத் தடையை உடைத்து உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு வெளியானது.

பஸ்களை நாட்டுடைமையாக்கக் கழக அரசு கொண்டு வந்த சட்டம் செல்லுபடியாகும் என்றும், முற்போக்கான சட்டம் என்றும் உச்சநீதி மன்றம் அறிவித்து விட்டது.

1973லிருந்து 1978க்குள் ஐந்தாண்டு காலத்தில் தனியார்களின் பஸ்கள் அனைத்தும் நாட்டுடைமை ஆக்கப்படும் என்பதுதான் கழக அரசு நிறைவேற்றிய சட்டம்.

இடையில் நீதிமன்றங்களில் வழக்கு! இப்போது சட்டத்திற்குச் சாதகமாக தீர்ப்பு வந்துவிட்டது! எம்.ஜி.ஆர். என்ன செய்திருக்க வேண்டும்?

1984லிருந்து 1989க்குள் ஐந்தாண்டு காலத்தில் தனியார் பஸ்கள் அனைத்தும் நாட்டுடைமை ஆக்கப்படும் என்கின்ற ஒரேஒரு திருத்தத்துடன் அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்திருக்க வேண்டும்.

ஆனால் அண்ணாவின் பெயரால் கட்சி வைத்துக் கொண்டு, அண்ணாவின் ஆட்சியை நடத்துவதாகப் போலி விளம்பரம் செய்து கொள்ளும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், பஸ் முதலாளிகளுக்கு ஆதரவாக ஒரு அவசரச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தியிருக்கிறார்.

கழக அரசு நிறைவேற்றிய பஸ்கள் தேசிய மயச் சட்டம் என்ற தீவிரச் சட்டத்தின் முதுகெலும்பை முறிக்கிற அளவுக்கு இந்த அவசரச் சட்டம் போடப் பட்டிருக்கிறது.

கழக அரசு 1973-இல் கொண்டு வந்த சட்டத்தில் :-

"It is necessary in the public interest to acquire all passenger transport divisions of all the stage carriage operators and the contract carriage operators in a phased programme within a period of five years."

என்று இருக்கிறது. அதாவது மக்கள் நன்மைக்காக அனைத்துப் பேருந்துகளையும் படிப்படியாக ஐந்தாண்டு காலத்திற்குள் எடுத்துக் கொள்ளப்படும் என்று கழக அரசின் சட்டம் தெளிவுபடுத்துகிறது.

இப்போது அதற்கு எம்.ஜி.ஆர். கொண்டு வந்துள்ள அவசரச் சட்டத்தில் புகுத்தியுள்ள திருத்தம் என்ன தெரியுமா?

All passenger transport divisions of all the stage carriage operators have to be acquired in a phased programme subject to certain exemptions.

அதாவது அனைத்துப் பேருந்துகளும் படிப்படியாக சில விதிவிலக்குகள் தரப்பட்டு எடுத்துக் கொள்ளப்படும்.

படிப்படியாக ஐந்தாண்டுகளுக்குள் என்ற கழக அரசின் சட்டத்தில் உள்ள ஐந்து ஆண்டுகளுக்குள் என்ற வாசகத்தை அப்படியே விழுங்கி விட்டார்கள்! படிப்படியாக - ஆனால் விதிவிலக்குகள் தரப்பட்டு எடுத்துக் கொள்ளப்படுமாம்!

யாருக்கு விதிவிலக்கு?

என்ன காரணத்திற்காக விதிவிலக்கு? கப்பத் தொகை கட்டியவர்களுக்கெல்லாம் விதிவிலக்கு என்பதுதான் இதற்கு உண்மையான பொருளா?

அடுத்து இன்னொரு திருத்தம் அவசரச் சட்டத்தில்!

கழக அரசு கொண்டு வந்த சட்டத்தில்,

"It shall apply to all stage carriages and contract carriage operating in this State on the 14th January 1973"

அதாவது 1973 ஜனவரி 14-ஆம் தேதியன்று இந்த மாநிலத்தில் ஓடுகின்ற அனைத்துப் பேருந்துகளுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்பது கழக அரசின் சட்டம்!

இப்போது புரட்சிக்காரரின் ? சட்டம் என்ன சொல்கிறது தெரியுமா? "It shall apply to all stage carriages..... in t he whole of the State on such date as the Government may, by notification, appoint"

அதாவது அரசாங்கம் அறிவிப்பின் மூலம் தெரிவிக்க இருக்கும் தேதியன்று இம்மாநிலத்தில் ஓடக்கூடிய அனைத்துப் பேருந்துகளுக்கும் இச்சட்டம் பொருந்தும்.

கழக அரசு, உறுதியாக ஒரு தேதி குறிப்பிட்டுச் சட்டம் போட்டது! ஆனால் எம்.ஜி.ஆர். அவர்களோ, இந்த அரசுக்கு எப்போது வசதிப்படுகிறதோ அப்போதுதான் தேதி அறிவிக்கப்படுமென்று திருத்தம் கொண்டு வந்துள்ளார்.

1973-இல் கழக அரசு கொண்டு வந்த சட்டத்தில்:-

"The authority or officer empowered to grant permits under the motor vehicles act shall grant such permit to the corporation or company owned by the Government and to no other"

அதாவது பேருந்துகளின் உரிமங்களைப் புதுப்பிக்கவோ - புதிதாகத் தரவோ இருக்கும் அதிகாரிகள், இனிமேல் அரசு நிறுவனங்களின் பேருந்துகளுக்கு மட்டுமே பர்மிட் உரிமம் தர வேண்டுமே தவிர, மற்றவர்களுக்குத் தரக்கூடாது என்பது கழக அரசின் சட்டம்!

இப்போது எம்.ஜி.ஆர். கொண்டு வந்துள்ள - புரட்சிகரமான ? ? அவசரச் சட்டத்திலே இந்தப் பிரிவையே நீக்கிவிட்டார்கள்.

இதோ அதற்கான அவசரச் சட்டத் திருத்தத்தின் அலங்கோலத்தைக் காண்க!

"The Portion commencing with the words "the authority or officer empowered" and ending with the words "and to no other" shall be omitted"

அதாவது அந்தப் பிரிவே நீக்கப்பட்டு விட்டது! ஆகா! என்ன புரட்சி! என்ன புரட்சி!

அவசரச் சட்டத்தின் அடுத்த திருத்தம் என்ன தெரியுமா?

கழக அரசு கொண்டு வந்த சட்டத்தில் Exemptons - அதாவது விதிவிலக்கு என்ற தலைப்பின் கீழே,

"Nothing contained in this act shall apply to ...

any stage carriage or contract carriage owned, held or operated by the Central Government; any State Government, any company or other authority owned or controlled by the Central Government or any State Government"

என்று இருக்கிறது. அதாவது இந்தச் சட்டத்தின்படி விதிவிலக்கு, யார் யாருக்கு பொருந்துமென்றால் - மத்திய அரசுக்குச் சொந்தமான - அல்லது மாநில அரசுக்குச் சொந்தமான - அல்லது அரசு நிறுவனங்களுக்குச் சொந்தமான வண்டிகளுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்பதாகும்.

ஆனால் இப்போது எம்.ஜி.ஆர். கொண்டு வந்துள்ள அவசரச் சட்டத்தில் உள்ள திருத்தத்தின்படி,

"Exemptions:- Nothing contained in this act shall apply to ...

any stage carriage owned, held or operated by any small operator Districts other than in the Nilgiris District"

அதாவது இந்த விதிவிலக்கு இன்னும் யாருக்குத் தரப்படுமென்றால் நீலகிரியைத் தவிர மற்ற மாவட்டங்களில் உள்ள சிறிய பஸ் உரிமையாளர்களுக்கு - இந்தச் சட்டம் பொருந்தாது.

என்ன வேடிக்கை பார்த்தாயா? சிறிய பஸ் உரிமையாளர்கள் என்றால் யார்?

ஒருவருக்கு இருபது பஸ்களுக்கு மேல் இருந்து வீட்டில் உள்ள ஒவ்வொருவர் பெயரிலும் ஐந்து பஸ்கள் வீதம் மாற்றி வைத்துக் கொண்டால் அவர்களும் சிறிய பஸ் உரிமையாளர்கள், எம்.ஜி.ஆரின் புதிய சட்டத் திருத்தப்படி!

பஸ்கள் அனைத்தையும் தேசிய உடைமையாக்குவது என்ற கொள்கை அடிப்படையில் சட்டம் என்றால் அதில் விதிவிலக்கு எதற்காக? அதுவும் தனிப்பட்ட பஸ் முதலாளிகளுக்கு விதிவிலக்கு என்றால் பிறகு பஸ்களை நாட்டுடைமையாக்கும் சட்டம் என்ற பெயர் எப்படிப் பொருந்தும்?

எத்தனை பஸ்கள் ஒருவர் வைத்துக்கொள்ளலாம் என்று உச்சவரம்பு கொண்டு வரப்படும்போது வேண்டுமானால் ஒருவர் இத்தனை பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்பதற்கு, விதிவிலக்கு பற்றி யோசிக்க இடமுண்டு!

கழக அரசு நிறைவேற்றிய சட்டம் ஐந்தாண்டுகளுக்குள் எல்லா பஸ்களையும் படிப்படியாக நாட்டுடைமையாக்கும் சட்டமல்லவா?

அதில் எதற்காக இத்தனை ஓட்டை உடைசல் திருத்தங்கள்?

கழக அரசின் சட்டம் செல்லுமென்று உச்சநீதி மன்றம் தீர்ப்பு அளித்த பிறகும் - பஸ் முதலாளிகளிடம் கோடி கோடியாகப் பெறுவதற்குத்தான் - அல்லது பெற்றதற்குத்தான் இந்த அவசரச் சட்டம் என்ற உண்மை புரிகிறதல்லவா?

ஸ்டீல் ரீ ரோலிங் மில்கள் வரியைச் செலுத்த வேண்டும் என்றும், அந்த வரியைப் பெற அரசுக்கு உரிமை உண்டென்றும் ஒரு வழக்கில் உச்சநீதி மன்றம் தீர்ப்பு வழங்கிய பிறகும் - இந்த அரசாங்கம், அந்த வரியை ரத்து செய்து விடவில்லையா? அதில் அரசாங்கம் பல கோடி ரூபாயை இழந்து, அமைச்சர்கள் ஆளும்கட்சி முக்கிய பிரமுகர்கள் சில கோடிகளைப் பெற்று பங்கு பிரித்துக் கொள்ளவில்லையா?

அதே கதைதான் இப்போது பஸ்கள் தேசிய மயச் சட்டத்தைக் குழிதோண்டிப் புதைப்பதிலும் நடைபெறுகிறது.

அன்புள்ள,

மு. க.

11-02-1984

1198. ஆண்ட்ரபோவ் மறையவில்லை!

உழைக்கும் வர்க்கத்தின்
உரிமைக்கொடி பறக்கவிடப்பட்ட பூமி

தனியுடைமை ஆதிக்கத்தைத்
தகர்த்தெறிந்த நாடு

பொதுவுடைமைச் சோலை
புதுமைக்கு வழி காட்டும் சாலை

மார்க்சின் தத்துவங்கள்
மகுடம் தரித்துக்கொண்ட அந்த மண்ணில்

மாவீரன் லெனின் சிந்தனைகள்
செயல் வடிவம் கொண்டன.

சிவப்பால் செழித்தது தேசம் – உலகம்
வியப்பால் முகம் மலர்ந்தது.

இரும்பு மனிதன் ஸ்டாலின்,
குறும்பு மனிதன் குருஷேவ்!

பிரச்சினைகளை விரைவில் தீர்க்கும் மனிதன்
பிரஷ்னேவ்

பின்னர் வந்த மனிதனே ஆண்ட்ரபோவ்

தொழிலாளியின் மகனாய்ப் பிறந்தான்
தொல்புவி போற்றும் அதிபராய்த் திகழ்ந்தான்.

பதினைந்தே மாதங்கள் பதவியில் இருந்தாலும் –
அந்தப்

பதவிக்கோர் கீர்த்தியைத் தந்தான்.

ஏற்ற பணிகள் ஏராளம்
ஏறிய படிகளோ எண்ணற்றவை!

இறந்தவர்கள் மறைவதில்லை – நெஞ்சில்
நிறைந்தவராய்ச் சாகாமல் வாழ்கின்றார் – இது

சிறந்தவர்க்கே இலக்கணமாம் – அந்தச்
சீர்மிகுந்த பட்டியலிலே இவருக்கும் இடம் உண்டு!

மு. கருணாநிதி

12-02-1984

1199. அவைக்குக் கிடைக்குமா அந்த விளக்கம்?

உடன்பிறப்பே,

சட்டப்பேரவையில் கழகச் சட்டமன்ற உறுப்பினர் இரகுமான்கான் வீடு போலீசாரால் தாக்கப்பட்டது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் 18-2-84 அன்று எடுத்துக் கொள்ளப்படும் என்று முதல்நாளே தெரிவிக்கப்பட்டது. இப்படியொரு அறிவிப்பை முதல்நாளே சபாநாயகர் அறிவித்தது முதலமைச்சருக்கும் தெரியும்.

அறிவித்தவாறே மறுநாள் ஒத்திவைப்புத் தீர்மானம் பேரவையிலே எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டது. அப்போது முதலமைச்சர் அவையில் இல்லை. போலீஸ் இலாக்கா முதலமைச்சரிடம் இருக்கிறது! ஒத்திவைப்புத் தீர்மானம் போலீஸ் இலாக்காவைப் பற்றியது என்பதும் குறிப்பிடத்தக்கது. இரகுமான்கான், தன்னிலை விளக்கமொன்று அளித்துப் பேசும்போது தன் மீதும், தனது சகோதரர் மீதும் வேண்டுமென்றே கொலை முயற்சிப் பிரிவில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக் காட்டிவிட்டு, முதலமைச்சரைப் பற்றியும் குறைகூறியுள்ளார்.

முதலமைச்சர் மீது கூறப்பட்ட புகார் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுவதாக உடனடியாக சபாநாயகர் அறிவித்து விட்டார்.

சில விநாடிகளுக்கெல்லாம் முதலமைச்சர், அவைக்குள்ளே நுழைந்தார்.

இரகுமான்கானுக்கு பதில் சொல்லத் தொடங்கினார். இரகுமான்கான் கூறிய புகார் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டதாக சபாநாயகர் சொன்னதும், முதலமைச்சர் அதைவிட்டு விட்டுப் பொதுவான அறிவுரையொன்றை அவையில் அருளியுள்ளார். அதனைச் சவால் என்றும், அறைகூவல் என்றும் தலைப்பிட்டு ஆளுங்கட்சிச் சார்புடைய ஏடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அவ்வாறு அறைகூவல்பாணியில் மொழிந்திட்ட அறிவுரைதான் என்ன?

உறுப்பினர் இரகுமான்கான் சட்டம் படித்தவர். இதுபோன்ற தகவல்களை அவர் சொல்வது என்றால் நான் இருக்கும்போது சொல்வது நல்லது. ஆள் இல்லாத நேரத்தில் எதையும் சொல்லக்கூடாது. ஆகவே எதையும் நானிருக்கும்போது சொல்லுங்கள்.

இதுதான் முதலமைச்சரின் அறைகூவல்பாணி அறிவுரை!

சட்டப் பேரவையோ மேலவையோ கூட்டப்பெற்று நடைபெறும் பொழுது முதலமைச்சர் உட்பட எல்லா அமைச்சர்களும், ஏன் உறுப்பினர்களும் கூட அவையில் இருப்பதாகத்தான் பொருள்! அவை நடக்கும்போது அவையில் இல்லாமல் இருப்பது அமைச்சர்களின் தவறு - அல்லது உறுப்பினர்களின் தவறு! அவையிலேயே அங்கம் பெற்றிராத ஒருவரைப் பற்றி புகார் கூறும்போதுதான் முதலமைச்சர் எடுத்துரைத்த இலக்கணம் பொருந்தும்! இந்த விபரத்தை சபாநாயகரே முதலமைச்சருக்கு அவையில் எடுத்து விளக்கியிருக்க வேண்டும். விளக்கித்தான் என்ன பயன் என்று விட்டிருப்பார் போலும்!

குறிப்பிட்ட ஒரு விஷயத்தில் ஒரு உறுப்பினர் பேசும்போது இருபத்தி நான்கு அமைச்சர்களில் ஒரு அமைச்சர் கூறிய கூற்று குறித்தோ - அல்லது அந்த அமைச்சர் மீதுள்ள புகார் குறித்தோ அவையில் சுட்டிக்காட்ட நினைத்தால் - அந்த நேரம் அந்த அமைச்சர் அவையில் இல்லை என்பதற்காக அந்தப் புகாரை அந்த உறுப்பினர் கூறாமல் இருந்து விட முடியுமா?

ஆமாம் - அப்படித்தான் - அமைச்சர் அவையில் உட்கார்ந்திருக்கும் போதுதான் கூற வேண்டுமென்கிறார் முதலமைச்சர்! அப்படியானால் அந்த உறுப்பினர் பேசி முடித்த பிறகு ஒரு மணி நேரம் கழித்து அந்த அமைச்சர் அவைக்கு வருவதாக வைத்துக் கொள்வோம்! அப்போது அந்த அமைச்சர் மீதுள்ள புகாரைக்கூற அந்த உறுப்பினருக்குத் தனியாக நேரம் தரப்படுமா?

உதாரணமாக, லாக்அப்பில் அடித்துக் கொல்லப்பட்ட ஒரு கைதியைக் குறித்து போலீசார் மீது குறை கூறி ஒத்திவைப்புத்

தீர்மானம் ஒன்று வருவதாக வைத்துக் கொள்வோம் - அதற்கு அவைமுன்னவர் விளக்கமளிக்கிறார். தீர்மானத்தின் மீது பேசுகிற எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அந்த லாக்கப் கொலையை உள்ளூர் மந்திரியொருவர் தலையிட்டு மறைத்துவிட்டார் என்று குற்றம் சாட்டுகிறார்கள் என்றும் வைத்துக் கொள்வோம் - அப்போது அந்த மந்திரி அவையில் இல்லையென்பதற்காக, அந்தக் குற்றச்சாட்டை அப்படியே மூட்டை கட்டி வைத்திருந்து - பிறகு அவையில் வேறு அலுவல்கள் தொடங்கி ஒரு மசோதா குறித்து விவாதம் நடக்கும்போது தற்செயலாக அந்த மந்திரி அவைக்கு வந்து விடுகிறார். உடனே எதிர்க்கட்சியினர் எழுந்து இப்போது அமைச்சர் அவையில் இருக்கிறார். நல்ல சமயம்! இதை நழுவ விடமாட்டோம்! போனால் வராது! ஆகவே இப்போது அமைச்சர் இருக்கும் போதே அவர் மீதுள்ள தலையீட்டுப் புகார் குறித்து பேசி விடுகிறோம் என்றால் அதற்கு சபாநாயகர் இடம் தர இயலுமா?

எனவே பேரவையோ, மேலவையோ நடக்கும் போது அமைச்சர்கள் அவையில் இருக்கவேண்டும். அலுவல் காரணமாக வெளியில் சென்றிருந்தால் திரும்பி வந்த பிறகு, தங்கள் மீது கூறப்பட்ட புகாருக்கு விளக்கமளிக்க முன்வர வேண்டும். அல்லது அந்த அமைச்சருக்குப் பதிலாக கூட்டுப் பொறுப்பில் உள்ள அமைச்சரவையில் ஒரு அமைச்சர் பதில் விளக்கம் அளிப்பதில் தவறில்லை.

இதில் எதையும் செய்யாமல் நான் இல்லாத சமயத்தில் எதுவும் பேசக்கூடாது! இருக்கும்போதுதான் பேச வேண்டும்! அப்போதுதான் நான் பதில் சொல்ல முடியும்! என்று முதலமைச்சர் கூறியிருப்பது சட்டமன்ற ஜனநாயகத்தையே கேலிக்குரியதாக ஆக்கக்கூடியதாகும்!

முதலமைச்சர் தனது அறைகூவலினிடையே சட்டமன்றத்தின் கௌரவம் காப்பாற்றப்பட வேண்டும். அதற்குக் களங்கம் ஏற்படுத்திவிடக் கூடாது என்றும் உபதேசம் செய்துள்ளார்.

சட்டமன்ற விதிகளையும், மரபுகளையும் உணர்ந்தவர்களுக்கு - கௌரவத்தைக் காப்பாற்றாமல் களங்கம் ஏற்படுத்துகிறவர்கள் யார் என்பது தெளிவாகவே புரியும்!

அமைச்சர்கள் அவையில் உட்கார்ந்திருக்கும் போதுதான் அவர்களின் தொடர்பான கருத்துகள் எதையும் பேசலாம் - இல்லா

விட்டால் அப்படி எதையும் பேசக்கூடாது என்கிற முதலமைச்சரின் வாதத்தை சபாநாயகர் ஏற்றுக் கொள்கிறாரா?

ஏற்றுக் கொள்ளவில்லையென்றால், அந்த விளக்கம் அவையினருக்குக் கிடைக்குமா? உடன்பிறப்பே, பொறுத்திருந்து பார்ப்போம்?

அன்புள்ள,

மு. க.

20-02-1984

1200. உணராதார்க்கு உணர்த்த உடனே புறப்படு!

உடன்பிறப்பே,

சேலையின் முகப்பு, பளபளப்பாக இருக்கும் - பலவிதமான சரிகைப் பூக்களுடன் பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமாக இருக்கும் - சேலையின் முனையில் ஓரிரு முழங்கள் மட்டுமே அமைந்திருக்கும் அந்தப் பகுதியை முந்தானையென்று கூறுவர். சேலைக்கு அது அழகு சேர்க்கும் என்பதால் நல்ல முந்தானையுள்ள சேலையையே பெண்கள் விரும்புவர். முந்தானைதான் அழகு என்பதால் சேலையில்லாவிட்டாலும் பரவாயில்லை! முந்தானையை மட்டும் உடுத்திக்கொண்டு உலவுகிறேன் என்று பண்புள்ள எந்தப் பெண்ணும் கூறமாட்டாள். முந்தானையில்லாவிட்டாலும் அல்லது அதை மட்டும் கிழித்திருந்தாலோ கூடப் பரவாயில்லையென்று பண்புள்ள பெண்டிர் சேலையைத்தான் உடுத்திக் கொள்வர்.

கவர்ச்சிகரமாக இருக்கிறதென்பதற்காக முந்தானையை மட்டும் உடுத்திக் கொண்டு வெளிவர இயலாதல்லவா? எனவே சேலைக்காகத்தான் முந்தானையே தவிர - முந்தானைக்காகச் சேலையில்லை!

அடக்குமுறை, சிறைச்சாலை, சித்ரவதை, இவற்றினைத் துளியளவு தயக்கமுமின்றி ஏற்றுக்கொண்டு வீரநடை போடும் தியாகச் சுடர்கள் - இலட்சியச் செம்மல்கள் நிறைந்த ஒரு இயக்கம் சேலையைப் போன்றது என்றால் - அந்த இயக்கத்திற்கு முந்தானையைப் போன்றது கலைத்துறை!

ஒரு இயக்கம், கலைத்துறையைப் பயன்படுத்தி தனது கொள்கைகளைப் பரப்பலாம் - கோட்பாடுகளை எடுத்துக் கூறலாம்! அதற்காகக் கலைத்துறைப் பிரிவே அந்த இயக்கமாகி விட முடியாது!

சேலைக்கு, மேலும் அழகு தரும் முந்தானையை வெறுப்பார் யாருமிலர்!

அதற்காக முந்தானைதான் சேலையென எண்ணி உடுத்தி முச்சந்தியில் முக்கால் நிர்வாணமாக நின்றுலாவ ஒழுக்கமுடைய பெண்கள் ஒப்புக் கொள்ளவே மாட்டார்!

அரசியலும் கலையும் - முறையே சேலையும் முந்தானையும் போல அதற்கேற்ற அளவுடன் இருந்து, அதற்குரிய பயனைத்தர வேண்டுமென்பதுதான் அண்ணா அவர்கள் அடிக்கடி நம்மிடையே எடுத்துச் சொன்ன கருத்து!

1938-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புத் தளகர்த்தராக தந்தை பெரியாரால் அறிவிக்கப்பட்டு ஆறு மாத கால சிறைத் தண்டனை பெற்று தமிழகத்தில் தளபதி அண்ணாதுரை என்ற வீர விருதுடன் பவனி வந்தவர்தான் அண்ணா!

அந்தக் காலகட்டத்தில் பள்ளி மாணவனாக - பதினாலு வயது இளைஞனாக திருவாரூர் வீதிகளில் இந்தி எதிர்ப்பு ஊர்வலங்களைத் தினந்தோறும் நடத்தி எதிர்நீச்சல் போட்டுப் பொதுவாழ்வுக்கு வந்தவன்தான் நான்!

என்னைப்போலப் பல இளைஞர்கள் பற்பல முனைகளில் எதிர்ப்புகளைத் தாங்கி இந்த இயக்கத்தில் இணைந்தனர்! அந்தப் பெருவெள்ளத்தில் நானோர் துளி!

வேலைக்காரி, ஓர் இரவு போன்ற நாடகங்களோ - திரைப்படங்களோ அண்ணா அவர்களுக்குத் தந்த சிறப்பைவிட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றோரம் என்ற தலைப்பில் அவர் ஆற்றிய உரையும் - ஏ, தாழ்ந்த தமிழகமே! என அவர் கொடுத்த குரலும் - இந்தியை எதிர்த்துப் பலமுறை களம் கண்ட செயலும் - சிறைப்பட்ட நிகழ்ச்சிகளும் - அவரது தியாக வரலாறுகளும் - மாநிலங்களவையில் எடுத்து வைத்த திறன்மிக்க வாதங்களும்தான் அவரை நமது அண்ணனாகத் தமிழ் இனத்தின் மன்னனாக உயர்த்தியது என்பதை யார்தான் மறுக்க இயலும்! சொற்போரில் சோமசுந்தர பாரதியாரையும், சேதுப் பிள்ளையையும் வெற்றி கண்ட அந்த ஆற்றலையன்றோ தமிழகம் வியந்து போற்றியது!

எனவே நாடகம், திரைப்படம் போன்ற கலைத்துறைப் பிரிவு என்பது கவின்மிகு முந்தானையாகவும் - அறிவு, ஆற்றல், தியாகம், போர்க்குணம், பொறுமை, அனுபவ ஞானம் இவையனைத்தும் கொண்ட அரசியல் வாழ்வு சேலையாகவும் அமையப்பெற்ற

ஒரு இயக்கத்தின் பெருந்தலைமையை வகித்தவர்தான் அண்ணா!

உடன்பிறப்பே, என்னைத்தான் எடுத்துக் கொள்ளேன் - நான் படைத்த பராசக்தி, மனோகரா, மந்திரிகுமாரி போன்ற படங்களாயினும் அவற்றையெல்லாம் போர்முகத்துச் சிப்பாயின் கையில் உள்ள படைக்கலனாகக் கருதினேனே தவிர, அந்தப் படங்களையே உயிரைத் திரணமாக மதித்துப்போரிடும் சிப்பாய்களாகக் கருதிடவில்லை! இயக்கமெனும் சிப்பாய், இயக்குகின்ற போர்க் கருவிகள், அவ்வளவுதான்!

அந்தக் கருவிகளே இல்லையாயினும் மொழி காக்க - உரிமை காக்க - தன்னையே ஒப்படைக்கக் கூடிய தன்னலம் சிறிதுமற்ற தன்மான இயக்கப் பட்டாளமன்றோ என்றைக்கும் தயார் நிலையில் இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகமென்ற பெயரில்!

கல்லக்குடி, பாளையங்கோட்டை எனத் தியாக ஏடுகளைத் திருப்பித்தான் இந்தக் கருணாநிதியை, நீ உடன்பிறப்பாக ஏற்றுக் கொண்டாயே தவிர - திரைப்பட வசனகர்த்தா என்பதால் அல்ல!

அண்ணா ஏற்றுக் கொண்ட கொள்கை - தமிழ்ச் சமுதாயத்தை முன்னணியில் நிறுத்த அவர் கொண்ட குறிக்கோள் - மொழி காக்க அவர் நடத்திய போராட்டம் - பகுத்தறிவு நெறியில் அவர் வைத்திருந்த ஆழ்ந்த பற்று - சமத்துவம், சமதர்மம் போற்றப்பட வேண்டு மென்பதில் அவர் காட்டிய அக்கறை - இவற்றில் எல்லாம் நிலைகுலையாதவராக அவர் நிமிர்ந்து நின்ற காரணத்தினால்தான் தளபதியானார் - தலைவரானார் - தமிழ் இனத்தின் முடிசூடா மன்னனானார் - நமது அண்ணனானார்! திரைப்பட வசனகர்த்தா என்பதால் அல்ல!

அவரைப் பின்பற்றி - எள் முனையளவு சலனமும் இதயத்தில் தலைகாட்டாமல் இயக்கத்தை உயிராக மதித்து, இயக்கத்தின் வாழ்விலும், தாழ்விலும் அற்றகுளத்து அறுநீர்ப் பறவையாகாமல் கொட்டியும், ஆம்பலும்போல் ஒட்டியுறுவதின் காரணமாகத்தான் - களம் செல்கிறாயா? கலையுலகம் செல்கிறாயா? எனக் கேட்டபோதெல்லாம் களம்தான்! என உரைத்து காராக்கிரகங்களில் அடைபட்டுக் கிடந்ததின் காரணமாகத்தான் - இன்று நீ எனக்கு

உடன்பிறப்பாக இருக்கிறாய்! நான் உனக்கு உடன்பிறப்பாக இருக்க முடிகிறது!

கலைப்பிரிவு - முந்தானை! கல்லக்குடியையும் பாளையங்கோட்டையையும் சந்திக்கிற தியாக அரசியல் சேலை! முந்தானைதான் சேலையென்று வாதாடுகிற அளவுக்கு எவரும் துணிந்திடார்!

இருப்பினும் எப்படியோ, தமிழகத்தின் பாமரத்தனம் முந்தானையையே முழுச் சேலையென நம்பி ஏமாந்துவிட்டது! தன்மானம் - தமிழ் இனமானம் காத்திடத் தகுதியுடைய தியாகிகளைக் குறுக்கிழையாகவும், நெடுக்கிழையாகவும் கொண்ட சேலையின் அவசியத்தை உணராமல் போய் விட்டது; முந்தானையின் பளபளப்பில் மனதைப் பறிகொடுத்த காரணத்தால்!

முந்தானையற்ற சேலைகூட இருக்கலாம் - அதனை உடுத்தலாம்! அதை விடுத்து சேலையற்ற முந்தானையை மட்டும் உடுத்த இயலுமோ? உலகம் ஒப்புமோ?

முந்தானை மட்டும் போதுமென்கிற மூளை படைத்தோர்க்குத் தெளிவு ஏற்படுத்தவே சேலம் அழைக்கிறது!

சேலம் - நேர்த்தி மிக்க நெசவாளர் வாழும் நகரம்!

அங்கேதான் நமது கீர்த்திமிக்க இயக்கம் திராவிடர் கழகம் எனப் பெயர் சூட்டிக் கொண்டது!

அந்தப் பெயர் சூட்டும் தீர்மானத்தையே 1944-ஆம் ஆண்டு சேலம் மாநாட்டில் கொண்டு வந்து வெள்ளையர் வழங்கிய விருதுகளையும், பட்டங்களையும் விடுத்திடுமாறு வெண்கல நாதம் எழுப்பியவரும் நமது அண்ணன்தான்! ஆம் - நமது அய்யாவின் தலைமையிலே!

அந்தச் சேலத்தில்தான் வருகிற சனி, ஞாயிறு நாட்களில் தி.மு.கழகத்தின் மாவட்ட மாநாடு!

சேலத்தில் கூடுவோம் - சிங்கம் போல் திரும்பிப் பார்ப்போம்! நடந்து வந்த பாதையை!

இனி நடக்க வேண்டிய பயணம் குறித்துச் சீரிய முடிவு எடுப்போம்!

சேலம் நெசவாளர் நகரம்! - உடன்பிறப்பே! நீ அங்கு வந்தால் ஒரு இயக்கத்திற்கு அரசியல் பிரிவின் அளவும், கலைப்பிரிவின் அளவும் எத்தகையதாயிருக்க வேண்டும் என்பதையும் - இயக்கத்திற்கு மட்டுமல்ல, நாட்டுக்கே அவை எந்த அளவில் இருக்க வேண்டுமென்பதையும் உணர்ந்து கொள்ளலாம்! உணராதோர் உணரவும் வைக்கலாம்!

உடனே தயாராகு! உன் வரவு நோக்கியிருப்பேன் சேலத்தில்!

அன்புள்ள,

மு. க.

21-02-1984

1201. உனைப்பறித்த சாவு வீழ்க!

தன்னையே உருக்கிக் கொண்டு
ஒளிபரப்பிய ஒரு மெழுகுவர்த்தி
பாதி வயது பாக்கியிருக்கும் போதே
பட்டென்று அணைந்து போய்விட்டது!

களம்பல கண்டு கனிறுகள் உடலையே
பிளந்தெறிந்த கூர்வேல் ஒன்று
நம் உளம் துடிக்க உயிர் துடிக்க
நம் கண்ணெதிரே உடைந்து வீழ்ந்துவிட்டது!

ஓய்வறியா உழைப்புக்குச் சொந்தக்காரன்
தாய்ப்பாச இதயங்கொண்ட தங்கத்தம்பி
வாய்ப்பேச்சு வீரம் பழித்து
வஞ்சத்தைப் பொடியாக்கச் செயல்புரிந்த சிங்க ஏறு!

அண்ணே என்பான் அன்பொழுகும்.
கண்ணாய்க் காத்தான் கழகத்தை!
புண்ணாய் நம் மனம் ஆக்கிவிட்டு
மண்ணில் கலந்தான் மாவீரன்!

பசுத்தோல் போர்த்த புலிகளையும்
அசுத்த நெஞ்ச ஆட்களையும்
கொசுக்கள் போல விரட்டிவிடும்
மஸ்தான் எனும் போர்வாளே!

எம் கைவிட்டு எங்கு போனாய்?
எமைக் கைவிட்டு ஏன் போனாய்?
படைக் கலனற்று நிற்கின்றோம்
உடைவாளே! உனைப்பறித்த சாவு வீழ்க! வீழ்க!

மு. கருணாநிதி

23-02-1984

1202. கொடுமையினுங் கொடுமை!

இரக்கமிலாக் கொடுஞ்சாவே!
இருநாளில் அடுக்கடுக்காய்
இயக்கத்தின் இரு மலர்கள் கசக்கி விட்டாய்
இது தகுமோ? முறைதானோ? கொடுமை யன்றோ?

நெல்லையின் விளக்கைக் கவிழ்த்த கையுடன்
தஞ்சையின் கதிர்மணி அழித்துப் போட்டாய்
எல்லையில்லா அன்புடையான் எங்கள் நடராசன்
முல்லைமலர் நெஞ்சத்தான்! முடித்துவிட்டாய் அவன்
கதையை!

உழைப்பின் உருவம் – உணர்ச்சியின் வடிவம்
உயிர் தமிழுக்கெனச் சுழன்ற மனிதன்!
உன் அழைப்பைப் பலமுறை மறுத்த வீரன் –
ஒரு இமைப்பில் ஏனோ இழுத்துச் சென்றாய்?

முன்பெல்லாம் தஞ்சையென்றால்
முகில் முட்டும் கோபுரந்தான் நினைவில் வரும் –
இன்றதனை மறந்துவிட்டு
இனிய முக நடராசன் பேர்தான் உச்சரித்தோம்!

நகரக் கழகத்தின் நிகரற்ற கோபுரமே!
நட்புக்கோர் இலக்கணமே!
நாசகார மிசாவைக் காலால் மிதித்தவனே!
நல்லவனே! வல்லவனே! நான் வாட – நீ வீழ்ந்தாய்
நியாயந்தானா?

பதவிக்குப் பல்இளித்தும் - ஆட்சியாளர்
உதவிக்கு உடல் வளைத்தும்
பகட்டாக வாழ எண்ணும் ஜீவன்களை
பதர் எனவே கருதி வாழ்ந்த தியாக தீபம் நீ!

உள்ளத்தில் கள்ளமிலா உத்தமனே!
உயர் கழகத்தின் உயிர்நாடி போன்றவனே!
உன் வீட்டு நிகழ்ச்சிக்கெல்லாம் எனை அழைத்தாய் -
உன் சொந்த நிகழ்ச்சிக்கு மட்டும்
நானில்லாமல் போனதுதான்
கொடுமை! கொடுமை!
கொடுமையினுங் கொடுமை!

மு. கருணாநிதி

25-02-1984

1203. பக்கத்திலேயே கோயபல்சை வைத்துக்கொண்டு!

உடன்பிறப்பே,

கோயபல்ஸ் என்ற பொய்யன் மறைந்து விட்டான். நான் இப்போது சொல்கிறேன். மீண்டும் அவன் அவதாரம் எடுத்து டெல்லியில் அமர்ந்திருக்கிறான்.

இவ்வாறு கொடைக்கானலில் உரையாற்றிய காஷ்மீர் முதலமைச்சர் பரூக் அப்துல்லா பேசியிருக்கிறார்.

பாவம்! அவருக்குக் கொடைக்கானல் விழாவில் அவருக்கு அருகிலேயே தமிழகத்தின் முதலமைச்சர் அமர்ந்திருப்பது ஏனோ நினைவுக்கு வரவில்லை!

- 1963-இல் மறைந்துவிட்ட ஜீவானந்தம் அவர்கள் 1964-இல் எம்.ஜி.ஆர். அவர்கள் எம்.எல்.சி. பதவியை ராஜினாமா செய்த போது அவரை வந்து பார்த்து வருத்தம் தெரிவித்தார்.
- 1925-இல் மறைந்துவிட்ட தியாகராயர் அவர்கள், 1932-இல் கள்ளுக் கடை மறியலின் போது கதராடை வழங்கினார்.
- காந்தியடிகள் நேதாஜிக்கு எதிராகப் பட்டாபி சீதாராமய்யாவைத் தேர்தலில் ஆதரித்தபோது நான் காங்கிரசில் இருந்து விலகினேன்.
- 1917-இல் பிறந்த நான், 1914-இல் முதல் உலக யுத்தம் நடந்த நேரம் - சென்னையில் எம்டன் குண்டு போட்ட போது ஏழு வயது சிறுவனாகச் சென்னைக்கு வந்து வெள்ளப் பகுதிகளைப் பார்த்திருக்கிறேன்.
- இதோ இருக்கிறது அன்பரசு எம்.பி. பேசிய டேப்பு -

ஓகோ! இதைப் போட்டுக் காட்டச் சொல்கிறீர்களா? அப்படியானால் இது அன்பரசு பேசிய டேப்பு அல்ல! நான் பேசிய டேப்புதான்!

ஃ தனியார் ஒருவர் தயாரிக்கும் இமயத்தில் நாம் என்ற சினிமாவில் நடிக்கப் போகிறேன். அடுத்த மாதம் படப்பிடிப்பு ஆரம்பம். இதற்குச் சட்டம் இடம் தராவிட்டால், முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு என் நண்பர் ஒருவரை முதல்வராக்கிவிட்டு நான் சினிமாவில் நடிப்பேன் என இந்த 1980-ஆம் ஆண்டு டிசம்பரில் அறிவிக்கிறேன்.

ஃ என் தாய் மீது ஆணையாக என் ஆட்சிக் காலத்தில் கள்ளுக்கடை, சாராயக் கடைகளைத் திறக்க மாட்டேன்! இது சத்தியத் தாயின் மீது சத்தியம்!

இவ்வாறு - இதைப்போலப் பலவாறு பல நேரங்களில் கோயபல்ஸ் என்பானை மிஞ்சிடக்கூடிய அளவுக்கு நடந்து கொண்டுள்ள எம்.ஜி.ஆர். அவர்களை அருகிலே வைத்துக் கொண்டு காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா அந்த கோயபல்சைப் போய் டெல்லியில் தேடியிருக்கிறார்.

அவ்வளவு ஏன்? கொடைக்கானலில் ஷேக் அப்துல்லா நினைவு மாளிகைப் பெயர் சூட்டுவிழாவிலேயே, தன்னைக் கோயபல்ஸ் என்று எம்.ஜி.ஆர். அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறாரே!

கோகினூர் மாளிகைக்கு ஷேக்அப்துல்லா பெயரை வைக்க முடிவு எடுத்தபோது சட்டசபையில் கலைஞரும் அதை ஒப்புக் கொண்டார்.

இது, கொடைக்கானலில் மார்ச் இரண்டாம் நாள் நடந்த விழாவில் முதலமைச்சர் ஆற்றிய உரையில் ஒரு பகுதி! சென்னைப் பதிப்பு தினத்தந்தியில் வெளியாகியிருக்கிறது!

இவர், அப்படிப் பெயர் வைக்க முடிவு எடுத்தாராம்! நான் அந்த முடிவை ஒப்புக் கொண்டேனாம்!

1982 செப்டம்பர் 9-ஆம் நாள் தமிழக சட்டப் பேரவையில் ஷேக் அப்துல்லாவின் மறைவுக்காக இரங்கல் தீர்மானத்தையொட்டி நான் பேசியபோது என்ன குறிப்பிட்டேன்? அதற்கு முதல்வர் எம்.ஜி.ஆர். என்ன பதில் அளித்தார் என்பதை நீயும் படித்துப் பார்! மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லு!

ஷேக் அப்துல்லா சிறை வைக்கப்பட்டிருந்த இடங்களில் தமிழகத்தில் கொடைக்கானல் கோகினூர் மாளிகையும் ஒன்று! மறைந்து விட்ட அந்த மாவீரனின் நினைவாக கொடைக்கானலில் இருக்கிற கோகினூர் மாளிகைக்கு கோகினூர் - ஷேக் அப்துல்லா மாளிகை எனப் பெயர் சூட்டிட வேண்டுமெனத் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன். கோகினூர் என்ற பெயரும் இருக்கட்டும். ஷேக் அப்துல்லா என்ற பெயரும் இருக்கட்டும். ஏனெனில், அவரே ஒரு கோகினூர் வைரம்தான்! எனவே அந்தப் பெயரைச் சூட்ட வேண்டுமென முதலமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி நான் பேசிய பிறகு இறுதியாகப் பேசிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.,

எதிர்க்கட்சித் தலைவர், கொடைக்கானல் கோகினூர் மாளிகைக்கு கோகினூர் ஷேக் அப்துல்லா மாளிகை என்று பெயரிட வேண்டுமென்ற எண்ணத்தை வெளியிட்டார்கள். அது, அத்தனைத் தமிழ் மக்களின் எண்ணத்தின் எதிரொலி என்பதை ஏற்றுக் கொள்வதோடு வருகிற டிசம்பர் மாதம் அப்துல்லா பிறந்த நாளன்று அந்தப் பெயர் சூட்டப்படும்.

என்று அறிவித்தார்.

உடன்பிறப்பே, அவர் அறிவித்தவாறு 1982 டிசம்பரில் ஷேக்அப்துல்லா பிறந்த நாள் வந்தது! ஆனால் பெயர் சூட்டுவிழா நடைபெறவில்லை - ஆம்! டிசம்பர் ஐந்தாம் நாள்தான் ஷேக் அப்துல்லா பிறந்த நாள்!

மீண்டும் அதனை நினைவூட்டி 1982 டிசம்பர் ஐந்தாம் நாள் முரசொலியில் கடிதம் எழுதினேன்!

1983 டிசம்பரும் கடந்து 1984 மார்ச்சில் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது! பெயர் சூட்டியதற்கு மகிழ்ச்சி! பாராட்டு!

ஆனால் சட்டப் பேரவையில் நடந்த நிகழ்ச்சியையே அப்படியே மாற்றி கொடைக்கானல் விழாவில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பேசியிருப்பதைத் தினத்தந்தியில் படித்தபோதுதான் இதை எழுத வேண்டும் என்ற தூண்டுதல் ஏற்பட்டது!

பக்கத்திலேயே கோயபல்சைக் கொடைக்கானலில் குந்த வைத்துக்கொண்டு வேறு எங்கேயோ இருப்பதாக பரூக் அப்துல்லா பேசியிருக்கிறாரே என்று கூறுவதில் எந்தத் தவறும் இல்லை அல்லவா?

அன்புள்ள,

மு. க.

04-03-1984

1204. சகோதர உணர்வோடு செயல்படுக!

உடன்பிறப்பே,

கர்நாடக மாநிலத்தில் பெங்களூரில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைச் செயல்களின் காரணமாக ஒரு தமிழ் இளைஞர் கொல்லப்பட்டிருக்கிறார். தமிழர்களின் கடைகள், வீடுகள், தமிழ் நாட்டில் இருந்து சென்ற பேருந்துகள் அடித்து நொறுக்கப் பட்டிருக்கின்றன. இந்த வன்முறைகள் குறித்துத் தமிழகச் சட்டப் பேரவையில் கழகம் உள்ளிட்ட எல்லாக் கட்சிகளின் உறுப்பினர்களும், தலைவர்களும் தங்களது குமுறல்களை வெளியிட்டுப் பேசியிருக்கிறார்கள்.

கன்னட நடிகர் ராஜ்குமார் அவர்கள் கன்னட மொழியுரிமைக்காகப் போராடும் வேகத்தில் அந்த மாநிலத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம், உருது போன்ற மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்ட சிறுபான்மை மக்களின் மொழியுரிமைக்கும், மொழிப் பாதுகாப்புக்கும் ஊறு தேடிட எண்ணுபவர்களுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ ஊக்கமளித்திடல் ஆகாது என்பதே நமது திடமான கருத்தாகும்.

திரு. ராஜ்குமார் அவர்கள் கலந்துகொண்ட ஒரு படப்பிடிப்பில் உதகமண்டலத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஒரு சம்பவத்தைப் பின்னணியாகக் கொண்டு கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள் என்று காரணம் கூறப்பட்ட போதிலும், கடந்த நாலைந்து ஆண்டுக் காலமாகவே அடிக்கடி இதுபோல் அந்த மாநிலத்தில் தமிழர்கள் உள்ளிட்ட சிறுபான்மையோரான மக்கள் அவதிக்கு ஆளாவது தொடர்ச்சியாக நடக்கும் நிகழ்ச்சிகளாகி விட்டிருக்கின்றன. அந்தத் தாக்குதல்களில் அதிகமாகப் பாதிக்கப்படுகிறவர்கள் தமிழர்களாக இருக்கிறார்கள்.

கர்நாடகத்தில் கன்னட மொழியாளர்களின் மொழிஉணர்வைப் பாராட்டத்தான் வேண்டும். அவர்களது தாய்மொழி உணர்வு - உரிமை நிலைநாட்டல் கொள்கை - இவற்றுக்கு முன்னால்

தமிழ்நாட்டில் உள்ள தமிழன், தனது தாய்மொழிப் பற்றின்மையையும் - தனது உரிமைகளை யார் யாரோ மிதித்து ஆதிக்கம் செலுத்துவதையும் எண்ணித் தலைகுனிந்துதான் நிற்க வேண்டும்.

வாழுகிற இடமாயினும், வாழச் சென்ற இடமாயினும் அங்கெல்லாம் நிம்மதியற்றுச் சீரழிவது என்பது தமிழ் இனத்திற்கு ஏற்பட்ட சாபக்கேடு!

உதகமண்டலத்தில் ராஜ்குமார் படப்பிடிப்பில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் விரும்பத்தகாதச் செயலை தமிழகத்தில் யாரும் வரவேற்கவில்லை - ஆனால் அதே நேரத்தில் அந்த நிகழ்ச்சிக்கு அடிப்படைக் காரணமாகத் தமிழர்களின் மனக்குமுறல் இருந்திருக்கிறது என்பதை ஒதுக்கித் தள்ளிவிட இயலாது!

இனியாவது அதுபோன்ற குமுறல்களுக்கு இடம் தராத வகையில் கர்நாடக மாநில முதலமைச்சர் மாண்புமிகு ஹெக்டே அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்று நம்புகிறேன். அவரிடம் அப்படியொரு நியாயமான போக்கைத் தமிழக மக்களும் எதிர்பார்க்கிறார்கள்.

நடிகர் - நண்பர் ராஜ்குமார் அவர்களும், அவரைப் பின்பற்றுவோருக்கு அமைதி வழியில் செல்லத் தக்க வழிகாட்டுதலை வழங்குவார் என எதிர்பார்க்கிறேன்.

உடன்பிறப்பே, இந்தப் பிரச்சினையைத் தமிழக சட்டப் பேரவையில் உறுப்பினர்கள் எழுப்பியபோது அவை முன்னவர் நாவலர் அவர்கள் அரசின் சார்பில் மிகுந்த எச்சரிக்கையுடன் விளக்கமளித்திருக்கிறார் என்ற போதிலும், அந்த விளக்கத்தினூடே அவர் பயன்படுத்திய சில சொற்கள் தமிழ் உணர்வு படைத்தவர்களைப் பெரிதும் புண்படுத்துவனவாய் அமைந்துள்ளன என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

தான், தாக்கப்பட்டதாக ராஜ்குமார் சொல்லவில்லை!

என்று நாவலர் குறிப்பிடுகிறார். அதற்காக மகிழ்ச்சி அடைகிறோம்.

ராஜ்குமாரைப் படப்பிடிப்பில் சந்தித்தவர்கள், அவரிடம் போய் தமிழை மதிக்கிறேன் என்று சொல்லும்படி கேட்டிருக்கிறார்கள்!

இதுவும் நாவலரின் விளக்கத்தில் வரும் வாசகம்தான்!

இதற்கு மேலேதான் அவரது விளக்கம் அக்கினிக் கணையாகத் தமிழ் நெஞ்சங்களில் பாய்கிறது!

தமிழை மதிக்கிறேன் என்று சொல்லும்படி ராஜ்குமாரிடம் கேட்டவர்கள் யார் தெரியுமா? மாணவர்களும், சமூக விரோதிகளும்தான் அவர்கள்!

இப்படி நிதியமைச்சர் நாவலர் விளக்கமளித்ததை மறுத்து துரைமுருகன், ரகுமான்கான் போன்றவர்கள், தமிழன் என்ற உணர்வோடு செயல்பட்டவர்களைச் சமூக விரோதிகள் என்று கூறவேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

கலவரத்தில் ஈடுபட்டவர்களைச் சமூக விரோதிகள் என்றுதான் கூற வேண்டும் என்று மீண்டும் நாவலர் இரட்டைத் தாழ்ப்பாள் போட்டிருக்கிறார்.

கர்நாடகத்தில் தமிழர்கள் அவதிப்படுகிறார்களே என்ற கொதிப்பின் காரணமாக உதகமண்டலத்தில் மாணவர்களும், சில இளைஞர்களும் உணர்ச்சி வசப்பட்டு பதிலுக்குப் பதில் காரியத்தில் இறங்குவது பொது அமைதியைக் கெடுக்கும் என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமே இல்லை!

ஆனால் அப்படி உணர்ச்சி வசப்பட்டவர்களின் போக்கை நாம் வரவேற்காவிட்டாலும் கூட - அவ்வாறு உணர்ச்சி வயப்படும் நிலை கூடாது என வேண்டுகோள் விடுக்க வேண்டுமே தவிர - அவர்களைச் சமூக விரோதிகள் என்று இழிபெயர் சூட்டுவது ஏற்கத் தக்கதல்ல!

எந்தவொரு கிளர்ச்சி, வன்முறை இவற்றினை அடக்கவும் - அமைதிப்படுத்தவும் முறைப்படி சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்வதைத் தவறு என்று கூறவில்லை!

அதற்காகத் தமிழ் உணர்வின் உந்துதலால் உணர்ச்சி வயப்பட்டவர்களைச் சமூக விரோதிகள் எனக் கூறுவது அவர்களுக்கு அளிக்கப்படும் மிகக் கொடுமையான - கேவலமான தண்டனையாகும்!

சட்டவிரோதமான காரியங்களில் ஈடுபடுகிறவர்கள் எல்லோருமே சமூக விரோதிகள் ஆகிவிட மாட்டார்கள்!

நாட்டு விடுதலை - மொழியுரிமை - இது போன்ற பொதுப் பிரச்சினைகளுக்காகச் சட்டத்தை மீறிச் செயல்பட்டவர்கள் எல்லாம் சமூக விரோதிகளாகி விட முடியுமா?

சட்டத்தை மீறியதற்கு அவர்களுக்கு எந்தத் தண்டனை வேண்டுமானாலும் கொடுக்கலாம்! சமூக விரோதி என்ற தண்டனையை எண்ணிப் பார்ப்பதும் தவறு!

கர்நாடகத்திலும் சரி - தமிழகத்திலும் சரி - இப்போது கர்நாடகத்தில் கிளப்பி விடப்பட்டுள்ள மொழிப் பிரச்சினை காரணமாக உணர்ச்சி வயப்பட்டு நிகழ்ச்சிகள் நடைபெறாமல் அமைதி காத்திட வேண்டிய கடமையைப் பொறுப்புள்ளவர்கள் அனைவரும் ஏற்றிட வேண்டும்!

இரு மாநிலங்களிலும் கன்னடியர்களும், தமிழர்களும் சகோதர உணர்வோடு ஒன்றுபட்டு அவரவர் தாய்மொழிக்குரிய உரிமைகளோடு வாழ்ந்திடவும், அமைதி காத்திடவும் முன்வரவேண்டும்.

அன்புள்ள,

மு. க.

08-03-1984

1205. ஊருக்குப்புரிகிற உண்மை!

ஒரு சிறுகதை!

உடன்பிறப்பே,

ஒரு வாலிபன்! வசீகரமிக்கவன்! கட்டுடல் வாய்ந்த காளை! அவன் காதலித்த யுவதியும் அழகிய வடிவம்! இருவரின் திருமணத்திற்கும் பெண்ணின் பெற்றோர் தடையாக இருந்தனர்! பெண்ணை பயமுறுத்தி வீட்டுச் சிறையில் வைத்தனர்! ஒருநாள் திடீரென்று அந்த வாலிபன் அந்த வீட்டுக்கு வந்தான்! காதலியைச் சிறை மீட்டான்! இருவரும் வீட்டைவிட்டு வெளியேறினர்! எங்கு போனார்கள் என்று தெரியவில்லை!

அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள் என்று செய்தி வந்தது!

பெண்ணைக் கடத்திக் கொண்டு போய் விட்டான் என்று அந்த வாலிபன் மீது புகார் கொடுத்தனர் பெண்ணின் பெற்றோர்!

மணமக்களைப் போலீசார் கண்டுபிடித்தனர்! அந்தத் திருமணம் செல்லாது என வழக்கு தொடுத்தனர் பெண்ணின் பெற்றோர்!

வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுதே, சில குண்டர்களை ஏவி விட்டு பெண்ணை வீட்டுக்குக் கடத்திக் கொண்டு வந்துவிட்டனர் பெண்ணின் பெற்றோர்!

வாலிபன் அதற்காக அலட்டிக் கொள்ளவில்லை! எப்படியும் வழக்கில் தனக்குச் சாதகமாகத் தீர்ப்பு கிடைக்கும். கிடைத்த பிறகு அவளை அழைத்து வந்து இல்லறம் நடத்தலாம் என நம்பிக்கொண்டு வழக்கு நடத்துவதில் தீவிரமாக இருந்தான்!

அவன் எதிர்பார்த்தபடி அவர்களின் திருமணம் செல்லும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

வாலிபன், அந்த மகிழ்ச்சிகரமான செய்தியால் துள்ளிக் குதித்தான்.

தனது நண்பர்கள் சிலருடன், காதலியின் வீட்டுக்குச் சென்றான் - அவளது பெற்றோர், இனிமேல் பிடிவாதம் காட்டாமல் அவளைத் தன்னுடன் வாழ்க்கை நடத்த அனுமதிப்பார்கள் என்பது அவனது நம்பிக்கை!

காதலியின் வீட்டைச் சுற்றி நூற்றுக்கு மேற்பட்டோர் கூடியிருந்தனர்! அவர்களுக்கு மத்தியில் ஒரு பெரிய மீசைக்காரன் முண்டா தட்டிக்கொண்டு நின்று கொண்டிருந்தான்!

அவன், வாலிபனைப் பார்த்து என்னடா எங்கே வந்தே உன் தோழர்களுடன்? என்று அதட்டலாகக் கேட்டான்.

எங்கள் திருமணம் செல்லும் என்று நீதிமன்றமே கூறிவிட்டது! அதனால் என் காதலியைப் பெற்றோர் விருப்பத்துடன் அழைத்துப் போக வந்தேன் என்றான் வாலிபன்!

பெண்ணின் பெற்றோர், அந்த முரடனுக்கும், அந்தத் தெருவில் உள்ள வீட்டுக்காரர்கள் பலருக்கும் நிறைய பணத்தைக் கொடுத்து அவர்களைத் தங்களுக்குச் சாதகமாகச் செயல்பட வேண்டுமென்று விலைக்கு வாங்கிவிட்டார்கள் என்ற ரகசியம், முதலில் அந்த வாலிபனுக்கும் அவனுடன் வந்த நண்பர்களுக்கும் புரியவில்லை!

விலைபோன அந்த முரடன் வாலிபனைக் கோபத்துடன் பார்த்து அடே! வாலிபனே! நீதிமன்றத்தில் உங்கள் திருமணம் செல்லுபடியாகும் என்றுதான் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறதே தவிர - இந்தப் பெண்ணும் நீயும் ஒன்றாக வாழ வேண்டும் என்று உத்தரவிடப்படவில்லை! அதனால் பெற்றோரிடமே பெண் இருப்பாள்! இதுதான் முடிவு! நீ போகலாம்! என்று உரக்கக் கத்தினான்.

கூடியிருந்த அந்தத் தெருவினரும் ஆமாம்! ஆமாம்! அய்யா சொல்றதுதான் சரி! என்று கை தட்டி ஆரவாரம் செய்து அந்த முரடனுக்குச் சபாஷ் போட்டனர்!

வாலிபன், தன்னுடன் வந்த சில நண்பர்களைக் கொண்டு அந்த முரட்டுக் கூட்டத்தை எதிர்க்க இயலாதென்று கருதி - அந்தக் கூட்டத்தை முறியடிக்கக்கூடிய வலிமையுடன் வர வேண்டுமென்று

திட்டமிட்டு நண்பர்களுடன் அங்கிருந்து வெளியேறினான். அவனுக்கும் அவனது நண்பர்களுக்கும், அந்த முரட்டுக்கூட்டம் அந்தப் பெண்ணின் பெற்றோரிடம் நல்ல கூலி பெற்றுக் கொண்டு அப்படிச் செயல்பட்ட விபரம் தெளிவாகப் புரிந்துவிட்டது!

எப்படியும் காதலியை மீட்டு, அவளுடன் குடும்பம் நடத்துவதற்கான வழிகாண்பதில் அந்தக் காதலனும் அதற்கு உதவியாக அவனது நண்பர்களும் ஈடுபட்டனர் -

உடன்பிறப்பே, இந்தக் கதையின் முடிவை நான் இப்போது எழுதவில்லை! ஆனால் ஒன்று - இந்தக் கதையை ஏன் எழுதினேன் தெரியுமா?

திருமணம் செல்லுபடியாகும் என்றுதான் கோர்ட்டு தீர்ப்பு வழங்கியிருக்கிறதே தவிர, மணமக்கள் ஒன்றாக வாழ வேண்டுமெனக் கோர்ட்டு உத்திரவிடவில்லை

எனக் கூறி முண்டா தட்டினானே ஒரு முரடன், அவனை எண்ணும்போது, எனக்கு இன்றைய தமிழக அரசின் நினைவுதான் வந்தது!

1973-இல் தி.மு.க. ஆட்சி கொண்டு வந்த பஸ்கள் தேசிய மயச் சட்டம் செல்லும்

என்று அண்மையில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியது!

அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் எல்லா பஸ்களையும் தேசிய மயமாக்க முன்வர வேண்டுமெனச் சட்டப் பேரவையில் எதிர்க்கட்சிகள் வாதாடின!

ஆனால் அரசின் சார்பில் அதனை மறுத்துப் பதில் அளித்த நிதியமைச்சர் நாவலர் அவர்கள்,

உச்சநீதி மன்றத் தீர்ப்பு, பஸ் தேசிய மயச் சட்டம் செல்லத் தக்கது என்பதுதானே தவிர, உடனே தேசிய மயமாக்க வேண்டுமென்று உத்தரவு எதுவும் அந்தத் தீர்ப்பில் இல்லை,

என்று குறிப்பிட்டிருக்கிறார்!

திருமணம் செல்லுபடியாகும் என்றுதான் தீர்ப்பே தவிர - மணமக்கள் சேர்ந்து வாழ வேண்டும் என்று தீர்ப்பில் எந்த உத்தரவுமில்லை.

இவ்வாறு கதையில் வரும் முரடனும், அவனோடு சேர்ந்து முழக்கிய தெருவினரும் கூறினார்கள் அல்லவா - அதே பாணியில்தான் நாவலர் அவர்களும் அரசின் சார்பில் விளக்கமளித்திருக்கிறார்! பாவம், அவர் என்ன செய்வார்? அவரது தலைவர் எம்.ஜி.ஆர். அரசின் கருத்தை அவைமுன்னவர் என்ற முறையில் எதிரொலித்திருக்கிறார்!

உடன்பிறப்பே, கதையில் வரும் முரடர் கூட்டம் - பெண்ணின் பெற்றோரிடம் நல்ல விலை பெற்று அந்த விளக்கத்தை அளித்தது!

அதைப்போல எம்.ஜி.ஆர். கூட்டத்தினரும் பஸ் முதலாளிகளிடம் ..... புரிகிறதா? .....

உடன்பிறப்பே! உனக்கும் எனக்கும் மட்டுமல்ல! ஊருக்கே இந்த உண்மை இப்போது புரிகிறது!

அன்புள்ள,

மு. க.

09-03-1984

1206. முரசொலி - நான் பெற்ற முதல் குழந்தை!

உடன்பிறப்பே,

நெஞ்சுக்கு நீதி என்ற தலைப்பில் நான் எழுதிய தொடர் கட்டுரைகளின் தொகுப்பு முதல் பாகமாக எழுநூற்று ஐம்பது பக்கங்களுக்கு மேற்பட்ட நூலாக வெளியிடப்பட்டிருப்பது உனக்குத் தெரியும். இப்போது இரண்டாம் பாகத்தை குங்குமம் வார இதழில் தொடர்ந்து எழுதி வருகிறேன்.

இரண்டாம் பாகம் எழுதுவதற்கான குறிப்புகளைத் தயாரிக்கும்போதும் - வாரந்தோறும் ஓரிரு நாட்கள் உட்கார்ந்து எழுதத் தொடங்கும்போதும் முதல் பாகமாக வெளிவந்த புத்தகத்தையும் புரட்டிப் பார்க்கத் தவறுவதில்லை.

அதில் என் கண்ணில் பட்ட சில வரிகளைப் பிரிந்து என் நெஞ்சம் விலகிச் செல்லவே மறுத்த காரணத்தால் உருவானதே இன்றைய கடிதம்!

1941-ஆம் ஆண்டில் மாணவ நேசன் என்பது நான் நடத்திய கையெழுத்து ஏடு! இப்போது கூட மாணவர்கள் பல இடங்களில் கையெழுத்து ஏடுகள் நடத்துகிறார்கள். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், ஒருமுறை ஒரு மாணவர் தந்த கையெழுத்து ஏட்டைப் படித்துவிட்டு கைராட்டையால் நாடு முன்னேறும் என்பது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ, அவ்வளவு பைத்தியக்காரத்தனம் இந்தக் கையெழுத்து ஏடு நடத்துவதும் என்று எழுதிக் கொடுத்தார். மாணவர்கள் நடத்தும் கையெழுத்து ஏடுகளால் நாடு ஒரேயடியாக முன்னேறி விடுமென்று யாரும் கூறவில்லை. சிறுதுளி பெருவெள்ளம். பலர் சேர்ந்ததே நாடு. அந்த நாட்டின் எதிர்காலத்திற்குரியவர்கள் மாணவர்கள்.

அவர்கள், தங்கள் எண்ணங்களைச் செம்மைப்படுத்திக்கொள்ள, மெருகேற்றிக் கொள்ள, கையெழுத்து ஏடுகள் நல்ல வாய்ப்பு அளிக்கின்றன என்பதே என் நம்பிக்கை. இளமைப்பருவத்தில் எழுதுகின்றவைகளைப் பெரிய பத்திரிகைகள் எடுத்துக் கொள்வதில்லை. அந்தப் பத்திரிகைகளுக்கு எழுதுவது போன்ற தகுதியைக் கையெழுத்துப் பிரதியில் ஏற்படும் பயிற்சி, தாராளமாகத் தருகிறது என்பேன். பள்ளியில் நடத்தும் கையெழுத்து ஏடுகளை ஒருசமயம் ஒருவர்தான் படிக்க முடியும். ஆனால் நான் நடத்திய ஏடு மாதத்திற்கு இரண்டு வெளியீடு. ஒவ்வொரு வெளியீடும் எட்டுப்பக்கங்கள். பிரதிகளோ ஐம்பதுக்கும் குறையாது. ஐம்பது பிரதிகளையும் நானும் சில நண்பர்களும் மட்டுமே உட்கார்ந்து காப்பி எடுப்போம். டெம்மி பேப்பர் செலவை மட்டும் வசூல் செய்து கொள்வோம். உழைப்பும் கட்டுரைகளும் இனாம். இந்த ரீதியில் மாணவ நேசன் ஏழெட்டு மாதங்கள் நடைபெற்றது. இப்படி ஐம்பது பிரதிகள் கையாலேயே எழுதி வழங்குவது சிரமமாயிருக்கிறதே வேறு என்ன செய்யலாம் என்று சிந்தித்தபோதுதான் முரசொலி தோன்றியது. வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகை என்ற அளவிலே அல்ல! துண்டு வெளியீடுகளாக!

உடன்பிறப்பே - இன்றைய நாளிதழ் முரசொலி துண்டு வெளியீடாகத் தொடங்கப்பட்ட கதையைத்தான் நெஞ்சுக்கு நீதி முதல் பாகத்தில் குறிப்பிட்டிருந்தேன். அப்படித் தொடங்கப்பட்டது 1942-ஆம் ஆண்டு! ஆம்! இன்றைக்கு நாற்பத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் - 1942-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட முரசொலிதான், நான் பெற்ற முதல் குழந்தை!

திருவாரூரிலிருந்து துண்டு வெளியீடாக ஆயிரக்கணக்கில் முரசொலி அச்சியற்றப்பட்டு, ஒவ்வொரு வெளியீடும் சேரன் என்ற புனை பெயரில் நான் எழுதிடும் விறுவிறுப்பான சொற்கோவையாக - இயக்கத்தின் எழுச்சிகீதமாக, நாடு முழுதும் ஒலித்துக் கொண்டிருந்தது!

பரணி பல பாடி பாங்குடன் வாழ்ந்த பைந்தமிழ்நாட்டில்
சொரணை சிறிதுமிலா சுயநலத்துப் போர்வழிகள் சிலர்கூடி
வருணத்தை நிலைநாட்ட வகையின்றிக் கரணங்கள் போட்டாலும்
மரணத்தின் உச்சியிலே மானம் காக்க மறத் தமிழா! போராடு!

இப்படி எழுத்துகளைத் தாங்கி இலட்சிய முழக்கமிட்ட முரசொலி துண்டு வெளியீடு - திருவாரூரில் இருந்து வார ஏடாக வளர்ச்சி பெற்று வெளிவந்தது!

ஒவ்வொரு வாரமும் வீட்டிலிருந்து நகைநட்டுகள் அடமானம் போய்த்தான் அச்சகத்திலிருந்து முரசொலி வார இதழை வெளிக்கொணர முடியும்!

அச்சக உரிமையாளர் கருணை எம். ஜமால் அவர்கள் இயன்ற வரையில் உதவி புரிந்தும்கூட முடியவில்லை! முரசொலி வார இதழ், வீட்டைக் கடனில் மூழ்க அடித்தது!

துண்டு வெளியீடாகத் தொடங்கியபோது அண்ணன் என நான் அழைக்கும் டி.எஸ்.இராசகோபால், வாழ்விலும், தாழ்விலும் நண்பர்களில் ஒருவனான தென்னன், திராவிடர் இயக்கக் காளை மறைந்த வி.எஸ்.பி. யாகூப் ஆகியோர் துணையிருந்தனர்.

வார வெளியீடாக ஆரூரில் இருந்து முரசொலி வந்தபோது கனகசுந்தரம் என்ற நண்பர் அலுவலக நிர்வாகி! அவரும், நானும் முரசொலி இதழ்களை அச்சகத்திலிருந்து மூட்டைகளாகக் கட்டித் தலையில் தூக்கிக்கொண்டே அச்சகத்திலிருந்து ஓடம்போக்கி ஆற்றின் மூங்கில் பாலத்தைக் கடந்து விஜயபுரத்திலிருந்து திருவாரூரில் இருந்த முரசொலியின் அலுவலகம் வரையில் நடந்து வருவோம்!

சிறிது காலத் தொய்வுக்குப் பிறகு முரசொலி வார இதழ், சென்னையில் குடியேறியது!

காட்டாற்று வெள்ளத்தில் எதிர்நீச்சல்போட்டு அங்குலம் அங்குலமாக முன்னேறியது!

வார இதழ், நாளிதழாக மாறிய பிறகு படத் துறையில் நானும், தம்பி மாறனும் ஈட்டிய பணத்தையெல்லாம் முரசொலி விழுங்கியும்கூட, ஒவ்வொரு நாளும் மூச்சு நின்று விடுமோ என்ற சந்தேகத்துடன்தான் நாளிதழ் வெளிவர வேண்டியிருந்தது! விற்பனையாளர்களோ பெருந்தொகை பாக்கி வைத்தனர்! ஒருகட்டத்தில் 1960-ஆம் ஆண்டின் இறுதியில் முரசொலியை முழுமையாக நிறுத்திவிட எண்ணி அறிவிப்புச் செய்தபோது - அண்ணா அவர்கள் அதைத் தடுத்துக்கூறி, தொடர்ந்து நடத்துக என ஆணை பிறப்பித்தார்கள்!

முரசொலி வெளியிட்ட ஒவ்வொரு பொங்கல் மலருக்கும் அண்ணா எழுதிய வாழ்த்துக் கட்டுரைகள் ஒரு இலட்சியக் காவியமாகும்!

மாற்றாரால் முரசொலி அலுவலகம் பலமுறை தாக்கப் பட்டதுண்டு! நானும் மாறனும் அரசின் அடக்குமுறைக்கு ஆளானதுண்டு! சிறை புகுந்ததும் உண்டு - முரசொலியினால்!

இவ்வாறு 1942-இல் ஒலிக்கத் தொடங்கிய முரசொலி நாற்பத்து இரண்டாவது வயதை நிறைவு செய்கிறது!

இன்று சென்னையிலிருந்தும், மதுரையிலிருந்தும் வெளி வருகிற முரசொலி நாளிதழ், அன்றைக்குத் துண்டு வெளியீடாக நோட்டீஸ் போல வந்தபோது எத்தகைய இலட்சிய நோக்கு கொண்டிருந்ததோ அந்த நோக்கிலிருந்து எள்முனையளவும் விலகியதில்லை! விலகப்போவதுமில்லை!

இன்றைக்கும் கழகத்தின் கண்மணிகளாம் தொண்டர்களுக்கு முரசொலி ஒரு போர்வாள்தான்!

இப்போதும் முரசொலியில் தொடர்ந்து கடிதம் எழுதுகிறேன் - முரசொலியின் விற்பனைக்காக அல்ல! கழகத்தின் கருத்துகள் பரவிட வேண்டுமென்பதற்காக! முரசொலியில் எழுதுவதால் அந்தக் கருத்து நாடு முழுதும் பரவிவிடும் என்று நம்பி நான் என்னை ஏமாற்றிக் கொள்ளவில்லை!

முரசொலியில் நான் எழுதும் கடிதங்களை - மறுநாளே தவறாமல் தினகரன் ஏடு எடுத்து வெளியிட்டு விடுகிறது! அந்த ஏடு இலட்சக்கணக்கில் விற்பனையாவதால் நான் கடிதவாயிலாக முரசொலியில் எழுதும் கருத்துகள் முழுமையாகப் பரவுகின்றன! பல நேரங்களில் மாலைமுரசு இதழ்கூட அந்தக் கடிதங்களை ஓரளவு வெளியிடுகிறது! அந்த ஏடுகளுக்கு நான் நன்றியுடையவன்!

முரசொலி வாசகர்களுக்கு ஒரு குறை உண்டு! கழகத்தின் முன்னோடிகள் சிலருக்கும், எம்.எல்.ஏ., எம்.பி. போன்ற பதவிப் பொறுப்பில் இருப்போருக்கும் முரசொலியைப் படிக்க நேரமில்லாவிட்டாலும், தொடர்ந்து படிக்கின்ற தொண்டர்களுக்கும் - வாடிக்கையான வாசகர்களுக்கும் உரிய நேரத்தில் முரசொலி கைக்குக் கிடைப்பதில்லை என்பதே அந்தக் குறை!

ஆசிரியர் குழுவினரும், அலுவலக நிர்வாகப் பொறுப்பில் இருப்போரும் கொஞ்சம் கவலையெடுத்துக் கொண்டால் அந்தக் குறையைக் கூடப் போக்க முடியும்!

ஒவ்வொருநாளும் மாலை நேரத்தில் ஏடுகள் ரயிலுக்கு உரிய வேளையில் போய்ச் சேர்ந்ததா என்பதைக்கூட கண்காணிப்பதற்கு அலுவலகத்தில் நிர்வாக முறைகள் வகுக்கப்படாததால் - நான் சுற்றுப்பயணம் செய்யும்போது பல ஊர்களில் முரசொலி வரவில்லை - நேற்று மாலையில்தான் வந்தது! முந்தா நாள் பத்திரிகை இன்றைக்குத்தான் வந்தது என்றெல்லாம் முரசொலி படிப்பதில் அக்கறையுள்ள உடன்பிறப்புகள் என்னிடம் முறையிடுகிறார்கள்!

என் செய்வது! முரசொலிதான் நான் பெற்ற முதல் குழந்தை!

அது, இப்போது சவலைக்குழந்தை ஆகிவிட்டதோ என எண்ணிக் கண் கலங்குகிறேன்.

அன்புள்ள,

மு. க.

11-03-1984

1207. பச்சையாறு திட்டமும் பச்சைப் பொய்யரும்!

உடன்பிறப்பே,

சென்னை தினத்தந்தி 11-3-84 இதழின் முதல் பக்கத்தில் வளைவுக்கோடு கட்டி தி.மு.க. மீது எம்.ஜி.ஆர். குற்றச்சாட்டு 10-ஆம் பக்கம் பார்க்க - என்று ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

அ.தி.மு.க.வின் அதிகாரபூர்வமான ஏடாக மாறிக்கொண்டு வருவதாலும் - அதன் அதிபர் இன்றைய ஆளுங்கட்சியின் சகலகலாவல்லவராக விளங்குவதாலும் - அவரது ஏட்டின் முதல்பக்கத்தில் அப்படிப் பரபரப்பாக செய்தி வந்திடவே நானும் அவசரமாகப் பத்தாம் பக்கத்தைப் புரட்டினேன்.

வெள்ளச் சேதங்களை நெல்லை மாவட்டத்தில் பார்வையிட ஹெலிகாப்டரில் சென்ற எம்.ஜி.ஆர். ஒருவேளை இந்தப் பெருமழைக்கும் வெள்ளத்திற்கும் தி.மு.க.தான் காரணம் என்று கூறியிருப்பாரோ எனக் கருதினேன்!

புண்ணியவான் ஆட்சிக்கு வந்தாலும் வந்தார் - புயலும் மழையும் ஒவ்வொரு வருஷமும் நூற்றுக்கணக்கானவர்களைப் பிணமாக்கி விவசாயிகள் வயிற்றிலும் அடித்துக் கொண்டிருக்கிறது என்று பெருமூச்சோடு பல வயதான பெரியவர்கள் பேசுவது காதில் விழுந்து கொண்டுதானிருக்கிறது!

முன்பெல்லாம் வறட்சியோ, வெள்ளமோ, புயலோ - எப்போதாவது வரும்! வரவே இல்லை என்று சொல்ல முடியாது! ஆனால் இப்போது ஐந்தாறு ஆண்டுகளாக - வெள்ளத்தில் நூற்றுக்கணக்கில் பிணங்கள் மிதப்பதும், கால்நடைகள் ஆயிரக்கணக்கில் அடித்து செல்லப்படுவதும், பல்லாயிரக்கணக்கில் குடிசைகள் அமிழ்ந்து போவதும், புயலால் மழையால் ஏழை, எளியோர், விவசாயிகள் புலம்பித் தவிப்பதும் அடிக்கடி நிகழும் தொடர்கதைகளாகி விட்டிருக்கின்றன!

கோட்டையில் எம்.ஜி.ஆர். அடியெடுத்து வைத்ததுதான் இந்தக் கேட்டுக்கெல்லாம் காரணம் என்று எங்கே எல்லோருமே கருதிவிடப் போகிறார்களோ என்ற பயத்தில் இப்படிப் புயலையும், மழையையும், வெள்ளத்தையும் ஏவி விடுவது கூட தி.மு.கழகம்தான் என்று எம்.ஜி.ஆர். கூறியிருக்கக்கூடும் என்ற எண்ணத்தில்தான் தினத்தந்தியின் பத்தாவது பக்கத்தைத் திருப்பினேன்.

அந்தப் பக்கத்தில் கொட்டையெழுத்துச் செய்திகளைப் படித்தபோது கிட்டத்தட்ட நான் கருதியதைப்போலத்தான் எம்.ஜி.ஆர். அவர்கள், தி.மு.கழகத்தின் மீது பழி சுமத்திப் பேசியிருக்கிறார்.

நெல்லை மாவட்டத்தில் வெள்ளச் சேதம் ஏன்? பச்சையாறுத் திட்டத்தை தி.மு.க. நிறைவேற்றாததே காரணம்! எம்.ஜி.ஆர். குற்றச்சாட்டு.

இது தினத்தந்தியின் தலைப்பு! ஆம் - உடன்பிறப்பே! அய்யா ஆதித்தனாரை அமைச்சராக்கிய தி.மு.க. மீது - அவர் மகன் சிவந்தியார் வாரி இறைக்கும் சேறு இது! நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஆதித்தனார் அவர்கள் அமைச்சராக இருந்தபோது தி.மு.க. ஆட்சி, பச்சையாறுத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்பதுதானே எம்.ஜி.ஆரின் குற்றச்சாட்டு!

தான், தப்பிக்கத் தந்தையின் மீது எந்தப் பழி வந்தால்தான் என்ன - பாராமுகமாக இருப்பதுதானே புத்திசாலிப் பிள்ளைக்கு அழகு!

அதனால்தான் பச்சையாறுத் திட்டத்தைப் பற்றி - எம்.ஜி.ஆருக்கும், நிருபர்களுக்கும் நடந்த விவாதத்தை தினத்தந்தி சென்னை இதழ் முழுமையாக வெளியிடவில்லை. எம்.ஜி.ஆருக்குச் சாதகமில்லாத பகுதிகளைச் சாமர்த்தியமாக இருட்டடிப்பு செய்திருக்கிறது!

பச்சையாறுத் திட்டம் தி.மு.க ஆட்சியின் போது நிறைவேற்றப்பட்டு இருந்தால் நெல்லை மாவட்டத்தில் வெள்ளச் சேதங்களைத் தடுத்திருக்க முடியும்! என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கூறினார்.

இது தினத்தந்தியின் செய்தித் தொடக்கம் - மேலும் எம்.ஜி.ஆரின் பேட்டி தொடருகிறது!

இதோ இந்தப் படங்களைப் பாருங்கள்! 1975 நவம்பர் மாதம் பச்சையாறுத் திட்டத்திற்கு கருணாநிதி முதல்வராக இருந்தபோது அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் அணைகட்டி முடிக்கவில்லை. இதை ஏன் கருணாநிதி கட்டவில்லை? கட்டியிருந்தால் மக்களுக்கு இப்படி வெள்ளத்தினால் கஷ்டம் வந்திருக்குமா? இதோ அவர் அடிக்கல் நாட்டிய படங்கள்!

இப்படி எம்.ஜி.ஆர். சொன்னதும் தினகரன் நிருபர் - உடனே கேட்டிருக்கிறார், 1975 நவம்பரில் கருணாநிதி அடிக்கல் நாட்டினார் - ஆனால் அவரது ஆட்சி இரண்டு மாதங்களில் எமர்ஜென்சி காலத்தில் கலைக்கப்பட்டு விட்டதே - அதனால் அவர் ஆட்சியில் எப்படிக் கட்டி முடிக்க முடியும்? ஏழாண்டுகளாக நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? நீங்கள் கட்டி முடித்திருக்கலாமே? என்று!

தினகரன் நிருபரின் கேள்வி, எம்.ஜி.ஆர். மீது சுடுகணையாகப் பாய்ந்ததும் - மனிதர் திணறிப் போய் - வெலவெலத்து - வியர்த்துக் கொட்டி - அந்தத் திட்டத்தைப் பற்றிய கோப்புகளே இப்போது இல்லை என்று ஒரு பொய்யைச் சொல்லி சமாளித்து மழுப்பியிருக்கிறார். கோப்புகளே இப்போது இல்லை என்று முதல்வர் சொல்லிவிட்ட பிறகு - அந்தக் கோப்புகளை இல்லாமல் செய்ய வேண்டிய பணியை உடனடியாக அதிகாரிகள் செய்து முடிக்க வேண்டும்! இல்லாவிட்டால் அவர்கள் ஓய்வு பெறுவதற்கு முதல்நாள் சஸ்பெண்ட் ஆர்டர் வந்து விடக்கூடும்!

1975 நவம்பரில் கருணாநிதி முதல்வராக இருந்து பச்சையாறுத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டியது உண்மை - அவர் அதற்கு மேல் இரண்டு மாதம்தானே பதவியில் இருந்தார் - அதற்குள் எப்படி அந்தத் திட்டத்தைக் கட்டி முடிக்க இயலும்?

என்று நிருபர் கேட்ட கேள்வியை தினகரன் மட்டுமல்ல - தினமணிகூட முதல் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறது! ஆனால் தினத்தந்தியாரின் ராஜ விசுவாசம் அந்த நிருபர் குறுக்கிட்டுக் கேட்டதை அப்படியே இருட்டடிப்புச் செய்கிற அளவுக்கு முற்றிப் போயிருக்கிறது!

1975 நவம்பரில் அடிக்கல் நாட்டிய பச்சையாறுத் திட்டத்தை டிசம்பர், ஜனவரி ஆகிய இரு மாதங்களில் நிறைவேற்றி

முடிக்கவில்லையாம்! அதனால் நெல்லை மாவட்டத்தில் வெள்ளச் சேதமாம்!

பச்சையாறுத் திட்டம் இரண்டே மாதங்களில் நிறை வேறியிருந்தால் வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்காதாம்!

இரண்டு மாதங்களில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது! ஜனநாயகத்தைக் காத்திட கழகம் தந்த விலை அது!

இந்த ஏழு ஆண்டுகளாக எம்.ஜி.ஆர். என்ன செய்தார்?

பச்சையாகவே கேட்கிறேன்! பச்சையாறுத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி எடுத்துக் கொள்ளாமல் இந்தப் பச்சைப் பொய்யர்கள் என்னதான் செய்து கொண்டிருந்தார்கள்?

ஒன்பதாண்டு காலக் கழக ஆட்சியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறைவேற்றப்பட்ட - பாசன வசதிகள், அணைகள், பாலங்கள், சாலைகள் இப்படி எத்தனை வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதையும் - ஏழாண்டுக்கால எம்.ஜி.ஆர். ஆட்சியில் நாடு, கொள்ளைக் காடாக ஆனதைத் தவிர, வேறென்ன வாழ்கிறது என்பதையும் மக்கள் உணரத் தலைப்பட்டு விட்டார்கள்!

அந்த மக்கள் சக்திக்கு முன்னால் எம்.ஜி.ஆரின் பம்மாத்து வேலைகளும் - இருட்டடிப்பு, திரித்தல் பணி புரியும் பத்திரிகா அ தர்மங்களும் பொடிப் பொடியாகும் நாள் தொலைவில் இல்லை!

அன்புள்ள,

மு. க.

12-03-1984

1208. வெற்றிச் செய்திகளை எனக்கு வழங்கிடுக!

உடன்பிறப்பே,

பட்டதாரிகள் தொகுதிகளில் இருந்தும், ஆசிரியர் தொகுதிகளில் இருந்தும் சட்டமன்ற மேலவைக்கான உறுப்பினர்கள் தேர்தல், வருகிற 18-ஆம் நாள் நடைபெற இருக்கிறது.

கழக வேட்பாளர்களாக நெல்லை, குமரி, மதுரை, ராமநாதபுரம் மாவட்டப் பட்டதாரிகள் தொகுதியில் பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்களும், சென்னை மாவட்டப் பட்டதாரிகள் தொகுதியில் மிசா ஆர். கணேசன் அவர்களும் போட்டியிடுகிறார்கள். தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆசிரியர் தொகுதியில் கழக ஆதரவு பெற்ற வேட்பாளராக மீனாட்சிசுந்தரம் அவர்கள் போட்டியிடுகிறார்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கமெனும் நீதிக்கட்சியின் பிரதான தூண்களில் ஒருவராக விளங்கியவரும் - தமிழ்ப்பற்று மிக்க பண்பாளருமான பி.டி. ராஜன் அவர்களின் திருமகன் பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்கள், தந்தை வழிநின்று கொள்கையில் விடாப்பிடியாக உறுதிபூண்டு பணியாற்றுகிறவர் என்பதை அனைவரும் அறிவர்! அறிவுத் துறையில் பல்வேறு அமைப்புகளின் மூலம் அவர் தனது திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார்! மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் மாண்பினை உயர்த்திய பெருமை அவருக்கும் உண்டு. சட்டப் பேரவையில் கழக உறுப்பினராகப் பொறுப்பேற்று ஆழ்ந்த கருத்துகளை அள்ளிப் பொழிந்தவர். கழகப் பாசறையில் திடமாகச் செயல்படுகிறார் என்ற காரணத்திற்காகவே ஆட்சிக் கொலுவிருப்போர் அவருக்குப் பல்வேறு வடிவங்களில் தந்துள்ள தொல்லைகள் ஏராளம்! அவற்றைப் பொருட்படுத்தாமல் ஏற்றுக் கொண்ட கொள்கைக்கெனத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு தொண்டாற்றும் இலட்சிய வீரராக - என் இனிய நண்பராகத் திகழ்கிறார் அவர்!

அவரது வெற்றிக்காக மதுரை, ராமநாதபுரம், நெல்லை, குமரி மாவட்டத்துக் கழக முன்னோடிகளும் - பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகளும் - கழகச் செயல் வீரர்களும் அயர்வின்றி உழைத்து நற்செய்தி தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை பட்டதாரிகள் தொகுதியில் கணேசன் ஆர். என்கின்ற மிசா ஆர்.கணேசன் போட்டியிடுகிறார்! அவருக்குரிய அடைமொழியான மிசா என்பதே ஜனநாயகம் காத்திடும் போராட்டத்தில் ஓராண்டு சிறைக் கொடுமையை அனுபவித்தவர் என்ற விளக்கத்தை அளிக்கும்! வழக்கறிஞர் மட்டுமல்ல அந்த இளைஞர், வருக என அறப்போர்க்களம் அழைக்கும் போதெல்லாம் இதோ வந்து விட்டேன் எனத் தோள் தட்டும் தீரர்! சலனமோ - சபலமோ, எத்தகைய சங்கடத்திலும் அண்ட முடியாத எஃகு இதயம் படைத்த அந்த வாலிபரின் வெற்றிக்குச் சென்னை மாவட்ட முன்னணி வீரர்களும், அமைப்புகளும், கழகச் செயல்மாமணிகளும் சோர்வறியாது பாடுபட்டு இனிய செய்தி அளித்திட வேண்டுகிறேன்.

ஆசிரியர் சமுதாயத்திற்காக ஓங்கி ஒலிக்கும் குரலுக்குச் சொந்தக்காரர் அருமை நண்பர் மீனாட்சிசுந்தரம்! மேலவையில் ஆசிரியர்களின் சார்பில் அவர் எடுத்து வைத்த வாதங்களும் - அந்தச் சமுதாயத்திற்காக அவர் வழங்கி வரும் உழைப்பும் - அவர் பெற்றுத் தந்துள்ள வெற்றிகளும் மறக்க முடியாதவை! ஆசிரியர் கோரிக்கைகளுக்காகச் சிறைபட்டார் - உண்ணாநோன்பு இருந்தார் - எந்த அடக்குமுறைக்கும் அஞ்சாமல் தொடர்ந்து போரிட்டார்! போரிடுவார்! அவர் பணி மீண்டும் மேலவையில் தொடர்ந்திட தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டக் கழக முன்னணி வீரர்களும் - அமைப்புகளும் - செயலாற்றும் செம்மல்களும் ஓய்வின்றி உழைத்து வெற்றிச் செய்தி தந்திட வேண்டுகிறேன்!

மற்றும் சில பட்டதாரிகள் தொகுதிகளிலும் - ஆசிரியர் தொகுதிகளிலும் போட்டியிடுவோர் - அதிகாரப்பூர்வமாக நமது கழக ஆதரவு பெற்றவர்கள் அல்ல என்றாலும் - அவர்களது திறனும் தூய்மையும் உணர்ந்து - உதாரணமாக திரு. ஏ.ஆர். தாமோதரனைப் போன்றவர்களுக்கும் நமது கழகத்திற்குமுள்ள தோழமையை உணர்ந்து - யார் வருவதால் நன்மை என்பதைக் காட்டிலும், யார் வந்து விட்டால் தீமை என்பதை எண்ணிப் பார்த்து

அதற்கேற்ப நமது கழக அமைப்புகள் ஆங்காங்கு நடந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

எல்லா மட்டத்திலும் ஊழலும் சீர்கேடுகளும் மலிந்து - எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற நிலையெடுத்து - ஆணவங்கொண்டலையும் ஒரு ஆட்சிக்கு லாலி பாடுவதையே வேலையாகக் கொண்டோர் வெற்றி பெறுவதின் மூலம், மேலும் இந்த நாடும், நாட்டின் நிர்வாகமும் நலிவடையவே வழி ஏற்படும்!

அத்தகைய கேடு சூழ்ந்திட வழிவகுக்காமல் - தூங்காமை, அறிவு, துணிவுடைமையைக் கொண்டவர்களை வெற்றி பெறச் செய்வது பட்டதாரிகள், ஆசிரியர்கள் தலையாய கடமையாகும்!

எனவே! அன்பு உடன்பிறப்பே! தலைமைக் கழகச் சார்பில் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களால் பெயர் குறித்து அறிவிக்கப்பட்டுள்ள எனது பாசமிகு நண்பர் பழனிவேல்ராசன், அன்புத் தம்பி மிசா ஆர். கணேசன், அருமைச் சகோதரர் மீனாட்சி சுந்தரம் ஆகியோரின் வெற்றிச் செய்தியுடன், மற்ற தொகுதிகளில் போட்டியிடுகிற நம்மிடம் தோழமை கொண்டுள்ள வேட்பாளர்களின் வெற்றிச் செய்தியினையும் எனக்கு கிடைத்திடச் செய்யக்கூடிய உனது ஆற்றலைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

15-03-1984

1209. குமுதம், விகடனுக்கு குத்தூசியின் வினாக்கணைகள்!

உடன்பிறப்பே,

நீதியின் இலக்கணம் உரைக்கும் நெடுஞ்செழியப் பாண்டியனே! உன்னுடைய நாட்டில் எதற்குப் பெயர் நீதி? நல்லான் வகுத்ததோ நீதி? அல்ல! அல்ல! வல்லான் வகுத்ததே இங்கு நீதி?

விசாரணையை முறையாகவும், முழுமையாகவும் நடத்தாமல் அவசரப்பட்டுத் தீர்ப்புக் கூறி, கோவலனை மட்டுமல்ல - நீதியையே கொலை செய்துவிட்ட பாண்டியன் நெடுஞ்செழியனைப் பார்த்துக் கனல் கக்கும் கண்களுடன் கண்ணகி கொட்டிய வார்த்தைகளில் சிலவற்றை மட்டுமே நினைவுபடுத்தினேன். நீதி தவறிவிட்ட பாண்டியனின் குற்றத்தை அவள் உணர்த்தியதும்

மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே

எனக் கூறுகிறது சிலப்பதிகாரம்! முறையாகவும் முழுமையாகவும் விசாரணை நடத்தியிருந்தால் தவறான முடிவை நீதியாக வழங்கியிருக்க வேண்டியதில்லையெனவும் - தனது அவசரத் தீர்ப்பினால் நாட்டின் செங்கோன்மைச் சிறப்புக்கே இழிவு ஏற்பட்டு விட்ட காரணத்தால், இனி இந்த உயிர் இருக்கத் தேவையில்லையெனவும் நெஞ்சு வெடித்த நிலையில் பாண்டியன் மயங்கி வீழ்ந்தான்.

காவி யுகுநீருங் கையில் தனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும் - பாவியேன்
காடெல்லாஞ் சூழ்ந்த கருங்குழலுங் கண்டஞ்சிக்
கூடலான் கூடா யினான்.

கூடல் நகரத்துக் கொற்றவன், நீதி தவறிவிட்டோமென நினைத்தவுடனேயே - கண்களில் நீர்வழிய கையில் தனிச்

சிலம்புடன் வந்த கண்ணகியைக் கண்ட மாத்திரத்தில் உயிரற்ற வெறுங்கூடாகப் போய்விட்டான் என்றும் சிலப்பதிகாரம் சுட்டிக் காட்டுகிறது.

தரணியாண்டவன் தவறை உணர்ந்தான் - தன்னையே தண்டித்துக் கொண்டான் - அப்போதும் கண்ணகியின் சினம் தணியவில்லை!

நீதியைக் கொளுத்திவிட்ட பாண்டியனின் நகரையே கொளுத்திச் சாம்பலாக்க முனைந்துவிட்டாள்!

தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று காய்த்திய
பொற்றொடி ஏவப் புகையழல் மண்டிற்றே
நற்றேரான் கூடல் நகர்

அழகிய தேரினையுடைய பாண்டியனின் கூடல் மாநகரில் தீயோர் இருக்கும் பக்கமெல்லாம் தீப்பிழம்பு மண்டி அழிக்கட்டும் என்று கண்ணகி ஆணையிட்டாள் என்பது இதன் பொருள்!

தமிழன், ஏற்றிப் போற்றும் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம், ஆராயாமல் நீதியை ஊனப்படுத்தியவன் - படைபலமிக்கப் பாண்டியனே ஆயினும் அவன் மட்டுமல்ல, அவன் தலைநகர் வாழ் தீயோர் இருப்பிடங்களும் தீயின் நாக்குகளுக்கு இரையாகியே தீர வேண்டும் என்பதைத் தெளிவாக விளக்குகிறது!

எல்லோர்க்கும் தெரிந்த கதை தானே! இப்போது ஏன் நினைவுபடுத்துகிறாய்? நீயே பூம்புகார் திரைப் படத்தை எழுதித் தயாரித்து வெளியிட்டிருக்கிறாயே - இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்திற்கு நாடக உருவம் வழங்கி நீ எழுதியுள்ள நூலுக்கு அறிஞர் அண்ணா தந்துள்ள அணிந்துரையைத்தான் மறக்க இயலுமா?

என்றெல்லாம் உடன்பிறப்பே! நீ எனைநோக்கி கேட்பது எனக்குப் புரிகிறது!

இந்த வாரம் ஆனந்தவிகடன், குமுதம் ஆகிய ஏடுகளின் தலையகங்கங்களைப் படித்தவுடன் எனக்கு சிலப்பதிகாரம் நினைவுக்கு வந்தது! நீதி கவிழ்ந்தது என்ற ஒரு காரணத்திற்காக ஒரு நகரையே நெருப்பிலிட்டாள் கண்ணகி!

ஆனால் இன்று? நகரையல்ல! நபரையுமல்ல! அநீதியின் அடையாளச் சின்னமான நகல் ஒன்றைத் தீயிட்டுப்

பொசுக்குவது கூட ஆகாது என வாதிடுகிறது ஆனந்தவிகடன்! சட்டமன்றத்தில் அப்படியொரு சம்பவத்தை நான் இருந்திருந்தால் அனுமதித்திருக்கமாட்டேன் என்று என்னைப் பற்றிக் கணித்துள்ள ஆசிரியரின் எண்ணத்திற்கு என் நன்றி! அது உண்மையுங்கூட!

ஆனால், தவறான சட்டங்களையும், தீமை பயக்கும் அறிக்கைகளையும், அநீதியான ஆணைகளையும் பொது இடங்களில் மக்களின் கண்டனத்திற்கு அடையாளமாகக் கிழிப்பதோ, எரிப்பதோ எப்படித் தவறான செயலாக இருக்க முடியும்?

விகடனே குறிப்பிட்டிருப்பது போல அந்நிய நாட்டுத் துணிகள் விடுதலைப் போராட்டக் காலத்தில் நடுத்தெருவில் போட்டு கொளுத்தப்பட்டிருக்கின்றன!

இந்தி ஆதிக்கத்திற்கு வழிவகுக்கும் அரசியல் சட்டப் பிரிவைக் கொளுத்துமாறு அறிஞர் அண்ணா ஆணையிட்டார்! ஏன்? அவரே அதனைக் கொளுத்த முயன்று கைது செய்யப்பட்டார்!

ராமபிரசாத் ராவ் கமிஷன் தீர்ப்பைக் கொளுத்துவது தேவையில்லை என்ற அளவோடு விகடன் நின்று கொண்டது!

ஆனால் குமுதம், ஒரு படி மேலே போய் முதலமைச்சரையும், ஓய்வு பெற்ற நீதிபதி ராமபிரசாத் ராவ் அவர்களையும் மிக உயரத்தில் தூக்கி நிறுத்த முயற்சிக்கிறது! அதனால் குமுதத்தின் மீது எனக்கு கோபமில்லை! ஆனால் அதன் வாதங்கள் சிலவற்றுக்கு நான் விளக்கமளிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

கமிஷன் அறிக்கை வெளியான பிறகு விசாரணை செய்த நீதிபதியை இழிவுபடுத்திப் பேசுவது சரிதானா?

குமுதம் கேட்கிறது இப்படி!

திருச்செந்தூரில் சுப்பிரமணிய பிள்ளை கொலைதான் செய்யப்பட்டார் என்றும், அவரைக் கொலை செய்தவர்கள் இன்னாராகத்தான் இருக்கக்கூடுமென்றும் நீதிபதி பால் கமிஷன் அறிக்கை கொடுத்ததே - அந்தக் கமிஷனும் இந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கமிஷன்தானே - அந்த அறிக்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாமல் அதற்கு மறுப்பு அறிக்கை அச்சடித்துச் சட்டப் பேரவையில் வைத்ததே! அதுகுறித்துக் குமுதம் என்ன சொல்கிறது? ஒரு கொலை மூடி மறைக்கப்பட்டு, கொலைகாரர்கள்

ஆளும் கட்சிக்காரர்கள் என்பதால் நடவடிக்கை எதுவுமே இல்லாமற் போய் விட்டதே - அதைக் குமுதம் மறந்து விட்டதா?

சாராய ஊழல் குற்றச்சாட்டை விசாரணை செய்த நீதிபதியை இழிவுபடுத்தலாமா? என்று குமுதம் கேட்கிறது!

நீதியே இழிவுபடுத்தப்பட்டிருக்கிறதே! அதற்குக் குமுதம் கூறும் பதில் என்ன?

முறையாக நீதி வழங்காத பாண்டியனை நோக்கி தேராமன்னா! என்று கண்ணகி கடிந்துரைத்தாள்! அதனால் நீதி இழிவுபடுத்தப்படும் போது அப்படி இழிவுபடுத்தியவர்களைக் கண்டிப்பது தவறாகாது என்பதைக் குமுதம் உணர வேண்டும்!

சட்டப் பேரவையில் முதலமைச்சர் நீதிமன்றத்தில் பணியாற்றும் நீதிபதிகளையே குறை கூறிப் பேசியிருக்கிறார். ஓய்வு பெற்ற விசாரணைக் கமிஷன் நீதிபதிகளையல்ல! அப்படி அவர் பேசியது குறித்து வழக்கு ஒன்று வந்தபோது அந்தச் சம்மனைப் பெறத் தேவையில்லையென்று சபாநாயகர் முதல்வருக்குப் பாதுகாப்பான ஆணையொன்றையும் பிறப்பித்தது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்!

ஒரு முதலமைச்சர், தன்மீது தொடுக்கப்பட்ட குற்றச் சாட்டுகளை விசாரிக்கத் தானே ஒரு கமிஷன் நியமித்தார் என்பது பெரிய விஷயம்.

இதுவும் குமுதத்தின் பாராட்டுப் படலம்தான்!

முதலமைச்சர், தனக்குத்தானே ஒரு கமிஷனை நியமிக்கும் நிலை உருவாகிறபோது அவர் என்ன செய்ய வேண்டும் என்று உச்சநீதிமன்ற நீதிபதி சந்திரசூட் ஒரு தீர்ப்பில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

Extracts from "The Supreme Court Reports" page 101.

Karnataka Vs Union Government Judgement by Chandrachud.

"It is inconceivable that a Commissions of Inquiry will be appointed by a State Government without the concurrence of the Chief Minister and if the political climate is so hostile that he is obliged to submit to an inquiry into his own conduct, he will quit rather than concur."

முதலமைச்சரின் ஒப்புதல் இல்லாமல் விசாரணைக் கமிஷன் அமைக்க முடியும் என்று யாரும் கருதிட இயலாது. தன் நடத்தையின் மீதே ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்துக் கொள்ள வேண்டிய அளவிற்கு அரசியல் நிலைமை மோசமாக இருக்குமேயானால் - விசாரணைக் கமிஷன் அமைக்க ஒப்புக்கொள்வதைவிட - அந்த முதலமைச்சர் வெளியேறி விடலாம்.

உடன்பிறப்பே, ராமபிரசாத் ராவ் விசாரணைக் கமிஷன் என்ற பெயரால் என்னதான் நடந்தது என்பதைக் குமுதமோ, விகடனோ சரியாக விளங்கிக் கொள்ளாத காரணத்தால், ஏதோ எழுத வேண்டுமென்று தலையங்கங்களை எழுதித் தீர்த்து விட்டன என்றே நான் கருதுகிறேன்.

இதோ எதிரொலி ஏட்டில் சின்னக்குத்தூசியின் கட்டுரையில் தி.மு.க. சார்பில் எடுத்துரைக்கப்படும் வாதங்கள் வரிசைப்படுத்திக் காட்டப் பெற்றுள்ளது. அதனையும் இந்தக் கடிதத்துடன் இணைத்துத் தருகிறேன். நீ மட்டுமல்ல - விகடனும், குமுதமும் கூடப் படித்திட!

1 சாராய வியாபாரத்தில் எம்.ஜி.ஆர். அடித்த கொள்ளை பற்றி சட்டசபையிலே கருணாநிதியும், நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தியும், மேலவையில் ஆற்காடு வீராசாமியும் சாட்டிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலே ஒரு நீதி விசாரணையை நடத்த முன்வந்த எம்.ஜி.ஆர். அந்த விசாரணை நடத்த ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியை நியமிக்காமல் - ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரை நியமித்தது ஏன்?

2 விசாரணைக் கமிஷன் நீதிபதியாக நியமிக்கப்பட்ட நீதிபதி ராமமூர்த்தி - விசாரணையை நடத்திக் கொண்டிருந்தபோது திடீரென்று அவருக்கு உடல்நலமில்லை என்று இவர்களே அறிவித்துவிட்டு, அந்த நீதிபதியை வீட்டுக்கு அனுப்பினார்களே, அது ஏன்?

3 பின்னர் மறுபடியும் ஒரு ஓய்வு பெற்ற நீதிபதியையே - ராமபிரசாத் ராவை நியமித்துக் கொண்டார்களே, அது ஏன்?

4 கமிஷனில் எம்.ஜி.ஆரின் குடும்பத்தையே குற்றம் சாட்டி புகார் கொடுத்த ஐ.ஜி. மாணிக்கத்தையும், மற்ற இருவரையும் விசாரித்த நீதிபதி ராமபிரசாத் ராவ், குற்றம் சாட்டப்பட்ட எம்.ஜி.ஆரையும், எம்.ஜி.ஆரது அண்ணன் சக்கரபாணியையும், அவரது மகன்களையும் கூண்டில் ஏற்றி விசாரிக்கவில்லையே, அது ஏன்?

5 இதே நீதிபதி ராமபிரசாத் ராவ் உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிய போது தி.மு.க. ஆட்சிக் காலத்தில் - எம்.ஜி.ஆர். கட்சியினரால் மந்திரி ப.உ. சண்முகத்தின் மீது அரிசி பேர ஊழல் குற்றம் சாட்டப்பட்டபோது அமைக்கப்பட்ட கமிஷனின் நீதிபதியாக இருந்து விசாரணை நடத்தினார்.

அப்போது குற்றம் சொன்னவர்களை மட்டுமின்றி, குற்றச்சாட்டுக்கு ஆளானவர்களையும் கூண்டில் ஏற்றி விசாரித்த நீதிபதிதானே இந்த ராமபிரசாத் ராவ்.

இப்போது மட்டும், குற்றச்சாட்டுக்கு ஆளான எம்.ஜி.ஆரையும், அவரது குடும்பத்தாரையும் கூண்டில் ஏற்ற வேண்டும் என்ற கோரிக்கையை காதில் வாங்கிக் கொள்ளவில்லையே இந்த நீதிபதி, அது ஏன்?

6 நீதி விசாரணைக் கூண்டிலே பிரதமர் இந்திரா நிறுத்தி வைக்கப்பட்டது இல்லையா? ஜனாதிபதி வி.வி. கிரி கூண்டில் ஏற்றப்பட்டு விசாரிக்கப்படவில்லையா?

எம்.ஜி.ஆரையும் - அவரது அண்ணனையும் கூண்டில் ஏற்றினால் மட்டும் என்ன குடிமுழுகிப் போய் விடுமா?

7 குற்றம் சாட்டப்பட்ட எம்.ஜி.ஆரையும், அவரது குடும்பத்தினரையும் விசாரிக்க முடியுமா, முடியாதா என்பதை ஒரு தீர்ப்பாகச் சொல்லுங்கள் என்று

குற்றம் சாட்டியவர்களின் சார்பில் கோரப்பட்டதே! அப்போது எம்.ஜி.ஆரை விசாரிக்க அனுமதி தர முடியாது என்று தீர்ப்பு வழங்க முன் வரவில்லையே இந்த நீதிபதி! என்ன காரணம்?

அப்படித் தீர்ப்பு வழங்கினால் அந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து - உயர்நீதி மன்றத்திற்குப் போவார்கள். அங்கே விசாரிக்க வேண்டும் என்ற தீர்ப்புக் கிடைத்தாலும் கிடைத்துவிடலாம். ஆகவே - யாரும் இந்தப் பிரச்சினையை உயர்நீதிமன்றத்துக்குக் கொண்டு போகாமல் தடுக்கவேண்டும் என்பது போலவே செயல்பட்டாரே நீதிபதி, அது ஏன்?

8 எம்.ஜி.ஆரையும், சக்கரபாணி வகையறாக்களையும் விசாரிக்க முடியுமா, முடியாதா என்பதைப் பற்றி தீர்ப்பாக எதையும் சொல்லி விடாமல் மௌனம் சாதித்த நீதிபதி ராமபிரசாத் ராவ், திடீரென்று விசாரணை முடிந்தது, அறிக்கையை தாக்கல் செய்யப் போகிறேன் என்று அறிவித்தாரே! அது ஏன்?

9 நீதிபதி ராமபிரசாத் ராவ் இப்படி அறிவித்தவுடன் குற்றம் சாட்டியவர்களின் வக்கீல்கள் உயர்நீதிமன்றத்துக்குப் போனார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிப்பதா, இல்லையா என்கிற முடிவு அறிவிக்கப்படாத சூழ்நிலையில் ராமபிரசாத் ராவ் அவசரம் அவசரமாக அறிக்கையை வெளியிடக்கூடாது. அது ஒருதலைப் பட்சமான தீர்ப்பாக ஆகிவிடும். அதுவரையிலே ஒரு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்று ரிட் தாக்கல் செய்தார்கள்.

உயர்நீதிமன்றம் நீதிபதி ராமபிரசாத் ராவ் அறிக்கையை தாக்கல் செய்யக்கூடாது என்று இடைக்காலத் தடை விதித்தது.

அந்த இடைக்காலத் தடை இந்த மாதம் 15-ஆம் தேதி நீதிபதி ராமானுஜத்தால் உயர்நீதி மன்றத்தில் நீக்கப்பட்டது.

நீதிபதி ராமானுஜம் இடைக்காலத் தடையை நீக்கி தீர்ப்பு அளித்த ஒரு மணி நேரத்தில் -

சட்டசபையில் ராமபிரசாத் ராவ் அறிக்கை தாக்கல் ஆகி விட்டதே, அது எப்படி முடியும்? அப்படி தாக்கல் செய்தது முறையான காரியம்தானா? சட்டப்பூர்வமானதுதானா?

10 உயர்நீதிமன்றம் தடை விதித்திருந்த காலத்தில் தானே நீதிபதி ராமபிரசாத் ராவ் தனது அறிக்கையை நானூறு பக்கங்களுக்கு மேல் எழுதினார்? தடை விதிக்கப்பட்டிருந்த காலத்தில் இப்படி ஒரு நீதிபதி - தடை நீங்குவதற்கு முன்பே - தடை விதிக்கப்பட்ட விஷயம் குறித்து நானூறு பக்க அறிக்கை தயார் செய்தது நியாயமான காரியமா?

11 தடை நீங்கிய பின்னர்தானே ராமபிரசாத் ராவ் தனது அறிக்கையையே எழுத வேண்டும். ஆனால் நீதிபதி ராமபிரசாத் ராவோ - கோர்ட் தடையைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு உன் தீர்ப்பைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. நான் எனக்கு கொடுத்த வேலையை முடித்து தீருவேன் என்ற ரீதியில் 400 பக்க அறிக்கையை எழுதிக் கொடுத்து விட்டாரே, அது ஒரு நீதிபதிக்கு அழகா?

12 தடை நீக்கப்பட்டது என்ற செய்தி கேள்விப்பட்ட ஒரு மணி நேரத்தில் சட்டசபையிலே அறிக்கையை தாக்கல் செய்யும் அளவிற்கு - அரசோடு ஒத்துழைக்க வேண்டிய அவசியம் நீதிபதி ராமபிரசாத் ராவுக்கு ஏற்பட்டதே, அது எதனால்?

13 ஒரு நீதிபதி தனது அறிக்கையைத் தாக்கல் செய்த ஒரு மணி நேரத்தில் அது ஏற்கப்பட்டதாக சட்டசபையில் வைக்கப்பட்டதற்கு ஒரு முன்னுதாரணம் காட்ட முடியுமா? பால் கமிஷன் அறிக்கைக்கு இப்படி அவசரம் காட்டப்படவில்லையே, என்ன காரணம்?

இந்த அறிக்கை அப்படி வைக்கப்பட்டது என்றால் - அதற்குக் காரணம்,

நீதிபதி ராமபிரசாத் ராவ் - ஐகோர்ட் தடை அமலில் இருந்த ஏழு மாத காலத்தில் தடையை மீறி அறிக்கையை தயார் செய்திருக்கிறார் என்பதுதானே?

14 நீதி விசாரணை நடத்திக் கொண்டு இருக்கும்போதே - அரசாங்கத்தாரால் தரப்பட்ட இன்னொரு பதவியையும் நீதிபதி ஏற்றுக் கொண்டாரே, அது நீதியின் மேல் சந்தேகத்தை உண்டுபண்ணவல்லது ஆகாதோ?

இப்படி தி.மு.க.வினர் சார்பில் எழுப்பப்படும் கேள்விகளையும், குற்றச்சாட்டுகளையும் பரிசீலித்துப் பதில் சொல்லிவிட்டு -

இந்த நீதி விசாரணை பற்றியும் நீதிபதி பற்றியும் நீங்கள் பேசலாமா?

- என்று குமுதம் போன்ற பத்திரிகைகள் தி.மு.க.வினருக்கு புத்திமதி சொல்ல முன்வந்தால், அது மிகமிக நியாயம் ஆனதாகவும் - நடுநிலையோடு சொல்லப்படுவதாகவும் கருதப்பட இடம் உண்டு!

ஆனால் நீதிபதி பாலுக்கு சட்டமே தெரியாது என்று சட்டசபையிலேயே மந்திரிகள் அறிக்கை படித்தாலும் நாங்கள் எல்லாம் எங்கள் பேனாவைத் திறக்கமாட்டோம்!

தி.மு.க. விஷயம் என்றால் உடனே பேனாவைத் திறந்து விடுவோம். வண்டி வண்டியாக புத்திமதிகளையும், கண்டனங்களையும், நையாண்டிகளையும் அள்ளி விடுவோம்

-என்கிறார்கள் நம்மவூர் பத்திரிகா தர்மர்கள்!

இவ்வாறு விகடனுக்கும் குமுதத்திற்கும், வினாக்களை தொடுத்து விளக்கம் தருகிறது எதிரொலி ஏடு!

உடன்பிறப்பே, நீ படிக்க மட்டுமல்ல! ஊரெல்லாம் இதனைப் பரப்பிடவும் வேண்டுமென்பதற்காகவே இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு. க.

26-03-1984

1210. காஷ்மீர் கவர்னர் மாற்றம் ஏன்?

உடன்பிறப்பே,

இன்னமும் பழைய கால சாம்ராஜ்ய பந்தாக்களின்படி - மிக ஆடம்பரமும் - அதிகச் செலவினமுங் கொண்ட கவர்னர் பதவி தேவையில்லை என்பது கழகத்தின் கருத்து! இந்தக் கருத்தை 1974-ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில் கழக அரசு கொண்டு வந்து நிறைவேற்றிய மாநில சுயாட்சி தீர்மானத்திலும் வலியுறுத்தியிருக்கிறோம்.

இந்தக் கவர்னர் பதவிகளைப் பற்றி ஆச்சார்யா கிருபளானி குறிப்பிட்ட வாசகங்கள் கோடிட்டு வைக்கப்பட வேண்டியவை.

இந்த சுயராஜ் கவர்னர்கள் தங்களது பிரிட்டிஷ் சாம்ராஜ்ய முன்னோர்கள் வசித்த அதே அரண்மனைகளிலேயே வாழ்கின்றனர். மக்கள் தொகை நெருக்கம் மிகுந்த நகரங்களில் அநேகமாக இந்த அரண்மனைகள் கால் மைலுக்கு மேல் பரந்து கிடக்கின்றன. சுயராஜ்யம் கிட்டினால் இந்த அரண்மனைகள், ஏழை மக்களுக்கு உதவும் மருத்துவமனைகளாக மாற்றியமைக்கப்படும் என்று மகாத்மா காந்தி கூறினார். ஆனால் அவைகளோ, இன்று கிழடு தட்டிப் போன - களைத்துப் போன அரசியல்வாதிகளுக்கும், தேர்தலில் புறக்கணிக்கப்பட்ட அரசியல்வாதிகளுக்கும் பயன்படும் ஓய்வு மடங்களாக இருக்கின்றன. தங்களுக்குக் கவர்னர் பதவி வழங்கிய மத்திய தலைவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிற கனவான்களாகவும், கட்சிக்காரர்களாகவும் அவர்கள் இருக்கிற காரணத்தால் இயற்கையாகவே இந்த சுயராஜ் கவர்னர்கள் தங்களை இந்திய யூனியனின் ஒரு பகுதிக்கான அரசியல் அமைப்புச் சட்டத் தலைவர்கள் என்பதை மறந்துவிட்டுத் தாங்கள் மத்திய அரசின் ஏஜண்டுகள் எனக் கருதிக் கொள்கிறார்கள். மாநிலத்து நலனும் நாட்டின் நலனும் என்பது காங்கிரஸ் கட்சியின் நலன்தான் எனக் கருதிச் செயல்படுகிறார்கள்.

கிருபளானி சுட்டிக்காட்டிய காந்தியடிகளின் கருத்தின் அடிப்படையில் கழக ஆட்சிக் காலத்தில் கவர்னர் மாளிகையைப் பொது நலனுக்கென மாற்றி அமைக்க வேண்டுமென்றும், கவர்னர் அவரது தேவைக்கு ஏற்ப வேறு ஒரு வீட்டில் வசிக்க வேண்டுமென்றும் முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் மத்திய அரசு அதற்கு இணங்காமல், கவர்னர் மாளிகையை மாற்ற வேண்டாம் என்று கழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது.

எல்லா மாநிலங்களிலும் இந்த ஆடம்பர மாளிகைகளில் அமர்ந்து மத்திய அரசின் ஏஜண்டுகளாகப் பணிபுரியும் இந்த கவர்னர்கள், பெரும்பாலான சமயங்களில் ஜனநாயகத்திற்கு விரோதமாகச் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு.

மேற்கு வங்கம், கேரள மாநிலம் தொடங்கி, இப்போது அண்மையில் புதுவையில் பெரும்பான்மை பலம் தி.மு.க.வுக்கு ஆதரவாக இருந்தும், சட்டமன்றத்தைக் கலைத்தது வரையில் எத்தனையோ நிகழ்ச்சிகளை அடுக்கிக் காட்ட முடியும்.

எமர்ஜன்சியை எதிர்த்து நின்ற ஒரே காரணத்திற்காக 1976 ஜனவரியில் கழக ஆட்சி கலைக்கப்பட்ட போது, கவர்னர் கே.கே. ஷா எப்படிச் செயல்பட்டார் என்பது நாடறிந்த உண்மை!

காலையிலே, காந்தியடிகள் விழாவிலே தமிழகக் கழக அரசு மகாத்மாவின் பாதையிலே நடைபோடுகிற அரசு என்று புகழ்ந்துரைத்த கவர்னர் கே.கே.ஷா அவர்கள், அன்று மாலையிலேயே கழக ஆட்சி ஊழல் ஆட்சி என்று மத்திய அரசு தயாரித்த அறிக்கையில் பின்னால் டில்லிக்குச் சென்று கையெழுத்திட்டு ஆட்சிக்கலைப்பு நடத்துகிறார் என்றால் என்ன பொருள்?

பாவம்! அவருக்கே கூடத் தெரியாமல் மத்திய அரசு எனும் எஜமானின் உத்தரவு அவர் தலைக்கு மேலே தொங்க விடப்பட்டு, அவரும் அதற்கு உடந்தையாக இருந்து தனது ஏஜண்டுப் பணியை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது என்பதுதானே தெளிவான உண்மை! “The ministers shall hold office during the pleasure of the

Governor" என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் விதி செய்யப்பட்டுள்ளது.

அதாவது கவர்னருக்குத் திருப்தி இருக்கும் வரையில் அமைச்சர்கள் பதவியில் இருப்பார்கள் என்பதாகும். எனவே, கவர்னர் நினைத்தால் எந்த அமைச்சரவையையும் கலைத்து விடலாம், திருப்தி என்பதற்கும் அதிருப்தி என்பதற்கும் கவர்னர் அவர்களின் விருப்பு வெறுப்புத்தானே அளவுகோல்!

அரசியல் நிர்ணய சபையில் இந்தப் பிரிவு நிறைவேறும்போது இதனை எதிர்த்து காயிதேமில்லத் அவர்கள் ஒரு திருத்தம் கொண்டு வந்தார். கவர்னருக்குத் திருப்தி என்ற வாசகத்திற்குப் பதிலாக - சட்டமன்றத்தின் நம்பிக்கை இருக்கும் வரை என்பதுதான் அந்தத் திருத்தம்! ஆனால் அந்தத் திருத்தம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

கவர்னர் பதவிகளே தேவையில்லை - இது நமது அழுத்தந் திருத்தமான கருத்து! ஆனால் அதற்கிடையில் அந்தப் பதவிகள் இருக்கும் வரையில், அவற்றை டெல்லியில் இருக்கும் பேரரசு முழுக்க முழுக்க தனது கட்சி ஆதிக்க நலனுக்கே பயன்படுத்துகிறது என்பதையும், தன்னுடன் கருத்து வேறுபாடு கொண்ட மாநில அரசுகளைப் பழி வாங்கும் கருவிகளாகச் சுழற்றிட முனைகிறது என்பதையும் சுட்டிக்காட்டிக் கண்டிக்காமல் இருக்க முடியாது!

காஷ்மீர் மாநில அரசின் முதல்வர் ஷேக் அப்துல்லா அவர்களின் ஆட்சிக்குத் தொடர்ந்து தொல்லை கொடுத்து வரும் மத்திய அரசு, திடீரென ஒரு மிரட்டல் கணையாக கவர்னர் பி.கே. நேருவை மாற்றிவிட்டு, புதிய கவர்னராக ஜக்மோகனை நியமித்திருக்கிறது.

எல்லாக் கவர்னர்களையும் போல டெல்லியின் எடுபிடியாக இருக்க பி.கே. நேரு இணங்காமல் - காஷ்மீரில் அப்துல்லா ஆட்சியை கவிழ்க்கவோ அல்லது கலைக்கவோ அவர் உடன்பாடு தெரிவிக்கவில்லை! அதனால் அவருக்கு இந்தத் தண்டனை!

புதிய கவர்னர் ஜக்மோகன், காஷ்மீரில் டெல்லியின் விருப்பப்படி ஆடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது!

பஞ்சாப், அசாம் என்று தேன்கூடுகளைக் கலைத்து விட்டு நாட்டை அவதிக்குள்ளாக்கியிருக்கும் மத்திய அரசு, அடுத்து காஷ்மீரிலும் தேன்கூட்டைத் தட்டிவிட்டு வேடிக்கை பார்க்கத் துடிக்கிறது.

இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அறைகூவல் விடுவது போலவே மத்திய அரசின் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

அதன் ஒரு கட்டமே இந்தக் கவர்னர்கள் திடீர் மாற்றம்!

அன்புள்ள,

மு. க.

29-03-1984

1211. பஞ்சாப் - பற்றியெரிகிறது!

உடன்பிறப்பே,

பஞ்சாப் பற்றியெரிகிறது! பாரதிய ஜனதா கட்சித் தலைவர்களில் ஒருவரான கன்னாவும், அவரது பாதுகாவலரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். கன்னாவின் இறுதி ஊர்வலத்தில் வன்முறைத் தலைதூக்கியது. துப்பாக்கிப் பிரயோகத்திலும், வன்முறைச் செயலிலும் இரண்டு போலீசார் உட்பட பத்து பேர் மாண்டனர் என்றும், பலர் காயமடைந்தனர் என்றும் செய்திகள்!

மாநிலங்களவை இந்திரா காங்கிரஸ் உறுப்பினரும், பஞ்சாபி மொழி இலக்கிய அறிஞருமான திவாரியும் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். தொடர்ந்து கொலைகள்! வன்முறைகள்!

பஞ்சாப் மாநில முழுதும் கலவரப் பகுதி என அறிவிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தின் அதிகாரத்தின் கீழ் சட்டம், ஒழுங்கு, அமைதியை நிலைநாட்டும் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டுள்ளது.

சுமார் பதினைந்து ஆண்டு காலமாகப் புகைந்து கொண்டிருந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் மத்திய அரசு அக்கறை காட்டாத காரணத்தால் ஏற்பட்டுள்ள விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் இவை!

1970-ஆம் ஆண்டிலேயே பஞ்சாப்பின் தலைநகர் பிரச்சினை எழுந்தபோது - சண்டிகார், பஞ்சாப்பின் தலைநகராக இருப்பதென்றும், அரியானாவுக்குப் புதிய தலைநகர் உருவாக்கப் பத்து கோடி ரூபாய் வழங்கப்படுமென்றும் பிரதமர் அவார்ட் என்ற பெயரில் இந்திரா காந்தி அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் அந்த அறிவிப்பு செயலாக்கம் பெறவில்லை. இன்று பஞ்சாப் எரிவதற்கு அதுவும் ஒரு காரணம்!

சீக்கியர்களின் தலைமைக்கு எதிராகப் போட்டித் தலைமையை சீக்கியர்களுக்குள்ளாகவே உருவாக்குவதில் மத்திய அரசு மிகுந்த சிரமம் எடுத்துக் கொண்டது! தங்கள் கைப்பாவையாக

சீக்கியத் தலைவர் ஒருவரை அரங்கேற்றினார்கள்! ஆனால் அதுவே இன்றைக்கு அவர்களுக்குப் பெருந்தலைவலியாக மாறிவிட்டிருக்கிறது! பிரச்சினைகளைத் தீர்ப்பதில் காட்டியிருக்க வேண்டிய அக்கறையை - சீக்கியர்களைப் பிளவுபடுத்துவதில் காட்டி, எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றிய குற்றத்திற்கு மத்திய அரசுதான் பொறுப்பாளி!

என்றைக்கோ பேசி முடித்திருக்க வேண்டிய பிரச்சினைகள், ராஜதந்திரம் என்ற பெயரால் சிக்கலாக்கப்பட்டு விட்டன!

பஞ்சாப் சட்டசபையைக் கலைக்காமல், அமைச்சரவையை மட்டும் கலைத்து குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனப்படுத்தினர்!

இந்தச் செயல் நோய்க்கு மருந்தாக அமையவில்லை! நோயை அதிகப்படுத்தவே உதவிற்று!

சில நேரங்களில் அரசாங்கத்தின் வறட்டுக் கௌரவமும், முரட்டுப் பிடிவாதமும் நிலைமையைச் சீர்குலைத்து விடுகிறது என்பதற்கு ஏப்ரல் மூன்றாம் நாள் பாராளுமன்ற நிகழ்ச்சியொன்றே போதுமானது!

இந்திரா காங்கிரசைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் திவாரி கொலை செய்யப்பட்டது குறித்து இரங்கல் தெரிவிப்பது மட்டும் கூடாது. பாராளுமன்ற நிகழ்ச்சியை ஒருநாளைக்கு ஒத்தி வைக்க வேண்டுமென எதிர்க்கட்சியினர் கோரியிருக்கிறார்கள்!

அந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டால் என்ன விபரீதம் ஏற்பட்டுவிடும்! ராஜ்ய சபா உறுப்பினர் திவாரி - அவருக்காக லோக் சபா ஒத்தி வைக்கப்படக்கூடாது என்றால், லோக் சபா உறுப்பினரான சஞ்சய் காந்தி இறந்த போது ராஜ்ய சபா ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறதே என்ற நியாயமான கேள்வி எழத்தானே செய்யும்!

அதிலும் திவாரியின் மரணம் - ஒரு அசாதாரணமான நிகழ்ச்சி! திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட படுகொலை!

திவாரி, இந்திரா காங்கிரஸ்காரராக இருந்தாலும்கூட - எதிர்க்கட்சியினர் கேட்கிறார்களே என்பதற்காக, அந்தக் கோரிக்கையைப் புறக்கணிப்பது அரசாங்கத்தின் முரட்டுப் பிடிவாதத்திற்கு ஒரு சான்று!

அதன் விளைவு என்னவாயிற்று? பாராளுமன்றத்தில் வரலாறு காணாத அமளி என்று ஏடுகள் செய்திகளை வெளியிடுகின்றன! போட்டிப் பாராளுமன்றமே நடைபெற்றிருக்கிறது!

அகில இந்திய சீக்கிய மாணவர் ஐக்கிய அமைப்புக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை அகற்ற மத்திய அரசு முன்வராவிட்டால், பஞ்சாப் மாநிலத்தில் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் தேர்வுகளை நடத்திட அனுமதிக்கப் போவதில்லை! என்று சீக்கியத் தீவிரவாதத் தலைவரான பிந்தரன்வாலே, அமிர்தசரசிலிருந்து ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்!

இந்தப் பிந்தரன்வாலே என்பவர் யார்? இவரைத்தான் டெல்லியில் உள்ள காங்கிரஸ் பெருந்தலைகள் பக்க பலமாக இருந்து அகாலிதளத் தலைமைக்கு எதிராக - தீவிரத் தலைவராக உருவாக்கி வளர்த்து விட்டார்கள்!

அவர்தான் அமிர்தசரஸ் பொற்கோயிலுக்குள்ளிருந்தவாறு இந்த அறிக்கையை விடுக்கிறார்!

புலி வாலைப் பிடித்தவன் - வாலையும் விட முடியாமல், புலி இழுத்திடும் இழுப்புக்குப் போகவும் முடியாமல் தவிப்பான் என்பார்களே! அதுபோன்ற நிலைமையை வலுவில் வரவழைத்துக் கொண்டது மத்திய அரசு!

வாலை விட்டால், புலி கடித்துக் குதறும்! விடா விட்டாலோ காடுமேடுகளுக்கு இழுத்துக்கொண்டு ஓடும்! உடல் ரணமாகும்!

இப்படியொரு சங்கடத்தை மத்திய அரசு, தனது ஏனோதானோ போக்கினால் ஏற்படுத்திக் கொண்டுவிட்டது!

பொதுவாக பஞ்சாப் நிலவரம், இந்திய ஒற்றுமைக்கும் - ஒருமைப்பாட்டுக்கும் விடப்பட்டுள்ள அறைகூவலாகவே அமைந்துள்ளது!

இனிமேலாவது மத்திய அரசு, எரியும் தீயை அணைத்திட முயற்சி மேற்கொள்ளுமா?

அல்லது மேலும் மேலும் எண்ணெய் ஊற்றிக் கொண்டிருக்குமா?

அன்புள்ள,

மு. க.

05-04-1984

1212. விண்வெளியில் விஞ்ஞானப் புதுமை!

உடன்பிறப்பே,

விண்வெளியில் நடத்தப்படும் விஞ்ஞானப் புதுமைகள் கண்டாயா?

கண்டாயா? என்று நான் கேட்பதற்குக் காரணம் இல்லாமல் இல்லை!

செய்திகளாகவே ஏடுகளில் படித்து - புகைப்படங்களாகவே ஏடுகளில் பார்த்து - என்னே அற்புதம் என வியந்து கொண்டிருந்த லட்சக்கணக்கான - ஏன்? கோடிக்கணக்கான மக்கள் விண்வெளியில் நடைபெறும் விஞ்ஞான சாதனைகளைத் தொலைக்காட்சி வாயிலாக நேரிலேயே காண்கிற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் அல்லவா!

அதனால்தான் விஞ்ஞானப் புதுமைகளைக் கண்டாயா என்று களிப்பு சிந்தக் கேட்கிறேன்!

சென்னிமலையில் படிக்கட்டுகளில் மாட்டுவண்டி ஏறிற்று என்பதைத்தானே அதிசயமாகப் பார்த்து - ஆச்சரியத்தில் மூழ்கி - அதற்கு ஆண்டவன் சக்தியைத் தேவையில்லாமல் இழுத்து விளம்பரங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் இங்கே!

சென்னிமலை மாட்டு வண்டியும் - சிலுவைக் குழந்தையும் - ஆரூட அருள்வாக்கும் - மக்களைப் பழைய காலத்திற்கு இழுத்துச் செல்லும் முயற்சியிலே முனைந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதுதான் சோயுஸ் விண்கலம், சோவியத் பூமியிலேயிருந்து வானோக்கிக் கிளம்புகிறது! இந்திய சோவியத் நட்புறவின் சின்னமாக ராகேஷ் சர்மா என்ற இளைஞர் அந்த விண்கலத்தில் சோவியத் வீரர்களுடன் பயணம் செய்கிறார்! சுமார் நூற்று எழுபது மைல் உயரத்தில் மணிக்கு சுமார் பதினேழாயிரம் மைல் வேகத்தில் அந்த விண்வெளிக் கலம் பூமியைச் சுற்றி வருகிறது.

இதற்கு முன்பே சல்யூட்-7 என்ற சோவியத் விண்வெளிக்கலம் 1982 ஏப்ரல் 19-ஆம் நாள் முதல் விண்வெளியில் பயணம் நடத்தி ஆய்வுகளைச் செய்து கொண்டிருக்கிறது! முதலில் சோவியத் வீரர்கள் மூன்று பேர் அந்தக் கலத்தில் நூற்று ஐம்பது நாட்கள் தங்கி ஆய்வு நடத்தியிருக்கின்றனர். அவர்கள் திரும்பி வந்த பிறகு வேறு சில சோவியத் வீரர் குழுக்கள் அந்த விண்வெளிக் கலத்திற்குச் சென்று ஆய்வுகளை நடத்தித் திரும்பியிருக்கின்றனர்! இது ஏதோ சென்னையிலிருந்து சேலத்துக்குச் சென்று விருந்தினராக நான்கு நாட்கள் தங்கி விட்டு வருவது போல இருக்கிறதல்லவா?

மறந்துவிடாதே! விண்வெளியில்! நூற்று ஐம்பது மைல்களுக்கு மேல்! இயற்கையின் எல்லாவித மாறுபட்ட சூழ்நிலைகளுக்கிடையில்!

இப்போதும் சிலர் கூறக்கூடும்! நாரத முனிவர் எந்தவிதமான விண்வெளி உடையும் இல்லாமல் - திறந்தமேனியுடன் - ஒரு பஞ்சகச்சம், தம்புராவுடன் ஆகாயத்தில் திரியவில்லையா என்று!

சல்யூட்-7 விண்கலத்தில் சோவியத்தைச் சேர்ந்த வேறு ஒரு குழுவினர் தங்கி ஆய்வு நடத்தி வருகிறார்கள்.

அவர்களைச் சந்திக்கவும் - விண்வெளி ஆராய்ச்சியை விரிவுபடுத்தவும் - அந்த சல்யூட்-7 விண்கலத்துடன், சோயுஸ் விண்கலம் இணைக்கப்பட்டது!

விண்கலங்களை இணைப்பது - பிரிப்பது - அந்தக் கலத்தில் உள்ளவர்களுக்கு ஆணை பிறப்பிப்பது - அனைத்தையும் பூமியில் இருந்தே இயக்குகிறார்கள் விஞ்ஞானிகள்!

இரண்டு விண்வெளிக் கலங்களும் இணைந்து, சோயுஸ் கலத்திலிருந்து சல்யூட்-7 கலத்திற்குள் வீரர்கள் நுழைந்து சென்ற அந்தக் காட்சி, அடடா! கண்கொள்ளாக் காட்சி!

இந்திய வீரர் ராகேஷ் சர்மாவை வரவேற்று, சல்யூட்-7 விண்கலத்திலிருந்த சோவியத் வீரர் முத்தமிட்ட நிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் கண்டபோது உள்ளத்தைச் சிலிர்க்கச் செய்தது!

அந்தக் காட்சி, இந்திய சோவியத் உறவை மட்டும் குறிக்கவில்லை - ஆபத்துக்களைத் தூசாக மதித்து விஞ்ஞானப்

புதுமை நிகழ்த்தும் வீரர்களின் இதயத்தில் பீறிட்டுக் கிளம்பும் பாச உணர்வையும் வெளிப்படுத்துவதாக இருந்தது!

வானில் பல விண்வெளிக்கலங்கள் பறக்க விடப்பட்டிருக் கின்றன!

இந்திய வீரர் ஒருவர் முதன்முதலாகப் பயணம் நடத்தும் விண்வெளிக்கலம் என்பதால் நமக்கு ஒரு புது உற்சாகமே ஏற்படுகிறதல்லவா!

விஞ்ஞான யுகத்தில் நமது நாடும் - மக்களும் - மேலும் முன்னேற வேண்டும்!

அதற்கான முயற்சிகள் தொடர வேண்டும்!

அந்த முயற்சிகளுக்குத் துணை நிற்கும் சோவியத் போன்ற நாடுகளுக்கு நமது வாழ்த்துகள்!

நமது நாட்டின் இளைய தலைமுறை இந்த விஞ்ஞானப் புதுமைகளைக் கற்றறிந்து - பத்தாம்பசலிக் கொள்கைகளைப் புறம்தள்ளி புதிய சமுதாயம் படைத்திடக் கிளர்ந்தெழல் வேண்டும்!

அந்தப் புதிய எழுச்சிக்கு வழிகாண்பதும் நமது பணியாக இருந்திட வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

06-04-1984

1213. ஒரு நிருபர் தாக்கப்படுகிறார்!

உடன்பிறப்பே,

எதிர்க்கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சி அலுவலகங்கள், எதிர்க்கட்சி ஏடுகள் - இவை மட்டுமன்றி வேறு சில முக்கியமானவர்களின் தொலைபேசிகளும் போலீஸ் துறையினால் டேப் செய்யப்பட்டு அவ்வப்போது மேலிடத்துக்கு அறிவிக்கப்படுகிறது என்பது உனக்குத் தெரியும்.

ஆனால் இந்த உண்மை, பாவம் - அந்த அப்பாவி நிருபருக்குத் தெரியாது போலும்! மிகப் பிரபலமான ஆங்கில தினசரியொன்றின் நிருபர் அவர்!

அவர் கடந்த செவ்வாய்க்கிழமை காலை என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

என்ன மிஸ்டர் ..... அவர்களே! ..... என்ன விஷயம்?

ஒரு விஷயம் கேள்விப்பட்டேன் சார்! அது உண்மைதானா என்று தெரிந்து கொள்ள உங்களுடன் தொடர்பு கொண்டேன்!

என்ன கேள்விப்பட்டீர்கள்?

ராம்பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை, முறைகேடாக வெளியிடப்பட்டது என்றும் - முழுமையான விசாரணை நடைபெறவில்லையென்றும் - குற்றம் சாட்டப்பட்டவர்கள் விசாரிக்கப்படாமலேயே அறிக்கை தயாரித்தது தவறு என்றும் குறிப்பிட்டு அந்த அறிக்கையைச் செயல்திறன் அற்றதாக ஆக்கிட வேண்டுமென்று வழக்கு தொடரப் போவதாகக் கேள்விப்பட்டேன். அதைப் பற்றி ஏதாவது சொல்கிறீர்களா?

எங்கே கேள்விப்பட்டீர்கள்? யார் சொன்னது?

பொதுவாக கேள்விப்பட்டேன். ஆற்காடு வீராசாமியிடம் கேட்டேன்!

அவர் என்ன சொன்னார்?

தலைவரிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்னார்! அதனால்தான் உங்களிடம் கேட்கிறேன்!

அந்த அறிக்கையின் சாராம்சம் என்ற பெயரில் நாலைந்து தாள்களை மட்டும்தானே நாவலர் அவர்கள் பேரவையில் படித்திருக்கிறார். இன்னும் சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்களுக்குக் கூட முழு அறிக்கையும் தரப்படவில்லையே! முழு அறிக்கையும் கிடைத்தால்தானே இன்னும் பல தகவல்களைச் சேகரிக்க முடியும்! நீதிமன்றம் செல்வதற்கும் ஏதுவாக இருக்கும்!

ஆமாம்! ஆமாம்! இப்போது அறிக்கையின் ஒரு பிரதி மட்டும் அசெம்பிளி லைப்ரரியில் வைத்திருக்கிறார்கள்!

அறிக்கையைப் புத்தகமாக அச்சிடுவதற்குள்ளாகவே அவ்வளவு அவசரப்பட்டு, அறிக்கையின் சில பகுதிகளை மட்டும் சுருக்கிப் படித்தது - எந்த அறிக்கையிலும் காட்டப்படாத அவசரம் இதில் காட்டப்பட்டது - மற்றும் ராம்பிரசாத் ராவ் அவர்கள் அரசின் செல்வாக்கிற்குக் கட்டுப்பட்டது போன்ற விஷயங்களின் அடிப்படையில் வழக்குப் போடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

சரி சார்! அதற்குத்தான் உங்களோடு தொடர்பு கொண்டேன் - நீங்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி!

உடன்பிறப்பே, நிருபரும், நானும் தொலைபேசியில் நிகழ்த்திய உரையாடலில் இந்தக் கருத்துக்களைத் தவிர வேறு எதுவும் விவாதிக்கப்படவில்லை.

செய்திகள் ஏதாவது கிடைக்காதா என்று சிட்டுக்குருவிகள் போல பறந்து கொண்டிருப்பதே நிருபர்களின் வேலை! அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கும் ஒரு நிருபர், தனது கடமையை ஆற்றுவதற்காக என்னிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டார்!

செவ்வாய்க்கிழமை காலையில் என்னுடன் தொலைபேசியில் பேசுகிறார்!

புதன்கிழமை காலை, அவர் நிருபராகப் பணியாற்றும் ஆங்கிலப் பத்திரிகையில் அவர் என்னிடம் சேகரித்த செய்தி வெளியிடப்படுகிறது!

புதன்கிழமை மாலையில் எனக்குச் செய்தி வருகிறது. அந்த நிருபர், செவ்வாய்க் கிழமை இரவு அவரது வீட்டில் அடையாளம் தெரியாத இருவரால் தாக்கப்பட்டார் என்று!

அதாவது அவர் சேகரித்த செய்தி, மறுநாள் காலை புதன்கிழமை வெளிவருவதற்கு முன்பே - செவ்வாய்க்கிழமை இரவு தாக்கப்பட்டிருக்கிறார்!

ஆம் - அடையாளம் தெரியாத இருவர்தான் தாக்கியிருக் கிறார்கள்!

அடையாளம் எப்படித் தெரியும்?

ஏவி விடப்பட்ட போலீஸ்காரர்கள், காக்கி உடை அணியாமல் வெற்றுடையில் சென்று குண்டாயிசம் நடத்திவிட்டுத் திரும்பியிருக்கிறார்கள் என்கிறபோது அப்பாவி நிருபரால் அவர்களை எப்படி அடையாளம் கண்டுபிடிக்க முடியும்!

உடன்பிறப்பே, இப்படிப் பழி வாங்கும்போக்கு - இடிஅமீன் ஆட்சியிலே கூட கேள்விப்படாத ஒன்று!

காலையிலே அந்த நிருபர் என்னுடன் தொலைபேசியில் செய்தி சேகரிக்கிற கடமையை ஆற்றுகிறார்!

டேப்பில் பதிவு செய்யப்பட்ட அந்தத் தொலைபேசி உரையாடல் மேலிடத்துப் பார்வைக்குப் போகிறது!

மேலிடம் கட்டளையிடுகிறது; அந்த நிருபருக்கு உடனே புத்தி புகட்டி வருக என்று!

காலையில் பேசியதற்கு மாலையிலேயே புத்தி புகட்டப்படுகிறது!

இதைக் காணும்பொழுது ஜனநாயக நாட்டில்தான் வாழுகிறோமா என்ற சந்தேகம் ஏற்படத்தான் செய்கிறது!

இந்த உண்மையை நான் இக்கடித வாயிலாக வெளியிட்ட காரணத்தால் அந்த நிருபருக்கு இன்னும் பல தொல்லைகள் விளைவிக்கப்படக்கூடும்!

அவ்வாறு விளைவிக்கப்படுமேயானால், அதற்கு இந்த அரசும், காவல் துறையின் முக்கிய அதிகாரிகளும்தான் முழுப் பொறுப்பும் ஏற்க வேண்டியிருக்கும்!

அன்புள்ள,

மு. க.

07-04-1984

1214. புறப்பட்டு வருக! புறப்பாட்டே வருக!

எழுக, தமிழ் இனமே எழுக!
இலங்கைத் தமிழர்களைக் காத்திட எழுக!
ஈழத் தமிழகம் பெற்றுத் தந்திட எழுக!
நம் அக்காள் தங்கையர் மானமும் கற்பும்
நச்சரவுச் சிங்களக் காடையரால் அழிவதோ?
நாமும் தமிழர் எனச் சொல்லி இங்கே அழுவதோ?
தினம் தினம் நடக்குது படுகொலை அங்கே –
இனம் முற்றும் அழிந்தபின் தமிழர்கள் எங்கே?
வினாக்குறி மீசைகள் துடித்திட வருக!
வீராங்கனையர் பட்டாளம் வீறுகொண்டெழுக!
ஆறிடுமோ நம் இதயரணம் ஆறிடுமோ?
ஆர்த்தெழுவீர் இனப் பகையைப் பழிவாங்க!
இருப்பது ஓர் உயிர்தான்; அதனை
இழப்பதும் ஒருமுறைதான்! நமது
இனம் காக்கத் தொலையட்டும் அந்த உயிர்!
மனவலிமை கொண்டோரே கிளர்ந்தெழுக!
சென்னை நகர் வீதியிலே சினம் காக்கும் விழிகளுடன்
அன்னைத்தமிழ்ப்பிள்ளைகளே! கிள்ளைகளே!
அணிவகுப்பீர்!
பொறுத்தது போதும்; பொங்கி எழுக என, உயிரை
வெறுத்தொதுக்கி, வெங்கொடுமை வேரறுப்பீர்!
சிங்கத் தமிழ்க் குடிமக்கள் செத்தொழிய
சிங்கக் கழுதைகட்குச் சிம்மாசனமா?
எங்குற்றான் என் தமிழன்?
என்றுலகம் கேட்பதற்குள்

இங்குற்ற தமிழரெலாம் திரண்டு வந்து
பொங்குற்றே எதிரிகளைப் பொடி செய்வோம்!
மத்தியிலே ஓர் அரசு;
மந்தமாய்ச் செயல்படும் அரசு!
மலைமலையாய்த் தமிழர் பிணம் குவிந்த பின்னும்
மவுனத்தை எதிர்ப்பாகக் காட்டுவதோ இன்னும்?
மறத்தமிழா! மாத்தமிழா!
ஆளவந்தார் செவிட்டுச் செவி கிழிய
ஆர்த்திடுவோம் போர் முரசம்!
அடலேறே! ஆருயிரே! உடன்பிறப்பே!
அண்ணா சாலை - அய்யா சிலையருகே
புண்ணான நெஞ்சின் போர்ச்சங்கம் ஒலிக்கப்
புறப்பட்டு வருக இன்று, புறப்பாட்டே! வருக!

மு. கருணாநிதி

14-04-1984

1215. நட்சத்திர இரவுகளில் மறையுமா?

உடன்பிறப்பே,

எம்.ஜி.ஆர். ஆட்சி ஒரு இருண்டகாலம் என்றால், உடனே ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வருகிறது, அமைச்சர்களுக்கு!

நிர்வாகம் சீர்குலைந்து கிடக்கிறது. இதனைப் பொதுமக்கள் மட்டுமல்ல - நிர்வாகத்தை நடத்திட வேண்டிய அதிகாரிகளே உணர்ந்து மனச்சாட்சிக்குப் பதில் சொல்ல முடியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருக்கின்றனர். சில பெரிய அதிகாரிகள் வேலையிலிருந்து விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போய்விட்டனர்.

ஒரு சில பெரிய அதிகாரிகள் மீது முதலமைச்சர் சட்டப் பேரவையிலேயே அவர்களின் பெயர்களைச் சொல்லிக் குற்றம் சாட்டினார். அவர்கள் மீது வழக்கும் தொடுத்தார்.

அவர்களில் ஓரிரு அதிகாரிகள், எம்.ஜி.ஆர். தொடுத்த வழக்கைத் துணிச்சலோடு எதிர்கொண்டனர்! முதலமைச்சர் மீது "மேலபைட்" Malafide குற்றம் சுமத்தப்படுகிற அளவுக்கு நீதிமன்றத்தில் நிலைமை முற்றுமென்று தெரிந்தவுடன், நடுக்கமெடுத்துப் போய் வேறு வழியின்றி அதிகாரிகள் மீது தொடுத்த பழி தீர்க்கும் படல வழக்கினைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்! இல்லையேல் பதவிக்கே ஆபத்து வந்து பழிப்புக்கு இடமாகி எம்.ஜி.ஆர். சரியான பாடம் பெற்றிருக்க வேண்டும்! தந்திரமாகச் சரணாகதி அடைந்து பதவியைத் தக்க வைத்துக் கொண்டார்!

நிர்வாகச் சீர்குலைவுகளுடன் நிற்கவில்லை. "நீதிக்கு தலைவணங்கு" என்பது முதலமைச்சர் நடித்த படத்தின் தலைப்பே தவிர - அந்த வாசகத்திற்கும், இந்த அமைச்சரவைக்கும் எள்முனையளவுத் தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை!

சேலத்தில் முனுசாதி செட்டி என்பவருக்குச் சுரங்க லைசென்ஸ் தருவதில் இந்த அரசாங்கம் நீதிமன்ற உத்தரவைப் பொருட்படுத்தவில்லை என்பதைக் குற்றமாகச் சுட்டிக்காட்டி, அரசுக்கு இரண்டாயிர ரூபாய் உயர்நீதிமன்றத்தில் அபராதம் விதிக்கப்பட்டது.

இதனைச் சட்டப்பேரவையில் நான் சுட்டிக் காட்டியபோது, அந்தத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப் போகிறோம் என்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். முழக்கம் செய்தார்!

முழக்கம், பிறகு - வெறும் முடக்கமாகி விட்டது! அப்பீல் செய்யவில்லை - நீதிமன்றத்தில் அப்பாலஜி கேட்டுக் கொண்டது இந்த அரசாங்கம்!

சில ஆண்டுகளுக்கு முன்பு மருத்துவக் கல்லூரி தேர்வு குறித்த வழக்கு நடைபெற்றபோது, நீதிமன்றத்திற்குக் கொடுக்கப்பட்ட ரிக்கார்டுகளையே அரசு அதிகாரிகள் திருத்தி மோசடி செய்ததாக நீதிபதிகள் குற்றம் சாட்டினார்கள். அதனைச் சட்டசபையில் நான் எடுத்துக் கூறியபோது - அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்று முதல்வர் கூறினார் - எடுக்கவில்லை! எடுக்க முடியாது! எப்படி எடுக்க முடியும்? அப்படி செய்யச் சொன்னவர்களே இவர்கள்தானே!

இதோ! இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு வரலாறு காணாத ஊழல் - கடந்த ஆண்டு, மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வில் நடைபெற்று நூற்றுஐம்பது மாணவர்கள், தங்களுக்கு வேண்டுமென்றே அநீதி இழைக்கப்பட்டதென்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

நீதிமன்றத் தீர்ப்பின்படி, நூறு மாணவர்கள் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் - அதாவது, அந்த மாணவர்களுக்கு தேவைக்கு அதிகமான மார்க்குகள் இருந்தும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல், கொடுக்க வேண்டியதை லட்சக்கணக்கில் கொடுத்தவர்கள் தேவையான மார்க் இல்லாத நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். அந்த அநியாயத்தை அப்பட்டமாகச் சொல்லாமல் - நியாயம் கோரிய மாணவர்கள்

நூறு பேருக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் ஒதுக்கித் தீர வேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

கீழே விழுந்தது உண்மை! ஆனால் மீசையில் மண் ஒட்டவில்லை என்று வீரப்பிரதாபம் பேசுகிறவனைப் போல முதலமைச்சரும், நல்வாழ்வுத்துறை அமைச்சரும் பேசுகிறார்கள்!

நீதிபதிகள், நூறு மாணவர்களைத்தான் சேர்த்துக்கொள்ளச் சொல்லியிருக்கிறார்களே தவிர, முறைகேடு நடந்ததாகக் கூறவில்லை என்கிறார்கள் அமைச்சர்கள்!

கர்ப்பத்தை உடனடியாகக் கலைக்கத்தான் முயற்சி மேற்கொள்ளப்பட்டதே தவிர, அந்தப் பெண்ணின் கன்னித்தன்மை அழிந்து விட்டதாக யாரும் கருதக்கூடாது என்று யாராவது அதிமேதாவி ? வாதம் செய்தால் எப்படியிருக்குமோ அந்தக் கதைதான் இதுவும்!

இப்படியொரு நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு - முதல்வரோ அல்லது சம்பந்தப்பட்ட இலாக்கா அமைச்சரோ ராஜினாமா செய்திருக்க வேண்டும் - இவர்களிடம் அந்த நியாயத்தை எதிர்பார்க்க முடியாது!

இதோ மற்றொரு தீர்ப்பு :- ஈரோட்டில் வீட்டு வசதி வாரிய வீடுகள் ஒதுக்கப்பட்டதில் முறைகேடு! ஊழல்!

விதிகளை மீறி, மனம் போன போக்கில் தான்தோன்றித்தனமாக வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

இப்படி நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது! இதற்குப் பிறகும் அந்தக் குற்றம் புரிந்த இலாகாவின் அமைச்சர் பதவியில் ஒட்டிக்கொண்டுதானிருக்கிறார்!

தலைக்கு மேல் மானம் போன பிறகு சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன?

முத்துதேவன்பட்டி விவகாரத்தில் போர்ஜரி பத்திரம் தயார் செய்து சட்டசபையிலேயே ராஜினாமா சவால் விட்ட அமைச்சர் இன்னமும் பதவியெனும் எலும்புத்துண்டை சுவைத்துக் கொண்டுதானே இருக்கிறார்!

தமிழ் மக்கள் ஏமாளிகளாக இருந்தால் இன்னும் எத்தனையோ விநோதங்கள், விபரீதங்கள் நடக்கத்தான் செய்யும்!

எல்லாமே நட்சத்திர இரவுகளில் மறைந்து விடும் என்று நாடாள்வோர் நம்பிக் கொண்டுதான் இருப்பார்கள். என் செய்வது! நட்சத்திர இரவில் எதுவுமே மறையவில்லை யென்று பத்திரிகைகள் எல்லாம் எழுதுகின்றனவே!

அன்புள்ள,

மு. க.

22-04-1984

1216. நிலையும் நினைப்பும்!

உடன்பிறப்பே,

Dear Mr. Vaikunthavasan,

I have just received your letter of the 22nd August and am horrified to see the enclosures.

The Janata Party Government is going out of its way to be friendly with the present Government of Sri Lanka. I doubt if they will wish to take up the issue the sufferings of the Tamils in Sri Lanka. At the moment all the attention is on our election, but I shall see if it is possible to bring this issue to the notice of the Public on some other way.

Yours sincerely,

INDIRA GANDHI

அன்புள்ள வைகுந்தவாசன் அவர்களுக்கு,

ஆகஸ்டு 22-ஆம் தேதி நீங்கள் எனக்கு எழுதிய கடிதம் கிடைக்கப் பெற்றதோடு அத்துடன் இணைத்துள்ள சம்பவங்கள் குறித்த செய்திகளைக் கண்டு பதறிப் போனேன்.

இங்கு மத்தியில் உள்ள ஜனதா கட்சியின் அரசாங்கம், தடம் மாறிச் சென்றாவது இலங்கை அரசாங்கத்துடன் நட்புறவாக இருந்திட முனைகிறது. இலங்கையில் துன்ப துயரங்களை அனுபவிக்கும் தமிழர்களின் பிரச்சினையை மத்திய ஜனதா அரசு கவனிக்குமா என்று நான் சந்தேகப்படுகிறேன். தேர்தலில் எல்லோருடைய கவனமும் இப்போது ஈர்க்கப்பட்டிருந்தாலும்கூட, என்னைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினையை பொதுமக்கள் கவனத்திற்கு ஏதாவது ஒரு வழியில் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

இந்திரா காந்தி

இப்படியொரு கடிதம் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இல்லாமலிருந்த 1979-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27-ஆம் தேதியன்று லண்டனில் இருந்த வைகுந்தவாசன் என்ற இலங்கைத் தமிழர் தலைவர் ஒருவருக்கு எழுதப்பட்டது.

வைகுந்தவாசன், ஐ.நா. மன்றத்தில் திடீரென தோன்றி இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசி, உலக அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர்.

அவருக்கு இந்திரா அம்மையார் எழுதிய கடிதத்தில் மத்தியில் இருந்த ஜனதா அரசு, தடம் மாறிச் சென்றாவது இலங்கை அரசுடன் நட்புறவு கொண்டிட முனைகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனதா ஆட்சி, மத்தியில் இருந்தபோது, இலங்கையில் தமிழ் இனப் படுகொலை நடைபெறவில்லை! இரண்டாயிரம் தமிழர்கள் கொல்லப்படவில்லை! ஆயிரம் கோடி ரூபாய் தமிழர்களின் சொத்து சூறையாடப்படவில்லை!

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வந்த ஜெயவர்த்தனாவை இந்திய அரசின் அமைச்சர்களும், தமிழக அரசின் அமைச்சர்களும் 1979-ஆம் ஆண்டில் விமான நிலையம் சென்று வரவேற்றனர். அப்படி வரவேற்றதினாலேயே, இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளையும் வரவேற்றதாக நான் குற்றம் சாட்டவில்லை - அவைகள் ஒரு மரியாதை வரவேற்புதான் என்பதை அரசியல் பண்பாடு உணர்ந்தவர்கள் புரிந்து கொண்டேயிருக்கிறார்கள்.

இப்பொழுது நடைபெற்ற - நடைபெறுகிற தமிழ் இனப் படுகொலையோடு ஒப்பிடும் போது 1979லும் சரி, அதற்கு முன்னரும் சரி நடைபெற்ற சம்பவங்கள், இத்துணை பயங்கரமானவை அல்ல! ஆயினும் தமிழ்இன மக்கள் வேதனைத் தீயில் வாடினர்!

அந்தச் சம்பவங்களைத் தொகுத்துக் காட்டியபோதே இந்திரா காந்தி அம்மையார் வெகுண்டெழுந்து அன்றிருந்த மத்திய ஜனதா அரசின் மீது குற்றம் சாட்டினார்.

தவறான வழியில் சென்றுகூட இலங்கை அரசுடன் இந்திய ஜனதா அரசு நட்புறவு கொள்ள முனைகிறது.

இது அன்றைய தினம் இந்திரா காந்தி அவர்களின் குற்றச்சாட்டு!

அதாவது பிரதமராக இல்லாதபோது!

அவர் 1976-இல் பிரதமராக இருந்தபோது எப்படியிருந்தார்?

1976-இல் எமர்ஜன்சியை எதிர்த்தமைக்காகக் கழக ஆட்சியை ஜனவரி 31-ஆம் நாள் கலைத்துவிட்டு பிப்ரவரி 15-ஆம் நாள் சென்னைக் கடற்கரையில் பேசிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், தி.மு.க. ஆட்சியினர், இலங்கைக்கும் இந்தியாவுக்குமுள்ள நல்லுறவுக்கு ஊனம் விளைவிக்கிற அளவுக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கொண்டு சென்றார்கள். எனவே கழக ஆட்சி கலைப்புக்கு அதுவும் ஒரு காரணமாகும் என்ற கருத்தினை வெளியிட்டார்கள்.

1976-ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சி தமிழகத்தில் கலைக்கப்பட்ட போது கூறப்பட்ட காரணங்களில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு, அண்டை நாட்டு உறவுக்கு பங்கம் ஏற்படுத்தியது என்ற ஒரு குற்றச்சாட்டும் இருந்தது.

இவ்வாறு இந்த ஏப்ரல் 21-ஆம் தேதி தமிழ்நாடு தமிழாசிரியர் பேரவை சார்பில் நடைபெற்ற இலங்கை கொடுமை கண்டனக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் பேசியுள்ளதும் குறிப்பிடத்தக்கது!

அதே இந்திரா அம்மையார், 1977-இல் பிரதமர் பதவியை இழந்ததும் - 1979-இல் இலங்கை அரசுடன் இந்தியாவில் உள்ள ஜனதா அரசு நட்புறவு கொள்ளத் தவறான வழியைக் கூடத் தேர்ந்தெடுக்கத் தயங்கவில்லையென்று குற்றம் சாட்டினார்கள்.

இப்போது அதே இந்திரா காந்தி அம்மையார்தான் இந்தியாவின் பிரதமர்!

தி.மு.க. ஆட்சி, தமிழகத்தில் இருந்துகொண்டு சிங்கள அரசுக்கும், இந்திய அரசுக்குமுள்ளச் சீரான நட்புறவைச் சிதைக்கிறது எனக் குற்றம் சாட்டி - அதையும் ஒரு காரணமாகக் கொண்டு கழக ஆட்சியைக் கலைத்ததாகக் கூறிய சொற்கள் சென்னைக் கடற்கரை காற்றில் இன்னமும் மிதந்து கொண்டிருக்கின்றன!

ஜனதா ஆட்சியாளர்கள், இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து கவலைப்படாமல் அதற்கும் மேலாக இலங்கை அரசுடன்

தவறான பாதை சென்றாவது நட்புறவு கொள்ளத் துடிக்கின்றனர் என்று 1979-இல் இந்திரா அம்மையார் கூறியது எழுத்தாக ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது அவரது கையெழுத்திட்ட மடலில்!

ஆனால், உடன்பிறப்பே! இப்போது என்ன நிலைமை?

ஒன்பது மாதங்களுக்கு முன்பு இலங்கையில் இரண்டாயிரம் தமிழர்கள் ஒருவார காலத்தில் பிணமாக்கப்பட்டனர்! ஆம், இனப்படுகொலை!

அந்தக் கொடுமை இன்னமும் தொடர்கிறது!

இந்தியாவைச் சேர்ந்த மீனவர்களையும் சிங்கள ராணுவத்தினர் கடலிலேயே தாக்கி வீசியெறிகின்றனர்!

இப்போது நாம், இந்திரா காந்தி அம்மையார் அவர்களைக் கேட்கும் கேள்வி இதுதான் :-

ஃஃ எவ்வழி சென்றாவது இலங்கை அரசின் நட்புறவை இழக்காமல் இருக்க இன்றுள்ள இந்திரா காங்கிரஸ் அரசு முனைகிறதா - இல்லையா?

ஃஃ அன்று ஜனதா அரசின் மீது இப்படியொரு குற்றம் சுமத்திக் கடிதம் எழுதினீர்களே, அதுபற்றி இப்போது தாங்கள் கூறும் விளக்கம் என்ன?

உடன்பிறப்பே! நிலைகள் மாறும்போது நினைப்புகள் எப்படி மாறுகின்றன பார்த்தாயா?

அன்புள்ள,

மு. க.

23-04-1984

1217. வாணிகப் பரிசிலன் அல்லேன்!

உடன்பிறப்பே,

நீண்ட காலமாயிற்று உனக்கு நான் இலக்கிய மடல்கள் தீட்டி! நெருக்கடி நிலையின் போதுதான் தணிக்கை அதிகாரிகளையும் தாண்டி நான் எழுதிய இலக்கியக் கடிதங்களை நீ புரிந்து கொண்டாய்!

அன்று இந்தியாவிலும் - தமிழகத்திலும் நடைபெற்ற எத்தனையோ எதேச்சாதிகாரக் கொடுமைகளையும், அவற்றை எதிர்த்து ஏறு நடை போட்ட கழகத்தின் உறுதியையும் இலக்கியக் கடிதங்கள் வாயிலாக வெளியிட்டுக் கொண்டிருந்தேன்.

அதையும் மிகத் தாமதமாகத் தெரிந்து கொண்டவர்கள், கருணாநிதி என்ற பெயராலேயே எந்தக் கடிதமோ கட்டுரையோ வரக்கூடாது என்று தணிக்கை இலாகா மூலம் தடைவிதித்தனர்.

அதன் பிறகு கரிகாலன் என்ற பெயரில் முரசொலியில் வினா விடைகள் வெளி வந்தன!

தமிழன் பெருமையை நிலைநாட்ட மாத்திரமல்ல - தமிழன், உரிமை கேட்டுத் தடந்தோள் உயர்த்திய நேரத்திலேயும் இலக்கியம் பயன்பட்டது மிசா சமயத்தில்!

எனவே, இலக்கியங்கள் வாயிலாக நான் மறை பொருளாக வழங்கும் எத்தகைய கடினமான கருத்தையும் புரிந்து கொள்ளக்கூடிய உடன்பிறப்பாக நீ திகழ்கிறாய்!

அந்த அசைக்க முடியாத நம்பிக்கையில்தான், இதோ - இப்போது நீண்ட இடைவெளிக்குப் பிறகு இந்த இலக்கியக் கடிதம்!

படித்துவிட்டு அதனால் ஏற்படும் உணர்வுகளை உன் இதயத்திற்குள்ளேயே போட்டு அழுத்தி விடுக!

இந்தக் கடிதத்துக்குக் கருப்பொருளாக விளங்கும் எனது மதிப்புக்குரியவர், எனது உணர்வினையும், அந்த உணர்வில் உள்ள பாச முதிர்ச்சியையும் அவரது மனச்சாட்சி அளவுக்குப் புரிந்து கொண்டால் போதுமானது!

உடன்பிறப்பே, தகடூரை ஆண்ட அதியமான் நெடுமான்அஞ்சி என்ற மன்னனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாய் அல்லவா? ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்தவன்! வள்ளல் தன்மை படைத்தவன்! ஆமாம், உடன்பிறப்பே - உண்மையிலேயே அவன் கொடை வள்ளல்!

தமிழாய்ந்த நெஞ்சங்களின்பால் தனியன்பும் - மரியாதையும் கொண்டு வாழ்ந்த அந்தத் தகடூரானுக்கே அறைகூவல் விடுத்து தனது தன்மானக் குரலை உயர்த்தினார் ஒரு புலவர்!

நேற்று மேலவைத் தலைவர் தேர்தல் முடிவுற்று பாராட்டுரைகள் வழங்கிய பின்னர் இல்லம் வந்தடைந்த நான், என் எதிரில் மேசையில் கிடந்த புறநானூறு ஏட்டினைக் கையில் எடுத்தேன்!

சில பக்கங்களைப் புரட்டினேன்! ''குன்றுமலையும் பல பின்னொழிய'' என்ற பாடல் என் விழிவலையில் விரால்மீனாகச் சிக்கியது!

படித்தேன்! பாடலில் ஒரு வரி என் நெஞ்சத்தில் உறுத்தியது!

வாணிகப் பரிசிலன் அல்லேன் என்ற அந்தச் சொற்றொடர் என் இதயக் கோட்டையின் கதவை மதயானைகள் முட்டித் தகர்ப்பதுபோல், தகர்ப்பதாக உணர்ந்தேன்!

வாணிகப் பரிசிலன் அல்லேன் என்றால் என்ன பொருள்!

பரிசும் பாராட்டும் பெறுதல் புலவர்க்குரியதெனினும் - அப்படிப் பெறுகிற பரிசினையோ அல்லது விருதையோ, ஏதோ ஒரு வியாபாரியைப் போலவோ - அல்லது ஊதியம் வாங்குபவனைப் போலவோ - பெற்றிடக்கூடிய இயல்பு படைத்தவனல்ல என்று விரிவான பொருள் இதற்குக் கூறப்படுகிறது!

நான், வாணிகப் பரிசிலன் அல்லேன் என்று - அத்துணை ஆத்திரத்துடன் தன்மான உணர்வு பொங்கிடக் கூறியவர் யார்?

பெருஞ்சித்திரனார் என்ற பழந்தமிழ்ப்புலவர்தான் அவ்வாறு சினந்து கூறினார்!

அவரது கடுங்கோபத்திற்கு ஆளானவன்தான் தகடூர்த் தலைவன் அதியமான் நெடுமானஞ்சி!

அப்படி என்னதான் நடந்தது? சித்திரனாரின் சீற்றத்திற்குக் காரணம்தான் யாது?

அதியமானைக் காண அந்தப் புலவர் பெருமான் சென்றார்! அவர் வந்த செய்தி கேட்ட மன்னன் அவரை அழைத்துச் சந்திக்கவுமில்லை - அல்லது அவர் காத்திருந்த இடம் நோக்கிச் சென்று வரவேற்றிடவுமில்லை!

புலவர்க்கு இந்தப் பரிசுகளைக் கொண்டு போய்க் கொடுத்து அவரை அனுப்பி வையுங்கள்! என்று ஆணை பிறப்பித்தான்!

அதியமான் கட்டளைப்படி, பெருஞ்சித்திரனாரிடம் பரிசுகளைக் குவித்து அவரைச் சென்று வருமாறு வழியனுப்ப முயன்றனர் அரண்மனைப் பிரதானியர்!

ஆகா! எத்துணை வளமான பரிசுகள்! என்னே இன்பம்! என்னே இன்பம்! என் மகிழ்ச்சிக்கு அளவேயில்லையென உமது மன்னனிடம் கூறுங்கள்! என்று அந்தப் புலவர் குதித்தாடியிருப்பார் எனக் கற்பனை செய்யத் தோன்றுகிறதல்லவா?

அதுதான் நடக்கவில்லை! அவர் தமிழ் உணர்ந்தவர் மட்டுமல்ல! தன்மான உணர்வும் பெற்றவர்!

யாருக்கு வேண்டும் இந்தப் பரிசு? குன்றும் மலையும் கடந்து நான் இங்கு வந்தது இந்தப் பரிசு ஒன்றையே பெறுவதற்காக என உமது மன்னன் எண்ணிவிட்டானா? அவன் அப்படிக் கருதிவிட்ட காரணத்தினால்தான் - என்னை இங்குக் காத்திட வைத்து, இறுதியில் அவன் நேரில் வராமலே இந்தப் பரிசினை எனக்கு உங்கள் வாயிலாக அனுப்பியிருக்கிறான் போலும்!

தினையளவு கொடுத்தாலும்கூட, என் தகுதியறிந்து அதற்கேற்ற மதிப்பளித்து கொடுத்தால்தான் அதனை ஏற்க முடியும். நான் வாணிகப் பரிசிலன் அல்லேன் என்று உமது வேந்தனிடம் கூறுங்கள்!

என்னைக் காணாமலே ஈந்த இப்பொருளைப் பெற நான் வாணிகப் பரிசிலன் அல்லேன்.

இப்படி முழங்கிவிட்டு, அதியமான் கொடுத்த பரிசுப் பொருளைத் தொடவும் மறுத்துவிட்டார் பெருஞ்சித்திரனார்!

இத்தனைக்கும் அதியமான், தமிழ்ப் புலவர்களிடம் தணியாத அன்பு செலுத்தியவன்!

அவன் கொடுத்த பரிசையேகூட, அந்தப் புலவர் பெருமான் மதியாமல் கொடுத்த பரிசு எனக் கருதி, அதனைப்பெற மறுத்து விடுகிறார்!

பரிசு பெரிதல்ல! அது தினையளவு இருந்தால் கூட அதனை மரியாதையுடன் வழங்கினால் அதுவே மலையளவாகத் தோன்றும்!

மதிப்பு தராமல் - ஏதோ, பிச்சையிடுவதைப் போல மலையளவுப் பரிசைத் தந்தாலும், அது தினையளவுச் சிறப்பு கூட இல்லாத ஒன்றேயாகும்!

என்னதான் மன்னனாக இருந்தாலும், மாளிகையில் இருந்து கொண்டே தன்னைக் காண விரும்பாமல் கொடுத்தனுப்பிய பரிசைப் பெற மறுத்த பெருஞ்சித்திரனார் பாடிய பாடல் இது!

குன்று மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற வென்னயந் தருளி யிதுகொண்
மூங்கனஞ் செல்க தானென வென்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணா தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே.

அதியமான் நெடுமான்அஞ்சிக்கே அஞ்சிடாது - அவனது அலட்சியப்போக்கைக் கண்டித்து, அந்த நேரம் அவரது தேவையை நிறைவு செய்யக்கூடியப் பரிசுப் பொருட் குவியலையும் ஏறெடுத்துப் பார்க்காமல், சாட்டைச் சொற்களால் பாட்டெழுதிய பெருஞ்சித்திரனாரின் அந்தத் தன்மான உணர்வுக்குத் தலைவணங்கி வாழ்த்துச் சொல்ல இதயம் துடிக்கிறதல்லவா?

உடன்பிறப்பே, அருந்தமிழ்ச் சான்றோரை அடக்கத்துடன் மதிக்கக் கற்றுக் கொண்ட என் உணர்வின் வெளிப்பாடே இந்தக் கடிதம்!

வேலியிடப்படாத பாச உணர்வுடனும், அதே நேரத்தில் ஏதோ ஒரு வேதனையுடனும் எழுதினேன் இதனை!

அன்புள்ள,

மு. க.

27-04-1984

1218. வெற்றிமலர் பறித்திட வாராய்!

உடன்பிறப்பே,

களத்தில் நிற்கிறாய் இப்போது! என் கடிதத்தைப் படித்திடக் கூட நேரமிருக்காது உனக்கு!

இருப்பினும் ஓரிரு நிமிடங்கள் - ஓய்வற்ற உன் பணிகளுக் கிடையே என் எழுத்துக்களில் உன் விழிகள் மொய்க்கும் என்ற நம்பிக்கையுடன் எழுதுகிறேன்.

நான்கு தொகுதிகளில் இடைத்தேர்தல் களம் அமைந்துள்ளது.

நமது தோழமைக் கட்சிகளின் தூய்மையான துணையுடன் தோளுயர்த்தி நிற்கும் உன்னையும், தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களையும் வாழ்த்துகிறேன்! வாகை சூடுவீர்கள் என நம்புகிறேன்.

மத்திய மாநில அரசுகளில் வீற்றிருக்கும் இந்திரா காங்கிரசும், அ.தி.மு.க.வும் இணைந்து கூட்டணி அமைத்துக் கொண்டுள்ளன!

தேர்தல் நேரத்தில் இந்த இரு கட்சிகளும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் கயிறு அறுந்த பட்டங்களாகப் பறந்து போய்ச் சிக்கிய இடங்கள் தெரியாமல் போய் விட்டன.

வேலையில்லாத் திண்டாட்டம் - வேல் எனப் பாய்கின்றது. அதுவும் வறுமையென்னும் வெந்தபுண்ணால் நொந்து போய்க் கிடக்கும் மக்கள் கூட்டத்தின் மீது!

விலைவாசிகளோ, ராகேஷ் சர்மாவைவிட எங்களால் உயரத்தில் போக முடியுமென்று போட்டி போட்டவாறு, கீழே இறங்கும் உத்தேசமேயில்லாமல் உயர்கிறது! உயர்கிறது! உயர்ந்துகொண்டே இருக்கிறது!

இந்தியாவின் உணவு உற்பத்தி பதினான்கு கோடி டன் என்றும் - இது கடந்த ஆண்டை விடப் பதினோரு சதவிகிதம் அதிகமென்றும் பறை சாற்றப்படுகிற அதே நேரத்தில் - உற்பத்திப் பெருக்கத்திற்கு ஏற்ற வகையில் வாங்கிப் புசிக்கும் மக்களுக்கு

விலைவாசியைக் கட்டுப்படுத்தப்பட முடியாத முரண்பாடு, படமெடுத்து ஆடிக் கொண்டிருக்கிறது.

வறட்சியாலும், வெள்ளத்தாலும் வளம் கருகியும், உளம் உருகியும் துவண்டு கிடக்கும் தமிழகத்து விவசாயிகளுக்குத் துயர்துடைப்புப் பணிகளை நிறைவேற்றுவதாகக் கூறித் தொகை தொகையாக மூட்டை கட்டிமுடித்து விட்டனர் அ.தி.மு.க.வின் அமைப்பிலிருந்து முகப்பு வரையில் உள்ளோர்! ஏன்? மூலஸ்தானம் உட்பட!

மருத்துவக் கல்லூரி ஊழலில் சரித்திர மகாபுருஷர்களாக மாநிலத்து முதலமைச்சர் எம்.ஜி.ஆரும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அண்டேயும் விளங்குகிறார்கள் என்பதற்கு உயர்நீதிமன்றத் தீர்ப்பே சான்றிதழாகத் திகழ்கிறது.

அதிகார துஷ்பிரயோகம் - தான்தோன்றித்தனம் - வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் அமைச்சர் இராகவானந்தம் நடத்திய முறைகேடு - ஊழல் - இத்தனை புகழுக்குரிய மதிப்புரைகளை ? தொகுத்து உயர்நீதிமன்றம் கண்டனமாக வழங்கியும் கூட அப்பீல் என்ற பெயரால் அட்டைபோல் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கும் அரசியல் அநாகரிகம், நாளும் வளர்கிறது!

அண்ணா வலியுறுத்திய பஸ்கள் தேசியமயக் கொள்கைக்கு சாவுமணி அடித்து - புதைகுழி தோண்டும் அவசரச் சட்டம் என்ற மண்வெட்டி தயாரிக்க, பஸ் முதலாளிகளிடம் மூன்று கோடிக்கு மேல் லஞ்சமாகப் பெற்ற செய்தியை அறிந்து நாடே சிரிக்கிறது!

முதலாளிகள் சவாரி செய்வதற்கு முதுகைக் கொடுத்துவிட்டு - தொழிலாளிகளை வதைக்கச் சவுக்கும், தார் குச்சியும் தயார் செய்கிறவர்கள் இன்றைய ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து கொண்டு அதிகார போதையில் தள்ளாடுகிறார்கள்.

காவல் நிலையங்கள், பெரும்பாலானவை கற்பழிப்புக் குகைகளாகவும், சாவுக்கிடங்குகளாகவும் மாறிவிட்டன!

நீதியை வளைக்க நெறிமுறையற்ற செயல்கள் அரசினரால் அன்றாடம் அரங்கேற்றப்படுகின்றன! அதற்குச் சில ராமபிரசாத்துக்களும் அகப்படுகின்றனர்!

சாராய சாம்ராஜ்யதிபதிகள் கையில்தான் இன்று சட்டத்துறையே தஞ்சம் புகுந்து கொஞ்சி மகிழ்ந்து மஞ்சத்தில் புரள்கிறது லஞ்சமோ லஞ்சம் என்ற டூயட் கீதத்துடன்!

இப்படி எண்ணற்ற இழிதகை லீலா விநோதங்களுடன், எல்லையற்ற பணக்குவியலுடன் விசுவரூபம் எடுத்து நிற்கும் ஆளவந்தாரின் படைபலத்தை மோதித் தகர்த்திட வாய்மையை வாளாகவும், உறுதியைக் கவசமாகவும் கொண்டு தேர்தல் களத்தில் இறங்கியிருக்கும் என் இனிய உடன்பிறப்பே! வெற்றிக்கனிகளை நான்கு தொகுதிகளிலும் பெற்றுத் தந்திடுக!

வெறுங்கையால் முழம் போடச் சொல்கிறாயே என்று நீ கூறுவது என் காதில் விழுகிறது!

உன் கை, வெறுங்கையல்ல! சற்று அகல விரித்தால் ஒவ்வொரு விரலும் உதயக்கதிர்தான்! உள்ளங்கைதான் சூரியன்! உதயசூரியன் சின்னம் காட்ட, வண்ணச் சுவரொட்டி கூடத் தேவையில்லை அல்லவா!

கோடி கோடியாய்க் கொட்டிக்கிடக்கும் பணம், ஆளவந்தார்க்குக் கொடிகளாய், தோரணங்களாய் மாறும்! வானத்தையே மறைக்குமளவுக்கு வண்ணப் பதாகைகள் கட்டுவர்!

எதிர்வீட்டுச் சீமான்பிள்ளை பட்டுடுத்தி, ஜாங்கிரியும், லட்டும் தின்று கொண்டு, விதவிதமான மத்தாப்புகளை கொளுத்தும்போது, தனது குழந்தைக்கு ஏழைப் பெற்றோர் ஒரு டீக்கடையில் மசால் வடையும், ஒரேயொரு பட்டாசு வெடியும் வாங்கித் தந்து பழைய உடையைத் துவைத்துக் கட்டி அழகு பார்ப்பது போலத்தான் - உடன்பிறப்பே, உன் ஆசைக்குக் கழகம் ஏதாவது உதவிட முடியும்!

உன்னைப் போன்ற ஒவ்வொரு உடன்பிறப்பின் உழைப்பையும் நம்பித்தான், கழகம் துணிவுடன் களத்தில் குதித்திருக்கிறது!

வெற்றி என்பது தானாக வந்து நம்மைத் தழுவிடும் தென்றல் அல்ல!

அந்தத் தென்றலிலே அசைந்தாடும் செடியில் உள்ள முள்ளையும் பொருட்படுத்தாமல் நாம் பறித்திட வேண்டிய மலர்!

அந்த மலர் பறித்திட - அதன் மணம் நுகர்ந்திட - தோழமைக் கட்சிச் செயல்வீரர்களுடன் இணைந்து பணியாற்றிடுக! தொடர்ந்து பணியாற்றிடுக! தொய்வின்றிப் பணியாற்றிடுக!

அன்புள்ள,

மு. க.

28-04-1984

1219. கால்மலரில் - கண்மலர் பதித்து வணங்குகிறேன்!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் நடைபெற்று முடிந்துள்ள நான்கு தொகுதிகள் இடைத் தேர்தலில் மத்தியிலும், மாநிலத்திலும் ஆளும்கட்சிகளான இந்திரா காங்கிரஸ், அ.தி.மு.க. இரண்டும் தலா ஒவ்வொரு இடங்களைப் பெற்றுள்ளன. எதிர்க்கட்சிகளின் அணியில் நின்ற கழக வேட்பாளர்கள் இருவர் வெற்றி பெற்றிருக்கின்றனர். இந்த இரு வெற்றிகளுக்கு மட்டுமல்லாது, பொதுவாக நான்கு தொகுதிகளிலும் அயராது உழைத்த கழக உடன்பிறப்புகளுக்கும், தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களுக்கும் நமது அணியின் அன்புக்குரிய தலைவர்களுக்கும், வாக்களித்த பெருமக்களுக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சையில் இந்திரா காங்கிரஸ் ஒரு இடத்தையும், உப்பிலியாபுரத்தில் அ.தி.மு.க. ஒரு இடத்தையும் பெறுவதற்கு எந்த அளவுக்குத் தமிழக அரசின் அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டன என்பதையும், வெளிப்படையாகவே தேர்தல் கமிஷன் விதிமுறைகளும், மரபுகளும் எம்.ஜி.ஆர். அரசாங்கத்தால் எப்படி மீறப்பட்டன என்பதை ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டியும் கூட மத்திய, மாநில அரசுகளின் கைப்பாவையாகிவிட்ட தேர்தல் கமிஷன் வாய்மூடி மௌனியாகவே இருந்துவிட்டது என்பதையும் நாட்டில் உள்ள நடுநிலையாளர்கள் அறிந்தே இருக்கிறார்கள்.

ஐம்பது ஊர்களுக்கு மேல் உப்பிலியாபுரம் தொகுதியில் ஒரு வார காலத்திற்குள் குழாய்க் கிணறுகளும், குடிதண்ணீர்க் குழாய்களும் அமைப்பதற்குத் தலைமைச் செயலகத்திலிருந்து திருச்சி மாவட்ட கலெக்டருக்கு எழுதப்பட்ட கடிதமும், அந்த மாவட்ட கலெக்டர் உடனடியாக அனுப்பிய உத்தரவும் தேர்தல் கமிஷன் அதிகாரிகளிடம் காட்டப்பட்டும் கூட, அவற்றைத் தடுத்திட அந்த அதிகாரிகள் முன்வரவில்லை.

நான் மூன்று நாட்கள் தங்கியிருப்பதற்கு வீடு கொடுத்த வடகரை தம்பி சம்சுதீன் மீது கொலை முயற்சிப் பிரிவின்படி பொய் வழக்கு ஜோடிக்கப்பட்டது என்றால், இந்த அரசின் போலீஸ் தர்பார் எந்த அளவுக்கு உச்சகட்டத்திற்குப் போய்விட்டது என்பது எளிதாக எல்லோருக்கும் புரியவே செய்யும்.

தேர்தல் நாளன்று காலையில் மயிலாடுதுறை நகரச் செயலாளர் செங்குட்டுவனும், மாலையில் தஞ்சை மாவட்டச் செயலாளர் கோ.சி. மணியும் கைது செய்யப்படுகிறார்கள்.

ஆளும்கட்சிகளின் குண்டர்களால் தாக்கப்படுகிறவர்கள் போலீசில் புகார் செய்தால், தாக்கியவர்களை விட்டுவிட்டு தாக்கப்பட்ட நமது அணியினர் மீதே வழக்குத் தொடர்ந்த அநியாயச் செயல்களுக்கு அளவே இல்லை.

பகிரங்கமாக போலீஸ் படையினர் புடைசூழ அமைச்சர்களும், ஆளும்கட்சியினரும் திருட்டு ஓட்டர்களை வேன்களிலும், கார்களிலும் அழைத்து வந்து அவர்களே முன்னின்று அந்தத் திருட்டு ஓட்டுகளைப் பதிவு செய்தனர்.

எனது தேர்தல் பிரச்சார வேன் மீதும், என் மீதும் சோடா புட்டிகளை வீசித் தாக்கவும், தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்கள் மீது குண்டர்கள் தாக்குதல் நடத்தவும் ஒரு சில அமைச்சர்களே முன்னோடித் தளபதிகளாக நின்று செயல்பட்ட காட்சி, ஜனநாயகத்தின் வேரிலேயே சுடுநீரை ஊற்றுவது போல் இருந்தது.

ஆளுக்கு ஒரு இடத்தைப் பெறுவதற்கு ஆளும் கட்சியினர் கோடிக்கணக்கில் பணத்தை வாரியிறைக்க வேண்டியிருந்தது என்பதை அவர்களின் மனச்சாட்சிக்கு முன்னால் நிச்சயமாக மறைக்க முடியாது. அவர்கள் பெற்றுள்ள இந்த வெற்றியே கூட, எவ்வளவு விலை கொடுத்துப் பெற்றது என்பதை அவர்கள் தெளிவாக அறிவார்கள்.

பண பலம், அதிகார பலம், அராஜகம், தேர்தல் விதிமுறைகளுக்கு மாறான காரியங்கள் அனைத்தையும் எதிர்த்து நின்று நமது எதிர்க்கட்சித் தோழமை அணியான முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளர்கள் இரு இடங்களில் பெற்றிருக்கும் வெற்றி, மகத்தான வெற்றியாகும்.

ஜனநாயக விரோதச் செயல்களால் வெற்றியை எப்படியும் நமது அணியிடமிருந்து தட்டிப் பறித்து விட முடியும் என்ற

நம்பிக்கையின் காரணமாக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அண்ணா நகர் தொகுதியிலும், மயிலாடுதுறைத் தொகுதியிலும் பேசும்போது - இந்தத் தேர்தல் எம்.ஜி.ஆருக்கும், கருணாநிதிக்கும் நடக்கும் போட்டி என்று பகிரங்க அறைகூவலே விடுத்தார்!

அவரது அந்த அடக்கமற்ற சவாலுக்கு வாக்காளப் பெருமக்களும், முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தொண்டர்களும் தகுந்த பதிலை அளித்து விட்டனர்.

இந்த இடைத்தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட காலம் முதல், இறுதியாகத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட காலம் வரையில் சில ஏடுகள் எப்படியெல்லாம் விஷமச் செய்திகள் வெளியிட்டன என்பதையும், வானொலி, டெலிவிஷன் நிலையங்கள் எந்த அளவுக்குப் பாரபட்சமாக நடந்துகொண்டன என்பதையும் நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் கொதிக்கிறது!

மயிலாடுதுறைத் தேர்தல் முடிவு குறித்து, வானொலியின் பொய்ச் செய்தி கேட்டு, ஒரு இளைஞன் தீக்குளித்திருக்கிறான் என்றால் எந்த அளவுக்கு இதுபோன்ற செய்தித்துறைகள் பொறுப்பற்றிருக்கின்றன என்பது தெளிவாகிறதல்லவா? ஊர்ஜிதமாகாத செய்திகளை அறிவிப்பதில் வானொலிக்கு அப்படியொரு உற்சாகம்!

அரசின் கடுங்கோபத்தைப் பற்றிக் கவலைப்படாமல் - அஞ்சாமல் - நடுநிலை நின்று செய்தி வெளியிட்ட ஏடுகளும் உண்டு! நமது அணி வெற்றிபெறத் துணை நின்ற ஏடுகளும் உண்டு! அந்த ஏடுகளுக்கெல்லாம் உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

காட்டாற்று வெள்ளத்தைக் கடந்து வந்தது போல் - தடைக்கற்கள் உண்டெனினும், தடந்தோள்கள் உண்டெனச் சிரித்துத் தொண்டாற்றிப் பெருவெற்றியினைக் குவித்திடக் காரணமாக இருந்த அனைவரது கால் மலர்களிலும் என் கண் மலர் பதித்து வணங்குகிறேன்.

அன்புள்ள,

மு. க.

23-05-1984

1220. பெரிய மனிதர்களின் சிறிய வார்த்தைகள்!

உடன்பிறப்பே,

இடைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது மத்தியிலும், தமிழகத்திலும் ஆளுங்கட்சிகளின் அமைச்சர்களும், தலைவர்களும் எந்த அளவுக்கு இறுமாப்புடனும் இழிவாகவும் நமது முற்போக்குக் கூட்டணியினரையும், குறிப்பாக என்னையும் குறித்துப் பேசினார்கள் - அறிக்கைகள் விடுத்தார்கள் என்பனவற்றையெல்லாம் ஒருமுறை நினைத்துப் பார்க்கத்தானே வேண்டியிருக்கிறது!

அரசியலை விட்டு ஓய்வு பெறுவதே கருணாநிதிக்கு நல்லது.

இது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் அறிவுரை! அவரை அரசியலுக்கு - அல்ல - அல்ல - தி.மு.கழகத்துக்கு அழைத்து வந்தது யார் என்று அவரே பேசியும், எழுதியுமுள்ள செய்திகள் தேதிகளுடன் ஆதாரபூர்வமாக இருக்கின்றன! இன்றைக்கு அவர் என்னைப் பார்த்து அரசியலில் இருந்து ஓய்வு பெறுக! என அறிவுரை கூறுகிறார்! அவர் அடக்கமற்ற பேச்சுக்கு மக்கள் அளித்துள்ள பதிலை அவர் தனியாக அமர்ந்து ஓய்வாகச் சிந்தித்துப் பார்ப்பது நல்லதல்லவா?

கருணாநிதி கட்சியைக் கலைத்து விட்டு எம்.ஜி.ஆரிடம் சரணடைந்து அவரது அமைச்சரவையில் ஒரு அமைச்சராக வேண்டுமானால் இடம் பெறலாம்.

ஆன்லுக்கர் புகழ் அமைச்சர் ஒருவர் இப்படியொரு அரிய யோசனையை எனக்கு அளித்துப் பேசினார் தேர்தல் கூட்டங்களில்!

கருணாநிதிக்கு மேல்சபையிலும் மூன்றாவது இடம்தான் கிடைத்தது. அவர் மாவு விற்கப் போனால் காற்று அடிக்கிறது. உப்பு விற்கப் போனால் மழை பொழிகிறது.

இப்படியொரு அமைச்சர், மாவும் விற்காமல் - உப்பும் விற்காமல் - தன்னையே விற்றுக் கொண்ட ஒரு தம்பி! பதவி

போதையில் துடுக்கான வார்த்தைகளை அள்ளி வீசி என்னைக் கேலி புரிந்தார் தேர்தல் கூட்டங்களில்! பாவம், அவர் என்னைக் கேலி புரிய வேண்டியவர்தான் - நானும் அதைக் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்!

பேசாமல் கருணாநிதி சன்மார்க்க சங்கத் தலைவர் ஆகிவிடுவது நல்லது.

தேர்தல் நேரத்தில் இப்படிப் பேசியவர் முத்துத்தேவன்பட்டிப் புகழ் ..... அமைச்சர்! சன்மார்க்க சங்கத் தலைவர் பொறுப்பு என்பது கண்யமானவர்களுக்கே பொருந்துமென்பதை அவர் உணர்ந்து பேசியதற்கு நன்றி கூறத்தானே வேண்டும்! போலிப் பத்திரங்கள் - போர்ஜரி கையெழுத்துகள் தயாரிக்கின்றவர்கள் எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் ஒட்டிக் கொண்டிருக்கத் தகுதி படைத்தவர்கள் என்பது நிரூபணமாகி விட்ட உண்மையாயிற்றே!

கருணாநிதிக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து விடாதீர்கள்!

அரசியலில் பண்போடு பேசக்கூடியவர்களில் ஒருவர் என நம்பியிருந்த நண்பர் கருப்பையா மூப்பனார் எம்.பி. அவர்கள் விடுத்த அறிக்கை இது!

1969-இல், 1971-இல், 1980-இல் யார் - யாருக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தார்கள் என்ற பழைய கதைகளையெல்லாம் மறந்து விட்ட நிலையில் மூப்பனார் முழங்கினார் இப்படி!

இவர்கள் எல்லோரையும் தூக்கிச் சாப்பிடும் வகையில் நமது நடமாடும் பல்கலைக் கழகம் - நாவெல்லாம் தமிழ் மணக்குமென்று நம்மாலே பாராட்டப்பெற்ற நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதியைப் படித்துப் பார்!

இலங்கைப் பிரச்சினையென்று கூறிக் கருணாநிதி ராஜினாமா செய்தார். பாவம், அன்பழகன்! கருணாநிதி, அவரையும் விட்டாரா? ஒரு பழமொழி சொல்வார்கள், சனிப் பிணம் தனியாகப் போகாது என்று, அதைப் போலக் கருணாநிதி, அன்பழகனையும் தன்னோடு சேர்த்து ராஜினாமா செய்யச் செய்தார்.

தினத்தந்தியில் வெளிவந்த நாவலரின் பேச்சுத்தான் இது!

என்னையும், பேராசிரியரையும் பிணங்களாக்கிப் பார்ப்பதில் எங்களின் இளமைக்கால நண்பர் நாவலருக்குத்தான் எவ்வளவு மகிழ்ச்சி! எத்துணை ஆர்வம்!

என் செய்வது! அவருக்கு எங்கள் மீது அன்பும், பாசமும் அற்றுப் போய்விட்டது எனக் கூற முடியுமா? நிச்சயம் முடியாது! ஆனால் அவர் எம்.ஜி.ஆர். கட்சியில் ஏற்றுள்ள பாத்திரத்துக்கு இந்த வசனத்தைப் பேசினால்தானே ஒழுங்காக ஊதியம் கிடைக்கும்!

ஃ சரணாகதி அடைக!

ஃ சன்மார்க்க சங்கத் தலைவராகச் செல்க!

ஃ தி.மு.க. ஊசிப் போன பண்டம்! உடைந்த வாள்!

ஃ அரசியலில் இருந்து ஓய்வு பெறுக!

ஃ உயிர்ப்பிச்சை கொடுக்காதீர்கள்!

ஃ சனிப் பிணம் - தனிப் போகாது!

உடன்பிறப்பே, இவைகள் எல்லாம் பெரும் பொறுப்புகளில் இருப்போர் உதிர்த்திட்ட வார்த்தைகள்!

பெரும் பொறுப்பில் இருப்போர் என நான் கூறுகிறேன் - ஆனால் அவர்களோ நம் மீது பெரும் வெறுப்பில் இருப்போர்! அதனால்தான் இத்தகு கடுமொழி கக்கினர்! சுடுமொழி தொடுத்தனர்!

இதற்கெல்லாம் உரிய பதிலை - என் உடன்பிறப்பே! நீ வழங்கி விட்டாய்!

அ.தி.மு.க. - இந்திரா காங்கிரஸ் கூட்டணியின் காரணமாக தமிழக எதிர்க்கட்சி அணி உப்பாகக் கரைந்து விடும்

இப்படியல்லவா மத்திய அமைச்சர் மகாகனம் ஆர்.வி. அவர்கள் ஆரூடம் கணித்தார்கள்!

இந்த ஆணவச் சொல்லுக்கு நமது எதிர்க்கட்சி அணி செயல்வாயிலாக அளித்த பதில்தான் இரண்டு தொகுதிகளில் பெற்றுள்ள மகத்தான வெற்றி!

இன்னும் நாம் பெற இருக்கிற வெற்றிகளுக்கு - அந்தப் பெரிய மனிதர்களின் சிறிய வார்த்தைகள் உரமாக அமையட்டும்!

அன்புள்ள,

மு. க.

25-05-1984

1221. நிருபர்கள் பேட்டியில் நித்தம் ஓர் உளறல்!

உடன்பிறப்பே,

சென்னை அண்ணாநகர்த் தொகுதியில் கள்ள ஓட்டுகள் போடப்பட்டதாகக் கூறப்படும் புகார் குறித்து எந்த விசாரணைக்கும் தாம் தயார் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறியிருப்பது பற்றி நிருபர்கள் கேட்டபோது இதுபோன்ற சவால்களை விடுவதே அவருக்கு வழக்கமாகி விட்டது என்று முதலமைச்சர் கூறினார்.

சென்னை தினமணி 27-5-84 காலைப் பதிப்பில் முதல் பக்கத்தில் வந்துள்ள செய்தி இது!

இதில் என்ன சவால் இருக்கிறது என்றே தெரியவில்லை. பத்து நாட்களுக்கு முன்பே ஆயிரக்கணக்கில் வெளி மாவட்ட ஆட்களைக் கொண்டு வந்து, சென்னையில் பல திருமண மண்டபங்களில் தங்க வைத்து, அவர்களுக்கு வகை வகையான விருந்தளித்துத் திட்டமிட்டுப் போலி வாக்குகளைப் போடுவதற்கு தயார்படுத்தி, அதற்கென லட்சக்கணக்கான ரூபாய்களையும் செலவழித்த எம்.ஜி.ஆர். அந்தப் போலி வாக்குகளும் போதாமல் அண்ணாநகரில் தோற்றுவிட்டதை - ஒரு விசாரணை வைத்தால் நிச்சயமாக நிரூபிக்க முடியும் என்று நான் நிருபர்கள் கூட்டத்தில் கூறியது உண்மை!

அதைச் சவால் என்று கூறி நண்பர் எம்.ஜி.ஆர். சமாளிப்பது ஏனோ தெரியவில்லை!

எதற்கெடுத்தாலும் சவால் விடுகிற எம்.ஜி.ஆர். அவர்கள் என்னைப் பார்த்து சவால் விடுகிறவன் என்று விமர்சிப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

அண்ணாநகரிலும் மயிலாடுதுறையிலும் இருகட்சி வேட்பாளர்களுக்கிடையே போட்டியில்லை. எம்.ஜி.

ராமச்சந்திரனாகிய எனக்கும் கருணாநிதிக்கும்தான் போட்டி! இந்தச் சவாலை கருணாநிதி ஏற்றுக் கொள்கிறாரா?

இப்படிச் சவால் விட்டவர்தான் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.!

காஞ்சிபுரத்தில் அன்பரசு எம்.பி. அவர்கள் பேசிய பேச்சின் டேப்பு இதோ இருக்கிறது! யாராவது மறுக்க முடியுமா?

இப்படிச் சட்டமன்றத்தில் சவால் விட்டு விட்டு - டேப்பைப் போட்டுக் காட்டுக என்றதும் பின்வாங்கி ஓடியவர்தான் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.!

தி.மு.கழகத்தில் கணக்கு கேட்டதற்காகத் தான் விரட்டப்பட்டேன் என்பதை நிரூபிக்கிறேன் - என்னோடு ஒரே மேடையில் கட்சிக் கணக்குகள் குறித்து வாதம் செய்யக் கருணாநிதி தயாரா?

என்று சில நாட்களுக்கு முன்பு நெல்லை மாவட்டக் கூட்டத்தில் சவால் விட்டவர்தான் எம்.ஜி.ஆர்.! அதற்கு நான் ஒப்புக்கொள்கிறேன். தேதியையும் இடத்தையும் எம்.ஜி.ஆர். அவர்களே குறிக்கட்டும் என்று நான் பதில் கூறியதும் மௌனமாகி விட்டவர்தான் இந்த முதலமைச்சர்!

மயிலாடுதுறை கிட்டப்பா மீது போடப்பட்ட வழக்கு 1981லேயே கைவிடப்பட்டு விட்டது என்றும், அதன் பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்தே அவர் அ.தி.மு.க.வில் சேர்ந்தார் என்றும் - கிட்டப்பா மீது எப்.ஐ.ஆர். மட்டுமே போடப்பட்டது என்றும், கோர்ட்டிலே வழக்கே போடவில்லையென்றும் - இடைத்தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சவால்விட்டவர் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.!

கிட்டப்பா மீது வழக்கு போடப்பட்டதற்கும் - அவர் கைது செய்யப்பட்டதற்கும் - சிலை திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டதற்கும் - பிறகு அவர் இறந்த பின்னர் 1983-ஆம் ஆண்டு இறுதியில் அந்த வழக்கு மயிலாடுதுறை கோர்ட்டில் வாபஸ் வாங்கப்பட்டதற்கும் கோர்ட் ஆதாரங்களையே கொண்டு வந்து காட்டிய பிறகும், தனது முதல் பொய்யையே திரும்பத் திரும்பச் சொல்லி இறுதியாக வாயடைத்துப் போனவர்தான் இந்த முதலமைச்சர்!

இப்படி ஒன்றா இரண்டா? ஓராயிரம் சவால்களை விடுத்து - அதனை ஏற்றிடும் வண்ணம் எதிர்ச் சவால் வந்தால் ஆமையென அடங்கி ஒடுங்கி விடும் இயல்பு அவரது இயல்பு!

சில பதில்களை அவர் சொல்ல வேண்டுமென்பதற்காக, ஏற்கனவே தயாரிக்கப்பட்ட தனது பதில்களுக்காக சில நிருபர்களை விட்டுக் கேள்வி எழுப்பச் சொல்வதும் அவருக்கு வாடிக்கை!

பால் கமிஷன் அறிக்கை வழக்கு தொடர்பாக நான் கைது செய்யப்பட்டால் போலீஸ் ஸ்டேஷன்கள் முற்றுகையிடப் படுமென்று நான் எங்கும் பேசவுமில்லை - அப்படி எந்த அறிக்கையுமில்லை!

ஆனாலும் யாரோ ஒரு நிருபரை விட்டு அப்படியொரு கேள்வி கேட்கச் சொல்லி, நான் அவ்வாறு பேசியது உண்டா என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் ஒரு முதலமைச்சர் அதைப் போலீஸ் இலாகா கவனித்துக் கொள்ளும் என்று வீரமுழக்கம் செய்து விடையளித்திருக்கிறார்!

இடைத்தேர்தல் முடிந்த பிறகும் வேண்டுமென்றே திட்டமிட்டு பழிவாங்கும் போக்கில், கழகத்தினர் மீதும் முற்போக்கு அணியினர் மீதும் நூற்றுக்கணக்கான பொய் வழக்குகள் புனையப்பட்டுக் கைதுப் படலம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது - இந்த அநியாயச் செயலைப் போலீஸ்துறை கைவிடாமல் மேலும் நடத்திக் கொண்டிருக்குமானால் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூடி, போலீஸ் நிலையங்களின் முன்பு மறியல் போராட்டம் நடத்தப்படும் என்ற முடிவெடுக்க வேண்டியிருக்கும் என்ற கருத்தைத்தான் மயிலாடுதுறைப் பாராட்டுக் கூட்டத்தில் தெரிவித்தேன்.

பால் கமிஷன் அறிக்கையின் தொடர்பான வழக்கு வேறு - இது வேறு! இரண்டுக்கும் முடிச்சு போட்டு ஒரு முதலமைச்சர் பதில் கூறியிருப்பது அவரது திசை திருப்பும் குணத்தையே பிரதிபலிக்கிறது!

நாளை 29-5-84 அன்று பால் கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டதின் தொடர்பான வழக்கு என் மீது!

இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு அந்த வழக்கில் என்னை நாலாவது எதிரியாகச் சேர்த்திருப்பது அரசியல் நோக்கம் கொண்டது என்றும், பழி வாங்கும் போக்கிற்கு எடுத்துக்காட்டு என்றும் நாட்டுக்கு உணர்த்திட நான் அந்த வழக்கில் சம்மன் வாங்க மறுத்து விட்டேன். 29-ஆம் தேதி கோர்ட்டுக்கு என்னை ஆஜர்படுத்த பிடிவாரண்டு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது!

இதில் என்னைக் கைது செய்தால் பூரிப்புடன் சிறைச் சாலைக்குச் செல்வேன்! எம்.ஜி.ஆர். அரசின் பழி வாங்கும் வன்மனப் போக்கை ஊருக்கும், உலகிற்கும் உணர்த்த என்னை அர்ப்பணித்துக் கொள்வேன்! இதனை நான் முன்பே தெளிவாக அறிவித்து விட்டேன்! இதில் எந்த மாற்றமும் இல்லை! எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்!

ஆனால் நான் இப்போது மயிலாடுதுறையில் போலீஸ் நிலையங்கள் முன்பு மறியல் என்று பேசியது - கழகச் செயல்வீரர்களும், தோழமைக் கட்சிகளின் செயல் வீரர்களும் தேர்தலுக்கு முன்பும், தேர்தலுக்குப் பின்பும் தொடர்ந்து போலீசாரின் அடக்குமுறைகளுக்கு ஆளாக வேண்டியுள்ள கொடுமையை எதிர்த்துத்தான்!

இதனைச் சில செய்தியாளர்கள் குழப்பிட வேண்டாம்! முதலமைச்சரும் குழப்பிக் கொள்ள வேண்டாம்!

தன்னையும் குழப்பிக் கொண்டு மற்றவர்களையும் குழப்புவதில் முதலமைச்சருக்கு இணை முதலமைச்சரேதான்!

முதல்நாள் சொன்னார், சத்தியசீலனும் ஒரு வாண்டையார் மகன்தான் என்று!

வன்னியரிலும் வாண்டையார் பட்டம் உண்டு. சத்தியசீலன் அப்படிப்பட்ட வாண்டையார் மகனே தவிர, பூண்டி வாண்டையார் போல பல்லாயிரம் ஏக்கர் பூமிக்கு அதிபதியல்ல! என்றும் விளக்கமளித்ததும் உடனே முதலமைச்சர் முன்னால் சொன்னதை மாற்றிக் கொண்டார்!

நான் சாதி அடிப்படையில் அவரை வாண்டையார் என்று கூறவில்லை. வன்னியரானாலும் அவரும் பூண்டி வாண்டையார் போல நிலப்பிரபுதான்! பணக்காரர்தான்! அந்த அர்த்தத்தில்தான் வாண்டையார் என்றேன்.

இது முதலமைச்சரின் வியாக்கியானம்! விளக்கவுரை!

சத்தியசீலன் நிலப்பிரபுவாம்! பூண்டி வாண்டையார் போலப் பணக்காரராம்! மயிலாடுதுறை வட்டாரத்திலேயுள்ளவர்களுக்கு முதலமைச்சரின் இந்த விளக்கம் எவ்வளவு பெரிய பேத்தல் என்று தெளிவாகத் தெரியும்!

முதலமைச்சரின் இத்தகைய முரண்பாடான பேச்சுகளும், உளறல்களும், ஊராருக்கும் தெரிந்து விலா நோகச் சிரிக்கட்டுமென்றுதான் பத்திரிகையாளர்களும் அவரது பேட்டிகளுக்கும், பேச்சுகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் போலும்!

அன்புள்ள,

மு. க.

28-05-1984

1222. என்னையே நான் ஒப்படைக்கிறேன்!

என் பிறந்த நாள் செய்தியை நான் வெளியிடும் போது தமிழகத்தில் மட்டுமின்றி, உலகப்பந்தின் எல்லாப் பகுதிகளிலும் சிதறி வாழுகின்ற எனது அன்பு உடன்பிறப்புகள் வாரிவழங்குகின்ற மணிவிழா வாழ்த்துக் குவியலிலே நான் ஆனந்தக் கண்ணீர் வடித்தவாறு பாசத்தால் பிணைக்கப்பட்டு நிற்கின்றேன்.

உடன்பிறப்புகள் பொழியும் அன்புக்கு நன்றிகூற மொழியில் சொல் இல்லாத காரணத்தால், விழிநீரால் அவர்தம் கரங்களை நனைக்கின்றேன். அவர்கள் என்மீது கொண்டுள்ள பற்றுக்கும், தமிழ் மக்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் என்னையே அவர்கள்பால் ஒப்படைப்பதைத் தவிர வேறென்ன நான் செய்ய இயலும்.

- தலைவர் கலைஞர்

தலைவர் கலைஞர் அவர்களின் மணிவிழாச் செய்தி வருமாறு:-

மனிதன் நூறாண்டுகளுக்கு மேலும் வாழ்வது என்பது அதிசய செய்திகளில் ஒன்று.

தொண்ணூறு ஆண்டுகளைக் கடந்து வாழ்பவர்களே மிகச் சிலர்தான். இந்த அடிப்படையில் பார்த்தால், அறுபது வயதைத் தாண்டுகிற நான் வாழ்க்கையில் முக்கால் பகுதிக்கு மேல் முடித்துவிட்டேன் என்றுதான் கூற வேண்டும். இந்த முக்கால் பகுதி வாழ்க்கையில் ஏறத்தாழ நாற்பத்துஐந்து ஆண்டுகள் - மிகப் பெரும் பகுதி - பொது வாழ்க்கைக்கே செலவாகியிருக்கிறது என்பது, என் இதயத்துக்கு ஆறுதலைத் தரவல்லதாகும். எஞ்சியிருக்கும் நாட்களும் பொதுப்பணிக்கே பெரிதும் பயன்பட வேண்டுமென்பது என் தணியாத ஆசை.

வாழ்க்கையை ஒரு போராட்டம் என வர்ணிப்பார்கள். ஆனால் எனக்கோ, போராட்டமே வாழ்க்கையாகி விட்டது. அதற்காக நான் கவலைப்பட்டதுமில்லை. கவலைப்படப் போவதுமில்லை. களத்தில் நிற்பதும், எதிர்நீச்சல் போடுவதுமே இளம் பிராயம்

முதல் பழக்கமாகி விட்டதால் அதில் மாற்றம் ஏற்பட்டால்தான் மனச்சோர்வே உருவாகிறது.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு இந்தத் தமிழ் மண்ணில் - தஞ்சைத் தரணியில் - திருக்குவளையெனும் சிற்றூரில் முத்துவேலர் - அஞ்சுகத் தாய்க்கு மூன்றாவது பிள்ளையாகப் பிறந்து இரண்டு சகோதரிகளை இனிய உடன்பிறப்பாகப் பெற்று, இன்று லட்சோபலட்சம் அன்பு உடன்பிறப்புகளின் உள்ளத்தில் அழியாத இடம் கிடைக்கிற அளவுக்குப் பேறு பெற்றுள்ளேன் என்றால் குடும்பப் பெருமையோ - குலப்பெருமையோ கொண்டவன் என்பதால் அல்ல!

தமிழ்க்குலம் காக்கும் ஒரு பெரும் இயக்கக் குடும்பத்தில் என்னை இணைத்துக் கொண்டேன் என்பதுதான் எனக்குள்ள குலப்பெருமை! குடும்பப் பெருமை!

பதினான்காம் வயதில் பள்ளிப் பருவத்தில் கொடி பிடிக்கும் தொண்டனாக - மொழிப் போராட்ட இளம் சிப்பாயாக - பெரியாரின் பெரும் படை வீரனாக வீறுகொண்டு நின்று, இன்று இந்த மணிவிழா ஆண்டிலும் அதே கொள்கை உணர்வுகளையும், குறிக்கோளை அடையும் போர்க்குணத்தையும் பொறுத்த வரையில் அந்த இளமைத் துடிப்பு மாறாத இதயத்துடன் பணியாற்ற முடிகிறது என்ற தன்மைதான், எத்தனையோ வகையான எதிர்ப்புகளுக்கிடையிலேயும் எனக்கிருக்கும் இன்பமாகும்.

எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தோம் என்பதல்ல, வாழ்ந்த காலத்தில் சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் என்ன செய்தோம் என்பதுதான் முக்கியமானதாகும்.

பத்து தடவைக்கு மேலாகச் சிறை சென்றேன். அடிபட்டேன் - மொழி காக்க, மக்கள் நலன் காக்க, தமிழர் உரிமை காக்க என்பதிலே எனக்குள்ள மகிழ்ச்சி, பதவிச் சிம்மாசனத்திலே அமர்ந்திருந்தேன் என்பதிலே என்றைக்குமே ஏற்பட்டதில்லை.

என்னைப் பொறுத்தமட்டில், எஞ்சியுள்ள ஆண்டுகளிலும் என் வாழ்வை முழுமையாகத் தமிழ் மக்களின் எதிர்காலம் செழிப்புற்றுச் சிறந்து விளங்கவே செலவிடுவேன்.

தனிப்பட்ட யார் மீதும், எந்த சமூகத்தின் மீதும் எனக்கோ, என்னைத் தலைவனாகக் கொண்ட இந்த இயக்கத்திற்கோ காழ்ப்பு கிடையாது. அதே சமயத்தில் எந்த ஒரு சமூகமும் பிற

சமூகங்களைத் தாழ்த்தியும், ஏமாற்றியும் ஆதிக்கம் செலுத்துவதை நானோ, நான் சார்ந்திருக்கும் கட்சியோ ஏற்றுக்கொள்ள இயலாது.

மொழிப் பிரச்சினையிலும் இதே நிலைதான் எங்களுடையது.

சாதி, மத பேதமற்ற சமத்துவச் சமுதாயத்தை உருவாக்குதல்,

உழைப்போர் ஒரு வர்க்கம் - உண்டு களிப்போர் ஒரு வர்க்கமெனும் நிலை மாற்றி, உழைப்போர்க்கே உலகம் எனும் சமதர்மம் நிலை நாட்டுதல்,

மூடநம்பிக்கை உணர்வுகள், எவர் வாயிலாக, எந்த வடிவில் புகுத்தப்பட்டாலும், அவற்றைக் களைந்தெறியப் பகுத்தறிவுச் சுடரொளியைப் பரப்புதல்,

அரண்போல் உயர்ந்து நின்றும் - அகழ்போல் சூழ்ந்தும், ஜனநாயக நெறிகளுக்கு அணுவளவு ஊனமும் நேராமல் பாதுகாத்திடுதல்,

கழகத்தின் கோட்பாடுகளாகும்.

மொழியால் தமிழன் - இனத்தால் திராவிடன் - நாட்டால் இந்தியன் - உலகத்தால் மனிதன் என்ற உணர்வின் அடிப்படையில் - முறையே, தமிழ்மொழி வளர்ச்சிக்கும், திராவிடக் கலாச்சாரக் கூட்டுறவுக்கும், மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற அரசியல் அமைப்புக்கும், உலக நாடுகளிடையே நிரந்தர அமைதிக்கும், என்னாலியன்ற கடமையை, நான் பணியாற்றும் கழகப் பாசறையின் வாயிலாக ஆற்றிடுவேன்.

இவ்வாறு என் பிறந்த நாள் செய்தியை நான் வெளியிடும்போது தமிழகத்தில் மட்டுமின்றி உலகப்பந்தின் எல்லாப் பகுதிகளிலும் சிதறி வாழுகின்ற எனது அன்பு உடன்பிறப்புகள் வாரிவழங்குகின்ற மணிவிழா வாழ்த்துக் குவியலிலே நான் ஆனந்தக் கண்ணீர் வடித்தவாறு பாசத்தால் பிணைக்கப்பட்டு நிற்கின்றேன். உடன்பிறப்புகள் பொழியும் அன்புக்கு நன்றிகூற மொழியில் சொல் இல்லாத காரணத்தால் விழிநீரால் அவர்தம் கரங்களை நனைக்கின்றேன். அவர்கள் என்மீது கொண்டுள்ள பற்றுக்கும், தமிழ் மக்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் என்னையே அவர்கள்பால் ஒப்படைப்பதைத் தவிர வேறென்ன நான் செய்ய இயலும்!

அப்படி ஒப்படைத்து எத்தனையோ காலமாயிற்று - அவர்கள் என்னை எப்படிப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறார்களோ, அது அவர்களைப் பொறுத்தது.

இந்த உறுதியோடு நான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியின் போதும் அண்ணா அவர்களின் நினைவே எனக்கு ஊன்றுகோலாய்த் துணைபுரிகிறது. அவருடைய இதயத்தை இரவலாகப் பெற்றுக்கொண்ட உணர்வோடுதான் நான் ஒவ்வொரு கணமும் நடை போடுகிறேன். அந்த நடை, எதிர்காலத்தில் முதுமையின் காரணமாகத் தள்ளாடலாம் - தடைபடலாம் - முடிவுற்றுப் போய் விடலாம் - ஆனால் நான் பெரியாரிடமும் அண்ணாவிடமும் பெற்றுள்ள உணர்வுகளுக்குத் தள்ளாட்டமில்லை! தடையில்லை! முடிவே இல்லை! இல்லவே இல்லை!

இவ்வாறு மணிவிழாச் செய்தியில் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

02-06-1984

1223. உன் காலணியை வாழ்த்துகிறாய்!

உடன்பிறப்பே,

ஐம்பத்தி எட்டு பிறந்த நாள் இன்று – உன்
அன்பின் அடிமை பிறந்த நாள் இன்று!
நடந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பதும்
நடக்கும் பாதையில் வழுவாதிருப்பதும்
அரிமா நோக்கெனப் புகல்வர் அறிஞர்
அடியேன் அரிமா அல்ல எனினும்
கடந்த வழியைக் கருத்தில் கொண்டு
தொடர்ந்து புரிவேன் தமிழினத் தொண்டு
கோளிலி என்பது எனை விதைத்த ஊர் – திருக்
குவளையூர் என்றும் தீந்தமிழ் பேசும்!
நாற்றுப் பயிராய் அவ்வூர் வளர்ந்து – தென்றல்
காற்றுத் தமிழை திருஆரூர் பயின்றேன்!
ஈரோட்டுப் பள்ளியில் இனமானக் கல்வி – அறிவுத்
தேரோட்டிக் காஞ்சியில் இலட்சியக் கல்வி!
இந்தித் திணிப்பை என்றும் எதிர்க்க
முந்திக் கிளம்பிய தமிழர் படையில்
இளைஞர் அணியை அன்றே கண்டு
இரண்டறக் கலந்தேன் இயக்க நடப்பில்!

அன்று முதல் இன்று வரை
அய்யா பெரியார் அணைப்பு!
ஆரத் தழுவிடும்
அண்ணாவின் ஈர இதய நனைப்பு!
அன்பு உடன்பிறப்பே! எனக்கு
உனையன்றி வேறென்ன நினைப்பு!

தண்டவாளத்தில் படுத்த போதும் –

தனிமைச் சிறையில் வறுத்தபோதும் -
கண்ட அண்ணன் வடிக்க கண்ணீர் - என்
களைப்பைத் தீர்க்கத் தெளித்த பன்னீர்!
ஆண்டு இருபதைக் கடந்த வயதில்
பாண்டியில் என்னை வதைத்த காலை
தந்தை பெரியார் தடவிய மருந்தே - என்
சிந்தை குளிர்ந்த அமுத விருந்தாம்!

அஞ்சுகத்தாய் முத்துவேலர்
எனைப்பெற்ற போது -
இசைபாடி மகிழ்விப்பான்
இவனென்று காத்திருந்தார்!
இவனோ;
வசைபாடும் அரசியலின் மத்தியிலே
வசமாகச் சிக்கிக் கொண்டான்!

இலட்சியமென்பது;
எட்டிப் பறித்திடும் மல்லிகையல்ல!
ஏறிப் பறித்திடும் மாங்காயும் தேங்காயுமல்ல!
எதிர்நீச்சல்! எரிமலைமேல் கொடி நாட்டல்!
இடையில் தோன்றிடும் ஆட்சி என்பது
நடையில் தோன்றிடும் களைப்பு நீங்க
இயற்கை வழங்கிடும் நிழற்கொடையென்று
இலட்சியப் பயணம் தொடர்தல் வேண்டும்!

அற்றகுளத்து அறுநீர்ப் பறவைகள்
உற்றார் உறவினர் போல நடித்து
பற்றுக் கொண்ட பதவியைத் தேடி
விற்றுக்கொண்டார் தம்மை எனினும்

வில்லில் கணையாய் இருப்போம் என்றும்
வேலின் முனையாய் வாழ்வோம் என்றும்
சொல்லில் உறுதி காக்கும் கூட்டம்
கல்லில் எழுத்தாய் மின்னிடும்போது
கவலை எதற்கு எனக்கு?
கழகம்தான் நமக்குக் கிழக்கு!

குதிரை, கீழேதள்ளிக் குழியும்
பறித்தது என்பர்! இங்கே நம்மைக்
குதிரையாக்கிச் சவாரி செய்தோர்
நமக்கே குழிபறிக்க வந்த கதை!
ஏறிய ஏணியை உதைத்த கதை!
நன்றி கொன்ற கதை!

கதையாகப் போன இத்தனை வதைகளையும்
கண்மணியே! உடன்பிறப்பே!
உனை நினைத்தே தாங்கிக் கொண்டேன்!
வாழ்த்துகின்றாய் என்னை!
வணங்குகின்றேன் உன்னை!

நீ வாழ்த்துவது; கிரீடத்தையல்ல!
கிரீடம் இருந்தாலும் இல்லா
விட்டாலும் வாழ்த்தும் பண்பு
கொண்ட உடன்பிறப்பு நீ!

உனக்காக உழைக்கின்ற இந்தக்
காலணியை வாழ்த்துகின்றாய்!
இதற்குத்தான் மெருகு போடுகின்றாய்!
ஏழை எளிய உடன்பிறப்பு நீ!
தேய்ந்தாலும் இந்தக் காலணியை
ஒய்ந்து போ என விடமாட்டாய்!
உனைவிட்டு அகலாமல்
ஒய்வின்றி உழைப்பதற்கே
உறுதி சொல்வேன்;
உடன்பிறப்பே இந்தப் பிறந்த நாளில்!

அன்புள்ள,

மு. க.

03-06-1984

59-ஆம் பிறந்த நாளன்று கலைஞர் எழுதிய கடிதம்.
2-6-82-இன் மறுபதிப்பு

1224. கண்ணீர் ஓயாதா? கவலை தீராதா?

உடன்பிறப்பே,

பஞ்சாப் முதலமைச்சராக இருந்த குர்நாம் சிங் அவர்களின் அன்பழைப்பின் பேரில் 1969-ஆம் ஆண்டு அந்த மாநிலத்துக்குச் சென்றிருந்தேன். என்னுடன் சாதிக்பாட்சா, வி. கிருஷ்ணமூர்த்தி, முரசொலி மாறன் ஆகியோரும் வந்திருந்தனர். சண்டிகாரில் குருநானக்கின் ஐநூறாவது ஆண்டு விழாவைத் தொடங்கி வைத்து உரையாற்றினேன். லூதியானாவில் விவசாயப் பல்கலைக் கழகத்தில் பல லட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தேன். அமிர்தசரஸ் நகராட்சி மன்றத்தில் எழுச்சிமிக்க வரவேற்பு ஒன்றினை வழங்கினார்கள். சீக்கியர் தலைவர் சாந்த் பதேசிங் அவர்களைச் சந்தித்து உரையாடினேன். மிக அரிதாகச் சிலருக்கு மட்டுமே வழங்கக்கூடிய வாள் ஒன்றினை பதேசிங் அவர்கள் எனக்கு வழங்கினார். அமிர்தசரஸ் நகராட்சி மன்றத் தலைவரும், பெரும்பான்மை உறுப்பினர்களும் இந்து மதத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்து எங்களை அன்புடன் வரவேற்றனர். அன்பு காட்டுவதில் போட்டி போடுவது போல் சீக்கியர்களும் எங்களுக்கு உற்சாகமான வரவேற்பளித்து பொற்கோவிலுக்கு அழைத்துச் சென்றனர். பக்ராநங்கல் முழுமையும் சுற்றிப் பார்த்தோம். ஜாலியன்வாலாபாக் எனப்படும் இந்திய நாட்டு வரலாற்றின் இரத்தம் தோய்ந்த தியாக பூமியைக் கண்ணுற்றோம்.

பெருந்தொழில்கள் மட்டுமின்றி ஒவ்வொரு ஊரிலும் - சாலையோரங்களிலும் - நகர்ப்புற வீதிகளிலும் சிறு தொழில்களின் வளர்ச்சி எங்களை வியப்பில் ஆழ்த்தியது! அந்தத் தொழில்களுடன் போட்டி போடுவது போல் விவசாயத் துறையின் வளர்ச்சி எங்களைத் திகைக்க வைத்தது! எங்கு நோக்கினும் டிராக்டர்கள் ஊர்ந்து கொண்டிருந்தன! கிராமப்புறத்து விவசாயக் குடும்பத்தினர் - இளம் தம்பதியர் -

குழந்தைகுட்டிகள் - இவர்களையேற்றிக்கொண்டு டிராக்டர்கள் சினிமாக் கொட்டகைகளுக்கும், இந்து ஆலய விழாக்களுக்கும் - சீக்கியர்களின் குருத்துவார்களுக்கும் சென்று கொண்டிருந்த காட்சி எவ்வளவோ எளிமையாகவும், இனிமையாகவும் இருந்தது!

மிகப்பெரும் பரந்த வெளியில் குருநானக் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒலி ஒளி நடிப்பு நாடகமாக நடத்திக் காட்டினர். அதனைக் கண்டு மகிழ ஆயிரக்கணக்கில் சீக்கியர்களும், இந்துக்களும், முஸ்லீம்களும் குழுமியிருந்தனர்.

மதபேத உணர்வுகள் தலைகாட்டாத ஒரு மாநிலத்தை அன்று கண்டு மகிழ்ந்தோம்! இந்துக்களுக்கும், சீக்கியர்களுக்கும் கொள்வினை கொடுப்பினை என்பது பழக்கமாகிவிட்ட ஒன்று! ஒரே குடும்பத்தில் இந்துவும் உண்டு - சீக்கியரும் உண்டு! அப்படிக் கலந்துவிட்ட பேதமற்ற நல்லுறவு!

உழைப்பு! உழைப்பு! உழைத்தே வாழும் மக்கள்! கையேந்திப் பிச்சைக் கேட்போரை எங்கும் காண முடியவில்லை, அந்த மாநிலத்தில்!

வீரம் செறிந்த பூமி எனினும் அன்று நாங்கள் கண்ட பஞ்சாப், அமளிக்காடாக இல்லை! அமைதி சூழ் அழகு மாநிலமாகவே திகழ்ந்தது!

சண்டிகார் தலைநகரம் யாருக்கு - அரியானாவுக்கா? பஞ்சாப்புக்கா? என்ற சர்ச்சை முடியாத ஒரே ஒரு சங்கடந்தான் அன்றைக்குத் தலைதூக்கியிருந்தது. இரு மாநிலங்களுக்கும் பொதுவில் அந்தத் தலைநகரம் என்ற நிலை மாறி, அதனைப் பஞ்சாப்புக்குத் தந்துவிடுவதென்றும் - அரியானாவுக்குப் புதிய தலைநகர் உருவாக்க, மத்திய அரசு பத்து கோடி ரூபாய் வழங்குவதென்றும் அப்போது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பிரகடனப்படுத்தினார்.

பஞ்சாப்பில் தங்கியிருந்த போது, முதலமைச்சர் குர்நாம்சிங் அவர்கள், தலைநகர்ப் பிரச்சினை குறித்து என்னிடம் விவாதித்து - அதுபற்றி என்னை பிரதமரிடமும் பேசுமாறு கேட்டுக் கொண்டிருந்தார். குடியரசுத் தலைவர் வி.வி. கிரிக்குக் கழகமும், அகாலிதளத்தைச் சேர்ந்த குர்நாம்சிங்கும் ஆதரவளித்து அதன் காரணமாக, பிரதமரிடம் ஒரு நல்லுறவு ஏற்பட்டிருந்த நேரமாகும்

அது! நானும் அப்போது பிரதமரிடம் பஞ்சாப் பிரச்சினை குறித்துப் பேசினேன்.

தலைநகர்ப் பிரச்சினையொன்றைத் தவிர, வேறு பிரச்சினைகள் அந்த அளவுக்கு பஞ்சாப்பில் ஓங்கி வளராத காலகட்டம்!

அப்போது நாங்கள் கண்ட பஞ்சாப்பில் சிரிப்பும் - செழிப்பும் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன! சகோதரத்துவ மனப்பான்மை தழைத்துக் கிடந்தது! பகைநாட்டான் படையெடுத்தால் பச்சை ரத்தம் பரிமாறுவோம் என்ற போர் முழக்கம் மட்டுமே ஒலித்துக் கொண்டிருந்தது!

ஆனால் இன்று? பதினைந்து ஆண்டுக்கால இடைவெளியில் பஞ்சாப் எப்படியெல்லாம் மாறிவிட்டது!

அகாலிதளக் கட்சியின் செல்வாக்கை வீழ்த்தி, காங்கிரசை ஆட்சிப் பொறுப்பிலேற்ற டில்லியில் உள்ளவர்கள் காட்டிய அக்கறையில் ஒரு சிறு துளியாவது, பஞ்சாப்பில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதில் காட்டியிருந்தால் - இன்றைக்குப் பஞ்சாப், படுகளமாகியிருக்காதே!

அமிர்தசரஸ் பொற்கோயில் மற்றுமொரு குருக்ஷேத்திரமாகியிருக்காதே!

பிந்தரன்வாலே என்பவர் யார்? அவர் எந்தப் பிரச்சினைகளுக்காகப் போரிட்டார்? பிரச்சினைகள் எதுவாயினும், அதைத் தீர்த்திட அவர் ஏற்றுக் கொண்ட முறைகள் வரவேற்கத்தக்கதா?

கொண்ட கொள்கைக்காகவோ அல்லது எடுத்த முடிவுக்காகவோ அவர் இறுதிவரை போரிட்டு இன்னுயிரைப் பலி கொடுத்தார்! அந்த தீரத்தையும் உறுதியையும் பாராட்டலாமெனினும் - அவர் மேற்கொண்ட முறை தீதானது! தேவையற்றது!

வன்முறை, இருபுறமும் கூர் உள்ள கத்தி! அதனைப் பயன்படுத்துபவரையே அது பதம் பார்த்து விடும்!

இப்படி அறிஞர் அண்ணா அடிக்கடி சொல்வாரே! அதைத்தான் பஞ்சாப் நிகழ்ச்சிகளும், பிந்தரன்வாலேயின் முடிவும் நமக்கு நினைவூட்டுகின்றன!

இந்தியப் பிரதமரால் என்றைக்கோ அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப் படவில்லை! அவை ஏட்டுச் சுரைக்காய்களாகவே இருந்துவிட்டன!

பஞ்சாப் பிரச்சினை என்பது அகாலிதளத்தினரை ஆட்சியை விட்டு இறக்கி அங்கே காங்கிரஸ் கட்சியை அமைப்பது என்பது மட்டுமே என்ற நிலையிலேதான் டெல்லி கருத்துக் கொண்டு செயல்பட்டது.

1978-ஆம் ஆண்டு பஞ்சாப்பில் அகாலிதள ஆட்சி நடைபெற்ற போது, அந்த ஆட்சிக்கு எதிராகச் செயல்படப் புறப்பட்டவர்தான் பிந்தரன்வாலே! அவருக்குத் துணை நின்று அவரை முடுக்கி விட்டவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் முக்கியமான தூண்கள்! சீக்கிய மதத்தில் ஒரு பிரிவினரான நிரங்காரிகளைப் பழி வாங்க அகாலிதளம், தனக்கு ஒத்துழைப்பு தரவில்லையென்ற காரணத்தைக் காட்டி அகாலிதளத்திற்கு எதிராகவும், இந்திரா காங்கிரசுக்கு ஆதரவாகவும் பிந்தரன்வாலே கொடி உயர்த்தினார்!

குருத்துவாரா கமிட்டி தேர்தல்களில் கூட பிந்தரன்வாலே காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் அகாலிதளத்தினரைத் தோற்கடித்தார்! அந்தக் கமிட்டிகளில் ஒன்றுக்கு மாணவர் அமைப்பின் தலைவரான அம்ரிக்சிங்கையே பிந்தரன்வாலே நியமித்தார்!

அதன் பிறகு நிரங்காரிகளின் தலைவர் குர்பக்சன் சிங்கையும், பத்திரிகையாளரும் சுதந்திரப் போராட்ட வீரருமான லாலா ஜெகத் நாராயணனையும் கொலை செய்ததற்கு பிந்தரன்வாலேதான் காரணம் என்று கைது செய்யப்பட்டார்! அவர் கைது செய்யப்பட்டதை யொட்டி நடைபெற்ற கிளர்ச்சியைக் காரணமாகக் காட்டிக் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட அவரை அரசாங்கம் விடுதலை செய்தது!

அவரை எப்படியெல்லாம் தட்டிக் கொடுத்து டெல்லி ஆதரிக்கிறது என்று அன்றைக்குப் பேசாதவர்கள் இல்லை!

அந்தப் பிந்தரன்வாலேதான் காலப்போக்கில் - ஓரிரு ஆண்டுகளில் வன்முறைத் தீவிரவாதிகளின் தலைவராக மாறி விட்டார்!

தொடக்கத்திலேயே அலட்சியம் காட்டப்படாமல் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருந்தால் - எப்படியும் அகாலிதள ஆட்சி வீழ்த்தப்பட்டு எவரைக் கொண்டேனும் காங்கிரஸ் ஆட்சி பீடத்தில் ஏற வேண்டும் என்ற பிடிவாதத்திற்கு டெல்லி முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்திருந்தால் - பிந்தரன்வாலே கூட்டத்தினரால் இத்தனைப் படுகொலைகள் பஞ்சாப்பில் நடத்தப்படாமல் தடுத்திருக்க முடியும் - பொற்கோயிலுக்குள் ஒரு மயான பூமி அமைப்பதையும் தவிர்த்திருக்க முடியும்!

நிலைமை முற்றிய பிறகு வேறு எந்த வழியுமின்றி இப்போது டெல்லி எடுத்த நடவடிக்கையைக் குறை கூறமுடியாது. எனினும், இந்திய மக்களும் இந்திய ராணுவமுமே மோதுகிற ஒரு சூழ்நிலை உருவாகி விட்டதே என எண்ணும்போது இதயத்தின் ஆழத்தில் ஒரு இனம் தெரியாத கவலை அழுத்தத்தான் செய்கிறது!

பஞ்சாப்பில் பிரச்சினை இவ்வளவு தூரம் வளர்ந்து முற்றிப் போனதற்கு மத்திய சர்க்காரின் அலட்சியப்போக்கும் அசட்டையும்தான் காரணம்! மத்திய அரசின் இந்த அலட்சியப் போக்கை சரித்திரம் ஒருபோதும் மன்னிக்காது!

என்று ஜனதா தலைவர் திரு. சந்திரசேகர் அவர்கள் சேலம் மாநாட்டில் கூறியிருப்பதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கதுதானே!

பாதுகாப்புப் படையினர் பொற்கோயிலில் இருந்த தீவிரவாதிகளை அடக்கி வெளிக்கொணர்வதில் மெச்சத்தகுந்த வகையில் பணியாற்றியுள்ளனர் என்று பாராட்டியுள்ள திரு. வாஜ்பாய் அவர்கள் கூட,

கடந்த ஆண்டு பஞ்சாப் பிரச்சினை தொடர்பாக நடந்த முத்தரப்புப் பேச்சுவார்த்தையின் போது உடன்பாடு ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. அப்போதே பிரதமர் அதற்கான முயற்சி எடுத்திருந்தால் இப்போது ராணுவத்தை அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது!

என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்.

வேறு வழியே இல்லை! எனவே இராணுவம் அனுப்பப்பட்டது!

ஆனால் - ஆரம்பத்தில் பஞ்சாப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண இருந்த எத்தனையோ வழிகளில் ஒருவழியில்கூட செல்வதற்குத் தயாராக இல்லாதது யார் குற்றம்? டெல்லியின்

குற்றமல்லவா?

உடன்பிறப்பே, 15 ஆண்டுகளுக்கு முன்பு பஞ்சாப்பில் குருநானக் விழாவில் நான் உரையாற்றியபோது இறுதியில் குறிப்பிட்டேன்:-

குருநானக்கின் பெயர் சொல்லிப் பறவைகள் பாடுகின்றன!

அந்தப் பாட்டைக் கேட்டு,

மேகங்கள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றன!

ஆம்! அன்றைக்கு மேகங்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தன! ஆனால் இன்றைக்கு அந்தக் குருநானக்கின் பூமியிலே இரத்தக் கண்ணீர் அல்லவா வடிக்கப்படுகின்றது!

அந்தக் கண்ணீர் ஓயாதா? கவலை தீராதா?

அன்புள்ள,

மு. க.

11-06-1984

1225. நுழைவுத் தேர்வு - திட்டமிட்ட ஒரு நாடகம்!

உடன்பிறப்பே,

மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, விவசாயக் கல்லூரி போன்ற தொழிற் கல்லூரிகளில் சேர்வதற்கும், வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இடஒதுக்கீடு முறை அந்தச் சமுதாயங்கள் முழுமையாக முன்னேறும் காலம் வரையில் நீடிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும் உறுதியாக மேற்கொண்டிருந்த எண்ணமும் அதுதான்! அதில் ஏதோ திருத்தம் செய்யப் போவதாகச் சொல்லி வருமான உச்சவரம்பு ஆணையைப் பிறப்பித்து சில ஆண்டுகளுக்கு முன்பு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஒரு பெருங்குழப்பத்தை உருவாக்கினார். பெரியார், அண்ணா பெயரைச் சொல்லிக்கொண்டு தங்களைத் திராவிடர் இயக்கத்தார் எனக் கூறிக்கொள்ளும் அமைச்சர்களும் கூட, அவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் வந்தவர்கள் என்பதை மறந்துவிட்டு எம்.ஜி.ஆர். அவர்களின் அந்த திடீர்க் குழப்பத்தை ஆதரித்துக் கட்டுரைகள் தீட்டினார்கள்! அறிக்கைகள் வெளியிட்டார்கள்! இரண்டும் செய்யாதவர்கள் பதவிக்கு ஆபத்து வந்து விடக் கூடும் என்ற பயத்தில் ஊமையாகிக் கிடந்தார்கள்.

எம்.ஜி.ஆர். ஆட்சியின் திடீர் ஆணையினால் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டதும் - தொடர்ந்து ஏற்பட இருந்ததுமான தீமையைச் சுட்டிக்காட்டித் தமிழகமே போர்க்குரல் கொடுத்தது!

அதைத் தாக்குப்பிடிக்க முடியாத எம்.ஜி.ஆர். அவர்கள், அரசின் ஆணையைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

தொழிற்கல்லூரிகளில் சேர்வதிலும், வேலை வாய்ப்பிலும் இட ஒதுக்கீடு என்பது சமூக அடிப்படையில் அமைய வேண்டுமே தவிர, பொருளாதார அடிப்படையில் அல்ல என்பதை நமது நாட்டின் நிலவரத்தைக் கருத்தில் கொண்டு சிந்திக்க வேண்டும் என்று ஆயிரக்கணக்கான ஆதாரங்களைக் காட்டி எடுத்துக் கூறியபோதெல்லாம் அந்த வாதங்களை அலட்சியப்படுத்திப் புறக்கணித்துவிட்ட எம்.ஜி.ஆர். அவர்கள், 1980-இல் பாராளுமன்றத் தேர்தலில் படுதோல்வி அடைந்த பிறகே பாடம் பெற்று பழைய நிலையே இருக்கட்டுமென்று கூறி - தனது அரசின் புதிய உத்தரவைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

பொருளாதாரத்தில் அடிமட்டத்தில் இருப்போரைக் கைதூக்கி விட வேண்டுமென்பதில் இருவிதக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் பெரும்பான்மை மக்களைக் கொண்ட மொத்த சமுதாயங்களே அந்தச் சமுதாய அடிப்படையில் கல்வி வாய்ப்பு, வேலை வாய்ப்பு ஆகியவற்றைப் பெற முடியாமல் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் போது அவர்களுக்கு சமூகத்தில் நல் அந்தஸ்து கிடைத்திடக் கொள்கை ரீதியாக எடுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிற ஒரு முடிவைத் திடீரென திசை திருப்பி அந்தக் கொள்கையின் அடிப்படையையே தகர்த்துவிட முனைந்திட்ட எம்.ஜி.ஆரின் போக்கு தக்க சமயத்தில் தமிழ்நாட்டு மக்களின் எதிர்ப்பினால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இருந்தாலும்கூட, எம்.ஜி.ஆர். அவர்களின் நெஞ்சத்தில் இடஒதுக்கீடு முறைக்கு எதிரான எண்ணம்தான் எப்போதும் அலைமோதிக் கொண்டிருக்கிறது என்பதை, அவர் பதவிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பிருந்தும், வந்த பிறகும் அவரே சில பேட்டிகளின் மூலம் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார். பெரியாரும் அண்ணாவும் வளர்த்த உணர்வுகளுக்கு அவர் பெரும்பகையாளி என்பதை அவர் பக்கத்திலேயிருப்பவர்கள் புரிந்து கொண்டிருந்தாலும்கூட, பாவம்! என்ன செய்வார்கள் - பதவிச் சுகம் அவர்களை விடவில்லையே!

நீதிக்கட்சிக் காலத்தில் ஏற்பட்ட இந்த இட ஒதுக்கீட்டு முறையினால் பல ஆண்டுக் காலமாக, பிற்படுத்தப்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும் தொழிற் கல்லூரிகளிலும், வேலை வாய்ப்புகளிலும் ஓரளவு முன்னேறத் தொடங்கியுள்ளனர். ஆரம்பப் பள்ளிகள் இல்லாத கிராமங்கள் இருக்கக்கூடாது என

காமராசர் அவர்கள் திட்டமிட்டுச் செயல்பட்ட காரணத்தாலும், தி.மு.கழக ஆட்சியில் கிராமப் பகுதிகளை இணைக்கும் மையப் பகுதிகளில் நூற்றுக்கு மேற்பட்ட கல்லூரிகள் உருவாக்கப்பட்ட காரணத்தினாலும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களிலேயே நகர்ப்புறத்தில் உள்ளவர்கள் மட்டுமன்றி, கிராமப்புறத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தவர்களும் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் அக்கறை காட்டத் தலைப்பட்டார்கள்.

முன்னேறிய சமுதாயத்தில் பெரும்பாலும் மூன்று நான்கு தலைமுறையினர் படித்தவர்களாக, பட்டதாரிகளாக, பெரும் உத்தியோகம் வகித்தவர்களாக அல்லது வகிப்பவர்களாக இருப்பார்கள்.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் நகர்ப்புறங்களில், அல்லது நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்வோர் மட்டுமே ஒன்றிரண்டு தலைமுறையினர் படித்தவர்களாக - பட்டதாரிகளாக - உத்தியோகம் வகித்தவர்களாக - அல்லது வகிப்பவர்களாக இருப்பார்கள்.

ஆனால் கிராமப் பகுதிகளில் மிகப்பெரும்பான்மையினர் - பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயங்களில் இப்பொழுதுதான் - முதல் தலைமுறையினர், கல்லூரிகளில் காலெடுத்து வைத்திடவும் - வேலை வாய்ப்புகளை முதல் தடவையாகப் பெறவுமான பேறு பெற்றுள்ளனர்.

இப்படிப் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் மாணவர்கள், ஏற்கனவே முன்னேறிய சமுதாயத்து மாணவர்களுடன் போட்டி போடவோ - அல்லது நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுடன் போட்டி போடவோ - வாய்ப்பும் வசதியும் பெற்றவர்கள் அல்லர் என்பது மேற்சொன்ன விளக்கத்தால் நன்கு தெளிவாகும்.

இந்தச் சூழ்நிலையில்தான் எம்.ஜி.ஆர். அவர்கள், தொழிற்கல்லூரிகளில் சேருவதற்கு நுழைவுத் தேர்வு முறையைக் கொண்டு வருகிறார்.

இதுவரையில் நேர்காணல் INTERVIEW முறையில்தான் மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி போன்றவற்றுக்குத் தேர்வு நடைபெற்று வந்தது.

நேர் காணல் குழுக்கள் அந்தந்தப் பகுதிக்கு சென்று மாணவர்களைக் கண்டு தேர்வு நடத்தி வந்தன.

இப்போது அந்த முறையை மாற்றிவிட்டு நுழைவுத் தேர்வு முறையைப் புகுத்துகிறார்களாம்.

பிளஸ் டூ தேர்வு எழுதிய மாணவர், மீண்டும் ஒரு தேர்வு எழுத வேண்டும் -

எதற்காக இந்த முறை?

இதற்கு எம்.ஜி.ஆர். அளிக்கும் விளக்கம் என்ன?

நேர் காணல் முறையில் ஊழல் ஏற்பட்டு விட்டது! அதனால் நுழைவுத் தேர்வு என்கிறார்!

நேர் காணல் முறைத் தேர்வில் இதுவரையில் தமிழக வரலாறு காணாத ஊழலும், லஞ்ச லாவண்யக் கேடுகளும் நடைபெற்று நூறு மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, உயர்நீதிமன்றம் அந்த நூறு மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் தர வேண்டுமென்று தீர்ப்பு அளித்ததை நாடு மறந்துவிடவில்லை.

அந்தத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப் போகிறேன் என்று திருச்சியில் முழங்கிய எம்.ஜி.ஆர். அதன் பிறகு மூச்சுப் பேச்சின்றி முடங்கிப் போய் விட்டார்.

பல ஆண்டுக் காலமாக நேர் காணல் முறை தமிழகத்தில் தொழிற்கல்லூரிகளில் கடைப்பிடிக்கப்பட்டுத்தான் வருகிறது!

ஆனால் எம்.ஜி.ஆர். ஆட்சியில்தான், அந்த முறையைப் பயன்படுத்தி ஒரு மாணவனுக்கு ஐந்து லட்சம், பத்து லட்சமென்று லஞ்சம் பெறப்பட்டு கல்லூரிகளில் இடம் அளிக்கப்பட்ட அக்கிரம ஊழல் நடைபெற்றுள்ளது.

விண்ணப்பம் போடுவதற்கே உரிய மார்க்குகள் வாங்காத மாணவர்களுக்கெல்லாம் இடம் கொடுக்கப்பட்டது என்றால், எத்தனை லட்சங்கள் கை மாறியிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

தேவைக்கு அதிகமான மார்க்குகள் வாங்கிய மாணவர்கள் அமைச்சர்களுக்கு தேவைப்பட்ட லஞ்சத்தைக் கொடுக்காததால் - அல்லது கொடுக்க இயலாததால் தேர்வு செய்யப்படவில்லை என்பதும் ஊர் சிரிக்கிற அளவுக்கு வெளிவந்த உண்மைதானே!

இந்த உண்மைக்கு திரை போட முடியாமல் திண்டாடுகிற எம்.ஜி.ஆர். - தன்னை மக்கள் மத்தியில் மீண்டும் உத்தமன் என்று காட்டிக்கொள்ள நடத்தப் போகும் நாடகமே நுழைவுத் தேர்வு என்பதாகும்.

இந்த நுழைவுத் தேர்வு முறையினால் - பின்தங்கிய கிராமப் பகுதிகளில் இருந்து வருகிற மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். Open Competition பொதுத் தொகுப்பு பட்டியலில் கூட பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஓரளவுக்கு இடம் பெறலாம் என்றுள்ள வாய்ப்பும் பெருமளவுக்குத் தடைப்பட்டு விடும்.

நேர் காணல் முறையில் புரிந்த ஊழலை விட, அதிகமான ஊழலை இந்த நுழைவுத் தேர்வு முறையின் மூலம் செய்வதற்குப் போதுமான சந்து பொந்துகள் இருப்பதை எம்.ஜி.ஆர். அவர்கள் கண்டுபிடித்துத்தான், அதிக ஆதாயம் கிடைக்கும் முறை என்று இதனை ஆராதித்து அறிமுகப்படுத்துகிறார்.

மற்ற மாநிலங்களில் நுழைவுத் தேர்வு முறை இருக்கிறதே என்று சிலர் வாதிடக்கூடும்.

அந்த மாநிலங்களில் பின்தங்கிய கிராமப்பகுதிகளில் உள்ள மக்களின் நிலை இன்னமும் கல்வி அறிவற்ற இருண்ட நிலைதான் என்பதை மறந்துவிடக் கூடாது!

அந்த நிலைதான் தமிழகத்திற்கும் வர வேண்டுமென்று வாதிடுதல் நியாயமா?

எனவே, கிராமப்புற மக்களின் எதிர்காலம் இருளடையாமல் இருக்கவும் - பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றப் பாதையில் படுகுழி வெட்டப்படுவதை நிறுத்தவும் - திட்டமிட்டு நடத்தப்பட இருக்கிற திரைமறைவு ஊழலை அணைபோட்டுத் தடுக்கவும் - நுழைவுத் தேர்வு எனும் முறைக்கு எதிராகத் தமிழகம் போர்க்கொடி உயர்த்திடத் தயங்கக் கூடாது. தயங்காது!

அன்புள்ள,

மு. க.

13-06-1984

1226. ஓடி ஒளியும் கோழையல்ல நான்!

உடன்பிறப்பே,

எனக்கு பிந்தரன்வாலேயின் முடிவுதான் ஏற்படுமென்று தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும், அவரது கூட்டணிக் கட்சியான இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டுக் கமிட்டியின் தலைவர் திருவாளர் பழனியாண்டி அவர்களும் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள். இருவரும் கலந்து பேசிய பிறகே இப்படியொரு பிரகடனத்தைச் செய்திருப்பதாகத் தெரிகிறது!

தமிழ்நாடு தனியாகப் பிரிய வேண்டுமென்று நான் சமீபத்தில் பேசியதாக என் மீது ஒரு பொய்யான குற்றச்சாட்டைக் கூறி, அதற்காக எனக்குப் பிந்தரன்வாலேயின் முடிவுதான் ஏற்படுமென்று இருவரும் கூறியிருக்கிறார்கள்.

எனது மணிவிழா நேரத்தில் அவர்கள் வழங்கியுள்ள இத்தகைய வாழ்த்தினைக் கண்டு நான் வருந்தவில்லை! கலங்கவுமில்லை!

ஏதாவது ஒரு பழியைச் சுமத்தி தீர்த்துக்கட்ட வேண்டுமென்று திட்டமிட்டுவிட்ட பிறகு, பேசாத ஒன்றைப் பேசியதாகக் கற்பனை செய்து கொண்டு பொய் கூறுவது கஷ்டமா என்ன?

ஆறிலும் சாவுதான் - நூறிலும் சாவுதான்! ஆனது ஆகட்டுமே! என்ற வீரவரிகளை உச்சரித்துக் கொண்டு பொதுவாழ்விலே குதித்த என்னை, எம்.ஜி.ஆர். - பழனியாண்டிகளின் மிரட்டல் எதுவும் செய்து விடாது!

பழனியாண்டிக்கே தெரியும், அவரே பல கூட்டங்களில் பேசியிருக்கிறார் - கல்லக்குடி போராட்டத்திற்கு வழியனுப்பு விழாவில் லால்குடியில் இந்தப் பழனியாண்டிதான் தலைமை வகித்ததாகப் பெருமையுடன் குறிப்பிட்டிருக்கிறார்! பாவம்!

அப்போது அவர் தி.மு.கழகத்தின் துணையோடு வெற்றி பெற்ற சுயேச்சை எம்.எல்.ஏ.!

அன்றைக்குக் கல்லக்குடி ரயிலடியில் தண்டவாளத்தில் படுத்திருந்த எங்கள் தலைகள் மீது ரயிலேறி நசுக்கியிருந்தாலே கதை ஒரு வழியாக முடிந்திருக்கும்!

இப்போது பழனியாண்டியும், எம்.ஜி.ஆரும் என்னைப் பிந்தரன்வாலே போல முடிவெய்திடச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளத் தேவையில்லாமலே போயிருக்கும்!

புதுவையில் அடித்து வீழ்த்தியபோதோ - கோட்டூர்புரத்தில் கொலைவெறியர்கள் கோரதாண்டவமாடியபோதோ - இந்த உயிர் போயிருந்தால், பிந்தரன்வாலேயின் வழியில் என்னை அனுப்பி வைக்க வேண்டிய அவசியம் எம்.ஜி.ஆருக்கும், பழனியாண்டிக்கும் இப்போது ஏற்பட்டிருக்காது!

என்ன செய்வது! பெரியார் வழியில் - அண்ணா வழியில் ஏதோ சில பணிகளை இந்தத் தமிழகத்திற்குச் செய்திட வேண்டுமென்பதற்காக நானும் அறுபது ஆண்டுகள் வாழ்ந்துவிட்டேன்!

அதற்கு மேல் நான் வாழக்கூடாது! பிந்தரன்வாலே போல ஆகி விட வேண்டுமென்று பழனியாண்டியும், எம்.ஜி.ஆரும் கருதுகிறார்கள் என்றால் - ஓய்வின்றி உழைத்திட்ட எனக்கு, நிலையான ஓய்வு அளிக்கப் பெரிதும் விரும்புகிறார்கள் என்றே பொருள்! அதற்காக அவர்களுக்கு முன்கூட்டியே நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நமது கழகம், பிரிவினைக் கோரிக்கையை 1962-ஆம் ஆண்டு அண்ணா அவர்களின் காலத்திலேயே கைவிட்டு விட்டது என்பதை எத்தனை முறைதான் எடுத்துக் கூறுவது?

இந்திய ஒருமைப்பாட்டிலும், பாதுகாப்பிலும், அக்கறையுள்ள காரணத்தினால்தான் கழக ஆட்சியில் பங்களாதேஷ் போரின் போது எந்த மாநிலமும் தராத அளவுக்குத் தமிழ்நாடு சார்பாக ஆறு கோடி ரூபாய் யுத்த நிதி வசூலித்து பிரதமர் இந்திரா அம்மையாரிடம் வழங்கப்பட்டது.

பஞ்சாப் என்று ஒரு வார்த்தையை உச்சரித்து விட்டோனாம்! அதனால் பிந்தரன்வாலேயின் கதி ஏற்படுமாம்! இப்படிப் பேசியிருக்கிறார்கள் இருவரும்!

உடன்பிறப்பே,

பஞ்சாப் என்ற சொல்லை எதற்குப் பயன்படுத்தினேன் - எப்போது பயன்படுத்தினேன் - என்பது உனக்கு தெரியும்! ஏன்? அவர்களுக்கும் கூடத் தெரியும். ஆனாலும் திரித்துக் கூறுகிறார்கள் திட்டத்தை நிறைவேற்ற!

இதோ! இடைத்தேர்தல் நேரத்தில் நான் பேசி பத்திரிகையில் வெளிவந்துள்ளதில் ஒரு பகுதியை மீண்டும் நினைவூட்டுகிறேன்.

ஆங்காங்கு திருமண மண்டபங்களிலே அடியாட்களைக் கொண்டு வந்து உட்கார வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு அமைச்சருக்கும் அவர்களுடைய விகிதாச்சாரத்திற்கு ஏற்ப நூறு அடியாட்கள், இருநூறு அடியாட்கள் என்று லாரிகளிலும் வேன்களிலும் ஏற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நேற்று என்னுடைய உயிருக்கு குறி வைத்தார்கள். நேற்று அவர்கள் வீசி எறிந்த சோடா பாட்டில் மாத்திரம் கொஞ்சம் தவறி என்னுடைய தலைக்கு மேலே போனது, நெற்றிப் பொட்டிலே பட்டு இருக்குமேயானால் இன்றைக்கு இவ்வளவு பெரிய கூட்டம் என்னுடைய இறுதி ஊர்வலத்திற்கு வந்திருக்கக்கூடிய கூட்டமாக இருந்திருக்கும்.

அந்தக் குண்டர்களைத் தயாரித்தவர் போக்குவரத்துத்துறை அமைச்சராம். முத்துசாமி என்கிற அந்த அமைச்சர் நூறு அடியாட்களைக் கொண்டு வந்து, சென்னையிலே இருக்கிற சில ரௌடிக் கும்பல்களை அவர்களோடு சேர்த்து விட்டு என் மீது சோடா புட்டி வீசுகிறார்கள். அது என்னுடைய வேனில் படுகிறது. என்னுடைய உடம்பெல்லாம் சோடா புட்டியின் சிறு சிறு கண்ணாடித் துகள்கள்.

இன்று காலையிலும், நான் பிரச்சாரம் செய்கிறபொழுதும் வழியிலே மறிக்கிறார்கள். அங்கே கண்டவாறு இழிமொழிகளைப் பேசுகிறார்கள். போலீசார் எங்களிடத்திலே சொல்வது ஒன்று - ஆனால் நடந்து கொள்வது ஒன்று. இந்த நிலை நீடிக்குமேயானால் - இந்த வன்முறைதான் தேர்தல் வெற்றியை நிர்ணயிக்கக் கூடியது என்று எம்.ஜி.ஆர். கருதுவாரேயானால், நாங்களும் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல.

அந்த ஏற்பாடுகள்தான் எம்.ஜி.ஆர். செய்திருக்கிற ஏற்பாடுகள் என்றால், இன்று இரவே பத்து மாவட்டங்களுக்குத் தகவல்

அனுப்ப எங்களால் முடியும். எனவே எனது அருமை நண்பர் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களே, நீங்கள் அதற்குத் தயார் என்றால் நானும் அதற்குத் தயார்!

இன்று காலையிலே கூட ஒரு ஐநூறு அ.தி.மு.க.வினர் கொடிகளுடன் வந்து வழிமறித்தார்கள். போலீசார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். நான் நம் கழக உடன்பிறப்புகளைப் பார்த்து எல்லோரும் ஒதுங்கி நில்லுங்கள்! நான் ஒருவன் தனியாக அந்த இடத்திற்குச் செல்லுகிறேன். நடப்பது நடக்கட்டும் என்று சொன்ன பிறகுதான் போலீசார் அந்த இடத்திற்கு ஓடிச் சென்று அவர்களைச் சத்தம் போடாமல் இருக்கச் சொன்னார்கள். எங்களுடைய வேனுக்கு வழி விடச் சொன்னார்கள்.

ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், வன்முறைதான் அவர்களுடைய தேர்தல் பிரச்சாரம் என்றால், தேர்தல் பணி என்றால் - அது ஒன்றும் பிரமாதமான வேலையல்ல, அதை எங்களாலேயும் செய்ய முடியும். ஆனால் முதலமைச்சருக்கு இருக்கிற பொறுப்பை எம்.ஜி.ஆர். உணர வேண்டும். இது அகப்பையிலே உளுந்து வைத்திருப்பவளுக்கும், அகப்பையிலே உளுந்து இல்லாதவளுக்கும் நடைபெறுகிற போராட்டம்! மறந்துவிடக்கூடாது. அகப்பையிலே உளுந்து இருந்து, ஒருத்தி சண்டை போட்டால் உளுந்து சிதறி விடும். உளுந்து இல்லாத அகப்பை வெறும் அகப்பை. அதைச் சுற்றினால் அவளுக்குக் கவலையில்லை. என் கையில் இருப்பது உளுந்து இல்லாத அகப்பை. எம்.ஜி.ஆர். அவர்களே, உங்கள் கையில் இருப்பது உளுந்து இருக்கிற அகப்பை. எனவே வன்முறைதான் பரிகாரம் என்றால் நாடு அமளிக்காடாகும். தமிழ்நாடு பஞ்சாபாக மாறும். மாற வேண்டும் என்று நான் சொல்லவில்லை! மாறக்கூடாது. அப்படி மாறுமேயானால் பிறகு ஆட்சி இருக்காது.

இதுபோல நான் இடைத்தேர்தல் பிரச்சாரத்தின்போது எம்.ஜி.ஆர். ஆட்சியின் அராஜக வன்முறைகளைக் குறிப்பிட்டு - தமிழகத்தையும், பஞ்சாபைப் போல வன்முறைக் களமாக மாற்றாதீர்கள் என்று எச்சரித்ததைத்தான் பிரிவினை முழக்கம் என்றும், அதனால் எனக்கு பிந்தரன்வாலேயின் கதி

ஏற்படுமென்றும் பழனியாண்டியும், எம்.ஜி.ஆரும் திரித்துக் கூறி திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள்!

அவர்களது பேச்சளவிலே உள்ளது, செயல் அளவிலே வடிவம் பெறுமானாலும் அதற்காக ஓடி ஒளியும் கோழையாக, என்னைப் பெரியாரும், அண்ணாவும் வளர்க்கவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

14-06-1984

1227. அந்த அமைச்சர்கள் எங்கே? எங்கே?

உடன்பிறப்பே,

நுழைவுத் தேர்வு முறையை நுழைத்தே தீருவது என்ற வைராக்கியத்துடன் வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டார் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.!

மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வில் பெரும் ஊழல் நடைபெற்றதை உயர்நீதி மன்றத்துத் தீர்ப்பின் மூலமாக நாடு புரிந்து கொண்டு இந்த நாணயஸ்தர்களை அடையாளமும் தெரிந்து கொண்டதல்லவா? அந்த வெட்கக் கேட்டை மறைக்கத்தான் நுழைவுத் தேர்வு என்ற பட்டுத் துணியால் முக்காடு போட்டுக்கொள்வதற்கு முனைகிறார் எம்.ஜி.ஆர்.!

விண்ணப்பம் போடுவதற்குரிய மார்க் கூட வாங்காத மாணவர்களின் பெற்றோர்களிடம் பல லட்சத்தைப் பச்சை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டு, அந்த மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் தரப்பட்டது! தேவைக்கும் அதிகமான மார்க் எடுத்திருந்தவர்கள் லஞ்சம் கொடுக்கச் சம்மதிக்காத காரணத்தால் அல்லது வழியில்லாத காரணத்தால் நூறு பேருக்கு மேற்பட்டவர்களுக்கு இடமில்லை என அறிவிக்கப்பட்டது! அந்த மாணவர்கள் உயர்நீதிமன்றத்தை நாடி வழக்கு நடத்தித்தான் இறுதியாகத் தங்களுக்குரிய மருத்துவக் கல்லூரி இடத்தைப் பெற முடிந்துள்ளது.

கலவைச் சாராய ஊழல் - கடைகள் ஏல ஊழல் - பாட்டில்களில் ஊழல் - இப்படி எத்தனையோ ஊழலோ ஊழல்களில் மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வின் மகத்தான ஊழலும் சேர்ந்து கொண்டவுடன், அதை மறைத்துக் கொண்டு மீண்டும் மக்களை ஏமாற்றும் திட்டத்துடன் நுழைவுத் தேர்வினை அறிமுகப்படுத்துகிறார்.

இந்தத் தேர்வு குறித்தும், இதனால் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் - குறிப்பாகக் கிராமப் பகுதியினர் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுவார்கள் என்பது குறித்தும் கடந்த 13-ஆம் தேதி, நுழைவுத் தேர்வு! ஒரு திட்டமிட்ட நாடகம் என்ற தலைப்பில் விளக்கமாக எழுதியிருக்கிறேன். திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் தளபதி வீரமணி அவர்களும் நுழைவுத் தேர்வின் அபாயம் குறித்து விரிவாகத் தொடர்ந்து அறிக்கைகள் விடுத்துள்ளார். தமிழ்நாடு பார்வார்டு பிளாக் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோரின் நலம் நாடும் அமைப்புகள் இந்த நுழைவுத் தேர்வினால் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் கேடுகளைச் சுட்டிக்காட்டிக் கண்டித்துள்ளன.

தமிழக அரசின் சில அமைச்சர்கள் பத்திரிகையாளர்களுக்கு அளித்துள்ள பேட்டிகளைக் காணும்பொழுது, இந்த முக்கியமான பிரச்சினை குறித்த முடிவு அமைச்சரவையில் உள்ளவர்களைக் கலந்தோ அல்லது அமைச்சரவைக் கூட்டத்திலோ எடுக்கப்படவில்லை என்பது தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தெரிகிறது.

முன்பு இப்படித்தான் ஒன்பதாயிர ரூபாய் உச்ச வரம்பு கொண்டு வந்து பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டு முறையில் ஆபத்துக்கு வித்திட்டபோது, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக இருந்த தன்னை முன்கூட்டிக் கலந்து கொள்ளவில்லையென்றும், விஷயம் தெரிந்த பிறகு கூட, தனது மறுப்புக் கருத்தை முதலமைச்சர் மதிக்காமல் புறக்கணித்து விட்டார் என்றும் - அந்தத் துறையின் அமைச்சராக இருந்து விலகிய நண்பர் எட்மண்டு அவர்கள் பல பொதுக்கூட்டங்களில் குற்றம் சாட்டிப் பேசியதை யாரும் மறந்திருக்க முடியாது.

இந்த நுழைவுத் தேர்வு பற்றி இரண்டுவிதக் கருத்துகள் இருக்கின்றன. முன்பு பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு என்ற முறையைக் கொண்டு வந்தபோதுகூட, பல நிபுணர்களும் கட்சித் தலைவர்களும் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்ததை யொட்டி, அந்தத் திட்டத்தை முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கை விட்டார். அதேபோல் நுழைவுத் தேர்வு முறையினால் கிராம மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதை ஆதாரபூர்வமாக எடுத்துச் சொன்னால் இதையும் முதலமைச்சர் பரிசீலனை செய்வார்.

இத்தகைய கருத்தை அமைச்சர் காளிமுத்து பத்திரிகை நிருபர்கள் பேட்டியில் வெளியிட்டிருப்பதிலிருந்து அவருக்கே இதில் மாறுபட்ட கருத்து இருப்பதுபோல் தோன்றுகிறது! இருந்தாலும் அதனை மறைத்துக் கொண்டுதான் அவரைப் போன்றோர் நடக்க வேண்டியுள்ளது!

காரணம், அவரது கூற்றுப்படியே நிபுணர்களும், பல கட்சித் தலைவர்களும் பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு கூடாது என்று வாதிட்ட போது அதனைக் கேட்காமலே அந்த ஆண்டு தனது எண்ணப்படியே தேர்வு நடத்தச் செய்தவர் எம்.ஜி.ஆர். என்பதையும், எம்.ஜி.ஆர். வெளியிட்ட பொருளாதார அடிப்படை இட ஒதுக்கீடு ஆணைதான் சிறந்தது என்று அமைச்சர் காளிமுத்து நாள்தோறும் கட்டுரைகள் தீட்டி, திராவிடர் கழகத்தையும், தி.மு.கழகத்தையும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியையும் தாக்கிக் கொண்டிருந்ததையும் வரலாற்றிலிருந்து மறைத்து விடமுடியாது!

திராவிடர் இயக்க அடிப்படைக் கொள்கை, குறிக்கோள் குறித்த அரிச்சுவடி கூடத் தெரியாத எம்.ஜி.ஆர். அவர்கள், பெரியாரும், அண்ணாவும் உறுதியுடன் போற்றிப் பாதுகாத்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ உரிமையின் கழுத்தை நெரிக்க எத்தனை முறை முயற்சித்திருக்கிறார் என்பதும், உண்மையான திராவிட இயக்கத்தினர் அந்த முயற்சிகளை முறியடிக்க எத்தகைய போராட்டங்களை நடத்த வேண்டியிருந்தது என்பதும் நாடறிந்த உண்மையேயாகும்.

எடுத்த எடுப்பில் - தோற்றத்திற்கு நுழைவுத் தேர்வு என்பது ஊழலே நுழைய முடியாத ஒன்று என்பதைப் போலத் தெரிந்தாலும்கூட - அந்த ஊழலையும் திட்டமிட்டுச் செய்திடவே எம்.ஜி.ஆர். அரசு, இந்தப் புதிய முறையைப் பயன்படுத்தப் பார்க்கிறது!

பெட்டிக்குள் பணம்! அதைப் பூட்டிய சாவி என் கையில்! எனவே, பணத்தை எவன் திருட முடியும்!

என்று ஒருவன் மார் தட்டிக் கொண்டிருக்கும் போது - கெட்டிக்காரத் திருடன் பெட்டியையே திருடிக் கொண்டு போய்விட்டால் எப்படியோ அப்படித்தான் இந்த நுழைவுத் தேர்வில் நடைபெறக் கூடிய ஊழலும் ஆகும்!

பழைய ஆட்சிக் காலங்களில் இருந்து - கழக ஆட்சி நடைபெற்ற காலம் வரையில் நேர்காணல்முறை வாயிலாகத்தான் தொழிற் கல்லூரிகளின் மாணவர் தேர்வு நடைபெற்றது! அரைமார்க்கு, ஒரு மார்க்கு குறைவாகப் பெற்ற காரணத்தால் அமைச்சர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கும், கழக முன்னணியினர் வீட்டுப் பிள்ளைகளுக்கும் கூட தொழில் கல்லூரிகளில் அப்போது இடம் கிடைக்கவில்லை என்பதுதான் சரித்திரம்! இதற்குப் பல எடுத்துக்காட்டுகளைக் கூற முடியும்!

ஆனால் இன்று? மருத்துவக் கல்லூரி தேர்வுக்கு விண்ணப்பம் போடத் தகுதியுள்ள மார்க்குகளே வாங்காத மாணவர்களுக்கே கூட மருத்துவக்கல்லூரியில் இடம்! அதற்கு முதலமைச்சருக்கு பல லட்சம் லஞ்சம்!

இந்த விவகாரம் வெளி உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டவுடன் நுழைவுத் தேர்வு என்ற மாயவலை!

அந்த மாயவலையில் வீழ்ந்து, மாண்டுமடிந்திட, கிராமப்புறத்து பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள்!

நுழைவுத் தேர்வு முறையினால் கிராமப்புற மக்கள் பாதிக்கப்படுவார்கள் - அதனால் அதைக் கொண்டுவர மாட்டோம் - என்று இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்புகூட இந்த ஆட்சியின் அமைச்சர்கள் பேசினார்கள்!

அவர்கள் எல்லாம் இப்போது எங்கே?

அவர்கள் எங்கே? என்று தேடும் காலத்தை அவர்களே விரைவில் தேடிக் கொள்ளப் போகிறார்களா?

அனபுள்ள,

மு. க.

17-06-1984

1228. ஆணவங் காட்டாதீர்! ஆள் தேடி அலையாதீர்!!

உடன்பிறப்பே,

மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்வு செய்யும் நேர்காணல் முறையில் INTERVIEW சென்ற ஆண்டு எம்.ஜி.ஆர். ஆட்சியில் வரலாறு காணாத ஊழல் ஏற்பட்டு, வாய்ப்பிழந்த மாணவர்கள் நியாயம் பெறுவதற்காக உயர்நீதி மன்றம் சென்று சுமார் நூறு மாணவர்களை மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்ப்பு வழங்கப்பட்டது.

அந்தத் தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்யப் போகிறோம் என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் திருச்சியில் நிருபர்களிடம் கூறினார். அப்பீல் முடிவு முதலமைச்சரே ராஜினாமா செய்ய வேண்டியிருக்கும் என்கிற அளவுக்கு ஆபத்தாக இருந்தாலும் இருக்கும் என்று சட்ட ஆலோசகர்கள் அபிப்பிராயம் கூறிய பிறகு, அப்பீல் செய்கிற யோசனையை முதலமைச்சர் கைவிட்டு விட்டார்.

நேர்காணல் முறையில் INTERVIEW மருத்துவக் கல்லூரி மாணவர்களைத் தேர்ந்தெடுத்ததில் ஊழல் நடைபெற்றிருப்பதாக, பாதிக்கப்பட்ட மாணவர்கள் வழக்குத் தொடர்ந்தனர்.

ஏற்கனவே நாங்கள் பிளஸ் டூ தேர்வில் வாங்கியிருந்த மார்க்குகள் குறைவானவை அல்ல! நேர் காணலின் போது குழுவில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் சரியான விடைகளையே அளித்திருக்கிறோம்! பழைய மார்க்குகளையும் - நேர்காணல் மார்க்குகளையும் சேர்த்துக் கணக்கிட்டால் மருத்துவக் கல்லூரிக்கு நாங்கள் நிச்சயமாகத் தேர்வு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், நேர்காணலின்போது வேண்டுமென்றே திட்டமிட்டு நாங்கள் பெற்ற மார்க்குகளைக் குறைத்துக் காட்டி, எங்களைத் தேர்வு செய்யாமல் விட்டுவிட்டார்கள்.

இந்தக் கருத்தமைந்த முறையீடுதான், பாதிக்கப்பட்ட மாணவர்களின் சார்பில் நீதிமன்றத்தில் எடுத்துக் கூறப்பட்டது!

நேர் காணலில் நீங்கள் சரியான விடைகள் அளித்துள்ளீர்கள் என்பதற்கு என்ன ஆதாரம்?

நீதிமன்றத்தில் எழுப்பப்பட்ட ஐய வினா இது!

நேர்காணலின் போது கேட்கப்பட்ட கேள்விகளும், நாங்கள் அளித்த பதில்களும் டேப் ரிக்கார்ட் செய்யப்பட்டுள்ளன. அந்த டேப்பு நாடாவைப் போட்டுப் பார்த்தால் உண்மை தெரியும்

மாணவர்கள் சார்பில் இந்த விளக்கம் தரப்பட்டது நீதிமன்றத்திற்கு!

அந்த டேப்புகளைத் திரும்பப் போட்டு உண்மையை நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு ஒரு குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு, அந்த டேப்புகளை போட்டுக் கேட்டு சுமார் நூறு மாணவர்களும் கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லியிருப்பதை உணர்ந்து, அவர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்தை நீதிமன்றத்துக்கு அறிவித்தது.

அந்த அடிப்படையில், பாதிக்கப்பட்ட மாணவர்கள் பரவசமடையும் தீர்ப்பு உயர்நீதி மன்றத்தில் வழங்கப்பட்டது.

உடன்பிறப்பே! நான் இந்த விவரங்களைக் குறிப்பிடும் போது சிலர், பார்த்தாயா! பார்த்தாயா! நேர்காணல் முறையில் எவ்வளவு ஊழல் இருக்கிறது? எத்துணைச் சுலபமாக ஊழல் செய்ய முடிகிறது? அதனால்தான் நேர்காணல் முறையை ஒழிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று கூறுவார்கள்! கூத்தாடுவார்கள்!

இதில் ஒரு முக்கியமான விஷயத்தை மறந்து விடக்கூடாது!

நேர்காணல் முறையில் ஊழலோ, முறைகேடோ, வேண்டுமென்றே தவறோ நடத்தப்பட்டிருக்குமேயானால், அதனை நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டி, நேர்காணலின் போது பயன்படுத்தப்பட்ட டேப்பைப் போட்டுக் காட்டி, நியாயம் பெறக்கூடிய வழியிருக்கிறது என்பதை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு நமக்கு மெய்ப்பிக்கிறது!

இப்படி ஊழல் நடந்தால் அதனை மறைக்க முடியாமல் அம்பலப்படுத்தி விடுகிற முறையாக இந்த நேர்காணல் முறை

இருக்கிற காரணத்தால்தான், இந்த முறையையே ஒழித்துவிட்டு ஊழல் பெருச்சாளிகள் ஒளிந்து கொள்வதற்கு ஏற்றாற்போல நுழைவுத் தேர்வு, கம்ப்யூட்டர் என்றெல்லாம் சொல்லி மற்றுமொரு ஏமாற்று நாடகத்தை - மோசடிக்கூத்தை - அரங்கேற்ற முனைகிறார்கள்!

நுழைவுத் தேர்வில் கேள்வித்தாள் - விடைத்தாள் - இவையெல்லாம் எப்படியிருக்கும் என்பதில்கூட இன்னமும் முதலமைச்சருக்கோ அல்லது மற்ற அமைச்சர்களுக்கோ குழப்பம் தீர்ந்ததாகத் தெரியவில்லை!

கடந்த 16-ஆம் தேதி செட்டிநாட்டரசர் இரங்கல் நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் அவர்கள், கேட்கப்படும் கேள்விகளுக்குக் கீழே விடைகள் அளிக்கப்பட்டிருக்கும். அந்த விடைகளில் சரியான விடைக்கு நேராக ஒரு கோடு கிழிக்க வேண்டும் - அதாவது டிக் செய்ய வேண்டும் என்று விளக்கமளித்திருக்கிறார்.

ஆனால், நுழைவுத் தேர்வு மாதிரி வினா விடைத் தாள்கள் Model Papers வெளியாகியிருக்கின்றனவே! அவற்றைப் பார்த்தால் விளக்கம் வேறுவிதமாக இருக்கிறது!

உதாரணமாக ஒரு கேள்வி :-

விபத்து ஒன்றில் எந்த உறுப்பில் அடிபட்டால் உடனடியாக ஆபத்து ஏற்படும்?

1 கை

2 கால்

3 தலையின் முன் பகுதி

4 பிடரிப் பகுதி

இதில் பிடரிப் பகுதி என்பதுதான் சரியான விடை என்றால் முதலமைச்சர் சொன்னது போல 4-வது விடைக்கு நேராக டிக் செய்ய வேண்டும்! அதாவது கோடு போட வேண்டும்!

ஆனால் மாதிரித் தாள் MODEL PAPER அப்படிச் சொல்லவில்லை! வினாத் தாளுடன் இணைத்து அளிக்கப்படும் தனியான விடைத் தாளில் போடப்பட்டுள்ள கட்டங்களில் பிடரிப் பகுதி என்று எழுதுவதற்குப் பதிலாக 4 என்ற எண்ணைக் குறிக்க வேண்டும்.

இதுதான் விடை எழுதும் முறை! இவ்வாறு அந்த மாதிரித் தாள் விளக்கம் கூறுகிறது!

இதுபோல விடைத்தாள்கள் அமையுமேயானால், அது கோடு போடுகிற முறையாக இருந்தாலும், அல்லது எண் குறிக்கிற முறையாக இருந்தாலும், அந்த முழுத்தாளையும் எடுத்து இஷ்டம் போல் மாற்றி வேறு தாளை வைத்து கம்ப்யூட்டருக்குள் கொடுத்தால் - ஆ! அய்யோ! அநீதி! என்று அது அலறவா போகிறது?

என்னதான் கம்ப்யூட்டர் இருந்தாலும் - அதில் தாள்களைச் சேகரித்து இயக்குகிறவன் மனிதன்தானே!

எனவே, ஊழலை ஊருக்குத் தெரியாமல் மறைத்துவிட நுழைவுத் தேர்வும், கம்ப்யூட்டர் முறையும் பயன்படுத்தப்படும் என்பதுதான் நமது அழுத்தமான கருத்து!

அது ஒருபுறமிருந்தாலும், நுழைவுத் தேர்வு முறையில் கிராமப்புறத்துப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எதிர்காலத்தில் மிகவும் பாதிக்கப்பட்டுப் பாழாவார்கள்!

ஏன்? நகர்ப்புறத்திலேயுள்ள பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட, ஓரளவு முற்போக்கடைந்துள்ள சமுதாயங்களின் மாணவர்கள் கூட OPEN COMPETITION பொதுத் தொகுப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள 32 சதவிகித இடத்தில் படிப்படியாக வருங்காலங்களில் பெறக்கூடிய வாய்ப்புகளை இழந்து, இறுதியில் பொதுத் தொகுப்பின் பக்கமே போக முடியாதவர்களாக ஆகிவிடுவார்கள்.

இந்த சமூக அநீதிகளை உருவாக்க வேண்டாம் என்பதை எடுத்துக் கூறித்தான் - நுழைவுத் தேர்வு முறையைக் கைவிட வேண்டுமென்று வற்புறுத்துகிறோம்!

இதில் ஆணவம் காட்டுவதோ - அல்லது அரசின் போக்கை ஆதரிப்பதற்கு ஆள் பிடிப்பதோ - பிரச்சினைக்குப் பரிகாரமாகாது என்பதை மட்டும் எச்சரிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

அன்புள்ள,

மு. க.

21-06-1984

1229. நீ இருக்கும்போது எனக்கென்ன கவலை!

உடன்பிறப்பே,

ஜூலைத் திங்கள் தொடக்கத்தில் நமது அனைத்துக் கட்சி முற்போக்குக் கூட்டணியின் அறவழித் தொடர் போராட்டங்கள் மூன்று கட்டங்களாக நடைபெற இருக்கின்றன.

அமெரிக்காவின் கைப்பாவையாக ஆடும் இஸ்ரேல் நாட்டின் இராணுவ இரகசிய நிறுவனத்துடன் உறவு கொண்டு இலங்கைத் தமிழர்களையும், இஸ்லாமியர்களையும் பெருங்கொடுமைக்கு ஆளாக்கும் சதித் திட்டத்தை வகுத்துள்ள ஜெயவர்த்தனே அரசை வன்மையாகக் கண்டித்து தமிழகம் எழுப்பும் போர்க்குரலை வெளிப்படுத்தும் நாளே ஜூலை 3-ஆம் நாள்!

படமுடியாதினித் துயரம், பட்டதெல்லாம் போதும் என்று கதறிக் கண்ணீர் மல்கித் துடிக்கும் இலங்கைத் தமிழர்க்கு மேலும் மேலும் புண்ணில் கோல் கொண்டு குத்துவது போல, இலங்கைச் சிங்கள வெறி அரசின் நடவடிக்கைகள் தொடருகின்றன!

இஸ்ரேலுடன் குலாவல்! அமெரிக்காவுடன் கொஞ்சல்! இந்தத் திரைமறைவுக் கூத்து இந்திய நாட்டுப் பாதுகாப்புக்கே எதிர்காலத்தில் அறைகூவலாகி விடக்கூடும் என்று அச்சங்கொள்வதிலும் தவறு இருக்க முடியாதல்லவா?

இலங்கை மண்ணில் தமிழ் இளைஞர்களே வெளியில் நடமாட முடியாத அளவுக்கு அடக்குமுறைத் தாண்டவம்! பிடிபட்ட இளைஞர்களைச் சிறைக் கோட்டங்களில் - காவல் நிலையங்களில் - சிங்களப் போலீஸ் அதிகாரிகள் சித்ரவதைக்கு ஆளாக்குகிற செய்திகள் செந்தேள்களெனச் செவியில் கொட்டி சிந்தையைக் கலங்கச் செய்கின்றன!

இலங்கைத் தமிழர்களின் உயிர், உடைமை, உரிமை, இவற்றினைக் காத்திட உரத்த குரல் எழுப்பிடவும் - உலக

ஜனநாயக சக்திகளின் உதவியைக் கோரவும் அனைத்துக் கட்சிகளும் தமிழகத்தில் ஓரணியில் திரண்டு தமிழகத்தின் தலைநகரில் கொடி உயர்த்தும் நாளே ஜூலை 3-ஆம் நாள் என்பதை நினைவிற்கொள்க!

சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதுவர் ஆலயத்திற்கு முன்பு ஜூலை 3-ஆம் நாள் காலையில் கண்டன ஊர்வலமாகச் சென்று - அலுவலகத்தின் முன்னால் அமைதி வழி ஆர்ப்பாட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

முற்போக்குக் கூட்டணியின் தலைவர்கள் அந்த அணிவகுப்புக்கு முன்னிலையேற்கிறார்கள். ஆம், நானும்கூட!

ஃ பறிக்காதே! பறிக்காதே! இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிக்காதே!

ஃ குரல் கொடுப்போம்! குரல் கொடுப்போம்! கொடுங்கோலன் ஜெயவர்த்தனேயின் அடக்குமுறையை எதிர்த்துக் குரல் கொடுப்போம்!

ஃ உலக ஜனநாயகச் சக்திகளே! இலங்கைத் தமிழர் உரிமைகளை - காத்திடுவீர்! காத்திடுவீர்!

ஃ அமெரிக்காவின் கைப்பாவை இஸ்ரேலுக்கு இலங்கையில் இடம் தராதே! இடம் தராதே!

இந்த முழக்கங்கள் விண்ணை முட்ட நமது கண்டன ஆர்ப்பாட்டம் ஜூலை 3-ஆம் நாள் காலையில் சென்னையில் வெற்றிகரமாக நடைபெற - எழுச்சியுடன் நடைபெற - உடன்பிறப்பே, அனைத்துக் கட்சிச் செயல்வீரர்களுடன் அணிவகுத்திடுக!

ஆயிரம் சாதனை மலரும் எனத் தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகளை அள்ளிக்கொட்டி விட்டு, இன்று தமிழகத்தையே கருகிடச் செய்து கொண்டிருக்கும் ஆட்சியாளருக்குத் தமிழக மக்களின் கொதிப்பையும், குமுறலையும் அமைதியான முறையில் உணர்த்த ஜூலை 4-ஆம் நாள்!

ஃ குடும்ப கார்டுக்கு - கொடுத்திடுக இருபது கிலோ அரிசி!

ஃ விடுபட்டோர்க்கும் குடும்பக் கார்டுகளை விரைவில் வழங்கிடுக!

ஃ சிவில் சப்ளைக் கார்ப்பரேஷன் கடைகளை - கூட்டுறவுத் துறைக்கு மாற்றாதே!

ஃ பத்தாயிரம் சிவில் சப்ளை ஊழியர்களை - பட்டினி போட்டுக் கொல்லாதே!

இந்த முழக்கங்களுடன் அனைத்துக் கட்சியினரும் அணிவகுத்து முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட ரேஷன் கடைகளின் முன்னால் அறவழி ஆர்ப்பாட்டம் நடத்துவர். ஆங்காங்கு நமது அனைத்துக்கட்சித் தலைவர்களும் ஒவ்வொரு இடத்திலும் முன்னிலை வகிப்பர்! சென்னையில் கழகத்தின் சார்பில் பொருளாளர் சாதிக் அவர்கள் முன்னிலை!

மூன்றாவது கட்டப் போராட்டம் - ஜூலை 10-ஆம் நாள்!

தமிழக போலீசாரின் திறமையைச் சிதைத்தும் - அவர்தம் தகுதியைக் குலைத்தும் - தவறு செய்யும் அதிகாரிகளைத் தட்டிக் கொடுத்தும் - நீதி வழி நடக்க முனைவோரின் நெஞ்சில் தீயால் சுட்டும் - காவல்துறையின் மாண்பினையே கல்லறைக்கு அனுப்பி விட்ட எம்.ஜி.ஆர். அரசின் அடக்குமுறைகள், அரசின் அநியாய ஏவல் கேட்டுப் பொய் வழக்குப் புனைந்திடும் போலீசாரின் அநியாயப் போக்கு - காவல் நிலையத்துக் கைதிகளின் மரணங்கள் கணக்கற்றுப் போகும் நிலைமை - போலீஸ் நிலையத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமை - எதிர்க்கட்சிகளைப் பழி வாங்கும் சண்டாளத்தனம் - பாரபட்ச நடவடிக்கைகள் இவை அனைத்தையும் அம்பலப்படுத்தி, நமது உரத்த கண்டனத்தை - உறுதியான கண்டனத்தை ஓரணியில் நின்று அறிவிக்கத்தான் ஜூலை 10-ஆம் நாள் நமது அறவழி ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் காவல் அதிகாரிகளின் எஸ்.பி. அலுவலகங்களின் முன்னால் அணிவகுக்கிறது முற்போக்குக் கூட்டணி! அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஆங்காங்கு அந்த அணிகளுக்கு முன்னிலை ஏற்கிறார்கள்! சென்னையில் போலீஸ் கமிஷனர் அலுவலகத்துக்கு முன்பு நடைபெறும் அமைதி வழி ஆர்ப்பாட்டத்துக்கு நமது கழகச் சார்பில் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் முன்னிலை ஏற்போர் வரிசையில் கலந்து கொள்கிறார்!

- கொல்லாதே! கொல்லாதே! காவல் நிலையங்களில் கைதிகளைக் கொல்லாதே!
- போடாதே! போடாதே! பொய் வழக்குப் போடாதே!
- காவல் நிலையங்களா? கற்பழிப்புக் கூடங்களா?
- அறவழியைக் காப்போம்! அடக்குமுறையை எதிர்ப்போம்!

இந்த முழக்கங்கள் ஜூலை 10-ஆம் நாளன்று நாடு முழுதும் எழுப்பப்படல் வேண்டும்!

இந்த மூன்று கட்டப் போராட்டத்தை விளக்கிட ஜூலை 2-ஆம் நாள் நடைபெறும் அனைத்துக் கட்சிப் பொதுக்கூட்டங்களைச் சிறப்பாக நடத்திடுக! செம்மையுற ஏற்பாடு செய்க! மூன்று கட்டப் போராட்டம் முனைப்பாக நடைபெற்றிட இன்றே முனைக!

இதற்கிடையே ஜூலை 8-ஆம் நாள், நமது கழகப் பொதுக்குழு எடுத்துள்ள முடிவுக்கேற்ப - தமிழக முழுவதும் நுழைவுத் தேர்வு கண்டனப் பேரணிகளும் - பேரணி முடிவில் பொதுக்கூட்டங்களும் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நடந்திட வேண்டும்! ஜூலை 8, நமது கழகத்தின் சொற்பொழிவாளர்களின் எழுச்சி முரசங்கள் எங்கணும் ஒலித்திடல் வேண்டும்!

அன்று நான் வெளியில் இருந்தால் கடலூரில் பேசுகிறேன். மறுநாள் ஒன்பதாம் தேதி பண்ருட்டிப் பகுதியில் திருமணங்களையொட்டிக் கடலூர் தேதி ஜூலை 8 என்று ஒப்புதல் தந்துள்ளேன்! இடையிலே ஜூலை 7 வருகிறதே, அதனால்தான் வெளியில் இருந்தால் என்று சொல்லுகிறேன்!

நான் இருந்தாலும், இல்லா விட்டாலும் இயக்கப் பணிகளை எறும்புபோல் சுறுசுறுப்புக்காட்டி நிறைவேற்றி - ஏறுபோல் நிமிர்ந்து நடக்கும் இயல்பு படைத்த உடன்பிறப்பு நீ இருக்கும்போது எனக்கென்ன கவலை!

அன்புள்ள,

மு. க.

29-06-1984

1230. வழக்கறிஞர்களின் போர்க்கோலம்!

உடன்பிறப்பே,

ஜூன் 28-ஆம் நாள் வியாழக்கிழமையன்று தமிழக முழுதும் - ஏன்! புதுவை மாநிலம் உட்பட கோர்ட்டுகளுக்குச் செல்லாமல் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட வழக்கறிஞர்கள், தங்கள் உணர்வுகளை அரசுக்கு வெளிப்படுத்தியுள்ளனர். நெல்லை மாவட்டத்தில் உள்ள வழக்கறிஞர்கள் ஒரு வார காலமாகவே கோர்ட்டுகளுக்குச் செல்லாமல் உண்ணா நோன்பு போன்ற அமைதியான போராட்டங்களில் ஈடுபட்டுத் தங்களது எதிர்ப்பை வலியுறுத்தி வருகின்றனர்.

ஏன்? எதற்காக? என்பதனை விளக்கத் தேவையில்லை!

நெல்லையில் பிரபல வழக்கறிஞர் செய்யது அகமது அவர்களை ஒரு கொலை வழக்கில் தொடர்புபடுத்தி, அவரைக் கைது செய்ததைக் கண்டிக்கும் வகையில்தான் இந்தப் போராட்டம் மாநிலம் தழுவிய அளவுக்கு நடைபெற்றிருக்கிறது - இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது!

இதில் கட்சி வேறுபாடு எதுவும் கருதாமல் பல்வேறு கட்சிகளில் அங்கம் வகிப்போரும் - எந்தக் கட்சி சார்பற்றோருமாக - எல்லா வழக்கறிஞர்களுமே இணைந்து நின்று குரல் கொடுக்கின்றனர்.

ஒரு வார காலத்திற்கு முன்பே நெல்லை மாவட்டத்தில் நடைபெற்றுவிட்ட இந்த அநியாயச் செயலைக் கண்டித்து அந்த மாவட்ட அளவில் வழக்கறிஞர்கள் முறையீடு செய்து, தங்களின் எதிர்ப்பை உணர்த்தியபோதே - தமிழக அரசு, விரைவாக அந்தப் பிரச்சினையில் தலையிட்டு நல்ல முடிவை ஏற்படுத்தியிருக்கலாம்!

அரசின் அலட்சியப்போக்கின் காரணமாக ஒரே நாளில் இருபதாயிரம் வழக்கறிஞர்கள் அடையாள வேலை நிறுத்தம் செய்து நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் தங்களது ஆழமான

இதயப் புண்ணை உணர்த்த வேண்டிய நிலைமை உருவாகி யிருக்கிறது!

நெல்லை மாவட்டம் பெருங்குளம் என்ற பகுதியில் செல்லையாத் தேவர் என்பவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டு விட்டார். இதுதொடர்பாக ஆறுமுகத் தேவர் என்பவர் கைது செய்யப்பட்டார். அந்த ஆறுமுகத் தேவர், காவல்துறை அதிகாரிகளிடம் செல்லையாத் தேவரைக் கொலை செய்வதற்கான வழிவகைகளை, வழக்கறிஞர் செய்யது அகமது சொல்லிக் கொடுத்தார் என்று கூறினாராம்! அதைக் கொண்டு அந்த வழக்கறிஞர் கைது செய்யப்பட்டுள்ளாராம்!

எந்தவொரு குற்றத்திலும் கைது செய்யப்படுகிற ஒருவர், வேண்டுமென்றே யார் மீதாவது இப்படியொரு பழியைப் போட்டால் - அதனை அடிப்படையாகக் கொண்டு உடனடியாகப் போலீசார் நடவடிக்கை எடுத்து அவர்களைக் கைது செய்து வழக்கில் சிக்க வைப்பது என்று ஆகிவிடுமேயானால், பிறகு சட்டத்திற்கும், நீதிக்கும் - எள்ளளவு இடமும் இல்லாமற் போய்விடக்கூடும்.

செய்யது அகமது அவர்கள் நெல்லை மாவட்டத்தில் புகழ்பெற்ற வழக்கறிஞர்! அண்மையில் ஒரு போலீஸ் அதிகாரி மீது தீண்டாமை வழக்கு நடைபெற்றபோது செய்யது அகமது அவர்கள் அந்த வழக்கைத் தொடுத்த ஆதி திராவிட நண்பருக்கு ஆதரவாகவும், - போலீஸ் அதிகாரிக்கு எதிராகவும் வாதாடியிருக்கிறார். அந்த அதிகாரிக்குத் தண்டனை கிடைத்தது.

அதன் காரணமாகப் போலீஸ் அதிகாரிகள் அவர் மீது காழ்ப்பு கொண்டு பழி வாங்கத் துடித்திருக்கின்றனர். அதற்கு நேரம் பார்த்திருந்த போதுதான் பெருங்குளத்தில் செல்லையாத் தேவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். கொலைக்குற்றம் சாட்டப்பட்டு கைதான நபரிடம், நீ இப்படிச் சொன்னால் தப்பி விடலாம்! என்று தந்திரமாகக் கூறி ஏமாற்றித் தங்களுக்குச் சாதகமானதும் - செய்யது அகமதுக்குப் பாதகமானதுமான ஒரு வாக்குமூலத்தைப் பெற்று அகமதுவைக் கைது செய்ததின் வாயிலாகத் தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டனர்.

என்ன அவசரம்! என்ன அவசரம்! எந்த விசாரணையும் செய்யாமல் - இப்படியொரு வழக்கறிஞர் கொலை செய்யும் முறையைக் கற்றுக் கொடுத்திருப்பாரா என்றும் ஆராயாமல் -

வஞ்சம் தீர்த்துக் கொள்ள அந்தப் போலீஸ் அதிகாரிகள் காட்டிய அவசரத்தையும் - தமிழ்நாட்டில், இந்த ஆட்சியில் கடந்த ஆறு ஏழு ஆண்டுக் காலமாக நடைபெற்றுள்ள பல கொலைகள் கேட்பாரற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு, கொலைகாரர்கள் சுட்டிக் காட்டப் பட்டபோதும் கூட, அவர்கள் மீது கை வைக்கப் போலீசார் தயங்குவதையும் ஒப்பிட்டுப் பார்த்தால், நீதி நிலைகுலைந்து போய் விட்டதைத் தெளிவாக உணர முடிகிறதல்லவா?

ஏதோ ஒன்றிரண்டு நிகழ்வுகளில் தடயங்கள் கிடைக்காமற்போகலாம்! புலன் விசாரணையில் உண்மைகள் தெரியாமல் மறையலாம்! ஆனால், இந்த ஆட்சியில் தொடர்ந்து நடப்பதென்ன?

செங்கற்பட்டு மாவட்டத்தில் புட்லூர் தண்டபாணி கொலை செய்யப்பட்டுக் குளத்திலே மிதக்க விடப்பட்டதற்குக் கைப்பட எழுதப்பட்ட பல்வேறு ஆதாரங்களைச் சட்டப் பேரவையிலேயே அளித்துப் பேசினேன். அந்தக் கொலைக்குக் காரணமான ஆளும் கட்சியினர் மீது போலீசாரின் நிழல் கூட விழவில்லை!

மதுராந்தகத்தில் ஞானசௌந்தரி என்ற ஆதிதிராவிடப் பெண்மணியை வயிறும் பிள்ளையுமாகக் கொலை செய்து தூக்கிலே தொங்க விட்டுத் தற்கொலை என்று சாதித்தார்கள்! ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. அலுவலகத்திலேயே அந்தப் பிணம் தொங்க விடப் பட்டிருந்தது - அனைத்துக் கட்சியினரும் கண்டனக் கூட்டங்கள் நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு எம்.ஜி.ஆர். அரசை வற்புறுத்தினர் - ஆனால் நடந்தது என்ன? ஆளுங்கட்சிக் கொலைகாரர்கள் இருக்கும் பக்கம் காவல்துறையினரின் மூச்சுக் கூட காற்றோடு கலந்து செல்லக்கூடாது என உத்தரவிடப்பட்டு விட்டது!

திருச்செந்தூரில் முருகன் கோயிலில் அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை, ஆளுங்கட்சியினரால் கொலை செய்யப்பட்டார்! தற்கொலை எனச் சாதித்தனர்! கொலைதான் என்று பால் கமிஷன் திட்டவட்டமாகக் கூறி, கொலைகாரப் பாவிகளையும் கோடிட்டுக் காட்டியது! அந்த அறிக்கையை வெளியிட்ட எனக்குத்தான் பிடிவாரண்ட்! கொலை செய்த சண்டாளர்கள் யாரையும் பிடிக்கவில்லை!

திருவரங்கத்திலே ஒரு இளம் அதிகாரி வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டார்! அந்தக் கொலைகாரர்களைக் கூண்டிலேற்றக் கேட்டு வெங்கடாசலத்தின் பெற்றோர் - உற்றார் - உறவினர் - ஏன்! அனைத்துக் கட்சிகளும் முறையீடு செய்தும் பயனில்லை! தற்கொலை எனக் கூறித் தங்களின் ஆளுங்கட்சிப் புள்ளிகளைக் காப்பாற்றிக் கொண்டனர்!

கலா, மாலா என்ற பெண்ணின் கதை எப்படி முடிந்தது என்றே தெரியவில்லை!

கிச்சிப்பாளையத்தில் காவல்நிலையத்தில் தெய்வமணி என்ற பெண் கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டாள்!

திருத்தணி ஆலயத்திலே - லட்சுமி என்ற பெண்மணி மானமிழந்தாள் - மரணமும் அடைந்தாள்! அதற்குக் காரணமான மாபாவிகள் ஆளுங்கட்சியினர் என்பதால் போலீசார் கண்டு கொள்ளக் கூடாது எனக் கட்டிப் போடப்பட்டனர்.

திருவில்லிபுத்தூர்க் கூட்டத்தில் பேசி விட்டுத் திரும்பிய இளங்கொழுந்து இளஞ்செழியனைக் கொலை செய்தனர்!

அதே திருவில்லிபுத்தூரில் வெற்றிச்செல்வனை வெட்டிக் கொன்றனர்! அவன் மரண வாக்குமூலத்தில் குறிப்பிட்ட ஆளுங்கட்சியின் பெரும்புள்ளிகளின் பக்கம் போலீசார் போகவே இல்லை!

பழனி காவல் நிலையத்தில் இப்ரஹீம் என்பவரைச் சித்ரவதை செய்து பிணமாக்கினர்! அந்த வட்டாரமே கொந்தளித்து நியாயம் கோரியது! கிடைக்கவில்லை!

இப்படி எத்தனையோ எண்ணற்ற நிகழ்ச்சிகள் - எம்.ஜி.ஆர். ஆட்சியில்!

இந்திரா நகர் பிரேமா கொலையிலிருந்து திரையுலகத் தாரகைகள் பலரின் மர்மச் சாவுகள்!

இவற்றில் எதிலுமே போலீசார் அவசரம் காட்டாதது மட்டுமல்ல - அக்கறையே காட்டவில்லை!

ஆனால் நெல்லையிலே மட்டும், எல்லை கடந்த ஆர்வத்தோடு உடனடி நடவடிக்கை!

ஆம், பழிவாங்கும் நடவடிக்கை! அந்த அக்கிரம நடவடிக்கையை எதிர்த்து நெல்லை மாவட்டம் ஒரு வாரத்திற்கு மேலாகக் குரல் கொடுக்கிறது!

எம்.ஜி.ஆர். அரசு, அந்தக் குமுறலை அலட்சியப்படுத்திவிட்ட காரணத்தால் இன்றைக்கு நாடு முழுதும் வழக்கறிஞர்கள் போர்க்கோலம் பூண்டிட வேண்டிய நிலை உருவாகியுள்ளது!

வழக்கறிஞர்கள் அடுத்த கட்டப் போராட்டத்தை அறிவிப்பதற்கு முன்பாகவாவது எம்.ஜி.ஆரின் அரசு, அவர்களின் முறையீட்டுக்குச் செவி சாய்க்குமா?

பொறுத்திருந்து பார்ப்போம்!

அன்புள்ள,

மு. க.

30-06-1984

1231. இதோபதேசிகள் திருந்துவார்களா?

உடன்பிறப்பே,

அரசியல் விழிப்புணர்வு கொண்ட தென்னாட்டு மக்கள் தெலுங்கு தேசம், அ.இ.அ.தி.மு.க. போன்ற வட்டாரக் கட்சிகளைத் தூக்கி எறிய வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியப் பொதுச்செயலாளரான ராஜேந்திரகுமாரி பாஜ்பாய் வேண்டுகோள் விடுத்தார்.

- என்று தினமணி ஏடு செய்தி வெளியிட்டிருக்கிறது.

என்னதான் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், எமர்ஜன்சி சமயத்தில் மாநிலக் கட்சி யென்றால் ஆபத்து வருமென அஞ்சி, அண்ணாவின் கருத்துக்குத் தலைகீழ் மாற்றமாக அகில இந்தியா என்ற பெயரை அ.தி.மு.க.வுடன் ஒட்ட வைத்துக் கொண்டாலும் - அவரது கட்சியை மாநிலக் கட்சியாக மட்டுமே கணக்கிட்டு இந்திரா காங்கிரசார் பேசி வருகிறார்களே தவிர, அகில இந்தியக் கட்சியாக என்றைக்கும் ஏற்றுக் கொண்டதில்லை.

ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு எம்.ஜி.ஆர். அவர்கள் சட்டப் பேரவையில் ஆற்றிய ஒரு உரையில் இந்திரா காங்கிரஸ் கட்சி, மாநிலக் கட்சிகளை ஒழிக்க வேண்டுமென்று கூறுவதால் அதனுடன் உடன்பாடோ, உறவோ கொள்வதற்கில்லை என்ற கருத்தை வெளியிட்டார்.

அப்போது சிலர் ஆச்சரியப்பட்டார்கள்! இவர்தான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என வைத்திருக்கிறாரே - இவருக்கு ஏன் கோபம் வர வேண்டுமென்று!

பெயரில் அகில இந்தியா என இருந்தாலும், தனது கட்சி மாநிலக் கட்சி அல்லது வட்டாரக் கட்சிதான் என்ற உண்மையை அவர் மறந்து விட முடியுமா?

கர்நாடகத்தில் எம்.எல்.ஏ. இருக்கிறார் - பம்பாயில் கிளை இருக்கிறது - அகமதாபாத்தில் கிளை இருக்கிறது. இப்படி

எம்.ஜி.ஆர். வாதிட்டுத் தனது கட்சி அகில இந்தியக் கட்சிதான் என நிரூபிக்க முனையக்கூடும்.

அகில இந்திய அ.தி.மு.க. வருவதற்கு முன்பே - தி.மு.க.வுக்கு கர்நாடகத்தில் ஒரு எம்.எல்.ஏ. உண்டு! பம்பாய், அகமதாபாத்தில் தி.மு.க. கிளைகள் உண்டு!

எனவே அ.இ.அ.தி.மு.க.வாக இருந்தாலும் - தெலுங்கு தேசமானாலும் - திராவிட முன்னேற்றக் கழகமானாலும் - வட்டாரக் கட்சி அல்லது மாநிலக் கட்சி என்றே உண்மையை ஒப்புக்கொண்டு - இந்திரா காங்கிரசாரின் விமர்சனங்களைச் சற்றுக் கவனிப்போம்!

இன்றுள்ள நிலையில் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்திரா காங்கிரசாருக்கு மறுப்புக் கூறி, தனது கட்சி மாநிலக் கட்சி அல்லவென விளக்கமளித்து, அதனால் இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் மாநிலக் கட்சிகளைக் கண்டிப்பது தனது கட்சிக்குப் பொருந்தாது எனச் சுட்டிக்காட்டி, இ.கா.வின் மேலிடத்துக்குத் திருத்தமொன்றைச் சமர்ப்பிக்கலாம். அது வேறு விஷயம்!

ஆனால் நமது கழகத்தைப் பொறுத்தவரையில் இந்திரா காங்கிரசாராகட்டும் அல்லது வேறு எந்தத் தலைவராகட்டும், மாநிலக் கட்சிகள் தேசிய ஒருமைப்பாட்டுக்கு விரோதமானவையென்றும் - தூக்கி எறியப்பட வேண்டியவை என்றும் பொருளற்ற வகையில் பேசிக் கொண்டிருப்பார்களேயானால், அவர்தம் வாதங்களைப் பொடிப் பொடியாக்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தேவையானபோது தேனே! பாலே! தீஞ்சுவை அமுதே! என்பது!

தேவையற்றபோது தீயே! தேளே! தீங்கு தரும் விஷமே! என்பது!

இதனை மாநிலக் கட்சிகளிடம் மட்டுமல்ல, அகில இந்தியக் கட்சிகளிடம் உறவு கொள்ளும் போதும் - உறவு கொள்ளாத போதும் இந்திரா காங்கிரசார் கடைப்பிடித்தே வந்திருக்கிறார்கள்! வருகிறார்கள்!

தேச பக்தி - ஒருமைப்பாடு - நாட்டுப் பாதுகாப்பு - இவையனைத்தையும் இந்திரா காங்கிரசார் மட்டுமே மொத்தக் குத்தகைக்கு எடுத்து விட்டவர்களைப் போல எழுதியும் பேசியும் அறிக்கைகள் விடுத்தும் வருவது வேதனையான வேடிக்கை!

இப்படித்தான் ஜெயப்பிரகாஷ் நாராயண் போன்றவர்களைத் தேச விரோதிகளாகச் சித்தரித்து சிறையிலிட்டு - எமர்ஜன்சி பிரகடனம் செய்து - மிசா வேட்டையை நாடெங்கும் நடத்தி - அதனை எதிர்த்திட்ட நமது கழக ஆட்சியைக் கலைத்து - நமக்கும் தேச விரோதப் பட்டம் சூட்டி - அநியாய அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர்!

அதன் பிறகு அவர்கள் செயலுக்கு அவர்களே வருந்தி - வெளிப்படையாக மன்னிப்பு கேட்டு - தங்களுக்கு உதவி தேவைப்படுகிறது என்றபோது கழகம் ஒரு மாநிலக் கட்சி என்றாலும்கூட, இந்திய நாட்டுப் பாதுகாப்பில் - ஒருமைப்பாட்டில் தூய்மையான கருத்துக் கொண்டது எனக் கூறி உடன்பாடு கொள்ளவும் முந்திக் கொண்டு வந்தனர்.

உடன்பிறப்பே, அரசியல் சட்டம் உருவான பிறகு மொழிவாரி மாநிலங்கள் தேவை என்கிற குரல் எழுப்பப்பெற்று, அது மதிக்கப்பட்டு, மொழிவாரியாக நிலப்பரப்புகள் பிரிக்கப்பட்டு, அந்தந்த நிலப்பரப்புகளும் குறிப்பிட்ட தாய்மொழியைக் கொண்டவர்கள், அவர்களுடைய தாய்மொழிக்குச் செல்வாக்கு இருக்க வேண்டும் - அந்தத் தாய்மொழிதான் மொழிவாரி மாநிலங்களில் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்கிற அவசியம் உணரப்பட்டு - இப்போது 35 ஆண்டு காலத்திற்கு மேலாக ஒரு மாநில பிரக்ஞை - அதாவது உணர்வு - ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமானால் State Consciousness - ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட இயலாது!

அந்த உணர்வைப் பிராந்திய வெறி என்றும் - CHAUVINISM என்றும் வர்ணித்து அதனை அழிக்க முனைகிறார்கள் சிலர்!

நான் தமிழனாகவும் - இந்தியனாகவும் இருக்கிறேன்!

அப்படியென்றால்?

மொழியால் தமிழன்! நாட்டினால் இந்தியன்!

இரண்டையும் சொல்லக்கூடாது! இரண்டில் ஒன்றைத்தான் சொல்ல வேண்டும்!

இப்படி எனக்கு ஆணையிடப்படுமேயானால் - நான் தமிழனாக மட்டும் இருந்தால் போதும்! என்று சொல்லுகிற உணர்வுதானே ஏற்படும்!

இந்த வீண் வம்புக்கு எதற்காகச் சில பேர் இன்றைக்கு அலைகிறார்கள்?

தமிழர்களாகவும் இருந்து - இந்திய நாட்டினர் என்ற உணர்வுடனும் இருக்கிற காரணத்தினால்தான் - பங்களாதேஷ் போராட்டத்தின்போது யுத்த நிதியாகக் கழக அரசு தமிழகத்தின் சார்பில் ஆறு கோடி ரூபாய் திரட்டிக் கொடுத்தது! எந்த மாநிலமும் அந்த அளவுத் தொகை தந்திடவில்லை!

இந்திய நாடு பற்றிய கவலையிருக்கிற காரணத்தால்தான், இந்திய ஜனநாயகத்திற்கு 1975-இல் சோதனை வந்தபோது ஆட்சி இழப்பையே விலையாகக் கொடுத்து அதனை எதிர்த்து நின்றோம்!

அதற்காக - நமது மொழி - இனம் - நமது மாநில உரிமைகள் - பண்பாடு - இவற்றை இழந்து விட்டு நிற்க முடியுமா?

இந்திய ஒருமைப்பாடு எழில்மிகுச் சித்திரம்!

மொழி - இனம் - மாநில உணர்வுகள் இரு கண்கள்!

இரண்டு கண்களையும் விற்று விட்டு எழில்மிகுச் சித்திரத்தை வாங்கி என்ன பயன்?

என்னமோ - இந்திய நாட்டைப் பற்றி இந்திரா காங்கிரசாருக்குத்தான் கவலை என்பதுபோல அங்கலாய்ப் போருக்கு நமது அண்ணா அவர்கள் 1968 மாநில சுயாட்சி மாநாட்டில் கூறிய வாசகங்களை நினைவுபடுத்துகிறேன்.

நாட்டுக்கு ஆபத்து வரும் என்று அறிந்து கூறவும் நாட்டை வலிமையுள்ளதாக ஆக்கும் உரிமையும் - வழி காட்டும் திறமையும் உங்களைத் தவிர, வேறு யாருக்கும் இல்லை என்று நினைத்துப் பேசிட முழு உரிமை யாரால், எந்தக் காரணத்தால், எப்போது உங்களுக்கு அளிக்கப்பட்டது?

குழந்தை தெருவில் சென்றால் கார் வந்து மோதி விடும். அதற்கு ஆபத்து வருமென்று உணர்ந்து அந்தக் குழந்தையைக் காப்பாற்றிட எல்லோருக்கும் உரிமையுண்டு. தேவையுமுண்டு. ஏதோ நாங்கள் பாதை தவறியவர்கள் போலவும் - அவர்கள்தான் காப்பாற்றும் உரிமை படைத்த பாதுகாவலர் போலவும் பேசுவது ஏன்?

காங்கிரஸ் தலைவர்கள் இப்படிப் பேசுவது 15 ஆண்டுகளுக்கு முன் அனுமதிக்கப்பட்ட தவறாக இருக்கலாம். 20 ஆண்டுகளுக்கு முன் மக்களுக்கு இவையெல்லாம் புரியாத காரணத்தால் சரி என்று கூறி ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் விழிப்படைந்த இந்தக் காலத்தில் கூட, அப்படிப் பேசுவது - ஆணவத்திற்கு எடுத்துக்காட்டு என்றுதான் உலகம் கருதும். காங்கிரஸ்காரர்களைத் தவிர, நாட்டின் மீது மற்றவர்களுக்கு அக்கறை இல்லை என்பது பொருளற்றது, பொருத்தமற்றது, ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியது!

இதை உணர்ந்து இனிமேலாவது ஒருமைப்பாடு - தேசிய நீரோட்டம் பற்றிப் பேசும் உரிமை தங்களுக்கே உண்டென்று தாண்டிக் குதிக்கும் இதோபதேசிகள் திருந்திக் கொள்வது நாட்டுக்கு நல்லது!

நாட்டு ஒற்றுமைக்கும் நல்லது!

அன்புள்ள,

மு. க.

02-07-1984

1232. இருள் கிழிக்கும் ஒளிக் கீற்றுகள்!

உடன்பிறப்பே,

இன்று ஜூலை மூன்றாம் நாள்! சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகத்திற்கு ஊர்வலமாகச் சென்று தூதரகத்தின் முன்னால் அமைதியான ஆர்ப்பாட்டம்!

நீ வந்திருக்கிறாயா என்று என் கண் தேடும்!

ஆர்ப்பாட்டத்தின்போது எழுப்பப்பட வேண்டிய முழக்கங்கள் ஏற்கனவே வரையறுக்கப்பட்டுள்ளன!

துளியும் அமைதிக்குக் கேடு வராமல், அறவழியில் நமது அனைத்துக் கட்சி முற்போக்குக் கூட்டணியினரின் மூன்று கட்ட ஆர்ப்பாட்டங்களும் நடைபெற வேண்டுமென்பதில் கவனமாக இருக்க வேண்டும்!

இன்று ஜூலை 3 காலை, தவிர்க்க முடியாத வேறு வேலைகள் இருப்பினும், இலங்கையில் கொடுமைக்கு ஆளாகிச் செத்து மடியும் தமிழர்களுக்காக - இஸ்லாமியப் பெருமக்களுக்காகக் குறைந்தபட்சம் நம்மால் முடிந்தது - கண்டனக் குரல் எழுப்பிடவாவது அணி திரள வேண்டாமா?

அடுத்து ஜூலை 4-ஆம் நாள் நமது கூட்டணியினர் நடத்த இருக்கிற ஆர்ப்பாட்டமும் எவ்வளவு முக்கியமானது என்பதை நான் உணர்த்திடத் தேவையில்லை.

குடும்பக் கார்டுகளுக்கு இருபது கிலோ அரிசி கொடுக்க வேண்டுமென்று அரசை வற்புறுத்த நாம் எடுக்கும் ஜனநாயக முறை நடவடிக்கை அது!

பற்றாக்குறைக்கு அரிசி வழங்க வேண்டிய பொறுப்பும், கடமையும் தனக்கு இருப்பதை மத்திய அரசு தட்டிக் கழிப்பதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்றாலும் - இங்குள்ள எம்.ஜி.ஆர். அரசு, மத்திய அரசிடம் இதனை வலியுறுத்தவே தயங்குகிறது என்பதையும் - மாநிலத்தில் வேளாண்மைத்

துறையை உசுப்பிவிட்டு, உழவர் பெருமக்களை உற்சாகப்படுத்தி, விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊக்கம் கொடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்கிடத் தவறிவிட்டது என்பதையும் மறந்து விடுவதற்கில்லை!

தமிழகம், பெரும்பாலும் வேளாண்மையை நம்பி வாழ்கிற பூமி என்றாலும் கூட, குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தின் விளைச்சலைப் பொறுத்தே தமிழகத்தின் உணவு நிலைமை சீர்தூக்கிப் பார்க்கப்படுகிறது.

இயற்கையின் சீற்றங்களால் பாதிப்புகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது!

ஆனால் பாதிப்புகளைக் கவனித்து, நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தி, உழவர்களின் தேவைகளை உணர்ந்து, விவசாயத் தொழிலாளிகளின் இன்னல்களைப் போக்கி உணவு உற்பத்தியைப் பெருக்குகிற செயலில் இந்த அரசு முனைந்து நடை போடுகிறதா?

இல்லை! இல்லை! என்ற பதில்தான் தொடர்ந்து கிடைத்து வருகிறது!

மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12-ஆம் நாள் தண்ணீர் திறந்து விடப்பட்டு விட்டது. ஆனால் அந்தத் தண்ணீர் பெரும்பாலான ஆறுகளுக்கும், வாய்க்கால்களுக்கும் சென்று எட்டிக் கூடப் பார்க்கவில்லை. காரணம் என்ன? இந்த ஆட்சியில் ஆறுகளிலும், வாய்க்கால்களிலும் மராமத்து வேலைகளே நடைபெறாத காரணத்தால் பாசனத்திற்கான தண்ணீர் அவற்றின் வழிச் செல்ல இயலவில்லை.

கடந்த ஆண்டுகளில் தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு - வறட்சி இவைகளின் காரணமாகப் பாதிக்கப்பட்ட நிலங்களைக் குறுவை நெல் சாகுபடி செய்வதற்கு ஏற்பத் தயார் செய்ய இயலாத நிலையில் பல விவசாயிகள் உள்ளனர்.

விவசாய இலாகா இந்த மாவட்டத்தில் சப்ளை செய்யும் விதைகளின் தரம் மிக மோசமாக இருக்கிறதென்றும், அந்த இலாகாவில் வாங்கிய விதைகள் முளைக்கவில்லை என்றும் விவசாயிகள் புகார் கூறுகிறார்கள்.

இந்தத் தகவலைத் தினமணி இதழின் நிருபர் நேரில் கண்டு வெளியிட்டிருக்கிறார்.

இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடியாகக்கூடிய நிலப்பரப்பு நாலே கால் லட்சம் ஏக்கரா என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், இதுவரையில் பத்தாயிரம் ஏக்கருக்குக் குறைவான நிலப்பரப்பில்தான் குறுவை சாகுபடியாகியுள்ளது என்று தெரிய வருகிறது.

ஏதோ அக்கறையுள்ள சில அதிகாரிகள், விவசாயிகளிடம் சென்று முறையிட்டு உற்பத்தியைப் பெருக்கிடுமாறு வேண்டுகோள் விட்டுப் பார்க்கிறார்கள்.

அந்தத் துறைக்குரிய அமைச்சர்களுக்கோ அல்லது முதலமைச்சருக்கோ அரசியல் அறைகூவல்கள் விடவும், விழாக்களில் மகிழ்ந்து கிடக்கவும்தான் நேரமிருக்கிறதே தவிர, வேறு பணி இருப்பதாகத் தெரியவில்லை!

இடைத்தேர்தல் நேரத்தில் இருபது கிலோ அரிசி வழங்கப்படுமென்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். முழங்கினார்! இடைத்தேர்தலின் போது வெளிவந்த எத்தனையோ அறிவிப்புகளில் இதுவும் ஒன்று!

பஸ் கட்டணம் கூட ஏறாது என்றுதான் இடைத்தேர்தல் வாக்காளர்களுக்கு உறுதி அளித்தார்! இதோ ஏறப்போகிறது பஸ் கட்டணம்!

உணவு அமைச்சர் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார். குறுவையில் ஏகபோகக் கொள்முதல் கிடையாது என்பதுடன் ஊக்கத் தொகை வழங்கப்பட மாட்டாது என்றும் தெளிவாகவே தெரிவித்து விட்டார்!

கட்டுப்படியான விலை இல்லை என்பதைவிட, பெரிய ஏமாற்றம் விவசாயிகளுக்கு என்ன இருக்கிறது!

அறிவிக்கப்பட்டவாறு விவசாயக் கடன்களும் வழங்கப் படவில்லை! பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத கஷ்டம் இருப்பதை உணர்ந்தும் பார்க்கவில்லை!

பம்ப் செட்டுகளைக் கொண்டு நடத்தப்படும் பாசனத்திற்கு மின் இணைப்புகளும் தரப்படவில்லை! மின் இணைப்புகளைத் துண்டிக்காமல் இருந்தாலே போதாதா?

இந்த நிலைமைகளையெல்லாம் நெருங்கிப் பார்த்து ஆவன செய்து அக்கறையுடன் செயல்பட்டாலன்றி மக்களுக்குத் தேவையான உணவு தானியங்களை எப்படி வழங்கிட இயலும்?

அமைச்சர்களுக்கோ - தங்களிடமுள்ள இலாகாவுக்கு இன்னும் எத்தனை நாள் ஆயுள், என்று தெரியாத நிலைமை!

அதற்குள் அந்த இலாகாவின் பணிகளைத் தூக்கிப் போட்டுக் கொண்டு அலைவானேன் என்ற ஒரு எண்ணம்!

புதிய இலாகா என்ன வருகிறது என்று வழிமேல் விழி வைத்துக் கிடக்கிறார்கள்!

இந்தச் சூழலில் இருபது கிலோ அரிசி எப்படி வழங்குவார்கள்?

ஐந்து கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி இனாம் என்றது, தேர்தல் நேரத்து வாக்குறுதி!

அந்த வாக்குறுதியையும் நினைவுபடுத்தி, இருபது கிலோ அரிசி கொடு என்ற கோரிக்கையையும் வலியுறுத்தி, இந்தக் கையாலாகாத அரசை மக்கள் மன்றத்தில் நிறுத்திட அணிவகுப்போம் ஜூலை 4-ஆம் நாள்! அமைதி ஆர்ப்பாட்டம் நடத்துவோம் ரேஷன் கடைகளின் முன்னால்!

மக்களின் தேவைகளை நிறைவு செய்ய முடியாத மதோன்மத்தர்களின் ஆட்சியிலே எதிர்க்கட்சிகளைப் பழி வாங்கவும், இழித்துரைக்கவும், வழக்கில் மாட்டிடவும் மட்டும் ஏராளமான திட்டங்கள் உண்டு!

சட்டம் ஒழுங்கு அமைதியைக் காத்திட வேண்டிய காவல் துறைக்கு இன்று தரப்பட்டுள்ள கடமையே, அய்யய்யே! சொல்ல வெட்கமாகுதே! என்ற அளவில் இருக்கிறது!

போலீஸ் ராஜ்யம் தமிழகத்தில் எப்படி நடக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டிக் கண்டிக்கத்தான் ஜூலை 10-ஆம் நாள் நமது கூட்டணியின் அமைதி ஆர்ப்பாட்டம், மாநில முழுவதும்!

மக்களைப் பற்றிக் கவலைப்படாத ஒரு அரசு!
மமதை கொண்டலையும் அரசு!
சாராய சாம்ராஜ்யக் கொள்ளையர் அரசு!

லஞ்சலாவண்ணயக் கோடீஸ்வரர்களின் சப்ரகூட மஞ்சமாகி விட்ட அரசு!

இந்த அரசின் முகமூடியைக் கிழித்து - அலங்கோல அக்கிரம உருவத்தை நாட்டுக்கு உணர்த்திடவே ஜூலை 4-ஆம், ஜூலை 10-ஆம்!

இருள் கிழிக்கும் ஒளிக்கீற்றுகளாக அந்த இரண்டு நாட்களும் அமையட்டும்!

இலங்கைத் தமிழர்க்கு வாழ்வளிக்க இன்றைய நாள் துணை நிற்கட்டும்!

அன்புள்ள,

மு. க.

03-07-1984

1233. தமிழகத்துக்குத் துரோகம் செய்யாதீர்!

உடன்பிறப்பே,

காவிரிப் பிரச்சினையில் தமிழ்நாட்டுக்குரிய பாத்தியதைகளை விட்டுக் கொடுக்காமல் - அதேநேரத்தில் மற்ற மாநிலங்களும் பாதிக்கப்படாமல் - பழைய ஆயக்கட்டுகளுக்கென இதுவரையில் இருந்து வந்த பாதுகாப்புக்குக் குந்தகம் வராமல் கவனித்துக் கொள்ள வேண்டியது தமிழ்நாட்டு அரசின் பொறுப்பும் - தமிழ்நாட்டில் உள்ள எல்லா அரசியல் கட்சித் தலைவர்களின் கடமையுமாகும். இந்த உண்மையை மறந்துவிட்டு, நமது மாநிலத்தின் பொது நலனைக்கூட நினைவில் கொள்ளாமல் காவிரிப் பிரச்சினையை அரசியலாக்கிடவும், அதனால் ஆதாயம் தேடிடவும் முனைவது வருந்தத்தக்க ஒன்றாகும்.

இந்தப் பிரச்சினையிலும் தி.மு.க. ஆட்சியின் மீது - அல்லது கருணாநிதியின் மீது பழியைத் தூக்கிப் போட்டு, அந்த அஸ்திரத்திலாவது அவனை வீழ்த்தி விடலாமா என்று திட்டம் தீட்டுவது மாநில மக்களின் மொத்த நலனைப் பற்றி அக்கறை கொள்ளாதவர்களின் செயலாகும்.

கருணாநிதி ஏழு ஆண்டுக் காலம் முதல்வராக இருந்தார். என்ன சாதனை செய்தார்? 1924-ஆம் ஆண்டு தொடங்கிய காவிரி ஒப்பந்தம் இவருடைய ஆட்சியில் காலாவதி ஆனது. கரிகாலன் கல்லணை கட்டினான். இந்தக் கரிகால் பெருவளத்தான் காவிரி ஒப்பந்தத்தை காலாவதியாக்கினார்

இவ்வாறு விவசாயத் துறை அமைச்சர் காளிமுத்து உரையாற்றியதாக அ.இ.அ.தி.மு.க.வின் கட்சி ஏடான அண்ணா பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது.

இதைவிடத் தமிழ் நாட்டிற்கு விரோதமாக கர்நாடக அரசுக்குச் சாதகமாக ஒரு கருத்தை யாரும் சொல்ல முடியாது.

1974-ஆம் ஆண்டோடு காவிரி ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது என்பதுதான் கர்நாடக அரசின் வாதம். அப்படி அது காலாவதியாகவில்லை என்றும், ஐம்பதாண்டுகளுக்குப் பிறகு 1974-ஆம் ஆண்டு வாக்கில் ஒப்பந்தத்தில் சில மாறுதல்களைச் செய்து கொள்கிற அளவிற்கு 1974-ஆம் ஆண்டு விவாதித்து முடிவெடுக்கப்பட வேண்டும் என்றும் தான் இருக்கிறது என்பது தமிழக அரசு 1968 முதல் தொடர்ந்து நடத்தி வருகின்ற வாதம். ஆனால் அமைச்சர் காளிமுத்து தமிழக அரசின் வாதத்திற்குப் பாதகமாக சொல்லப்போனால் தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்யும் வகையில் 1974-ஆம் ஆண்டோடு ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது என்று கூறுகிறார். இனியாவது அவர் அந்த வார்த்தையைப் பயன்படுத்தி தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யாமல் இருக்கவேண்டும் என்பதற்காகச் சில விளக்கங்களை அவருக்குத் தர விரும்புகிறேன்.

1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் என்ன? அது எவ்வாறு ஏற்பட்டது? அந்த ஒப்பந்தத்திற்கு முன்னால் ஏற்பட்ட 1892-ஆம் ஆண்டு ஒப்பந்த ஷரத்துகள் யாவை? எந்தச் சூழ்நிலையில் 1892 ஒப்பந்தம் உருவாயிற்று?

திப்புச் சுல்தானைத் தோற்கடித்த ஆங்கிலேயர், மைசூர் அரசாங்கப் பரிபாலனத்தை உடையார் மரபினரிடமே திரும்பவும் ஒப்படைத்தனர். நாட்டைத் திரும்பப் பெற்ற உடையார் மன்னர்கள் தங்கள் அரசைப் பலப்படுத்த, காவிரியின் தண்ணீர் முழுவதையும் பயன்படுத்த புதிய ஏரிகளை அமைத்தனர். அதன் காரணமாகத் தமிழகத்திற்குக் கிடைத்துக் கொண்டிருந்த பாசன நீர் குறையத் தொடங்கிற்று. அதைத் தவிர்க்க மைசூர் அரசின் போக்கைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சென்னை மாநில ஆங்கிலேய அரசு முயற்சிகளை மேற்கொண்டது. அதன் விளைவாக எழுந்த பேச்சுவார்த்தைகள் முற்றுப் பெற்றுத்தான் 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி மைசூரில் எந்தப் புதுப் பாசனத் திட்டம் தொடங்க வேண்டுமென்றாலும், சென்னை மாநிலத்தின் ஒப்புதலின் பேரில்தான் செய்ய வேண்டும். சென்னை மாநிலமும் தன்னுடைய அனுபோக பாத்தியதையிலிருக்கும் பாசன வசதிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொண்டு, மைசூரின் புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கலாம்.

இந்த ஒப்பந்தம் சென்னை மாநிலத்திற்கு அனுகூலமானதென்று முழுமையாகச் சொல்லி விடமுடியாது. முற்றிலும் அனுகூலமானதாக இருந்திருக்குமானால் பாலாறு, வறண்ட ஆறாக மாறியிருக்காதல்லவா? ஏதோ, ஓரளவு மைசூர் மாநில அரசைக் கட்டுப்படுத்துகிற ஒப்பந்தமாகவே அது அமைந்தது என்று கூறலாம்.

பின்னர் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பக் கட்டத்தில் - கிருஷ்ணராஜசாகர் என்ற நீர்த்தேக்கத்தை உருவாக்க மைசூர் முனைந்தது. 1892 ஒப்பந்தப்படி மைசூர், சென்னை அரசின் ஒப்புதலைக் கேட்டது. பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடந்தன. முடிவு ஏற்படவில்லை. நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டது. அந்தத் தீர்ப்பு சென்னை மாநிலத்துக்குப் பாதகமாக வந்தது. உடனே சென்னை அரசு, இந்திய அரசுக்கு மேல்முறையீடு செய்து கொண்டது. இந்திய அரசு, சென்னையின் மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்து விட்டது.

ஆங்கிலேய நடுவரின் தீர்ப்பும் - ஆங்கிலேய ஆதிக்க இந்திய அரசின் முடிவும் - பாதகமானது கண்ட சென்னை ஆங்கிலேய அரசு, ஆங்கில அரசின் இந்திய அமைச்சருக்கு அவரும் ஆங்கிலேயர்தான் அதாவது இங்கிலாந்தில் உள்ளவருக்கு இறுதி வேண்டுகோள் விடுத்தது. அவர் மைசூர் - சென்னை அரசுகளின் பிரச்சினைக்கு மூன்று வழிகளைச் சொன்னார். இந்திய அமைச்சரின் முடிவுக்கு விட்டு விடுவது என்பது ஒன்று! அல்லது புதிய நடுவர் குழுவை அமைத்து அதன் தீர்ப்பைக் கோருவது! மூன்றாவதாக, மைசூரும், சென்னையும் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது!

இந்த வழிகளில் மூன்றாவது வழியை ஏற்றுக் கொண்டு சுமார் மூன்றாண்டு காலம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி, அந்த அடிப்படையில் பிரசித்தி பெற்ற 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

அந்த ஒப்பந்தப்படி, பழைய பாசனங்கள் உறுதி செய்யப்பட்டன. மேலும் எஞ்சிய தண்ணீரில் ஒரு பகுதியை உடனடியாகவும் - இன்னொரு பகுதியை ஒரு குறிப்பிட்ட வகையிலும் பங்கிட வழிவகை செய்யப்பட்டது.

இதற்கு மேலும் எஞ்சிய தண்ணீர் இருக்கிறதா என்று ஆய்ந்து தெரிந்து கொண்டு ஐம்பது ஆண்டுகளுக்குப்பிறகு

மறு ஆய்வு செய்வதற்கும் அந்த ஒப்பந்தத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1924-ஆம் ஆண்டின் ஒப்பந்த ஷரத்துக்களில் முக்கியமானவை சிலவற்றைக் கவனிப்போம்.

- இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் தேதியிலிருந்து ஐம்பது ஆண்டுகள் கழிந்ததும், துணைப் பிரிவு நாலில் இருந்து எட்டு வரையில் உள்ள கட்டுப்பாடுகளும், ஏற்பாடுகளும் மறு ஆய்வுக்கு உரியதாகும் என்று மைசூர் அரசும், சென்னை அரசும் ஒப்புக்கொள்கின்றன. ஐம்பது ஆண்டு அனுபவத்தின் துணை கொண்டு இரு அரசு எல்லைகளுக்குள்ளும் பாசனத்தை மேலும் விரிவாக்கிடத் தேவையான மறு ஆய்வுகளைச் செய்து அதன் விளைவாக, இரு தரப்பாரின் ஒருமித்த ஒப்புதலுடன் துணைப் பிரிவு நாலில் இருந்து எட்டு வரையில் உள்ள கட்டுப்பாடுகளிலும், ஏற்பாடுகளிலும் மாறுதல்களோ, விரிவுகளோ செய்யலாம்.

1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம், இவைகளை மட்டுமல்ல - இறுதியாக என்ன குறிப்பிடுகிறது தெரியுமா?

- ஒப்பந்தப்படி சென்னை அரசுக்கும், மைசூர் அரசுக்கும் சேர வேண்டிய நீர் அளவுகளுக்கு எந்தவிதத்திலும் ஊறு நேராதவாறு மட்டுமே நீர்த்தேக்கங்களில் நீரைத் தேக்கலாம்.

- இரு அரசுகளுக்கிடையே இந்த ஒப்பந்தம் குறித்து எந்த விவரத்திலும் கருத்து வேற்றுமை எப்போது ஏற்பட்டாலும் நடுவர் தீர்ப்புக்கு விடுவதென இரு அரசுகளும் ஒப்புக்கொள்கின்றன. இதற்கு மாற்றாக, இரு அரசும் ஒப்புக் கொண்டு இந்திய அரசையே தலையிட்டுத் தீர்க்கச் சொல்லலாம்.

இதுதான் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் முக்கியக் கூறுகள்! ஒப்பந்தத்தில் சில மாறுதல்களைச் செய்கிற காலம் ஐம்பதாண்டு

என நிர்ணயித்து, அதற்குப் பிறகும் தொடர்ந்து இரு அரசுகளும் கலந்து பேசி, மாறுதல்களையும் விரிவுகளையும் செய்து கொள்ளலாமென்று தெளிவாக இருக்கும் போது, அது என்னமோ 1974-ஆம் ஆண்டுடன் காலாவதியாகிவிட்டது போல ஒரு சிலர் கருதிக் கொண்டு - அரசியல் ஆதாயம் தேட முனைவது நல்லதல்ல!

கர்நாடக அரசு, காட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு, ஆகா - பிரச்சினை முடிவுற்றது! என்று பத்திரிகைகளில் முதல் பக்கச் செய்திகளை வெளியிடச் செய்வது பெரிய காரியமல்ல. ஆனால், எதிர்காலத்தில் தமிழகத்தின் கழனிகள் எண்ணற்றவை, காய்ந்து வறண்டு போய்க் கிடக்கக் கூடிய கொடிய நிலையை உருவாக்குவதற்கு, அந்த அவசர முடிவு காரணமாக ஆகி விடக்கூடாது என்பதிலே கழக அரசு மிகுந்த எச்சரிக்கையாக இருந்திருக்கிறது என்பதை யாரும் மறுத்து விடமுடியாது.

கழக அரசு அன்றைக்கு எடுத்த அதே முடிவை, இப்போதுள்ள அ.தி.மு.க. அரசும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறது என்று அ.தி.மு.க. அமைச்சர்களால் சட்டசபையிலேயே கூறப்பட்டிருக்கிறது. உண்மை இவ்வாறிருக்க, ஏதோ ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று தமிழ்நாட்டின் மொத்த நன்மையை மனதில் கொள்ளாமல் ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்று காளிமுத்துவைப் போன்ற ஒரு அமைச்சர், அதுவும் விவசாயத்துறை அமைச்சர் தன்னை அறியாமல் தமிழ்நாட்டு விவசாயிகளைக் காட்டிக் கொடுக்கக் கூடிய செயலில் ஈடுபடுவது முறையல்ல.

அன்புள்ள,

மு. க.

07-07-1984

1234. ஜூலை 10 - மூன்றாவதுகட்ட அறப்போர்!

உடன்பிறப்பே,

ஜூலை 10 - அனைத்துக்கட்சி முற்போக்கு அணியினர் நடத்துகிற மூன்றாவது கட்ட அறவழி அமைதி ஆர்ப்பாட்டம்!

இரண்டு கட்ட ஆர்ப்பாட்டங்கள் கடமையுணர்வுடனும் - கண்ணியம் சிதையாமலும் - கட்டுப்பாடு குலையாமலும் நடைபெற்று முடிந்துள்ளன.

இவற்றுக்கிடையே ஜூலை 8-ஆம் நாள் அன்று எம்.ஜி.ஆர். அரசின் தொடர் ஊழலுக்குப் பாதுகாப்பான வழிவகுக்கிற நுழைவுத் தேர்வை எதிர்த்து நமது கழகத்தின் சார்பில் மாநில முழுவதும் கண்டனப் பேரணிகள்! எதிர்ப்பது ஏன் என்பதற்கான விளக்கக் கூட்டங்கள்!

இலங்கையின் ஜெயவர்த்தனே அரசு, தமிழர்களையும் இஸ்லாமியர்களையும் அடக்குமுறைக் கொடுமைக்கு ஆளாக்கி - சித்ரவதை செய்திடும் நெஞ்சிரக்கமற்ற போக்கினை இன்னமும் நியாயப்படுத்திக் கொண்டிருப்பதைத் தமிழகம் வன்மையாகக் கண்டிக்கிறது என்பதையும் - அங்கு நடைபெறும் இனப் படுகொலை கண்டு கொதித்துப் போயிருக்கிறது என்பதையும் மீண்டும் தெரியப்படுத்திடவே ஜூலை 3-ஆம் நாள் சென்னையில் அனைத்துக் கட்சி முற்போக்கு அணியினர் அலைகடலென ஆர்ப்பரித்து - காவல் துறையினர் குறித்த இடம் வரை சென்று - அங்கு நின்று அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை நடத்தினோம்! ஆம்! இலங்கைத் துணைத் தூதரகத்தின் முன்னால் போலீசார் போட்டிருந்த வேலியைத் தாண்டாமல் கட்டுப்பாட்டுடன் நமது கடமையை நிறைவேற்றினோம்!

ஜூலை 4-ஆம் நாள்! மாநில முழுதும் ஏழை, எளிய, நடுத்தர மக்களின் உணவுப் பிரச்சினையை முன்வைத்தும் - விலைவாசிப் பிரச்சினையை நினைவூட்டியும் - நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர்கள் பதினேழாயிரம் பேரைப் பழி வாங்காதேயென்று

எம்.ஜி.ஆர். அரசை வலியுறுத்தியும் - குடும்பக் கார்டுக்கு இருபது கிலோ அரிசி கொடு எனக் கோரிக்கை எழுப்பியும், ரேஷன் கடைகளின் முன்னால், சுமார் இரண்டாயிரத்து ஐநூறுக்கு மேற்பட்ட இடங்களில் நமது அனைத்துக் கட்சி அணியினரின் கொடிகளை உயர்த்தி அமைதி வழுவாத ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறோம்!

ஜூலை 10 - நாளை நடைபெற இருக்கும் ஆர்ப்பாட்டம், தமிழகத்தில் நித்தநித்தம் செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கிற சட்டம், ஒழுங்கினை நிரந்தரமாக உயிர்ப்பித்து உலவ விடுவதற்கான அக்கறையுடன் நடத்தப்படுவதாகும்!

திருச்செந்தூரில் சுப்பிரமணிய பிள்ளையைக் கொலை செய்தவர்கள் கும்மாளமடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

அந்தக் கொலை குறித்த உண்மையை வெளியிட்ட, பால் கமிஷன் அறிக்கையை வெளியிட்ட, என் மீது திருட்டுக்குற்றம்! பிடிவாரண்டு! கழகச் செயல்வீரர்கள் மீதும் - மகளிர் அணிச் சகோதரிகள் மீதும் போலீசார் வெறித் தாக்குதல்! தடியடிப் பிரயோகம்! அடிபட்டு ரத்தம் சிந்திய அன்பு உடன்பிறப்புகள் மீது பத்து செக்ஷன்களில் வழக்குப் பதிவு! கொலை முயற்சி செய்ததாக 307-வது பிரிவு உட்பட!

நெல்லை மாவட்டத்தில் ஒரு சில போலீஸ் அதிகாரிகளின் பழிவாங்கும் செயலால் பாதிக்கப்பட்டு - கொலை வழக்கில் தொடர்புபடுத்தப்பட்டு - கைதாகியிருக்கும் செய்யது அகமது மீது எடுக்கப்பட்டுள்ள அநியாய நடவடிக்கைகளைக் கண்டு குமுறியெழுந்தனர் தமிழக முழுதுமுள்ள வழக்கறிஞர்கள்!

அதே நெல்லையிலேதான் எவ்விதத் தொல்லையுமின்றித் திரிந்து மகிழ்கின்றனர், திருச்செந்தூர்க் கொலைகாரர்கள்! ஆனால் செய்யாத குற்றத்துக்குச் செய்யது அகமது என்ற வழக்கறிஞர் கைது செய்யப்படுகிறார்!

மதுராந்தகம் ஞானசௌந்தரி, சேலம் தெய்வமணி, திருத்தணி லட்சுமி, புட்லூர் தண்டபாணி, பழனி இப்ரகீம், மதுரை இளஞ்செழியன், திருவில்லிபுத்தூர் வெற்றிச்செல்வன், திருவரங்கம் வெங்கடாசலம், இப்படி ஒரு நீண்ட பட்டியல்! கொலையுண்டோர் பட்டியல்! இதில் கொலைகாரர்கள் யாரும் கூண்டில் நிறுத்தப்படவில்லை!

காவல் நிலையங்களோ, கைதிகளின் மயானபூமிகளாக மாறி வருகின்றன! ஆளுங்கட்சியினர் காவல் நிலையங்களுக்குள் நுழைந்து சிறைப்பட்டிருக்கும் தங்கள் உறவினர்களை பலவந்தமாக விடுவித்துச் செல்கின்றனர்! தடுத்திடும் போலீஸ் அதிகாரிகளைச் செம்மையாகவும் தாக்குகின்றனர்! அவர்கள்மீது வழக்குமில்லை - வாய்தாவுமில்லை!

எதிர்க்கட்சியினர் மீது போடப்படும் பொய் வழக்குகளோ எண்ணத் தொலையா!

இந்த அநீதியைக் கண்டிக்கத்தான் மாவட்டங்களில் எஸ்.பி. அலுவலகங்களின் முன்பும் - சென்னையில் கமிஷனர் அலுவலகத்திற்கு முன்பும் அனைத்துக் கட்சி முற்போக்கு அணியின் அமைதி ஆர்ப்பாட்டங்கள் ஜூலை 10-ஆம் நாள் என்று முடிவெடுக்கப் பட்டுள்ளது!

மாவட்டங்களில் எஸ்.பி. அலுவலகங்களின் முன்பும் - சென்னையில் கமிஷனர் அலுவலகத்தின் முன்பும் - எந்தத் தொலைவு வரையில் அனுமதிக்கப்படுகிறதோ அந்த இடம் வரையில் சென்று, அங்கே சிறிது நேரம் நின்று அமைதியாக ஆர்ப்பாட்ட முழக்கங்களை எழுப்பிவிட்டு, அமைதியாகக் கலைந்து செல்வது என்பதுதான் அனைத்துக் கட்சிகளின் திட்டம்!

அதற்கேற்ப அனைத்து இடங்களிலும் மூன்றாம் கட்ட அறவழி ஆர்ப்பாட்டம் வெற்றிகரமாக நடைபெற, தோழமைக் கட்சி அமைப்புகளுடன் கலந்து பேசி, ஆவன செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்!

போடாதே! போடாதே! பொய் வழக்குப் போடாதே!

கொல்லாதே! கொல்லாதே! காவல் நிலையங்களில் கைதிகளைக் கொல்லாதே!

காவல் நிலையங்களா? கற்பழிப்புக் கூடங்களா?

அறவழி காப்போம்! அடக்குமுறையை எதிர்ப்போம்!

இந்த முழக்கங்கள் விண்முட்ட நமது மூன்றாவது கட்ட ஆர்ப்பாட்டம் அமைதி வழி நின்று நடக்கட்டும்!

அன்புள்ள,

மு. க.

09-07-1984

1235. வேலூர்க் கோட்டையும்! தஞ்சைக் கோயிலும்!

உடன்பிறப்பே,

இரண்டாம் பராந்தகன் எனும் சுந்தரச் சோழனுக்கும், வானமாதேவிக்கும் இளைய மகனாக ஐப்பசி திங்கள் சதய நாளில் பிறந்து கி.பி. 985-ஆம் ஆண்டு அரியணை ஏறியவன் சோழப் பெருமன்னன் இராஜராஜ சோழன்! கி.பி. 1010-இல் அவன் கட்டி முடித்த தஞ்சைப் பெரிய கோயிலுக்கு மானியம் பெறும் வழியைக் கூட ஒரு வெற்றியின் மூலமே கண்டான்! ஆம்! இலங்கையை வென்று அங்குள்ள மாதோட்டம் என்ற பகுதியிலிருந்து தஞ்சைக் கோயிலுக்கு மானியம் அளிக்குமாறு கட்டளை பிறப்பித்தான் என வரலாறு இயம்புகிறது. பாஸ்கர ரவிவர்மன் என்ற சேர மன்னனையும், அமரபுங்கன் என்ற பாண்டிய மன்னனையும் வென்ற பிறகு அருள்மொழித்தேவன் என்ற அவனது பெயர் இராசராசன் என மாறியதாகத் திருக்கோயிலூர் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

குடமலைநாடு, வெங்கி நாடு, கங்கபாடி, நுளம்பாடி, தடிகைபாடி, கலிங்கம், கொல்லம், ரட்டபாடி, ஈழம் ஆகிய நாடுகளை இராஜராஜன் வென்றதாக அவனுடைய மெய்க்கீர்த்திகள் விளக்கிக் கொண்டிருக்கின்றன. முடியாட்சி நடத்தினான் எனினும், குடவோலை முறையைப் பரப்பி இன்றுள்ள ஊராட்சி முறைகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவனும் அவனே! அதிகாரங்களைக் குவித்துக் கொண்டிராமல் தனது நாட்டை மண்டலங்களாகவும், கூற்றங்களாகவும், வளநாடுகளாகவும் பிரித்து அனைத்தும் தன்னாட்சித் தன்மையுடன் நடைபெற உரிமைகள் வழங்கி, அதிகாரங்களைப் பரவலாக்கிய பெருமையும் அவனுக்கு உண்டு!

இராஜராஜனின் பெருமையை உலகிற்கு முழங்கும் வண்ணம் இன்னும் அழியாத சரித்திரச் சின்னமாக நிற்பது தஞ்சைப் பெரியகோயில்!

அந்தக் கோயிலில் அவர் திருவுருவச் சிலையை வைப்பதற்கான முயற்சி 1972-ஆம் ஆண்டு நமது கழக அரசால் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், மத்திய அரசு அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டது! வேலூர்க் கோட்டை, தஞ்சைப் பெரியகோயில் போன்ற புராதனச் சின்னங்கள் மத்திய அரசின் பொறுப்பில் இருப்பதால் அவர்கள் ஒப்புதலின்றி இராஜராஜச் சோழன் சிலையைத் தஞ்சை ஆலயத்திற்குள் வைக்க முடியவில்லை! தொன்மை கெட்டு விடும் என்று மத்திய அரசு வாதாடியது! வேலூர் கோட்டையில் உள்ள கோயிலில் கூட ஆண்டவன் சிலை இல்லை! புதிதாக வைக்க அனுமதிக்கப்படவில்லை - அதைப் போலவேதான் தஞ்சைக் கோயில் பிரகாரத்திற்குள்ளும் இராஜராஜன் சிலையை வைக்க அனுமதியில்லையென்று மத்திய அரசு கூறிவிட்டது.

எனவே, இராஜராஜனின் சிலையை 1972-ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் பெருவிழா எடுத்து அவன் கட்டிய ஆலயத்திற்கு வெளியே வைத்தோம்!

விழாவுக்கு நாவலர் தலைமை வகித்தார்! மன்னை வரவேற்புரை நிகழ்த்தினார்! நான் சோழப் பெருமன்னன் சிலையைத் திறந்து வைத்தேன். தவத்திரு குன்றக்குடி அடிகளார், சிலம்புச்செல்வர் ம.பொ.சி., அன்பில், கண்ணப்பன், மற்றும் அமைச்சர்கள் கலந்து கொண்டனர். ஔவை டி.கே. சண்முகம் அவர்களின் இராஜராஜசோழன் நாடகம் நடைபெற்றது.

விழா மாட்சி காண லட்சோப லட்சம் மக்கள் குழுமியிருந்தனர்.

சோழன் சிலையின் பீடத்திலேயே மத்திய அரசு அனுமதி வழங்காத காரணத்தால் இந்தச் சிலை வெளியே வைக்கப்படுகிறது என்ற கருத்து பொறிக்கப்பட்டது!

பின்னர் ஆண்டுகள் பல உருண்டோடி விட்டன!

வேலூர்க் கோட்டைவெளி ஆலயத்துக்குள் இப்போது ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் பகுதி பக்தர்கள் எல்லாம் கூடி, மத்திய, மாநில அரசுகளின் எதிர்ப்புகளைத் துச்சமாகக் கருதி, தாங்கள் விரும்பிய கடவுளின் சிலையை உள்ளே கொண்டு போய் வைத்து விட்டார்கள்!

பிறகு அதிகாரிகளும் சென்று பூசிக்கத் தொடங்கி விட்டனர்! தொன்மை கெட்டுவிடும் என்ற வாதம் என்ன ஆனது என்று தெரியவில்லை!

வேலூரில் பக்தர்களுக்கு வெற்றி! ஆனால் தஞ்சையில்?

அது இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது!

இராஜராஜன் முடிசூட்டிக் கொண்ட ஆயிரமாவது ஆண்டு விழாவைக் கொண்டாடப் போகிறார்களாம்!

அப்போதாவது அந்தப் பெருமன்னன் சிலை, அவன் எழுப்பிய அந்தப் புகழ்பெற்ற ஆலயத்திற்குள் வைக்கப்படுமா?

1972-இல் இராஜராஜன் சிலை திறப்பு விழாவின் பொழுது சிலம்புச்செல்வர் உணர்ச்சி கொப்பளிக்க முழங்கியது இன்னமும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது!

இந்தச் சிலை இங்குத் தற்காலிகமாக வைக்கப்பட்டுள்ள சிலை! நிரந்தரமாக உள்ளே வைக்கும் வரையில் எந்த மத்திய மந்திரியும் இங்கே வர விடாமல் தடுக்க எங்களால் முடியும்!

இதுதான் அன்று சிலம்புச்செல்வர் புரிந்த கர்ஜனை!

தொன்மை கெடல் கூடாது என்ற மத்திய அரசின் வாதம், வேலூரில் எடுபடவில்லை!

தஞ்சைக்கு மட்டும் - அதுவும் இராஜராஜ சோழன் விவகாரத்தில் தமிழர்களின் தலைக் குனிவு இன்னமும் நீடிப்பதா?

வேலூருக்கு ஒரு நீதி - தஞ்சைக்கு மட்டும் தனி நீதியா?

அன்புள்ள,

மு. க.

19-07-1984

1236. நம்பிக்கையுடன் ஒரு பயணம்!

உடன்பிறப்பே,

முரசொலி, இன்று முதல் ஆறு பக்கங்களுடன் - அனைத்துத் தரப்புச் செய்திகளுடன் - என்றும் போல் கொள்கை முழக்கம் செய்து கொண்டு உன் கரங்களில் தவழுகிறது!

திரும்பிப் பார்க்கிறேன்!

நாற்பத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திங்கள்தோறும் இரண்டு அல்லது மூன்றுமுறை துண்டு அறிக்கையாக வெளி வந்த முரசொலியின் முழக்கம் இன்னமும் என் இதயத்து அரணில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

பின்னர் திருவாரூரில் இருந்து முரசொலி வார ஏடாகப் பவனி வந்தது - அது முப்பத்துஏழு ஆண்டுகளுக்கு முன்பு!

அதற்குப் பிறகு ஓரிரு ஆண்டுகள் முரசொலியின் முழக்கம் தடைப்பட்டது. நான் ஆரூரில் தங்கிட முடியாமல் ஊரூராய் அலைந்து கொண்டிருந்த காரணத்தால்!

எனினும், முயற்சி கைவிடப்படவில்லை! ஊக்கம் குன்றிடவில்லை! முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் ஒலிக்கத் தொடங்கிய முரசொலி, இதோ - ஒலித்துக் கொண்டேயிருக்கிறது!

தலைநகரத்திலிருந்து தொடர்ந்து முப்பது ஆண்டுகளாக உழைத்துக் கொண்டிருக்கும் முரசொலிக்கு உண்மையான வயது நாற்பத்துஇரண்டு!

இருந்தபோதிலும் தலைநகரிலிருந்து தொடர்ந்து, தொய்வின்றி ஒலித்திடும் முரசொலி ஏடு, கடந்துள்ள ஆண்டுகள் முப்பது!

ஒரு ஏடு நடத்துவது எவ்வளவு சிரமமான செயல் என்பது நடத்திப் பார்த்தால்தான் தெரியும்!

அச்சகத்துப் பாக்கித் தொகையைக் கொடுக்க எத்தனை முறை வீட்டு நகைகள், அடகுக் கடைக்குப் போயிருக்கின்றன!

பத்திரிகைக் காகிதம் வாங்க முடியாமல் திண்டாடித் தவித்த நாட்கள் எத்தனை!

படத்தொழிலில் சம்பாதித்தப் பாதிப் பணத்தைக் கொட்டியும், அதன் பசி அடங்காமல் துடித்த அவதி, எங்களுக்கல்லவா தெரியும்!

விற்பனையாளர்கள் ஒவ்வொருவரும் வைத்த பாக்கித் தொகையைக் கூட்டிப் பார்த்தபோது - ஒரு கட்டத்தில் இலட்ச ரூபாயைத் தாண்டி நின்றது! என் செய்வது! அவர்களில் பலர் இயக்கத் தோழர்கள் - இனிய நண்பர்கள்!

இன்றைய முரசொலி, தனக்கெனக் கட்டிடத்தைப் பெற்று - நவீன அச்சு இயந்திரத்தைப் பெற்று - பெரிய நாளேடுகளுடன் போட்டி போட்டுக்கொண்டு நிலைத்து நிற்கிறதென்றால் - அதன் நெடிய பயணத்தில் எத்தனை நெருப்பாறுகளைத் தாண்டி வந்திருக்கிறது என்பதை நினைக்கும் போது - ஏ, அப்பா! எத்துணை நீண்ட பெருமூச்சு கிளம்புகிறது!

திகைக்க வைத்திடும் அளவுக்குத் தீச்சுழல் வளைத்தபோதெல்லாம் தென்றல் தமிழால் தெம்பு தந்து, வாழ்த்துகளை மருந்தாக்கி வழங்கி, முரசொலியை அரவணைத்து வளர்த்தப் பெருமை அண்ணா அவர்களுக்கு உண்டு என்பது அவரே முரசொலியில் தீட்டிய எழுத்தோவியங்கள் கூறும் உண்மையன்றோ!

முரசொலிக் குடும்பத்தில் அன்பு மழையால் நனைந்து வளர்த்தவர்கள் எத்தனையோ பேர்!

அவர்களில் சிலர் பெரும் பதவிகளில்
அமர்ந்திருக்கிறார்கள்!

சிலர், அருங்கவிஞர்களாகத் திகழ்கிறார்கள்!

சிலர், சிறந்த எழுத்துச் சிற்பிகளாக விளங்குகிறார்கள்!

சிலர், கட்சிகளின் தலைமைப் பொறுப்பில்
இருக்கிறார்கள்!

இந்த நேரம், அந்தப் பழைய காலத்தை வெளியில் சொல்ல முடியாமல் ஏதோ ஒரு அச்சம் அவர்களைத் தடுத்திட்டாலும்,

அவர்தம் நெஞ்சத்தில் ஆழப்பதிந்துள்ள பாசமிகு நினைவுகளை அவர்களாலே கூட அழித்திட முடியுமா என்ன!

வேதனை வெள்ளம் - சோதனைப் புயல் - காடுமேடு - காட்டாறு - கடும் பயணம் - உருட்டும் விழிகள் - மிரட்டும் பார்வை - இத்தனைக்கும் எதிர்நின்று, இலட்சியப் பிடிப்பை இம்மியளவும் தளர்த்திக் கொள்ளாமல் இத்தனை ஆண்டுக்காலம் ஒரு கட்சிப் பத்திரிகை நிலைத்து நின்றது என்பது அதிசயம்தான்!

அந்த அதிசயத்தை விளைவித்த பெருமை, உடன்பிறப்பே! உனக்கே உரியது!

களம் காணப் புறப்படுக என்ற கழகத்தின் கட்டளையை அறிவிக்கும் முரசாக - களத்தில் போரிடும்போது கையில் ஏந்திடும் கூர்வாளாக - நீ பயன்படுத்திடும் எழுச்சி ஏடன்றோ முரசொலி!

அந்த ஏடு - ஆம்! உன் கையேடு - முப்பதாண்டுகளை நிறைவு செய்து கொண்டு இன்று முதல் புதிய பொலிவுடன், பழைய வலிவு மாறாமல் வெளி வருகிறது!

இயன்ற வரையில் நீ விரும்பிய வண்ணம் சில மாறுதல்கள்! நீ அடிக்கடி வெளியிட்ட ஆசையை முடிந்த வரையில் நிறைவேற்ற முரசொலி முனைந்திடுகின்றது!

பட்டி, தொட்டி, சிற்றூர், பேரூர், நகர், மாநகர் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் முரசொலியின் முழக்கம் கேட்கிறதென்றால் - நமது கழகத்தின் குரல் ஒலிக்கிறது என்று பொருள்!

அந்தப் பொறுப்பு உன் கையில் இருக்கிறது - கடமையாற்றத் தயங்க மாட்டாய் என்ற நம்பிக்கையுடன் முரசொலியின் பயணம் தொடருகிறது!

அன்புள்ள,

மு. க.

20-07-1984

1237. ஆணவம் மட்டுமல்ல - அறியாமையுங் கூட!

உடன்பிறப்பே,

சேலத்திலிருந்து தர்மபுரி மாவட்டம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தனியாகப் பிரிக்கப்பட்டுப் புதிய மாவட்டமாகச் செயல்படத் தொடங்கியது.

திருச்சியிலிருந்து புதுக்கோட்டை மாவட்டம் கழக ஆட்சிக் காலத்தில் தனியாகப் பிரிக்கப்பட்டுத் தஞ்சையிலேயிருந்து அறந்தாங்கிப் பகுதியையும் இணைத்துப் புதிய மாவட்டமாகச் செயல்படத் தொடங்கியது.

இந்த இரு புதிய மாவட்டங்களும் தோன்றியபொழுது பிரச்சினைகள் அதிகம் இருக்கவில்லை! சாதியக் கண்ணோட்டத்துடனோ அல்லது தேர்தல் நேரத்து ஸ்டண்ட் காட்சியாகவோ அவசரக்கோலம் அள்ளித் தெளி என்ற ரீதியிலோ, கட்சிக் கண்ணோட்டத்துடனோ, புதிய மாவட்டங்களுக்குப் பெயர் வைப்பதில் குழப்பங்கள் கிளர்ச்சிகள் உருவாகும் நிலையிலோ, தலைநகர்த் தகராறுகள் எழும் வகையிலோ - அந்த இரு மாவட்டங்கள் அமைக்கப்பட்ட போது சிக்கல்கள் பெரும்பாலும் ஏற்படவில்லை!

ஆனால் கடந்த ஆண்டு கவர்னர் உரையில் எம்.ஜி.ஆர். அரசு, ஒட்டு மொத்தமாக பத்துப் பதினைந்து பெயர்களை அறிவித்து அந்தப் பெயர்களில் புதிய மாவட்டங்கள் அமைக்கப்படும் என்று பிரகடனப்படுத்தியது.

நிர்வாக வசதிக்காகவும், மாவட்டங்களில் உள்ள மக்கள் விரைந்து நற்சாதனைகளை எய்துவதற்காகவும் மாவட்டங்களைப் பிரிப்பது என்பது தேவைதான்!

ஆனால், அதனைப் படிப்படியாகச் செய்ய வேண்டு மேயல்லாமல், ஒரேயடியாகச் செயல்படுத்த முற்படும் போது எல்லைத் தகராறுகள், பெயர்த் தகராறுகள், தலைநகர்த் தகராறுகள் மட்டுமின்றி, புதிய மாவட்ட அமைப்புகளுக்குக்

கோடிக்கணக்கான பணம் செலவழியும் நிலை உருவாகும் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

பட்ஜெட்டில் பணம் எதுவும் ஒதுக்காமலே - இதுபோன்ற மகத்தான திட்டங்களை அறிவிப்பதில் ஒரு கவர்ச்சி ருசியைக் கண்டு கொண்டவர் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். என்ற காரணத்தினால், பத்துக்கு மேற்பட்ட மாவட்டங்களின் புதிய தோற்றத்தை மட்டும் அறிவித்து, அடிக்கல் நாட்டு விழாக்களை நடத்தினால் போதுமென்று கருதி விட்டார்.

நில ஆர்ஜிதப் பணிகளைக் கூடத் தொடங்காத நிலையில், அவசர அவசரமாக இராமநாதபுரத்தில் மூன்று மாவட்ட அமைப்புகளுக்கு எல்லா அமைச்சர்களும் விஜயம் செய்து, வெளிச்ச விழாவை நடத்தி முடித்து விட்டார்கள்!

பத்துக்கு மேற்பட்ட புதிய மாவட்டங்களுக்குப் பெயர் சூட்ட எண்ணுகிற நேரத்தில் தமிழக அரசியலில் அனுபவம் வாய்ந்த மூத்த தலைவர்கள் - தமிழ்மொழி அறிஞர் பெருமக்கள் - வரலாற்று மேதைகள் - ஆகியோரைக் கலந்து பேசி எந்த அடிப்படையில் பெயர்களைச் சூட்டலாம் என்று கருத்துகளைக் கேட்டிருக்கலாம்.

தொன்மையான வரலாற்றுப் புகழும், சங்க காலந்தொட்டு இலக்கியப் புகழும் வாய்ந்த நிலம் நமது தமிழ் நிலம்!

கரிகால் பெருவளத்தான், சேரன்செங்குட்டுவன், பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற மூவேந்தர்களும் - இராஜராஜசோழன், இராஜேந்திரச்சோழன், நரசிம்மவர்மன் போன்ற பிற்காலத்துப் பேரரசர்களும் கோலோச்சிப் புகழ் நிறைத்த பூமி நமது தமிழ் பூமி!

பழம்பெரும் புலவர் பெருமக்களின் பெயர்களுக்கும் பஞ்சமில்லை தமிழகத்தில்!

இவ்வாறு தொன்மைக்காலத்து இலக்கிய - அல்லது வரலாற்றுக்குரியோரது பெயர்கள் என்ற அடிப்படையில் புதிய மாவட்டங்களை அமைக்கலாமா என்று யோசித்திருக்கலாம்!

அல்லது புதிய மாவட்டங்களின் தலைநகரங்களின் பெயராலேயே அந்த மாவட்டங்களுக்குப் பெயர்களைச் சூட்டியிருக்கலாம்!

அண்மைக்காலத் தலைவர்களின் பெயர்களைச் சூட்டுவது என்ற எண்ணம் வருகிறபோது அதில் மிகுந்த நிதானமும், எச்சரிக்கை உணர்வும் கடைப்பிடிக்கப்பட்டிருக்க வேண்டும்!

தேர்தலுக்காகச் சில குறிப்பிட்ட வகுப்பினர் அல்லது பிரிவினரைக் கவர்ந்திழுக்க வேண்டுமென்று திட்டமிட்டு, அதன் காரணமாக மற்றும் பல வகுப்பினர், பிரிவினர் ஒதுக்கப்படுவது என்பதும், அலட்சியப்படுத்தப்படுவதென்பதும் தேவையில்லாமல் வலுவில் இழுத்துக் கொள்கிற வீண் வம்பேயாகும்!

பெரியார் பிறந்த ஈரோடு நகரைத் தலைநகராகக் கொண்டு பெரியார் மாவட்டம் அமைக்கப்பட்டது! பெரியாரின் உணர்வுகளை எம்.ஜி.ஆர். அவர்கள் மதிக்காவிட்டாலும், அவரது கொள்கைகளுக்கு ஆழக் குழிதோண்டுகிற ஆட்சியை நடத்துகிறார் என்றாலும் பெரியாரின் பெயரை வைத்தது பாராட்டுக்குரிய ஒன்றாகவே அமைந்தது!

அதற்குப் பிறகு பத்துக்கு மேற்பட்ட புதிய மாவட்டங்களுக்கான அறிவிப்பு தருவதற்கு முன்னால் மற்றவர்களையும் சிறிது கலந்து பேசியிருக்கலாம்!

மாற்றாரைக் கலந்து பேசுவதா என நினைத்திருப்பாரேயானால், மனம் விட்டுக் கருத்துகளைச் சொல்லுக என்று அவரது மந்திரிசபையில் உள்ள நாவலர் போன்றவர்களிடமாவது ஆலோசனை கேட்டிருக்கலாம்!

பெருந்தலைவர் காமராஜர் பிறந்த விருதுநகர் தலைநகராக்கப்பட்டு காமராஜர் மாவட்டம் அமையப் போகிறது!

பசும்பொன் தேவர் மாவட்டம் என்று பெயரிடாமல் முத்துராமலிங்கம் மாவட்டம் என்று பெயர் சூட்டியிருப்பதைத் தேவர் பெருங்குடி மக்கள் அதிருப்தியோடுதான் நோக்குகிறார்கள்! அந்த மாவட்டத்தில் முத்தரையர் வகுப்பினர் வேறு தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தி கொண்டிருக்கின்றனர்!

அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தைத் தலைநகராக்கி - அதனைச் சார்ந்த செங்கற்பட்டு மாவட்டத்தின் சில பகுதிகளை இணைத்து அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்டியிருக்க வேண்டிய இயற்கையான நிலைமைக்கு மாறாக - அதனை மறுத்து விட்டு திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்துக்கு அண்ணா மாவட்டம் எனப் பெயரிடப் போகிறாராம்!

திண்டுக்கல் தலைநகராக ஆகட்டும்! அங்கே புதிய மாவட்டம் அமையட்டும்! ஆனால் அண்ணாவின் பெயரை இங்கிருந்து அங்கே மாற்றிட வேண்டிய மர்மம் என்ன? மறைந்து கிடக்கும் உண்மைதான் என்ன?

அண்ணா, தமிழ்நாடு முழுமைக்கும் சொந்தம் என்கிறார் எம்.ஜி.ஆர்.!

அங்ஙனமாயின் பெரியாரும், காமராஜரும் தமிழ்நாடு முழுமைக்கும் சொந்தமல்லவா? அவர்கள் பெயரிலான மாவட்டங்களுக்கு மட்டும் முறையே ஈரோடும், விருதுநகரும் ஏன் தலைநகரங்களாக வேண்டும்?

1973-இல் அண்ணா தி.மு.க. திண்டுக்கல் தேர்தலில் முதன் முதலாக வென்றதால் அந்தப் பெயர் அங்கே இடப்படுகிறது என்கிறார், எம்.ஜி.ஆர்.! அப்படியானால், அண்ணா அவர்கள் முதன்முதலாக 1957-இல் தேர்தலில் நின்று வெற்றி வாகை சூடிய இடம் காஞ்சிபுரம் தொகுதி ஆயிற்றே - அண்ணாவைவிட அ.தி.மு.க. என்ற கட்சி பெரியதா? சிறந்ததா?

இதையெல்லாம் கேட்டால், கருணாநிதி ஆட்சியில் அண்ணா மாவட்டம் என்று ஏன் வைக்கவில்லை? என்று முதலமைச்சர் நீட்டி முழக்குகிறார்!

கருணாநிதி ஆட்சியில் புதிய மாவட்டங்களுக்கு அண்மைக்காலத்துத் தலைவர்களின் பெயர்களை வைப்பது பற்றி முடிவு எடுக்கப்படவில்லை!

அப்படியொரு எண்ணவோட்டம் ஏற்பட்டிருக்குமேயானால், அண்ணா பிறந்த காஞ்சி நகரைத் தலைநகராகக் கொண்ட புதிய மாவட்டம் அண்ணா மாவட்டம் என்றே பெயர் பெற்றிருக்கும்!

செய்வன திருந்தச் செய் என்ற முதுமொழியை மூலையில் தூக்கி எறிந்துவிட்டு, தனது மூளையில் உதித்ததெல்லாம் முத்தான கருத்துகள் - சத்தான சிந்தனைகள் என்று நினைத்துக் கொண்டு மாற்றுக் கருத்துகளை மதியாமல் நடந்து கொள்கிற மமதையாளர்கள் யாராயினும், அவர்கள் எங்காவது போய் முட்டிக் கொண்டு மூழ்குகிற வரையில் தங்களின் வீழ்ச்சியைப் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்பதுதான் வரலாறு!

அந்த வரலாற்றை மறந்து விட்டு வாய்க்கு வந்தபடியெல்லாம் எம்.ஜி.ஆர். பேசிக் கொண்டிருப்பது அவரது ஆணவத்தை மட்டுமல்ல, அறியாமையையும் புலப்படுத்துவதாகும்!

அன்புள்ள,

மு. க.

21-07-1984

1238. தேர்தல் நேரத் திருவிளையாடல்கள்!

உடன்பிறப்பே,

தேர்தல் விரைவில் வரப்போகிறது! அதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கி விட்டன!

ஆந்திர மாநிலத்துக்கு இந்திரா அம்மையார் அவர்கள் திடீரென விஜயம்!

ஆந்திராவில் என்.டி. ராமராவ் அவர்களின் ஆட்சியைக் குறைகூறிக் காரசாரமாக ஒரு கண்டனம்!

மேடக் தொகுதியில் நின்று நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற நினைவு, திடீரெனப் பிரதமர் அவர்களுக்கு வந்திருக்கிறதென்றால், தேர்தல் நிச்சயமாக வரப் போகிறது என்று தானே பொருள்!

அதேபோலத்தான் ஆண்டிபட்டித் தொகுதியில் அ.தி.மு.க. வெற்றி பெற்ற நினைவு இங்கே எம்.ஜி.ஆர். அவர்களுக்கு வந்து, அடடா! பல கோடி ரூபாய்க்கு அந்தத் தொகுதியில் திட்டங்களை நிறைவேற்றப் போகிறேன்! என்று பறந்தோடிச் சென்று பகர்ந்திருக்கிறார்!

தன்னைக் கொல்வதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று இந்திரா காந்தி அவர்கள், உருக்கமாகக் கூறியிருக்கிறார்கள்!

அதே பல்லவியை எம்.ஜி.ஆர். அவர்களும், அதே ராகத்தில் பாடியிருக்கிறார்!

வங்கி மூலம் கடன் வழங்கப்படுமென்றும் - இந்திரா காங்கிரசார் சிபார்சு செய்தால் ஐயாயிர ரூபாய் வரையில் கடன் கிடைக்குமென்றும் அறிவிப்புகள்! கோடி கோடியாக அள்ளி விடுகிறார்கள்! காங்கிரசார் பைகள் நிரம்புகின்றன!

இங்கே எம்.ஜி.ஆரும் இப்போதே அறிவிப்புகளை சரமாரியாகப் பொழிய ஆரம்பித்து விட்டார்!

- விவசாயிகள் இறந்து போனால் அவர்கள் குடும்பத்துக்குப் பத்தாயிர ரூபாய் பாதுகாப்பு நிதி தருவது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறாராம்!
- விவசாயிகளுக்கு இலவசமாகவே மின்சாரம் வழங்குவது பற்றி இரவு பகலாக சிந்தித்துக் கொண்டிருக்கிறாராம்!
- குடும்பக் கார்டுக்கு இருபது கிலோ அரிசி கொடுக்கப் போகிறாராம்!
- 1985 செப்டம்பர் முதல் மீண்டும் மதுவிலக்கை அமல்படுத்திச் சாராயக் கடைகளையும், கள்ளுக் கடைகளையும் மூடப் போகிறாராம்!

இந்த அறிவிப்புகளைக் காணும்பொழுது தேர்தல் விரைவில் வருகிறது என யூகிக்க முடிகிறதல்லவா?

1980-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது எம்.ஜி.ஆர். அளித்த வாக்குறுதிகளின் கதி என்ன என்பதை வாக்காளர்கள் அவ்வளவு விரைவில் மறந்து விட்டார்களா?

அப்போதும் மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்தப் போகிறேன் என்றுதான் கூறினார்! அதுவும் தனது தாயின் மீது ஆணையாக!

ஐநூறு கோடி ரூபாய் அளவுக்குள்ள விவசாயிகளின் மொத்தக் கடனையும் அடியோடு ரத்து செய்யப் போகிறேன் என்றுதான் இதே எம்.ஜி.ஆர். வாக்குறுதி வழங்கினார்!

ஐந்து கிலோ அரிசி வாங்கினால், ஒரு கிலோ அரிசி இனாமாக வழங்கப்படுமென வாக்காளர்களிடம் கூறியதும் இதே எம்.ஜி.ஆர். தான்!

கர்ப்பவதிகளுக்கு, ஏழாவது மாதம் முதல் மூன்று மாதங்களுக்கு மாதம் ஐம்பது ரூபாய் வீதம் நூற்றி ஐம்பது ரூபாய் வழங்கப்படுமென இந்த எம்.ஜி.ஆர்., அந்தத் தேர்தலின் போது அறிவிக்கவில்லையா?

ஒவ்வொரு நெசவாளி வீட்டிலும் ஒருவருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுமென எம்.ஜி.ஆர். அறிவித்த உறுதி என்ன ஆயிற்று?

படித்தவர், படிக்காதவர் யாருமே தன்னுடைய ஆட்சியில் வேலையின்றித் தவிக்க மாட்டார்கள். அனைவருக்கும் வேலை தரப்படுமெனவும் இல்லையேல், மாதச் சம்பளம் தரப்படுமெனவும் தேர்தல் கூட்டங்களில் எம்.ஜி.ஆர். சத்தியம் செய்யவில்லையா?

முதலமைச்சராக இருந்து கொண்டே சினிமாவில் நடிப்பேன் - அதற்குச் சட்டம் இடம் தராவிட்டால், இன்னும் ஒரே மாதத்தில் முதல்வர் பதவியைத் தனது கட்சியில் உள்ள ஒருவருக்கு அளித்துவிட்டுப் பதவியை ராஜினாமா செய்வேன் என்று 1980-ஆம் ஆண்டு பகிரங்கமாக அறிவிக்கவில்லையா?

தனது கட்சியில் யார் சேர்ந்தாலும் அவர்களை ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்தி, அவர்கள் தூய்மையானவராக இருந்தால்தான் சேர்த்துக் கொள்வேன் என்று உரக்க உரக்க முழக்கமிடவில்லையா?

தபால் கார்டு, கவர்களின் விலையைக் குறைப்பேன் என்று வாக்குறுதி வழங்கியதும் இதே எம்.ஜி.ஆர். தானே! அல்லது வேறு எம்.ஜி.ஆரா?

தபாலாபீசுகளில் கிராமப்புற மக்களுக்கும், நகர்ப்புற மக்களுக்கும் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படுமென்று பிரகடனப்படுத்தியதும் இந்த எம்.ஜி.ஆர்.தான் என்பதில் ஏதாவது சந்தேகமுண்டா?

உடன்பிறப்பே,

ஊரார் சிந்தனைக்கு இந்த உண்மைகளையெல்லாம் நினைவுபடுத்திடத் தவறாதே!

இந்திரா காந்தி அம்மையாரும், இங்கே எம்.ஜி.ஆரும் தேர்தல் நேரத்தில் வாக்குகளைக் குவிக்க, வானுயர வாக்குறுதிகளைக் குவிப்பார்கள்! அதில் அவர்கள் வல்லவர்கள்!

கடந்த காலத்தை வாக்காளப் பெருமக்களுக்குக் காட்சியாக்கிக் காட்டு!

தேர்தல் வரப்போகிறது! தகிடுதத்த வாக்குறுதிகள் முன்கூட்டியே தெருவுக்கு வந்து விட்டன!

இந்த ஏமாற்று நாடகத்தை - இன்றே - இப்பொழுதே - இக்கணம் முதலே மக்களுக்குத் தெரியப்படுத்து!

எங்கே! தொடங்கட்டும் உனது பணி! வெற்றி முழங்கட்டும் நமது அணி!

அன்புள்ள,

மு. க.

22-07-1984

1239. ஜூலை 25 - கண்ணீர் நாள்!

உடன்பிறப்பே,

ஜூலை 25 - நினைத்தாலே நெஞ்சு நெருப்பாகிறது! கண்கள் நீர்வீழ்ச்சிகளாகின்றன!

அய்யோ, நமது இனம் பூண்டோடு அழிக்கப்பட வேண்டு மென்று பொல்லாத சிங்களக் காடையர்கள் கத்தியும், துப்பாக்கியும், கோடரியும், கொடிய ஆயுதங்களும் தூக்கி அலைந்த அந்த நாட்கள் - அம்மவோ! மீண்டும் ஒருமுறை நினைத்துப் பார்க்கவே முடியவில்லையே!

அன்றந்தச் சிங்க ஏறுகள் - மலை குலையினும் நிலைகுலையா மனஉறுதி படைத்த மாமல்லன்கள் - பதவியும், பவிசும் வரும் போகும்! அதிகாரமும் அந்தஸ்தும் நிரந்தரமல்ல! இதோ எங்கள் மண்ணுக்காகவும் கொண்ட கொள்கைக்காகவும் இறுதிவரையில் நிமிர்ந்து நின்று, இடையில் ஓர் இழை அளவும் வளையாமல் உயிரை வழங்குகிறோமே! இதுதான் சரித்திரத்தில் சாகாப் புகழை நட்டு வளர்க்கக் கூடியது என முழங்கியவாறு இலங்கை வெலிக்கடைச் சிறையில் மாண்டு மடிந்த மாவீரத் தளபதிகள் தங்கதுரை, குட்டிமணி, ஜெகன், மற்றும் ஐம்பதுக்கு மேற்பட்ட விடுதலைப் போராளிகள், நம்மையெல்லாம் துயரக் கடலில் அல்லவா மிதக்கவிட்டார்கள்!

இன்னமும் அந்தத் துயரத் தழும்புகள் நமது இருதயத்தில் தொடர் வலியைத் தந்து கொண்டுதானே இருக்கின்றன!

குழந்தை மலர்கள் கசக்கி எறியப்பட்டன! தமிழ்க்கோதையர் கற்போ நடுத்தெருவில் அலங்கோலமாக்கப்பட்டது! ஆயிரமாயிரம் தமிழ் இன மக்கள் பிணங்களாக்கப்பட்டனர்! உயிர்கள், மாட்டு மந்தை நுழைந்த கழனியின் பயிர்களாகப் பாழடைந்தன! உடைமைகள் சூறை! தமிழ்க்குலத்திற்கு வந்துற்ற நாசத்தைக் கண்டு பதைத்தோம்! பதறினோம்! வாய்விட்டுக் கதறினோம்!

இன்றுதான் என்ன! முடிந்துவிட்ட கதையென்று ஆறுதல் பெற முடிகிறதா?

இன்னமும் இலங்கையில் தமிழ் இனம் நிம்மதிப் பெருமூச்சு விட முடியாமல் தணலில் நின்று தள்ளாடியபடிதான் இருக்கிறது!

தமிழகமே கொதித்தெழுந்தது - ஏன்! உலகில் பல பகுதிகளில் வாழும் தமிழ்க்குலமே ஆர்த்தெழுந்தது!

பயன் என்ன?

ஏதோ ஒரு எதிர்க்கட்சி என்ற முறையில் - அதே நேரம் தமிழ்ச் சமுதாயத்தின் உறுதிமிக்கப் பாதுகாப்பு அரண் என்ற நிலையில் - நம்மால் இயன்றதையெல்லாம் செய்தோம்! செய்கிறோம்! செய்வோம்!

இந்தியப் பேரரசு, பேச்சுவார்த்தைகளின் மூலமே இதற்கோர் முடிவு காணலாமென்று விடுத்த அறிவிப்புக்கு ஆண்டுவிழா கூட வரப் போகிறது! பேசி, எதுவும் நடக்கவில்லை!

கடுகை, மலையாக ஆக்கிப் பிறகு அதனைப் பிளக்கும்! கடப்பாறையை விழுங்கிவிட்டுச் சுக்குக் கஷாயம் சாப்பிடும்!

இப்படி முரண்பட்ட நிலைகளை எடுப்பதில் இந்தியப் பேரரசு புகழ் பெற்றது!

எனினும், இலங்கைத் தமிழர் பிரச்சினையின் உணர்வு அறவே நசித்துப் போகாமல் - தாயகத் தமிழர்களும், வெளிநாடுகளில் வாழ்கிற தமிழர்களும், இலங்கைத் தமிழர் தலைவர்களும், இளைய தலைமுறையினராம் விடுதலை வீரர்களும் தொடர்ந்து செயல்பட்டே வருகின்றனர்!

ஆனால், இந்த உணர்வு படைத்தவரிடையே ஒருங்கிணைப்பு - ஒற்றுமை உணர்ச்சி - இல்லாதது மட்டுமல்ல! வேற்றுமை எண்ணங்கள், வெறுப்பு நிலைகள் வேரோடிக் கிடப்பதை மறைத்துப் பயனில்லை!

கடந்த ஆண்டு இலங்கையில் நமது இனத்துக்கு நடந்த கொடுமைகளுக்காக, இந்த ஆண்டு அந்த நாளைக் கண்ணீர் நாளாகக் கருதி துக்கம் கடைப்பிடிப்போம்!

அதே நேரத்தில் விடுதலை அணிகளாக - புலிப் படைகளாக - சிதறிக் கிடக்கும் வீரர் பாசறைகள் அனைத்தும் ஒரே இலக்கு என்ற உறுதியுடன் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டாமோ?

இங்கிலாந்திலிருந்து படைக்கலன்! இஸ்ரேலின் ராணுவ நிறுவன ரகசிய உடன்பாடு! அமெரிக்காவின் அருள்வாக்கு!

வட்டமேஜை - பேச்சுவார்த்தை என்ற இடைவெளியில் திட்டமிட்டுச் செயல்பட்டுக் கொண்டார் ஜெயவர்த்தனே!

அன்றைக்கே நாம் சொன்னது! அதுதான் இப்போது நடந்திருக்கிறது!

தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பது என்பது பழமொழி!

அதற்கு நூற்றுக்கு நூறு பொருத்தமாக இந்தியப் பேரரசு நடந்து கொண்டுவிட்டது!

வாலையாவது பிடிப்பார்களா? அல்லது வாய் ஜாலம் பேசி முடித்து விடுவார்களா?

உடன்பிறப்பே, எது எப்படியிருப்பினும் இலங்கைத் தமிழ் இனத்தவருக்காக நம் கடமையை நாம் தொடர்ந்து செய்வோம்!

நான் அடிக்கடி கூறுவதுபோல தாய்த் தமிழகம், கையில்லாத ஊமையின் நிலையிலே இருக்கிறது!

பாறையின் மீது வெண்ணெய்! பாதுகாப்புக்கு இருப்பவனுக்கோ கையுமில்லை! பேச வாயுமில்லை! கடும் வெயிலில் வெண்ணெய் உருகுகிறது! எடுத்துக் காத்திடக் காரமுமில்லை! குரல் கொடுத்து யாரையும் அழைத்துக் காத்திட வாயுமில்லை! அந்த நிலைதானே இன்றைய தமிழகத்துக்கு!

அதனால் கண்ணீர் நாள் நடத்துகிறோம்! கதறியழுகிறோம்! அதற்குப் பயன் உண்டு என நம்புகிறோம்!

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீரன்றே

செல்வத்தைத் தேய்க்கும் படை

என்ற வள்ளுவர் வாக்கு, கண்ணீர் விடப் பிறந்த நமக்கு அந்த நம்பிக்கையை ஊட்டுகிறது!

ஜூலை 25 சென்னையில் இலங்கைத் தமிழர்களுக்காக கண்ணீர் நாள்!

தலைமைக் கழகச் சார்பில் நடைபெறுகிறது!

சென்னைப் பொதுக்கூட்டத்தில் நான் கலந்து கொள்கிறேன்!

நீயும், நமது உடன்பிறப்புகளும் ஜூலை 25-ஆம் நாளன்று கருப்புச் சின்னங்களை பாட்ஜ் அணிந்து கொள்க!

நமது கண்ணீர், தமிழ்ஈழ விடுதலைக்காக உயிர்விட்ட தியாகத் தங்கங்களின் கல்லறைகளில் மலர்களாகக் குவியட்டும்!

படுகொலைக்கு ஆளான நமது இன மக்களுக்காகத் துக்கம் கடைப்பிடிப்போம்!

கண்ணீர், கட்டாரியாகும்! மலர்கள் வேல்களாகும்! நாம் கடைப்பிடிக்கும் துக்கநாளே விரைவில் ஈழத் தமிழினத்தின் விடுதலை நாளாக மாறி நம்மை மகிழ்விக்கும்!

அனபுள்ள,

மு. க.

23-07-1984

1240. எல்லாமே ஜெய் - அலக்நிரஞ்சன் தானா?

உடன்பிறப்பே,

மாயாமச்சேந்திரா என்று ஒரு பழைய படம்! தமிழ் பேசும், பாடும் படம் என்று விளம்பரப்படுத்தப்படுகிற நாட்களிலே வெளிவந்த மந்திர ஜாலங்கள் நிறைந்த படம்!

ஜெய்! அலக் நிரஞ்சன்! என்று மாயாவியொருவன் கூறியதும், அவன் சொன்னதெல்லாம் நடக்கும்! படத்தில்தான் - நிஜத்தில் அல்ல!

மாயா பஜார் என்று இன்னொரு சினிமா! அதிலும் கடோற்கஜன் என்பான் கண்ணால் இடும் கட்டளைகள் எல்லாம் காட்சிகளாகும்! அடடே! இப்படி ஆணையிட்டவுடன் அடுக்கடுக்காக பாத்திரங்கள், பண்டங்கள், பட்டுச் சேலைகள், நகை நட்டுகள் வந்து குவிகின்றனவே! இப்படியொரு கடோற்கஜன் இப்போது இருக்கலாகாதா! என எண்ணிடத் தோன்றும் படம் பார்ப்பவருக்கு!

அலாவுதீன் அற்புதத் தீபத்திலே கூட - தீபத்தைத் தேய்த்ததும் பூதம் தோன்றிக் கேட்டதையெல்லாம் கொண்டு வந்து சேர்க்குமல்லவா? எல்லாமே கதைகளில்! காட்சிகளில்! கற்பனைகளில்!

ஆனால், அவை உண்மையிலேயே நடப்பதாக வாய் பிளந்து நின்று ரசித்து மகிழ்கின்ற பாமர மக்களும் இன்னும் நாட்டில் இருக்கிறார்களே!

அப்படிப்பட்ட மக்கள் பெரும்பான்மையோர் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தானே எத்தர்கள் பிழைத்திட முடிகிறது!

இதோ, மாயாமச்சேந்திரா படத்தின் மாயாவியைப் போல - மாயாபஜாரில் தோன்றும் கடோற்கஜனின் மறுபிறவியைப் போல

- அற்புதத் தீபத்தில் அவதரிக்கும் அரிய பூதத்தைப் போல - தமிழகத்திற்கு ஒரு முதலமைச்சர் கிடைத்திருக்கிறார்!

மாயாவி - கடோற்கஜன் - பூதம் - இவர்கள் எல்லாம் கதைகளில், சினிமாப் படங்களில் அதிசயங்களைச் செய்து காட்டுவதாகச் சித்தரிக்கப்படுவார்கள்!

ஆனால் நமது முதலமைச்சர் அவர்களோ, எவையெவை மக்களின் தேவைகளோ - எவையெவை நடந்தால் நன்மையென்று மக்கள் கருதுகிறார்களோ - அவையனைத்தையும் செய்து முடித்து விட்டதாக அல்லது அதற்கான பூர்வாங்கப் பணிகள் முடிந்து விட்டதாகக் கூறுவதில் பெரும் மாயாவி!

அக்டோபரில் ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி தேர்தல்கள் நடக்கும் - வாக்காளர்களுக்கு அடையாளப் புகைப்படங்கள் வழங்கப்படும் - இப்படியொரு அறிவிப்பு!

இதுபோல எத்தனையோ அக்டோபர்கள் இந்த ஏழாண்டுக் காலத்தில் வந்து போய்விட்டன!

உள்ளாட்சித் துறை மாற்றப்பட்டதே தவிர, தேர்தல் என்னமோ நடைபெறவே இல்லை!

குதிரைப் பந்தயத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்! மதுவிலக்கு மீண்டும் வரும்! இந்த அறிவிப்புகள் எத்தனையோ முறை நடந்துவிட்டன!

அவ்வப்பொழுது ஏடுகளில் இந்த மகத்தான அறிவிப்புகள் வரும்போது, மக்களும் ஏதோ ஒன்றை எதிர்பார்த்துப் பின்னர் மறந்து விடுவது வாடிக்கையாகிவிட்டது!

அண்மையில் மதுரை மாவட்டத்தில் கண்டமனூரில் நடந்த விழா ஒன்றில், முதலமைச்சர் எம்.ஜி.ஆர். பேசியதாக தினத்தந்தி இதழில் ஒரு செய்தி!

கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் மூலம் ஏராளமான தண்ணீர் வீணாகிக் கடலில் கலக்கிறது. அதைத் திருப்பி ராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டப் பகுதியில் தண்ணீர் கிடைக்கச் செய்தால் விவசாயம் வளர்ச்சி அடையும். இதுபற்றிக் கேரள அரசுடன் பேசினோம். அவர்கள் தண்ணீருக்குப் பதில் அரிசி கேட்டுள்ளனர். இந்தத் திட்டத்துக்கு ஆயிரம் கோடி ரூபாய் வரையில் தேவை.

இந்தச் செய்திக்குப் பத்திரிகையில் தலைப்பு என்ன தெரியுமா?

கேரளாவில் வீணாகும் தண்ணீரைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வரும் திட்டம்! எம்.ஜி.ஆர். தகவல்.

தலைப்பையும், செய்தியையும் ஆளும் கட்சியின் ஆதரவு ஏடுகளில் படித்ததும் - முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கேரள அமைச்சர்களுடன் பேசி முடித்து, அவர்களின் ஒப்புதலையும் பெற்று அருமையான திட்டத்தை நிறைவேற்றப் போகிறார் என்று தானே தோன்றுகிறது!

கேரள அமைச்சர்களுடன் எம்.ஜி.ஆரோ அல்லது தமிழக அமைச்சரோ பேசியது வரையில் உண்மை! அதில் கேரளாவின் கருத்து என்ன என்பதை எம்.ஜி.ஆர். எவ்வளவு சாமர்த்தியமாக மறைத்துவிட்டு - ஏதோ அந்தத் திட்டத்துக்கு எல்லா ஒப்புதலும் கிடைத்து விட்டது போல அல்லவா எம்.ஜி.ஆர். அறிவிப்பு செய்திருக்கிறார்!

இதோ கேரளத்து நீர்ப்பாசன அமைச்சர் கங்காதரன் என்பவர் சென்னையில் நிருபர்களிடம் என்ன கூறியிருக்கிறார் என்பதைப் படித்துப்பார்!

தமிழ்நாடு முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரனுடன் கடந்த மாதம் பேசிக் கொண்டிருந்தபோது கேரளத்திலிருந்து தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திருப்பி விடுவதுபற்றி கேட்டார். தண்ணீர் தருகிற நிலைமை இல்லையென்று நான் அவரிடம் கூறிவிட்டேன். கேரள மாநிலத்தில் 590 கிலோ மீட்டர் தூரமுள்ள கடற்கரையோரப் பகுதியில் உப்புத் தன்மை ஏற்பட்டுள்ளது. அதைப் போக்குவதற்கும், அப்பகுதியில் குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கும் நதி நீர் முழுமையாகத் தேவைப்படுகிறது. மேற்கே பாயும் நதிகளில் எவ்வளவு கூடுதல் நீர் என்பதை ஆராய, மத்திய அரசு ஒரு உயர்மட்டக் குழுவை அமைக்கலாமெனக் கருதியபோது அதற்குக் கேரள அரசு ஒப்புக்கொள்ளவில்லை. கேரள மாநில அரசு, சர்வே நடத்தியதில் கூடுதல் நீர் இல்லையென்று கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்தப் பேச்சுவார்த்தையில் தமிழக நலனுக்கு சாதகமற்ற முறையில் கேரள அமைச்சர் பதில் கூறியிருக்கும் போது - அதை மறைத்து விட்டு ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்திற்கு உடனே ஆரம்பம் செய்யப்போவதைப் போல, எம்.ஜி.ஆர்.

அறிவிப்பு செய்திருப்பது, தேர்தல் நேரத்தில் தென்மாவட்ட மக்களை ஏமாற்றுகிற தந்திரம்தானே!

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும், கழக ஆட்சிக் காலத்திலும் கேரள முதலமைச்சர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி பரம்பிக் குளம் ஆளியாறுத் திட்டம் - சிறுவாணித் திட்டம் போன்ற அத்தியாவசியத் திட்டங்களில் நல்ல முடிவுகளை மேற்கொண்ட நிகழ்ச்சிகள் கடந்த காலத்து வரலாறு!

பரம்பிக்குளம் ஆளியாறுத் திட்டத்தில் இருந்த சில பிரச்சினைகளைக் கேரளத்தில் முதல்வராக இருந்த ஈ.எம்.எஸ். அவர்களுடன் நானும், நமது அமைச்சர்களும் சென்று பேசி தீர்த்துக் கொண்டோம்!

சிறுவாணித் திட்டங்குறித்து கேரள முதல்வராக இருந்த அச்சுதமேனன் அவர்களுடன் நான் கலந்து விவாதித்து நல்ல முடிவு கண்டோம்!

அதுபோல மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் உபரித் தண்ணீரைத் தமிழகத்துக்குப் பெற முனைவது நல்ல முயற்சிதான்! அந்த முயற்சி கழக அரசுக் காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டது!


ஆனால், பேச்சுவார்த்தையில் கேரள அரசு எடுத்துள்ள நிலை என்ன என்பதை எம்.ஜி.ஆர். வெளியே சொல்லாமல் மூடிமறைத்துவிட்டு - காரியம் பழமாகி விட்டது போல எதற்காக தென்மாவட்ட மக்களை ஏமாற்றிட முனையவேண்டும்!

எல்லாமே ஜெய் அலக் நிரஞ்சன் தானா?

அன்புள்ள,

மு. க.

24-07-1984



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

டிசம்பர் 2022